மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் அப்படிப்பட்ட பிரச்சினை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். பெண்கள், ஏதோ பிரச்சினைகள் எல்லாம் என்னிடத்தில் நேரில் தெரிவித்து இருக்கலாம். அந்த இடத்தில் பாலம் கட்ட வேண்டும் என்பது நியாயம். ஒரு இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது என்றால் அது பாலத்தில் மட்டுமல்ல, குளங்களைக் கடந்து செல்லும் போதும், அல்லது தெருக்களிலே வெள்ளம் வரும்போதும்கூட, மழைக்காலங்களில் நடந்து செல்லும்போது கூட அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பாலத்தில் நடந்து செல் கிறபோதுதான் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிறது என்ற கருத்தை மாண்பமிகு உறுப்பினர் அவர்கள் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற தவறான தகவல்களை இந்த அவையில் தரக்கூடாது என்பதைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அவர் பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார். இப்போது அந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பாலமே இல்லை, அடுத்த ஆண்டாவது சிறிய அளவில் கல்வெர்ட்டாவது அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணி வன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இல்லாததால பரிசீலனை செய்வதற்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 449, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

சட்டமன்ற TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வினா எண் 450, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

450—

ஆவின் நெய் டின்களில் இந்தி மொழியில் எழுதப்பட்டிருத்தல்.

*20374— திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் நெய் டின்களில் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எவ்வாறு அரசின் மொழிக் கொள்கைக்கு உகந்தது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் உற்பத்தி செய்யப்படும் நெய்யின் அளவில் 90 விழுக்காடு வட மாநிலங்களில் விற்பனையாவதால் அம்மாநிலங்களில் உள்ள இந்தி மட்டுமே அறிந்துள்ள நுகர்வோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆவின் நெய் என்ற வார்த்தைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அந்த டின்னின் மேல் அச்சிடப்பட்டுள்ளன.

(ஆ) இது அரசின் மொழிக் கொள்கைக்கு எந்த வகைக்யிலும் முரணானது அல்ல.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் கூட்டுறவுத் துறை இணையத்தின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதாகவும், அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் இந்த முறை கையாளப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இந்தி எழுத்துக்கள் எந்த ஆண்டிலிருந்து அந்த டின்களில் பதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் அதனால் ஆவின் நெய் டின்கள் அதிக அளவில் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

வினா எண் 450, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

450—

ஆவின் நெய் டின்களில் இந்தி மொழியில் எழுதப்பட்டிருத்தல்.

*20374— திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் நெய் டின்களில் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எவ்வாறு அரசின் மொழிக் கொள்கைக்கு உகந்தது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் உற்பத்தி செய்யப்படும் நெய்யின் அளவில் 90 விழுக்காடு வட மாநிலங்களில் விற்பனையாவதால் அம்மாநிலங்களில் உள்ள இந்தி மட்டுமே அறிந்துள்ள நுகர்வோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆவின் நெய் என்ற வார்த்தைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அந்த டின்னின் மேல் அச்சிடப்பட்டுள்ளன.

(ஆ) இது அரசின் மொழிக் கொள்கைக்கு எந்த வகைக்யிலும் முரணானது அல்ல.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் கூட்டுறவுத் துறை இணையத்தின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதாகவும், அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் இந்த முறை கையாளப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இந்தி எழுத்துக்கள் எந்த ஆண்டிலிருந்து அந்த டின்களில் பதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் அதனால் ஆவின் நெய் டின்கள் அதிக அளவில் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் மட்டுமல்ல, மற்றும் பல பொருட்கள் இங்கேயிருந்து சென்று வட மாநிலங்களில் விற்பனை ஆகின்றன. நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், யோகார்டு, வாசனை ஏற்றிய பால் போன்றவை வெளி மாநிலங்களில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாகவே இந்தி மொழியிலே 'ஆவின் கீ' என்ற வார்த்தைகள் எழுதப்பட்டு வருகின்றன. நம்முடைய அரசின் கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்த இரு மொழிக் கொள்கையிலிருந்து இம்மி அளவும் மாறாமல் தான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களே இந்தி ஆதிக்கத்தையும் இந்தி புகுத்துவதையும் தான் எதிர்த்தார்களே தவிர, இந்தி மொழியை எதிர்க்கவில்லை. ஆகவே, வியாபார நோக்கோடுதான் இது செய்யப்படுகின்றது. அண்ணா அவர்கள்கூட இந்தி, ஆட்சி மொழி ஆகக்கூடாது என்று சொன்னவர்கள், வியாபாரத்திற்கு வேண்டுமானால் பயன்படுத்தலாம் என்று அப்போதே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். ஆகவே, இது ஒரு குறிப்பிட்ட வியாபார நோக்கோடு மட்டும் பயன் படுத்தப்படுகின்றது. பல்லாண்டுக் காலமாகவே இது செய் யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசியர் க. பொன்னு சாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வியாபாரத்திற்காக இந்தி என்று தொடர்ந்து, இது தவறான முன்மாதிரியாக ஆகிவிடாமல், வட மாநிலங்களில் இருப்பவர்கள் இந்தி மட்டுந்தான் தெரிந்தவர்கள் என்ற நிலை இருக்குமானால் அவர் களுக்கு விற்பனை செய்கிற ஆவின் நெய் டின்களுக்கு மட்டும் தனியாக இந்தியிலே எழுத்துக்களை அச்சடித்து அவர்களுக்கு அனுப்புகின்ற நடைமுறையை அரசு கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி,

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்,

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஊட்டி ஊட்டிவளர்த்த தமிழ் உணர்வை அழிக்க நினைப்பவன் எவனானாலும் அழிவது உறுதி அழிவது உறுதி என்று இன்றைக்கு இரு மொழிக் கொள்கையை, நான் கடவுளாக ஏற்று வணங்கிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்றத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையில் வட மாநிலங்களுக்கு அனுப்புகின்ற டின்களில் தமிழிலும், ஆங்கிலத்திலும் அனுப்பினால் அங்கே உள்ளவர்கள் வியாபரத்திற்கு வேண்டுமானால் அதை இந்தியிலே எழுதிக் கொள்வதற்கு வழிமுறை செய்து வியாபாரத்தினை பெருக்குவதற்கு தாங்கள் ஆவன செய்வீர்களா என்று உங்கள் மூலமாக நான் பணிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செந்தமிழ்க்கே தீமை வந்தபின்பும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ'' என்று (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடி இருக்கின்றார்கள். ஆகவே, இந்தப் புரட்சித் தலைவியின் அரசு எப்பொழுதும் தமிழைக் காப்பதற்குப் பின்வாங்காது. அதே நேரத்தில், டின்களை இங்கேயிருந்து கொண்டுபோய், வட மாநிலங்களுக்குப் போனபிறகு அதன் மேலே பிரின்ட் செய்ய முடியாது என்பதை அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பல்வேறு பொருட்களை நாம் வட மாநிலங்களுக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். ஆகவே, இந்தியிலே அதிலே எழுதுகிறோம். என்று சொன்னார்கள். நாம் வட மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு என்னென்ன பொருள்களை இறக்குமதி செய்கிறோம். அப்படி இறக்குமதி செய்கின்றபோது வட மாநிலத்தவர்கள், நாம் இந்தியிலே எழுதி அனுப்புவதைப்போல, அவர்கள் அங்கேயிருந்து தமிழிலே நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருகின்ற சரக்குகளை நாம் தெரிந்து கொள்வதற்கு உதவுகின்ற வகையில், தமிழிலே அவர்கள் பிரிண்டு செய்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நாம் பேசிக் கொண்டு இருப்பது ஆவின்' பொருள்களைப் பற்றி. இந்த ஆவின் பால்

பொருட்கள் 90 சதவீதம் டெல்லி, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன, குறிப்பாக நெய் விற்பனை ஆகின்றது. ஆகவேதான் இது வேறு மொழி அறியாத மக்களுக்குப் பயன்படவேண்டும், நம்முடைய நெய் யைப்போல யாரும் விற்று விடக்கூடாது என்ற காரணத் தினால் இதை நாம் செய்கின்றோம், இந்தத் துறையின் மூலமாக இதைப்போல வேறு எந்தப் பொருளையும் அங்கே யிருந்து டின்களிலே நாம் எதுவும் இறக்குமதி செய்வதில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே விற் பனையாகின்ற நெய் டின்களிலேயாவது இந்தி இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அதைப் பார்த்துக் கொள்ளும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற துறைகளுக்கு நான் சொல்ல முடியாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 451, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

451—

பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தல்

*11375—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப் படையில் வரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது பற்றி அரசு பரிசீலிக்கும்,

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே. பாம்பூரில் சாத்தியக் கூறுகள் இருப்பின்

பொருட்கள் 90 சதவீதம் டெல்லி, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன, குறிப்பாக நெய் விற்பனை ஆகின்றது. ஆகவேதான் இது வேறு மொழி அறியாத மக்களுக்குப் பயன்படவேண்டும், நம்முடைய நெய்யைப்போல யாரும் விற்று விடக்கூடாது என்ற காரணத்தினால் இதை நாம் செய்கின்றோம், இந்தத் துறையின் மூலமாக இதைப்போல வேறு எந்தப் பொருளையும் அங்கேயிருந்து டின்களிலே நாம் எதுவும் இறக்குமதி செய்வதில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே விற்பனையாகின்ற நெய் டின்களிலேயாவது இந்தி இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அதைப் பார்த்துக் கொள்ளும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற துறைகளுக்கு நான் சொல்ல முடியாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 451, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

451—

பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தல்

*11375—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது பற்றி அரசு பரிசீலிக்கும்,

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பாம்பூரில் சாத்தியக் கூறுகள் இருப்பின்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விட்டதன் காரணமாகத்தான் நான் இதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த ஆவன செய்வார்களா என் மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை தன்மையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும்,

முற்பகல் 10.20

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாவட்டங்களில் கால்நடை மருந்துவமனைகள் இல்லாத மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த மாவட்டங்களுக்குக் கால் நடை மருத்துவமனைகள் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கு., ப. கிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கால்நடை மருந்தகங்கள் இல்லாத பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு அந்த நடைமுறைப்படுத்துவதற்கு ஆராய்ந்து வருகிறது, ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திலே இரண்டு மருத்துவமனைகள் இருக்கின்றன, ஒன்று பரமக்குடியிலும் இன்னொரு இடத்தில் ஒன்றும் இருக்கிறது, எனவே அந்த ஒன்றியத்திற்கு இரண்டு போதும் என்று நிறுத்திக் கொண்டால், அடுத்து பரிசீலிக்கப்படுவது-மற்றொரு பகுதிக்கு கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45 டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர்,

1993 ஏப்ரல் 23]

452—

கெங்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குதல்

*12816—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், கெங்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் துவங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தற்பொழுது இல்லை,

(ஆ) வரும் ஆண்டுகளில் சாத்தியக்கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில் கெங்கம்பட்டு கிராமத்தில் கால் நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே புதுப்பாளையம் ஒன்றியத்தில் காரப்பட்டு குலால்பாடி ஆகிய இரு இடங்களில் இந்த மருத்துவமனைகள் இருக்கின்றன. இடைப்பட்ட கிராமங்களான கெங்கம்பட்டு, வாசுதேவன்பட்டு, கீழ்பளூர், மேல்பளூர் என்று அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. இங்கிருந்து காரப்பட்டு செல்வதாக இருந்தால் 8 கிலோ மீட்டர் ஆகிறது ; குலால்பாடி செல்வதாக இருந்தாலும் 8 கிலோ மீட்டர் ஆகிறது. ஏற்கனவே ஒரு ஏக்கர் நிலம் தருவதாகவும், மருத்துவமனைக்குத் தேவையான இடத்தை வாடகையில்லாமல் கொடுப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவுடன் இதைப் பரிசீலிப்பாரா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் புதுப்பாளையம் மற்றும் காட்டாம்பட்டு ஆகிய இரு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூன்றாவது ஒரு

கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். மருந்தகம் வேண்டும் என்பதற்கு, எந்த ஊரில் வேண்டுமென்று அந்த ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டும்; அதற்குப் பின்னாலே இந்தத் துறைக்கு ஒரு ஏக்கர் நிலத்தை அவர்கள் ஒப்படைக்க வேண்டும். அதற்குப் பிறகு ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே முதல் மருத்துவமனை துவக்கப்படவேண்டுமென்று சொன்னால் 25 சதவீதம் அந்த ஊராட்சி ஒன்றியம் தன்னுடைய நிதியிலேயிருந்து தர வேண்டும்; இரண்டாவது மருத்துவமனை வேண்டுமென்று சொன்னால் 50 சதவீதம் நிதியை அந்த ஊராட்சி ஒன்றியம் தர வேண்டும். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது மூன்றாவது மருத்துவமனை. ஆகவே, அவர்கள் 75 சதவீதம் அந்தத் தொகையை அரசுக்குத் தருவார்கள் என்று சொன்னால் அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குலால்பாடி என்ற கிராமத்திலே இருப்பது ஆல்டர்நேட்டிவ் டேய்ஸ்—ஒன்றுவிட்டு ஒரு நாள் மருத்துவர்கள் சென்று மருத்துவம் பண்ணுவதுதானே தவிர, நிரந்தரமாக காரப்பட்டில் மட்டும்தான் இருக்கிறது. எனவே, பெரும்பாலும் கெங்கம்பட்டு, காரேந்தல், பெரிய குளம், விஸ்வநாதபுரம் ஆகிய கிராமங்களினுடைய மக்களுடையே தொழிலே ஆடு வளர்க்கும் தொழில்தான். கிட்டத்தட்ட ஒரு கிராமத்திற்கு ஒரு வீட்டுக்கு 500 ஆடுகளாவது இருக்கின்றன. மேலும் வண்டி மாடுகள், கறவை மாடுகள், மற்றுமுள்ள இந்த மாடுகள் கிட்டத்தட்ட பத்தாயிரம் அளவில் இருக்கின்றன. பெரும்பாலும் மாடுகளுக்கு வரும் நோயான, கால்நடைகளுக்கு வரும் நோயான கோமாரி நோய்கள், தொண்டை அடைப்பான் ஆகிய வியாதிகள் வந்தால் அந்தக் கிராம மக்கள் நாட்டுப்புற வைத்தியம்தான் செய்கிறார்கள். இதனால் இறப்பு அதிகமாக ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவேதான், இந்தக் கேள்வியை நான் அழுத்தமாகக் கேட்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள் சற்று விரைவாகப் பரிசீலிப்பார்களா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய நிதி நிலை தாராளமாக இருக்கின்ற பொழுது புதிய மருத்துவமனைகள் துவக்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம். இது செங்கம் தொகுதியைப் பற்றிய கேள்வி.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இதுசம்பந்தமாகப் பொதுப்படையான கேள்வியைக் கேட்கிறேன். மக்களை நாடி மருத்துவ முகாம் செல்லும் இந்தப் புரட்சித்

1993 ஏப்ரல் 23]

தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில், கால்நடைகளுக்கும் அதேபோன்று சிகிச்சை அளிக்க நம் அரசில் நிதிநிலைமை இல்லாத இந்த நேரத்திலேயும்கூட, ஒரு ஒன்றியத்திற்கு சுற்றுச் சூழல் மூலம் நடமாடும் ஒரு மருத்துவ முகாமை ஏற்படுத்தி, சில குக்கிராமங்களுக்கும் ஒரு வாரத்திற்கு ஒரு நாளாவது கால்நடைகளுக்கு மருத்துவம் செய்ய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. இன்றைய நாட்டிற்குத் தேவையானதும்கூட மாடுகளுக்கு நோய் வருகிறது என்று சொன்னால், அந்தக் கால்நடைகள் தம்முடைய நோயினுடைய தன்மையை, அவற்றின் உரிமையாளரிடம் சொல்ல முடியாது. அது தன்னுடைய உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு, சோர்ந்து படுத்துவிடும் நிலையிலே, அந்த மாடுகளை வளர்ப்பவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று, டாக்டர்களை அழைத்து வருகிறார்கள். இன்றைக்கு, தமிழகத்திலே, இருக்கக்கூடிய அனைத்து கால்நடை மருந்தகங்களையும் உறைவிந்து சினையூட்டத்திற்கு மட்டுமே பெரிதும் பயன்படுத்தி வருகின்றார்கள். ஒரு முறை அந்த உறைவிந்து சினையூட்டத்தை செய்யக்கூடிய மருத்துவர், அந்தக் கால்நடை சினையாக இருக்கிறதா அல்லது, கருவுற்று இருக்கிறதா என்பதை அவர் போய்ப் பார்ப்பது கிடையாது. ஆனால், 3 மாதங்கள் அல்லது நான்கு மாதங்கள் அந்த மாடுகளை வளர்ப்பவர்கள் பார்த்து விட்டு, பலன் இல்லை என்று அவர்களாகவே அறிந்த பின்னால் மீண்டும் அந்த மாட்டை கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அதற்காகத்தான் நம்முடைய அரசு தீவிரமாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று பரிசீலித்துக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கால்நடை மருத்துவர் இருக்கிறார். அந்த ஊராட்சி ஒன்றியத்திலேயே கால்நடை மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அதற்குக் கீழே கால்நடை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து ஒவ்வொரு கால்நடை மருத்துவரும், ஒரு நாளைக்கு ஒரு பகுதி என்று பிரித்துக் கொடுத்து, அந்தக் கிராமத்திற்கு அவர்கள் செல்ல வேண்டும். அங்கு கால்நடையைப் போய் அவர்களே பரிசோதிக்க வேண்டும். அந்த உரிமையாளர்களிடத்திலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒரு கால்நடைக்கு ஒரு அடையாள அட்டையை வழங்கியிருக்கிறது. அந்த அடையாள அட்டையிலே அந்த மருத்துவர், இந்த மாட்டை அல்லது இந்த ஆட்டை நான் பரிசோதனை செய்தேன்; அதற்கு இன்ன நோய் இருந்தது; இந்த மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பை அவர் எழுதி வைக்க வேண்டும். அதே நேரத்திலே அந்தக்

கால்நடையை வளர்ப்பவர்கள், அந்த மருத்துவர் கொண்டு வருகிற ரிஜிஸ்டர் புத்தகத்திலே, மருத்துவர் வந்தார்; மருந்தை நான் வாங்கித் தந்தேன்; அவர் சிகிச்சை அளித்தார் என்று எழுதித் தரவேண்டும். இந்த திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில் நாங்கள் பரிசீலித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 453, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

453—

காட்டுமன்னார் கோவிலில் 'சென்ட்' தொழிற்சாலை நிறுவுதல்.

*14690—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப்பூ அதிகமாக விளைவதால் இங்கே 'சென்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வேளாண்மைத் துறையின் பதிலுரையிலே, கவிதைமழைக் கொட்டியதைப் போல, 'சென்ட்' உபயோகிக்கும் காதலர்களிடையே கவிதை அருவி கொட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. மேலை நாடுகளில், மகளிர் மணம்வீசும் மலர்களைச் சூடுவதில்லை. மாறாக, 'சென்ட்' அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கால்நடையை வளர்ப்பவர்கள், அந்த மருத்துவர் கொண்டு வருகிற ரிஜிஸ்டர் புத்தகத்திலே, மருத்துவர் வந்தார்; மருந்தை நான் வாங்கித் தந்தேன்; அவர் சிகிச்சை அளித்தார் என்று எழுதித் தரவேண்டும். இந்த திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில் நாங்கள் பரிசீலித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 453, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

453—

காட்டுமன்னார் கோவிலில் 'செண்ட்' தொழிற்சாலை நிறுவுதல்.

*14690—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப்பூ அதிகமாக விளைவதால் இங்கே 'செண்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வேளாண்மைத் துறையின் பதிலுரையிலே, கவிதைமழைக் கொட்டியதைப் போல, 'செண்ட்' உபயோகிக்கும் காதலர்களிடையே கவிதை அருவி கொட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. மேலை நாடுகளில், மகளிர் மணம்வீசும் மலர்களைச் சூடுவதில்லை. மாறாக, 'செண்ட்' அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

இங்கே நாம் 'சென்ட்' தயாரிப்பதற்குத் தேவையான மணம் வீசும் மலர்கள், எங்கள் காட்டுமன்னார்கோயிலிலே அதிகமாக விளைகிறது. எனவே, அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்கும் பொருட்டு, அவை வெளிநாடுகளுக்கு விற்பதால், வருவாய் அரசுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால், மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பகுதியிலே ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய மல்லிகைப் பூக்கள் அங்கே பயிர் செய்யப்படவில்லை என்பது மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலே அந்த மல்லிகைகளில் தயாராகக்கூடிய 'சென்ட்' தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இயற்கையாக கிடைக்கக்கூடிய மல்லிகைப் பூவிலிருந்து கிடைக்கக்கூடிய வாசனை திரவியத்தைவிட, செயற்கை முறையிலே மிகக் குறைந்த விலையிலே இன்றைக்கு அயல்நாடுகளிலே வாசனை எண்ணெய் உற்பத்தி செய்கிறார்கள். எனவேதான், அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் லாபகரமாகச் செயல்படவில்லை என்று சொன்னேன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசியல் மேடைகளில்கூட மலர்மாலைகள் போடுவதற்குப் பதிலாக, சால்வைகள், துண்டுகள் அணிவிக்கிறார்கள். எங்கள் ஊரிலேயிருந்து அதிகமான மலர்களை தமிழகம் முழுவதும் அனுப்பி வைக்கிறார்கள். அவை விற்பனை ஆகாத சூழ்நிலையிலே, உற்பத்தியைக் குறைத்திருக்கிறார்களேயொழிய, மலர்கள் அங்கே அதிகமாக விளைவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இன்னும் அந்த மலர் உபயோகப்படுத்தப்படும் என்று அறிந்தால், அதிகமான முறையிலே விளைச்சல் அங்கே செய்ய வாய்ப்பிருக்கிறது. அதனால், இது மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பகுதியில் நிறைய ஆலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களுக்கெல்லாம் இன்றுகூட, மல்லிகைப்பூ மற்ற பூக்களைக் கொண்டுதான் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள், பூ பயிரிடக்கூடியவர்கள் அதிக வருமானம் பெறவேண்டுமென்ற நல்ல நோக்கம் உடையவராய் இருப்பார் என்று நான் கருதுகிறேன். எனவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய 'கட்-ரோஸ்' போன்றவைகளை அந்த விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையிலே அவர்கள் பயிரிட முன்

வருவதற்கு, வேளாண்மைத் துறை அனைத்து ஆலோசனைகளை வழங்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மல்லிகைப்பூ விளைகின்ற ஊர்க்காரர்கள் எல்லாம் கையைத் தூக்கிக் கொண்டிருந்தால், இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி வராது. காட்டுமன்னார்கோயில் பகுதியில் சென்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது.

வினா எண் 454, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை. திரு. வே. கோபாலகிருஷ்ணன் கேட்கிறார். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

454—

ஆதிதிராவிடர்களுக்காக உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமித்தல்.

*10857—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாவட்ட நலத் துறை அலுவலகங்களில் ஆதிதிராவிடருக்குரிய சதவீதத்தை நிரப்புவதற்கு உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமிக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில் அம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் 18 சதவீதம்

வருவதற்கு, வேளாண்மைத் துறை அனைத்து ஆலோசனைகளை வழங்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மல்லிகைப்பூ விளை கின்ற ஊர்க்காரர்கள் எல்லாம் கையைத் தூக்கிக் கொண் டிருந்தால், இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி வராது. காட்டுமன்னார்கோயில் பகுதியில் சென்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது.

வினா எண் 454, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை. திரு. வே. கோபாலகிருஷ்ணன் கேட்கிறார். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

454—

ஆதிதிராவிடர்களுக்காக உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமித்தல்.

*10857—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) மாவட்ட நலத் துறை அலுவலகங்களில் ஆதிதிராவிட ருக்குரிய சதவீதத்தை நிரப்புவதற்கு உதவி இயக்குநர் வேலை வாய்ப்பு அலுவலகம் நியமிக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில் அம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் 18 சதவீதம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்கின்ற அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறதா என்பதை அறிய மாவட்ட ஆதி திராவிட நல அலுவலகத்தில் ஒரு பிரிவை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் தலைமையில் அந்த மாவட்டத்தில் 18 சதவீதம் SC-க்கும் 1 சதவீதம் ST-க்கும் வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இதை கவனித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசுத் துறைகளில் குறிப்பாக Department of Sugars and Co-operative Department போன்ற துறைகளில் 18 விழுக்காடு நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அந்த இடங்களை நிரப்புவதற்குத் துறை எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஆராய்வதற்காகத்தான் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு இயங்கி வந்தது. ஆனால், தற்போது இயங்காமல் இருக்கிறது. அதை மீண்டும் நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 455, டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

455—

சங்ககிரியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் அமைத்தல்.

*11336—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் சென்ற ஆண்டு 24 இலட்சம் ரூபாயில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குச் சங்ககிரியில் ஒரு மாணவர் விடுதி கட்ட அனுமதி அளித்த என்னுடைய அன்னையின் தாழ்பணிந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சமுதாய நலக்கூடம் கட்டுவதற்காக அந்த விடுதிக்கு அருகிலேயே 1 ஏக்கர் 45 சென்ட் அரசு நிலம் உள்ளது. அதைப் பயன்படுத்தி, அந்த சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரித் தொகுதிக்குச் சென்ற ஆண்டே 24 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர் விடுதி தந்திருக்கிறோம். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாயைத்தான் இந்த சமுதாயக் கூடத்திற்கு ஒதுக்கி இருக்கின்றோம். ஏற்கனவே அரசு கொடுத்த உறுதிமொழிகள் எல்லாம் இருக்கின்றன. அதையெல்லாம் கருத்தில் கொண்டு இது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மூலம் அந்த நிலத்தை

1993 ஏப்ரல் 23]

யாவது தற்போதே அந்த சமுதாயக் நலக் கூடம் கட்ட அனுமதி கேட்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இது வருவாய்த் துறை பற்றிய கேள்வியாக இருப்பதால் இதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண். 457, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

457—

செம்பனார் கோவில் ஒன்றியத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டுதல்.

*15202— திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கடற்கரையோர செம்பனார் கோவில் ஒன்றியத்தை மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி கடற்கரையோரம் 30 கி.மீ. தூரம் உள்ள தொகுதி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் 20,000-க்கும் அதிகமான மீனவர்கள் வாழ்கின்ற தொகுதி. அங்கே ஏழையெளிய மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு பூம்புகாரிலிருந்து சந்திரப்பாடி வரை 12 பஞ்சாயத்துகளும்

1993 ஏப்ரல் 23]

யாவது தற்போதே அந்த சமுதாயக் நலக் கூடம் கட்ட அனுமதி கேட்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இது வருவாய்த் துறை பற்றிய கேள்வியாக இருப்பதால் இதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண். 457, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

457—

செம்பனார் கோவில் ஒன்றியத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டுதல்.

*15202— திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கடற்கரையோர செம்பனார் கோவில் ஒன்றியத்தை மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி கடற்கரையோரம் 30 கி.மீ. தூரம் உள்ள தொகுதி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் 20,000-க்கும் அதிகமான மீனவர்கள் வாழ்கின்ற தொகுதி. அங்கே ஏழையெளிய மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு பூம்புகாரிலிருந்து சந்திரப்பாடி வரை 12 பஞ்சாயத்துகளும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சிகளும், உள்ளன. கடற்கரையோரமுள்ள அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் வீடு கட்டும் திட்டத்தை வருகின்ற நிதியாண்டிலாவது? அமைச்சர் அவர்கள் சேர்ப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதற்காகத்தான் பூம்புகார் தொகுதியிலே பட்டுக்குள் தங்குவதற்கு. தங்கும் இடவசதியை தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அமைக்க உத்திரவிட்டுள்ளார்கள், மீனவர்கள் வீடு கட்டுவதற்கு தேவையான அளவிற்கு 3 சென்ட் நிலம் வீதம் இலவசமாக அரசுக்கு வழங்கும் பட்சத்தில். வருகின்ற நிதியாண்டில் 1993-94 ஆம் ஆண்டைப் பொறுத்த மட்டில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டாயிரம் வீடுகள் ரூபாய் 5.5 கோடி செலவில் கட்டுவதற்கு உத்திரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் அரசுக்கு இலவசமாக மூன்று சென்ட் நிலம் தரும் பட்சத்தில் இது வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மூன்று சென்ட் நிலத்தை ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஏராளமான அரசு நிலங்கள் அங்கே இருக்கின்றன, அதை வாங்கிக் கொடுப்பதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆகவே. வருகின்ற நிதியாண்டில் அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து ஏற்கனவே நான் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன், இருப்பினும் மீண்டும் ஒரு முறை சொல்கிறேன், அவர்கள் மூன்று சென்ட் நிலம் இங்கு இருக்கிறது என்பதை திட்டவட்டமாக, தெளிவாக, சர்வே நம்பருடன் குறிப்பிட்டு சொன்னால் அந்த இடத்தில் மீனவர்களுக்கு இலவசமாக வீடு தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 458. திரு. கே, செல்வராஜ், இருக்கையில் இல்லை, திரு. வி. பி. சந்திரசேகர் கேட்கிறார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்,

1993 ஏப்ரல் 23]

458—

கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு ஏற்றுமதித் தொழில் செய்ய கடன் வசதி.

*11279—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு ஏற்றுமதித் துறை தொடர்பான தொழில் செய்ய கடன் வசதி செய்து கொடுத்து உதவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

தற்போது படித்து வேலையற்ற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் உற்பத்தித் தொழிற் கூடங்கள் அமைத்திட ரூ. 35,000 வரை கடனுதவி அளித்து மாவட்டத் தொழில் மையங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கிறது. இது ஏற்றுமதி தொடர்பான தொழில் செய்வதற்குப் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு எத்தனை படித்த இளைஞர்கள் பயன்பெறுகிறார்கள். அவர்களுக்கு வயது வரம்பு உள்ளதா ? மாவட்ட தொழில் மையம் இதற்கு எந்தவகையில் உதவி புரிகிறது என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 இலட்சம் முதல் 2 இலட்சத்து 50 ஆயிரம் வரை படித்த வேலையற்ற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு மாவட்ட தொழில் மையம் உதவி புரிந்து வருகிறது. இதற்கு வயது வரம்பு, 10—ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைத்து வேலையற்ற இளைஞர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். மாவட்ட தொழில் மையத்தினுடைய பொது மேலாளர், கடன் உதவி மேலாளர் அவர்களைத் தலைவராக கொண்ட தலைமை வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட சிறு தொழில் சேவை நிலையம் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலர்கள் ஆகியவர்களைக் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்று இருக்கிறது. இந்தக் குழு தொழில் முனைவர்களை தேர்ந்தெடுப்பது, தொழில் திட்டத்தை கண்டறிந்து தயாரிப்பது, ஒவ்வொரு தொழில் முனைவர்களின் நடவடிக்கையை கண்டறிவது, தொழில் முனை

வர்களுக்கு கடன் தருவதற்கு பரிந்துரை செய்வது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விரைவாக அனுமதி பெறுவது, முதலிய பணிகளில் மாவட்ட தொழில் மையம் இந்தச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், படித்த இளைஞர்களுக்கு உதவி புரிந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி தொழில் செய்ய இளைஞர்கள் நிறைய பேர் ஆர்வமாக இருக்கின்றார்கள் குறிப்பாக கரூரிலே கைத்தறி துணி ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பு அங்கே அதிகமாக இருக்கின்றது. அதே போல, திருப்பூரிலே பனியன் ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பும் அங்கே இருக்கின்றது. கரூர், திருப்பூர் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற படித்த விவரம் தெரிந்த வாலிபர்கள் நிதிவசதி இல்லாமல், அந்தத் தொழிலை செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல், தனிப்பட்ட முதலாளிகளிடத்திலே போய் வேலைக்கு சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, மாவட்ட தொழில் மையம் மூலமாக அதிகமானத் தொகையினை ஒதுக்கி அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதாவது 10—ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்த இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஏற்றுமதித் தொழில் செய்வதற்கு 35,000 ரூபாய் மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அது குறித்த விவரங்களைத் தருவார்களேயானால் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து விட்டு, வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு இந்த மாவட்ட தொழில் மையத்தில் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால நானே பல விண்ணப்பங்களை என்டார்ஸ் செய்து அனுப்பியும் அவர்கள் கொடுக்கவில்லை. அவர்கள் வங்கிகளுக்குத்தான் அந்த விண்ணப்பங்களை அனுப்புகிறார்கள். வங்கிகளில் சென்று

1993 ஏப்ரல் 23]

எவ்வளவோ மன்றாடியும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் அந்த இளைஞர்களுக்குப் பணம் கொடுக்க மறுக்கின்றன. இதைப்பற்றி எல்லாம் நான் பல முறை அந்த மாவட்டத் தொழில் மையத்தில் சென்று பேசி இருக்கிறேன். அவர்கள் வங்கிகளைக் காட்டுகிறார்கள். வங்கிளிடம் போனால் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த தொழில் செய்கிற இளைஞர்களுக்கு வங்கிகளில் பணம் கொடுப்பதற்கு ஏதாவது தனியாக உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையத்தின் மூலம், மாவட்ட தொழில் மையத்தினுடைய பொது மேலாளர், கடன் உதவி மேலாளர் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்த வங்கிகளின் அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு இத்தகைய கடன் உதவி பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, உதவி செய்து வருகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கூறும்போது 35 வயது வரை உள்ளவர்களுக்கு இந்தக் கடன் வசதி செய்து தரவேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் படித்த இளைஞர்களுக்கு பல காலமாக வேலைக்காகக் காத்திருந்து வேலை கிடைக்காத நிலையில் இந்தத் தொழில் செய்வதற்கு முன் வருகிறபோது, அப்படி ஒருசிலர் முன்வருகிறபோது 35 வயதுக்கு மேல் ஒருநாள், இரண்டு நாள் ஆகிவிட்டால் கூட அவர்களுடைய மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே இந்தத் தொழில் செய்வதற்கு வரும்போது 35 வயது என்று ஒரு நிர்ணயம் வைக்காமல் 40 வயது வரையாவது அதை உயர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி— மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ் நாட்டில் தொழில் துறையில் பொற்காலம் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு புதிய தொழில் கொள்கையை வகுத்துத் தந்து உள்ளார்கள். அந்தக் கொள்கை அடிப்படையில் இன்றைக்கு பல்வேறு வசதிகள், தொழில் புரிவதற்கு பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இந்தத் திட்டம் 18 வயது முதல்

35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுவதால் இந்த வயது வரம்பை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. 35 வயதுக்கு மேலான இளைஞர்களுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய தொழில் கொள்கை அடிப்படையில் அத்தகைய தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 459, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

459—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவித்தல்.

* 11323—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10–45

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேடியோவைத் திருப்பினாலும் கூட ''பட்டு ஓத்த பட்டு அது ஆரணிப்பட்டு'' என்கின்ற அளவுக்கு (குறுக்கீடு) காஞ்சீபுரம் பட்டு என்றுகூட வருகிறது. அதோடு சேர்த்து ஆரணியையும் சேர்த்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த அளவுக்கு இன்றைக்குப் பட்டுத் தொழிலிலே பேர்போன ஆரணி

35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுவதால் இந்த வயது வரம்பை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. 35 வயதுக்கு மேலான இளைஞர்களுக்கு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய தொழில் கொள்கை அடிப்படையில் அத்தகைய தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு உரிய உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 459, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

459—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவித்தல்.

* 11323—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10–45

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேடியோவைத் திருப்பினாலும் கூட "பட்டு ஓத்த பட்டு அது ஆரணிப்பட்டு" என்கின்ற அளவுக்கு (குறுக்கீடு) காஞ்சீபுரம் பட்டு என்றுகூட வருகிறது. அதோடு சேர்த்து ஆரணியையும் சேர்த்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த அளவுக்கு இன்றைக்குப் பட்டுத் தொழிலிலே பேர்பே:ான ஆரணி

1993 ஏப்ரல் 23]

மாநகரிலே என்னுடைய தொகுதியிலே பெரும்பான்மையான மக்கள் நெசவாளர்கள். இன்றைக்கு அந்த நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பின் காரணமாக இன்றைக்கு நலிந்து கொண்டு இருக்கின்ற அந்த பட்டுத் தொழிலை ஊக்குவிக்க வேண்டிய கால கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலான அந்த நெசவாள மக்கள் இரண்டு வகைகளிலே பெறுகிறார்கள். ஒன்று கூட்டுறவுத் துறையிடமிருந்து பெறுகிறார்கள். மற்றொன்று தனியாரிடமிருந்து பெறுகிறார்கள். அப்படி பெறுகின்ற மக்களிலே பெரும்பான்மையானவர்கள் தனியாரிடத்திலேயிருந்து பெறுகிறார்கள். ஆனால் இன்று இருக்கிற சூழ்நிலையிலே அவர்கள் தொழிலைச் செய்வதற்கு தேவையான பட்டு அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலேயே, அவர்கள் இதை ஒரு புகாராக என்னிடத்திலே சொன்ன போது, அந்த தனியாரிடத்திலே என்ன என்று கேட்ட போது அவர்களுக்குத் தேவையான பட்டை அவர்கள் பெங்களூரிலிருந்து வாங்கி வர வேண்டியிருப்பதாகவும், பெங்களூரிலே பட்டின் விலை அதிகமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். இதன் காரணமாக அங்கே இருக்கின்ற நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: அந்த அடிப்படைப் பட்டைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பாரா? ஆம் எனில், அதற்காக அமைச்சர் என்ன நடவடிக்கை மேற்கொள்வார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் பட்டுத் தொழிலை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற வினாவை தொடுத்துள்ளார்கள். அந்த வினாவின் அடிப்படையிலே கடந்த ஆண்டில் மட்டும் 75 நபர்களுக்கு பட்டுத் தொழிலை மேற்கொள்ள 12 ஆயிரம் முட்டைத் தொகுதிகளை வளர்த்து 3.61 லட்சம் மதிப்பில் பட்டுப் புழுக்களை உற்பத்தி செய்து பயன் அடைந்துள்ளார்கள். மேலும் நடப்பு திட்ட ஆண்டில் 125 ஏக்கரில் மல்பெரி நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதிலே 208 விவசாயிகள் 105 ஏக்கர் அளவில் மல்பெரி பயிர் செய்து வருகிறார்கள். இவர்களில் 75 நபர்களுக்கு பயிர்க் கடனாக ரூ. 52,500-ம், பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காக ரூ. 3 லட்சமும், பட்டு வளர்ப்புக்கான உபகரணங்கள் கொள்முதலுக்காக ரூ. 1,68,750-ம் வங்கிகள் மூலம் கடன் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3.61 லட்சத்திலே

75 நபர்களுக்கு பட்டு வளர்ப்புக்காக, உற்பத்திக்காக கடனுதவிகள் மற்ற உதவிகள் செய்வதாக இங்கே சொன்னார்கள். 125 ஏக்கர் நிலத்திலே 208 விவசாயிகள் இந்த தொழிலை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவருக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்துலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே எங்களுடைய தொகுதியில் ஒரு செரிகல்சர் கிளை அலுவலகத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலுங்கூட அந்தப் பகுதிகளிலேயெல்லாம் நான் நேரிலே சென்று பார்த்த போது, ஆரணியிலே மல்பெரி நன்றாக விளையக்கூடிய பூமியாக இருக்கிறது. அப்படி விளையக்கூடிய அந்த பூமியிலே பட்டுப் பூச்சி உற்பத்தி செய்வதும், அதிலே இருந்து பட்டு வளர்ப்பதும், ரீலிங் செய்வதற்கும் ஆரணி தொகுதியிலே இன்றைக்குக் கிட்டத்தட்ட 150 டுவிஸ்ட்டிங் பேக்டரிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் இந்த பட்டுகள் ஆரணித் தொகுதியிலேயே உற்பத்தி செய்து கொடுக்கப்படுமானால் ஆரணி தொகுதியிலே இருக்கின்ற மக்கள் வேறு எங்கும் செல்ல வேண்டாம். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் துணைக் கேள்வியிலேயே அவ்வளவு விரிவாக வேண்டாமென்று நான் சொன்னேன். இரண்டாவது துணைக் கேள்வியிலேயும் இவ்வளவு விரிவாகப் பேசிக் கொண்டு இருந்தால் என்ன செய்வது? துணைக் கேள்வி கேளுங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: அந்த 125 ஏக்கர் என்று சொன்னார்கள். ஆரணியிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு அந்த 125 ஏக்கரிலே வளர்க்கப்படுகின்ற பட்டுபோதாது என்றும் ஆரணி தொகுதியைச் சுற்றி நிறைய இடங்கள் இருக்கின்றன. நிறைய விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே மிக அதிக அளவிலே இந்த பட்டை உற்பத்தி செய்வதற்காக அமைச்சர் அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய மானியக் கோரிக்கையினுடைய பதிலுரையைக் கேட்டிருப்பார்கள் என கருதுகிறேன். அதிலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று ஆரணியிலே இன்னும் மல்பெரி பயிரிடுவதற்கு நடவடிக்கைகள் இன்னும் அதிகமாக பயிரிடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 460, திரு. கா. பூ. ராமனுசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

460—

காவேரிப்பட்டணம் தொகுதியில் சிறு தொழிற்கூடங்கள் கட்டுதல்.

*16030—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தொழில்துறையில் பின்தங்கிய காவேரிப்பட்டணம் தொகுதியில் சிறு தொழிற்கூடங்கள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10—50

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அவையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் இதை யொத்த கேள்வியை கேட்டபோது தொழில் முனைவோர் முன் வருவார்கள் என்று சொன்னால் அங்கே தொழில் கூடங்களை இந்த அரசு அமைக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் என் தொகுதியில் தொழில் முனைவோர் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வழங்க உள்ளேன். எனவே, இந்த நிதியாண்டில் இதை பரிசீலனை செய்து என் தொகுதியில் இந்தத் தொழில் கூடங்களை அமைக்க முன்வருவாரா என அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் சிட்கோ தொழில் பேட்டைகள் உள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மனுக்களோடு விண்ணப்பிப்பார்களேயானால் சிட்கோ அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் தொழில் துறையில் முன்னேறிய பகுதியாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் கிருஷ்ணகிரி பகுதியின் அருகிலுள்ள காவேரிப்பட்டிணத்தில் எந்த வகையிலும் ஒரு தொழிற்

சாலைகூட இல்லை. இருந்தாலும் பல தொழில் முனைவர்கள், என்னுடைய காவேரிப்பட்டிணம் தொகுதியிலிருந்துதான் பல இடங்களில், வேறு இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி சொந்த நிலத்திலேயே அவர்கள் தொழிற் கூடங்களை கட்டுவதற்குரிய ஒரு வாய்ப்பினை செய்து தர இதற்கு முந்தைய அரசுகள் முன் வரவில்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அரசு நிலமும் கிட்டத்தட்ட 30 ஏக்கர் இருக்கிறது. எனவே, முனைவோர் பட்டியலைக் கொடுக்கிறேன். இந்த நிதியாண்டில் இதைக் கொடுக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம், கொளுப்பள்ளியில் சுமார் 86.84 ஏக்கர் அரசு நிலத்தினை சிட்கோவுக்கு அரசு அளிக்க முன்வந்துள்ளது. அங்கே ஒரு தொழில்பேட்டை அமைக்க சிட்கோ உத்தேசித்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய காவேரிப்பட்டிணத்தில்தான் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கு தொழில்பேட்டை அமைக்கப்படுமானால் காவேரிப் பட்டிணம் தொழில் முனைவோர்களுக்கு உதவிகரமாக இருக்கும் பட்சத்தில், 10 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் முன் வருவார்களேயானால், 25 சதவிகிதம் விளிம்பு தொகையோடு அவர்கள் அந்த மனுக்களை விண்ணப்பிப்பார்களானால் சிட்கோ தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்கி தொழில்பேட்டையினைத் துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

441—

அரியலூரில் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடுதல்.

*10443— டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலைகூட இல்லை. இருந்தாலும் பல தொழில் முனைவர்கள், என்னுடைய காவேரிப்பட்டிணம் தொகுதியிலிருந்துதான் பல இடங்களில், வேறு இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி சொந்த நிலத்திலேயே அவர்கள் தொழிற் கூடங்களை கட்டுவதற்குரிய ஒரு வாய்ப்பினை செய்து தர இதற்கு முந்தைய அரசுகள் முன் வரவில்லை. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு நிலமும் கிட்டத்தட்ட 30 ஏக்கர் இருக்கிறது. எனவே, முனைவோர் பட்டியலைக் கொடுக்கிறேன். இந்த நிதியாண்டில் இதைக் கொடுக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம், கொளுப்பள்ளியில் சுமார் 86.84 ஏக்கர் அரசு நிலத்தினை சிட்கோவுக்கு அரசு அளிக்க முன்வந்துள்ளது. அங்கே ஒரு தொழில்பேட்டை அமைக்க சிட்கோ உத்தேசித்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய காவேரிப்பட்டிணத்தில்தான் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கு தொழில்பேட்டை அமைக்கப்படுமானால் காவேரிப் பட்டிணம் தொழில் முனைவோர்களுக்கு உதவிகரமாக இருக்கும் பட்சத்தில், 10 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் முன் வருவார்களேயானால், 25 சதவிகிதம் விளிம்பு தொகையோடு அவர்கள் அந்த மனுக்களை விண்ணப்பிப்பார்களானால் சிட்கோ தகுந்த நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வாங்கி தொழில்பேட்டையினைத் துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 441, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

441—

அரியலூரில் குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடுதல்.

*10443— டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 ஏப்ரல் 23]

மூளைக் காய்ச்சல் நோய் தடுக்கும் தடுப்பூசி முறைகள் இந்தியாவில் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும், 1989 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வழங்கப் பட்ட தடுப்பூசியால் அங்கே தமிழ்நாட்டு குழந்தைகளுக்குப் போடப்பட்டு களப் பரிசோதனை செய்யப்பட்டது. மத்திய அரசு மருந்துகளை மேற்கொண்டு வழங்கும்போது இத்தடுப்பூசி போடப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், develops High fever, Headache, Vomitting and complications like febrile fits, paralysis, respiratory arrest and coma. The child becomes very restles and irritable. With intense medical care சில குழந்தைகள் குணம் அடைகின்றன. ஆனால் ஒரு சில குழந்தைகள் பின்தொடர் விளைவுகளால் முக்கியமான வலிப்பு paralysis of limbs ஆகியவைகளால் பாதிக்கப்படுகின்றன. So, the child becomes mentally retarded, unfit for the society and burden for their parents. அரசு தொட்டில் வைத்து குழந்தைகளை வளர்க்கும் புரட்சிகரமான திட்டத்தைச் செயல்படுத்தி வரும் புரட்சித் தலைவியின் அரசு ஜாப்பனீஸ் மூளைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு மருந்தை இனியாவது அதிகமாக பாதிக்கப்படும் என் தொகுதியிலுள்ள குழந்தைகளுக்கு மட்டுமாவது வருடா வருடம் போட மக்கள் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட மாண்புமிகு மக்கள் நல் வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி மத்திய அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு ஆராய்ச்சி நிலையம் இதற்கான தடுப்பூசியை கொடுத்தார்கள். அந்தத் தடுப்பூசி ஒரு பரிசோதனைக்காக 2 லட்சம் டோசஸ் போடப்பட்டது. அதற்குப் பின்னால் அதனுடைய விளைவுகள் எப்படி இருந்தது என்பதைப் பற்றி ஆராய்ச்சி நிலையத்திற்கு தெரிவிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் நம்முடைய அதிகாரிகளிடத்தில் கேட்ட போது அவர்கள் அவ்வளவு வெற்றிகரமாக இல்லையென்று தெரி வித்தார்கள். இது மத்திய அரசாங்கத்தினுடைய ஆராய்ச்சி நிலையத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் அவர் களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இது தொடர்பாக அங்கே ஆராய்ச்சி நடப்பதாகத் தெரிகிறது. எனவே, அங்கிருந்து மீண்டும் அந்தத் தடுப்பூசி மருந்துகளை கொடுக்கிறபோது நாம் பயன்படுத்தலாம். அதற்காக நம்மிடத்தில் இப்போது தனிப்பட்ட முறையில் மருந்து இருப்பதாகத் தெரியவில்லை.

[1993 ஏப்ரல் 23

முற்பகல் 10-55

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அது சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பெயில்யூர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தத் தடுப்பு ஊசி வெரி காஸ்ட்லி. அதை முறைப்படி 3 டோஸ்கள் பயன்படுத்த வேண்டும். முதலில் ஒரு டோஸ் போட்டு, 6 அல்லது 7 மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு அடுத்த 2 டோஸ்களைப் போட்டு, பின்பு ஒரு பூஸ்டர் டோஸ் போட வேண்டும். இது காஸ்ட்லி என்பதால் அதை யாரும் முறையாகப் பயன்படுத்திப் பார்க்கவில்லை. அதனால், பெயில்யூர் ஆகிவிட்டது. எனவே, மீண்டும் அமைச்சரவர்கள் அதைப் பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. எனவே, அதிலே என்ன விலை என்பதைப் பற்றி பிரச்சினையில்லை. பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. அப்படி பரிசோதனைக்காகக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் என்ன முறையில் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆராய்ச்சி நிலையத்திலே சொன்னார்களோ, அந்த முறையில் தான் பயன்படுத்தியிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அப்படிப் பயன்படுத்தி, அந்த ரிசல்ட் சரியாக இல்லை. நாம் எதிர்பார்த்த அளவுக்கு அதிலே வெற்றிகரமாக இல்லை என்று அந்த ஆராய்ச்சி நிலையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பல இடங்களில், எங்கெங்கே மூளைக் காய்ச்சல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இதைக் கொடுத்து பரிசோதித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு மத்திய அரசினுடைய அந்த ஆராய்ச்சி நிலையம் மீண்டும் இதைப் பரிசோதித்து, நமக்குக் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்தலாம். நம்மிடத்திலே அதைத் தடுப்பதற்கான எந்த மருந்தும் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 442, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

442—

நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம்.

*11240—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 23

முற்பகல் 10-55

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் அது சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பெயில்யூர் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அந்தத் தடுப்பு ஊசி வெரி காஸ்ட்லி. அதை முறைப்படி 3 டோஸ்கள் பயன்படுத்த வேண்டும். முதலில் ஒரு டோஸ் போட்டு, 6 அல்லது 7 மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு அடுத்த 2 டோஸ்களைப் போட்டு, பின்பு ஒரு பூஸ்டர் டோஸ் போட வேண்டும். இது காஸ்ட்லி என்பதால் அதை யாரும் முறையாகப் பயன்படுத்திப் பார்க்கவில்லை. அதனால், பெயில்யூர் ஆகிவிட்டது. எனவே, மீண்டும் அமைச்சரவர்கள் அதைப் பரிசிலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. எனவே, அதிலே என்ன விலை என்பதைப் பற்றி பிரச்சினையில்லை. பரிசோதனைக்காகவே கொடுக்கப்பட்டது. அப்படி பரிசோதனைக்காகக் கொடுக்கப்பட்டபோது, அவர்கள் என்ன முறையில் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆராய்ச்சி நிலையத்திலே சொன்னார்களோ, அந்த முறையில் தான் பயன்படுத்தியிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே, அப்படிப் பயன்படுத்தி, அந்த ரிசல்ட் சரியாக இல்லை. நாம் எதிர்பார்த்த அளவுக்கு அதிலே வெற்றிகரமாக இல்லை என்று அந்த ஆராய்ச்சி நிலையத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பல இடங்களில், எங்கெங்கே மூளைக் காய்ச்சல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இதைக் கொடுத்து பரிசோதித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு மத்திய அரசினுடைய அந்த ஆராய்ச்சி நிலையம் மீண்டும் இதைப் பரிசோதித்து, நமக்குக் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்தலாம். நம்மிடத்திலே அதைத் தடுப்பதற்கான எந்த மருந்தும் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 442, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

442—

நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம்.

*11240—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(அ) சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக உதவி மருத்துவர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்பொழுது எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழி தொகுதி நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண் மருத்துவர் ஒருவரும் பெண் மருத்துவர் ஒருவரும் பணிபுரிந்து வருகிறார்கள். புதிதாக மருத்துவர்களை நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் அடங்கியுள்ள நல்லூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. அதைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. கிராமப் பகுதியாக இருப்பதாலும், ஏழை மக்கள் அதிகமாக இருப்பதாலும் அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டாலோ அல்லது நோய் ஏற்பட்டாலோ அவர்கள் மற்ற வெளி மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாமல், அருகாமையில் நல்லூரில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வந்து, தங்களுடைய உடல்நிலையைப் பார்த்துக்கொள்கிறார்கள். மேலும், பொதுமக்கள் அங்கே அதிகமாக வருவதால் அனைவரையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியாத சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுகிறது. எனவே, இந்த நிலையைப் போக்க நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக ஒரு உதவி மருத்துவர் நியமனம் செய்ய, ஏழை மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டு வரும் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு மருத்துவர்கள் இருக்க வேண்டுமென்ற நியதியைத்தான் நாம் வைத்திருக்கிறோம். எனவே, இங்கும் 2 மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, புதிதாக, கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிக்கும் வாய்ப்பு இல்லை. இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா என்பதைப்பற்றி வேண்டுமானால் ஆய்வு செய்யச் சொல்லலாம். அங்கே வருகின்ற நோயாளிகள், அதைச் சுற்றி எவ்வளவு தூரத்தில் மருத்துவமனை இருக்கிறது என்பதை எல்லாம் அடிப்படை

யாக வைத்து, தரம் உயர்த்துகிற வாய்ப்பு ஏற்படும் போது வேண்டுமானால் கூடுதலாக மருத்துவர்கள் அங்கே வர வாய்ப்பு இருக்கும். எனவே, அதை உறுதியாக என்னால் இப்போது சொல்ல முடியாது. என்றாலும், அதைத் தரம் உயர்ந்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வு செய்யும்படி துறைக்குச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடத்தல்.

*15250—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்த அவருக்கு அதிகாரம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் தலைமையில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மேலும் இது மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே முழுப்பொறுப்பையும் தந்து, அந்தச் செயல்பாடுகளை அவர்கள் கவனிப்பார்களானால், நன்றாக இருக்கும். இது குறித்து விளம்பரங்கள் செய்யவும், குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வருகின்றவர்களை அழைத்து வரவும், அவர்களைக் கவனிக்கவும், மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லவும், அவர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளைச் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சிறப்பாகச் செயல்பட முடியும். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதை மாத்திரம் வைத்துக்

யாக வைத்து, தரம் உயர்த்துகிற வாய்ப்பு ஏற்படும் போது வேண்டுமானால் கூடுதலாக மருத்துவர்கள் அங்கே வர வாய்ப்பு இருக்கும். எனவே, அதை உறுதியாக என்னால் இப்போது சொல்ல முடியாது. என்றாலும், அதைத் தரம் உயர்ந்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வு செய்யும்படி துறைக்குச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடத்தல்.

*15250—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்த அவருக்கு அதிகாரம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் தலைமையில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மேலும் இது மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே முழுப்பொறுப்பையும் தந்து, அந்தச் செயல்பாடுகளை அவர்கள் கவனிப்பார்களானால், நன்றாக இருக்கும். இது குறித்து விளம்பரங்கள் செய்யவும், குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வருகின்றவர்களை அழைத்து வரவும், அவர்களைக் கவனிக்கவும், மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லவும், அவர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளைச் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சிறப்பாகச் செயல்பட முடியும். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதை மாத்திரம் வைத்துக்

1993 ஏப்ரல் 23]

கொண்டு, எல்லாச் செயல்பாடுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய வாயிலாகச் செய்தோமானால் மிகச் சிறப்பாக இருக்கும். இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதிலே பொறுப்பேற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்குக் கீழே அங்கே இருக்கிற அதிகாரிகள்—மருத்துவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்ற அது சம்பந்தமான பணிகள் முறையாக நடக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கும் தீவிரப்படுத்துவதற்கும் முழுமையாக அவர்களுக்குச் சுதந்திரம் இருக்கிறது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பக் கட்டுப் பாடு அறுவை சிகிச்சைக்காக ஆபரேஷன் தியேட்டர்கள் கட்டப் பட்டிருக்கின்றன. அது ஒரு சில இடங்களில் செயல்பாடற்று இருக்கிறது. என்ன காரணம் என்று கேட்கிறபோது, அங்கே, சிகிச்சை செய்வதற்குக் கருவிகள் இல்லை என்றும், நல்ல தண்ணீர் இல்லை என்றும் அதற்கு வேண்டிய மருத்துவர்கள் இல்லை என்றும், பேண்டேஜ் துணி, பெட் வசதி இல்லை என்றும் அங்கே இருக்கிற டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டிடம் நன்றாக இருந்தாலும் அதை கோடவுனாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு வசதி செய்யப்படுமானால், பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து வருகிற மக்கள் எல்லாம் பெரிய நகரங்களுக்கு வராமல் அங்கேயே அதைச் செய்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அதன் காரணமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் மேலும் தமிழகம் முன்னோடியாகத் திகழ்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நாம் அதிக அளவிலேதான் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் அத்தனையையும் செய்து வருகிறோம். இந்தியத் துணைக்கண்டத்திலே எல்லாவற்றிலும் நாம் தான் முன்னணியில் இருக்கிறோம். இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சில இடங்களில் இருக்கிற அறுவை அரங்குகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன் ; குறிப்பாக லீக்கேஜ் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை பொதுப்பணித்துறை மூலமாக நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கருவிகள் இல்லையென்று சொன்னார்கள். அதை எல்லாம் வாங்கித் தரவேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதை ஒவ்வொன்றாக எடுத்து முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர் செல்வம் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

444—

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள சமூக நலக் காடுகள்.

*9525—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பரப்பளவு சமூக நலக்காடுகள் ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) தற்பொழுது பராமரிக்கப்படும் ஏக்கர்கள் எவ்வளவு ?

(இ) இதற்கான செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 69,500 ஏக்கர் நிலங்கள் பராமரிக்கப்படுகின்றன.

(ஆ) 69,500 ஏக்கர் நிலங்களில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நாம் அதிக அளவிலேதான் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் அத்தனையையும் செய்து வருகிறோம். இந்தியத் துணைக்கண்டத்திலே எல்லாவற்றிலும் நாம் தான் முன்னணியில் இருக்கிறோம். இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சில இடங்களில் இருக்கிற அறுவை அரங்குகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன் ; குறிப்பாக லீக்கேஜ் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை பொதுப்பணித்துறை மூலமாக நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கருவிகள் இல்லையென்று சொன்னார்கள். அதை எல்லாம் வாங்கித் தரவேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதை ஒவ்வொன்றாக எடுத்து முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர் செல்வம் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

444—

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள சமூக நலக் காடுகள்.

*9525—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பரப்பளவு சமூக நலக்காடுகள் ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) தற்பொழுது பராமரிக்கப்படும் ஏக்கர்கள் எவ்வளவு ?

(இ) இதற்கான செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 69,500 ஏக்கர் நிலங்கள் பராமரிக்கப்படுகின்றன.

(ஆ) 69,500 ஏக்கர் நிலங்களில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1993 ஏப்ரல் 23]

(இ) 2 கோடியே 33 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் இதில் வருமானம் வருகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 69,500 ஏக்கர் பராமரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்படவுள்ளது என்பதையும், இந்த சமூக நலக்காடுகள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணிகளாக 1988–89-லிருந்து 1991–92 வரையிலும் அதற்காக பராமரிப்புச் செலவுக்காக மொத்தம் 2,598 இலட்சம் ரூபாய் நாம் செலவு செய்திருக்கிறோம். அதேபோல 1992–93-க்கு மட்டும் 898 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ பராமரிப்புக்கு மட்டும், அதாவது மரங்களை நட்டு தோட்டங்களை வளர்த்து பராமரிக்க மட்டும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 69,500 ஏக்கர் நிலங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இந்திய நாட்டின் மூன்று மாநிலங்களுக்குத்தான் இந்த 'சீடா' என்ற திட்டத்தை அதாவது தமிழ்நாடு, பீகார், மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் மட்டும்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த இத்திட்டத்தைப் பயன்படுத்துகிற மாநிலமாகவும், சிறப்பான முறையில் சமூகக் காடுகளை வளர்க்கிற மாநிலம் என்று எடுத்துக்கொண்டால் தமிழகத்திலே இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான் என்பதைப் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445 திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. என். ஆர். சிவபதி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ள விருதுகள்.

*11738—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(இ) 2 கோடியே 33 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் இதில் வருமானம் வருகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 69,500 ஏக்கர் பராமரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்படவுள்ளது என்பதையும், இந்த சமூக நலக்காடுகள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணிகளாக 1988–89-லிருந்து 1991–92 வரையிலும் அதற்காக பராமரிப்புச் செலவுக்காக மொத்தம் 2,598 இலட்சம் ரூபாய் நாம் செலவு செய்திருக்கிறோம். அதேபோல 1992–93-க்கு மட்டும் 898 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ பராமரிப்புக்கு மட்டும், அதாவது மரங்களை நட்டு தோட்டங்களை வளர்த்து பராமரிக்க மட்டும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 69,500 ஏக்கர் நிலங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இந்திய நாட்டின் மூன்று மாநிலங்களுக்குத்தான் இந்த 'சீடா' என்ற திட்டத்தை அதாவது தமிழ்நாடு, பீகார், மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் மட்டும்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த இத்திட்டத்தைப் பயன்படுத்துகிற மாநிலமாகவும், சிறப்பான முறையில் சமூகக் காடுகளை வளர்க்கிற மாநிலம் என்று எடுத்துக்கொண்டால் தமிழகத்திலே இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான் என்பதைப் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445 திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. என். ஆர். சிவபதி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ள விருதுகள்.

*11738—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலைப் பாதுகாப்பு விருது, தேசிய உற்பத்தித்திறன் விருது, இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் விருதுபோன்ற விருதுகளை தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் பெற்றிருக்கின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விவர அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் சாலைப் பாதுகாப்பு விருது, தேசிய உற்பத்தித் திறன் விருது இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளன. அந்த விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது :—

வரிசை எண்.	போக்குவரத்துக் கழகத்தின் பெயர்.	பெற்ற விருது.	அளித்த நிறுவனம்.
(1)	(2)	(3)	(4)
1.	அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம்.	1. 1990–91 ஆம் ஆண்டிற்கு டீசல் சிக்கனத்திற்கு (போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான) முதல் பரிசு.	இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்.
		2. 1990–91 ஆம் ஆண்டிற்கு லிட்டருக்கு அதிக கி.மீ. ஓட்டி முன்னேற்ற சதவீதம் இரண்டாம்பரிசு (சுழற்கோப்பை).	இந்திய பெட்ரோல் மற்றும் ஆராய்ச்சி மையம்.
2.	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்.	1986–87 தேசிய உற்பத்தி திறன் விருது.	தேசிய உற்பத்திக் குழு.

(1)	(2)	(3)	(4)
		1987–88 தேசிய உற்பத்தித் திறன் விருது.	தேசிய உற்பத்திக் குழு.
		1989–90 டீசல் சேமிப்பு விருது.	இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்.
		1990–91—	
		(1) டீசல் சேமிப்பு விருது.	இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்.
		(2) தேசிய உற்பத்தித் திறன் விருது.	தேசிய உற்பத்திக் குழு.
		(3) பேருந்து உற்பத்தித் திறனில் மிக உயர்ந்த முன்னேற்றத்திற்கு விருது.	அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு.
		(4) பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்த முன்னேற்றத்திற்கு விருது.	அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு.
3.	சோழன் போக்குவரத்துக் கழகம்.	1980–81 டீசல் செயல் திறன் முதலிடம்.	இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆரய்ச்சி மையம்.
		1984–85 உற்பத்தித் திறன் விருது.	தேசிய உற்பத்தித் திறன் குழு.

		1985–86 டீசல் செயற்திறன் முதலிடம்.	இந்திய பெட்ரோலிய சேமிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்.
		1985–86 உற்பத்தித்திறன் விருது டீசல் செயல் திறன் முதலிடம்.	தேசிய உற்பத்தித் திறன் குழு.
		1990–91 டீசல் செயல் திறன் இரண்டாமிடம்.	இந்தியன் ஆயில் கழகம்.
		1990–91 டீசல் செயல் திறன் முதலிடம்.	அரசு போக்குவரத்துக் கழகங்களின் குழுமம்.
4.	பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.	1983–84— டீசல் சிக்கனம் தேசிய விருது. 1984–85— டீசல் சிக்கனம் தேசிய விருது. 1985–86— டீசல் சிக்கனம் தேசிய விருது.	அரசு போக்குவரத்துக் கழகங்களின் குழுமம்.
		1985–86— தேசிய உற்பத்தித்திறன் விருது.	தேசிய உற்பத்தித் திறன் குழு.
5.	சேரன் பொறியியற் கழகம்.	1984— (1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்.	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.

53-14 5—6

(1)	(2)	(3)	(4)
		(2) மூன்றாமிடத்திற்கான இரு சான்றிதழ்கள்.	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.
		1987—(1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்.	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.
		(2) மூன்றாமிடத்திற்கான ஒரு சான்றிதழ்.	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.
		1988—(1) இரண்டாமிடத்திற்கான சான்றிதழ்கள் இரண்டு	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.
		1989—(1) முதலிடத்திற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்.	தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வகம்.
6.	சேரன் போக்குவரத்துக் கழகம்.	1989–90 உற்பத்தித்திறன் விருது இரண்டாவது இடம்.	தேசிய உற்பத்தித்திறன் குழு.
7.	நேசமணி போக்குவரத்துக் கழகம்.	1986–87—தேசிய உற்பத்தித்திறன் விருது இரண்டாவது இடம்.	தேசிய உற்பத்திக்கழகம்.

		1987–88 தேசிய உற்பத்தித் திறன் முதலிடம்.	சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு.
		1987—தேசிய உடல் ஊனமுற்றோர் விருது.	உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு சங்கம்.
		1988–89—டயர் பராமரிப்பு மற்றும் டயர் உழைப்பில் முன்னேற்றம் முதலிடம்.	சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு.
		1989–90—டயர் பராமரிப்பு மற்றும் டயர் உழைப்பில் முன்னேற்றம் முதலிடம்.	சாலை போக்குவரத்து நிறுவன கூட்டமைப்பு.
		1986—மாநில பாதுகாப்பு விருது.	மாநில விருது.
௬.	திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்.	1983—உற்பத்தித் திறன் விருது.	மாநில விருது.
		1984—உற்பத்தித் திறன் விருது.	ஷை
		1985—வாகன உற்பத்தித் திறன் விருது.	ஷை
		1986—வாகன உற்பத்தித் திறன் விருது.	ஷை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
		1987—வாகன உற்பத்தித் திறன் விருது.	மாநில விருது.
		1988—வாகன உற்பத்தித் திறன் விருது.	ஷை
		1989—வாகன உற்பத்தி திறன் விருது.	ஷை
9.	இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.	1989–90—பேருந்து இயக்க உற்பத்தி திறன் முதல்பரிசு மற்றும் இரண்டாம் பரிசு.	அனைத்து மாநில போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு.
		1990–91—இயக்க உற்பத்தித் திறனில் இரண்டாவது பரிசு.	தேசிய உற்பத்தி திறன் குழு.
10.	தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.	1982–83 மற்றும் 1987 தேசிய உற்பத்தித்திறன் விருது.	தேசிய உற்பத்தி திறன் குழு.
		1987-88, 1988–89 இயக்க செயல் திறன் இரண்டாவது பரிசு.	அனைத்து மாநிலப்போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு.

11.	பல்லவன் போக்குவரத்துக் கழகம்.	1985-86—தேசிய உற்பத்தித் திறன்.	தேசிய உற்பத்தித்திறன் குழு.
12.	கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.	சாலையா துகாப்பு விருது.	மாநில விருது.
		1988-89—தேசிய உற்பத்தி திறன் விருது.	தேசிய உற்பத்தித் திறன் விருது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த விவர அறிக்கையில் கிட்டத்தட்ட 12 போக்குவரத்துக் கழகங்கள் தேசிய அளவிலான விருதுகளைப் பெற்றிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக இந்திய அளவில் நடந்த அனைத்து விருதுகளையும் நமது தமிழ் நாட்டைச் சேர்ந்த போக்குவரத்துக் கழகங்கள் தான் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். இருந்தபோதிலும், தமிழகத்தில் உள்ள மற்ற போக்குவரத்துக் கழகங்களும் – 12 போக்குவரத்துக் கழகங்கள் தான் தேசிய விருதுகளைப் பெற்றிருக்கின்றன– தேசிய அளவிலான விருதுகளைப் பெறுவதற்கு, அவர்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சியை அளிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 16 போக்குவரத்துக் கழகங்களில் நான்கை தவிர 12 போக்குவரத்துக் கழகங்கள் இந்த விருதுகளை பெற்றிருப்பதை குறிப்பிட்டார்கள். அந்த விருதுகளை 1982-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அவை பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்திய நாட்டில் 66 போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக போன ஆண்டு 11 விருதுகளை வழங்குகிறபோது, 7 விருதுகளை தமிழகம் பெறுகிற அளவுக்கு, தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அவை பெற்று இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இந்த ஆண்டும் அதே அளவுக்கு 7 விருதுகளைப் பெறுகிற அளவுக்கு நம்முடைய போக்குவரத்துத் துறை சிறப்பான முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் சிறப்பாக அதற்கு பயிற்சி அளிக்க முடியாது. பேருந்து இயக்கத் திறன், ஒவ்வொரு பேருந்தும் நாள் ஒன்றுக்கு எவ்வளவு கிலோ மீட்டர் ஓடுகிறது என்பது, டீசலை சிக்கனப்படுத்துவது இதுபோன்ற நிலைகளை வைத்து தான் அவர்கள் அந்த விருதுகளை வழங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாக நடைபெறுகிற போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக எண்ணற்ற தேசிய விருதுகள்ளைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிற இந்தத் துறையில் விளையாட்டுப் போட்டியில் தேசிய விருதுகளைப் பெற ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்ட அந்த விளையாட்டு நிகழ்ச்சி நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1989–90ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த விளையாட்டு போட்டிகள் தேவையில்லை என்று நிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இதற்கு பிறகு எதிர்காலத்தில் நீங்கள் சொல்கிற சிறப்பு விருதுகளைப் பெறுவதற்கு இந்தப் போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உங்களுடைய கேள்வி வருகிற போது நீங்கள் இருக்கையில் இருக்கவேண்டும். திரும்ப வந்து வேண்டுகோள் வைப்பது என்பதை எல்லா நேரத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

456—

பாலாறு—பொருந்தலாறு அணையிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை.

*9681—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாலாறு—பொருந்தலாறு அணையில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை தற்போது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் உற்பத்தியை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்ட அந்த விளையாட்டு நிகழ்ச்சி நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. 1989–90ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த விளையாட்டு போட்டிகள் தேவையில்லை என்று நிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இதற்கு பிறகு எதிர்காலத்தில் நீங்கள் சொல்கிற சிறப்பு விருதுகளைப் பெறுவதற்கு இந்தப் போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 456, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உங்களுடைய கேள்வி வருகிற போது நீங்கள் இருக்கையில் இருக்கவேண்டும். திரும்ப வந்து வேண்டுகோள் வைப்பது என்பதை எல்லா நேரத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

456—

பாலாறு–பொருந்தலாறு அணையிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை.

*9681— திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாலாறு–பொருந்தலாறு அணையில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை தற்போது செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் உற்பத்தியை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலத்தடி நீர் கிடைக்காததால், பொரந்தலாறு ஆற்றிலிருந்து நீர் வசதி ஏற்படுத்தியவுடன் மீண்டும் மீன் குஞ்சு உற்பத்தி தொடங்கப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, பழனி வட்டம் பாலாறு-பொரந்தலாறு அணை என்பது அந்த வட்டத்தில் மிகப்பெரிய அணையாக இருக்கிறது. அங்கே தமிழக அரசால் நிர்வகிக்கப்பட்டு வரும் அந்த மீன் பண்ணையில் நீர்வரத்துப் பற்றாக்குறை காரணமாக அந்த மீன் பண்ணையினுடைய செயல்பாடு நிறுத்தப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, அருள்கூர்ந்து அங்கே நீர்வரத்தைப் பெருக்கி, அந்த மீன் பண்ணையை விரைவில் செயல்படச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பண்ணைக்கு தேவைப்படுகிற தண்ணீர் பொரந்தலாறு ஆற்றிலிருந்து எடுத்துக்கொள்ள நீர்ப்பாசனத் துறை தலைமைப் பொறியாளரிடமிருந்து அனுமதி கேட்கப்பட்டுள்ளது. விரைவாக அனுமதி பெற்றிட மீன்துறையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மீன் பண்ணையில் என்னென்ன வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன ? இந்தப் பண்ணையை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக வளரக்கூடிய சாதா கெண்டை, சுருள் கெண்டை மற்றும் மிர்கால், கட்லா, ரோக் போன்ற மீன் குஞ்சுகள் அங்கு வள்ர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு சிறப்பான முறையிலே மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டவுடன், அதனை விரிவாக்கம் செய்யும் பணி அரசினுடைய ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23]

449—

ஓசூரில் நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

*15173— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் தொழில் நகரத்தில் ஓர் நகர கூட்டுறவு வங்கி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(22-வது பட்டியல்.)

1—

அரசு ஊழியர்கள் சிறுசேமிப்பில் தீவிரமாக முதலீடு செய்ய திட்டம்

வினா எண் 9462— டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறு சேமிப்பில் உற்சாகமாக வீரமாக அதிக அளவில் முதலீடு செய்ய அரசிடம் சிறப்பு திட்டங்கள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாத ஊதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு மட்டுமின்றி, மாத ஊதியம் பெறும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் உற்சாகமாக, தீவிரமாக சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டம் மூலம் இலகுவாக சேமித்திட சிறு சேமிப்பு திட்டங்கள் உள்ளன.

1993 ஏப்ரல் 23]

449—

ஓசூரில் நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

*15173— திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் தொழில் நகரத்தில் ஓர் நகர கூட்டுறவு வங்கி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(22-வது பட்டியல்.)

1—

அரசு ஊழியர்கள் சிறுசேமிப்பில் தீவிரமாக முதலீடு செய்ய திட்டம்

வினா எண் 9462— டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறு சேமிப்பில் உற்சாகமாக வீரமாக அதிக அளவில் முதலீடு செய்ய அரசிடம் சிறப்பு திட்டங்கள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாத ஊதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு மட்டுமின்றி, மாத ஊதியம் பெறும் மத்திய மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் உற்சாகமாக, தீவிரமாக சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டம் மூலம் இலகுவாக சேமித்திட சிறு சேமிப்பு திட்டங்கள் உள்ளன.

[1993 ஏப்ரல் 23

(1) 5 ஆண்டு அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட் திட்டம் :

5 ஆண்டு அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்.

மாத ஊதியம் பெறும் மத்திய மாநில அரசு நிறுவன மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு ஒரு சிறந்த திட்டம் ஆகும். இத்திட்டத்தில் மாதர்மாதம் குறைந்த பட்சம் ரூ. 10 முதல் அதிக பட்சம் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் சேமிக்கலாம். சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின்படி மாத ஊதியம் பெறுவோர் சம்பளம் வழங்கும் அலுவலரிடம் தம்முடைய ஊதியத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை பிடித்தம் செய்து சிறுசேமிப்புத் திட்டத்தில் செலுத்தும்படி எழுதிக் கொடுத்தால் அவரவர்கள் சம்பளத்திலேயே அந்த சேமிப்புத் தொகையைப் பிடித்து சம்பளம் பட்டுவாடா செய்யும் பணியாளர் (சம்பந்தப்பட்ட துறை காசாளர்) அஞ்சலகத்தில் அத்திட்டத்தில் கட்டி விடுவார். 5 ஆண்டுகட்குப் பிறகு பணம் முதிர்வடையும் நாளில் சம்மந்தப்பட்ட துறைக்கு சிறுசேமிப்பு துறையைச் சார்ந்த களப்பணி அலுவலர்கள் சென்று முதிர்வுப் பணத்தை அஞ்சல் துறையின் ஒத்துழைப்புடன் பட்டுவாடா செய்வார்கள்.

இத்திட்டத்தில் மற்ற வங்கிகளைக் காட்டிலும் அதிக வட்டியான 13.5 சதவீதம் கூட்டுவட்டி அளிக்கப்படுகிறது. ரூ. 50 வரை இலவச இன்சூரன்ஸ் வசதியுள்ளது. அதாவது 2 ஆண்டுகட்குப் பிறகு முதலீட்டாளர் இறக்க நேரிட்டால், 5 ஆண்டுகட்குப் பிறகு கிடைக்கும் முதிர்வுத் தொகை வட்டியுடன் உடனடியாக அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் 1 வருடம் முடிவடைந்த பிறகு கடன் எடுக்க வசதி உண்டு. முதலீடுதாரர் தான் விரும்பும் எந்த ஒரு நபரையும் வாரிசுதாரராக நியமனம் செய்யலாம். கிடைக்கும் வட்டி (80-எல் பிரிவின்கீழ்) வருமான வரி விலக்கு அளிக்கப் படுகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர்களில் வருமான வரி செலுத்துவோருக்கு கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் சிறந்தவையாகும்.

இம்மூன்று திட்டங்களிலும் அரசு ஊழியர்கள் அனைவரும் சம்பளப் பட்டியல் சேமிப்பு மூலமாக சேர்ந்து பயன் பெறலாம்.

2. தேசிய சேமிப்புத் திட்டம் 1987 :

இத்திட்டத்தில் குறைந்தபட்ச முதலீடு ரூ. 100 ஆகும். அதிகபட்ச முதலீடு ரூ. 40,000 ஆகும். 11 சதவீத ஆண் கூட்டு வட்டி அளிக்கப்படும்.

1993 ஏப்ரல் 23]

மூன்று ஆண்டு கால முடிவில் பணம் திரும்பப் பெறலாம்.

வாரிசுதாரர் நியமன வசதியும் உண்டு. இம்மூன்று திட்டங்களிலும் வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்படி முதலீடு செய்த தொகையில் 20 சதவீத வருமான வரியில் விலக்கு பெற வழியுள்ளது.

3.11 ஆண்டு பொது சேமநல நிதிக் கணக்கு :

இத்திட்டத்தில் குறைந்தபட்ச முதலீடு ரூ. 100 ஆகும். அதிகபட்ச முதலீடு ரூ. 50,000 ஆகும்.

ஆண்டுக்கு 12 சதவீதம் கூட்டு வட்டி கிடைக்கும்.

வாரிசுதாரர் நியமன வசதி உண்டு. நிலுவையில் உள்ள தொகையை நீதிமன்ற தீர்ப்பின் மூலம் ஜப்தி செய்ய இயலாது. கணக்கில் உள்ள தொகை முழுவதற்கும் சொத்து வரி விலக்கு உண்டு.

இத்திட்டத்தில் முதிர்வடையும் தேதிக்கு முன்னரே (மூன்றாம் நிதியாண்டிலிருந்து) தொகையை கடனாக பெற வசதி உள்ளது. வட்டி முழுவதற்கும் வருமான வரிச் சட்டம் 10(1)-ன் படி பூரண வரிவிலக்கு உண்டு. கணக்கு முடிவடைந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகும் இக்கணக்கினை 5 ஆண்டு காலமாக ஒவ்வொரு முறையும் நீட்டிக்க வசதியுள்ளது.

4. தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு :

இத்திட்டத்தில் குறைந்த பட்சம் முதலீடு ரூ. 100 ஆகும் அதிக பட்ச முதலீட்டிற்கு வரம்பு ஏதும் கிடையாது.

இத்திட்டத்தில் 12 சதவீத கூட்டுவட்டி அளிக்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்கொரு முறை கூட்டுவட்டி கணக்கிடப்படுகிறது.

ஒரு தனி நபரோ அல்லது இரு நபர்கள் இணைந்தோ அல்லது ஒரு குழந்தைக்காகவோ பத்திரம் வாங்கலாம்.

இப்பத்திரங்களை இந்தியாவில் உள்ள எந்த ஒரு அஞ்சலகத்திற்கும் மாற்றம் செய்யலாம். ஒருவர் பெயரில் இருந்து இன்னொருவர் பெயரிலும் அஞ்சலகத்தில் பதிவு செய்து மாற்றம் செய்யலாம்.

ரூ. 5 இலட்சம் வரையில் இத்திட்டத்தில் சொத்து வரி விலக்கு உண்டு. வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்படி ரூ. 50 000 வரை வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. கவிஞர்கள், கலைஞர்கள், விளையாட்டு துறையினர் ஆகியோர்களுக்கு ரூ. 70,000 வரை வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெற வசதி உண்டு.

பத்திரம் வாங்கியவர் இறந்து விட்டால், அதற்குரிய வாரிசுதாரர் முதிர்வடையும் ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே பணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி நான்கு திட்டங்களில் ரூ. 500-ம் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு ஒவ்வொரு ரூ. 500-க்கும் ஒரு பரிசுக் கூப்பனும், வருமான வரிச் சலுகை உள்ள மேற்கண்ட மூன்று திட்டங்களில் ரூ. 1,000 முதலீடு செய்வோருக்கு 1 சதவீத ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து சிறுசேமிப்புத் துறையில் வழங்கப்படுகிறது. சென்ற நிதி ஆண்டில் (1990–91) சம்பளப் பட்டியல் சேமிப்பு மூலமாக ரூ 500 சேமித்த திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கு குலுக்கல் மூலமாக ''மாருதி கார்'' கிடைக்கப்பெற்றது எனவே, சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம் குறிப்பாக அரசு ஊழியர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது.

2—

பொது நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதின் காரணங்களை ஆய்வு செய்ய ஆராய்ச்சி மாணவர்களை பயன்படுத்துதல்

வினா எண் 10746— திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் பொது நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதற்குரிய காரணங்கள் குறித்து ஆய்வு செய்ய ஆராய்ச்சி மாணவர்களை (Ph. D. Student) பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்க்குப் போதிய அனுபவம் இருக்காது. ஆகவே இப்பணியை அவர்களிடம் ஒப்படைப்பதால், உரிய பலன் ஏற்படாது.

3—

பொதுப்பணித் துறை அரசு ஊழியர்களின் ஊதியத்தை முறை மூலம் வழங்குதல்

வினா எண் 11098— திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 ஏப்ரல் 23]

பொதுப்பணித் துறையில் அரசு ஊழியர்களின் ஊதியம் மற்றும் பிற படிகளை பட்டியல் தயாரித்து ஒவ்வொரு முறையும் அரசு கருவூலத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று வழங்கும் நடைமுறையை மாற்றி 1990 ஆம் ஆண்டு முன்பு இருந்த Letter of Credit முறை மூலமாக வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

பொதுப்பணித் துறையின் அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை Letter of Credit முறை மூலம் 1—7—1992 முதல் வழங்குவதற்கு அரசின் கடித எண் 6/4855/எல்.சி. 92-1, நாள் 15—6—1992-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4—

சிறைக் கைதிகள் கல்வி மேற்படிப்பை தொடர வசதி

வினா எண் 9290—திரு, ஆ, சுப்புரத்தினம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் கைதிகளாக இருப்பவர்களுக்கு தங்கள் கல்வியைத் தொடர வசதி செய்து தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தற்போது எவ்வளவு பேர்கள் இதனால் பயன் பெறுகிறார்கள் ?

விடை—

மாண்புமிகு திரு, கே, ஏ, கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) ஆம்,

(ஆ) தற்போது 48 பேர்கள் மேற்கல்வி பயின்று வருகின்றனர்,

5—

வெள்ளிச்சந்தையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 9010—திரு, ஆ, பாலையா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கடியபட்டணம் வருவாய் கிராமம் வெள்ளிச் சந்தையில் பத்திரப் பதிவாளஅலுவலகம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) குளச்சல் தொகுதி. கடியபட்டணம் வருவாய் கிராமம் வெள்ளிச்சந்தையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை,

(ஆ) எழவில்லை,

6—

புகைப்படம் ஒட்டிய பட்டா புத்தகம் வழங்க திட்டம்

வினா எண் 11888—திரு, கே. செல்வராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில அளவை செய்து நில உரிமையாளர்களுக்கும் வாரிசுதாரர்களுக்கும் அவர்களது அடையாளம் தெரிய புகைப்படமும் ஒட்டி தனித்தனியாக பட்டா புத்தகம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

நில உரிமைதாரர் ஒவ்வொருவருக்கும் அவர்களது அடையாளம் தெரிய அவர்களது புகைப்படம் ஒட்டி, தனித்தனியாக பட்டா பாஸ் புத்தகம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது,

7—

மேட்டூர் தொகுதி கொளத்தூரில் கல்லூரி அமைத்தல்

வினா எண் 9122—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(அ) மேட்டூர் தொகுதி கொளத்தூரில் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு டாக்டர். செ அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

8—

பாளையங்கோட்டையில் அரசு மகளிர் கல்லூரி அமைத்தல்

வினா எண் 9335—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை நகரில் பெண்களுக்கென்று அரசு மகளிர் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை,

9—

பேர்ணாம்பட்டில் ஆசிரியர் வீட்டு வசதி வாரியம் மூலம் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்

வினா எண் 9566—டாக்டர் ஜெ பரந்தாமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேர்ணாம்பட்டு பேரூராட்சிக்கு ஆசிரியர் வீட்டு வசதி வாரியம் மூலம் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு திட்டம் நிறைவேற்றப் படுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

10—

குன்னூரில் கலைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 9571—டாக்டர் எம், கருப்புசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகரில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

அம்மாப்பேட்டையில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துதல்

வினா எண் 9692—திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலங்கைமான் தொகுதியிலுள்ள அம்மாப்பேட்டையில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

12—

கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவதை தடுக்க சென்னை பல்கலைக் கழக விதிமுறைகளை மாற்ற திட்டம்.

வினா எண் 10160— திரு, ப, ரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் தனித் தன்மையை காப்பதற்காக கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்குவதைத் தடுக்க சென்னை பல்கலைக் கழக விதிமுறைகளை மாற்றி அமைத்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13—

சிவகாசியில் விளையாட்டுத் திடல் அமைத்தல்.

வினா எண் 10560— திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் அரசு சார்பாக விளையாட்டுத் திடல் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

14—

தனியார் மகளிர் பாலிடெக்னிக் தொடங்க அரசு அனுமதி.

வினா எண் 11156— டாக்டர் சு. ஆரோக்கியசாமி மற்றும் திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் மகளிர் பாலிடெக்னிக் தொடங்குவதற்கு முன் வருவோருக்கு அரசு அனுமதியளித்து ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தமிழகத்தில் ஏற்கெனவே அரசு அனுமதித்துள்ள தனியார் மகளிர் பாலிடெக்னிக்குகளில் குறைந்த எண்ணிக்கையில் தான் மகளிர் பயில்கின்றனர். மேலும் தமிழகத்தில் 11 பாலிடெக்னிக்குகள் மகளிருக்கெனத் தனியாக செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆடவர் பயிலும் பாலிடெக்னிக்குகளில் மகளிரும் அனுமதிக்கப்பட்டு பயின்று வருகின்றனர். இதனால் மகளிருக்கென தனியாக மேலும் பாலிடெக்னிக்குகள் தேவையில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

15—

அறிவொளி இயக்கத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த திட்டம்.

வினா எண் 11276— டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துப் பள்ளிகள் (Mobile School) என்ற அமைப்பை குடிசைவாழ் பகுதிகளில் சென்னை, கோயம்புத்தூர் மதுரை போன்ற பெரு நகரங்களில் ஏற்படுத்தி அறிவொளி இயக்கத்தை தீவிரமாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): முழு எழுத்தறிவுத் திட்டம் செயல் படுத்தப்படும்போது அந்தந்தப் பகுதிகளில் இருந்தே சமூகத் தொண்டில் ஆர்வமுடையவர்களைக் கொண்டு சிறிய அளவில் 10 வயது வந்தோருக்கு ஒரு தன்னார்வத் தொண்டர் மூலம் எழுத்தறிவிக்கப்படுவதாலும் நகரின் குடிசைப் பகுதிகள் முதற் கொண்டு அனைத்து எழுத்தறிவு அற்றவருக்கும் கல்வி புகட்டப் ட்டுவதாலும் இது போன்றதொரு நடமாடும் பள்ளிகள் ஏற் டடுத்த வேண்டிய அவசியமேதுமில்லை.

16—

ஓய்வுப்பெற்ற ஆசிரியர்களை அறிவொளி இயக்கத்தில் பயன் படுத்த திட்டம்.

வினா எண் 11357—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களை அறிவொளி இயக்கத் திற்கு பயன்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தாங்களா கவே மனமுவந்து இலவசமாகப் பணிபுரிய முன்வந்தால் அவர்களை அறிவொளி இயக்கத் திட்டத்திற்கு பயன்படுத்திக் கொள்ளப்படும்.

17—

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை.

வினா எண் 9131—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தற்போது மக்கட்தொகை அதிகரித்துள்ள நிலையில் அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தற்போது மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

18—

மக்கள் தொகைப் பெருக்கத்தை குறைப்பதற்கு மக்களே உணரும் வகையில் திட்டம் தீட்டுதல்.

வினா எண் 9529—திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளர்ச்சித் திட்டங்களுக்கு தடையாக இருப்பது பெருகிவரும் மக்கட்தொகை என்பதை அரசு உணர்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மக்கட் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க எத்தகைய நடவடிக்கைகள் இதுவரை அரசு எடுத்துள்ளது?

(இ) மக்கள் தொகைக் குறைப்பை மக்களே உணரும் வகையில் சிறப்புத் திட்டம் வைத்துள்ளதா?

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை —

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம். உணர்ந்துள்ளது.

(ஆ) மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

(இ) மக்கள் தொகை குறைப்பை மக்களே உணரும் வகையில் சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

1993 ஏப்ரல் 23]

19—

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கழிவு நீரால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு.

வினா எண் 9695—திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கழிவு நீர் அங்கிருந்து வடக்கூர் வரை செல்லும் காட்டுவாரியில் விடப்படுவதால் அப்பகுதி குடிநீர் நீர் நிலைகளும் சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் நடவடிக்கை எடுத்து கழிவு நீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்றும் திட்டம் அரசால் மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவாளர் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம் வெளியேற்றும் செயல்முறைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு அருகில் உள்ள ஓடையில் வெளியேற்றப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் செயல்முறைக் கழிவு நீரினை பரிசோதனைக்காக சேகரிப்பதோடு இத் தொழிற்சாலையினை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

20—

''குடும்பத்திற்கு ஒரு குழந்தை'' திட்டத்தை சிறப்பாகச் செயல் படுத்தும் ஆரம்ப சுகாதார மருத்துவமனை மருத்துவர்களை ஊக்குவிக்கத் திட்டம்.

வினா எண் 10108—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் ''குடும்பத்திற்கு ஒரு குழந்தை'' திட்டத்தை செயல்வடித்து நல்ல முறையில் பணியாற்றிய ஆரம்ப சுகாதார நிலையங்களையும் பணியாற்றும் மருத்துவர்களையும் 'ஊக்குவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இது குறித்து செயற்குறிப்பு தற்போது எதுவும் அரசிடம் இல்லை.

21—

மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் ஆலை கழிவுப் புகையை போக்க நடவடிக்கை.

வினா எண் 1088—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுக்கரை பகுதியில் உள்ள ஏ.சி.சி. சிமெண்ட் ஆலை கழிவுப் புகையை போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மதுக்கரை பகுதியில் அமைந்துள்ள ஏ.சி.சி. சிமெண்ட் ஆலை கழிவுப் புகையைப் போக்க அத்தொழிற்சாலை ஏற்கெனவே காற்று மாசு கட்டுப்பாடு சாதனம் பொருத்தி உள்ளது.

22—

மதுரையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க கனரக வாகனங்களை நெறிப்படுத்துதல்.

வினா எண் 9090—திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் சாலைப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சென்னையைப் போல லாரி போன்ற கனரக வாகனங்கள் குறிப்பிட்ட நேரங்களில்தான் செல்ல வேண்டும் என்று நெறிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னையைப் போல் மதுரையில் லாரி போன்ற கனரக வாகனங்கள் குறிப்பிட்ட நேரங்களில்தான் செல்ல வேண்டும் என்று உடனடியாக நெறிப்படுத்துவது இயலாத காரியமாகும். ஏனெனில், மதுரைக்கு தெற்கு திசையிலிருந்து வரும் லாரி போன்ற கனரக வாகனங்கள் சென்னை மற்றும் பிற நகரங்களுக்கு செல்லும்போது மதுரை நகருக்குள் வந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது.

23—

அலங்காநல்லூரில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனையை ஏற்படுத்துதல்.

வினா எண் 9093— திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூரில் பாண்டியன் போக்குவரத்துக் கழக புதிய பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூரில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

24—

கோட்டுமடுவு, சுப்பிரமணியபுரம் ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதி.

வினா எண் 9249— திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சிங்கரிபட்டி பஞ்சாயத்தில் உள்ள, கோட்டுமடுவு — சுப்பிரமணியபுரம் ஆகிய ஊர்களுக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வினாவில் கண்டுள்ள கோட்டுமடுவு மற்றும் சுப்பிரமணியபுரம் ஊர்களுக்கான தடத்திற்கு சாலைத் தகுதி மற்றும் தூரச்சான்றிதழ் தற்பொழுதுதான் கிடைக்கப் பெற்றுள்ளது. மேற்படி ஊர்களுக்கு பேருந்து வசதி விரைவில் அளிக்கப்படும்.

25—

பழனி-சென்னை வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக சொகுசு பேருந்து விட திட்டம்.

வினா எண் 9266— திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலமாக சொகுசுப் பேருந்து விடப் படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

26—

தேயிலைத் தோட்டப் பணியாளர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்கும் திட்டம்.

வினா எண் 9572— டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(அ) தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிந்து ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு, ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

27—

ஜவ்வாதுமலை வன இலாகாவினரால் பராமரிக்கப்படும் பள்ளிகளை ஆதி திராவிடர் நலத் துறையிடம் ஒப்படைத்தல்.

வினா எண் 9594—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் வன இலாகாவினரால் பராமரிக்கப்படும் பள்ளி ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இப்பள்ளிகளை ஆதி திராவிடர் நலத் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) வேலூர் மண்டலத்தில் நிர்வாகத்திலுள்ள ஜவ்வாது மலையில் வனத் துறையின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வரும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. சென்ற நிதி ஆண்டில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க (பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கும் நிதி தலைப்பில்) செலவு உரிமை சீட்டு (Letters of Credit) குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கப் பெறாமையால் டிசம்பர் 1991 மாதச் சம்பளம் உரிய நேரத்தில் பட்டுவாடா செய்யப்படாமல் தாமதமாக சனவரி 1992இல் பட்டுவாடா செய்யப்பட்டது

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) வேலூர் மண்டல வனத் துறையின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வரும் பள்ளிகளை ஆதி திராவிடர் நலத் துறைக்கு மாற்றம் செய்ய கருத்துரு ஏதும் இல்லை.

28—

திருவண்ணாமலை செங்கம் சாமல்பட்டி வழியாக இரயில் பாதை அமைக்கும் திட்டம்.

வினா எண் 9784— டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை செங்கம் சாமல்பட்டி வழியாக இரயில் பாதை அமைக்க மத்திய அரசு சர்வே செய்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை செங்கம் சாமல்பட்டி வழியாக இரயில்பாதை அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும், பாண்டிச்சேரியிலிருந்து ஊத்தங்கரை தாசம்பட்டி கிருஷ்ணகிரி காவேரிப்பட்டிணம் வழியாக பாலக்கோட்டிற்கு 237 கி.மீ. நீள இரயில்பாதை அமைக்க சர்வே பணி 1990–91இல் தென்னக இரயில்வேயினால் ரூ. 3.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் சர்வே அறிக்கை இரயில்வே வாரியத்திடம் அளிக்கப்படவுள்ளது.

29—

கூட்டாத்தூரில் சந்தனக்கட்டை டெப்போ நிறுவுதல்.

வினா எண் 9824— டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கூட்டாத்தூர் (ஜவ்வாது மலை) கிராமத்தில் சந்தனக்கட்டை டெப்போ நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

30—

சங்ககிரி காடுகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை

வினா எண் 10105—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலையில் காடுகள் தனியார் சிலரால் அழிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் காடுகளைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) சங்ககிரி மலையில் தனியார் சிலரால் காடுகள் அழிக்கப்படுகிறது என்பது பொய்யான தகவலாகும்.

(ஆ) இந்தப் பகுதியிலுள்ள காடுகளை மட்டுமின்றி. பொதுவாகக் காடுகளைப் பாதுகாக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தீவிரமாக எடுத்து வருகிறது.

31—

வனத் தோட்டக் கழகத்தின் மூலமாகவும் சமூக நலக்காடுகள் மூலமாகவும் விற்கப்படும் தைல மரங்களின் விலை.

வினா எண் 10215—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் மூலமாகவும் சமூக நலக்காடுகள் மூலமாகவும் வளர்க்க

படுகின்ற தைல மரங்கள். சேஷசாயி பேப்பர் மில் மற்றும் TNPL மில்லிற்கும் ஒரு மெட்ரிக் டன் எந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

1992–93ஆம் ஆண்டில் தைல மரங்கள் டன் ஒன்றுக்கு ரூ. 575 வீதம் வழங்கப்படுகிறது.

32—

திருநின்றவூரில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் பணிமனை அமைத்தல்.

வினா எண் 10256— திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி திருநின்றவூரில் பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை —

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

33—

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்தல்.

வினா எண் 11196— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மருதுபாண்டியர் போக்கு வரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய போக்கு வரத்துக் கழகம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை.

34—

மேதரா சமூக மக்களுக்காக ஓடை மூங்கில் மற்றும் மூங்கில் தனியாக ஒதுக்கித் தருதல்.

வினா எண் 11225— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் இயங்கும் மூங்கில் தொழிலாளர் சொசைட்டி தன் சங்கத்தில் மேதரா சமூக மக்களுக்காக ஓடை மூங்கில் (Reeds) மற்றும் மூங்கில் (Bambcos) தற்போது விளைந்துள்ளதில் 25 சதவிகிதம் ஒதுக்கித் தரும்படி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இப்பொழுது தனியே அரசின் பரிசீலனையில் உள்ளது.

35—

அரசால் தனியார் நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டம்.

வினா எண் 11257— திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு, தனியார் நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்க முன்வருமா?

(ஆ) தனியார் தேக்கு வளர்க்க அரசு நிதியுதவி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) அரசால் தனியார் நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) தனியார் தேக்கு வளர்க்க அரசு நிதியுதவி வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

36—

அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பணிமனை தொடங்குதல்.

வினா எண் 11678— திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக பணிமனை தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் பணிமனை தொடங்கப்படும்.

37—

சாணார்ப்பட்டி ஒன்றியம் படுகைக்காடு அருகில் அணைக்கட்டும் திட்டம்.

வினா எண். 6344— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் சிறுமலையிலிருந்து உருவாகிவரும் ஆற்றின் நீர் வீணாகாமல் தடுத்து பாசனத்திற்கு பயன்படுத்த சாணார்ப்பட்டி ஒன்றியம் படுகைக்காடு அருகில் அணை ஒன்று கட்ட ஏதேனும் பரிந்துரை அரசுக்கு வந்தனவா ?

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், அதற்கான ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) அவற்றின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் திட்டத்தை செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லையென தெரிய வந்தது. இது சிக்கனமற்ற திட்டமாகும்.

38—

ஊமத்தநாடு ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 6563— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதி திராவிடர்களுக்கு கட்டப்பட்ட காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்பட்ட காலனி வீடுகளுக்கு "ஒரு விளக்கு ஒரு குடிசை" திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் சேரி 15 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த 15 வீடுகளுக்கு பிரிவு அலுவலகத்தின் விண்ணப்பங்களின் பதில் வரிசை அடிப்படையில் இலக்கீட்டிற்கு ஏற்ப மின்வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

39—

மல்லிப்பட்டிணம் வழியாகச் செல்லும் சேதுச் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்கும் திட்டம்.

வினா எண் 6979— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 23

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணம் வழியாக செல்லும் சேதுச்சாலை பழுதடைந்து உள்ளதால் அந்தத் தார்ச்சாலையைப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

மல்லிப்பட்டிணம் வழியாகச் செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிப்பு செய்யப்பட்டு வரும் முத்துப்பேட்டை—மிமீசல் சாலை என்பதாகும். இச்சாலையில் பழுதடைந்துள்ள சில பகுதிகளை பராமரிப்பு மற்றும் தனிச் சீர் பணிகள் மூலம் செப்பனிடப்பட்டு வருகின்றன. மேற்படி சாலையில் மிகவும் மோசமடைந்துள்ள பகுதிகளை வரும் ஆண்டு களில் நிதிநிலைக்கு ஏற்றவகையில் செப்பனிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

40—

மல்லிப்பட்டிணத்திலிருந்து இரண்டாம் புலிக்காடு செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம்.

வினா எண் 6981— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணத்திலிருந்து இரண்டாம் புலிக்காடு செல்லும் நெடுஞ்சாலையை நிரந்தரமாக பராமரித்து தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

மல்லிப்பட்டிணத்திலிருந்து இரண்டாம் புலிக்காடு செல்லும் சாலையின் சரியான பெயர் மல்லிப்பட்டிணம் அலமதிக்காடு சாலை என்பதாகும். 2.40 கி.மீ. நீளம் கொண்ட இச்சாலை யில் கி.மீ. 1/0— 2/4 வரை 1990–91ஆம் ஆண்டு தார்த்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 0/0— 1/0 வரையில் உள்ள சாலை மிக வும் பழுதடைந்துள்ளதால் இப்பகுதியில் தனிச்சீரமைப்புப் பணி யின் கீழ் கருங்கல் கப்பித்தளம் தற்போது போடப்பட்டுள்ளது. விரைவில் தார் தளமாக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

41—

மருதங்காவயல் ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 6996— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்காவயல் ஆதி திராவிடர்களின் வீடுகளுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்கவயல் ஆதி திராவிடர்களின் வீடுகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின்வசதி கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

42—

நடுமனைக்காடு ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 7013— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, நடுமனைக்காடு ஆதி திராவிடர்களின் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

43—

வீரக்குடி ஆதி திராவிடர் புதிய தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 7069—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மனக்காடு ஊராட்சி, வீரக்குடி ஆதி திராவிடர் தெருவிலுள்ள, புதிய தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

மனக்காடு ஊராட்சி, வீரக்குடி ஆதி திராவிடர் தெருவிலுள்ள தொகுப்பு வீடுகளுக்கு ''ஒரு விளக்கு ஒரு குடிசை'' திட்டத்தின்கீழ் இலவச மின்சாரம் கோரி 34 குடிசை விண்ணப்பங்கள் வாரிய அலுவலகத்தில் 1—2—1991 அன்று பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களுக்கு முன்னதாக ஏற்கனவே 27 குடிசை விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மின் வாரிய பிரிவு அலுவலகத்தில் 15—11—1989 முதல் நிலுவையிலுள்ளன. வீரக்குடி ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப ஒற்றை விளக்குகள் அமைக்க ஆவன செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

44—

நடுவிக்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர் காலனிக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 7135—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர்களுக்கு மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டயங்காடு ஊராட்சி, நடுவிக்குறிச்சி கிராமத்தில் 10 தெரு விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேற் குறிப் பிட்ட பகுதியில் 14 கூடுதல் தெரு விளக்கு விண்ணப்பம் பெறப் பட்டுள்ளது. நடுவிக்குறிச்சிக்கு இக்கூடுதல் தெரு விளக்குகளை விஸ்தரிக்கும் பணி, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. இதற்கான பணிகள் 1992—93-இல் நிறைவேற் றப்படும்.

45—

வீரியங்கோட்டை. உடையநாடு வழியாகச் செல்லும் நெடுஞ்சாலையை பராமரிக்கும் திட்டம்.

வினா எண் 7387—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து வீரியங் கோட்டை, உடையநாடு வழியாக செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து வீரியங் கோட்டை, உடையநாடு வழியாகச் செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பூக் கொல்லை - மரக்கவலசை சாலையாகும். இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ. 0/0—3/0, 3/0—5/0, 6/0—7/0-ல் ஆகிய பகுதிகள் புதுப்பிக்கப்படவில்லை. ஆனால் அவ்வப்போது ஏற்பட்டுள்ள சிறு பழுதுகள் மட்டும் செப்ப னிடப்பட்டுள்ளது. இச்சாலை முழுவதும் தார்தளம் புதுப் பிக்க தோராயமாக ரூ. 6.00 இலட்சம் தேவைப்படும். இச் சாலை மேம்பாட்டுப் பணி இதுவரையில் திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. இச்சாலையை புதுப்பிக்கும் பணியை திட்டப் பணியாக அண்மையில் மேற்கொள்ளும் வாய்ப் புக்கள் இல்லை. எனினும் நடப்பாண்டில் பராமரிப்பு நிதிநிலை களுக்கேற்ற வகையில் இச்சாலையைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1993 ஏப்ரல் 23

46—

கீழ்கலங்கள் குளத்தை தூர் வாரி, செப்பனிட்டு பராமரிக்க நடவடிக்கை.

வினா எண் 8606—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், கீழ்கலங்கள் கிராமத்தில் உள்ள குளத்தை தூர் வாரி, சட்டர்கள் செப்பனிட்டு பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

குளத்தை தூர் வாருவதற்கு விரிவான ஆய்வுப்பணி மேற்கொண்டு அறிக்கை அனுப்புமாறு செயற் பொறியாளர் பொதுப்பணித்துறை ஆய்வு கோட்டம், மதுரை, அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். சட்டர்கள் பழுது பார்க்கும் பணிகள் இந்நிதியாண்டில் விரைவாக எடுத்துச் செயலாக்கப்படவுள்ளது.

47—

இராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 9148—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை.—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் அருகே இராஜாக்கமங்கலத்தில் ஒரு அனல் மின் திட்டம் அமைப்பதற்கான புலனாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதியில் இத் திட்டம் கைவிடப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

48—

கொளத்தூரில் துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 9246—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மேட்டூர் தொகுதி கொளத்தூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தத் துணை மின் நிலையத்திற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தியவுடன் நிதி நிலைமைக்கேற்ப மின் நிலையத்தினை அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

49—

நாகல் ஏரியை செப்பனிடும் திட்டம்

வினா எண் 9424 திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியத்தில் நாகல் ஊராட்சியிலுள்ள நாகல் ஏரியைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

காட்பாடித் தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியத்தில் நாகல் ஏரி என்று பெயர் கொண்ட ஏரி எதுவும் இல்லை. எனினும் காட்பாடி தொகுதி கே.வி. குப்பம் ஒன்றியத்தில் நாகல் ஊராட்சியில் உள்ள கானாற்றின் குறுக்கே குட்டை அமைக்க ரூ. 4.16 இலட்சத்திற்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குட்டை அமைக்கும் பணிக்குத் தேவைப்படும் வனத்துறை

பொறுப்பில் உள்ள 3.18 ஏக்கர் காப்புக்காடு நிலம் பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டவுடன் குட்டை அமைக்கும் பணி துவங்கப்படும்.

50—

ஆற்று ஓரங்களில் வீடுகட்டி வாழ்பவர்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுத்தல்

வினா எண் 9427—திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்று ஓரங்களில் வீடு கட்டிக்கொண்டு பல ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர்கள் ஒரு விளக்கு திட்டத்தின் மூலம் மின் விளக்கு அமைத்துக்கொள்ள வட்டாட்சியரின் 'ஆட்சேபணை இல்லை' சான்றிதழ் இல்லாமலேயே மின் வாரியம் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

மின் வாரிய மின் விநியோக விதிகளின்படி புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வாழ்ந்து வருபவர்களுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின்சாரம் வேண்டுமாயின் வருவாய்த் துறையினரிடமிருந்து உரிய அதிகாரிகளால் வழங்கப்பட்ட தடையில்லா (குறைந்தபட்சம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட) சான்றிதழுடன் நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் மனு செய்ய வேண்டும். எனவே ஆற்று ஓரங்களில் வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வருபவர்கள் ஒரு விளக்கு திட்டத்தின் மூலம் மின் விளக்கு அமைத்துக்கொள்ள வட்டாட்சியரின் 'ஆட்சேபணை இல்லை' சான்றிதழ் இல்லாமல் மின் வாரியம் மின் இணைப்பு வழங்க இயலாது.

51—

சங்ககிரி-அக்கராம்பேட்டை பகுதி நெசவுத் தொழிலாளர்களின் குடிநீர்ப் பிரச்சினை

வினா எண் 9633— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி-அக்கராம்பேட்டையில் மும்முனை மின் சாரம் தொடர்ந்து கிடைக்காத காரணத்தால் அப்பகுதி நெசவுத் தொழிலாளர் குடிநீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், மின்சாரம் வழங்கும் மின் மாற்றியைப் (Transformer) பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் ;

(அ) சங்ககிரி—அக்கராம்பேட்டை, பாரதி நகரில் உள்ள மேல்நிலை தொட்டிக்கு பகல் 12—00 மணியிலிருந்து மறுநாள் காலை 6—00 மணி வரை மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. இம் மேல்நிலைத் தொட்டிக்கு இணைக்கப்பட்டுள்ள மின் மோட்டார் சம்பந்தப்பட்ட கிணற்றில் போதுமான நீர் இல்லாமையால், இரண்டு மணியிலிருந்து மூன்று மணி நேரம்தான் இயக்கப்படுகிறது. எனவே குடிநீர்ப் பிரச்சனைக்கு மின்சாரம் காரணமல்ல.

(ஆ) இங்குள்ள மின்மாற்றி நல்ல நிலையில் இயங்கி வருகின்றபடியால் பழுதுபார்க்க வேண்டியதில்லை.

52—

குணசீலம்—கல்லூர் பாலம் அமைக்கும் திட்டம்

வினா எண் 9710—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி ஒன்றியம், குணசீலம்—கல்லூர் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

53—

கொளக்காநத்தம்—கொளத்தூர் சாலையிலுள்ள குண்டியாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்

வினா எண் 9783—திரு ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம், கொள்ளக்காநத்தம்—கொளத்தூர் சாலையில் உள்ள குண்டியாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை.—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இப்பணி குறித்த செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

54—

மதுராந்தகம் தொகுதியில் அரசு அலுவலர்களுக்குத் தங்கும் விடுதிகள் கட்டித் தருதல்

வினா எண் 9788—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதியில் ஏறக்குறைய அரசு அலுவலர்கள் அதிகம் பணியாற்றி வருவதால் அவர்களுக்குத் தங்கும் விடுதிகளை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

55—

சென்னை அண்ணாசாலை நடைபாதை கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை

வினா எண் 9910—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சாலையில் உள்ள நடைபாதை கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இது தொடர்பாக வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

56—

தமிழகம் மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற அரசின் சிறப்புத் திட்டங்கள்.

வினா எண் 9940—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெறும் வகையில் அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் அமுல்படுத்த உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) மின் உற்பத்தித் துறையில் அரசின் முயற்சி தவிர, தனியார் துறை முதலீட்டை ஊக்கப்படுத்தவும் அரசு எண்ணியுள்ளது. இம்முயற்சியால் 10-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தமிழ்நாடு மின்துறையில் தன்னிறைவுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

தனியார் மற்றும் கூட்டுத் துறைக்கு அளிக்கப்பட்டுள்ள மின் திட்டங்கள் பின்வருமாறு :

	மெ.வாட்.
1. செயங்கொண்டம் சோழபுரம் அனல்மின் திட்டம்	1,500
2. திருமுட்டணம் அனல்மின் நிலையம் ..	250
3. தூத்துக்குடி அனல் மின் நிலையம் (4) நான்காம் நிலை ..	560
4. பிள்ளைப் பெருமாள் நல்லூரில் வாயுச் சுழலி ..	300
மொத்தம் ..	2,550

மற்றும் கடலூர் அனல் மின் நிலையம் (1,000 மெ. வாட்) சிறிய புனல் மின் திட்டங்கள் (37.6 மெ.வாட்) ஆகியவையும் தனியார் துறைக்கு அடுத்த 15 ஆண்டுகளில் அளிக்கப்படவிருக்கின்றன.

57—

ஆத்தூரையும் புன்னைக்காயலையும் இணைக்கும் பாலம் கட்டும் திட்டம்.

வினா எண் 10019—திரு. ஆர். செல்லதுரை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியில் ஆத்தூரையும் புன்னைக்காயலையும் இணைக்கும் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

58—

கோழிப் பண்ணைகளுக்கு நிரந்தர மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 10670—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழிப் பண்ணைகளுக்கு மின்சாரம் கோரும்போது தற்காலிக மின் இணைப்பு கொடுத்து பிறகு நிரந்தர மின் இணைப்பு தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிரந்தர மின் இணைப்பு தர அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் அமைச்சர் :

(அ) தற்போதுள்ள வாரிய விதிகளின்படி கோழிப்பண்ணைகளுக்கு முதல் கட்டத்திலேயே நிரந்தர மின் இணைப்பு வழங்குவதில் எந்த தடையும் இல்லை,

(ஆ) நிரந்தர மின் இணைப்பு விண்ணப்பங்களின் வரிசை கிரமத்தை சார்ந்து, தயார் நிலை பதிவானவுடன் அளிக்கப்படுகிறது,

59—

ஆணைக்குட்டம் நீர்த்தேக்கத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை,

வினா எண் 10693—திரு, ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆணைக்குட்டம் நீர்த்தேக்கம் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

60—

பர்க்கெட் மாநகரம், அரியகுளம், மேலக்குளம், தெற்கு அரியக் குளம், பாறைக்குளம், மேல புத்தநேரி கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம்.

வினா எண் 9344—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பர்க்கெட் மாநகரம், அரியகுளம், மேலக்குளம், தெற்கு அரியகுளம், பாறைக்குளம், மேலபுத்தநேரி கிராமங்களுக்கு ஆற்றுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) பர்க்கெட் மாநகரம், அரியகுளம், மேலகுளம் ஆகிய கிராமங்களுக்கு 1992–93 ஆம் நிதியாண்டில் திட்டம் பரிசீலனையில் உள்ளது. பாறைக்குளம், மேலபுத்தநேரி கிராமத்திற்கு 1993–94 நிதியாண்டில் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

61—

ஆவடி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 9513—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆம் ஆவடி நகராட்சி நகரியத்திற்கு தெலுங்கு கங்கைத் திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 26,26 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவுற்றதும், ஆவடி நகரியத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இயலும்.

1993 ஏப்ரல் 23]

62—

சுப்பிரமணியபுரம், பாக்கியலட்சுமிபுரம், பூலங்குளம், ஆண்டிப் பட்டி கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 9647— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணியபுரம், பாக்கியலட்சுமிபுரம், பூலங்குளம், ஆண்டிபட்டி ஆகிய கிராமங்களை இணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சார்ந்த சுப்பிரமணியபுரம், பாக்கியலட்சுமிபுரம், பூலங்குளம், ஆண்டிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கும் திட்டம் தற்போது இல்லை.

63—

ஜேடர்பாளையம் - சித்தனத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண் 9662— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையம் - சித்தனந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஜடர்பாளையம் - சித்தனந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்

தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் ஆய்வுப்பணிகள் முடிந்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்கு உரிய நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல்கள் அளிக்கப்பட்ட பின்னர் இத் திட்டப்பணிகள் துவங்கப்படும்.

64—

வையப்பமலை குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை.

வினா எண் 9663— டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்ப மலையில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்ப மலையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

65—

INCOMPLETION OF CONSTRUCTION OF SUB-WAY AT MAMBALAM.

Question No. 10204—TMT. K. MARIAM-UL-ASIA—Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) Whether the water lines across the rail lines connecting Mambalam and Thiagaraya Nagar in Madras have not yet been shifted;

(b) whether the delay has resulted in the incompletion of the sub-way at this point; and

(c) the steps taken in this regard?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 23]

(அ) சென்னை மாம்பலம் மற்றும் தி. நகர் அருகே இருப்புப் பாதைக்கு குறுக்காக குடிநீர்க் குழாய்கள் ஏதும் இல்லை.

(ஆ) இருப்புப் பாதை குறுக்காக குடிநீர் குழாய் ஏதும் இல்லாத காரணத்தினால், சுரங்கப்பாதை கட்டும்பணி முடிவுறாமல் இருப்பது குறித்த வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

66—

சங்ககிரி தொகுதியிலுள்ள காவிரி கூட்டுக் குடிநீர்த்திட்டம் வையப்பமலை வரை நீட்டிக்க நடவடிக்கை.

வினா எண் 10332—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம் குருசாமிபாளையம் வரை கொண்டு வரப்பட்டுள்ள காவிரிகூட்டுக் குடிநீர்த்திட்டம், வையப்பமலை வரை நீட்டிக்கப்பட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், குருசாமிபாளையம் வரை கொண்டு வரப்பட்டுள்ள காவிரி கூட்டுக் குடிநீர்த்திட்டம், வையப்பமலை வரை நீட்டிக்கப்பட தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

67—

நடுவிக்கோட்டை ஊராட்சி சூரங்கொல்லையில் சத்துணவு கட்டிடம்.

வினா எண் 12398—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுவிக்கோட்டை ஊராட்சி சூரங்கொல்லை சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நடுவிக்கோட்டை ஊராட்சி சூரங்கொல்லையில் சத்துணவு கட்டிடம் ரூ. 70 ஆயிரம் செலவில் 1991–92ல் கட்டப்பட்டு விட்டது.

68—

காயிதே மில்லத் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் பயிர்கள் பாதிக்கப்படுவதால் பயிர்களுக்கு காப்பீடு செய்யத் திட்டம்.

வினா எண் 9238—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளப் பெருக்கு காலங்களில் காயிதே மில்லத் மாவட்டத்தில் பயிர்கள் பாதிக்கப்படுவதால் முன்னதாகவே பயிர்களுக்கு காப்பீடு (Insurance) செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

ஆம். விரிவான பயிர் காட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் காயிதே மில்லத் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறது. மேற் கூறிய மாவட்டத்தில், காரிப் 1992 பயிர் காலத்தில் நெற் பயிருக்கு 19 வட்டாரங்களிலும் மற்றும் எள் பயிருக்கு 4 வட்டாரங்களிலும் பயிர் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

69—

கூட்டுறவு பயிற்சி முடித்து வேலையில்லாமலுள்ள மாணவ மாணவிகள்.

வினா எண் 9536—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

கூட்டுறவு பயிற்சிப் பள்ளியில் படித்த மாணவ மாணவிகள் வேலையின்றி, எவ்வளவு பேர் வேலைக்காக காத்திருக்கின்றனர்?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் வேலை வாய்ப்பிற்காக வேலை வாய்ப்பகங்களில் 31–12–91 வரை பதிவு செய்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு :—

ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
12,773	3,315	16,088

70—

அனைத்து உணவுப் பண்டங்களையும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்க நடவடிக்கை.

வினா எண் 10759— திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா கிராமங்களிலும் அனைத்து உணவு பண்ட பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகிய உணவு பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. அவற்றுடன், பொது விநியோக திட்டத்தின்கீழ் அல்லாமல் அன்றாடம் தேவைப்படக் கூடிய சில பொருட்களை விற்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள், பருப்பு வகைகள், உளுந்து, மிளகாய், கடலெண்ணெய், உப்பு மற்றும் சில மசாலாப் பொருள்கள் ஆகியவை அடங்கும்.

71—

பரமக்குடி தாலுகாவில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒரு உணவு கிடங்கு கட்டும் திட்டம்.

வினா எண் 10947—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உணவுக் கிடங்கு கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

ஆம்.

72—

தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டப்படி அனைத்து உதவிகளும் அமுல்படுத்துதல்.

வினா எண் 9110—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டப்படி அனைத்து உதவிகளும் அமல்படுத்தப்படுமா?

(ஆ) அவர்களுக்கு தொழில் நிரந்தரமாக்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) தங்க நகைகள் செய்யும் தொழிலாளர்களுக்கு 1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பொருந்தும்.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

1993 ஏப்ரல் 23]

73—

ஆலங்குளம் தொகுதியில் வாழும் பீடி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 9450—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் அதிகமாக வாழும் பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் முக்கூடலிலும், மேலப்பாளையத்திலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அமுல்படுத்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இந்த இரண்டு இடங்களிலும் 1,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு தகுதி உடைய தொழிலாளர்கள் தேர்வு செய்யும் பணி திருநெல்வேலி, தொழிலாளர் துணை ஆணையரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள மற்ற இடங்களிலும் இத்திட்டத்தை விஸ்தரிப்பதற்கு நிலம் தேர்வு செய்து கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துணை ஆணையர் ஏற்கனவே பணிக்கப்பட்டுள்ளார். அதன் அடிப்படையில் ஆலங்குளம் உட்பட மற்ற பகுதிகளிலும் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

74—

தனியார் நிறுவனங்களில் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்யும் போது வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் வேலையில் அமர்த்த சட்டம் இயற்றுதல்.

வினா எண் 9976—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நிறுவனங்களில் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்யும் போது வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் ஆட்களை வேலையில் அமர்த்த அரசு சட்டம் இயற்றுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்தச் சட்டம் அமல்ப்படுத்தப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) அவ்வாறான செயற் குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

சங்ககிரியில் தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 10113—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனித் தொகுதியான சங்ககிரியில் ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) சங்ககிரியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும், தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

76—

பரமக்குடியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தை விரிவுபடுத்த திட்டம்.

வினா எண் 10950—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இயங்கி வருகின்ற தொழிற்பயிற்சி நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

இல்லை.

77—

வால்பாறையில் தொழிலாளர் நீதிமன்றம் அமைத்தல்.

வினா எண் 11505—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் தொழிலாளர் நீதிமன்றம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

இல்லை.

78—

அதிக மகசூல் தரும் புதுரக நெல் கண்டுபிடித்தல்.

வினா எண் 9221—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பத்து ஆண்டுகளில் விவசாய ஆராய்ச்சியில் அதிக மகசூல் தரும் புதுரக நெல் ஐ.ஆர். 20 ரகத்தைத் தவிர வேறு நெல் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) ஆம். எட்டு ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) ஏடிடீ 38, வெள்ளைப் பொன்னி தேர்வு ரகம் ஏடிடீ. 39 கோ. 43 கோ. 44 கோ. 45 எம்.டி.யு. 3 மற்றும் எம்.டி.யு. 4 ஆகிய ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

79—

மோகனூரில் விதைக் கரனைக் கரும்பு உற்பத்தி பண்ணை அமைத்தல்.

வினா எண் 9538—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலையில் விதைக்கரனைக் கரும்பு உற்பத்தி பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உணடா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

80—

அனைத்து ஆலையங்களுக்கு மானிய விலையில் பூக்கன்றுகள் வழங்குதல்.

வினா எண் 9581—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு வீட்டிற்கும் பழக் கன்றுகளையும் பூக்கன்றுகளையும் அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கி தோட்டம் அமைப்பதற்கு ஊக்குவிப்பதுபோல் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆலயங்களுக்கும் பூக்கன்றுகள் வழங்கி பூந் தோட்டங்கள் அமைக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

ஆம்.

81—

தருமபுரி மாவட்டம், பையூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

வினா எண் 9693—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பையூரில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் ஆண்டுதோறும் சில மாதங்கள் மாணவர்கள் பயிற்சிக்காக வருவதால் இங்கு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) தருமபுரி மாவட்டம் பையூரில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

82—

தென்னாற்காடு மாவட்டத்தில் சூரியகாந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலை ஒன்று நிறுவுதல்.

வினா எண் 10294—திரு. ஆர்.பி. பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் சூரியகாந்தி நிறையப் பயிரிடப்படுவதால் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் மூலம் அங்கு சூரியகாந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலை ஒன்றை நிறுவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இல்லை.

83—

எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்தல்.

வினா எண் 11820—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் வாங்கி விநியோகிக்க எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்த அதிகம் செலவினம் ஏற்படும் என்பதால் இதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆயினும் தேவையின் அடிப்படையில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

84—

விழுப்புரத்தில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

வினா எண் 9873—திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரத்தில் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 192 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி 1993—94 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

85—.

சென்னை சாந்தோம் கடற்கரைப் பகுதியில் உள்ள திடீர் குடிசைப் பகுதிகளை அகற்ற நடவடிக்கை.

வினா எண் 10415—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சாந்தோம் கடற்கரைப் பகுதியிலுள்ள திடீர் நகர் குடிசைப்பகுதிகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) அவ்வாறு அகற்றப்படும் குடிசைப் பகுதிகளுக்கு மாற்று இடம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

86—

பொது இடங்களில் பிச்சை எடுப்பதை தடுக்க நடவடிக்கை—

வினா எண் 11547—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது இடங்களில் பிச்சை எடுப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பொது இடங்களில் பிச்சை எடுப்பதை முற்றிலும் ஒழிக்க அரசு தன்னாலியன்ற அனைத்து முயற்சிகளையும் தீவிரமாக செய்து வருகின்றது.

87—

லக்கம்பட்டி லம்பாடி இனத்தவரை மலைவாழ் இனத்தவர்கள் பட்டியலில் சேர்த்தல்.

வினா எண் 9063— திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி லம்பாடி இனத்தவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கி மலைவாழ் இனத்தவர்கள் (எஸ்.டி) பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) லம்பாடி இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

88—

செங்கோட்டை தாலுக்காவிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் உள்ளது போன்று மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் கொண்டுவருதல்.

வினா எண் 9336— திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

5-7-365—13

1993 ஏப்ரல் 23]

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம், நெல்லை மாவட்டம் செங்கோட்டை தாலுக்காவில் உள்ள சலவைத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் உள்ளது போல மற்ற மாவட்டத்தில் உள்ள சலவையாளர்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

சலவைத் தொழிலாளர் இனம் தற்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளது, சலவைத் தொழிலாளர் இனத்தினை தமிழ்நாடு முழுமைக்கும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது பற்றி ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு தற்போதுள்ள நிலையே நீடிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது,

89—

சோழத்தரம் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்,

வினா எண் 10194—திரு. ச. அழகிரி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்குடி வட்டம் சோழத்தரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சில ஆழ்குழாய்க் கிணறுகளில் மின் மோட்டார் இணைப்பு இல்லாதது குறித்து அரசு அறியுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டம், சோழத்தரம் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள 5 ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது,

90—

தமிழ்நாட்டிலுள்ள குரும்பர்கள் சமுதாய மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை,

வினா எண் 11283—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள குரும்பர்கள் சமுதாய மக்களை பழங்குடியினர் பட்டியலில் (எஸ்.டி) சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குரும்பர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு தனது கடிதம் (நிலை) எண் 1406, சமூக நலம், நாள் 29-12-1978-ல் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது,

91—

பெரியகுளம் தொகுதி மீன்பிடிப்போர் சங்கங்களிலுள்ள போலி உறுப்பினர்களை நீக்க நடவடிக்கை,

வினா எண் 9050—திரு, எம், பெரியவீரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியில் இருக்கும் குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையை பெற்றுள்ள மீன்பிடிப்போர் சங்கங்களில் போலி உறுப்பினர்களை நீக்கி மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களை உறுப்பினர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி, ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்—

1993 ஏப்ரல் 23]

பெரியகுளம் தொகுதியிலுள்ள பெரியகுளம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் மீன்பிடிக்கும் தொழில் செய்யாத போலி உறுப்பினர்கள் எவரும் உள்ளதாக இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

92—

தாட்கோ திட்டத்தின்கீழ் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு மானியத்துடன் டிராக்டர் வழங்குதல்.

வினா எண் 9835—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாட்கோ திட்டத்தின் கீழ் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு மானியத்துடன் டிராக்டர் வழங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு மானியத்துடன் டிராக்டர் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையில் செயல்படுத்தப்படவில்லை.

93—

சிவகாசியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட நடவடிக்கை.

வினா எண் 9855—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை. சிவகாசியில் பிற்படுத்தப் பட்டோர் நல மாணவர் விடுதி இல்லாத நிலையில், விடுதிக்கு கட்டிடம் கட்டுவது என்பது எழவில்லை.

94—

கோனார் இனத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை.

வினா எண் 10140—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் பட்டியலில் உள்ள கோனார் இனத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

95—

நாகப்பட்டினத்தில் மீன் விற்பனை அங்காடி அமைக்க நடவடிக்கை

வினா எண் 10196—திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகப்பட்டினத்தில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) நாகப்பட்டினத்தில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

96—

இடையக்குறிச்சியில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டும் திட்டம்.

வினா எண் 10610—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் இடையக்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய பிற்பட்டோர் நல விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இடையக்குறிச்சியில் பிற்படுத்தப் பட்டோர் நல மாணவர்/மாணவியர் விடுதி இல்லாத நிலையில் விடுதிக்கு கட்டிடம் கட்டுவது என்பது எழவில்லை.

97—

மீனவர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் திட்டம்

வினா எண் 11224—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்பு மிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் கடலில் விபத் துக்குள்ளாகி உயிரிழக்கும் மீனவரின் குடும்பத்திற்கு அரசு உதவித் தொகை எவ்வளவு வழங்குகிறது ?

(ஆ) மீனவர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தை அரசின் ஒரு பங்கு உதவியுடன் அமல் படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் கடலில் விபத்துக்குள்ளாகி உயிரிழக்கும் மீனவர், மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருந்தால், அவரது குடும்பத்துக்கு ரூ. 21,000-ம் அவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இல்லாவிட்டால் அவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000-ம் வழங்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டம் மீனவர்களிடம் பிரிமியம் பெறாமல் மத்திய மற்றும் மாநில அரசுகளால் பிரிமியத் தொகை செலுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

98—

கழுகுப் புலிக்காட்டில் வாழும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்

வினா எண் 11961— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் கழுகுப் புலிக்காட்டில் வாழும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு 1992–93-ல் காலனி வீடு கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

இல்லை.

1993 ஏப்ரல் 23]

99—

பெரியதண்டாலில் வாழும் லம்பாடி இனத்தவர்கள் வாழும் வகையாக மூங்கில் கூடை பின்னும் சிறிய தொழிற்சாலை கட்டுதல்

வினா எண் 9061— திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி-கொளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியதண்டாவில் வாழும் சுமார் 5,000 லம்பாடி இனத்தவர்கள் வாழ்வுக்கு வழிவகையாக மூங்கில் கூடை பின்னும் சிறு தொழிற்சாலை கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை அமைச்சர் :

(அ) கொளத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியதண்டாவில் வாழும் சுமார் 5,000 லம்பாடி இனத்தவர்கள் வாழ்வுக்கு வழிவகையான மூங்கில் கூடை பின்னும் சிறு தொழிற்சாலை கட்ட திட்டம் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு 1991-92ம் வருடம் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தில் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. அதனால், தொழிற்சாலை கட்ட சாத்தியமில்லை.

(ஆ) எழவில்லை.

100—

இராஜபாளையம் தொகுதியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

வினா எண் 9904— திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு எஸ். நாகூர் மீரான் ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) உள்ளூர் தொழில் முனைவோர்களும் சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் சிறு தொழில் முனைவோர்களும் சேர்ந்து நிலத்தினை தேர்வு செய்த பின்னர் பட்டா நிலமானால் அதனை விலை பேசி அல்லது புறம்போக்கு நிலமானால் நில ஆர்ஜிதம் செய்து இராஜபாளையம் தொகுதியில் சிட்கோ மூலம் தொழிற் பேட்டை அமைக்கப்படும்.

(23—வது பட்டியல்.)

1—

மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் உள்ள ஓட்டுச்சாவடியை மாற்றி அமைத்தல்.

வினா எண் 12101—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம் ஒன்றியம் 12-வது வார்டில் உள்ள மதுரை வீரன் தெருவில் வசிக்கும் பொது மக்களுடைய நலன் கருதி ஓட்டுச்சாவடியை 13 ஆம் வார்டிலிருந்து 10-வது வார்டுக்கு மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

99. சங்ககிரி (தனி) தொகுதி மல்லசமுத்திரம் ஒன்றியம் 12-வது வார்டு மதுரை வீரன் தெருவில் வசிக்கும் வாக்காளர்கள் தற்பொழுது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள பெரிய கொல்லப்பட்டி பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி எண் 74-ல் வாக்களிக்கிறார்கள். இந்த வாக்குச் சாவடியை 10-வது வார்டுக்கான வாக்குச்சாவடி அமைந்துள்ள மல்லசமுத்திரம் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு மாற்றினால் 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக வாக்காளர்கள் சென்று வாக்களிக்க வேண்டியிருக்கும் என்பதால் அவ்வாறு மாற்றும் உத்தேசம் இல்லை.

வழக்கறிஞர் நல நிதியை உயர்த்துதல்.

வினா எண் 11668— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வழக்கறிஞர் நல நிதி ஒதுக்கியது மிகக் குறைந்த அளவில் இருப்பதால், மேலும் கணிசமான நிதி அளவு நிதி ஒதுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர்:

வழக்கறிஞர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகையை ரூ. 30,000-லிருந்து ரூ. 60,000-ம் ஆக உயர்த்தி தமிழ்நாடு வழக்கறிஞர் நலச் சட்டம், 1987-ன் இணைப்பிற்கு தக்க திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

3—

இராஜகோபாலபுரத்து ஆதி திராவிடர்களுக்கு பட்டா கொடுக்கும் திட்டம்.

வினா எண் 4196— திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பேரூராட்சியைச் சேர்ந்த இராஜகோபாலபுரத்தில் வசிக்கும் வீட்டுமனை இல்லாத சுமார் 60 ஆதி திராவிடர்களுக்கு இப்பகுதியில் உபயோகத்தில் இல்லாத மந்தைவெளிப் புறம்போக்கு நிலத்தை இனம் மாற்றி (Transfer of Classification) பட்டா கொடுக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் கிராமம் இராஜகோபாலபுரத்தில் உள்ள நிலம் மந்தைவெளிப் புறம்போக்கு நிலமாகும். மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்

களில் மனைப்பட்டா வழங்க தடை உள்ளதால் பட்டா வழங்க இயலாது. மேலும் இவ்விடத்தில் ஏற்கெனவே உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

காமராஜபுரம், போஸ் நகர மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 4624— திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட காமராஜபுரம் போஸ் நகர் மற்றும் சாலையோரங்களில் வசித்து வருகின்ற பாமர மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

காமராஜபுரம் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருக்கும் பகுதிகளில் ஆக்கிரமிப்புக்களை வரன்முறை செய்வதற்குரிய லே-அவுட்கள் ஒப்புதல் பெறப்பட்டவுடன் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப பட்டா வழங்கப்படும். போஸ் நகர்ப் பகுதி நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால் நத்தமாக வகைமாற்றம் செய்த பின்னர் பட்டா வழங்கப்படும். சாலையோரங்களில் வசித்து வரும் நபர்களுக்கு சாலையோர இடங்களில் வீட்டுமனை வழங்க விதிமுறைகளில் இடமில்லை.

5—

அண்ணா நகர மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்கும் திட்டம்.

வினா எண் 6756— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி நகரம் அண்ணா நகரில் குடியிருந்து வரும் பொது மக்களுக்கு குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1993 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம் மற்றும் நகரம், அண்ணா நகர் என்ற மக்கள் குடியிருந்து வரும் பகுதி தடை செய்யப்பட்ட மிகவும் தாழ்வான ஆற்றங்கரை பகுதியாக இருப்பதால் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

6—

பிற மொழிகளில் நல்ல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் நூல்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்.

வினா எண் 3828—திரு. உ. பலராமன்: மாண்புமிகு கல்வி யமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பிற மொழிகளில் நல்ல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் நூல்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

மொழி பெயர்ப்பு திட்டம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் செயலாக்கப்படுகிறது. மேலும் கூடுதலாகத் தனியார் மொழி பெயர்ப்புகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் இப்போதைக்கு நடைமுறையில் இல்லை.

7—

கபாடி விளையாட்டை பள்ளி மற்றும் கல்லூரிகளில் கட்டாயமாக்கத் திட்டம்.

வினா எண் 5381—திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கபாடி விளையாட்டை பள்ளி மற்றும் கல்லூரிகளில் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வித்துறை அமைச்சர்:

ஒரு குறிப்பிட்ட விளையாட்டை பள்ளி மற்றும் கல்லூரிகளில் கட்டாயமாக்க இயலாது. எனினும், பள்ளிகளில் உடற் கல்வி பாடத்தில் 'கபாடி' விளையாட்டு சேர்க்கப்பட்டு மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரை, கபாடி விளையாட்டு தற்போது பல கல்லூரி களில் நடைபெற்று வருகிறது.

8—

துவக்கப் பள்ளிகளில் தமிழ்ப் புலவர்களை ஆசிரியர்களாக நியமிக்கத் திட்டம்.

வினா எண் 12154—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

துவக்கப் பள்ளிகளில் தமிழ்ப் புலவர்களை ஆசிரியர்களாக நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

துவக்கப் பள்ளிகளில் தமிழ்ப் புலவர்களை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

அரசு மருத்துவமனைகளில் பிரேத பரிசோதனைக் கூடங்கள் எல்லா நேரங்களிலும் செயல்படும் திட்டம்.

வினா எண் 2816—திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் பிரேத பரிசோதனைக் கூடங்கள் (Post Mortem Theatre) எல்லா நேரங்களிலும் செயல்பட வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மருத்துவக் கல்வி இயக்குநர் இப்பொருள் தொடர்பான செயற் குறிப்பினை ஏற்க இயலாது என தெரிவித்துள்ளார். மருத்துவம் (மற்றும்) ஊரக தலைப்பணி இயக்குநர், மத்திய மருத்துவக் குழு (Indian Medical Council) விடமிருந்து கருத்து பெறப்பட்ட பிறகு நீதி, மருத்துவம் மற்றும் காவல் துறை அலுவலர்கள் அடங்கிய ஒரு உயர்நிலை குழு ஒன்றை அமைத்து முடிவெடுக்க அரசுக்குத் தெரிவித்துள்ளார். பதில் வந்த பிறகு இப்பொருள் தொடர்பாக விரிவாக பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

10—

கொத்தமங்கலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவு படுத்தும் திட்டம்.

வினா எண் 4328—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி கொத்தமங்கலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி ஆதாரங்களுக்கேற்ப பின்வரும் காலத்தில் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் பரிசீலனை செய்யப்படும்.

11—

முகமது சதக் அறக்கட்டளையால் கீழக்கரை அரசு மருத்துவ மனைக்கு இலவசமாக சுற்றுச் சுவர் கட்டுதல்.

வினா எண் 5181—திரு. வ. சத்தியமூர்த்தி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும்வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அரசு மருத்துவ மனைக்கு இலவசமாக சுற்றுச் சுவர் கட்டித் தரவும் குளிர் சாதனப் பெட்டி வாங்கித் தரவும், கீழக்கரை முகமது சதக் அறக்கட்டளை முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்,

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம். கீழக்கரை முகமது சதக் அறக்கட்டளை கீழக்கரை அரசினர் மருத்துவமனை இலவசமாக சுற்றுப்புறச் சுவர் கட்டித் தரவும், குளிர் சாதனப் பெட்டி வாங்கித் தரவும் முன்வந்தது, சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கான உத்தேச மதிப்பீடு (Rough cost estimate) பொதுப்பணித் துறையினரிடம் கோரப்பட்டது, அதன் பேரில் பொதுப்பணித் துறையினர் ரூ. 1.95 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு கீழக்கரை அரசினர் மருத்துவமனை மருத்துவ அதிகாரிக்கு அனுப்பியுள்ளனர். அம்மதிப்பீடு மற்றும் திட்ட வரைவு ஆகியவை முகமது சதக் அறக்கட்டளை பொருளாளருக்கு அனுப்பி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. பல நினைவூட்டுக் கடிதங்களுக்கு சிறிதும் இதுவரை ஒப்புதல் கடிதம் வரவில்லை, அவரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெறப்பட்டதும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,

12—

பூவிருந்தவல்லி ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுள்ள மருத்துவமனையாக மாற்றியமைத்தல்.

வினா எண் 5187—திரு. டி. சுதர்சனம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம். பூவிருந்தவல்லி ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுள்ள மருத்துவ மனையாக மாற்றியமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது மாற்றியமைக்கப்படும்?

[1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லி ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுள்ள மருத்துவ மனையாக மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

ஆவடியில் படுக்கை வசதியுள்ள மருத்துவமனையாக உருவாக்கும் திட்டம்.

வினா எண் 5202—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம். ஆவடியில் படுக்கை வசதியுள்ள மருத்துவமனை உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம். ஆவடியில் படுக்கை வசதியுள்ள மருத்துவமனை உருவாக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

போளூர் அரசு பொது மருத்துவமனையில் குடிநீர் தட்டுப்பாட்டால் சுகாதாரம் பாதித்தல்.

வினா எண் 6187—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 23

(அ) போளூர் அரசினர் பொது மருத்துவமனை அக நோயாளிகள் உள்ள இடத்தில் குடிநீர் தட்டுப்பாட்டால் பொது சுகாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில். எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்,

(ஆ) போளூர் அரசு மருத்துவமனையில் உள்ள கிணற்றில் ஆழ்துளை போர் போடவும் நீரேற்றும் ஜெட் பம்பை புதியதாக மாற்றவும் தேவையான மதிப்பீடும், செயற் குறிப்பும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட மருத்துவப் பணிகள் இணை இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. அவைகள் கிடைக்கப்பெற்றதும், இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

15—

எமனேஸ்வரத்தில் அரசு மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் 9113—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி எமனேஸ்வரத்தில் அரசு மருத்துவமனை (Ex ention Counter O.P.) அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்சமயம் பரமக்குடி நகராட்சியில் எல்லைக்குள் இரு புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகள் ஒன்று காட்டுபரமக்குடியிலும் இரண்டாவது பரமக்குடியிலும் இயங்குவதால், வெகு அருகாமையிலுள்ள எமனேஸ்வரத்தில் மற்றொரு புற நோயாளி பிரிவு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

1993 ஏப்ரல் 23

16—

அரசு மருத்துவமனைகளில் மாலை ஆறு மணிக்கு மேல் பிரேத பரிசோதனை அமைக்கும் திட்டம்.

வினா எண் 11201—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்து மனைகளில் மாலை ஆறு மணிக்கு மேல் பிரேத பரிசோதனை செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாலை ஆறு மணிக்கு மேல் பிரேத பரிசோதனை செய்ய இயலாது என மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குநர் இப்பொருள் தொடர்பாக இந்திய மருத்துவ குழு (Medical Council of India)-விடமிருந்து கருத்து பெறப்பட்ட பிறகு, நீதி, மருத்துவம் மற்றும் காவல் துறை அலுவலர்கள் அடங்கிய ஒரு உயர் நிலைக் குழு ஒன்றை அமைத்து முடிவெடுக்க அரசுக்கு கருத்து தெரிவித்துள்ளார். காவல்துறை தலைவரிடமிருந்து இன்னும் அறிக்கை வரவில்லை. பதில் வந்த பிறகு இப்பொருள் தொடர்பாக விரிவாக பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

17—

தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் நஷ்டத்தை குறித்து நடவடிக்கை.

வினா எண் 5501—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த போக்குவரத்துக் கழகங்கள் துவக்கப்பட்டது முதல் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகின்றன?

(ஆ) அவற்றின் நஷ்டத்தினைத் தவிர்த்து இலாபத்தில் இயங்கச் செய்ய ஏதேனும் உயர்மட்ட நிபுணர் குழு மூலம் அரசு ஆய்வு நடத்தி இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 ஏப்ரல் 23

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) தமிழ் நாட்டிலுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களும் தொடங்கப்பட்டது முதல் இலாபத்திலும் நஷ்டத்திலும் மாறி மாறி இயங்கிக் கொண்டு வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) : தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து திரு. ஆர். தில்லை நாயகம் தலைமையில் ஓர் உயர் மட்ட ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழு போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் இயங்க கீழ்க் கண்ட பரிந்துரைகளை அளித்துள்ளது :—

(i) தமிழ் நாட்டிலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் நீண்ட கால கடன்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கடன் மற்றும் பங்கு மூலதனத்தின் விகிதம் 5 : 1 என்ற குறியீட்டை மீறக் கூடாது. பல போக்குவரத்துக் கழகங்களின் கடன் மற்றும் பங்கு மூலதனத்தின் விகிதம் குறியீட்டளவை விட அதிகம் இருப்பதால் அரசு நுட்பமாக ஆய்வு செய்து ஒவ்வொரு கழகத்தின் கடன்/பங்கு மூலதனத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.

(ii) வேறு வழியின்றி கடன் பெற்று போக்குவரத்துக் கழகங்கள் பழைய பேருந்துக்குப் பதிலாக புதிய பேருந்துகளை மாற்றம் செய்தால் அக்கழகங்களின் பொருளாதார நிலை சீராக இல்லை என அறியலாம். பேருந்துகளை மாற்றம் செய்வதற்கான செலவுத் தொகையினை போக்குவரத்துக் கழகங்கள் ஈடு செய்வதற்கு உள் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

(iii) போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதைக் காட்டிலும் புதிய பேருந்துகளாக மாற்றம் செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(iv) போக்குவரத்துக் கழகங்கள் பண வருவாயைப் பெருக்கி கடனைக் குறைக்க வேண்டும். இதை உறுதிப்படுத்த அதிகப்படியான நடையைக் குறைத்து பயணிகள் எண்ணிக்கையை குறிப்பிட்ட அளவில் வைத்திருக்க வேண்டும்.

(v) தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு குறைந்த வட்டியில் நீண்ட கால கடன்களை அரசு வழங்குவதோடு, இயக்கச் செலவை கருத்தில் கொண்டு பயணக் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும்.

1993 ஏப்ரல் 23]

மேற்கண்ட பரிந்துரைகளில் நான்கினை (ii) முதல் (v) வரை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பரிந்துரை (i) அரசின் பரிசீலனையில் உள்ளது.

18—

கோயமுத்தூரிலிருந்து வெளி மாவட்டம் செல்லும் பேருந்துகளில் தொலைக்காட்சியில் திரைப்படம் காட்டுதல்.

வினா எண் 11552—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூரிலிருந்து வெளி மாவட்டம் செல்லும் பேருந்துகளில் தொலைக் காட்சியில் திரைப்படம் காட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆமெனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): கோயமுத்தூரிலிருந்து வெளி மாவட்டம் சல்லும் பேருந்துகளில் தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்க உத்தேசம் இல்லை (அரசு ஆணைப்படி பேருந்துகளில் திரைப் படக் காட்சி கூடாது) ஆதலால் திரைப்படம் காட்ட இயலாது.

19—

கூத்தங்குழி கிராமத்திற்கு நகரப் பேருந்து வந்து செல்லுதல்.

வினா எண் 14160—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கூத்தங்குழி மக்களின் சிரமத்தை குறைக்கும் வகையில் 59-பி, 59சி நகரப் பேருந்து எண் 10 கூத்தங்குழி வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்

ராதாபுரம் தொகுதி, கூத்தங்குழி கிராமத்திற்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தடம் எண் 59பி, 59டி, 10 ஆகிய பேருந்துகள் மூலம் ஏற்கனவே 8 நடை

பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இப் பேருந்துகள் சரிவர கூத்தங்குழி கிராமத்திற்குச் செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கூத்தங்குழி கிராமம் பயன்பெறும் வகையில் 1 நகரப் பேருந்து 6 நடைகளுக்காக கடந்த 21—10—1992 முதல் இயக்கப்படுகிறது.

20—

வள்ளியூர்-கூடங்குளம் பேருந்து மகிழ்ச்சிபுரம் வழியாக செல்லுதல்.

வினா எண் 14161—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, தெற்கு வள்ளியூர் பஞ்சாயத்து, மகிழ்ச்சிபுரம் மக்கள் பயன்பெறும் வகையில் தடம் எண். 11, வள்ளியூர் - கூடங்குளம் பேருந்து மகிழ்ச்சிபுரம் வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண். 11, பேருந்தை மடப்புரம், மகிழ்ச்சிபுரம் வழியாக தடம் மாற்றி இயக்கினால் கீழ்குளம், அழகப்புரம் போன்ற கிராமங்கள் விடுபட்டுபோகும் நிலை ஏற்படுகிறது. மேலும் மகிழ்ச்சிபுரம் கிராமம் பேருந்து சாலையிலிருந்து 0.8 கி.மீ. தூரத்தில் சுமார் 300 மக்கள் தொகை கொண்டதாக இருப்பதால் அரசு விதிகளின்படி இதனைப் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதலாம்.

21—

ரெட்டவயல் செல்லும் நெடுஞ்சாலையை ஆர். ஆர். திட்டத்தில் சேர்த்து செப்பனிட்டு தார் போட திட்டம்.

வினா எண் 2545—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அறந்தாங்கி சாலையிலிருந்து வலப்பிரமன்காடு வழியாக ரெட்டவயல் செல்லும் நெடுஞ்சாலையை ஆர் ஆர். திட்டத்தில் சேர்த்து செப்பனிட்டு தார் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அறந்தாங்கி சாலையிலிருந்து வலப்பிரமன்காடு வழியாக ரெட்டவயல் செல்லும் சாலையானது கீழ்க்காணும் மூன்று சாலைகளை உள்ளடக்கியதாகும் :

(1) சொர்ணக்காடு - வலப்பிரமன்காடு சாலை கி.மீ. 0/0-3/2.

(2) வலப்பிரமன்காடு சாலை கி.மீ. 0/0-0/6.

(3) சின்னரெட்டவயல் சாலை கி.மீ. 0/0-4/6.

இந்த மூன்று சாலைகளும் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலைகளாகும். இச்சாலைகள் 1982-83-ல் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு நிரந்தர பராமரிப்பிற்கென நெடுஞ்சாலைத்துறை வசம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளாகும். தற்போது இச்சாலைகளின் ஓடுதளம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனை சீர்செய்ய தோராயமாக ரூ. 7.00 இலட்சம் தேவைப்படும். நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இப்பணியை திட்டப் பணியாக எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இந்த சாலையினை வருடாந்திர பராமரிப்பு நிதியினைக் கொண்டு பேருந்து வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல், கட்டம் கட்டமாக புதுப்பிக்கவும் சீரமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இச்சாலை அரசு இதர மாவட்ட சாலையாக உள்ளதால் கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் இச்சாலையை மேம்பாடு செய்ய இயலாது.

22—

ஓமலூர்-தாரமங்கலம்-சங்ககிரி சாலையை இருவழிப் பாதையாக்கி அகலப்படுத்த நடவடிக்கை.

வினா எண் 2571—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர்—தாரமங்கலம் - சங்ககிரி சாலையை இருவழிப் பாதையாக்கி அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

ஓமலூர் - சங்ககிரி - தாரமங்கலம் சாலையில் ஏற்கெனவே 11.00 கி.மீ. நீளம் இருவழிப் பாதையாக உள்ளது. மேலும் 6.60 கி.மீ. நீளமுள்ள பகுதியை இருவழிப் பாதையாக அகலப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 19.6. கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை இரு வழிப் பாதையாக அகலப்படுத்த திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

23—

வத்தல் மலைக்கு பாதை அமைக்கும் திட்டம்.

வினா எண் 5157—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், வத்தல் மலைக்கு மலைப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வத்தல்மலை செல்வதற்கு கடகார அள்ளியிலிருந்து புதிய சாலை அமைக்க வேண்டும். வத்தல்மலை செல்லும் சாலை கீழ்வரும் 2 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

(1) கடகார அள்ளியிலிருந்து வத்தல்மலை அடிவாரம் வரை செல்லும் சாலை கி.மீ. 0/0-1/0 வண்டித்தடம் மண் சாலை.

(2) வத்தல்மலை அடிவாரம் முதல் வத்தல் மலை, மேல்வரை 6 கி.மீ. நீளம் நடைபாதையாக உள்ளது.

இந்த 7 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 40.00 லட்சம் தேவைப்படும். மேற்படி சாலையினால் பயனடையும் கிராமங்கள் நடைபாதை மூலம் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. தனித்தனி கிராமங்

களின் மக்கள் தொகை 1000-க்கும் குறைவு, மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிட மக்கட்தொகை எதுவுமில்லை. மேற்படி சாலையில் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை, எனவே, மேற்படி சாலையை கிராமச் சாலைகளின் எந்தத் திட்டத்தின்கீழும் எடுத்துச் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

24—

மணல்மேடு பேரூராட்சியில் மேல்நிலைப் பள்ளியின் அருகே சாலையின் குறுக்கே வேகத்தடை கட்டும் திட்டம்.

வினா எண் 5531—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம் மணல்மேடு பேரூராட்சியில் மேல்நிலைப் பள்ளியின் அருகே சாலையின் குறுக்கே வேகத்தடை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நாகை—காயிதே மில்லத் மாவட்ட போக்குவரத்து அபிவிருத்தி குழுமத்தின் ஒப்புதல் பெற்று, வேகத்தடை அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

நெருஞ்சிப்பேட்டை காவிரி ஆற்றின் கரையைக் கட்ட நடவடிக்கை.

வினா எண் 5580—திரு. வெ. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டையில் காவிரி கரையோரப் பகுதியில் காவிரி ஆற்றின் அலை அடித்து கரைச் சுவர் கரைக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இக்கரையை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம் நெருஞ்சிப் பேட்டையில் கீழ்மேட்டூர் ர்ர் மின் திட்டத்தினால் பொதுவாக தரை மட்டம், கதவணை உள் உச்ச நீர்மட்ட அளவைவிட 1 மீட்டரிலிருந்து 1.5 மீட்டர் வரை உயரத்தில் உள்ளது. மின் தடங்கல் (Tripping) சமயத்தில் மட்டும் நீர்த்தேக்கத்தின் அளவு 0 3 மீட்டர் முதல் 0.5 மீட்டர் வரை உயரக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆதலால் ஆற்றின் இரு கரைகளின் நீர்த்தேக்கத்தினாலோ அல்லது அலைகளினாலோ அரிப்பு ஏற்பட வாய்ப்பு ஏதும் இல்லை. மேலும் உயர் உச்ச நீர்மட்ட அளவு (F.R.L.) வரையிலுள்ள நிலங்களை மின்வாரியம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது.

2. கரையை கட்ட திட்டம் ஏதும் இப்போது இல்லை. இருந்தபோதிலும் இந்தப் பகுதிகளை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து ஏதாவது கரைகளுக்குப் பங்கம் ஏற்பட்டால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு மண் அரிப்புகள் தடுத்து நிறுத்தப்படும்.

26—

ஒட்டங்காடு ஊராட்சியில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்தல்

வினா எண் 7172—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, சிறிய தெற்கு காடு மேற்குப் பகுதியில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஒட்டங்காடு ஊராட்சியில் 121 கூடுதல் தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட

1993 ஏப்ரல் 23]

தெரு விளக்குகளுக்கு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் இவ்வாண்டு (1992-93) இணைப்பு வழங்க ஆவன செய்யப் படும்.

27—

ஆணைக்காட்டிற்கு தனியே மின் மாற்றி அமைத்தல்.

வினா எண் 7178—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி ஆணைக்காட்டிற்குத் தனியே மின் மாற்றி (Transformer) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்.

ஆணைக்காடு கிராமத்தில் 10 தெரு விளக்கு களும், 11 வீட்டு மின் இணைப்புக்களும், 1 கடை மின் இணைப் பும், 20 குடிசை மின் இணைப்புகளும், இயக்கத்தில் உள்ளன. 50 கே. வி. ஏ. திறனுடைய காலகம் மின் பகிர் மாற்றி-1ல் மேற்குறிப்பிட்ட மின் இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மின் மாற்றி மேற் குறிப்பிட்ட மின் இணைப்புகளுக்குப் போதுமானதாக உள்ளது.

28—

பேராவூரணி ஒன்றியம், மாயம் பெருமாள் கோவிலுக்கு மின் இணைப்புக் கொடுத்துத் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண். 7194—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஏனாதிக ரம்பை அருகிலுள்ள மாயம் பெருமாள் கோவிலுக்கு மின் இணைப்புக் கொடுத்துத் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

[1993 ஏப்ரல் 23

ஏனாதிகரம்பை அருகிலுள்ள மாயம் பெருமாள் கோவிலுக்கு மின் விஸ்தரிப்புச் செய்யவோ அல்லது கோயில் அருகில் தெரு மின் விளக்குகளுக்கு மின் இணைப்புக் கோரியோ விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் பெறப்பட வில்லை.

29—

மடத்துக்காட்டில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்தல்

வினா எண் 7214—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மடத்துக் காட்டில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, மடத்துக்காட்டில் ஏழு தெரு (7) விளக்குகள் பொருத்தி, ஏற் கெனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து விளக்கு களும் நன்கு இயங்கி வருகின்றன.

மேலே குறிப்பிட்ட பகுதியில் ஆறு (6) கூடுதல் தெரு விளக்குகள் வேண்டிய விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. இந்த ஆறு கூடுதல் தெரு விளக்குகளுக்கு அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 1992-93ஆம் ஆண்டில் மின் இணைப்புத் தர ஆவன செய்யப் படும்.

30—

தொந்துபுளிக்காட்டில் தெரு வினக்கு விஸ்தரிப்புச் செய்தல்.

வினா எண் 7233— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் தொந்துப் புளிக்காட்டில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அர சிடம் செயற் குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், தொந்துப் புளிக்காட்டில் 73 கூடுதல் தெருவிளக்குகள் கோரி இரண்டு தெரு விளக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ள சேர்க்கப் பட்டுள்ளது. மேற்கண்ட கூடுதல் தெரு விளக்குகளை 1992-93 இல் பொருத்த ஆவன செய்யப்படும்.

31—

களத்தூர் கிழக்கு ஆதி திராவிடர்களின் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண் 7249—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், களத்தூா கிழக்கு ஆதிதிராவிடர்களின் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் வேண்டி 2 விண்ணப்பங்கள் 17—11—1989 அன்று பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்களுக்கு முன்னதாகவே 48 குடிசை விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகத்தில் ஏற்கெனவே நிலுவையில் உள்ளன. களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின்வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

32—

புக்கரம்பை ஊராட்சி மேற்குடி காட்டிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போடுதல்

வினா எண் 7251—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசமுத்திரம் ஒன்றியம் புக்கரம்பை ஊராட்சி மேற்குடி காட்டிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேது பாவா சத்திரம் ஒன்றியம் புக்கரம்பை ஊராட்சி மேற் குடி காட்டிலுள்ள குடிசைகளுக்கு ஒன்றை விளக்குகள் அமைக்கக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

33—

தில்லங்காட்டிலிருந்து அடைக்கலம்காத்தான் கோவில் வரையில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 7548—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம், ஒன்றியம் தில்லங்காட்டிலிருந்து அடைக்கலம் காத்தான் கோவில் வரையில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்துதர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 23]

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங் காட்டிலிருந்து அடைக்கலம் காத்தான் கோவில் வரையில் தெரு விளக்கு அமைக்க கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

34—

குறியாமங்கலம் ஊராட்சிக்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 7570—செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் குறியாமங்கலம் ஊராட்சிக்கு தெரு விளக்கு போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) குறியாமங்கலம் ஊராட்சியில் ஏற்கெனவே 65 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. இங்கு கூடுதலாக 17 தெரு விளக்குகள் அமைக்கும் பணி அரசின் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

(ஆ) இந்த கூடுதல் விளக்குகள் யாவும் இந்த நிதி ஆண்டுக்குள் (1992—93) அமைக்க ஆவன செய்யப்படும்

35—

பின்னத்துர் அரிசனக் காலனிக்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 7572—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய பின்னத்துர் அரிசனக் காலனிக்கு, தெரு விளக்குப் போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பின்னத்துர் அரிசன காலனியில் ஏற்கனவே 16 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. கூடுதல் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

36—

வேளங்கிராயன் பேட்டை கிராமத்திலுள்ள குடிசைகளுக்கு ஒரு விளக்கு போடுதல்.

வினா எண் 7578 — செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி வேங்கிராயன் பேட்டை கிராமத்தில் உள்ள குடிசைகளுக்கு தெரு விளக்குப் போட்டுத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி வேளங்கிராயன் பேட்டை கிராமத்தில் ஏற்கனவே 21 குடிசை மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மின் இணைப்பு கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை.

புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண். 7583— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்கு தெரு விளக்கு போட அரசு ஆவன செய்யுமா ‘

(ஆ) ஆம் எனில், எப்போது ‘

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) புவனகிரி தொகுதி, புதுக் குப்பம் மீனவர் காலனிக்கு தற்போதுள்ள 16 தெரு விளக்கிற்கும் மேற்பட்டு 14 கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க அரசின் தெரு விளக்குகளுக்கான தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

(ஆ) மேற்கண்ட பணிகளை நடப்பு நிதி ஆண்டில் (1992—93) நிறைவேற்ற ஆவன செய்யப்பட்டு வருகிறது.

38—

வேளங்கிராயன்பேட்டை கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 7585— செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள வேளங்கிராயன்பேட்டை கிராமத்திற்குத் தெரு விளக்குபோட்டுத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வேளங்கிராயன் பேட்டை கிராமத்தில் ஒன்பது தெருவிளக்குகள் ஏற்கெனவே இயக்கத்தில் உள்ளன. கூடுதல் தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் இல்லை

39—

முடசல்ஓடை கிராமத்திற்குத் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 7588—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கிள்ளை பேரூராட்சியில் அடங்கிய முடசல்ஓடை கிராமத்திற்குத் தெரு விளக்கு போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) முடசல்ஓடை கிராமத்தில் ஏற்கெனவே 14 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. கூடுதல் தெரு விளக்குக் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

40—

குஞ்சிதபாதம் நகருக்கு மின்சார வசதி செய்தல்.

வினா எண் 67853—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சி. கொத்தங்குடி ஊராட்சி குஞ்சிதபாதம் நகருக்கு மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கி. கொத்தங்குடி ஊராட்சி, குஞ்சிதபாதம் நகரிலிருந்து 3 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஏற்கனவே 5–3–1992 அன்று ஒரு குடியிருப்புக்கு மின் வசதி செய்து தரப்பட்டது. மேலும் மற்றுமொரு வீட்டு உபயோகத்திற்கான மின் இணைப்பும் 6–6–1992 அன்று வழங்கப்பட்டுவிட்டது மின் இணைப்பு வேண்டி வேறு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

எந்த விண்ணப்பமும் மின்வாரிய அலுவலகத்தில் நிலுவையில் இல்லை. தெரு விளக்கு பொருத்தக்கோரியோ அல்லது வேறு உபயோகங்களுக்கு மின் இணைப்பு கோரியோ விண்ணப்பங்கள் வருமாயின் தற்போதுள்ள விதிகளுக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

சேந்தன் குடியில் இருக்கும் வையாபுரி குளத்தை மராமத்து செய்தல்.

வினா எண் 9229— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி சேந்தன் குடியில் இருக்கும் வையாபுரி குளம் உடைப்பு எடுத்து இன்னும் கட்டப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு குளத்தை மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி சேந்தன்குடியில் இருக்கும் வையாபுரி குளம் 1983-ல் உடைப்பேற்பட்டது. இக்குளத்தை 1992-93 ஆம் ஆண்டில் விரைவுபடுத்தப்பட்ட சிறுபாசனத்திட்டத்தின்கீழ் தரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

42—

அண்டகுளம், பொங்கலாப்பட்டி மற்றும் புதுக்கோட்டை வீரக்குடி சாலைகள் பழுது பார்த்தல்.

வினா எண் 10055— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்றாண்டார் கோயில் ஒன்றியம் அண்டகுளம் பொங்கலாப்பட்டி மற்றும் புதுக்கோட்டை-வீரக்குடி சாலை போன்றவைகளை பழுதுபார்த்து ஜல்லி பரத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளானது கீழ்க்கண்ட இரண்டு சாலைகளை உள்ளடக்கியதாகும்.—

1. அடைகுளம்-பெங்காலபட்டி சாலை கி. மீ. 0/0-2/0 (ஊராட்சி சாலை)

2. வீரக்குடி சாலை கி.மீ. 0/0-3/0 (ஊராட்சி சாலை).

இவ்விரண்டு சாலைகளும் ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி சாலைகளாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறையால் பகுதி 2 திட்டத்தில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படவில்லை. அதனால் இப் பணிகளை இத்துறையினால் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள வாய்ப்பில்லை.

43—

நாட்டிரப்பு கிராமத்தில் குடியிருக்கும் ஆதிதிராவிடர்களுக்கு சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்தல்.

வினா எண் 766— திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், கீவளூர் ஒன்றியம், நாட்டிரப்பு கிராமத்தில் குடியிருக்கும் ஆதி திராவிட மக்கள் சாலை வசதி, குடிநீர் வசதி இல்லாமல் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) நாட்டிரப்பு கிராமம், கீவளூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு பனயூர் ஊராட்சியைச் சேர்ந்தது. மேற்படி கிராமத்திற்கு வெள்ளையாற்றின் சாலையில் 2 கி. மீ. நீளத்திற்கு சாலை செப்பனிடப்படவேண்டும். இச்

1993 ஏப்ரல் 23]

சாலை பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஆற்றங்கரையில் அமைந்துள்ள சாலையானதால் பிரத்தியேகத் திட்டத்தின் கீழ்தான் மேம்பாடு செய்யவேண்டும். நடப்பு நிதியாண்டில் (1992-93) ஊராட்சிகளுக்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்படும் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்ட நிதியில் செப்பனிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டிரப்பு கிராமத்தில் 15 ஆதிதிராவிடர் வீடுகள் உள்ளன. குடிநீருக்காக இரண்டு கைப்பம்புகள் அமைக்கப் பட்டுள்ளன. அவைகள் பழுது சரி செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகின்றன. கோடைக் காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறையும்போது கைப்பம்புகளில் தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த குறையை போக்குவதற்காக 1993-94 ஆம் ஆண்டில் சிறப்புக் குடிநீர் திட்டத்தில் சேர்த்து 'பக்கெட் டைப் கைப்பம்பு ஒன்று புதிதாக அமைத்து கோடைக் காலங்களில் ஏற்படும் குடிநீர் சிரமத்தை நீக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

44—

பரமக்குடி ஒன்றியத்தில் 1989-90-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தில் குடிநீர் இல்லாத கிராமங்களுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்கல்.

வினா எண் 1678—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியத்தில் 1989-90-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தில் குடிநீர் இல்லாத கிராமங்களுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்க ஆன செலவுத் தொகை எவ்வளவு ?

(ஆ) நிரந்தரமாக குடிநீர் கிடைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ரூ. 5,95,331.

(ஆ) பரமக்குடி ஒன்றியத்தில் நிரந்தர குடிநீர் கிடைக்க ஒன்பது கூட்டுக்குடிநீர் திட்டம் உள்ளது. இந்த ஒன்பது குடிநீர்த் திட்டங்கள் மூலம் 60 கிராமங்கள் பயன் பெறுகின்றன. வறட்சி நிவாரணத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் அவ்வப்

போது திறந்தவெளிக் கிணறுகள், உறைக்கிணறுகள் அடிப் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. லாரி மூலம் குடிநீர் விநியோகம் உப்பு நீர் நிறைந்துள்ள பகுதிகளுக்கு செய்யப்படுகிறது. அப்பகுதிகளில் நெல்மடூர் மற்றும் சஞ்சியேதல் ஆகிய கிராமங்களில் உப்புநீரை குடிநீராக மாற்றும் திட்டம் செயல் படுத்த கருத்துருக்கள் எழுப்பப்பட்டுள்ளன. இப்பகுதியில் நன்கு மழை பெய்து வைகை ஆற்றில் நீர்வராது இருந்ததால் குடிநீர் ஆதாரங்களில் (கண்மாய், குலம், கிணறுகள்) நீர் ஊற்று எடுத்து குடிநீர் பிரச்சினை இல்லாத நிலை ஏற்படும். ஆனால் கோடை காலத்தில் நிலத்தடி நீர் குறைவானதுடன் குடிநீர் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே இவ்வித பிரச்சனை உள்ள இடங்களுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் வைகை ஆற்றில் உள்ள நீர்ஆதாரங்களில் நல்ல குடிநீர் கிடைக்கும் பகுதிகளிலிருந்து குழாய் இணைப்பு நீட்டித்து குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

45—

வெட்டன் விடுதி கிராமத்தில் நீர்மூழ்கி மோட்டார் வழங்கும் திட்டம்.

வினா எண் 4703—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பகுடி ஒன்றியத்தில் உள்ள கண்ணக்கன்காடு பஞ்சாயத்து வெட்டன்விடுதி கிராமத்தில் குடிதண்ணீருக்காக இயங்கி கொண்டிருக்கும் மின் மோட்டார் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் அங்குள்ள சாதாரண மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் கணக்கன்காடு வெட்டன்விடுதி கிராமத்தில் குடிநீருக்காக 3 எச். பி. மின் மோட்டார் 1974-ஆம் ஆண்டில் பொறுத்தப் பட்டது. மே 1991-ல் 10 நாட்களும் ஜுன் 1991-ல் 8 நாட்களும் பழுதுபட்டிருந்தது. பாப்புலர் எலக்ட்ரிகல்ஸ், ஆலங்குடி நிறுவனம் மூலம் முறையே ரூ. 5,029 மற்றும்

1993 ஏப்ரல் 23]

ரூ. 2,779 செலவில் சரி செய்யப்பட்டு தற்சமயம் 5 எச்.பி. நீர் மூழ்கி மோட்டார் பொறுத்தப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது.

46—

நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள மாவு மில்களுக்கு நிரந்தர உரிமம் வழங்குதல்.

வினா எண் 5058— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் மாவு மில்களுக்கு நிரந்தர உரிமம் இருப்பதுபோல, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள மாவு மில்களுக்கும் நிரந்தர உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்கெனவே ஐந்தாண்டுகளாக தற்காலிக உரிமம் பெற்றிருக்கும் மாவு மில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு 249 மற்றும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவுகள் 172, 159-ன் படி நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள மாவுமில்களுக்கு ஓராண்டிற்கு மட்டும் தான் உரிமம் வழங்க முடியும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

47—

பழனி நகருக்கு பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா எண் 5506— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பேருந்துகள் வருவதால் அவற்றை நிறுத்துவதற்கென தனியாகப் பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா‘

(ஆ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் ;

(அ) மற்றும் (ஆ) பழனி நகர் வையாபுரி குளம் கண்மாயில் சுற்றுலா பேருந்து நிலையம் அமைப்பதற்கு பழனி நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

48—

மருவூரணி கிராமத்திலுள்ள குளத்தை தூர் எடுத்தல்.

வினா எண் 6357—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் மருவூரணி கிராமத்தில் குளம் பல ஆண்டுகளாக தூர் எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தூர் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மருவூரணி என்ற கிராமம் உள்ளது. இதில் உள்ள குடிநீர் ஊரணியை தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணியினை 1991-92 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 10,000 மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலையும் முடிக்கப்பட்டுவிட்டது.

49—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 6782—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு **உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—**

1993 ஏப்ரல் 23]

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை 55 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் வீடுகள் கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

50—

பொன்னன்கண்ணிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7057— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பொன்னன் கண்ணிக்காடு ஆதிதிராவிடர்களுக்கு இன்னும் மீதம் உள்ளவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி பேரூராட்சியில் உள்ள பொன்னன்கண்ணிக்காடு ஆதிதிராவிடர் காலனியில் 1985-86—ம் ஆண்டு தாட்கோ மூலம் 39 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டது. மீதம் உள்ள 20 வீடுகளுக்கு பேராவூரணி பேரூராட்சி நிர்வாக அலுவலர் மூலம் கருத்துரு பெற்று 1992-93—ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்த்து தொகுப்பு வீடுகள் கட்ட பரிசீலனை செய்யப்பட உள்ளது.

51—

கழனிவாசல் ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7068—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோளகனார்வயல், கழனிவாசல் ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம், ஊராட்சி ஒன்றியம், சோளகனார் வயல் கிராமத்தில் 13 ஆதிதிராவிடர் குடும்பங்களே உள்ளது. இவர்கள் ஒரே இடத்தில் சேர்ந்தார்போல் இல்லை. திட்ட விதிப்படி ஒரு கிராமத்தில் வீட்டுமனைப்பட்டா ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல குடும்பங்கள் இருந்தால் தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க இயலும். எனவே சோளகனார்வயல் கிராம ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க திட்ட விதிகளில் இடமில்லை. இத்துடன் இணைந்தாற்போல் உள்ள கழனிவாசல் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

52—

நடுமனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தல்.

வினா எண் 7258—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, நடுமனைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜீவன்தாரா திட்டத்தில் ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. பயனாளிகளுக்கு மின் மோட்டார் வாங்க கடன் தந்து அவைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது.

53—

ஆண்டிக்காடு மிகவும் பின் தங்கிய வகுப்பினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7373—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு வடக்கு மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமே தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசின் விதிமுறை உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசின் செயற்குறிப்பு ஏதுமில்லை.

54—

கருப்பட்டிக்காடு கிராம ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 7546—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மேட்டுக் கொல்லை, கருப்பட்டிக்காடு 22 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருவத்தேவன் ஊராட்சி, மேட்டுக்கொல்லை கருப்பட்டிக் காடு கிராமத்தில் 22 ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

55—

அண்ணா மாவட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள், கையிறைப் பான்கள் மற்றும் கிணறுகள் ஆழப்படுத்தல் குறித்து நடவடிக்கைகள்.

வினா எண் 8043—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி அளிக்கப் பட்டும் அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு ஆழ்துளைக் கிணறுகள், கையிறைப்பான்கள் மற்றும் கிணறுகள் ஆழப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன.

(ஆ) இவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) இவ்வேலைகள் (ஆழப்படுத்தல்) ஏதும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட வில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

56—

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டம்.

வினா எண் 9858—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டுவது போல் இத்திட்டத்தின் கீழ் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும் இலவச வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் வழிமுறைகளின்படி (Guidelines) ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் தவிர பிற நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

57—

நாவல்குளம் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்

வினா எண் 10404—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள நாவல்குளம் கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா :

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நாவல்குளம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க வீட்டுமனைக்கான புன்செய் நிலம் கிடையாது, மேலும் பட்டாவும் வழங்கப்படவில்லை. இலவச பட்டா வழங்கப்பட்டதும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1993 ஏப்ரல் 23

58—

வெட்டன் விடுதியில் ஊராட்சி ஒன்றிய அனுமதி பெறாத தண்ணீர் பைப்புகளை அகற்ற நடவடிக்கை,

வினா எண் 10815—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் கண்ணக்கன்காடு ஊராட்சியில் இருக்கும் வெட்டன்விடுதியில் ஊராட்சி ஒன்றிய அனுமதி பெறாத தண்ணீர் பைப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆலங்குடி தொகுதியில் கண்ணக்கன்காடு ஊராட்சியைச் சேர்ந்த வெட்டன்விடுதி கிராமத்தில் ஊராட்சியின் அனுமதி பெறாது தனி நபர்களால் அமைக்கப்பட்டிருந்த குடிநீர் குழாய் இணைப்புகள் தற்போது அகற்றப்பட்டுவிட்டது.

59—

குமாரங்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்,

வினா எண் 11835—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், குமாரங்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம். திருவரங்குளம் ஒன்றியம். குமாரங்குளம் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

60—

சாந்தாம்பேட்டையில் பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை பழுது பார்த்தல்,

வினா எண் 12003—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், சாந்தாம்பேட்டையில் இயங்காமல் பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை 1992-93-ல் உடன் பழுது பார்த்து இயங்கச் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவசத்திரம் ஊராட்சி ஒன்றியம், மருங்கப்பள்ளம் ஊராட்சி, சாந்தாம் பேட்டையில் மூன்று இந்தியா மார்க் 2 ஆழ் குழாய் கிணறுகள் உள்ளது. அதில் ஒன்று மோசமாக பழுதான தால் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. மற்றொன்று உப்பு நீராக உள்ளது. ஒரு கைப்பம்பு நல்லமுறையில் பயன்படுத்தப் படுகிறது. இங்கு மேல்நிலை நீர்த்தொட்டி கட்டி குடிநீர் வழங்க பள்ளிக்கருகில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

61—

கைவனவயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்.

வினா எண் 12009—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கைவனவயலில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதாக இருப்பதால் பழுதுபார்க்க 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவசத்திரம் ஒன்றியம் கைவனவயலினுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

62—

வல்லம்பக்கொல்லை மக்களுக்கு பொதுக்குளம் ஒன்று அமைத்தல்.

வினா எண் 12011—திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம்பக்கொல்லை மக்களுக்கு 1992-93-இல் பொதுக்குளம் ஒன்று அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம்பக்கொல்லை மக்களுக்கு 1992-93-ல் பொதுக்குளம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

63—

பூவாணம் மேற்கிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்து, நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண் 12016—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் மேற்கிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்து, பெரியதாக்கி, நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க 1992-93இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், பூவாணம் மேற்கிலுள்ள மேல்நிலைத் தொட்டி ஜெட்வால்வு பழுது ஏற்பட்டிருந்தது. அது பழுதுபார்க்கப்பட்டு நல்ல முறை

1993 ஏப்ரல் 23]

யில் இயங்கி வருகிறது. இத்திட்டம் 1991ஆம் வருடம்தான் பொறுப்பேற்கப்பட்டது. 10 எச்.பி. மோட்டார் நல்லமுறையில் இயங்கிவருகிறது. 1992-93-இல் நீர்மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

குண்டாமரைக்காட்டில் உள்ள மேல்நிலைத் தொட்டியை பழுதுபார்த்தல்.

வினா எண் 12037—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, குண்டாமரைக்காட்டில் உள்ள மேல்நிலைத்தொட்டி பழுதுபட்டிருப்பதால், அதை பழுதுபார்த்து, இயங்க வைக்க 1992-93-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சேதுபாவசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, குண்டாமரைக்காடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மின் மோட்டார் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, தற்பொழுது நல்ல முறையில் இயங்கி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

65—

கீழ்க்கொள்ளுக்காடு காளியம்மன் கோவில் குளத்தை தூர் எடுத்து படித்துறை கட்டுதல்.

வினா எண் 12041—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை(வடக்கு) ஊராட்சி, கீழ்க்கொள்ளுக்காடு காளியம்மன் கோவில் குளத்தில் 1992-93-இல் தூர் எடுத்து படித்துறை கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி, கீழக்கொள்ளுக்காடு காளியம்மன் கோயில் குளத்தில் 1992-93-இல் தூர் எடுத்து படித்துறை கட்ட ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியின்மையினால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

66—

கா. உஞ்சியவிடுதி ஆதிதிராவிடர் தெருவிலுள்ள சமுதாய கிணற்றை தூர் எடுத்து போர்வெல் போடுதல்.

வினா எண் 12042—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர் தெருவிலுள்ள சமுதாயக் கிணற்றை 1992-93-இல் தூர் எடுத்து, சுத்தப்படுத்தி, போர்வெல் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர் தெருவிலுள்ள சமுதாயக் கிணற்றை தூர் எடுத்து சுத்தப்படுத்தி போர்வெல் போட ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியில்லை. எனவே, இவ் வேலையை 1992-93-இல் செய்வதற்கு செயற் குறிப்பு ஏதுமில்லை.

67—

சின்ன எடையர் குளத்தில் படித்துறை அமைக்கும் திட்டம்.

வினா எண் 12070—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, ஊமத்தநாடு ஊராட்சி, சின்ன எடையர் குளத்தில் 1992-93-இல் படித்துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, சின்ன எடையர் குளத்தில் 1991-92-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை-

1993 ஏப்ரல் 23]

வாய்ப்புத் திட்டத்திலேயே ரூ. 8,000 மதிப்பீட்டில் படித்துறை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

68—

பள்ளிவாசல் குளத்தில் படித்துறை அமைக்கும் திட்டம்.

வினா எண். 12075— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி, பள்ளிவாசல் குளத்தில் 1992-93-இல் படித்துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி, பள்ளிவாசல் குளத்தில் 1991—92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலேயே ரூ. 8,095 செலவில் படித்துறை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

69—

காரங்குடாவில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியைப் பழுது பார்த்தல்.

வினா எண் 12315—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் காரங்குடாவில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அடிக்கடி பழுதுபடுவதை நிரந்தரமாக பழுது பார்த்து 1992-93-ல் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மரங்காவலசை ஊராட்சியில் உள்ள காரங்குடாவில் எந்தவிதமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கிடையாது. கழுமங்குடாவில் உள்ள மேல்நிலைத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது.

70—

நறுவழிக்கொல்லையிலுள்ள சமுதாய கிணறுகள் தூர் வாரி ஆழப்படுத்துதல்.

வினா எண். 12321— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆலடிக்குமுளையைச் சேர்ந்த நறுவழிக்கொல்லையிலுள்ள மூன்று பழைய சமுதாயக் கிணறுகளைத் தூர்வாரி ஆழப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆலடிக்குமுளையைச் சேர்ந்த நறுவழிக்கொல்லையிலுள்ள மூன்று பழைய சமுதாயக் கிணறுகளும் பயன்பட்டு வருகிறது. இக்கிணறுகள் யாவும் 25 அடி ஆழத்தில் கட்டப்பட்டது. கிணறுகளுக்கருகில் குடிநீர்த் தேக்கத்தொட்டியின் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது நிறைய நீர் இருப்பதால் ஆழப்படுத்த இயலாது. எனவே செயற்குறிப்பு ஏதுமில்லை.

71—

சம்பைப்பட்டினம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள மோட்டார் பழுது பார்த்தல்.

வினா எண் 12329— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள மோட்டார் பழுதாக உள்ளதாலும், பைப் லயன்கள் உடைந்துள்ளதாலும், 1992–93-ல் உடன் பழுதுபார்த்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு; உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள மோட்டார் பழுது

1993 ஏப்ரல் 23]

நீக்கம் செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி குடிநீர் பொது மக்களுக்கு பயன்படும் வகையில் சீராக விநியோகம் செய்யப் பட்டு வருகிறது.

72—

ரெட்டைவயல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது பார்த்தல்.

வினா எண் 12346—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், சின்ன ரெட்டை வயல் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அடிக்கடி பழுதுபடுவதை 1992-93-ல் நிரந்தரமாக பழுதுபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ரெட்டவயல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சின்னரெட்டவயல் ஊராட்சியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது 11—6—1992 அன்று பழுது நீக்கம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் தடைபடாது நடை பெற்று வருகிறது.

73—

செட்டிக்காடு சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 12364 — திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், செட்டிக்காடு சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், செட்டிக்காடு சத்துணவு மையத்திற்கு சத்துணவு மையக் கட்டிடம் 1991-92 ஆம் திட்டத்தில் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

74 —

சூரங்காடு தெற்கு சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 12365—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சூரங்காடு தெற்கு சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சூரங்காடு தெற்கு சத்துணவுத் திட்ட மையத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

75—

தம்பிக்கோட்டை, வடகாடு ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12378—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், தம்பிக்கோட்டை, வடகாடு ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் 1992-93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தம்பிக்கோட்டை வடகாடு ஆதிதிராவிடர்களுக்கு 1989-90-ல் 20 வீடுகளும் 1990-91-ல் 7 வீடுகளும் 1991-92-ல் 16 வீடுகளும் ஆக மொத்தம் 43 வீடுகள் இதுவரை கட்டித்தரப் பட்டுள்ளன. 1991-92-ல் 16 வீடுகள் கட்டித் தந்துள்ளதால் 1992-93-ல் மேலும் வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.

76—

ஏரிப்புறக்கரை சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 12397—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஏரிப்புறக்கரை சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஏரிப்புறக்கரை சத்துணவு மையக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளது.

77—

கழுகுப்புலிக்காடு சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 124000—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாருக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கழுகுப்புலிக்காடு சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கழுகுப்புலிக்காடு சத்துணவு மையக் கட்டிடம் 1991–92ல் ரூ. 70 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

78—

ஆலங்குடி காந்தி பூங்காவில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்.

[1993 ஏப்ரல் 23

வினா எண் 12546—திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(ஆ) ஆலங்குடியில் காந்தி பூங்காவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு நீண்ட நாட்களாக செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆலங்குடி பேரூராட்சி காந்தி பூங்காவில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி ஏதும் இல்லை. பேரூராட்சி பேருந்து நிலையம் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுள்ளது. இந்த விசையிறைப்பானுக்கு நீர் ஆதாரமாக உள்ள கிணற்றில் கடந்த கோடைகாலத்தில் வறட்சி காரணமாக நீர்மட்டம் கீழே சென்றதால இந்த விசையிறைப்பானை இயக்கி குடிநீர் வழங்க இயலாமல் இருந்தது. தற்போது பெய்த மழையினால் அக்கிணற்றில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் விசையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

நியாய விலைக் கடைகளின் மூலம் மக்களுக்கு அரிசி அளவினை உயர்த்துதல்.

79—

வினா எண் 10490 திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளின் மூலம் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு டன் அரிசி மக்களுக்கு விற்பனை செய்யப் படுகிறது ?

(ஆ) இந்த அளவை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 23]

(அ) தமிழ்நாட்டில் தற்போது நியாய விலைக் கடைகள் மூலம் பெரியவர்களுக்கு மாதம் 4 கிலோ வீதமும் சிறியவர்களுக்கு 2 கிலோ வீதமும் குடும்ப அட்டை ஒன்றுக்கு அதிகபட்சமாக 12 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு சுமார் 1.30 லட்சம் மெட்ரிக் டன் அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படுகிறது.

(ஆ) குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் அரிசி அளவினை உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை.

80—

கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக்கடைகள் திறத்தல்.

வினா எண் 10492—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் பகுதிநேர நியாயவிலைக் கடைகளை திறக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்க மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் சென்னை நகரத்தை பொறுத்தமட்டில் துணை ஆணையாளர்கள் (நகரம்) ஆகியோர்கட்கும் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு அதிகாரம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

(1) ஒரு நியாயவிலைக் கடைக்கும் மற்றொரு கடைக்குமிடையே 3 கிலோமீட்டர் அல்லது அதற்கு மேல் தூரம் இருக்க வேண்டும்.

(2) புதியதாக திறக்கப்படும் பகுதிநேரக் கடை செயல்பட கட்டிடம் வாடகையின்றி இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) புதியதாக திறக்கப்படும் பகுதிநேரக் கடை வாரத்தில் 3 நாட்களாவது செயல்பட வேண்டும். ஏற்கனவே செயல்பட்டு வரும் முறையான கடையின் விற்பனையாளராலேயே இக்கடையும் பராமரிக்கப்பட வேண்டும்.

(4) புதியதாக திறக்கப்படும் பகுதிநேரக் கடைக்கு நிர்வாக செலவுக்காகவோ அல்லது கடை நடத்துவதற்கான இதர செலவுக்காயவோ அல்லது கடை நடத்துவதற்கான செலவுக்காகவோ அரசு மானியம் ஏதும் வழங்கப்படமாட்டாது. பகுதிநேர கடை திறக்கக்கோரும் கருத்துரு மிகவும் தீவிரமான முறையில் ஆய்வு செய்யப்பட்டு தவிர்க்க முடியாத இனங்களுக்கு மட்டும், கூட்டுறவுச் சங்கங்களின் ஒப்புதல் பெற்றபின்பே பகுதிநேரக் கடை திறக்கப்படுகிறது. மேலும் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வேண்டி சில இடங்களில் ஆறு, மலை மற்றும் பரந்த வயல்களைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இது போன்ற இயற்கை இடங்களினால் கிராம மக்களின் அத்தியாவசியத் தேவையை முன்னிட்டு மேற்படி நிபந்தனைகளை கருத்தில் கொள்ளாமல் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகிறது.

81 —

கொரசினம்பட்டியில் புதியதாக ரேஷன் கடை அமைத்தல்.

வினா எண் 11445— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, மலைய்பட்டி கிராம மக்களுக்கான ரேஷன் பொருட்களை 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கணவாய்ப்பட்டி கிராமத்திலிருக்கும் ரேஷன் கடை மூலம்தான் பெறும் நிலையிருப்பதால் அந்தக்கிராம மக்களுக்கு அருகில் உள்ள கொரசினம்பட்டியில் புதிதாக ரேஷன் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

திண்டுக்கல் வட்டம், கணவாய்ப்பட்டி நியாயவிலைக்கடை கணவாய்ப்பட்டி பங்களா என்ற இடத்தில் 6 உட்கிராமங்களில் உள்ள 587 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. 26 குடும்ப அட்டைகளைக் கொண்டது மலைப்பட்டி கிராமம். தனியாக நியாவிலை கடைத் திறக்க கோரியுள்ள கொரசினம் பட்டி கிராமம், கணவாய்ப்பட்டி கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 105 குடும்ப அட்டைகளைக் கொண்ட கொரசினம்பட்டி, கணவாய்ப்பட்டியில் இருந்து இரண்டு லோ மீட்டர் தூரத்திலிருப்பதால் தற்போதுள்ள விதிமுறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

களின்படி புதிய கடை திறக்க வழிவகை இல்லை. எனவே மலைப்பட்டி கிராமத்திலுள்ள 26 குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் மேற்படி 26 குடும்ப அட்டைகளையும் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கே. அய்யம்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வரும் கோம்பைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் கோம்பை நியாயவிலைக் கடையில் பொருள் பெற்றுக் கொள்ளும்படி மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆணையிடப்பட்டுளது.

42—

கூட்டுறவு பால் பண்ணைகளில் தற்காலிகப் பணியாளர்களுக்கு சம்பளம் உயர்த்துதல்,

வினா எண் 12562—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கூட்டுறவு பால் பண்ணைகளில் தற்காலிகமாக பணி புரியும் ஊழியர்களுக்கும் சம்பளம் உயர்த்தி கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

ஒவ்வொரு பால் கூட்டுறவுச்சங்கத்திலும் அதன் பணிகளுக்குத்தேவையான பணியாளர்கள் அந்தந்த சங்கங்களின் நிதிநிலைக்கேற்ப அந்தந்த சங்க நிர்வாக உறுப்பினரால் கூட்டுறவுச்சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் சங்க துணை விதிகளுக்குட்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர், மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் விதிகள் மற்றும் சங்க துணை விதிகளின்படி ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கமும் தனித்து இயங்கும் கூட்டுறவு நிறுவனமாகும். அதனால், பால் கூட்டுறவுச்சங்கங்களில் தற்காலிகமாகப் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம் உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

83—

பரமக்குடி தொழிற்கூடத்தில் சுருக்கெழுத்துப் பிரிவு, டீசல் மெக்கானிக், கம்ப்யூட்டர், கையால் அச்சுக் கோர்த்தல் ஆகிய பயிற்சிப் பிரிவுகள் ஆரம்பித்தல்,

வினா எண் 15745—டாக்டர் எஸ், சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொழிற்கூடத்தில் (I.T.I,) Stenography Diesel Mechanic, Computers and Composing and Printing ஆகிய பயிற்சிகளை ஆரம்பிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி. தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

பரமக்குடி தொழிற்கூடத்தில் சுருக்கெழுத்துப் பிரிவு, டீசல் மெக்கானிக், கம்ப்யூட்டர், கையால் அச்சுக்கோர்த்தல் ஆகிய பயிற்சிப் பிரிவுகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை,

4—

பரமக்குடி தொழிற்கூடத்தில் பொருத்துநர், பற்ற வைப்பவர் கடைசலர். கம்பியாளர் மற்றும் கம்மீயர் ஆகிய பிரிவுகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்,

வினா எண் 15747—டாக்டர் எஸ், சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொழிற் கூடத்தில் Fitter, Welder, Turner, Wire man Motormechanic பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

பொருத்துநர், பற்றவைப்பவர், கடைசலர், கம்பியாளர் மற்றும் கம்மீயர் (மோட்டார் வண்டி) ஆகிய தொழிற் பிரிவுகளில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அரசு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்தும், தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் இருந்தும் தேர்ச்சி பெற்ற பயிற்சி யாளர்கள் வேலைக்காகக் காத்திருப்போர் பட்டியலில் 1,000-க்கும் அதிகமாக உள்ளனர். இந்நிலையில் மேற்கண்ட பிரிவுகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தினால் இவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இன்னும் அதிகரிக்கும், பரமக்குடி தொழிற் கூடத்தில் மேற்கண்ட பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

85—

ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் அமைத்தல்.

வினா எண் 13571—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் 1992–93-ல் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் குறைந்தது ஒரு கால்நடை மருந்தகமாவது தற்போது உள் ளது. (புதியதாகத் துவக்கப்பட்ட நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள கீழையூர் ஒன்றியம் தவிர 1992–93 ஆம் ஆண்டு 400 புதிய கால்நடை மருந்தகங்களைக் கூடுதலாக வழங்கி அரசு ஆணை எண். (2டி) 38, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன், நாள். 3–6–1992-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

86—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் புதுப்பட்டினம், சின்ன ஆவுடையார் கோவில் முதலிய கிராமங்களில் சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் 14885—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் சின்ன ஆவுடையார்கோவில், கொள்ளுக்காடு,

ஆண்டிக்காடு, பள்ளத்தூர், சொக்கநாதபுரம், கள்ளம்பட்டி, ஒளிராமன்காடு, பூவானம், கட்டயன்காடு, செருபாலக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன் படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

87—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புத்துக்காடு, புக்கரம்பை முதலிய கிராமங்களில் சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் 14886— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புத்துக்காடு, புக்கரம்பை, மருங்கப்பள்ளம், தேனங்காடு, சாந்தாம்பேட்டை, நாடியம், வெளிமடம், மரக்காவலசை, ஊமத்தநாடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

88—

கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் வீடுகள் கட்ட தாலூக்காவிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீட்டினை மாற்றியமைத்தல்.

வினா எண் 9601—திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் வீடுகள் கட்ட தாலுக்காவிற்கு 250 வீடுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்

1993 ஏப்ரல் 23]

டுள்ளதை மாற்றி 500 வீடுகள் என இலக்கு நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழகம் முழுவதும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரைச் சார்ந்த பயனீட்டாளர்களுக்கு அவர்களது சொந்த வீட்டு மனையில் வீடு கட்ட அட்கோ நிதியுதவி மற்றும் அரசு மானியத்துடன் ஆண்டுக்கு 30,000 வீடுகள் கட்ட அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. இதனை ஒவ்வொரு மாவட்ட மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீட்டினை மாற்றி தாலுக்காவிற்கு 500 வீடுகள் என நிர்ணயிக்க இயலாது.

89—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு விடுதி கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண் 540—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் எத்தனை?

(ஆ) இவற்றில் சொந்த விடுதிக் கட்டிடங்கள் உள்ள விடுதிகள் யாவை?

விடை:

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 21 ஆதி திராவிட நல மாணவ, மாணவியர் விடுதிகள் உள்ளன.

(ஆ) ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி, ஆர். எஸ். மங்கலம், முதுகுளத்தூர் மற்றும் கமுதியில் உள்ள அரசு கட்டிடங்களில் இயங்குகின்றன. ஆதி திராவிடர் மாணவியர் விடுதி (பார்த்திபனூர் பரமக்குடி)க்கென கட்டப்பட்ட அரசு

கட்டிடத்தில் தற்போது பரமக்குடி மாணவர் விடுதி இயங்கி வருகிறது. பேரையூர் மாணவர் விடுதி அரசுப் பள்ளிக் கட்டிடத்தில் வாடகையின்றி இயங்கி வருகிறது. மற்ற 16 விடுதிகள் தனியார் கட்டிடங்களில் வாடகைக்கு இயங்கி வருகின்றன.

90—

காமன்கோட்டையில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி ஆரம்பித்தல்.

வினா எண் 1207—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம் காமன் கோட்டையில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆமெனில் அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) 1991-92 ஆம் ஆண்டில் திறக்கப்படவிருக்கும் 40 புதிய விடுதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக இயக்குநரால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் போகலூர் ஒன்றியம் காமன்கோட்டையும் இடம் பெற்றுள்ளது.

(ஆ) நிதி மற்றும் தேவைக்கேற்ப நடப்பு ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

சத்திரக்குடி மற்றும் பார்த்திபனூரில் ஆதி திராவிடர் மாணவ விடுதி கட்டுதல்.

வினா எண் 1210—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, சத்திரக்குடி மற்றும் பார்த்திபனூரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. விடுதி கட்ட தகுதியான இடம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

92—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டுதல்.

வினா எண் 1437—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், அரசு பணம் ஒதுக்கியும் கட்டி முடிக்கப்படாத அரசு ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் யாவை ?

(ஆ) காரணங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு விடுதிகளுக்குக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தும் கட்ட முடியாத நிலையில் உள்ளன.—

(1) அரசு மாணவியர் விடுதி, இராமநாதபுரம்.

(2) அரசு மாணவர் விடுதி, பரமக்குடி.

(ஆ) (1) இராமநாதபுரம் அரசு மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆணை வழங்கப்பட்டு, நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது.

இதை எதிர்த்து வனசன்காசி அம்மன் கோவில் டிரஸ்டி இராமநாதபுரம் முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்ததால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(2) பரமக்குடி அரசு மாணவர் விடுதிக்குக் காட்டு பரமக்குடி கிராமத்தில் சர்வே எண் 128/1-ல் இடத்தேர்வு செய்யப்பட்டு, கட்டிடம் கட்ட தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டது. விடுதி கட்டிடம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டதில் தம்முடைய மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து, இராமநாதபுரம் அணைக்கட்டு மற்றும் கால்வாய் ஏரியா லேபர் காண்டிராக்டர்கள் கூட்டுறவுச் சங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்து உறுத்துக் கட்டளை பெற்றுள்ளது. மேற்கூறப்பட்ட காரணங்களினால் கட்டிட வேலை துவங்க முடியாத நிலையில் உள்ளது.

93—

மயிலாடுதுறை ஆதி திராவிடர் மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டுதல்.

வினா எண் 5730—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு ஆதி திராடவிர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடு துறை நகரில் பள்ளி மற்றும்கல்லூரி மாணவர்களுக்கான அரசு ஆதிதிராவிடர் தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை நகரில் பள்ளி மாணவ மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான அரசு ஆதி திராவிடர் விடுதி கட்டுவதற்கு தற்சமயம் செயற்குறிப்பு எதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1993 ஏப்ரல் 23]

94—

அந்தியூர் தொகுதியில் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் அரசினர் மாணவர், மாணவியர் இல்லங்கள் திறத்தல்.

வினா எண் 10078—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் சிங்கம்பேட்டை, நெருஞ்சிப்பேட்டை, ஆலாம்பாளையம், சென்னம்பட்டி, மூங்கில்பட்டி, அத்தாணி போன்ற இடங்களில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் அரசினர் மாணவர், மாணவியர் இல்லங்கள் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

(அ) 1992-93-ல் எத்தனை விடுதிகள் தமிழ்நாட்டில் திறக்க அரசு முடிவு எடுத்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) பெரியார் மாவட்டத்தில் சென்னம்பட்டியில் 1992-93-ல் புதிய மாணவர் விடுதி திறப்பதற்கு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிங்கம்பேட்டை, நெருஞ்சிப்பேட்டை, ஆலாம்பாளையம், மூங்கில்பட்டி, அத்தாணி போன்ற இடங்களில் புதிய விடுதிகள் திறப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) 1992-93—ஆம் ஆண்டில் 30 மாணவ, மாணவியர் விடுதிகள் திறப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அவை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

95—

பள்ளிகொண்டாவில் வசிக்கும் மிகவும் பிற்பட்ட சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த அம்பலக்காரர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13097— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டாவில் வசிக்கும் மிகவும் பிற்பட்ட சீர்மரபினர் இனத்தை சேர்ந்த அம்

பலக்காரர்களுக்கு காலனி விடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

நரியங்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர் மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13119—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர்நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

97—

வலச்சேரிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13129—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர்நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர்நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டி தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

செருவாவிடுதி தெற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13124—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி தெற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

99—

செருவாவிடுதி வடக்கு ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்குக் காலனி வீடுகள் கட்டுதல்,

வினா எண் 13125—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பிற்பட்டோர்நல மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர்நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை,

100 —

திண்டுக்கல்—அண்ணா, கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கயிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தல்.

வினா எண் 10519—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை பெருமளவில் உள்ள திண்டுக்கல்—அண்ணா, கன்னியாகுமரி, மதுரை, தஞ்சை மாவட்டங்களில் அரசுத் துறையின் கீழ் கயிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுத் துறையில் கயிறு தொழிற்சாலை அமைக்கத் திட்டம் ஏதுமில்லை.

தென்னை பெருமளவில் உள்ள திண்டுக்கல்—அண்ணா, கன்னியாகுமரி, மதுரை, மற்றும் தஞ்சை மாவட்டங்களில் தனியார் துறையில் பெருமளவில் கயிறு தொழிற்சாலைகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன; மேற்கண்ட மாவட்டங்களில் வாய்ப்புள்ள பகுதிகளில், தொழிற் கூட்டுறவு அமைப்பிலும் கயிறு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன, இனியும், தனியார் துறையிலோ அல்லது கயிறு தொழிலாளர்கள் கூட்டாக இணைந்து தொழிற் கூட்டுறவு அமைப்பிலோ தொழிற்சாலை ஆரம்பிக்க விரும்பினால் அந்தந்த மாவட்டத் தொழில் மையங்களில் உள்ள பொது மேலாளர்கள் தேவையான தொழில் நுட்பங்களையும், ஏனைய உதவிகள் அனைத்தையும் செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள், தொழில் துவக்க தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒருமுனை குறை நிவர்த்தி கூட்டமைப்பின்மூலம் பெற்றுத் தரவும், மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள், தொழில் முனைவோர் மாவட்டத் தொழில் மையத்தில் உள்ள பொது மேலாளர்களை அணுகி ஆலோசனை பெறலாம்,

(24-வது பட்டியல்.)

1—

சென்னை மத்திய சிறையில் நவீன பாதாள சாக்கடை வசதி.

வினா எண் 5553—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நவீன பாதாள சாக்கடை வசதி பல ஆண்டுகளாக செயல்பட்டுவரும் நிலையிலும் சென்னை மத்திய சிறையில் நவீன கழிப்பறைகள் இன்றி இன்னமும் வெள்ளையர் காலத்து கழிப்பறைகளே இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு நவீன கழிப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை மத்திய சிறையில் பழைய கழிப்பறைகள் நீக்கப்பட்டு நவீன கழிப்பறைகள் ஏற்கனவே ஏற் படுத்தப்பட்டுள்ளன.

2—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை நரிக்குறவர் காலனிக்கு அருகிலுள்ள பினாமி நிலம்.

வினா எண் 7526—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப் புறக்கரை நரிக்குறவர் காலனிக்கு அருகில் பினாமியாக வழங்கப் பட்ட அசைன்மெண்டை ரத்து செய்து ஏழைகளுக்கு அசைன் மெண்ட் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை நரிக்குறவர் காலனிக்கு அருகில் பினாமியாக நிலம் ஏதும் ஒப்படை செய்யவில்லை.

3—

மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை அரசுப் பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ஒதுக்குதல்.

வினா எண் 11264— திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை அரசுப்பள்ளி கட்டவும், ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

வாயில்லா ஜீவன்களான கால்நடைகள் மேய்கின்ற நிலமான மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்யக் கூடாது என தடை உள்ளது. மேலும் மேய்க்கால் நிலங்களை உரிமை மாற்றம் செய்வதைப் பொறுத்தமட்டில் அவற்றை நஞ்சை நிலங்களைப் போலவே கருத வேண்டும். எனவே மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை உரிமை மாற்றம் செய்வதை தவிர்க்க நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

4—

மகாகவி பாரதியின் முழுமையான படைப்புகளை புதுப்பித்து வெளியிடல்.

வினா எண் 11083— திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாகவி பாரதியின் உண்மையான, முழுமையான படைப்புகளைப் புதுப்பித்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வெளியிடப்படும்?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) பாரதியின் நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்டுள்ள நிலையில் மலிவுப் பதிப்பாக பலராலும் வெளியிடப்பட்டுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகமும், பாரதியார் படைப்புகளை பதிப்பித்துள்ளது. எனவே, பாரதியின் படைப்புகளை அரசு வெளியிடத் தேவை இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

5—

வீரகனூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 11267—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, வீரகனூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1993–94 ஆம் நிதியாண்டில் அரசால் ஒதுக்கப்படும் கட்டிட நிதி நிலைக்கேற்ப மேற்படி பள்ளி, பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

6—

ஒன்றிய பணிமூப்பு அடிப்படையில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள்.

வினா எண் 12167—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் 1—6—1981 முதல் அரசு ஊழியராக்கப்பட்டும் இன்னும் ஒன்றிய பணிமூப்பு அடிப்படையே உள்ளதை மாற்றி பணிக்கால அடிப்படையில் பணிமூப்பு பட்டியல் வெளியிட செயற்குறிப்பு உளள்தா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போதுள்ள, ஒன்றிய அடிப்படையிலான பணி மூப்பு அடிப்படையிலான பணிமூப்பு அடிப்படையை மாற்றும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

7—

கன்னியாகுமரியில் சமுதாய நல நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மேம்படுத்தல்.

வினா எண் 3123—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் மீனவ சமுதாய மக்கள் கூடுதலாக வாழும் பகுதியில் செயல்படும் சமுதாய நல நிலையத்தை அரசு மருத்துவமனையாக மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

கன்னியாகுமரியில் மீனவ சமுதாய மக்கள் கூடுதலாக வாழும் பகுதியில் செயல்படும் சமுதாய நல நிலையத்தை அரசு மருத்துவமனையாக மேம்படுத்த அரசிடம் ஏதும் செயற்குறிப்பு இல்லை.

8—

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 5489—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

சேரன்மகாதேவி சட்டமன்றத் தொகுதி, கல்லிடைக் குறிச்சி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

அரசு மருத்துவமனைகளில் சமூக சேவை பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைத்தல்.

வினா எண் 5692— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் முறைகேடுகள் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்காது தாமதப்படுத்தல், நோயாளிகளை பார்க்க வருவோரிடம் மருத்துமனை ஊழியர்கள் பணம் தந்தால்தான் உள்ளே அனுமதிக்கும் நிலைமைகள் போன்றவற்றைக் கண்காணித்து அரசின் உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து பரிகாரம் செய்ய அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் சமூக சேவை அமைப்பு பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்க அரசு பரிசீலிக்குமா ?

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பொதுவாக, வட்டம் மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனைகள் செம்மையாகச் செயல்படவும் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளையும் ஆராய்வதற்காகவும் ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஆலோசனைக் குழு (Hospital Advisory Committee) ஒன்று இருந்தது. இதற்குப் பதிலாக தற்போது அனைத்து அரசு மருத்துவமனைகளில் சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் அரசு மருத்துவமனைகளும் மக்களுக்காகச் செம்மையாகச் செயல்படுதல் போன்றவைகளைக் கண்காணிக்க மாவட்ட தலைமையிட அளவில் அலுவல் சார்ந்த (Official) 10 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அமைப்பதற்கும், இதர அரசு மருத்துவ மனைகளில்

5 அலுவலர் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை அமைப்பதற்கும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அலுவல் சார்பற்ற (Non-official) உறுப்பினர்களையும் நியமிக்கும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, வினாவில் குறிப்பிட்டுள்ளதுபோல் கண்காணிப்புக் குழு எதுவும் அமைக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

10—

வேதாரண்யம் தொகுதி கருப்பம்புலம் அரசு மருத்துவமனையில் போதிய மருந்து வசதிகள் ஏற்படுத்தல்.

வினா எண் 5752—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி கருப்பம்புலம் அரசு மருத்துவமனையில் போதிய மருந்து வசதிகள் இல்லாத நிலையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டின் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கேதுவாய் மையக் கொள்முதல் முறையில் 1991—92 ஆம் ஆண்டுக்கு பல்வேறு மருந்தாக்கங்களுக்கு (Manufacturers) ஒப்பந்தப்புள்ளி ஏற்பாணைகள் வழங்கப்பட்டன. ஆனால் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்களின் கடுமையான விலையேற்றம், சுங்கம் மற்றும் கலால் வரி (Customs and Excise Duty) மற்றும் நாணய மாற்றம் (Devaluation), மருந்துப் பொருட்கள் மற்றும் பல்வேறு காரணங்கள் நிமித்தமாக மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஆணை பெற்ற நிறுவனங்கள் சரியான முறையில் மருந்துப் பொருட்களை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிக்கவில்லை. ஆயினும் பொதுமக்கள் நலனைக் கருத்திற் கொண்டு அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய

1993 ஏப்ரல் 23]

மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கேதுவாய் அரசால், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலைமை சீரடைந்து விட்டது. மேலும் 1992—93 ஆம் ஆண்டுக்கு அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை பெறுவதற்கேதுவாய் ஒப்பந்தப்புள்ளி பொதுவாக கோரப்பட்டு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்களை தனித் தனியே தலைவராகக் கொண்ட மூன்று குழுக்கள் அமைத்து அவரவர்களின் கீழ்வரும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் போதிய அளவிற்கு மருந்துகள் வாங்கி ஏற்பாணைகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

11—

கோபால்பட்டி மற்றும் சிறுவத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்.

வினா எண் 6281—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், சாணார்பட்டி ஒன்றியம், கோபால்பட்டி மற்றும் சிறுவத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) 30—5—1988 முதல் கோபால்பட்டியிலும் 11—2—1989 முதல் சிறுவத்தூரிலும் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23'

12—

அழகிய நாயகிபுரம் பிரதம சுகாதார நிலையத்தின் படுக்கை வசதிகளை அதிகரித்தல்.

வினா எண் 6486—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரத்தில் உள்ள பிரதம சுகாதார நிலையத்தின் படுக்கை வசதியை அதிகரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் நான்கு படுக்கைகள் உள்ளன. மேலும் படுக்கை வசதி அதிகரித்துக் கொடுப்பது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

13—

ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை அரசு நேரடி பொறுப்பேற்கும் திட்டம்.

வினா எண் 7994— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை அரசே நேரடியாக பொறுப்பேற்கும் திட்டத்தின்படி இதுவரை எத்தனை ஒன்றிய மருத்துவமனைகளை அரசு ஏற்றுள்ளது?

(ஆ) இன்னும் ஏற்கப்படாமல் இருப்பவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) எப்போது ஏற்கப்படவிருக்கிறது ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இதுவரை 84 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) இன்னும் 70 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்படவேண்டும்.

(இ) 22 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தகுதியான ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவது குறித்து கருத்துருவும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

14—

சீர்காழி மற்றும் கொள்ளிடம் யூனியனிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா எண். 8343—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி மற்றும் கொள்ளிடம் யூனியனில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) அதில் பணியாற்றும் மொத்த நபர்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களும், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன.

அவற்றில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் பின்வருமாறு:—

ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும், ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயரும்.	பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள்.	பணிபுரியும் பணியாளர்கள். உள்ளிருப்பு. (Static)	பணிபுரியும் பணியாளர்கள். களம். (Field)	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
சீர்காழி—				
1. திருவெண்காடு	2	10	19	31
2. பூம்புகார்	2	4	15	21
3. வள்ளுவக்குடி	2	5	17	24
கொள்ளிடம்—				
1. நல்லூர்	2	10	15	27
2. குன்னம்	2	4	10	10
2. கொள்ளிடம்	2	4	9	15
4. திருமுல்லைவாசல்	2	4	14	20

15—

தூத்துக்குடி— ஆனைக்குடி பேருந்து.

வினா எண் 14136— திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி, தூத்துக்குடி — ஆனைக்குடிபேருந்து மீண்டும் ஆனைக்குடி வந்து இரவில் நிறுத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஓட்டுநர், நடத்துனர் மற்றும் பேருந்து பாதுகாப்பு கருதி ஆனைக்குடி போன்ற சிறிய கிராமங்களில் பேருந்து தங்குவது ரத்து செய்யப்பட்டது. எனினும், ஆனைக்குடியில் இரவில் பேருந்து தங்குவது குறித்து, அடுத்த மாவட்ட போக்குவரத்து ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் தற்போதைய நிலைமை பரிசீலிக்கப்படும்.

16—

பொத்தக்காலன்விளைக்கு பேருந்து வசதி.

வினா எண் 14142—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, இடையன்குடி பஞ்சாயத்து, பொத்தக்காலன்விளைக்கு பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொத்தகாலன்விளைக் கிராமம், திசையன்விளை — இடையன்குடி— உவரி பிரதான சாலையிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலையில் சுமார் 200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. பிரதான சாலையில் நாளொன்றுக்கு 15 பேருந்துகள் 61 நடைகள் சென்று வருகின்றன. எனவே, பொத்தக்காலன்விளை கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாக கருதப்படுகிறது.

17—

வள்ளியம்மாள் புரத்திற்கும் வள்ளியூருக்கும் பேருந்து விடல்.

வினா எண் 14146—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதி, வள்ளியம்மாள்புரத்திற்கும் வள்ளியூருக்கும் ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

வள்ளியம்மாள்புரம் கிராமம், வள்ளியூர்-கீகுளம்- கள்ளி—குளம் சாலையில் வள்ளியூரிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளது. இக்கிராமம் வழியாக இரண்டு நகரப் பேருந்துகள் நாளொன்றுக்கு 16 சுற்றுகள் சென்று வருகின்றன. இப்பேருந்துகளின் இருக்கை விகிதாச்சாரம் சுமார் 50 சத விகிதம் அளவிலேயே இருப்பதால் கூடுதல் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

இராதாபுரம் தொகுதியில் கிராமங்களுக்கு பேருந்துகள் விடுதல்.

வினா எண் 14153— திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரத்தை மையமாக வைத்து பேருந்துகள் இயக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டும் ஒரு பேருந்து கூட இயக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சுற்றியுள்ள கிராமங்களுக்கு நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

இராதாபுரத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகளை இயக்க ஆணை பிறப்பிக்கும் முன்பே, இராதாபுரத்தைஇணைத்து வள்ளியூர் திசையன்விளை, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலிருந்து 5 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப் பேருந்துகளில் இருக்கை விகிதாச்சாரம் சுமார் 40 சதவிகிதம் மட்டுமே உள்ளது. இருப்பினும் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள்படி கடந்த 21—10—1992 முதல் மேலும் ஒரு நகரப் பேருந்து இராதாபுரத்தை மையமாக வைத்து இராதாபுரத்திலிருந்து இயக்கப்பட்டது. இப்பேருந்தின் பயணிகள் விகிதாச்சாரமும் 40 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே இப்பகுதியில் மேலும் நகரப் பேருந்து விடுவது குறித்து சிறிது காலம் கடந்த பின்னர் பரிசீலிக்கப்படும்.

1993 ஏப்ரல் 23]

15—

நாகூர்-நன்னிலம் நெடுஞ்சாலையை சீர்படுத்தி மேம்பாடுசெய்தல்

வினா எண் 1549—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், நாகூர்-நன்னிலம் நெடுஞ்சாலையை சீர்படுத்தி மேம்பாடு செய்து அகலப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நாகூர்-நன்னிலம் நெடுஞ்சாலையை ரூ. 4.80 கோடி ஓ.என்.ஜி.சி. நிதி உதவியுடன் சீர் செய்ய மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் இச்சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்ய ரூ. 12.10 இலட்சம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இச்சாலை வாகன போக்குவரத்துக்கு ஏற்றவகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

20—

அனந்த கோபாலபுரத்தில் பேக்கன் ஓடைக்குளம் கரையைப் பலப்படுத்துதல்

வினா எண் 1831—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் பேக்கன் ஓடை குளம் உடைப்பு ஏற்படாமலிருக்க கரையைப் பலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள அனந்த கோபாலபுரத்தில் பேக்கன் ஓடைக்குளம் என்ற பெயரில் ஏரி ஏதும் இல்லை. இந்த கிராமத்தில் மேலமரிச்சிக்கட்டி ஏரி என்றும் வலையன் ஏரி என்றும் காவேரி மேட்டூர் திட்ட பாசன ஏரிகள் உள்ளன.

22 [1993 ஏப்ரல் 23

இந்த ஏரிகளின் கரைகள் நல்ல நிலையில் உள்ளன. கரையைப் பலப்படுத்த குறிப்பான திட்டம் ஏதும் இல்லை.

21—

நன்னிலம்—மயிலாடுதுறை சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 3287—டாக்டர் க. கோபால்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம்—மயிலாடுதுறை சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் இதனை அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசலை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

மைய அரசின் ஒப்புதல் பெறுவதற்காக மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மைய சாலை நிதித்திட்டப் பிரேரனைகளில் இச்சாலையின் பெரும் பகுதியை அகலப் படுத்தும் பணி இடம் பெற்றுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் செயலாக்கப்படும்.

சித்தையன் கோட்டை-அய்யம்பாளையம் சாலையை சீரமைத்தல்

வினா எண் 3560—திரு, எஸ். எம். துரை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தையன் கோட்டையிலிருந்து அய்யம்பாளையம் (சித்தரேவு) வழியாக சாலைபழுதடைந்துள்ளதால் அதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை மேற் கொள்ளப்படும்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சித்தையன் கோட்டையில்ருந்து அய்யம்பாளையம் வரையுள்ள சாலையானது நெடுஞ்சாலை துறையினால் கீழ்க்கண்ட இரண்டு சாலைகளாகப் பராமரிக்கப்பட்டு வரும் அரக இதரமாவட்டச் சாலைகளாகும்.

1993 ஏப்ரல் 23]

1. வத்தலக்குண்டு—சித்தரேவு சாலை கி.மீ. 0/0—10/4.

இச்சாலையில் கி.மீ. 6/0—7/0 வரை சீரமைக்கும் பணி முடிந்துவிட்டது. கி.மீ. 2/0—4/0, 5/0—6/0 கி.மீ. 9/0—10/0 வரையிலான 4/00 கி. மீ. வரை உள்ள சீரமைப்பு பணிகள் ரூபாய் 4.00 லட்சத்திற்கு 1991-92, பழுதடைந்த சாலைகள் சீர் செய்யும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1992-93ல் தொடரும் பணிகளாக மேற்கொள்ளப்பட்டு, தற்போது ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது. மற்றும் கி. மீ. 7/0—9/0 வரை 1992-93—ம் ஆண்டு பராமரிப்பு நிதியில் ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன எஞ்சியுள்ள பகுதிகளுக்கு நொடிகள் போடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

2. சித்தரேவு - ஆத்தூர் சாலை கி.மீ. 10/4—15/8.

இச்சாலை கி.மீ. 11/0—13/0 வரை 1991-92ம் ஆண்டு பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் திட்டத்தில் பணி நடைபெற்று வருகின்றது. கி.மீ. 16/0—18/0, கி.மீ. 18/0, 19/8 வரை 3.80 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 4.35 லட்சம் மதிப்பீட்டில் காலமுறையில் புதுப்பிக்கும் பணியாக மேற்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மற்றும் கி.மீ. 10/4—19/8 வரை 1992-93 ஆம் ஆண்டு பழுதுற்ற சாலைகள் சீரமைக்கும் திட்டத்தில் ரூபாய் 3.90 லட்சம் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

23—

பி.ஏ.பி. பாசன விரிவாக்கப்பகுதியில் சிக்ரசம்பாளையம் கிளை வாய்க்கால்களில் பாசனத்திற்கு தண்ணீர் விடுதல்.

வினா எண் 4435— திரு. நா.சா.பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பி.ஏ.பி. பாசன விரிவாக்கப் பகுதியில் காங்கேயம் பகுதியில் மருதுரையான்வலசு ராமபட்டிணம் கிளை வாய்க்கால்களில் பாசனத்திற்கு தண்ணீர் விட்டுவிட்டு, சிவன்மலை சிக்ரசம்பாளையம் கிளை வாய்க்கால்களில் தண்ணீர் பாசனத்திற்கு விடப்படாததின் காரணம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

சிவன் மலை, சிக்ரசம்பாளையம் ஆகிய இரு கிளை வாய்க்கால்களுக்கும் சேர்த்து தண்ணீர் செல்லும் அளவிற்கு பரம்பிக்குளம், பிரதானக் கால்வாயின் வடிவமைப்பு இல்லாத

ததாலும், அணைகளின் நீர்மட்டம் குறைந்து வந்ததாலும் இக்கிளை வாய்க்கால்களில் பாசனப் பரப்பிற்கு வழக்கமாக விடப்படும் மண்டலப் பாசனத்துடன் சேர்த்து தண்ணீர் வழங்க இயலவில்லை.

24—

துலுக்கர்பட்டியில் புதிதாக குளம் அமைத்தல்

வினா எண். 6647—திரு. டி. வேலையா; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆனைகுளம் கிராமம், துலுக்கர்பட்டியில் புதிதாக குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆனைக்குளம், கிராமம் துலுக்கர்பட்டியில் புதிதாக குளம் அமைக்க ரூபாய் 23.55 இலட்சங்களுக்கு மதிப்பீடு ஆய்வில் உள்ளது.

25—

மாவடுகுறிச்சி கீழக்காட்டில் தெருவிளக்கு அமைத்தல்

வினா எண். 7146—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் மாவடு குறிச்சி கீழக்காட்டில் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

கீழக்காடு பகுதியை உள்ளிட்ட மாவடுகுறிச்சி ஊராட்சியில் 31 தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தெரு விலக்குக்கான விஸ்தரிப்புப் பணிகள் சிறம்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1992–93–ல் மேற்கொள்ளப்படும்.

26—

பேராவூரணி — ஆவணம் நெடுஞ்சாலையை பராமரித்தல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

வினா எண். 7394— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியிலிருந்து ஆவணம் செல்லும் நெடுஞ்சாலையை பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி—ஆவணம் சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகளை 1992-93 ஆம் ஆண்டு சிறப்புப் பராமரிப்புத் நிதித் திட்டத்தில் புதுப்பிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிப்பு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

27—

பேராவூரணி—துறவிக்காடு நெடுஞ்சாலையைப் பராமரித்தல்

வினா எண் 7396—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு வழியாக துறவிக்காடு வரை செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு வழியாக துறவிக்காடு வரை செல்லும் சாலையானது ஒட்டங்காடு—ஆறிக்குடி மற்றும் திருச்சிற்றம்பலம்—ஆண்டிக்காடு ஆகிய இரண்டு இதர மாவட்டச் சாலைகளைக் கொண்டதாகும். மேற்கண்ட இரண்டு சாலைகளில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டுள்ளன. எனவே ஆண்டு பராமரிப்பு நிதி நிலைக்கேற்ற வகையில் பழுதடைந்த பகுதிகளைச் சீர் செய்ய முயற்சி செய்யப்படும்.

28—

அக்னி ஆற்றில் சிறிய மதில் சுவரும் கண்டிக்குளம் கழிவுநீரை பெரிய ஏரியில் விட சிறிய மதகும் கட்டுதல்.

வினா எண் 7537—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பழைய சிகரம் பெரிய ஏரியின் ஓரத்தில் வரும் அக்னி ஆற்றில் சிறிய மதில் சுவரும், கண்டிக் குளம் கழிவு நீரை பெரிய ஏரியில் விட சிறிய மதகும் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை. பழைய நகரம் ஏரியின் அருகே வரும் ஆறு (அக்னி ஆறு அல்ல) பூனைக்கட்டி ஆறு ஆகும். அந்த ஏரியில் தற்போது விரைவுப் படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின் கீழ் சறுக்கை மதகுகள் கட்டப்பட்டு கரைகள் பலப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

29—

குமாரப்பேட்டை—மடவாம்பள்ளம் கிராமத்திற்கு மின் விளக்கு அமைத்தல்.

வினா எண் 7576—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி—குமாரப்பேட்டை மடவாம் பள்ளம் கிராமத்திற்கு மின் விளக்குப் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) குமாரப்பேட்டை மடவாம்பள்ளம் கிராமத்தில் 15 தெரு விளக்குகள் அமைக்கும் பணி அரசின் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஏற்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்விளக்குகள் யாவும் இந்த நிதி ஆண்டுக்குள் (1992-93) அமைக்க ஆவன செய்யப்படும்.

30—

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் காலியாக உள்ள பணி யிடங்களை நிரப்பும் நடவடிக்கை

வினா எண் 8012—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் நிறைய பணியிடங்கள் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஆம் எனில், அவற்றை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் துவக்க நிலைப்பதவிகள் மட்டுமே காலியாக உள்ளன குறிப்பாக 108 களப்பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக வுள்ளன. இந்த காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு மின்சார வாரியம் தக்க நடவடிக்கையினைப் பின்வரும் காலங் களில் ஆராய்ந்து முடிவெடுக்கும்.

31—

காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர் களுக்கு சிறப்புக் காப்புத் திட்டம் ஏற்படுத்துதல்.

வினா எண் 8036—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா—

காடாம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ''Special Insurance Scheme'' (சிறப்பு காப்புத் திட்டம்) ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன். பொதுப்பணித்துறை அமைச்சர் :

சமூகப் பாதுகாப்பின் அடிப்படையில் பணியில் இருக்கும் போது மின் வாரியத்தின் தொழிலாளி இறக்க நேரிட்டால். தொழி லாளர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமும். குடும்பப் பாதுகாப்புத் துணைத் திட்டத்தின் மூலமும் ரூ, 40.000 தற் பொழுது வழங்கப்பட்டு வருகிறது, இதற்கு மேலும் ஈடு செய்யும் சட்டத்தில் உள்ளடங்கிய தொழிலாளி பணியில் இறக் கும் பொழுது விபத்தில் இறக்க நேரிட்டால் ஈடு செய்யும் சட்டத்தின் மூலம் வாரியம் அவருக்கு இழப்பீட்டுத் தொகை அளிக்கிறது, எனவே காடம்பாறை நீரேற்று மின் திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ''Special Insurance Scheme'' (சிறப்பு காப்புத் திட்டம்) ஏற்படுத்தும் செயற்குறிப்புக்கு அவசியமில்லை,

32—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் நகரில் பயணிகள் விடுதி கட்டும் திட்டம்,

வினா எண் 8602—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். ஆலங்குளம் நகரில் பயணிகள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்ட மன்ற வினாவில் குறிப்பிடப்படும் ஆலங்குளம் என்கின்ற ஊர் தூத்துக்குடி—திருநெல்வேலி. செங்கோட்டை—கொல்லம் சாலை என்னும் மாநில நெடுஞ்சாலையில் கி.மீ.82·0-ல் அமைந்துள்ளது திருநெல்வேலி ஆலங்குளத்திலிருந்து சுமார் 30 கி மீ தொலைவிலும் மற்றும் தென்காசி 23 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. திருநெல்வேலியில் உள்ள பயணியர் விடுதி (Circuit House) மாவட்ட ஆட்சியாளர் பொறுப்பில் உள்ளது. மேலும். தென்காசி மற்றும் குற்றாலத்தில் பல துறைகளுக்காக பயணியர் விடுதி மற்றும் ஆய்வு மாளிகைகள் உள்ளன.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறைக்கான ஆய்வு மாளிகைகள் பாளையங்கோட்டை, தென்காசி மற்றும் குற்றாலம், வாசுதேவ நல்லூர், சங்கரன் கோவிலிலும் இயங்கி வருகின்றன. எனவே, ஆலங்குளத்தில் ஆய்வு மாளிகை கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

33—

ரெகுநாதபுரம், மண்ணங்காடு கிராமங்களில் உள்ள செல்லம் பள்ளம், ஆலடிஓடை, மற்றும் 6 ஏரிகளை அரசு ஏற்றுக் கொள்ளும் திட்டம்.

வினா எண். 9774—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி மதுக்கூர் ஒன்றியம் ரெகுநாதபுரம் மண்ணங்காடு கிராமங்களில் உள்ள செல்லம்பள்ளம் ஆலடி

1993 ஏப்ரல் 23]

ஓடை, புளச்சிஓடை மற்றும் 6 ஏரிகளை பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மேற்கண்ட சட்டமன்ற வினாவில் கண்டுள்ள செல்லம் பள்ளம் ஆலடிஓடை, புளிச்சிஓடை மற்றும் 6 ஏரிகள் பஞ்சாயத்து ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. அவற்றை பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் எடுத்துக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

34—

திருவட்டார் தொகுதியில் வீயன்னூரில் கட்டப்பட உள்ள துணை மின் நிலையத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யும் பணி விவரம்

வினா எண் 10899—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியில் வீயன்னூரில் கட்டப்பட உள்ள துணைமின் நிலையத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிவடைந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துணை மின் நிலைய வேலை துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இத்துணை மின்நிலையத்திற்குத் தேவையான 1.655 எக்டேர் பரப்பளவு கொண்ட நிலம் கல்குளம் தாலுக்காவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. உரிய நிலத்தை கையகப்படுத்திய பின் மின் நிலையப் பணிகள் துவக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

35—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன கால்வாய்களில் தூர் வாரி விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை.

வினா எண் 10900—திரு. இரா. அப்புநடேசன்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன கால்வாய்களில் தண்ணீர் அடைத்தவுடன் தூர் வாரி விவசாயத்திற்கு வசதி செய்து தர அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன கால்வாய்களுக்கு வருடாந்திர பராமரிப்புக்கு அரசின் ஒதுக்கீட்டு நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன கால்வாய்களில் தூர் வாருதல், எடுப்பது சம்பந்தமாக முன்னுரிமை பெறும் பாசன கால்வாய்களை வரிசைக் கிரமமாக சரிபார்த்து, தூர்வாரி பழுது பார்த்து வேலையை கவனித்து வருகிறார். அதன்படி 1991-92-ல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, கோதையார் திட்டம் மற்றும் நெய்யார் திட்டம் என இரண்டு திட்டங்களுக்கு முறையே 29.18 லட்சமும், 4.84 லட்சமும் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்களுக்கு வருடாந்திர பராமரிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் 100.23 லட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசன கால்வாய்களில் தூர் வாருதல் வேலை, ஒதுக்கப்பட்ட நிதியினைப் பொறுத்து பழுது பார்த்தல் பணிகள் நடைபெற்று வருகிறது.

36—

குலசேகரம் மாமூட்டில் இருந்து ஈஞ்சங்கோடு வழி பொன்மனை செல்லும் சாலையினை சீரமைத்தல்.

வினா எண் 10945—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி குலசேகரம் மாமூட்டில் இருந்து ஈஞ்சங்கோடு வழி பொன்மனை செல்லும் சாலையினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்.:

1991-92 ஆம் ஆண்டு மோசமான சாலைப் பகுதியினை சீரமைக்கும் சிறப்புப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் தார்தளம் புதுப்பிக்க மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி சாலைகள் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

37—

திருவட்டார் தொகுதியில் முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் அணைக்கட்டி விவசாயத்திற்கு பயன்படுத்தும் திட்டம்

வினா எண் 1182— திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதியில் முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் அணைக்கட்டி விவசாயத்திற்கு பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் மதிப்பீடு என்ன?

(இ) எப்போது பணி தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம் முல்லையாற்றின் ஒரு பகுதி தண்ணீரை கண்டன் சிறைக்கால்வாயில் திருப்பிவிட்டு கண்டன் சிறைக்குளத்தில் அதிக நீர் பிடிப்பு ஏற்படுத்தி அருமனை வெள்ளக்கோடு பகுதிக்கும் பாசனத்திற்கு பயன்படுத்த ஒரு திட்டறிக்கை ஆய்வில் உள்ளது.

(ஆ) அதன் மதிப்பீடு ரூ. 66.00 இலட்சமாகும்.

(இ) இத்திட்டத்தின் முதனிலை அறிக்கை அரசுக்கு கிடைத்ததும் அரசு அது குறித்து பரிசீலிக்கும்.

38—

குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்யும் திட்டம்.

வினா எண் 12308— திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

[1993 ஏப்ரல் 23

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத்தேவன் ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்.:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஆதி திராவிடர் காலனியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்யக்கோரி மின்சார வாரியத்திடம் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

39—

போகலூர் ஒன்றியத்தில் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் ஊரக மண் சாலைகளின் விபரம்.

வினா எண் 300— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில், போகலூர் ஒன்றியத்தில் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் ஊரக மண் சாலைகளே இல்லாத கிராமங்கள் எத்தனை ?

(ஆ) எந்த நிதியாண்டில் அச்சாலைகள் அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் ஊரக மண்சாலைகளே இல்லாத கிராமங்கள் கீழ்க்கண்ட நான்காகும் :—

கிராமத்தின் பெயர்.	மக்கள் தொகை.
1. இனிசேரி	122
2. வேப்பங்குளம்	184
3. முக்காணி	167
4. செங்காக்கை	45

1993 ஏப்ரல் 23]

இனிசேரி, முக்காணி மற்றும் செங்காக்கை கிராமங்களுக்கு இணைப்பு சாலை அமைக்க தனியார் நிலங்களை கையகப் படுத்த வேண்டும். மேலும் மேற்கண்ட கிராமங்களுக்கும் வேப்பங்குளம் கிராமத்திற்கும் ஏற்கெனவே உள்ள மண் சாலை களில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. சாலை அமைக்கத் தேவை யான தனியார் நிலங்களை கையகப்படுத்தவும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலங்கள் கையகப்படுத்தப்பட்டபின் சாலைகளை மேம்பாடு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

40.—

அதிராம்பட்டினத்தை இரு ஒன்றியங்களாகப் பிரிக்க நடவடிக்கை

வினா எண் 4814பி—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா வுக்கு விடையளிப்பாரா—

அதிராம்பட்டினத்தை மக்கட்தொகை அடிப்படையில் இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அதிராம்பட்டினம் என்பது தஞ்சை மாவட்டம், பட்டுக் கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒரு பேரூராட்சி யாகும். எனவே இதனை இரு ஒன்றியங்களாகப் பிரிக்கும் கேள்விக்கு இடமில்லை.

41.—

பாறையூர் வழியாக தம்ம நாயக்கனூர் தோட்டக் குடியாம் பாளையம் வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 605—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தோப்பூர் பிரிவு முதல் பாறையூர் வழியாக தம்மநாயக்கனூர் தோட்டக் குடியாம்பாளையம் வரை உள்ள சாலையினை செம்மை செய்து தார்ச்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் தோப்பூர் பாறையூர் வழியாக தம்மநாயக்கனூர் தோட்டக் குடியாம்பாளையம் வரையுள்ள 4 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக மாற்றம் செய்யும் செயற்குறிப்பு தற்போது ஏது மில்லை.

42—

வெள்ளித் திருப்பூர் ஊராட்சியை சேர்ந்த குறும் பாளையம், உமாரெட்டியூர், ரெட்டிப்பாளையம் பள்ளிகளுக்கு கட்டிட வசதி செய்தல்.

வினா எண். 837—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றி யம். வெள்ளித்திருப்பூர் ஊராட்சிக்கு சேர்ந்த குறும்பாளை யம் உயர் துவக்கப்பள்ளிக்கும், உமாரெட்டியூர் உயர்துவக் கப்பள்ளிக்கும், ரெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கும் கட்டிட வசதி இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பள்ளிக் கட்டிடம் கட்ட படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பள்ளி களுக்கும் ஏற்கனவே கட்டிடங்கள் உள்ளன. ஆனால் அவைகள் போதாத காரணத்தால் கூடுதல் கட்டிட வசதிக் காக அம்மாப்பேட்டை வட்டாரத்தில் 1991–92 ஆம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நெரிஞ்சிப்பேட்டை பேரூராட்சி உமாரெட்டியூர் மற்றும் வெள்ளித் திருப்பூர் ஊராட்சி ரெட்டிபாளையத்தில் உள்ள பள்ளிகளுக்கு தலா ரூ. 1.38 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டு பள்ளிக்கட்டிடம் வேலைகள்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நடைபெற்று வருகின்றன. வெள்ளித் திருப்பூர் ஊராட்சிக்குட்பட்ட குறும்பாளையத்திலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டதில் ஒதுக்கீடு இன்மையால் இப் பணிக்கு அங்கீகாரம் கிடைக்க்வில்லை. அடுத்து எடுக்கப்படும் வேலைகளின்போது இக் கட்டிடம் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

43—

செங்கமலத்திலுள்ள ஒன்றியச் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 2709—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமலத்திலுள்ள ஒன்றியச் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் செங்கமலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்ற தற்போது செயற்குறிப்பேதுமில்லை.

44—

புளியம்பட்டி வழியாக சின்ன மாத்தூர் செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 4849—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் ராஜாங்குளம் ஆதிதிராவிடர் காலனியில் இருந்து புளியம்பட்டி வழியாக சின்ன மாத்தூர் வழியாக பேருந்து சென்று வரும் சாலையினை தார்ச் சாலையாக மாற்ற அரசு 1991–92-ல் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, ராஜாங்குளம் ஆதி திராவிடர் காலனியில் இருந்து புளியம்பட்டி வழியாக சின்னமாத்தூர் வழியாக செல்லும் சாலையினை தார்ச் சாலையாக மாற்றுவது பற்றிய செயற் குறிப்பு தற்போது ஏதுமில்லை.

45—

பள்ளத்தூர் மெயின் ரோட்டில் இருந்து ஊருக்குள் செல்லும் கப்பிச் சாலையை மராமத்து செய்தல்.

வினா எண் 6714—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பள்ளத்தூர் மெயின் ரோட்டில் இருந்து ஊருக்குள் செல்லும் கப்பிச் சாலை மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மெயின் ரோட்டில் இருந்து ஊருக்குள் செல்லும் கப்பிச் சாலை மராமத்து பணியை மேற்கொள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற் குறிப்பேதும் இல்லை.

46—

பாப்பாங்கண்ணி ஆற்றங்கரை குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி செய்து தருதல்.

வினா எண் 6794—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெண்டாம்புலிக்காடு மேல்பகுதியில் பாப்பாங்கண்ணி ஆற்றங்கரையிலுள்ள குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 23)

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ரெண்டாம்புலிக்காடு மேல்பகுதியில் பாப்பாங் கண்ணி ஆற்றங்கரையிலுள்ள குடியிருப்பு பகுதிக்கு சாலைப் பணி மேற்கொள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற் குறிப்பு ஏதும் இல்லை.

47—

பாரகன் தைய்காலில் சுலைமான் வீதி ரோடு அமைக்க அரசு நடவடிக்கை.

வினா எண் 6831—செல்வி கோ, மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள பாரகன் தைய்காலில் சுலைமான் வீதி ரோடு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பாரகன் தைய்காலில் சுலைமான் வீதி அமைக்க செயற் குறிப்பேதும், இல்லை.

48—

இராமநாதன் குப்பம் மெயின் ரோடு வழியாக ஊருக்குச் செல்ல சாலை அமைத்தல்,

வினா எண் 6832—செல்வி கோ, மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள இராமநாதன் குப்பம் மெயின்ரோடு வழியாக ஊருக்குச் செல்ல ரோடு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம். இராமநாதன் குப்பம் மெயின் ரோடு வழியாக ஊருக்கு செல்ல சாலை அமைக்கும் பணி பற்றிய செயற் குறிப்பு ஏதுமில்லை.

49—

மணல்மேடு. புதுச்சத்திரம் ஆகிய ஊர்களுக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 6839—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மணல்மேடு புதுச்சத்திரம் ஆகிய ஊர்களுக்கு மயானப்பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் மணல்மேடு, புதுச்சத்திரம் ஆகிய ஊர்களுக்கு மயானப்பாதை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

50—

பரங்கிப்பேட்டை ஒன்றியம் எம்.ஜி.ஆர் நகருக்கு சாலை வசதி அமைத்தல்,

வினா எண் 6841—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள எம், ஜி, ஆர், நகரில் ரோடு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் ஏனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எம். ஜி. ஆர். நகரில் சாலை வசதி செய்து தருவது பற்றி செயற்குறிப்பு ஏதுமில்லை,

51—

வெள்ளாளங்காட்டிற்கு மயானச் சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைத்துக் கொடுத்தல்,

வினா எண் 7085—திரு, ஆர், சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வெள்ளாளங்காட்டிற்கு மயான சாலையை அமைத்துக் கொடுத்து தகரக் கொட்டகையும் போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ருத்திரசிந்தாமணி ஊராட்சியிலுள்ள வெள்ளாளங்காடு கிராமத்திற்கான மயான சாலை 0.4 கி.மீ. தூரமுடையது, இச்சாலை மண் சாலையாக உள்ளது, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக வெள்ளாளங்காட்டிற்கு மயான சாலையையும் தகரக் கொட்டகையும் அமைக்க செயற்குறிப்பேதுமில்லை,

52—

புதுப்பட்டிணம் சி, எம், பி, வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைத்தல்,

வினா எண் 7116—திரு, ஆர், சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், துறவிக் காட்டில் சுடுகாட்டிற்குச் செல்லும் வழியில் புதுப்பட்டிணம் சி,எம்,பி

[1993 ஏப்ரல் 23

வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், துறவிக்காடு சுடுகாட்டிற்கு செல்லும் புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்கால் அகலம் 5.00 மீட்டர் ஆகும். பாலம் கட்டுவதற்கு ரூ. 1.50 இலட்சம் செலவாகும். போதிய நிதி வசதி இல்லாததால் இப்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பேதும் இல்லை.

53—

பழைய பேராவூரணி மேற்குத் தெருச் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7147—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பழைய பேராவூரணி மேற்கு தெருவிற்கு செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பழைய பேராவூரணி மேற்கு தெருவிற்கு செல்லும் சாலையை பேராவூரணி பேரூராட்சி பொது நிதியில் 1991-92-ல் கருங்கல் ஜல்லி அடிக்கப்பட்டு சாலை போடப்பட்டுள்ளது.

54—

காலகம் ஊராட்சி மிதியக்குடிக்காட்டிற்கு வரும் சாலையை பராமரித்து தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7174—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி மிதியக்குடிக்காட்டிற்கு வரும் சாலையை பராமரித்து

தார் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சிக்குட்பட்ட மிதியக்குடிக்காட்டிற்கு வரும் சாலையின் நீளம் 2.2 கி. மீ. ஆகும். அதனை தார்ச்சாலையாக மாற்றிட சுமார் ரூ. 2.50 இலட்சம் வரை செலவாகும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் இச்சாலையினை தார்ச்சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

55—

திருப்பூரணிக் காட்டிலிருந்து காளியம்மன் கோவில் வரை செல்லும் மண் சாலையை கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7228—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் திருப்பூரணிக் காட்டில் இருந்து காளியம்மன் கோயில் வரை செல்லும் மண் சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், திருப்பூரணிக் காட்டில் இருந்து காளியம்மன் கோவில் வரை செல்லும் மண் சாலையின் நீளம் 0.80 கி. மீ. ஆகும். இச்சாலையில் பஸ் போக்குவரத்து இல்லாததால் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56—

கள்ளம்பட்டி செல்லும் ஆற்றுக்கரைச் சாலையைச் செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7445—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செருப்பாலக்காட்டிலிருந்து கள்ளம்பட்டி செல்லும் ஆற்றுக்கரை சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், செருப்பாலக்காட்டிலிருந்து கள்ளம்பட்டி செல்லும் ஆற்றுக்கரைச் சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக்க ஊராட்சி ஒன்றியத்தில் நிதிப்பற்றாக்குறை காரணமாக செயற்குறிப்பேதும் இல்லை.

57—

வசப்புத்தூர் ஊராட்சி, சித்தலாபாடி காலனிக்கு மயானப்பாதை அமைத்தல்.

வினா எண் 7566—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வசப்புத்தூர் ஊராட்சியிலுள்ள சித்தலாபாடி காலனிக்கு மயானப்பாதை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) ராககிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சித்தலாபாடி காலனிக்கு மயானப்பாதை மேம்பாடு

செய்யும் வேலைக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

58—

வசப்புத்தூர் ஊராட்சிக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 7591— செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வசப்புத்தூர் ஊராட்சிக்கு சுடுகாட்டிற்குச் செல்ல பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வசப்புத்தூர் ஊராட்சி மயான பாதை அமைக்க 1992-93-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

59—

திருவாசலடி கிராமத் தெருவிற்கு சாலை வசதி செய்து கொடுத்தல்.

வினா எண் 7593—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் திருவாசலடி கிராமத்திற்கு தெருவிற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்;

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் திருவாசலடி கிராமத்திற்கு சாலை வசதி 1992-93-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணி நடைபெற்று வருகிறது.

11993 ஏப்ரல் 23

60—

சிலம்பிமங்கலத்திற்கு சிலம்பியம்மன் பாதை மற்றும் மேட்டுத் தெரு பாதை அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 7637—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் சிலம்பிமங்கலத்திற்கு சிலம்பியம்மன் பாதை, மற்றும் மேட்டுத் தெரு பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரங்கிப்பேட்டை ஒன்றியம், சிலம்பிமங்கலம் கிராமம் சிலம்பியம்மன் பாதை மற்றும் மேட்டுத் தெரு பாதை அமைத்துத் தருவதற்கு நிதிப் பற்றாக்குறையின் காரணமாக செயற்குறிப்பேதும் இல்லை.

61—

சிலம்பிமங்கலத்திற்கு மயானப் பாதை அமைத்துத் தருதல்.

வினா எண் 7640—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் சிலம்பிமங்கலத்தில் மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம். பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சிலம்பிமங்கலத்தில் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

1993 ஏப்ரல்

62—

சம்பந்தம் காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தருதல்.

வினா எண் 7643—செல்வி கோ.மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் சம்பந்தம் காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம், சம்பந்தம் காலனிக்கு மயானப் பாதை அமைக்க நிதிப் பற்றாக்குறையின் காரணமாக செயற் குறிப்பு ஏதுமில்லை.

63—

சம்மந்தத்தில் மஞ்சகுழி-பெரியகுமட்டி இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 7646—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சம்மந்தத்தில் மஞ்ச குழி-பெரியகுமட்டி இணைப்புச் சாலைக்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம் பரங் கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் சம்பந்தம் கிராமம் மஞ்சகுழி-பெரியகுமட்டி இணைப்புச் சாலைப் டணி 1991-92 ஆம்ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 9.300 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

[1993 ஏப்ரல் 23

64—

மஞ்சகுழி கிராமத்தை பு. ஆதிவராகநல்லூர் கிராமத்துடன் இணைக்கும் இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 7781—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மஞ்சக்குழி கிராமத்திற்கும், பு. ஆதிவராகநல்லூர் கிராமத்தை இணைக்கும் இணைப்புச் சாலை போட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியம் மஞ்சக்குழி கிராமத்தை பு. ஆதிவராகநல்லூர் கிராமத்துடன் இணைக்கும் இணைப்பு சாலையை நிதிப் பற்றாக்குறையின் காரணமாக மேம்படுத்து வது பற்றிய செயற்குறிப்பு ஏதுமில்லை.

65—

வள்ளியாற்றின் குறுக்கே பழுதுபட்ட பாலத்தை சீர்செய்து அப்பாலத்திற்கு வீரன் வேலுதம்பியின் பெயர் சூட்டல்.

வினா எண் 9000—திரு. ஆ. பாலையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா —

குளச்சல் தொகுதி வீரன் வேலுத்தம்பி பிறந்த தலக் குளத்தில் வள்ளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதுபட்ட பாலத்தை கட்டி முடித்து அப்பாலத்துக்கு வீரன் வேலுத்தம்பி பெயரை சூட்ட அரசு முன்வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டம் வீரன் வேலுத்தம்பி பிறந்த தலக்குளத்தில் வள்ளியாற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுது பட்ட பாலத்தை சீர்செய்ய 1992—93 ஆம்ஆண்டு தல சாலை மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 15,000 செலவில் நிதி நிலை யினைப் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பாலம் சீர் செய்யப்பட்டபின்பு பெயர் வைப்பது பற்றி தீர் மானிக்கப்படும்.

66—

அண்டக்குளம்—பெருங்களூர் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 10053— திரு. சி. சுவாமிநாதன் : மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

குன்றாண்டார் கோவில் ஒன்றியம், அண்டக்குளம்-பெருங்களூர் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், பெருங்களூர்— அண்டக் குளம் சாலையின் மொத்த நீளம் 8.60 கி.மீ. ஆகும். இதில் 0/0-4/4 வரை புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தையும் 6/0-8/6 வரை குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தையும் சேர்ந்ததாகும். இதில் 1991—92 ஆம் ஆண்டு சிறப்புத் தன் னிறைவுத் திட்டத்தில் ஒரு பகுதி தார்ச் சாலையாக மாற் றப்பட்டதுபோக மீதியுள்ள 4/4-6/ வரை தார்ச் சாலை போட 1992—93 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தின் கீழ் பணி நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

67—

கபிலர்மலைத் தொகுதியில் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்.

வினா எண் 11066— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதியில் பல கிராமங்களில் தொகுப்பு வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அதை சீரமைக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) கபிலர்மலை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மோகனூர் பரமத்தி மற்றும் கபிலர்மலை வட்டாரங்களில் 1983 முதல் 1990 வரை கட்டப்பட்ட 70 தொகுப்பு வீடுகள் பழுது பார்க்க வேண்டியுள்ளது.

(ஆ) இந்த விடுகளைக் கட்டிக் கொடுக்க மட்டுமே அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பழுதுகளை வீட்டின் உரிமையாளரே சரி செய்துக் கொள்ள வேண்டும்.

68—

நடுவிக்கோட்டைச் சாலையில் கல்வெர்ட்டுகள் அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 11450—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டை கொண்டிகுளம் சாலையில் 1992–93-ல் கல்வெர்ட்டு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் நடுவிக்கோட்டை சாலையில் ஏற்கனவே தேவையான இடங்களில் கல்வெர்ட்டுகள் கட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சாலையில் புதியதாக கல்வெர்ட் அமைப்பதற்கான செயற்குறிப்பு இல்லை.

69—

பலமுதி-கீழக்காடு சாலையில் கல்வெர்ட்டுகள் அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 11451—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி—பட்டுக்கோட்டை ஒன்றியம், பலமுதி கீழக்காடு சாலையில் 1992–93-ல் கல்வெர்ட்டு அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லையாதலால் பலமுதி—கீழக்காடு சாலையில் 1992–93-ல் கல்வெர்ட் கட்டுவதற்கான செயற்குறிப்பு இல்லை.

70—

நாடாகாடு வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா எண் 12049—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நாடாகாடு வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1992–93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இதுவரை வீடு கட்டிக்கொடுக்காத கிராமத்திற்கு முன்னுரிமை வழங்க இருப்பதால், ஏற்கனவே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள நாடாகாடு கிராமத்திற்கு 1992–93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக்கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

71—

இடையாத்தி (மே) கோனார் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வானொலிபெட்டி அமைத்துத் தருதல்.

வினா எண் 12634—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (மே) கோனார் தெருவில் தொலைக்காட்சிப்பெட்டியும் வானொலிப் பெட்டியும் அமைத்துத்தர 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சி துறை அமைச்சர் :

ஒரு தொலைக்காட்சிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு தேவையான வானொலிப்பெட்டியை ஊராட்சியின் நிதியிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம். எனவே அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

72—

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை இரு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டுதல்.

வினா எண் 12703—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்குவிடையளிப்பாரா —

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்ட அரசிடம்ரண்டு மாதத்திற்கு ஒரு முறை கட்டாயமாக கூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு அழகு திரு. திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டப்பிரிவு 6 (1)-ன் படி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மூன்று மாத இடைவெளிக்கு மிகாமல் தேவைக்கேற்ப அடிக்கடி கூட்டப்பட வேண்டும் என்ற விதிமுறை சட்டத்தில் முன்பே உள்ளது. மேலும் 16—3—90 நாளிட்ட அரசு ஊரக வளர்ச்சித் துறையின் நேர்முகக் கடிதம் எண் 16688/தி 1/90-1-ன் மூலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கடிதத்திற்கு கவனத்தை ஈர்த்து அதில் குறிப்பிட்டவாறு குறைந்தபட்சம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று 10—6—1992 நாளிட்ட 7976/தி, 1/92 எண்ணிட்ட கடிதத்தில் மீண்டும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

73—

பழஞ்சூர் கிராமத்திற்கு பொதுத் தொலைபேசி அமைத்திட மைய அரசிற்கு பரிந்துரை செய்தல்.

வினா எண் 14666—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் கிராமத்தில் பொதுத் தொலைபேசி அமைத்திட மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய மாநில அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மைய அரசு, கொள்கை அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதிகள் அமைத்துத்தர முடிவெடுத்துள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதிகள் அமைக்க தொலைபேசித் துறையானது ஏற்கனவே உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக இவ்வரசும் இதற்குத் தேவையான ஆணைகள் பிறப்பித்துள்ளது.

[1993 ஏப்ரல் 23

74—

கூட்டுறவு நியாய விலைக் கடைகள் கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இயங்கச் செய்தல்.

வினா எண் 5297—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வந்த 14 கூட்டுறவு நியாய விலைக் கடைகளை அதிலிருந்து பிரித்து சிந்தாமணி கூட்டுறவு சொசைட்டி போன்ற இதர கூட்டுறவு சொசைட்டிகளுடன் இணைக்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில் முன்புபோல் அந்த கூட்டுறவு நியாய விலைக் கடைகளை கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்க செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 28—12—1989 அன்று 19 கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்த 102 நியாய விலைக் கடைகளை அச்சங்கங்களிலிருந்து மாற்றி கோயம் புத்தூர் கூட்டுறவு மொத்த பண்டகசாலையால் நடத்த கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டது. இதில் கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவு பண்டகசாலை நடத்தி வந்த 14 நியாய விலைக் கடைகளும் அடங்கும். மேற்படி கூட்டுறவுச் சங்கங்களில் நடந்த முறைகேடுகள் நிமித்தமும், மேற்படி சங்கங்களுக்கு போதிய நிதி வசதி இல்லாமையாலும்தான் இப்படி மாற்றம் செய்யப்பட்டது. உடனே மேற்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் மீது கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவு பண்டகசாலை சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபேராணை விண்ணப்பம் 131–90 தாக்கல் செய்தது. மேற்படி கூட்டுறவுச் சங்கங்களை மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு போதிய அதிகாரம் இருந்தும் மேற்படி சங்கங்களுக்கு 30 நாட்கள் கால அவகாசம் கொடுப்பதற்கு பதில் 15 நாட்கள் அவகாசமே கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் கொடுக்கப்பட்டுள்ளதை காரணம் காட்டி, கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவு பண்டகசாலை டத்தி வந்த 14 நியாயவிலை கடைகளையும் மாற்றி ஆணை

1993 ஏப்ரல் 23]

யிட்ட கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணை செல்லாது என தீர்ப்பளித்தது. ஆனாலும் உரிய காலத்தில் அவகாசம் கொடுத்து மாவட்ட ஆட்சியர் மாற்றலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கேற்ப மேற்படி 19 கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்த 102 நியாய விலைக் கடைகளையும் மேற்படி சங்கங்களுக்கே மாவட்ட ஆட்சித் தலைவரால் மீண்டும் மாற்றி 20—2—1990 அன்று ஆணையிடப்பட்டது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் மேற்படி 19 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவைகளால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளை மாற்றம் செய்வதற்கு காரணம் கேட்டு அறிவிப்பு (Show Cause Notice) வழங்கினார். இதில் சில சங்கங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் கோவை தாலுகா ஆதி திராவிடர் கூட்டுறவு பண்டக சாலை மட்டும் மாவட்ட ஆட்சியரின் காரணம் கேட்கும் குறிப்பு மீது மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில் தடையாணை பெற்றுள்ளது. இவ்வழக்கு கோவை மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, கோவை மாவட்ட ஆதி திராவிடர் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் 14 நியாயவிலைக் கடைகளும் அச்சங்கத்தாலேயே தற்பொழுது தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

75—

குலசேகரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உள்ள இலங்கை அகதிகளை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

வினா எண் 8420—திரு. இரா. அப்பு நடேசன் மாண்புமிகு நலம் பிற்பட்டோர் மற்றும மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இலங்கை அகதிகளை குடியமர்த்தி இருப்பதால் விவசாயிகள் விவசாய பொருட்களை விற்பனை செய்ய போதிய வசதி இல்லாமல் அவதிப்படுவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அகதிகளை வேறு இடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரு பகுதியில் இலங்கை

அகதிகள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டும், மறுபகுதியில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்யவும் வசதி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய போதிய வசதி இல்லாமல் அவதிப்படுகின்றனர் என்கிற கருத்துக்கு இடமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

76—

கர்நாடகத்திலிருந்து திரும்பி வந்து அவினாசி தொகுதியில் அவரவர் கிராமங்களில் தங்குபவர்களுக்கு குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்குதல்.

வினா எண் 8522—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கர்நாடகத்திலிருந்து திரும்பி வந்து அவினாசி தொகுதியில் அவரவர் கிராமங்களில் தங்குபவர்களுக்கு குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

கர்நாடகத்திலிருந்து திரும்பி வந்து அவினாசி வட்டத்திற்கு வந்த குடும்பங்கள் 618. அதில் 26 குடும்பங்கள் இங்கு நிரந்தரமாகத் தங்கியுள்ளன. 592 குடும்பங்கள் கர்நாடகத்துக்கு மீண்டும் திரும்பி சென்று விட்டனர். இங்கு நிரந்தரமாகத் தங்கியுள்ள 26 குடும்பங்களுக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டுவிட்டது.

77—

பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கான தொகை வழங்குவதில் தாமதத்தை நிவர்த்தி செய்தல்.

வினா எண் 8681—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 23]

(அ) பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கான தொகை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) இந்த தொகை வழங்குவது தொடர்பாக இணையம் மேற்கொண்டுள்ள நெறிமுறைகள் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விஸ்வநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ ய்5-ல் இருந்து ரூபாய் 6 ஆக உயர்த்தப்படுவதற்கு முன்பாக தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிதி நிலைமை நெருக்கடியாக இருந்தது. இதன் காரணமாக நான்கு முதல் எட்டு வாரங்கள் வரை, மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியார்கள் சங்கங்களுக்கு பால் பணம் பட்டுவாடா செய்வதில் சுணக்கம் ஏற்பட்டது.

(ஆ) பொதுவாக இணையத்தின் பால் பண்ணைகளுக்கு பால் வழங்கும் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு, இணையம் பத்து நாட்களுக்கு ஒருமுறை பால் பணம் வழங்குகிறது.

78—

தொழிற்சாலை சட்டமீறல்கள் பேரில் அரசு நடவடிக்கை.

வினா எண் 10645. திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் எந்தெந்த தொழிற்சாலைகளில் தொழிற்சாலை சட்டமீறல் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுல் படுத்தாமை பற்றிய புகார்கள் அரசுக்கு வந்தன?

(ஆ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) 1990-ம் ஆண்டில் 28 தொழிற்சாலைகள் பேரிலும் 1991-ம் ஆண்டில் 26 தொழிற்சாலைகள் பேரிலும், 1992-ம்

[1993 ஏப்ரல் 23

ஆண்டில் 18 தொழிற்சாலைகள் பேரிலும் புகார்கள் வந்துள்ளன. இத் தொழிற்சாலைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. எல். டி. இந்திரா ஆலை, குரோம்பேட்டை.

2. நரேன் அப்பார்ஸ் (பிரைவேட்) லிமிடெட், தாம்பரம்.

3. சிவானந்தா மில்ஸ் லிமிடெட். கோயம்புத்தூர்.

4. திக்கி ஷூஸ் லிமிடெட், சென்னை.

5. நாகராஜ் அண்டு கம்பெனி, சென்னை.

6. சலாம் பேப்பர் இண்டஸ்ட்ரிஸ், திருக்கோவிலூர்.

7. சபீர் டேனிங் இண்டஸ்ட்ரிஸ், வாணியம்பாடி.

8. பி.எம்.மீரா உசேன் அண்டு கோ., மேல்விஷாரம். வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

9. திருமலை எலக்ட்ரான்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஓசூர்.

10. ஸ்ரீ அபிராமி டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

11. ஆதிலட்சுமி மில்ஸ், பசுமலை.

12. சதர்ன் ஸ்பிரிங்ஸ் அண்டு பயர் புராடெக்ட்ஸ், மதுரை.

13. ஐக்கிரியா பிரைம் டேனரி, திண்டுக்கல்.

14. வாடியார் ஷாப், திண்டுக்கல்.

15. இ. கே. எம். லெதர்ஸ், திண்டுக்கல்.

16. இ. கே. எம். லெதர்ஸ், கே. எம். ஏ. பேகம் டேனரி, திண்டுக்கல்.

17. சாரா பிரைம் டேனரி, திண்டுக்கல்.

18. ராஜேஸ்வரி லெதர் ஸ்டோர்ஸ், திண்டுக்கல்.

19. மங்களம் லெதர் கம்பெனி, திண்டுக்கல்.

20. நர்கீஸா பிரைம் டேனரி, திண்டுக்கல்.

1993 ஏப்ரல் 23]

21. முகமதலி டேனரி, திண்டுக்கல்.

22. மீனாட்சி டேனர்ஸ், திண்டுக்கல்.

23. எம்.எம்.டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், திருமயம்.

24. சாந்தி டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட், திருமயம்.

25. தமயந்தி மேச் பேக்டரி, சேத்தூர்.

26. ஸ்ரீ பத்மாவதி காட்டன் மில்ஸ், இடையன்குளம்.

27. அருண்சங்கர் பயர் ஒர்க்ஸ், ஆரார்பட்டி.

28. ஸ்ரீ வெங்கடேஸ்வரா இண்டஸ்ட்ரிஸ் ஒர்க்ஸ், இராஜபாளையம்.

இணைப்பு-2.

1991.

1. மெசர்ஸ் நோவா எலக்ட்ரோ மேக்னடிக் லிமிடெட், சென்னை.

2. வாசக் லெதர்ஸ், சென்னை.

3. சுபைதா டேனிங் இண்டஸ்ட்ரிஸ், ஆம்பூர்.

4. ஜே. எ. பாஷா அண்டு கோ. டேனரி, வளத்தூர்.

5. ஜியா புட்வேர் கம்பெனி, ஆம்பூர்.

6. அம்ஜத் பினிஷ்டு லெதர் அண்ட் கோ., பேர்ணாம்பட்டு.

7. மெட்ராஸ் ஷூ பேப்ரிக்ஸ் லிமிடெட், வாலாஜாப்பேட்டை

8. பென்னர் இந்தியா லிமிடெட் (ஒப்பந்தக்காரர்), மதுரை.

9. ஜெய் ஆட்டோ இண்டஸ்ட்ரீஸ், மதுரை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10. அப்துல் அமீது டேனரி, திண்டுக்கல்.

11. கே. காஜா மைதீன் டேனரி, திண்டுக்கல்.

12. பால்மார் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், திண்டுக்கல்.

13. ஸ்ரீ பத்திரகாளியம்மன் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், தேனி.

14. பிரைட் இண்டஸ்ட்ரீஸ், திருச்சி.

15. மேரி வேஸ்ட் காட்டன் மில்ஸ், பெரம்பலூர்

16. எம். பி. ஆறுமுகநாடார் சால்ட் பேக்டரி, ஆவுடையார் கோயில்.

17. அகஸ்டின் சால்ட் பேக்டரி, மீமிசல்.

18. பன்னீர்செல்வம் சால்ட் பாக்டரி, ஆவுடையார் கோயில்.

19. முத்து நாடார் சால்ட் பாக்டரி, ஆவுடையார் கோயில்.

20. டி.டி.எ. இண்டஸ்ட்ரீஸ் அண்டு டெக்ஸ்டைல்ஸ், தஞ்சாவூர்.

21. வடிவேல் பயர் ஓர்க்ஸ் லிமிடெட், விஸ்வரத்தம்.

22. காதர் பாஷா நிப் ஓர்க்ஸ், சாத்தூர்.

23. சாந்தி கலர் மேச் ஓர்க்ஸ், சிந்துராஜபுரம்.

24. தமயந்தி தீப்பெட்டி தொழிற்சாலை, இராஜபாளையம்.

25. மெஜஸ்டிக் பிரிண்டரிஸ், சிவகாசி.

26. மண்ணிமாறன் ஆயில் மில்ஸ், சிங்கம்புனரி.

இணைப்பு 3.

1992.

1. புள்ளிக்கார் 'ஏ' மில், திருச்செங்கோடு.

2. மும்தாஜ் லெதர்ஸ், வாணியம்பாடி.

3. கிரவுன் போர்டு இண்டஸ்ட்ரீஸ், வாலாஜாப்பேட்டை,
4. சந்தர் அண்டு கோ, வாணியம்பாடி.
5. தி இங்கிலிஷ் எலக்டிரிக் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட். ஒசூர்.
6. கீதாலட்சுமி மில்ஸ், மதுரை.
7. கீதா பிரஸ், திருச்சி.
8. வெங்கடேஸ்வரா சால்வண்ட் எக்ஸ்டிராக்ஷன் பிரைவேட் லிமிடெட், அன்னவாசல்.
9. பி.எஸ். மார்டன் ரைஸ் மில், திருச்சி.
10. சினீ பிரகாஷ் ரைஸ் மில், திருச்சி.
11. அண்ணா பாய்லர் அண்டு ரைஸ் மில்ஸ், திருச்சி.
12. ரேவதி பிரிண்டர்ஸ், கரூர்.
13. பால் பிரிண்டர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ், திருச்சி.
14. காதாரியா மாடர்ன் ரைஸ் மில், நன்னிலம்.
15. தனலட்சுமி பயர் ஒர்க்ஸ், செங்கமலப்பட்டி.
16. மூர்த்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், சிவகாசி.
17. இன்ஸ்டலைட்ஸ் (மெஷனரி டிவிஷன்), மணலூர்.
18. முத்துசாமி டெக்ஸ்டைல்ஸ், அவினாசி.

(ஆ) 1990 ஆம் ஆண்டில் 28 தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டதில் 23 தொழிற்சாலைகளுக்கு நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டு ரூபாய் 42,400 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 5 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

1991 ஆம் ஆண்டில் 26 தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டதில் 16 தொழிற்சாலைகளுக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டு ரூபாய் 24,650 அபாரதத் தொகையாக வசூலிக்கப்பட்டது, 10 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

1992 ஆம் ஆண்டில் 18 தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டதில் 8 தொழிற்சாலைகளுக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டு ரூபாய் 8,900 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 10 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

79—

வால்பாறை குன்றுகள் தலைநகர் பிளாண்டேஷன் அசோசியேஷன் (T.P.A.) தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதி செய்து தருதல்.

வினா எண் 11574—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை குன்றுகள் கிராமம் தலைநார் பிளாண்டேஷன் அசோசியேஷன் (T.P.A.) -க்குட்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு போதிய அடிப்படை வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) கீழ்க்குறிப்பிட்ட தோட்ட நிறுவனங்கள் தலைநார் பிளாண்டேஷன் அசோசியேஷனுக்குட்பட்ட தோட்ட நிறுவனங்களாகும்.

1. தலைநார் எஸ்டேட், தலைநார்.
2. சக்தி எஸ்டேட், தலைநார்.
3. ஸ்ரீசண்முகம் எஸ்டேட், தலைநார்.
4. ஸ்ரீஅகஸ்தீஸ்வரர் எஸ்டேட், தல்லநார்.
5. மகாலட்சுமி எஸ்டேட், தலைநார்.
6. பிளன்டி வேலி எஸ்டேட், தலைநார்.
7. லில்லி எஸ்டேட், தலைநார்.
8. ஸ்டார் பிளாண்டேஷன், தலைநார்.

இத்தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 419 தொழிலாளர்களுக்கு (196 ஆண்கள், 223 பெண்கள்) 1955 ஆம் வருட

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

தமிழ்நாடு தோட்ட தொழிலாளர் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி கீழ்க்கண்டவாறு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன :—

1. விதி 7—குடிநீர் வசதிகள்: ஒவ்வொரு தோட்ட நிறுவனத்தின் பணியிடத்தில் தொழிலாளர்களுக்குப் போதுமான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2. விதி 12—கழிவறை வசதிகள்: ஒவ்வொரு மலைத் தோட்டங்களிலும் கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

3. விதி 16—கழிவறையில் தண்ணீர் வசதிகள் : கழிப்பிடங்களுக்குக் குழாய் அல்லது தொட்டி மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

4. விதி 19—கழிவு நீர் வசதிகள்: கழிவுநீர் வெளியேறத் தகுந்தபடி வடிகால்கள் அமைக்கப்பட்டு அவை முறையாக சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

(அ) மேற்படி தலைநார் பிளாண்டேஷன் அசோசியேஷனுக்குப்பட்ட தோட்ட நிறுவனங்களில் விதி 17-ன் படி சிறுநீர்க் கழிப்பிட வசதிகள் தனியாக செய்து கொடுக்கப் படாததற்குத் தோட்ட நிறுவனங்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வால்பாறை தோட்ட நிறுவன ஆய்வர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

80—

மாவட்ட வாரியாக ஆடு வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ள விவரம்.

வினா எண் 10505—திரு. எம். ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் ஆடு வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அனைத்து மாவட்டங்களிலும் இத்தகு **பண்ணைகள்** அமைக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தற்போது தமிழ்நாட்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் சின்ன சேலம் மற்றும் காமராஜர் மாவட்டத்தில் சாத்தூர் ஆகிய இரு இடங்களில் ஆட்டுப்பண்ணைகள் இயங்கி வருகின்றன. மேலும் புதுக்கோட்டை, திருநெல்வேலியில் அபிஷேகப்பட்டி, தர்மபுரியில் ஒசூர், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய நான்கு மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும் ஆட்டுப்பிரிவுகள் இயங்கி வருகின்றன. மேலும் ஐரோப்பிய பொருளாதார சமுதாய திட்டத்தில் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், இராணிப்பேட்டைக்கு அருகில் ஒரு ஆட்டுப்பண்ணை துவக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) மற்ற மாவட்டங்களில் தேவை இருப்பின் பண்ணைகள் அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளை தகுதியின் அடிப்படையில் அரசு ஆராயும்.

81—

தென்னையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த மூலப்பொருள் மானிய விலையில் விற்க நடவடிக்கை.

வினா எண் 13684—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில், தென்னையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த மூலப் பொருள் (CU 504) மானிய விலையில் விற்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தனிப்பட்ட முறையில் பேராவூரணித் தொகுதியில் தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்த மூலப்பொருள் (CU 504) தாமிரசல்பேட் மானிய விலையில் விற்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் தஞ்சாவூர் மற்றும் கேரள வாடல்

1993 ஏப்ரல் 23]

நோய்த் திட்டத்தின் கீழ் தென்னை மரங்களை தஞ்சை வாடல் நோயினால் தாக்கப்பட்டால் மூன்றாவது நிலை வர இருந்தால் அந்நோயினைக் கட்டுப்படுத்த ரூபாய் 10 ஒரு மரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. தாக்குதல் மூன்றாவது நிலைக்கு மேற்பட்டால் ரூபாய் 80 ஒரு மரத்திற்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அதாவது, தாக்கப்பட்ட மரத்தினை அகற்ற ரூபாய் 75 புதிய வீரிய ஒட்டுரக, நெட்டை குட்டை கன்று வாங்க ரூபாய் 3-ம் மற்றும் உரம் மற்றும் பூச்சி மருந்து வாங்க ரூபாய் 2-ம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

82—

பேராவூரணி தொகுதியில் விவசாயிகளுக்குக் குட்டையில் நெட்டை வீரிய ஒட்டு தென்னங்கன்றுகளை அறிமுகம் செய்தல்.

வினா எண். 13685—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதியில் விவசாயிகளுக்குக் குட்டையில் நெட்டை வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகளை அறிமுகம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதிக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு குட்டை/நெட்டை தென்னங்கன்றுகளை அறிமுகம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

குட்டை/நெட்டை வீரிய தென்னை உற்பத்தி மாநில நவ்லாக் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் பேராவூரணி தொகுதி உட்பட விநியோகிக்கப்பட்டு வருகிறது. பேராவூரணி விவசாயிகள் குட்டை/நெட்டை வகை தேவையென்றால் தஞ்சை மாவட்ட இணை வேளாண்மை இயக்குநரை அணுகினால் நவ்லாக் பண்ணையிலிருந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

83—

பூந்தமல்லி மேல்மாநகரிலுள்ள ஆதி திராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 5197 —திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் பூந்தமல்லி மேல் மாநகரிலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் பூந்தமல்லி மேல் மாநகரிலுள்ள ஆதி திராவிட நலத் துறை நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப் படுத்த முன்மொழிவு பெறப்பட்டு அது அரசின் ஆய்வில் உள்ளது.

84—

முகந்தெரியான் குப்பம் ஆதி திராவிடர்களுக்கு மயானம், மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 7529—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் முகந்தெரியான் குப்பம் ஆதி திராவிடர்களுக்கு மயானம், மயானப்பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் முகந்தெரியான் குப்பத்தில், ஆதிதிராவிடர்

1993 ஏப்ரல் 23]

காலனியாவது ரி.ச. 27/5,0.49.0 ஹெக்டேர் நத்தம் மற்றும் ரி.ச. 25/1,0.66.5 நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ளது. மேற்படி காலனி மக்களுக்குரிய மயானமானது ரி.ச. எண். 23 வாய்க்கால் புறம்போக்கில் அமைந்துள்ளது. மேற்படி காலனி மக்கள் மயானத்திற்கு ரி.ச. எண். 23 மற்றும் 26 வாய்க்கால் புறம்போக்கு கரை வழியாக பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். வாய்க்கால் கரையானது தற்போது கரைந்து நடந்து செல்ல முடியாத நிலையில் உள்ளது. அதனால் பட்டா நிலங்கள் வழியாக பிரேதங்களை எடுத்துச் செல்கிறார்கள். பட்டா நிலங்கள் வழியாக பிரேதங்களை எடுத்துச் செல்வதால், ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்து மயானப்பாதை வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனி வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

85—-

அழிச்சிக்குடி கிராம வடக்குக் காலனி ஆதி திராவிட மக்களுக்கு மயானப்பாதை அமைத்தல்.

வினா எண் 8004—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், அழிச்சிக்குடி கிராம வடக்குக் காலனி ஆதி திராவிட மக்களுக்கு மயானப் பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது.

விடை—-

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) . தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், அழிச்சிக்குடி வடக்குக் காலனியானது ரி.ச. 81/1 மற்றும் 82/11-ல் 1.00.0 ஹெக்டேர் நத்தத்தில் அமைந்துள்ளது. வடக்குக் காலனியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு ரி.ச. எண் 122-ல் வெள்ளாற்றில் மயானம் உள்ளது. வடக்குக் காலனியிலுள்ள ஆதிதிராவிடர்கள் தெற்குக் காலனி வழியாக மயானத்திற்குச் செல்வதற்கு ரி.ச. எண். 70, 71, 74, 77 மற்றும் 78 வழியாக மயானத்தை அடைய ஏற்கெனவே பாதை வசதி உள்ளது. எனவே. அழிச்சிக்குடி வடக்கு காலனி ஆதிதிராவிடர்கள் மயானத்தைச் சென்றடைய நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமில்லை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

86—

அழிச்சிக்குடி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்,

வினா எண் 8005—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி அழிச்சிக்குடி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு, எம், ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்,

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், அழிச்சிக்குடி மதுரா நாலாம்தெத்து கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு 18—6—1992 அன்று 74 நபர்களுக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன,

87—

சங்ககிரி தொகுதியில் ஆதிதிராவிடர் ஆண்கள் விடுதிக்கு அரசு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 8890—டாக்டர் வெ, சரோஜா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதியில் ஆதிதிராவிடர் ஆண்கள் விடுதி நீண்ட காலயாக வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருவதால் அரசு சொந்தக் கட்டிடம் கட்டிக்கொடுக்க ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

1992—93-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், சங்ககிரியில் அரசு மாணவர் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

88—

தம்மம்பட்டியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 10093—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம். தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் ஆ : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தம்மம்பட்டி கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டப் பின்னர் இவ்விடுதிக்குக் கட்டிடம் கட்டுவது பற்றி வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

89—

மகிழங்கோட்டையிலுள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13101—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?—

பட்டுக்கோட்டை ஒன்றியம் மகிழங்கோட்டையிலுள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக் குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

90—

மாவடுகுறிச்சி, ஊராட்சி கீழக்காடு மிகவும் பிறபடுத்தப்பட்ட சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13103—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி கீழக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிகொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவனருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

91—

மாவடுகுறிச்சி ஊராட்சி, நாடாகாடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13104—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூராணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி நாடாகாடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

விடை :—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

92—

மாவடுகுறிச்சி ஊராட்சி பழைய நகரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13105—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி பழைய நகரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை :—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

93—

மாவடுகுறிச்சி, சீவன்குறிச்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13106—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி, சீவன்குறிச்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை :—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :—

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

94—

காலகம் ஊராட்சி, ஆனைக்காடு சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13112— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி, ஆனைக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

95—

திருச்சிற்றம்பலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13117—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 23]

விடை :—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

களத்தூர் ஊராட்சி, பொக்கன் விடுதி தெற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13118— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சியை சேர்ந்த பொக்கன் விடுதி தெற்கு மிகவும் பிற்படுத்தப் பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளத் துறை அமைச்சர் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டி தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

97—

துறவிக்காடு ஊராட்சி வலசைக்காடு மிகவும் பிற்படுத்தப் பட்ட சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13123— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம் துறவிக்காடு ஊராட்சி, வலசைக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா'

விடை —

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

புனல்வாசல் ஊராட்சி, ராமகிருஷ்ணாபுரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13129— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம்மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் ஊராட்சி, ராமகிருஷ்ணாபுரம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

99—

புனல்வாசல் ஊராட்சி, வாடிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13130— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம்மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் ஊராட்சி, வாடிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 23]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

100—

கொறக்குடி ஊராட்சி பூலாங் கொல்லையில் கயிறு தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 6730—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், ஒன்றியம், கொறக்குடி ஊராட்சி பூலாங்கொல்லையில் கயிறு தொழிற்சாலை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொறக்குடி ஊராட்சி, பூலாங்கொல்லையில் கயிறு தொழிற்சாலை ஒன்று அமைத்துக் கொடுக்க செயற் குறிப்பு ஒன்றும் இல்லை. ஆயினும், கயிறு தொழிற்சாலை அமைக்கத் தொழில் முனைவோர்கள் எவரும் முன்வந்தால், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், தஞ்சாவூர் அவர்களை அணுகி உதவிகள் பெற்று மேற்படி தொழில் துவங்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக்கவன ஈர்ப்பு.

(அ) சட்டமன்றப் பேரவையில் 21–4–1993 அன்று நடந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டது குறித்துப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வி. கே. சின்னசாமி.

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவம் குறித்தும் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் மீது போடப்பட்ட வழக்குகள் குறித்தும், அவர்கள் மீது காவல் துறையினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அரசு என்ன செய்திருக்கிறது என்பதைத் தாங்கள் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

ஆனால், இன்றைய பத்திரிகையைப் பார்க்கும்போது, காவல் துறை அவர்களைக் கைது செய்து, கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டிலே இருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக பத்திரிகைகளிலே, வழக்கறிஞர்கள் பக்கத்திலே இருப்பது போன்ற படம் எல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே, இந்தச் சம்பவம் குறித்து இன்றைக்கு முன்னுக்குப்பின் முரணான செய்திகள் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருப்பதால், எங்களைப் போன்றவர்களும், பொது மக்களும் குழப்பமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அவை முன்னவர் அவர்கள் இதுகுறித்து உண்மையான நிலை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு விடை அளிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் எழுப்பிய பொருளுக்கு விடை அளிப்பேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

21–4–1993 அன்று சட்டமன்ற வளாகத்தில் காவலர்கள் தாக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஞானசேகரன் திரு. பி. வி. இராஜேந்திரன் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பது பற்றி அவையின் கருத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டு அறிந்தார்கள். அவை முன்னவர் என்ற முறையில் சட்டமன்ற வளாகத்திற்

குள்ளே குற்றம் இழைத்தவர்கள் மீது முறையான குற்றவியல் நடவடிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளலாம் என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், குற்றம் இழைத்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், முறைப்படி அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும், அதற்கான முறை யான நடவடிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளலாம் என்றும் கூறினார்கள். தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின்படி 21-4-1993 அன்று இரவு மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திற்குக் கொண்டு போகப்பட் டார்கள். திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் காவலர்கள் தேடிய நிலையிலும் அகப்படவில்லை. மற்ற இருவர் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, உடன் அவர்கள் சொந்த ஜாமினில் வெளியே போகலாம் என்று கூறப்பட்டார்கள். உடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொந்த ஜாமினில் போக 21-4-1993 அன்றே காவல் நிலையத்திலே கையெழுத்து போட்டுவிட்டு, வெளியேறத் தயாராக ஆனார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அந்த நேரத்திற்கு வந்து, அவர்கள் சொந்த ஜாமினில் வெளியே போக மறுத்துவிட்டு, காவல் நிலையத்திலேயே இருந்து விட்டார். மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதியினுடைய போக்கைப் பார்த்த, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தானும் வெளியேற மாட்டேன் என்றும், காவல் நிலையத் திலே இருப்பேன் என்றும் அவர்களும் கூறிவிட்டார். சொந்த ஜாமினில் போவதற்கு திரு. ஞானசேகரன் அவர்கள் கையெழுத்து போட்டு, போக தயாராகவும் ஆகிவிட்டார். கையெழுத்தும் போட்டாகிவிட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் போகமாட்டேன் என்று சொன்னவுடனே தானும் போகமாட்டேன் என்று அவரோடு சேர்ந்து கொண்டு, காவல் நிலையத்திலே இருந்தார்கள். இருவரும் காவல்நிலை யத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டதன் காரணமாக, காவலர்களுக்கு வேறு வழி இல்லாத வகையில், 22-4-1993 அன்று காவலர்கள் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று, உரிய நடவடிக்கையை நீதிமன்றம் எடுக்க வேண்டும் என்றும், அதாவது Appropriate action எடுக்க வேண்டும் என்றும் நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்கள். அல்லது அவர்களை சொந்த ஜாமினில் போகவிடலாம் என்றும் காவலர்கள் நீதிபதிக்குத் தெரிவித்தார்கள். அவர்களை சிறை யில் அடைக்க வேண்டி இருந்தால்தான், காவலர்கள் டயரியைக் காண்பிக்க வேண்டிய அவசியமும், ரிமாண்ட் செய்ய வேண்டும் என்று வாதாட வேண்டிய அவசியமும் ஏற்படும். காவலர் களைப் பொறுத்து, நீதிமன்றத்தில் அவர்களை ரிமான்ட் செய்யவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. ரிமான்ட் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தாத நிலையில் டயரியைக் காண்பிகக்

வேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே அங்கே அவர்கள் சொந்த ஜாமீனிலே வெளியே போக மறுத்து விட்டதன் காரண மாக உரிய நடவடிக்கைகளை நீதிமன்றம் எடுத்துக் கொள்ளட் டும் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்று காவலர்கள் தரப்பிலே சொல்லப்பட்டு, நீதிபதி அவர்கள் அதன்பேரிலே வெளியேற அவர்களுக்கு அனுமதி அளித்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வெளியேறி விட்டார்கள். இதுதான் நடந்தது. ஆனால் காவலர்கள் அவர்களை வெளிவிட சம் மதித்தும், அவர்கள் சிறைக்குள்ளே போகத்தான் துடியாய் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நோக்கம் என்ன என்பது புரிகின்றது. இதன் மூலம் என்ன விளைவுகள் ஏற்பட வேண்டும் என்று அவர்கள் எதிர் பார்த்தார்கள் என்பதும் நமக்குப் புரிகிறது. ஆனால் அவர்களுடைய எண்ணம் ஈடேறவில்லை, அவ்வளவுதான். ஆகவே கடைசியிலே அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாக போகலாம் என்று சொன்னதற்குப் பிறகு அவர்கள் போய் விட்டார்கள். ஆக ஒருவர் கையெழுத்துப் போட்டு போகக் தயாராக இருந்தார், காவல் நிலையத்திலே. மற்றவர் மறுத்த தன் காரணமாக இரண்டு பேரையும் நீதிமன்றத்திற்குக் கொண்டு போக வேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, அவர்கள் இருவரையும் ரிமாண்ட் செய்ய வேண்டிய அவசியம் காவலர் களுக்கு இல்லை. இதுதான் நடந்தது. ஆனால் சில செய்தித் தாள்களிலே சிலபல வகைகளிலே வெவ்வேறு விதமாக வந் திருப்பதன் காரணமாகத்தான் இந்த விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் வந்தது.

முற்பகல் 11—15

மற்றொரு பிரச்சினையும் எழுப்பப்பட்டது. அதாவது சட்ட மன்ற வளாகத்திற்கு உள்ளேயே உறுப்பினர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க லாமா? எடுப்பதற்கு உரிமை இருக்கிறதா? சட்டமன்றத்திற்கு உள்ளே இருக்கிற நடவடிக்கைகள் அத்தனையையும் சட்ட மன்றப் பேரவைத் தலைவர்தான் எடுக்கவேண்டும் என்கிற ஒரு ஐயப்பாடும் சிலபல ஏடுகளிலே எழுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றி நான் குறிப்பிடுகிறபோது தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றி கௌல் மற்றும் ஷத்தர் என்ற வல்லுநர்கள் எழுதிய நூலில் அதனுடைய பக்கம் 198-ல் பத்தி 3ல் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் ஒருவரால் சட்டமன்றத்திற்கு உள்ளாக குற்ற நிகழ்வு ஒன்று நடத்தப்பட்டால் அது சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில் சேர்ந்த ஒரு பகுதியாக கருதப்பட மாட்டாது. மகாராஷ்டிர சட்டமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் தான் பேசுவதற்கு ஒலி பெருக்கியை இயக்கித் தர வேண்டும் என்று ஒலி பெருக்கி

இயக்குநரைப் பார்த்து கூச்சல் போட்டார். அவர் மேஜை பளு கட்டையை எடுத்து அதாவது பேப்பர் வெயிட்டை எடுத்து ஒலி பெருக்கி இயக்குநர் இருக்கும் திசை நோக்கி வீசி எறிந்தார். அத்தோடு அவர் நில்லாமல் அவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து அவைத் தலைவருக்கு உரிய ஒலி பெருக்கியை பிடித்து இழுத்து பேசுவதற்கு முயன்றார். அதன் காரணமாக அவர் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் காரணமாக அவர் தண்டிக்கப்பட்டு 6 மாத காலம் கடுங்காவல் சிறையில் அடைக்கப்பட்டார் என்று கௌல் மற்றும் ஷக்தர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Page 198, para 3 of Kaul and Shakdher—'A Criminal act committed by a Member within the House cannot be regarded as a part of the proceedings of the House. In Maharashtra, when a Member shouted at the Operator to connect his mike to the loudspeaker, threw a paper weight in the direction of the loudspeaker operator and rushed to the Speaker to catch the loudspeaker, he was subsequently convicted under different sections of the Indian Penal Code and sentenced to rigorous imprisonment for 6 months. என்று

1967லே அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. ஆக சட்ட மன்றத்திற்குள்ளே குற்றவியல் நிகழ்ச்சிகள் நடைபெறுமே யானால் அந்த உறுப்பினர் மீது இந்தியன் பீனல் கோடு சட்டத் தின்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுக்கலாம் என்றும் அதன் காரணமாகத் தண்டிக்கப்படலாம், சிறையிலே அடைக்கப்படலாம் என்று தெளி வாகச் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தாலே இது சட்ட மன்றத்திற்கு உள்ளே கூட இங்கே நடைபெறவில்லை. சட்ட மன்றத்திற்குப் பிறகு இருக்கிற தாழ்வாரத்தில் நடைபெற்ற தன்மை என்றாலும் கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற பணியாளர்களாக விளங்கு கின்ற காவலர்கள் தாக்கப்பட்ட நிலையிலே அது குற்றம் இழைக்கப்பட்டதாக கருதப்பட்டு இந்தியன் பீனல் கோடு சட்டத் தின் படி நடவடிக்கை எடுப்பது என்பது எந்த வகையிலேயும் தவறாக ஆகாது என்பதை மட்டும் நான் தெளிவுபடுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மகாராஷ்டிரா சம்பவம் பற்றிய முழு விவரமும் இப்போதுதான் எனக்குக் கிடைத்திருக் கிறது. 1967-லே என்று தெரிவித்தார்கள். 1967-லே வெளியிடப் பட்ட புத்தகத்திலே இருக்கக்கூடிய செய்தி அது. அந்த சம்பவம் நடந்தது 1964 ஆகஸ்டு 12 ஆம் தேதி. மகாராஷ்டிரா சட்ட மன்றத்தில் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. லௌட் ஸ்பீக்கர் ஆப்பரேட்டர் மீது ஏதோ ஒரு பொருளை எடுத்து வீசிய நிகழ்ச்சி பற்றித்தான் பேரவை முன்னவர் அவர்கள் இங்கே தெரிவித் தார்கள். வீசப்பட்ட அந்த சம்பவம் அங்கே நடந்தவுடன் அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து,

"On the 13th August 1964, the Speaker informed the House of the receipt of the following letter dated the 12th August 1964 from the Assistant Commissioner of Police, Bombay:".

முற்பகல் 11-20.

அந்தச் சம்பவத்தை உரிய இண்டியன் பீனல் கோடுபிரிவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் காவல் துறையினர் தெரிவித்த செய்தியை மறு நாள் பேரவைத் தலைவர் அவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

"Sri Jambuvanto Baburaoji Thote, MLA, Maharashtra State was arrested at 5-20 p.m. on the 12th August1964 in connection with Colaba Police Station Cr. Nos. 434 and 435 under sections 353, 333, 426 IPC and 307 IPC."

டௌட் ஸ்பீக்கர் ஆப்பரேட்டரை நோக்கி ஒருவர் ஒரு பொருளை பேரவைக்குள் வீசி எறிந்தார் என்பதற்கு 1964-ல் அந்தப் பேரவை உறுப்பினர் மீது மராட்டிய மாநிலத்தில் போடப்பட்ட செக்ஷன் 307. இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நேற்றைய தினம் தெரிவித்தார்கள், மென்மையான நடவடிக்கைகளைத்தான் நாங்கள் எடுக்கிறோம் என்று. அங்கே போட்டது கொலை முயற்சி வழக்கு. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இவ்வளவு பெரிய காரியத்தை இங்கே செய்தவர்கள் மீது போலீஸ் ஸ்டேஷனிலேயே வெளியே போய் விடலாம் என்கிற அந்த மென்மையான செக்ஷனைத்தான் போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) (குறுக்கீடு) 1964-ல் நாடு பூராவும் காங்கிரஸ் அரசாங்கம். அந்த காங்கிரஸ் வேறு என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அதே மாதிரி அந்த வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்கிற செய்தியைச் சொன்ன பின்னர்,

"On the same day, i.e., the 13th August 1964, the Chief Minister and Leader of the House, Sri V. P. Naik....."

அப்போது முதலமைச்சர் மராட்டியத்தில் வி.பி. நாயக் இருந்திருக்கிறார்.

"..moved the following Motion :

'That this House, having witnessed on the 12th August 1964, the grossly disorderly conduct of Sri J.B. Thote, a Member of this House places on record its profound sense of shock and indignation at the discourtesy and indignity offered to the person of the Hon. Speaker and the Hon. House as a whole."

லௌடு ஸ்பீக்கர் ஆப்பரேட்டர் என்கிற பேரவைத் தலைவருடைய அலுவலரை அந்த அளவுக்கு மோசமாக நடத்தியதற்காக என்று சொல்லி அன்றைய முதலமைச்சர் அந்த மராட்டிய

மாநிலப் பேரவையில் முன்மொழிந்த தீர்மானத்தைத்தான் இப்போது நான் படித்துக் கொண்டு இருக்கிறேன்.

"....This was a gross contempt of the House and the Speaker. The House, therefore, hereby resolves that the said Sri J.B. Thote deserves summary explusion from the House and orders that he be expelled accordingly."

அன்றைய முதலமைச்சர் இப்படிப்பட்ட சம்பவம் மராட்டிய மாநிலத்தில் நடைபெற்றபோது முன்மொழிந்த தீர்மானம். இந்த உறுப்பினரை அடியோடு அவையிலேயிருந்து வெளியேற்ற வேண்டும் என்கிற தீர்மானத்தை அன்றைக்கு காங்கிரஸ் முதலமைச்சர் மராட்டியத்தில் திரு. வி. பி. நாயக் முன் மொழிந்திருக்கிறார். நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு கடுமையாக இங்கே அவர்கள் நடந்து கொண்டாலும்கூட மென்மையான நடவடிக்கை தான் நாங்கள் எடுக்கிறோம் என்று சொன்னதற்கு அர்த்தம் இன்றைக்குப் புரிந்து கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். மராட்டிய மாநிலத்தில் அவர்கள் போட்ட வழக்கு ஐ.பி.சி. 307-ல் கொலை முயற்சி வழக்கே போட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே போலீஸ் ஸ்டேஷனிலேயே வெளியே போய் விடலாம் என்கிற சாதாரண வழக்கு. அதற்குப் பிறகு, அந்த உறுப்பினரை நீக்கி அந்த முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்த அந்தத் தீர்மானத்தை அந்த அவை அன்றைக்கு எடுத்தது.

முற்பகல் 11–25

"On the adoption of the Motion for expulsion of Sri Thote, the following Notification was published in the Maharastra Government Gazette Extraordinary, dated the 14th August 1964 declaring Sri Thote's seat vacant in the Maharashtra Legislative Assembly."

அந்த உறுப்பினரை முழுமையாக வெளியேற்றி அவருடைய பதவியையே அன்றைக்கு காலி செய்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அந்த நோட்டிபிகேஷனுடைய பாகம் இப்படி இருக்கிறது.

"No. 14964-E: Consequent upon the adoption of the Resolution by the Maharashtra Legislative Assembly on the 13th August 1964 expelling from the House Sri Jambuvanto Baburoaji Thote, a Member elected to the Maharashtra Legislative Assembly from Ekmarg Constituency, he has ceased to be a Member of the Assembly with effect from the 13th August 1964 afternoon."

அவ்வாறு அரசாங்கம் அவருடைய எம்.எல்.ஏ. பதவியையே பறித்து ஆணை வெளியிட்டதற்குப் பிறகு,

"Sri J.B. Thote filed a Writ Petition in the Bombay High Court against the decision of the Maharashtra Legislative Assembly which was withdrawn by the Petitioner afterwards."

அந்த உறுப்பினர்கூட கடைசியில் அவை எடுத்த முடிவையும் அரசாங்கம் அவருடைய இடத்தையே காலி செய்து உத்தர விட்டதையும்கூட ஏற்றுக் கொண்டு அவர் பைல் செய்த அந்த ரிட் மனுவைக் கூட வித்ட்ரா செய்து கொண்டார்கள் என்பது தான் அன்றைக்கு நடந்து இருக்கிறது. அந்த அளவுக்கு எல்லாம் சம்பவங்கள் பேரவையினுடைய அந்த இறையாண்மையைக் காப்பதற்காக, பேரவையின் கண்ணியத்தைக் காப்பதற்காக எடுக்கப்பட்டு இருக்கிறது என்கிற இந்தச் செய்தியையும் பேர வைக்குத் தெரிவிக்கிற நேரத்தில் இங்கே எங்களுடைய காவலர் கள் இன்றைக்கும் மருத்துவமனையில் இருக்கிறார்கள். அந்த நெஞ்சிலே எத்தப்பட்ட காவலரை நான் நேற்றுப் பார்க்கிற போது பேசுவதற்கே திணறித், திணறிப் பேசுகிறார். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. நேரடியாக எத்தியதை இங்கே பத்திரிகையாளர்களும் பார்த்தீர்கள். எந்த அளவுக்குத் தாக்கப்பட்டார்கள் என்பதையும் நீங்கள் பார்த்தீர்கள். இன் றைக்கு ஒரு பெரிய மனிதர் வெளியிலே சொல்லியிருக்கிறார். 3 பேர் கூடி 8 பேரைத் தாக்கி விட முடியுமா என்று. அதுதான் நடந்தது. இவர்கள் 8 பேர் நினைத்தால் 3 பேரைத் தாக்கி விடாமல் தடுத்து இருக்க முடியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே செய்ததைப் போல அடிக்க, அடிக்க அண்ணா நாமம் வாழ்க; அண்ணா நாமம் வாழ்க, என்று அடி வாங்கிக் கொண்டே இருந்ததைப் போல அவர்கள் அடிக்க, அடிக்க கடமையைக் கருதி இந்த அவையினுடைய கண்ணியத் தையும் கருதி காவலர்கள் அடி வாங்கிக் கொண்டே இருந்த காரணத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 3 பேரிவிடத் திலே 8 காவலர்கள் அடி வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்க வேண்டும், அந்தப் பெரிய மனிதருக்கு. எனவே, இங்கே காவலர்கள் தாக்கப்பட்ட சம்பவம் என்பதைக் கண்ணாரப் பார்த்தீர்கள், அதன் மீது உரிய கிரிமினல் நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையின் காரண மாக அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் என்பதைக் கருதி மிக மென்மையான நடவடிக்கை எடுத்தார்கள். அந்த மென்மையான நடவடிக்கையைக் கூட இன்றைக்கு வெளியிலே விமர்சனம் செய்து கொண்டிருக்கிறவர் களுக்கு இந்த மராட்டிய மாநிலத்திலே நடைபெற்ற சம்பவம் இனிமேலேனும் அவருடைய கண்களைத் திறக்கும் என்று எதிர் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஓர் உறுப்பினர் பேசியதை இன்னோர் உறுப்பினர் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பற்றி, அவர்களுடைய வெற்றிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் காரணம், அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செல்வாக்கில் வெற்றி பெற்று விட்டு சட்டமன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை அவர்களுடைய தொகுதியிலே கொண்டு விடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்ற ஒரு வேண்டுகோளை நான் வைத்து இருந்தேன். இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையிலே திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் கூறியதாக அந்தச் செய்தி வந்திருக்கிறது. (சிரிப்பு) ஒருவேளை என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று அதைச் செய்திருந்தால் அந்தப் புகழ் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குப் போய் விடுமே என்பதை நான் வேதனையோடு குறிப்பிட்டு, இதுபோன்று இனி மேலும் பத்திரிகைகள் ஆள் மாறாட்டம் செய்யக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு ஒன்றும் இல்லை. திரு. வி. கே. சின்னசாமியும் இருக்கிறார். திரு. ம. சின்னசாமியும் இருக்கிறீர்கள். திரு. வி. கே. சின்னசாமி அடிக்கடி எழுந்து நின்று கொண்டே இருக்கிற காரணத்தாலே அவர் கண்ணிலே பட்டிருப்பார். எனவே, அது தவறுதான். அதைத் திருத்திக்கொள்வார்கள்.

(முற்பகல் 11–30

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கு புகழ் வந்தாலும் அது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் காலடிக்குத்தான் போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

3. கவன ஈர்ப்பு

(அ) ஆரணியிலிருந்து பெங்களூருக்கு இயங்கிக் கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. **டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்**

1993 ஏப்ரல் 23]

(ஆ) ஓர் உறுப்பினர் பேசியதை இன்னோர் உறுப்பினர் பேசியதாக ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

*திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பற்றி, அவர்களுடைய வெற்றிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் காரணம், அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செல்வாக்கில் வெற்றி பெற்று விட்டு சட்டமன்றத்திற்கு வராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை அவர்களுடைய தொகுதியிலே கொண்டு விடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்ற ஒரு வேண்டுகோளை நான் வைத்து இருந்தேன். இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகையிலே திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் கூறியதாக அந்தச் செய்தி வந்திருக்கிறது. (சிரிப்பு) ஒருவேளை என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று அதைச் செய்திருந்தால் அந்தப் புகழ் திரு. வி. கே. சின்னசாமி அவர்களுக்குப் போய் விடுமே என்பதை நான் வேதனையோடு குறிப்பிட்டு, இதுபோன்று இனி மேலும் பத்திரிகைகள் ஆள் மாறாட்டம் செய்யக்கூடாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் . . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு ஒன்றும் இல்லை. திரு. வி. கே. சின்னசாமியும் இருக்கிறார். திரு. ம. சின்னசாமியும் இருக்கிறீர்கள். திரு. வி. கே. சின்னசாமி அடிக்கடி எழுந்து நின்று கொண்டே இருக்கிற காரணத்தாலே அவர் கண்ணிலே பட்டிருப்பார். எனவே, அது தவறுதான். அதைத் திருத்திக்கொள்வார்கள்.

முற்பகல் 11–30

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கு புகழ் வந்தாலும் அது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் காலடிக்குத்தான் போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

3. கவன ஈர்ப்பு

(அ) ஆரணியிலிருந்து பெங்களூருக்கு இயங்கிக் கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. **டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்**

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆரணி நகரிலிருந்து பெங்களூருக்குச் சென்று கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரி பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

14—11—1992-லிருந்து 9—3—1993 வரை இருமுனை வரி விதிப்பின் அடிப்படையில் ஆரணி பெங்களூர் தடத்தில் ஒரு பேருந்து பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டது. 10—3—1993-க்கு பிறகு ஆரணி முதல் பெங்களூர் வரை பேருந்து இயக்குவதற்கான உரிமத்தில் கர்நாடக அரசின் ''மாநில போக்குவரத்து ஆணையரின்'' மேல்ஒப்பம் பெற முடியாத நிலையில் மேற்படி பேருந்து தொடர்ந்து இயக்க முடியவில்லை. இது அண்டை மாநில தட ஒப்பந்தத்தில் இல்லாத ஒன்று. தற்போது பகுதி பகுதியாக பேருந்து வசதி அத்தடத்தில் உள்ளது. முக்கியமாக வேலூர்-பெங்களூர் தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். இருமுனை வரி விதிப்பின் அடிப்படையில் ஆரணி-பெங்களூர்-க்கு விடப்பட்டிருந்த பேருந்து 10—3—1993-க்குப் பிறகு ஆரணி முதல் பெங்களூர் வரை இயக்குவதற்கான உரிமத்தில் கர்நாடக அரசினுடைய மேலொப்பம பெற முடியாத நிலையில் அந்தப் பேருந்தை இயக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். மீண்டும் நிறுத்தப்பட்டுள்ள அந்தப் பேருந்தை இயக்க கர்நாடக அரசினுடைய மேலொப்பம் பெற வழிவகை உள்ளதா எனவும் அப்படி உண்டு என்றால் விரைவில் அதைப் பெற்று அந்த பஸ்ஸை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் அந்தப் பேருந்தை அங்கேயிருந்து இயக்கினோம். 14—11—1992

1993 ஏப்ரல் 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

லேயிருந்து 9—3—1993 வரை இருமுனை வரிகள் கட்டி அந்தப் பேருந்தை இயக்கினோம். அதற்குப் பிறகு கர்நாடக மாநிலத்தோடு நாம் தொடர்பு கொண்டு அதை ஒருமுனை வரியாக மாற்றி இரு மாநிலங்களுக்கும் இருக்கின்ற ஒப்பந்தத்தை நாம் புதுப்பிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கின்ற நேரத்தில் அப்போது ஆட்சி மாற்றத்தின் காரணமாக, இரு மாநிலங்களுக்கும் ஏற்படுகிற ஒப்பந்தத்தில் ஒரு தேதியை நிர்ணயித்துவிட்டு அந்த மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வருகை தரவில்லை. மீண்டும் அதை விரைந்து செயல்படுத்துவதற்கு, அந்தப் போக்குவரத்துத் துறை அமைச்சரோடு பேசி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியிலேயிருந்து சென்னை என்று பார்க்கிறபோது 140 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆரணியிலேயிருந்து பெங்களூர் என்று பார்க்கிறபோது 180 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால், ஆரணியைப் பொறுத்தமட்டிலும் ஆரணியிலே தொழில் புரியக் கூடிய வியாபாரிகள், பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய தொழில் காரணமாக பெங்களூர்தான் செல்லுகிறார்கள். அப்படிச் செல்லுகிறவர்களுக்கு வசதியாக ஏற்கெனவே விடப்பட்டிருந்த பஸ் இரவிலே புறப்பட்டு காலையிலே அங்கே செல்லும். மறுபடியும் அடுத்த நாள் இரவிலே புறப்பட்டு காலையிலே இங்கே வரும். அங்கே செல்பவர்களுக்கு தங்களுடைய வியாபாரத்திற்காக, தொழில் வசதிக்காக இது மிகவும் வசதியாக இருந்தது. ஆனால், இப்போது அந்த பஸ் நிறுத்தப்பட்டுவிட்டது. இங்கே விவர அறிக்கையிலே, பகுதி, பகுதியான வழித்தடத்திலே பேருந்துகள் உள்ளன என்றும், வேலூரிலேயிருந்து பெங்களூர் தடத்தில் போதுமான அளவுக்குப் பேருந்துகள் செல்கின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பகுதி பகுதியாக என்று செல்லுகிறபோது அதிலே நடைமுறையிலே சிக்கல்கள் அதிகம் இருக்கிறது. ஆரணியிலேயிருந்து ஒரு பயணி வேலூருக்குச் சென்று, நான் பெங்களூருக்குச் செல்ல வேண்டும் என்று பஸ்ஸிலே ஏறுகிறபோது, இறங்குயா, பஸ் ஃபுல்லாகிவிட்டது ; டிக்கெட் இல்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் கொண்டு செல்லுகிற லக்கேஜ் எல்லாம், பகுதி பகுதியாகச் செல்கிறபோது, இறக்கி ஏற்றி, இறக்கி ஏற்றிக் கொண்டு செல்லக் கூடிய சிரமம் அவர்களுக்கு ஏற்படுகிறது. குறிப்பாக, பகுதி பகுதியாகச் செல்கிறபோது பெண்களும் குழந்தைகளும் செல்லுகிறபோது, குழந்தைகளையும் பெண்களையும் இறக்கி, மீண்டும் பஸ்ஸிலே ஏற்றுகிற சிரமம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்படி பகுதி பகுதியாகச் செல்லுகிறபோது இருக்கிற சிரமங்களுக்காக நான் ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். அந்த பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்கிறது. நம்முடைய மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்குச் செல்லுகிறது.

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 ஏப்ரல் 23

இன்றைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, எங்களையெல்லாம் இன்றைக்கு இந்த நிலையிலே அமர வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பெயராலே அந்தப் பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்வதற்காகவும், அதே நேரத்திலே மக்களிடத்திலே நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதற்கு முன்பாகவே சொன்னார்கள். நான் பொது மக்களிடத்திலே சொன்னபோது, பொது மக்கள் என்னிடத்திலே சொன்ன ஒன்றை நான் இங்கே சொல்கிறேன். அம்மாவிடத்திலே சொல்லுங்கள்; அம்மா நிச்சயமாக பஸ்ஸை விடுவார்கள் என்று, அவ்வளவு நம்பிக்கையோடு அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமல், ஆரணியிலேயிருந்து பெங்களூருக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கிய பேருந்து ஒன்றை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். ஆனால், கேளாமலேயே கொடுக்கக்கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே நம்முடைய மாநிலமாக இருந்தால் நாளை காலையிலேயே இந்தப் பேருந்தை இயக்கி விடலாம் என்று சொல்லிவிட முடியும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் வருகிறபொழுது அந்தப் பேருந்துக்கள் அந்தக் காலக்கட்டத்தில் இயக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—35

(ஆ) சென்னை நகரத்தில் பஸ் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எஸ். ஜெயக்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு டி. எம். ரங்கராஜன்.

TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1993 ஏப்ரல் 23

இன்றைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, எங்களையெல்லாம் இன்றைக்கு இந்த நிலையிலே அமர வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பெயராலே அந்தப் பஸ் ஆரணியிலேயிருந்து பெங்களூருக்குச் செல்வதற்காகவும், அதே நேரத்திலே மக்களிடத்திலே நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இதற்கு முன்பாகவே சொன்னார்கள். நான் பொது மக்களிடத்திலே சொன்னபோது, பொது மக்கள் என்னிடத்திலே சொன்ன ஒன்றை நான் இங்கே சொல்கிறேன். அம்மாவிடத்திலே சொல்லுங்கள்; அம்மா நிச்சயமாக பஸ்ஸை விடுவார்கள் என்று, அவ்வளவு நம்பிக்கையோடு அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாமல், ஆரணியிலேயிருந்து பெங்களூருக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கிய பேருந்து ஒன்றை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். ஆனால், கேளாமலேயே கொடுக்கக்கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே நம்முடைய மாநிலமாக இருந்தால் நாளை காலையிலேயே இந்தப் பேருந்தை இயக்கி விடலாம் என்று சொல்லிவிட முடியும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் வருகிறபொழுது அந்தப் பேருந்துக்கள் அந்தக் காலக்கட்டத்தில் இயக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

(ஆ) <u>சென்னை நகரத்தில் பஸ் பற்றாக்குறையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எஸ். ஜெயக்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு டி. எம். ரங்கராஜன்.

1993 ஏப்ரல் 23]

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''சென்னை நகரத்தில் பால் பற்றாக்குறை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள நுகர்வோரின் பால் தேவையினை 60 விழுக்காடு முதல் 65 விழுக்காடு வரை நிறைவு செய்கிறது. தற்பொழுது நாள்தோறும் தோராயமாக 7.50 இலட்சம் லிட்டர் பால் வழங்கப்படுகிறது. சென்னை நகரம் அதனுடைய பால் தேவைக்கு மாவட்ட ஒன்றியங்களிலிருந்து வருகின்ற பாலையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. மாவட்டங்கள் அளவில் பால் கொள்முதலை அதிகப்படுத்தவும், சென்னைக்கு அதிகமாக பால் வரச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பால் அட்டைகள் வாங்கியுள்ள அனைத்து நுகர்வோருக்கும் போதுமான அளவு பால் வழங்கப்படுகிறது. ஆவின் பாலின் குறைந்த விற்பனை விலையைச் சாதகமாக்கிக் கொண்டு வியாபார நோக்கோடு மொத்தமாக பால் வாங்கப் படுவதைத் தவிர்க்க தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மூலம் செய்யப்படும் பால் விநியோகம் சீர்திருத்தப்பட்டுள்ளது. அதிகபட்சம் ஒரு நபருக்கு 2 லிட்டர் பால் மட்டுமே ரொக்கத்திற்கு விற்கப்படுகிறது. மேலும், இந்த தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் காலை 5.00 மணி முதல் செயல்படுமாறு முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், அதிகாலை நேரத்தில் வியாபார நோக்கத்திற்காக மொத்தமாக பால் விற்கப்படுவதை அந்தந்தப் பகுதியில் வாழும் மக்கள் கண்காணிக்க இயலும். சென்னை நகரில் பால் பற்றாக்குறை என்ற நிலை இல்லை. இருந்தபோதிலும், வருகின்ற பால் வற்றுங்காலத்தில் சென்னைக்கு வரும் பாலின் அளவு குறையும் என்பதால், மேலே விவரிக்கப்பட்ட பால் விநியோகத்திற்கான சீரமைப்பு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே குறிப்பாக மைலாப்பூர், தி.நகர் ஆகிய பகுதிகளிலே இருக்கின்றவர்களெல்லாம் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களெல்லாம் வெளியிடங்களுக்குக் காலையிலே ஐந்தரை மணிக்கெல்லாம் பஸ்ஸைப் பிடித்து வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. அது மட்டு

மல்லாமல், அதிகாலயையிலே 4 மணிக்கெல்லாம் எழுந்து காப்பி குடிக்கின்ற பழக்கம் இவர்களிடத்திலே இருக்கின்ற காரணத்தி னால் அவர்கள் பல நாட்களிலே காப்பியே குடிக்க முடியாதபடி பால் வாங்கி வருவதற்கு நேரமாகின்ற காரணத்தினால் அவர்கள் காப்பி அருந்தாமலேயே இன்றைக்கு அலுவலகங்களுக்குச் செல்வ தோடு மட்டுமல்லாமல், இந்தத் தானியங்கி பால் நிலையத்திலே யெல்லாம் தற்போது காலை 5 மணிக்குத்தான் பால் வழங்கப் படுகிறது. இதனால் அந்தத் தானியங்கிப் பால் நிலையத்திலே பெருத்த கியூ நின்று இரண்டு மணி நேரமாவது அங்கே பால் வாங்வகுதற்காக மக்கள் நிற்கின்ற நிலையைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல். இந்த பாக்கெட் பாலெல்லாம் விநியோகம் செய்கின்றபொழுது இந்த பாக்கெட் பாலிலே ஓட்டைகள் இருப் டதால் அதைப்பற்றி வாடிக்கையாளர்கள் அங்கேயிருக்கின்ற அந்த டெப்போ ஏஜன்சியிடம் சொல்லுகின்றபொழுது அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் கொடுக்கின்ற பாலை நீங்கள் வாங்கித்தான் செல்ல வேண்டும். அதில் பால் சிந்துவது எங்களுடைய பொறுப்பு அல்ல என்று சொல்லி விடுகிறார்கள். அதுபோன்று சில நேரங்களிலே பால் வண்டி தாமதமாக வருகின்ற பொழுது அந்த நேரததிலே அங்கே இல்லை என்று சொன்னாலும் பால் வாங்குபவர்கள் பாலைப் பெற முடியாத நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, இதனையெல்லாம் களைகின்ற விதத்திலே மீண்டும் காலையிலே 4 மணிக்கே குறிப்பாக மைலாப்பூரிலும், தி.நகரிலுமாவது தானியங்கி பால் வழங்கும் நிலையத்தின் மூலமாகப் பால் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தானியங்கி ஆட்டோமேட்டிக் வெண்டிங் மெஷின் நிறைய வைத்திருக்கிறோம். தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், இவைகளில் வியாபார நோக்கத்தோடு செயல்படு கின்ற சில பேர் நாம் விலை மிகக் குறைவாக விற்கின்ற காரணத் தால் அதைப் பயன்படுத்தி அங்கே அதிகமான பாலை வாங்கி வெளியே கொண்டு போய் விற்று விடுகிறார்கள் என்ற புகார் அதிகம் இருந்தது. அதனால்தான் விடியற்காலையிலே இருந்தால் இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதைப் பொது மக்கள் கவனிக்க முடியாமல் போகின்றது என்பதனாலே 5 மணிக்கு விற்கலாம் என்று அதை மாற்றி அமைத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இரண்டு லிட்டர் பாலுக்கு மேலே ஒரு ஆளுக்கு விற்க வேண்டாமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் யார் யார் பால் கார்டுகள் வாங்கி வைத்திருக் கிறார்களோ அவர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பால் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

வெளி மாவட்டங்களிலேயிருந்து வருகின்ற பால் குறையாமல் பார்த்துக் கொள்வதற்கு இப்பொழுது பல்வேறு விதமான நட வடிக்கைகள் எடுத்திருக்கிறோம். அடுத்து வருகின்ற சீசன் லீன்

சீசன். இன்னும் பால் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே பால் உற்பத்தியாளர்கள் பால் விலையை உயர்த்தவில்லை என்று சொன்னால் மே மாதம் பால் கொடுப்பதை நிறுத்தி விடுவோம், சப்ளை செய்வதை நிறுத்தி விடுவோம் என்று இப்பொழுது போராட்டத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் பால் விலையை உயர்த்த வேண்டும், இங்கே வருகின்ற பால் ஒழுங்காக விநியோகம் செய்யப்பட வேண்டும். இதற்காகத் தனியாக இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்கள் மிகச் சிறந்த முறையிலே இந்த வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் திரு ரங்கராஜன் அவர்கள் குறிப்பிட்டதை, மறுபடியும் 4 மணிக்கே அவைகள் திறக்கப்பட வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது, பால் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டியவர்களுக்குச் சேருமா என்பதில் சந்தேகம் இருக்கின்ற காரணத்தினால் தான் அதை 5 மணியாக்கினோம். இருந்தாலும், அதைப் பரிசீலனை செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே அதிக பட்சமாக ஒரு நபருக்கு இரண்டு லிட்டர் பால் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், நான் காலையிலே 4 மணிக்கு ஒரு பூத்திலே இன்ஸ்பெக்ஷன் சென்றால் அங்கே ஒரு லிட்டர்தான் கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்பட்டும், மீதியிருக்கிற ஜனங்கள் திரும்புகின்ற நிலைமை அங்கே இருக்கிறது.

இதைப்பற்றி அங்கே இருக்கிற பூத்தில் விசாரித்தால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 017 பூத், அசோக்நகரிலே நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் 4 மணிக்குச் சென்று விசாரித்தபோது, முன்பெல்லாம் 1,700 லிட்டர் வழங்கப்பட்டு வந்தது ; ஆனால் தற்போது 1,340 லிட்டர்தான் காலையிலே வழங்கப்படுகிறது ; மாலையிலே எடுத்துக்கொண்டால் 1,100 லிட்டர் வழங்கப்பட்டு வந்தது ; ஆனால், இப்போது 800 லிட்டர்தான் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே, 1,700-லிருந்து 1,300 என்று 400 லிட்டர் குறைக்கப்பட்டிருக்கிறது. அது ஏன் அவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது ' இப்போது பால் பற்றாக்குறை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதை நிவர்த்தி செய்து மீண்டும் 1,700 லிட்டர் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், பாக்கெட் பாலை வாங்கிக்கொண்டு போய், குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால், 24 மணி நேரம் கூட இல்லாத நிலைமை இருக்கிறது ; அதனால், நாங்கள் அதை சேஃப்டி பண்ணி வைக்க முடியாத நிலை இருக்கிறது என்று

அங்கே இருக்கிற பொதுமக்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதாவது 'டெக்னிகல் டிஃபெக்ட்ஸ்' இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின் விலையை நாம் 6 ரூபாய்க்கு விற்கிறோம். வெளியிலே இருந்து 8 ரூபாய், 9 ரூபாய்க்கு அது விற்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் இதிலே தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலபேர் இங்கே விற்கிற பாலை அதிகமாக வாங்கிக் கொண்டுபோய் வெளியிலே விற்றுவிடுகிறார்கள். இன்னொரு பக்கம், மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால், சென்னைக்கு சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் என்ன விலை கொடுத்து அங்கே வாங்குகிறார்களோ, அதைவிட கொஞ்சம் குறைவாகத்தான் விலையை, சென்னையிலே இருக்கிற ஃபெடரேஷன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்போது, அதை மாற்றியமைக்க வேண்டும். சென்னைக்கு பால் சப்ளை செய்வதால், வேலூருக்கோ, அல்லது சேலத்துக்கோ அல்லது கோயம்புத்தூருக்கோ அல்லது தென்னாற்காடு மாவட்டத்திற்கோ நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் இதிலே தயக்கம் காட்டுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லி இப்போது விலை மாற்றியமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காரணம் இங்கே இவர்கள் பால் வாங்குவதற்கு பணத்தை சரியாகக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் மொத்தமாக மாவட்ட ஒன்றியங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்த பால் கொள்முதல் விலையை அரசு அங்கே இருக்கிற ஒன்றியங்களுக்கு பரிசீலனை செய்த பின்னர் இன்னும் கொஞ்சம் பால் அதிகமாக வருவதற்கு ஏற்றவகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் கெட்டுப்போகிறது என்கிற விதத்தில் சொன்னார். அதற்கு நான் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேண்டியதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

அங்கே இருக்கிற பொதுமக்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதாவது 'டெக்னிகல் டிஃபெக்ட்ஸ்' இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலின் விலையை நாம் 6 ரூபாய்க்கு விற்கிறோம். வெளியிலே இருந்து 8 ரூபாய், 9 ரூபாய்க்கு அது விற்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் இதிலே தவறு நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலபேர் இங்கே விற்கிற பாலை அதிகமாக வாங்கிக் கொண்டுபோய் வெளியிலே விற்றுவிடுகிறார்கள். இன்னொரு பக்கம், மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால், சென்னைக்கு சப்ளை செய்யப்படுகிறது. அவர்கள் என்ன விலை கொடுத்து அங்கே வாங்குகிறார்களோ, அதைவிட கொஞ்சம் குறைவாகத்தான் விலையை, சென்னையிலே இருக்கிற ஃபெடரேஷன் அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்போது, அதை மாற்றியமைக்க வேண்டும். சென்னைக்கு பால் சப்ளை செய்வதால், வேலூருக்கோ, அல்லது சேலத்துக்கோ அல்லது கோயம்பத்தூருக்கோ அல்லது தென்னாற்காடு மாவட்டத்திற்கோ நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் இதிலே தயக்கம் காட்டுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லி இப்போது விலை மாற்றியமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காரணம் இங்கே இவர்கள் பால் வாங்குவதற்கு பணத்தை சரியாகக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் மொத்தமாக மாவட்ட ஒன்றியங்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் இந்த பால் கொள்முதல் விலையை அரசு அங்கே இருக்கிற ஒன்றியங்களுக்கு பரிசிலனை செய்து பின்னர் இன்னும் கொஞ்சம் பால் அதிகமாக வருவதற்கு ஏற்றவகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் கெட்டுப்போகிறது என்கிற விதத்தில் சொன்னார். அதற்கு நான் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேண்டியதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

1993 ஏப்ரல் 23]

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, மற்றும் 1977–78ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீது, பொது நிறுவனங்கள் குழுவின், முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பத்தாவது அறிக்கை.

(2) ந்இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977–78-ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளின், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழுவின், முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பதினொன்றாவது அறிக்கை.

(3) 1977–78, 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீது, பொது நிறுவனங்கள் அளித்த முப்பத்தெட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பன்னிரெண்டாவது அறிக்கை.

(4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் நூற்றுப்பதிமூன்றாவது அறிக்கை.

(5) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1990–91 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் நூற்றுப்பதினான்காவது அறிக்கை.

(6) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி.நூல் மற்றும் கதர் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுநிறுவனங்கள் குழு அளித்த பதின்மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றுப்பதினைந் தாவது அறிக்கை.

முற்பகல் 11-45

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை.

(8) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றிப்பதினேழாவது அறிக்கை.

(9) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகளின் மீது குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை.

நன்றி, வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 14, 15, 16 மற்றும் 17 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இன்மையால் 14, 15 மற்றும் 17-வது அறிக்கைகளின்படியெடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி டி. சக்குபாய் தேவராஜ், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

முற்பகல் 11-45

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை.

(8) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றிப்பதினேழாவது அறிக்கை.

(9) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகளின் மீது குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை.

நன்றி, வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 14, 15, 16 மற்றும் 17 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இன்மையால் 14, 15 மற்றும் 17-வது அறிக்கைகளின்படி யெடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி டி. சக்குபாய் தேவராஜ், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

முற்பகல் 11-45

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை.

(8) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றிப்பதினேழாவது அறிக்கை.

(9) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகளின் மீது குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை.

நன்றி, வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 14, 15, 16 மற்றும் 17 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இன்மையால் 14, 15 மற்றும் 17-வது அறிக்கைகளின்படியெடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி டி. சக்குபாய் தேவராஜ், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

1993 ஏப்ரல் 23]

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 20-வது, 21-வது, 22-வது 23-வது. 24-வது மற்றும் 25-வது அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பில் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம்.

(ஆ) கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,63,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை. மானியக் கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,14,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் எவரும் இருக்கையில் இல்லாத காரணத்தினால் வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப் படாததாகக் கருதப்படுகிறது.

மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

1993 ஏப்ரல் 23]

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 20-வது, 21-வது, 22-வது 23-வது. 24-வது மற்றும் 25-வது அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பில் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம்.

(ஆ) கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993—94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,63,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை. மானியக் கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,14,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் எவரும் இருக்கையில் இல்லாத காரணத்தினால் வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப் படாததாகக் கருதப்படுகிறது.

மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச் சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலத்தி லேயும், தமிழிலேயும் அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தமிழிலே இருப்பதை@ நான் படித்ததாகக் கருதி, அதைப் பதிவேட்டிலே ஏற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியதற்குப் பிறகு பதிலுரையாக நான் விளக்கங் களையும், அறிவிப்புகளையும் தர இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி.எம். ரங்க ராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச் சாலைகள் துறையினுடைய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த நீதி தேவதையாம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் தங்களுக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அரசியல் சாசனத்திலே Parliament Judiciary and Executive என்பது மூன்று தூண்கள். இவைகள் ஒவ்வொன்றும் சிறப்பாக செயல்பட்டால்தான் நாட்டு மக்களுக்கு நன்மைகளை செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான், நம்முடைய அண்ணல் அம்பேத்கார் அவர்கள் இந்த அரசியல் சாசனத்தைப் படைத்து, இதுவரையிலும் எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு நம்முடைய Written Constitution ஆன அரசியல் சாசனம் தனித் தன்மை பெற்று விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைக்கு இந்த நீதி நிர்வாகத்திலே பேசு கின்ற வாய்ப்பை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி நான் ஒன்றை இங்கே கூறியாக வேண்டும். ஏன் என்று சொன்னால் நம்முடைய முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் சென்ற 1989-ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே பேசுகின்ற போது ஒரு அரசினுடைய சாதனைகளை நிர்ணயிக்க வேண்டு மென்று சொன்னால், நீங்கள் முந்தைய அரசினுடைய சாதனையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார். அந்த அளவிலே நான் முந்தைய ஆட்சி, கருணா நிதியினுடைய ஆட்சி, நீதி நிர்வாகத்தை எப்படி கையாண்டது என்பதனையும் இன்றைக்கு தமிழகத்திலே ஒப்பற்ற தலைவி யாக விளங்குகின்ற டாக்டர் புரட்சித் தலைவி காலத்திலே

@377 முதல் 456 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

1993 ஏப்ரல் 23] [திரு. டி. எம். ரங்கராஜன்]

நீதித் துறை எப்படி, நீதி நிர்வாகத்தை அமைக்கின்ற இந்தச் சட்டத்துறை எப்படி செயல்படுகின்றது என்பதை தங்களின் வாயிலாக இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய அரசியல் சாசனத்திலே, அரசியல் சாசன ஆர்ட்டிக்கல் 161- என்பது கவர்னருக்கு கொடுக்கப்பட்ட பிரத்தியேகமான ஒரு அதிகாரம். அந்த அரசியல் சாசன விதி ஆர்ட்டிக்கல் 161-ன் கீழ் கவர்னர் அவர்கள் இந்த நாட்டிலே ஒருவர் எந்தக் குற்றத்தைச் செய்தாலும், அந்தக் குற்றங்களை மன்னித்து, அவர்கள் அந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் அல்ல என்பதனை அறிவிக்கின்ற பெரும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்திலே இது வரை எந்த மாநிலத்திலும், இதுபோன்ற இந்த கவர்னருடைய Power under Article 161-ஐ ஒருவரும் உபயோகப்படுத்தியதில்லை. ஆனால் தமிழகத்தை ஆண்ட கருணாநிதி அவர்கள், அவர்கள் தமிழகத்தை 1972-ஆம் ஆண்டு ஆண்டபோது இந்த ஆர்ட்டிக்கல் 161-ன்கீழ் கவர்னருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அன்றைக்கு கொலை வழக்கிலே தண்டிக்கப்பட்டவருக்கு எல்லாம் மன்னிப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். சர்க்காரியா கமிஷனுடைய ரிப்போர்ட் இந்த அவையிலே ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி 1982-ஆம் ஆண்டு வைக்கப்பட்டது. அந்தச் சர்க்காரியா கமிஷனுடைய ரிப்போர்ட்டிலே இதைப் பற்றி வருகின்றது. அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

In contrast to this, members of the D. M. K. controlled unions however, even though they were convicted by Court and sentenced to substantial terms of imprisonment and their Convictions were upheld by the High Court, were retained in service and allowed to resume duty after serving their terms of imprisonment. அதுமட்டுமல்லாமல் they were convicted and sentenced to varions terms of imprisonment by trial court, The conviction was upheld on appeal by the High Court. But on their petition before the Governor and on the recommendation of the D.M.K. Government, the Governor remitted their sentence' என்று சர்க்காரியா கமிஷன் தீர்ப்பிலே இது கூறப்பட்டிருக்கிறது. இது எதைக்காட்டுகிறது என்று சொன்னால், இன்றைக்கு நாட்டிலே ஜனநாயகப் படுகொலை நடக்கிறது என்று ஊர் முழுவதும் சொல்லி வருகிறார் கருணாநிதி அவர்கள். அன்றைக்கு திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நீதித் துறையிலே ஒருவர் குற்றவாளி என்று சொன்னதற்குப் பிறகும், அவரை தன்னுடைய அதிகார துஷ்பிரயோகத்தினால் கவர்னருக்கே என்று கொடுக்கப்

பட்டிருக்கின்ற அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி குற்ற வாளிகளையெல்லாம் விடுவித்ததோடு மட்டுமல்லாமல் அந்தக் குற்றவாளிகளுக்கு எல்லாம் வேலை கொடுத்து, அரசுப் பொறுப்பிலே வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

நேற்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய காவல் துறை எப்படி சீரும், சிறப்புமாக இப்போது நடைபெறுகிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதே காவல் துறை நம்முடைய கருணாநிதி அவர்கள் காலத்திலே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறார். அதனால்தான் 'நம்முடைய' என்கிறார். வேறு ஒன்றும் இல்லை.

திரு. டி. எம். ரங்கராஜன் : கருணாநிதி அவர்களுடைய காலத்திலே எப்படி காவல்துறை செயல்பட்டது என்பதையும் இந்த சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. சென்னை மாநகரினுடைய கமிஷனர் என்பவர் ஒரு எக்ஸ்க்யூட்டிவ் மாஜிஸ்ட்ரேட். இங்கே காவல் துறையில் பிடிக்கப்படுபவர்களை எல்லாம் பொறுத்தவரையில் அவர்களிடம் எஃப்.ஐ.ஆர். சமர்ப்பித்து, அவர்களுக்கு ரிமான்ட் கொடுக்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருப்பவர் கமிஷனர் அவர்கள். அந்த கமிஷனரை உபயோகப்படுத்தி கருணாநிதி அவர்கள் எப்படி அதிகார துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த சர்க்காரியா கமிஷனுடைய ரிப்போர்ட் இங்கே தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது.

It is rather strange that the initiative for withdrawing cases should have come from the Commissioner of Police and that too, on the ground that there was no independent or dis-interested evidence and therefore the trial court was not likely to believe that the evidence can convict the accused thereon......

என்று சொல்லி அன்றைக்கு கருணாநிதி அவர்கள் எப்படி எல்லாம் அதிகார துஷ்பிரயோகம் செய்தார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதேபோன்று இதே மன்றத்தில் இப்போது இந்த எதிர்க்கட்சி தலைவராக இருக்கின்ற நம்முடைய எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களும் ஒன்றை இங்கே (குறுக்கீடுகள்) அதாவது எதிர்க்கட்சித்தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் இந்த மன்றத்தில் பேசுகிறபோது இந்த சிவராசன் பற்றி, பத்மநாபா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட சிவராசன் பற்றி ஒன்றைச் சொன்னார்கள்.

1993 ஏப்ரல் 23] [திரு. டி. எம். ரங்கராஜன்]

அதனைத் தங்களுடைய கவனத்திற்கும், மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் 1991 ஆம் வருடம் செப்டம்பர் 23 ஆம் தேதி இந்த மன்றத்தில் பேசுகிற போது பத்மநாபா உள்ளிட்ட 14 பேர் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு சில முன்னாள் தி.மு.க. அமைச்சர்களுடைய நேர்முக உதவியாளர்கள் ஜாமீன் கொடுத் திருக்கிறார்கள்; அரசாங்க இல்லங்களின் முகவரிகளை அவர்கள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது; ஜாமீனில் வெளி வந்த குற்றவாளிகள் தலைமறைவாக ஆவதற்கு திராவிட முன் னேற்றக் கழக அரசு உதவி இருக்கிறது; அதேபோன்று ராஜீவ் காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட சிவராசன் ஏற்கெனவே ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்; திருட்டுத்தனமான பொருட்களைக் கடத்திவந்து, சென்னை விமான சுங்கத்துறை அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டபோது அவர்களைச் சுட்டுவிட்டு சிவராசன் தப்பி ஓடிவிட்டான்; அவனை மக்கள் விரட்டிப் பிடித்தார்கள்; அவன்மீது கடுமையான பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். மாஜிஸ்ட்ரேட் அவனை ஜாமீனில் விட அன்றையதினம் மறுத்துவிட்டார்; அதன்மீது உயர்நீதிமன்றத்தில் சிவராசன் அப்பீல் செய்தான். அவனுக்கு வக்காலத்து வைக்கவும், ஜாமின் கொடுக்கவும் அன்றைக்கு தி.மு.க. அரசில் உள்ள பெரும் புள்ளிகள் உதவியாக இருந்திருக்கிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்தில் சொல்லியிருக் கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தமிழகத்தை ஆண்டபோது தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து எப்படி எல்லாம் குற்றவாளிகளைத் தப்ப வைத் திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்த மேற்கோள்களை எல்லாம் நான் காட்டினேன். அதுமட்டு மல்லாமல் இன்றைக்கு தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் தான் இன்றைக்கு there is proper coordination between the judiciary and the executive–specially with the Chief Minister– ஒரு ஃபைன் ரேப்போர்ட் இருக்கிறது என்று சொன்னால் அது இந்த 'பிரியட்'-இலேதான் இருக்கிறது. இதுவரையில் எந்த அரசு இருந்தபோதும் இதுபோன்ற ஒரு 'கோஆர்டினேஷன்' இருந்த தில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லியாகவேண்டும்.

நண்பகல் 12-00

அது மட்டுமல்ல, இங்கே நேற்றைக்கு முன் தினம் பேசிய **பீட்டர் அல்போன்ஸ் அவாகள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.**

எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்திற்குத்தான் செல்ல வேண்டுமா? உங்களுடைய காவல் துறை இந்த தீர்ப்புகளை எல்லாம் மக்களுக்கு நீதி வழங்காதா என்று சொன்னார்கள். காவல்துறை எப்படி நீதி வழங்கமுடியும்? காவல் துறை குற்றவாளிகளை கண்டுபிடித்து நீதி மன்றத்தின் முன்பு நிறுத்தத்தான் முடியும். நீதிபதிகள் அவர்கள் செய்த குற்றத்தினுடைய திறனை ஆராய்ந்து அவர்களுக்கெல்லாம் தண்டனை வழங்கவேண்டும். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலே ஒரு விசித்திரமான கூட்டைப் பற்றிச் சொல்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியிடம் கூட்டு சேர்வதாக சொல்கிறார்கள். இதே மாமன்றத்திலே நாம் பார்த்திருக்கிறோம். எதிர்கட்சித் தலைவராக இருக்கின்ற காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகிறபோது மார்ச் 18-ம் தேதி 1992 ஆம் வருடம் இந்த மன்றத்திலே பேசுகிறபோது பிரபாகரனும் பொட்டு அம்மனும் எல். டி. டி. ஈ.-ம் தான் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய கொலைக்கு மூல காரணம் என்று சொன்னார்கள். அவ்வாறு சொல்லியதோடு மட்டுமல்லாமல், அவர்களே ''பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த பண்ருட்டி இராமச்சந்திரன் ஆதரிக்கிறீர்களே, இது நியாயம் தானா ?'' என்றும் கேட்டார்கள்.

ஆனால் இன்றைக்கு தலைகீழாக மாறி அதாவது பாட்டாளி மக்கள் கட்சியோடு கூட்டு சேர்ந்து அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்று சொன்னால் இதை எங்கே போய் சொல்வது. அதே போன்று பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, இந்த மன்றத்திலே ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே தான் புரட்சித் தலைவி ஒருவரால்தான் தீவிரவாதிகளை அடக்குவதோடும், இந்த நாட்டையும் பாதுகாக்கமுடியும். நாட்டினுடைய ஒருமையையும் பேணமுடியும் என்றெல்லாம் அன்றைக்குப் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் செய்வது என்ன?

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது மட்டுமல்ல, மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்ற சிவராசன், தணு போன்றவர்களுடைய படத்தை தன்னுடைய மார்பிலே குத்திக்கொண்டு ஊர்வலத்திலே வந்தவர்கள் (குறுக்கீடு)

1993 ஏப்ரல்23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன் அவர்கள் அதற்குத் தான் வருகிறார்கள். அந்த பேச்சைத் தான் 'கோட்' பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அவர் கோட் பண்ணட்டும். நீங்கள் உட்காருங்கள்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறெல்லாம் பேசி நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அன்றைக்குச் சொல்லியதை இன்றைக்கு உங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும். நாங்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு பதவியில் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். எங்களுக்குச் சுய நலமில்லை. இந்த அரசு ஏன் பதவியில் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். தேச விரோத சக்திகள் அடங்கிப் போகவேண்டும் என்று நினைக்கிறோம். தேச விரோத சக்திகள் செல்வாக்குப் பெறக்கூடாது என்று நினைக்கிறோம். தேச விரோத சக்திகள் செல்வாக்கு பெறாதது இன்றைக்கு மத்தியில் ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்குப் பாதுகாப்பு என்று நினைக்கிறோம். எனவே தான் நாங்கள் சொல்கிறோம் குங்குமம் சுமக்கிற கழுதையாகச் செயல்படத் தயாராக இருக்கிறோம் என்று அன்றைக்கு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று நேற்றைக்கு பத்திரிகைகளிலே பார்த்தோம் நம்முடைய ஞானசேகரன் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையினுடைய உறுப்பினரைப் பற்றி நம்முடைய உறுப்பினர் பேசலாம். பரவாயில்லை. இந்த அவையினுடைய உறுப்பினர்தான் அவர்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களும் இருவரும் ஒன்றாக கையைக் கோர்த்துக்கொண்டு மாலையைப் போட்டுக்கொண்டு போட்டோக்கு எல்லாம் போஸ் கொடுத்துக் துக் கொண்டிருக்கின்ற காட்சியை எல்லாம் நாம் பத்திரிகையிலே பார்த்தோம். இதே ஞானசேரகன் அவர்கள் ஜனவரி மாதம் 30-ம் தேதி 1992 ஆம் வருடம் ஒன்றைச் சொன்னார்கள். 'தாங்கள் பொறுப்பேற்றவுடன், தன் உயிரையும் துச்சமென மதித்து, தீவிரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தான் உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் நன்றி கலந்த காணிக்கையைப் படைத்து வாழ்த்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே பத்மநாபா கொலை வழக்கிலே [illegible] அரசின் முன்னாள்

செயலாளர் நடுவர் முன் கொடுத்த வாக்குமூலத்திலே தமிழ் நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர் ஒருவரும், அவருடைய மகனும், எம்.பி. ஒருவரும் தீவிரவாதிகள் தப்பிச் செல்ல காரணமாக இருந்ததாக குறிப்பிட்டிருந்தும் இன்னும் அவர்கள் ஏனோ கைது செய்யப்படவில்லை. அவர்களை உடனே கைது செய்து நிதியை நிலைநாட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று அன்றைக்குப் பேசினார்கள்.

பிற்பகல் 12-05

இதை நான் எதற்காக சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று சொன்னால், பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், டாக்டர் இராமதாஸ் அவர்களும் அன்லாபுள் அசோசியேசன் ஆக்ட்-ன்கீழ் செப்டெம்பர் மாதம் 18-ஆம் தேதி கைது செய்யப்பட்டு பின்பு விடுதலையும் செய்யப்பட்டார்கள். எல்.டி.டி.ஈ. என்பது ஒரு பான்ட் அசோசியேசன். இன்றைக்கு எல்.டி.டி.ஈ.-ஐ சப்போர்ட் செய்பவர்கள் நம்முடைய இராமதாசும், பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அந்த பாட்டாளி மக்கள் கட்சியுடன் இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் கூட்டு வைத்திருக்கிறார்கள். அதே போன்று ராஜீவ் காந்தி கொலையுண்ட சமயத்திலே இந்த எல்.டி.டி.ஈ.-யை எல்லாம், அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் எல்.டி.டி.ஈ.-ஐ ஆதரித்தார்கள், ஆயுத கலாச்சாரத்திற்கு வித்திட்டவர்களே இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தான் என்று அன்றைக்கு சாடியவர்கள் இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியுடனும், திராவிட முன்னேற்றக் கழகத்திடனும் கூட்டு வைத்து நாட்டிலே வலம் வருகிறார்கள் என்று சொல்லும்போது நமக்கே ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. ராஜீவ் காந்தியை கொன்றவர்களை ஆதரித்தவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், இன்றைக்கு அவர்களை இவர்கள் ஆதரிக்கிறார்களே, இதற்கு என்ன அர்த்தம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்ற நேரத்தில் என்னுடைய வினாவிற்கு விடை அளிப்பதற்கு அவர்கள் இன்றைக்கு இங்கே இல்லை, அதுதான் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அன்றைக்கு நாசுக்காக ஒன்றை சொன்னார்கள்போல் இருக்கிறது. ஏன் என்று சொன்னால் அவர்கள் சொன்னார்கள், தமிழக மக்களுக்கு ஞாபக மறதி அதிகம் என்று, தமிழக மக்கள் ஒருபோதும் இதை எல்லாம் மறக்க மாட்டார்கள். தமிழக மக்களுக்கு இவை எல்லாம் நன்றாகத் தெரியும், (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள்தான் இன்றைக்கு இதை எல்லாம் மறந்திருக்கிறார்கள், குறிப்பாக, தமிழகத்திலே இருக்கின்ற,

1993 ஏப்ரல் 23] [திரு.டி.எம். ரங்கராஜன்]

இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள்தான் இதை எல்லாம் மறந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய ஒப்பற்ற தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டை மதுரையிலே கூட்டிய போது—நடந்தபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ராஜீவ் காந்தியினுடைய கொலையினால் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ, காங்கிரசோ வெற்றி பெற வில்லை-தேர்தலில் வெற்றி பெறவில்லை என்ற கருத்தை தெள்ளத் தெளிவாக அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைக்கு அப்படி சொன்னபோது காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த நண்பர்களும், பத்திரிகையாளர்களும் எங்களுடைய முதல்வரையே கடுமையாக சாடினார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த கருத்தை எங்களுடைய தானைத் தலைவி சொல்லியது ஜூன் மாதத்தினுடைய கடைசியில்தான். ஆனால், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த புரசைவாக்கத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் இந்தக் கருத்தினை, அதற்கு முன்னதாகவே, இந்த அவையிலே மார்ச் மாதம் 27ஆம் தேதி, 1992ஆம் வருடம் சொல்லியிருக்கிறார்கள்.

'தலைவர் அவர்களே, அதே நேரத்தில் ராஜீவ் காந்தி இறந்த தால்தான் நாங்கள் வெற்றி பெறவில்லை என்பதை டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்' என்று அவர்களே ஒப்புதல் சாசனம் அளித்துவிட்ட பிறகு எங்களுடைய புரட்சித் தலைவி; தானைத் தலைவியை குறை கூறுவது என்பதை ஒருவரும் ஒத்துக்கொள்ள முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் எப்போதும் நியாயத் தையே, எது சரி என்று இருக்கிறதோ அதையே தான் பேசு வார்கள் என்பதை இந்த நேரத்திலேசொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நீதி நிர்வாகத் துறையினுடைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி யைச் சார்ந்த உறுப்பினர்களும் ஏன் ஜெயித்தார்கள் என்பதற் கான காரணத்தை சொல்ல நினைக்கின்றபோது உண்மையான காரணத்தை நாம் சொல்லாமலேயே இருக்கின்றோம். நாம் எல்லாம் வெற்றிப் பெற்றதற்குக் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நாடு முழுவதும் சுற்றிய காரணத்தினால்தான் என்பதை இங்கே நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாகத் துறையினுடைய மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகளை எல்லாம் பார்க்கின்றபோழுது, இங்கே நம்முடைய நீதிமன்றங்களில் எல்லாம் நடைபெறுகின்ற வழக்குகள், பைசல் செய்யப்பட்ட புள்ளி விபரம் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனைப் பற்றி நான் ஒரு கருத்து சொல்லியாக வேண்டும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் வேறு விஷயத்திற்கு போவதற்கு முன் இந்த அவைக்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்துவது அவசியம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-10

பாட்டாளி மக்கள் கட்சியோடு இன்று காங்கிரஸ் கட்சி கூட்டணி வைத்துக்கொள்ள முன்வந்ததைப் பற்றி, இது எவ்வளவு ஐரானிகலான விஷயம் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசிக் கொண்டிருந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையில் என்ன பேசினார் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். ஏற்கெனவே, பாட்டாளி மக்கள் கட்சியால் நடத்தப்பெற்ற ஊர்வலத்தின்போது இராஜீவ் காந்தி அவர்களைக் கொல்ல சதித் திட்டங்கள் தீட்டிய பிரபாகரனின் படங்கள், இங்கே தமிழ்நாட்டுக்கு வந்து அந்தச் சதித் திட்டத்தை மேற்பார்வையிட்ட சிவராசன் படங்கள் அந்த ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்பட்டன. அதுமட்டுமல்ல, நேரடியாக இடுப்பிலே குண்டைக் கட்டிக் கொண்டு இராஜீவ் காந்தியைக் கொன்ற தாணு என்ற பெண்ணின் படங்களும் அந்த ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்பட்டன. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இந்த அவையிலே பேசியபோது பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இவற்றை எல்லாம் நியாயப்படுத்திப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினரான திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் எழுந்து, பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும், இதற்கான நடவடிக்கையை எடுக்கச் சொல்லி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்த வேண்டுமென்றும் பேசியிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன். எனவே, அந்தக் கட்சியைத் தடை செய்ய வேண்டும் என்று பேசிய அதே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்று அதே இயக்கத்தோடு கூட்டணி வைத்துக்கொள்ள முன் வந்திருக்கிறார்கள் என்றால், இவர்களைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களுக்கெல்லாம் தமிழக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராஜீவ் காந்தியினுடைய ஆன்மா கூட இங்கே சுற்றிக்கொண்டு, இதைப் பார்த்துக்கொண் டிருக்கும் என நினைக்கிறேன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராகி, சட்டமன்றத்திற்கு வரும்போது நாம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறோம் அப்போது ஒவ்வொருவரும் சொல்லுவது என்னவென்றால், அரசியல் சாசனத்திற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் மூத்த உறுப்பினரான மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தன்னைக் கொலை செய்வதற்கு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அந்தப் பகுதிக்கு ஒரு கூட்டத்திற்கு வந்தபோது, ஆளை வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டை வைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியுடன் இப்போது காங்கிரஸ் கட்சி கூட்டு வைத்துக்கொள்வது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இது இந்த அவைக்குத் தேவையான செய்தி என்பதால், இந்தச் செய்திகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் விடுதலைப்புலிகளை ஆதரித்து 27–3–1992-இல் அவர் பேசியதாவது—ஐ கோட் "புலிகளை ஆதரிப்பதாக, ஒரு முறையல்ல, ஐந்து முறை சொன்னேன்" என்று திருப்பத்தூரில் பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு, விடுதலைப்புலிகளைத் தொடர்ந்து ஆதரிப்போம், விளைவுகளைப் பற்றிக் கவலையில்லை, எதையும் சந்திக்க தயார், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எத்தனை தடைகள் இருந்தாலும் எங்கள் ஒட்டு மொத்த ஆதரவு விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எப்போதும் உண்டு. இதனால், வரும் விளைவுகளைச் சந்திக்க எப்போதும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று டாக்டர் ராமதாஸ் அவர்கள் 18–5–1992 இல் சேலத்தில் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு விடுதலைப் புலிகள் இயக்கத்தை நாம் ஆதரிக்கிறோம் என்று பல ஆண்டுகளாகக் கூறி வருகிறோம், எப்படிப்பட்ட அடக்கு முறையை ஏவிவிட்டாலும், நம் கொள்கையிலிருந்து பின்வாங்க மாட்டோம், சட்டம ஒழுங்கு

விடுதலைப்புலிகளால்தான் கெட்டு விட்டது என்பவர்கள் என்னுடன் மேடையில் விவாதிக்கத் தயாரா என்று டாக்டர் ராமதாஸ் அவர்கள் 6–6–1992 அன்று பேசி இருக்கிறார்கள்.

அடுத்து, விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்—இந்தப் பேச்சு திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் சென்னையில் 27–1–1993 அன்று பேசியிருக்கிறார்கள். அவர் பேசியதாவது—ஐ கோட்—விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் பாட்டாளி மக்கள் கட்சி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதற்கு அமைதி ஊர்வலம் நடத்தாத பாட்டாளி மக்கள் கட்சி, புலி கிட்டு மறைவுக்கு அமைதி ஊர்வலம் நடத்துகிறார்கள் என்று அவர் பேசியிருக்கிறார்.

பிற்பகல் 12-15

அது மட்டுமல்ல, இந்த பாட்டாளி மக்கள் கட்சியுடன் காங்கிரஸ் கட்சி கூட்டு வைத்துக்கொள்ளவேண்டுமென்ற நிலையை ஏற்கெனவே திட்டமிட்டு அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த செய்திகளை வைத்து நான் சொல்கிறேன். 17–3–1993 அன்று இங்கே இருக்கிற சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருடைய வீட்டில் மதிய உணவு எடுத்துக்கொண்டு அங்கே வாழப்பாடி ராமமூர்த்தியும், போளூர் வரதனும், திண்டிவனம் ராமமூர்த்தியும் சேர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியுடன் காங்கிரஸ் கட்சி கூட்டு வைத்துக்கொள்ளவேண்டும்என்பதற்கான எல்லாவிதமான முன்னேற்பாடுகளையும் செய்து இருக்கிறார்கள் என்ற செய்திகளையெல்லாம் இந்த அவையிலே சொல்லவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், இவைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தருணத்தில் இன்னொரு முக்கியமான செய்தியை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஏற்கெனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் போன்றவர்களும் பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதே கருத்து இந்த அரசாங்கத்திடமும் இருந்த காரணத்தால் மத்திய அரசுக்குத் தேவையான ஆதாரங்களை எல்லாம் வைத்து ஒரு கடிதம் எழுதியிருந்தேன். பாட்டாளி மக்கள் கட்சியை ஏன் தடை

1993 ஏப்ரல் 23] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

செய்ய வேண்டும் என்பதற்கான காரணங்களையெல்லாம் விளக்கமாக அந்தக் கடிதத்தில் கூறி, அந்தக் கட்சியை தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். அதனையடுத்து, மத்திய உள்துறை அமைச்சர் கூட ஒரு பேட்டியில் சொன்னது பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. அந்தச் செய்திகள் எல்லாம் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்வது குறித்து மத்திய அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. தீவிரமாக ஆய்ந்து கொண்டிருக்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக அண்மையில் மிக முக்கியப் பொறுப்பு வகிக்கும் ஒரு மத்திய அமைச்சர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அவர் என்னிடம் சொன்னது, நீங்கள் ஏற்கெனவே பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தீர்கள். அந்த நடவடிக்கையை மத்திய அரசாங்கம் இப்போது எடுக்க விரும்பவில்லை. ஆனால், சில அதிகாரங்கள் மாநில அரசுக்கே இருக்கிறது. நீங்களாகவே அந்த பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்யலாம். அப்படிச் செய்தீர்களானால் நாங்கள் அதை ஆதரிக்கிறோம் என்று அந்த மத்திய அமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

அதற்கு நான், "இல்லை, எல்.டி.டி.ஈ.யை ஒரு Banned Organisation என்று எப்படி மத்திய அரசு அறிவித்ததோ, அதைப்போலவே நீங்களாகவே இந்த நடவடிக்கையை எடுத்தால்தான் சரியாக இருக்கும்" என்று சொல்லி, 'நீங்களே அந்த நடவடிக்கையை எடுங்கள் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்லி, தொலைபேசியை வைத்துவிட்டேன்.

அதற்குப் பிறகு அவர்கள் இந்த நடவடிக்கையை எடுப்பார்கள், பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்வார்கள் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அதற்கு மாறாக, பாட்டாளி மக்கள் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, இதற்கு அழுவதா, சிரிப்பதா, வேதனைப்படுவதா என்றே புரியவில்லை. இதற்கெல்லாம் தமிழக மக்கள்தான் சரியான தீர்ப்புக் கூற வேண்டும். நிச்சயமாக இராஜீவ் காந்தியின் கொலைக்கு, படுகொலைக்குக் காரணமாக இருந்த தீவிரவாதக் கும்பலுக்கு ஆதரவளிக்கின்ற ஒரு இயக்கத்தோடு தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டால், இராஜீவ் காந்தியின் ஆத்மாவே இவர்களை மன்னிக்காது என்பது திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி).

[1993 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்ட்டிகிள் 188-ன் கீழ் எடுக்கிற பதவிப் பிரமாணததின் அடிப்படையில், ஒவ்வொரு உறுப்பினரும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு, "I have faith in the Constitution and respect the ideals of the Constitution என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே பார்க்கிறபோது, இன்றைக்கு, Bannel Association உடன், நாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கிற சக்திகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியை ஆதரிக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம், இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே இருப்பதற்குத் தகுதி பெற்றவர்கள்தானா என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், This amounts to violation of their oath of office under Article 188 of the constitution அது மட்டுமல்லாமல், அன்றைக்குச்சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, பெண்ணின் கற்புக்கு ஒரு இலட்சம் ரூபாய்தானா இந்த அரசு நிர்ணயித்திருக்கிறது என்ற தொனியிலே, பெண் இனத்தையே கேவலப்படுத்துவது போல பேசினார்கள்.

பிற்பகல் 12-20

அதைப்போன்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த மாமன்றத்தில் வெளிநடப்பு செய்து, வெளியில் சென்று பஸ் மறியலில் ஈடுபட்டார்கள். இதை நான் எதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், நம்முடைய அரசியல் சாசனததினுடைய ஆர்ட்டிகிள் 51-ஏ "Fundamental Duties to every man" பற்றிச் சொல்கிறது.—அதிலே சொல்கிறபோது—"to renounce practices derogatory to the dignity of woman" என்பது ஒரு "Fundamental Duty" என்பதும் அதைப்போல, "to safeguard public property and to abjure violence" என்பதும் ஒரு "Fundamental Duty"யாக சொல்லப்படுகிறபோது, வன்முறையைத தூண்டுகிற விதத்தில், பெண்களை இழிவுபடுத்துகிற வகையில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டது இந்த "Fundamental Duty"க்கு முரணாக இருககிறதால் அவர்கள் எல்லாம் இந்த மாமன்றத்தில உறுப்பினராக இருக்கிற தகுதியை இழந்துவிடுகிறாகள் என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பூந்தமல்லியில் இருக்கிற Designated Court-க்கு செல்கிற ஒரு வாய்ப்பினைப் பெற்றேன் அங்கே போகிறபோது அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு சில குறைகள் இருக்கின்றன என்பதை அறிய முடிந்தது. அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்

1993 ஏப்ரல் 23] [திரு. டி. எம். ரங்கராஜன்]

பட்டிருக்கிறேன். அங்கே வேலை செய்கிற கிளார்க்குகள் எல்லாம் சென்னை மாநகரிலிருந்து வந்து செல்கிறார்கள். அவர்களுக்கு பஸ் வசதி இல்லை. ஆகவே, தனியாக ஒரு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல அங்கேயிருக்கின்ற கழிப்பறைகளை சுத்தம் செய்ய ஸ்கேவஞ்சர் கொடுக்கப்படாததால் அவர்கள் கஷ்டப்படுகிற காரணத்தால், உடனடியாக அரசு அந்த வசதியையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல நம்முடைய ஸ்டாடிஸ்டிக்ஸ் இலாக்காவில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த வழக்குகள் டிஸ்போசல் பற்றி பார்க்கின்றபோது இந்த மாமன்றத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் "disposal of cases" எப்படி நடைபெறுகிறது என்று சொன்னால், "batch cases" எல்லாம் இன்றைக்கு லிஸ்ட் செய்யப்பட்டு எந்தவிதமான 'urgency' இல்லாமல் அவைகள் டிஸ்போசல் செய்யப்படுகின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

அதுமட்டுமல்லாமல் இந்த பேட்ச் கேசஸ் டிஸ்போசல் செய்வது நம்பர்களைக் கூட்டிக் காட்டுவதற்குத்தான். உண்மையாக, சீக்கிரமாக டிஸ்போசல் செய்ய வேண்டிய கேஸ், அர்ஜன்ட் கேஸ் எல்லாம் பல ஆண்டுக் காலமாக வெயிட்டிங்-லிஸ்ட்டிலிருந்து இதுவரையில் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, இந்த பேட்ச் கேஸ்களை எடுத்துக் கொள்கிறபோது இன்றைக்கு கவர்ன்மெண்ட் பிளீடர்ஸ்க்கு கவுண்டர் பைல் பண்ணுவதற்கு போதுமான டைம் கொடுக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் சில நீதிபதிகள் ஹேபிச்சுவலாக நம்முடைய அரசைக் குறை கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வழக்கிலே ஐ.ஏ.எஸ். அதிகாரி, Law officer அவர்களுக்கு எந்தவிதமான ஆப்பர்சூனிட்டி கொடுக்காமல் அவர்கள் Condemn செய்யப்பட்டிருக்கிறார்கள். பம்பாய், கல்கத்தா Bar Association-ல் எல்லாம் ஒரு ஜட்ஜியினுடைய பிள்ளை அந்த ஹைகோர்ட்டில் பிராக்டிஸ் செய்தால் அந்த ஜட்ஜ் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று ரெசலூஷன் பாஸ் செய்திருக்கிறார்கள். ஆனால் சென்னையில் நீதிபதிகளுடைய பிள்ளைகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிராக்டீஸ் செய்த போதிலும்—இன்றைக்கு பல தவறுகள் நடைபெறுகிறது என்று வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டுவதால், இந்த நீதிபதிகளை எல்லாம் வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு பரிந்துரை செய்ய வேண்டும்.

அதைப் போல "Public Interest Litigation" என்ற போர்வையில் இன்றைக்கு பல்வேறு வழக்குகள் எல்லாம் போடப்படுகின்றன. எப்படி இங்கே நம்முடைய "Zero Hour Heroes" இருக்கிறார்களோ, இதைப் போல "Public Interest Litigation"

என்ற பெயரில் (Public Interest Litigation)-க்காகப் பல வழக்குகள் போடப்படுகின்றன. உச்சநீதிமன்றம் ஹைகோர்ட்டுகள் இது போன்றவழக்குகளை (cheap publicity) செய்யக்கூடாது என்று தீர்ப்பு அளித்திருந்தபோதிலும், நம்முடைய உயர்நீதிமன்றம், ஏனோ தெரியவில்லை, இதுபோன்ற வழக்குகளை எல்லாம் (encourage) செய்கிறது. இதுபோன்று போடப்பட்ட வழக்குகள் பல இன்னும் தள்ளுபடி செய்யப்படவில்லை.

அது மட்டுமல்லாமல் நம் மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எல்லோரும் (we are accountable to the people but it is not so in the case of Judges) என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜட்ஜ்களிடையே "groupism" நிலவுகிற காரணத்தால் பல முக்கியமான விஷயங்களில் (decide) பண்ண முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதனால், பல administrative problem உண்டாகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று அங்கே நடைபெறுகிற ஜட்ஜிகளுடைய மீட்டிங்கில் என்ன நடைபெறுகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஏன் என்றால், சீக்ரசி என்பது ஜட்ஜ்மென்ட்டைப் பொறுத்ததுதான். அவர்கள் டிக்டேட் செய்கின்ற ஜட்ஜ்மென்ட் ஒன்றைப் பற்றித்தான் சீக்ரசி இருக்குமே தவிர, இந்த உயர்நீதிமன்றங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதற்கு சீக்ரசி தேவையில்லை. ஏன் என்று சொன்னால், மக்கள் அங்கே என்ன நடக்கிறது என்பதையெல்லாம் குறித்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்திலே ஸ்பீடி டிஸ்போசலுக்காக இன்றைக்கு பல்வேறு நீதிமன்றங்களை எல்லாம் நம்முடைய அரசு அமைத்து வருகிறது. நம்முடைய சட்டத்துறை ஒரு அட்வைசரி போர்ட்-ஆகத்தான் செயல்படுகிறதே ஒழிய, ஒரு எக்சிகியூட்டிவ்-ஆக செயல்பட முடியாது. ஏன் என்று சொன்னால், அந்த அதிகாரம் முழுவதும் கோர்ட்டுக்குத்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இன்றைக்கு நம்முடைய சட்டத்துறை மிகவும் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும், சட்டத்துறை அமைச்சர் அவர்களையும் வாழ்த்தி எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள் மீது இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு

1993 ஏப்ரல் 23]

[திரு. ஓ.எஸ். அமர்நாத்]

வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டும், அதே நேரத்திலே என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, இந்தச் சட்டமன்றத்திலே அமர வைத்து என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு இன்றைக்கு நான் உரையாற்றுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செம்மையான நீதி நிர்வாகம் என்பது எந்த ஒரு அரசுக்கும் தலையாய கடமை என்பது வெண்ணிடை மழை போன்றது. இந்த அரசினுடைய நிர்வாகம் நான்கு கூறுகளைக் கொண்டதாக இருக்கிறது. காவல்துறை, சட்ட வல்லுநர் துறை, நீதித்துறை, சிறைத்துறை என்று நான்கு அமைப்புக்களைக் கொண்டுதான் எந்த ஒரு அரசும் உருவாகி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இன்றைக்குத் தமிழகத்திலே சமூக நீதி காக்கப்படவேண்டும் யார் குற்றம் செய்தாலும் அவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல சிந்தனையோடு இன்றைக்குத்தமிழகத்தை ஆளுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற சமூகக் கொடுமைகள் தடுக்கப்பட வேண்டும், அவை எப்படிப்பட்ட கொடுமைகளாக இருந்தால் என்ன, வரதட்சணைக் கொடுமையாக இருந்தால் என்ன, மற்ற குடும்பப் பிரச்சினையாக இருந்தால் என்ன? நேற்றைய தினம் சட்டமன்றத்திலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கையின்போது சொன்னார்கள். வரதட்சணைக் கொடுமையை விசாரிப்பதற்கு என்று சென்னை மாநகரிலே பெண்களுக்காக பெண்களால் பெண்கள் சார்பு ஆய்வாளர்களை நியமித்து, அவர்கள் மூலமாக அந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள்.

அதேபோல், இன்றைக்கு நீதி நிர்வாகம் மானியத்தின் கொள்கைக் குறிப்பிலே வரதட்சணைக் கொடுமை, குடும்ப விவாகரத்து போன்ற வழக்குகளை விசாரிப்பதற்கு என்று மதுரையிலே தனியாக குடும்ப நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்தித் தருவதாகச்சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழகத்தின் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமூக நீதி காக்கப்பட வேண்டும் என்ற ஒரு நல்ல உள்ளத்தோடு இன்றைக்குப்பெண்களுக்காக ஒரு குடும்ப நீதிமன்றம் சென்னையிலே எப்படி இயங்குகிறதோ, அதைப்போல மதுரையிலேயும் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே இந்தத் தமிழக மக்கள் தன் மீது வைத்திருக்கிற அளவு கடந்த அன்பினாலும் பெண்களுக்கு இந்தத் தமிழகத்திலே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று ஒரு நல்ல எண்ணத்தோடு இந்தக்குடும்ப நீதிமன்றத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

[திரு.ஓ.எஸ்.அமர்நாத்]

சட்ட அமைச்சர் பொறுப்பில் இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் இந்தக் குடும்ப நீதிமன்றம் மதுரை மாவட்டத்திலே எந்த ஆண்டு துவக்கப்படும், அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவர்களுடைய விளக்கத்தில் சொல்ல வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, அரசு குற்றவியல் வழக்கறிஞர்களுடைய குறைகளை ஆராய்வதற்கு, அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்த நடைமுறை மாறி, டைரக்டர் ஆப் பிராசிகியூஷன் என்ற ஒரு பெரிய அமைப்பை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் தங்களுக்கு என்ன குறைகள் இருந்தாலும் அல்லது வேலைப் பணிமாற்றம் செய்தாலும், அவர்களுடைய குறைகளை நேரடியாகத் தெரிவிப்பதற்கு ஒரு டைரக்டர் வேண்டும் என்று அந்த குற்றவியல் வழக்கறிஞர் சங்கத்தின் சார்பாக முறையிடப்பட்டது.

பிற்பகல் 12.30

உடனடியாக புரட்சித் தலைவி அவர்கள் சென்னையிலே உள்ள அனைத்து குற்றவியல் வழக்கறிஞர், மூத்த குற்றவியல் வழக்கறிஞர் கிரேடு 1, 2 ஆகியோர்களைச் சந்தித்து சட்ட அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு கே.ஏ.கே. அவர்களைச் சந்தித்து டைரக்டர் ஆப் ப்ராசிக்கியூஷன் என்ற ஒரு அமைப்பை உருவாக்குங்கள், அதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளோ அல்லது அந்தத் துறையிலே இருக்கின்ற சீனியர் அஸிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராசிக்கியூட்டர்களோ டைரக்டர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்று ஒரு நல்ல உத்தரவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே குற்றவியல் அரசு வழக்கறிஞர்கள் மத்தியிலே ஒரு நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது என்று சொல்லலாம். மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத்தான் இன்றைக்கு தமிழகத்தின் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் நிர்வாகம் முதலியவை இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இன்றைக்கு டைரக்டர் ஆஃப் ப்ராசிக்கியூஷன் என்ற ஒரு அமைப்பை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று குடும்ப நீதிமன்றத்திலே குடும்ப விவகாரங்களை விசாரிக்கின்ற அந்த நேரத்திலே வழக்கறிஞர்கள் ஆஜராக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை நிவர்த்தி செய்து குடும்ப நீதிமன்றத்திலே ஒரு கணவன் மனைவி சமாச்சாரங்களை விசாரிக்க வேண்டும் என்றால் உண்மையிலேயே கிராமத்திலே இருந்து வருகின்ற ஒரு பெண் எப்படி நீதிபதியிடம் தன்னுடைய குறைகளைச் சொல்ல முடியும். வழக்கறிஞர்கள் மூலமாகக் குறைகளைச் சொல்வது என்பதுதான் மிகவும் எளிதாக இருக்கமுடியும். ஆனால் அட்வகேட் ஆக்டிலே

[திரு.ஓ.எஸ். அமர்நாத்]

குடும்ப நீதிமன்றத்திலே வழக்கறிஞர்கள் கட்சிக்காரர்கள் சார்பாக ஆஜராக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அட்வகேட் ஆக்டிலே வழக்கறிஞர்கள் ஆஜராகலாம் என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சட்ட அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி.எம். ரங்கராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** திரு. ரங்கராஜன் எழுப்பியதும், நான் சொன்னதும் அவைக் குறிப்பிலே இல்லை. நீக்கப்படுகிறது. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்

திரு. ஓ. எஸ். அமர்நாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தமிழகத்தில் உள்ள வழக்கு சார்ந்த மக்கள் உயர் நீதிமன்றத்திலே ஏதேனும் ஒரு வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென்றால் தமிழகத்தை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் சட்டமன்ற வளாகத்தில் எந்தப் பகுதியிலும் அமர்ந்து பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி கொடுக்கக் கூடாது. ஆகவே அப்படிக் கொடுப்பதை உறுப்பினர்கள் உடனடியாகத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மக்கள் தங்களுடைய வழக்கு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் தமிழகத்தை தலைமையிடமாகக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்திற்குத்தான் வர வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆனால் அந்த நிலை மாற வேண்டுமென்றால் மதுரையிலே ஒரு உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தென் மாவட்டங்களில் உள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் ஒரு கோரிக்கையை வைத்து அதன் விளைவாக 1972 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை மதுரையிலே ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், உயர்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெறுகிறதுறது.

1993 ஏப்ரல் 23]

[திரு.ஓ.எஸ். அமர்நாத்]

நீதிமன்றம் ஏற்படுத்துகின்ற பொறுப்பு மத்திய நாடாளுமன்றத்திற்கு இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய மாநில அரசு அரசியல் சட்டம் 246—வது பிரிவின் கீழே மதுரை மாவட்டத்திற்கு உயர்நீதிமன்ற கிளைக் ஒன்றை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதை மத்திய அரசு பரிசீலிப்பதற்காக ஜஸ்வந்த் சிங் கமிஷனை ஏற்படுத்தி அந்தக் கமிஷன் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகம், மதுரை பக்கத்தில் உள்ள இடங்களையெல்லாம் பார்வையிட்டது. மதுரையில் உள்ள வழக்கறிஞர்கள் எண்ணிக்கை, மதுரையில் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை மதுரையிலிருந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தேங்கியிருக்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை இதையெல்லாம் பார்க்கின்றபோது கண்டிப்பாக மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை நிறுவ வேண்டும் என்று அந்த ஜஸ்வந்த் அறிக்கையிலே சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12.35

ஆனால் இதுவரை மத்திய அரசு தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அமைப்பது சம்பந்தமாக எந்தவிதமான பதிலையும் கொடுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தமிழக வழக்கறிஞர் மக்களுடைய சார்பாக மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை அமைப்பது குறித்து உடனடியாக மத்திய அரசோடு கலந்து ஒரு ஆண்டுக்குள் அல்லது 6 மாதத்திற்குள் மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மிக்க பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த சட்டமன்றத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சட்டத்திலே உள்ள ஒரு குறையைச் சுட்டிக்காட்டினார்கள். Supperission of Immaral Tragic Girls and Women என்று இருக்கிறது. அந்தச் சட்டத்திலே பெண்கள் தவறான வழியில் செய்யும் குற்றங்களுக்கு பெண்கள் மட்டும் பொறுப்பாக முடியாது. அந்தக் குற்றங்களைச் செய்வதற்குத் துணையாக இருக்கின்ற ஆண்களும் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரு சமூக நீதியை ஏற்படுத்துகின்ற வகையில் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லி இந்த சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதை மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து உடனடியாக அந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் வழக்கறிஞர்களாகப் பணியாற்றுகிறார்கள். இந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்று இருக்கிற மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்கள் சட்டம்

1993 ஏப்ரல் 23]

[திரு.ஓ.எஸ். அமர்நாத்]

படித்த வழக்கறிஞர். இன்றைக்கு இளம் வழக்கறிஞர்களாகப் பயிற்சிப் பெறுகின்றவர்களுக்கு தமிழக அரசு ஸ்டைபண்டு என்ற ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இங்கே பல அமைச்சர்கள் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. ரகுபதி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் இவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும், இளம் வழக்கறிஞர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்றும் அவர்கள் தங்களுடைய தொழிலை நிலைநாட்ட வேண்டும் என்றால், அவர்கள் எப்படி எல்லாம் சிரமப்படுகிறார்கள் என்று. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் இளம் வழக்கறிஞர்களுக்கு ஸ்டைபண்டு நிச்சயமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கேரள மாநிலத்தில் இளம் வழக்கறிஞர்களுக்கு அரசின் மூலம் ஸ்டைபண்டு வழங்கப்படுகிறது. அதைப் போல நம்முடைய தமிழக அரசும், முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடனடியாக இளம் வழக்கறிஞர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை நீதிமன்றத்திலே வழக்கறிஞர்களுக்கு என சேம்பர் ஒன்று இல்லாமல் இருக்கிறது. வழக்கறிஞர்கள் தங்களுடைய வழக்குக் கட்டுகளையோ அல்லது தன் வழக்குகளை முடித்துவிட்டு பிற வழக்குகளைப் பற்றி பேச வேண்டுமென்றால் அவர்களுக்கு சேம்பர் வேண்டும். அந்த சேம்பர் வசதி இல்லாமல் இருக்கிறது. மதுரை நீதிமன்ற வளாகத்தில் உடனடியாக சேம்பர் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரையிலேவழக்கறிஞர்கள் உட்காருவதற்குக் கூட பர்னிச்சர் இல்லாத நிலை இருக்கிறது. சேர், பென்ச் முதலியவை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதை உடனடியாக சரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை நீதிமன்றக் கட்டடத்தில் குடிநீர் பிரச்சினை மிகவும் அதிகமாக இருக்கிறது. வரும் கட்சிக்காரர்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒரு முறை நான் வழக்கறிஞராக இருக்கிற காரணத்தால் நான் நீதிமன்றத்திற்குச் சென்றேன். குடிநீர் வேண்டும் என்று கேட்டார் கட்சிக்காரர். அந்தப் பானையில் இருக்கிறது என்று சொன்னேன். தெரியாமல் அவர் நீதிபதியின் அறைக்குப் போய் தண்ணிர் குடித்து விட்டார்,

உடனடியாக வந்தது பிரச்சினை. அங்கே நீதிமன்றக் காவலர்கள் உடனே அழைத்து ஏன் உள்ளே வந்தாய் என்று கேட்டு நான் தண்ணிர் குடிக்கத்தான் வந்தேன் தண்ணிர் இங்கே இல்லை என்றவுடன் பிறகு அவர்களை சமாதானம் செய்து அவர்களை அழைத்துக் கொண்டு வந்தேன், அங்கே இருக்கின்ற ஒரு மோட்டார் ரிப்பேர் ஆகி இருக்கிறது. பொதுப்பணித்துறையினுடைய கண்ட்ரோலில் அந்த நீதிமன்ற வளாகம் இருக்கிறது. உடனடியாக அங்கே ஒரு புதிய மோட்டாரை அமைத்துக் கொடுத்து ஒரு ஆழ் குழாய்க் கிணற்றை அமைத்துக்கொடுத்தால் தான் குடிநீர் பிரச்சினை தீரும் என்பதைச் சொல்லி மேலும் (மணியடிக்கப் பெற்றது). மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்களும் ஒரு வழக்கறிஞர், ஆகவே வழக்கறிஞர்களுக்கு அதிகபட்ச ஓய்வுப் பயனாக ரூபாய் 30 ஆயிரமாக இருந்தது. அந்தத் தொகையை 30 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்ற முயற்சியையும்; இந்த அரசு எடுத்த முடிவினை, கொள்கைக் குறிப்பிலே இருந்ததை நான் உண்மையிலேயே வழக்கறிஞர்கள் சமூகத்தின் சார்பாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40.

இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியின் சார்பாக நான் ஒரு சில குறைபாடுகளை இங்கே வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே, 'ட்ரை லெட்ரின்' என்ற பழைய காலக் கழிப்பறைகள் இருக்கின்றன. அதனை மாற்றி ஃப்ளஷ் அவுட் லெட்ரின் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். இஸ்மாயில்புரம், பாலரங்காபுரம், கீரத்துறை, அனுப்பானடி போன்ற பகுதிகளிலே ட்ரை லெட்ரின் என்ற சிஸ்டம் இருக்கிறது. அதை உடனடியாக மாற்றி அமைத்து, ஃப்ளஷ் அவுட் லெட்ரின் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள கீழவெளி வீதி, கீழமார்க்கெட் வீதி, தெற்கு மாசி வீதி போன்ற சாலைகளிலே, சாலைகளின் இடது புறமும், வலதுபுறமும், இரண்டு புறங்களிலும் இரண்டு அடி, மூன்றடி அளவுக்கு மண் குவிந்து இருக்கிறது. அதை உடனடியாகச் சுத்தம் செய்ய வேண்டும். ஏனென்றால், அந்தப் பகுதியிலே மணல் இரண்டடி, மூன்றடி குவிந்து கிடக்கின்ற காரணத்தினால் ஏராளமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதை மனதிலே கொண்டு, உடனடியாக அங்கே குவிந்து கிடக்கின்ற மண்ணை நீக்கித் தர வேண்டுமென்று நான் மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வ

1993 ஏப்ரல் 23] [திரு. கு. சீனிவாசன்]

மாக, எங்களை எல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கும் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, நீதி நிர்வாகம் மற்றும் சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கையில் பேச விழைகின்றேன். முந்தைய ஆட்சியில், ஆயுதக் கலாச்சாரம், இனப் படுகொலைகள் தலை விரித்தாடிய தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கிக் காட்டிய பெருமை நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்றால் அது மிகையாகாது. தமிழக மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் நிம்மதியாகவும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமுதாயக் குற்றங்களிலிருந்து விடுபட்டு பயமின்றி அமைதியாக வாழ வழிவகை செய்த தென்புலத்தின் திராவிட சக்தி டாக்டர் புரட்சித் தலைவியை நல்ல மனம் கொண்டவர்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் போன்ற புத்திபேதலித்தவர்கள் தான் இன்றைய தினம் புலம்பித்தள்ளிக்கொண்டு இருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தினம் தமிழகத்தில் நீதி நிர்வாகம் சரியாகச் செயல்படுகிறது என்றால், சட்டம், ஒழுங்கு முறையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு கிறது என்றால் அது புரட்சித் தலைவி அவர்களின் தன்னலம் கருதாத உழைப்பாலும், தன் உயிரையே தியாகம் செய்யத் தயாராகி இத்தரணி மக்களைக் காப்பாற்ற அவர் எடுத்திருக்கும் உறுதியான நடவடிக்கையாலும்தான் என்றால் மிகையாகாது. நீதி நிர்வாகம் என்பது பராமரிக்கப்பட வேண்டுமென்றால், காவல்துறை, சட்டத்துறை, நீதித் துறை, சிறைச்சாலைத் துறை இந்த நான்கும் ஒருங்கிணைந்து ஒன்றோடு ஒன்று இணைந்த வகையிலே செயல் பட்டால்தான் நாட்டிலே சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும். இந்த நான்கும் உலகமே பாராட்டக்கூடிய வகையிலே இன்றைய தினம் புரட்சித் தலைவி ஆட்சியிலே, நல்லமுறையிலே செயல்பட்டு வருகிறதென்றால் அது மிகையாகாது. காவல் துறையைப் பொறுத்த அளவில் அவர்கள் எந்த அளவுக்கு தகுதியாக, திறமையாகச் செயல்பட வேண்டும் என்கின்ற காரணத்தை மனதிலே கொண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி. அவர்கள் இன்றையதினம் காவல்துறை அதிகாரிகளுக்கு இந்த அளவுக்குச் சலுகைகளை அளித்து உள்ளார்கள். இன்றையதினம் காவல்துறை அதிகாரிகள் தங்களுடைய கடமையை ஆற்றுகின்ற போது, இறப்பார்களேயானால், அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய், அவர்களுடைய குடும்பங்களைக் காக்கின்ற வகையிலே அறிவித்து இருக்கிறார்கள் என்றால், இந்த நிகழ்ச்சி இன்றையதினம் இந்தியத் திருநாட்டிலேயே தமிழகத்தினுடைய புரட்சித் தலைவி அவர்களால்தான் முடிந்த ஒன்று. அவர்களுடைய சாதனை என்று இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். காவல்துறை நாட்டில் ஏற்படும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து, எந்தக்குற்றமாக இருந்தாலும் அந்தக் குற்றவாளி

களை நீதிமன்றத்திலே கொண்டு நிறுத்துகின்றபோது அந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களை நல்ல முறையிலே, வழக்கறிஞர்கள் துணையோடு விசாரித்து, நியாயமான தீர்ப்புகளை வழங்குகின்ற நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் அதற்குப் பின்னால் அவர்கள் தண்டனை அடைவார்களேயானால், சிறைச்சாலைகளிலே அவர்கள் அடைக்கப்பட்டு அந்தச் சிறைச்சாலைகளிலே அவர்கள் நல்லவர்களாக வருவதால் அவர்கள் மறுபடியும் அவர்களுக்கு நல்ல போதனைகளை உருவாக்கி அவர்களை குற்றவாளிகளிலிருந்து நல்ல முறையிலே திருந்தி வெளியே வருவதற்கு உறுதுணையாக இருக்கின்ற சிறைச்சாலை அதிகாரிகள் எந்த அளவிற்கு நாட்டிலே நல்ல முறையிலே செயல்பட்டால் சட்டம் ஒழுங்கு நல்லமுறையிலே அமையும் என்பதை உணர்ந்து கொண்ட காரணத்தினால்தான், புரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் நீதி நிர்வாகத் துறைக்கும், சிறைச்சாலை துறைக்கும் கிட்டத்தட்ட 54 கோடி ரூபாய்க்கும் மேல் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கீடு செய்திருக்கின்ற இந்த வேளையிலே இதில் ஒதுக்கீடு செய்திருக்கின்ற பெருமளவு தொகை எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கின்றபோது இன்றையதினம் நீதிபதிகளாக இருக்கின்றவர்கள் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற, அவர்கள் வசிப்பதற்கு வசதியாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும், வழக்குகள் நடைபெறுவதற்கான அந்த நீதிமன்றங்கள் இல்லாத ஊர்களிலே அந்த நீதிமன்றங்களை நல்ல முறையிலே கட்டிக் கொடுப்பதற்கும் பெருந்தொகை அதில் செலவிடப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

பிற்பகல் 12-45

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் இன்றையதினம் சென்னை மாநகரிலே உயர்நீதிமன்றத்திற்கு 4 கோடி ரூபாயிலே ஒரு கட்டிடம் கட்டி நீதித் துறையைப் பேணிக் காத்திருக்கிறார்கள் என்றால் புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனை என்றே இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப் போலவே இன்றையதினம் மதுரையாக இருக்கட்டும், சேலமாக இருக்கட்டும், இராமநாதபுரமாக இருக்கட்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 4 கோடி, 3 கோடி என்ற அளவிலே நீதிமன்றக் கட்டிடங்களின் பணியை முடுக்கி விட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அப்படி நீதிமன்றங்கள் நல்லமுறையிலே இயங்கினால்தான் இப்பொழுது நாட்டினுடைய நீதி நிர்வாகம், நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கை நல்லமுறையிலே பேணிக் காக்க முடியும். இந்தத் தமிழக மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்கின்ற வழி

வகையை நாம் செய்ததாகக் கருதப்படும் என்கின்ற நிலைமையைக் கருத்திற்கொண்டுதான் ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் நீதி நிர்வாகத் துறைக்கும், சிறைச்சாலை துறைக்கும் பெருந்தொகையை செலவிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்றையதினம் குற்றவியல் நீதிமன்ற நடுவர்களாகப் பணி புரிகின்ற நடுவர்களுக்கு ஒவ்வொரு ஊரிலும் அவர்கள் . தங்குவதற்குத் தனியாக அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. நிச்சயமாக ஒரு நீதிபதி நல்ல முறையிலே செயல்பட வேண்டுமானால் அவர் ஒரு கிராமத்திலேயோ அல்லது ஒரு தாலுக்கா அளவிலேயோ அவர்கள் பணியாற்றுகின்றபொழுது அங்கேயிருக்கின்ற நீதிமன்றத்திற்கு அவர் சென்று வர வேண்டுமானால் நிச்சயமாக அங்கேயிருக்கின்ற பொதுமக்களிடமிருந்து அவர் விடுபட்டு அவருடைய பிரைவசி பாதுகாக்கப்பட வேண்டும். அப்படியிருந்தால்தான் அவர் நிச்சயமாக, செம்மையான ஒரு நீதியை வழங்குவதற்காக வாய்ப்புகளை அவர் பெறுவார். 10, 15 வீடுகள் ஒன்றாக இருக்கின்ற இடத்திலே கூட்டுக் குடித்தனமாக வாழ்கின்ற ஒரு நிலைமையை நாம் உருவாக்கித் தந்தோமேயானால் நிச்சயமாக எல்லோருடனும் பழகுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், யாருடனும் பேசினால் நிச்சயமாக அவருக்குச் சலுகையாகச் சென்றிருப்பார் அல்லது அவர் சொல்வதைச் செய்வாரோ என்கின்றஒரு ஐய உணர்வு அந்த நீதிபதிகளின் மேலே ஏற்படுகின்ற அளவிற்கு இன்றையதினம் அவர்கள் வீட்டு வசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையைப் போக்க நீதிமன்ற நடுவர்களுக்கு நிச்சயமாக நடுவர் நீதிமன்றங்கள் இருக்கின்ற அனைத்து ஊர்களிலும் அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நீதிமன்ற நடுவர்கள் சென்னைக்கு வருகின்றபோது. அலுவல் காரணமாக வருகின்றபோது இங்கே இருக்கின்ற ஹோட்டல்களிலும், லாட்ஜ்களிலும் அவர்கள் தங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படித் தங்குவதற்கான நிலைமையைப் போக்கி அவர்கள் சென்னைக்கு அலுவல் காரணமாக வருகின்றபொழுது நீதித் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நீதிபதிகளாக இருப்பவர்களுக்கு இங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டி அவர்கள் வருகின்றபொழுது தங்கி அவர்களுடைய பணிகளைச் செய்து முடித்து செல்வதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றையதினம் நீதிமன்றங்களிலே இருக்கின்ற நீதிமன்ற நடுவர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையான முறையிலே செய்வதற்கு அங்கேயிருக்கின்ற நீதிமன்றங்களில், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலே பெரும்பாலான நீதிமன்றங்களில் அங்கே டேபிள், சேர், அங்கேயிருக்கின்ற அக்காமடேஷன், சிட்டிங் வசதிகள் இல்லாத நிலையிருக்கின்ற காரணத்தினால், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மன்னார்குடி நீதிமன்றத்தைப் பொறுத்த அளவில் அங்கே போர்வெல் இருக்கிறது. ஆனால் அதற்கு இருக்கின்ற பம்ப்செட் ரிப்பேர் ஆகி கிட்டதட்ட ஐந்தாண்டுக் காலமாகச் சொல்லியும் அது செப்பனிடப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அங்கே கழிப்பிட வசதிகள் இல்லாமல் மிகவும் பெருந்தொல்லையாக இருக்கிறது.

பிற்பகல் 12-50

ஆகவே, அதை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இன்றையதினம் தஞ்சை மாவட்டம் இரண்டாக—புரட்சித் தலைவி, ஒப்பற்ற தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நாகை காயிதே மில்லத் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு, இன்றைய தினம் தஞ்சை, நாகை காயிதே மில்லத் என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 சப்-கோர்ட்டுகள்—சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சார்பு நீதிமன்றங்கள், அதாவது 'சப்-கோர்ட்டுகள்' இருக்கின்றன. ஒன்று மயிலாடுதுறையிலும் ஒன்று நாகைப்பட்டினத்திலும் இருக்கிறது இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால் இன்றைய தினம் பிரிக்கப்பட்டிருக்கிற இரண்டு மாவட்டத்தில், தஞ்சை மாவட்டத்தை விட, நாகை காயிதே மில்லத் மாவட்டம் ஜனத்தொகை அடிப்படையிலும், நிதாகுதிநிலை அடிப்படையிலும், ஒன்றியங்கள் அடிப்படையிலும் அதிகப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

6. காவல்துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன், காவல்துறையினரால் தேடப்பட்டு வருவதாக எனக்கு (குறுக்கீடு) திரு. பி. வி. இராஜேந்திரன் உட்கார வேண்டும்; இந்த முறையில் அவர் நடக்கிறபோது. திரு. பி. வி. இராஜேந்திரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) என்னுடைய இருக்கை அருகே வந்து முறைகேடாக நடந்து கொள்வது முறையல்ல. நீங்கள் அவைக்கு வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

காவல் துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவைக்கு வந்துள்ளது குறித்து.

[பேரவைத் தலைவர்]

திரு. பி. வி. இராஜேந்திரன், காவல் துறையினரால் தேடப் பட்டு வருவதாக நேற்றையதினம் காவல்துறை ஆணையா ளரிடமிருந்து எனக்குத் தகவல் தரப்பட்டு இருந்ததை நான் பேரவைக்கு அறிவித்திருந்தேன். பல்வேறு முறைகளில் அவர் தேடப்படுவதாகவும், அவர் கிடைக்கவில்லை என்றும் தெரி வித்திருந்தார்கள். காவல்துறையினர் ஒருவரைத் தேடுகிறார் கள் என்று சொன்னால், ஒரு நல்ல குடிமகன்— --The best citizen-- என்ன செய்ய வேண்டுமென்று சொன் னால், 'தேடுகிறார்கள்' என்று தெரிந்தவுடன், காவல் நிலையத் திற்குச் செல்வதுதான் நாட்டின் நல்ல குடிமகன் என்பதற்கு அர்த்தமாகும். (மேஜையைத் தட்டும் ஒலி) அவர் அதை விடுத்து, தன்னைத் தேடவில்லை என்றும் கூற முடியாது. உயர்நீதி மன்றத்தில் முன் ஜாமீன் கேட்டு மனுச் செய்திருக்கிறார். இன்று காலை அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அந்தத் தகவலும் வந்திருக்கிறது. அதன் பின்னர் ஒரு நல்ல குடி மகன் எந்தக் காவல் நிலையத்திலேயிருந்து தேடினார்களோ அந்தக் காவல் நிலையத்திற்குச் செல்வதுதான் ஒரு நல்ல குடிமகனாக இருக்க முடியும். வேறு ஏதேனும் ஒரு வகையில், தனக்குப் பாதுகாப்புத் தேடுவதற்கு வேறு வேறு வழிமுறைகளைத் தேடு வது என்பது முறையல்ல. என்னுடைய இருக்கை அருகே வந்து அவர் முரண்பாடாகப் பேசிக்கொண்டிருந்ததும் முறை கேடான செயல் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர், காவல் துறையினரால் தேடப்பட்டுக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நல்ல குடிமகனாக அவர் நடந்து கொள்வது நல்லது.

5. மானியக் கோரிக்கைகள், 1993-94.

விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டத்தைவிட அளவிலே பெரியதாகவும், ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட மாவட்டமாகவும், தொகுதிகளை அதிக மாக உள்ளடக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதால், அதே நேரத்தில், ஒன்றியங்களும் தஞ்சை மாவட்டத்தைவிட அதிக மாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே அடங்கி இருக்கிற காரணத்தினாலும், தஞ்சைக்கு 3 சப்—கோர்ட்டுகள் இருக் கிறதைப் போல, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலும் 3 சப்—கோர்ட்டுகள் அமைய வேண்டும்; அப்படி மூன்றாவதாக

[திரு. கு. சீனிவாசன்]

அமைக்கின்ற சப்–கோர்ட், மன்னார்குடியிலே அமைக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை முறையாக அரசுக்கும், உயர்நீதிமன்றத்திற்கும் நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.

6. காவல் துறையினரால் தேடப்படுவதாகக்குறிப்பிடப்பட்டுவரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன் என்னிடத்திலே வந்து கேட்டது, உடனடியாக ஒரு தன்னிலை விளக்கம், தான் இப்போது செய்ய வேண்டுமென்று அவர் கேட்டார். அதற்குப்பேரவை விதிகளில், விதி 109–ல் இடம் இருக்கிறது; With the permission of the Spesker என்று இருக்கிறது. எந்த அளவுக்கு அதற்கு 'பெர்மிஷன்' கொடுக்க முடியும் என்று கேட்டால், " The Forum of the House should not. however, be used to make Personal Explanation to contradict or clarify Report not connected with the Proceedings of the House published in the Press பத்திரிகைகளிலேயும், வெளியிலேயும் வந்த சில செய்திகளை மறுப்பதற்காக அல்லது வேறுவிதமான விளக்கம் சொல்வதற்காக, Personal Explanation தான், தன்னிலை விளக்கம் பேரவையிலே தரவேண்டுமென்று கேட்கலாகாது என்று இருக்கிறது. அதனால் நான் அனுமதி மறுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலும், என்னோடு சிறிது நேரம் இந்த இடத்திலே வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். அதன்பிறகு உட்காரச் சொன்னேன். உட்காராமல் வெளியே போய் விட்டார். இதுதான் இப்போது பேரவையிலே நடந்த செய்தி.

பிற்பகல் 12–55

* திரு. கா. ப. பட்டாபிராமன் : Point of order. விதி 109–இல் கூட ஒரு வாதப் பிரதிவாதம் உள்ள பொருள்களைப் பற்றி இங்கே எழுப்பக் கூடாது என்று விளக்கமாக இருக்கிறது. The matter should not be a debatable one இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே வாத, பிரதிவாதங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அந்தத் துறையிலே கூட விதி 109 மிகத் தெளிவாகவே இருக்கிறதென்பதை அவையினுடைய நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு மேலும் " Personal Explanation is made before the main business of the day is taken up, unless the member in question was permitted by the.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Speaker" என்றே இருக்கிறது. நம்முடைய பேரவையினுடைய நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னர் தலைவருடைய அனுமதி கிடைத்தால்தான் தன்னிலை விளக்கம் தரலாம் என்று இருக்கிறது. அந்த வகையிலேயும் நான் அவரை அனுமதிக்கவில்லை. அவர் இருக்கையிலே போய் உட்காருமாறு சொன்னேன் கொஞ்ச தூரம் போய்விட்டு அப்படியே போய் விட்டார். எந்த அளவுக்கு உறுப்பினர் விதிகளை மதிக்கிற, சட்டத்தை மதிக்கிற பிரஜை என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். திரு. கு. சீனிவாசன் தொடரலாம்.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94.

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன காரணங்களினால் மன்னார்குடி தொகுதியில் ஒரு சப்—கோர்ட் அமைப்பதற்கான நடவடிக்கையினை மாண்புமிகு சட்டத் துறை பொறுப்பு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இங்கே என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் மன்னார்குடி தொகுதியில் ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வேண்டுமென்று நாங்கள் வைத்த கோரிக்கையை உயர் நீதி மன்றத்திற்கு நாங்கள் அனுப்பி இருக்கும் மனுவின் பேரில் உயர் நீதி மன்றத்திலே இருந்து அரசுக்கு, அங்கே ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கலாம் என்ற பரிந்துரையை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிந்துரையை ஏற்று, எங்கள் மன்னார்குடி நகரத்தில் கூடுதல் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் அமைத்துத் தர வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற வேளையில், எனக்கு இன்றையதினம் தான் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்ற காரணத்தினால் கல்வித் துறையிலும் என்னுடைய கோரிக்கைளைச் சொல்லி அவர் முன் வைக்க விரும்புகின்றேன்.

மன்னார்குடி தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கட்டிட வசதி இல்லாமல் கீற்றுக் கொட்டகையிலே 5, 6 ஆண்டு காலத்திற்கு முன்பு தொடங்கப் பட்டு, நடை பெற்று வருகின்றது

[திரு. கு. சீனிவாசன்]

இந்த ஆண்டுகூட கட்டிடம் தீப்பிடித்து எரிந்த நிலையிலே அங்கேயிருக்கின்ற இயக்கத்தை சேர்ந்த அ. இ. அ.தி.மு.க சார்பாக கீற்றை வேய்ந்து கொடுத்திருக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்தப் பள்ளிக் கூடத்திற்குப் புதியதாக கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 5 இலட்சம் ரூபாய் அதற்கு சாங்ஷன் செய்யப்பட்டதாகத் தகவல் கிடைக்கப் பெற்றது. ஆனால், இடவசதி இல்லாத காரணத்தினால் அது திரும்ப அரசுக்கே வந்துவிட்ட சூழ்நிலையில் இப்போது நாங்கள் இடத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்கான கருத்துருக்களை நாங்கள் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள இந்தச் சூழ்நிலையில், எங்களுக்குப் புதிதாக பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அதே நேரத்தில் மன்னார்குடி தொகுதியில் உள்ளிக் கோட்டை உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்றகோரிக்கை வைத்து, அதற்குக் கட்ட வேண்டிய 1 இலட்சம் ரூபாயைக் கட்டி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கடந்த ஆண்டே அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தருகிறோம் என்கின்ற உத்தரவாதத்தை அளித்திருந்தார்கள். இருந்தாலும் அது சேர்க்கப்படவில்லை. இந்த ஆண்டு நிச்சயமாக அந்த உள்ளிக் கோட்டை உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் ஒப்பந்த அடிப்படையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற 324 ஆசிரியர்களுக்குப் பணி நிரந்தரம் செய்து கொடுத்து அவர்கள் வீட்டிலே ஒளி விளக்கு ஏற்றி வைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் சட்டத் துறையிலே, சட்டக் கல்லூரியிலே ஒப்பந்த அடிப்படையிலே பணியாற்றும் 30 ஆசிரியர்களது பணியினை நிரந்தரம் செய்து, பணிவரன்முறை செய்து, அவர்களுடைய வாழ்க்கையிலேயும் ஒளி விளக்கு ஏற்றி வைக்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் சட்டத் துறைப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே ஒப்பந்த அடிப்படையிலே பணியாற்றும் அந்த 30 ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்து அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையில் இந்த வேண்டுகோளை வைக்கின்றேன்.

அதே போல, என்னுடைய தொகுதியிலே, இன்னும் சில கோரிக்கைகள் உள்ளன. அதையும் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

1993 ஏப்ரல் 23]

[திரு. கு. சீனிவாசன்]

வேளாண்மைப் பொறியியல் துறைத் தொடர்பாக, தஞ்சை மாவட்டமாக இருக்கட்டும், நாகை—காயிதே மில்லத் மாவட்டமாக இருக்கட்டும், அங்கே வாய்க்கால்கள் பராமரிக்கப் படுகின்ற சூழ்நிலையிலே எங்களுடைய மன்னார்குடி பகுதியை இந்த ஆண்டு எடுத்துக் கொண்டு அங்கே வடிகால்களை வேளாண்மைப் பொறியியல் துறையிலே 40 இலட்சம் ரூபாய் அளவிலே செம்மையாக சீர் செய்வதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதே நேரத்தில் இங்கே விவசாய விளை பொருட்கள் மேம்பாடு சாலைகள் திட்டத்தின் சார்பிலே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டத் துறை மானியத்திலே பேசுங்கள்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியத்தில் பேசி விட்டு, கடைசியில பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில் தான் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்று இரண்டு கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். இங்கே விவசாய விளைப் பொருட்கள், சாலைகள் மேம்பாடு திட்டம் என்ற திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியோடு சாலைகளும் பாலங்களும் செப்பனிடப்படுகின்ற வகையிலே மன்னார்குடி தொகுதியில் அதற்காக பொறியாளர் ஆய்வு செய்து கிட்டத் தட்ட 2.5 கோடி ரூபாயிலே விவசாய விளைப் பொருட்கள் சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டுதல் சாலைகள் செப்பனிடுதல் என்கிற திட்டத்தை அங்கே பொறியாளர்கள் ஆய்வு செய்தார்கள். அப்படி செய்கிறபோது அந்தத் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகவும், அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் ஆகிய என்னுடைய கோரிக்கையாகவும், என்னுடைய தொகுதியிலே சேர்ந்த வடக்கு தென்பறை கிராமத்தில் பவானி ஆற்றிலே ஒரு பாலம் குறுக்கே கட்டப் படவேண்டுமென்கிற என்னுடைய வேண்டுகோளை ஏற்று அந்தத் திட்டத்தின் மூலம் கட்டுகின்ற பாலத்தை வடக்கு தென் பறை பகுதியிலே கட்டித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே மன்னார்குடி நகரத்தை பொறுத்தவரை கீழ்ப் பாலம் என்கின்ற ஒரு பாலம் மன்னார்குடி கீழ்ப் பகுதியிலே அமைந்திருக்கிறது. அந்த பாலம் மன்னார்குடி நகரத்தைப் பொறுத்த அளவில் 2 இலட்சம்

[திரு. கு. சீனிவாசன்]

அளவுக்கு மக்கள் தொகை கூடி இருக்கின்ற காரணத்தால் அங்கே போக்கு வரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பாலம் விரிவு படுத்தப் படாத காரணத்தால், அந்தப் பாலம் விரிவு படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இரண்டு ஆண்டுகாலமாக நான் வைத்து வருகின்றேன். நிச்சயமாக இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் வருகிற நிதியாண்டிலாவது அந்தப் பாலத்தைச் சேர்த்து, புதிய பாலம் கட்டுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டும் என்கிற என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக் கின்றேன். (மணியடிக்கப்பட்டது.)

நீதி நிர்வாகம் மற்றும் சிறைச் சாலைகள் மானியத்தி லே பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே.பி. மணிவாசகம்.

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் மற்றும் சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கையிலே பேச எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் பயின்ற சாதாரணமான என்னை சட்ட மன்ற உறுப்பினராக்கிய நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழக முதல்வருக்கு என்னு டைய நன்றியையும், வணக்கத்தையும், தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியத்தை பாராட்டி வர வேற்று ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்பு கிறேன். முதலில் உடுமலைப் பேட்டை தொகுதியிலே ஒரு சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றும், மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் பெயரால் உண்டு, உறைவிடப்பள்ளி ஒன்றும் துவக்க ஆணை பிறப்பித்தமைக்காக தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். இந்த மானி யத்தினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கடந்த 1967–68 ஆம் ஆண்டிலே நீதித் துறைக்கு செலவிடப்பட்ட ரூபாய் 2.41 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது கடுமை யான நிதி நெருக்கடியின்போதும் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நீதித் துறைக்கு ஒதுக்கியத் தொகை 54.13 கோடி என்றுஇருப்பதை நான் மனமார பாராட்டி

1993 ஏப்ரல் 23] [கே. பி. மணிவாசகம்]

வரவேற்கின்றேன். நம்முடைய இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களின் புனித அரசை பாராட்ட மனமில்லாத சிலர் வேண்டுமென்றே எள்ளி நகையாடி குற்றம் சுமத்துகிறார்கள்.

''நகையாடி நல்லாரை நாணவைப்பாள் தன்னை
பகையாடிக் கெடுக்கும் பயிர்''

என்பது போல எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களை எதிர்ப்பவர்கள் நிச்சயம் தோல்வி அடைவார்கள். புரட்சித் தலைவி என்ன சாதாரணமான மனிதரா? அவர் புரட்சிக் காவியத்தின் கரு. புதுமைச் சமுதாயத்தின் எழுச்சியூட்டும் கவிதை. புயல் போல் பொங்கியெழும் கருத்துக்களின் கருவூலம். இருபதாம் நூற்றாண்டின் மகிழ்ச்சியூட்டும் விந்தை. அவருக்கு கோபம் வராது. ஏனெனில் குணமென்னும் குன்றேறி நிற்கிறார். கோபம் வந்தால் விளக்கத் தேவையில்லை. சாட்சிக்கு முகவரி சென்னை கோபாலபுரம். Success always Come to the man one who thinks he can என்ற கூற்றுக்கு இணங்க எங்கும் வெற்றி எதிலும் வெற்றி என நமது புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார்கள்.

பிற்பகல் 1–05

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இந்தியாவைப் பொறுத்த வரையில் சுதந்திரம் அடைந்த பிறகு நம்முடைய மாநிலங்கள் எல்லாம் மொழிவாரி அடிப்படையில் பிரிக்கப்பட்டன அப்போது தமிழ்நாடு கூட மொழி அடிப்படையில்தான் பிரிக்கப் பட்டது. அப்போதிருந்த தமிழ் பற்றாளர்கள் எல்லாம் தமிழ் நாட்டுக்கு அதாவது சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார் கள். அப்போதைய அரசாங்கம் அதாவது காங்கிரஸ் அரசாங்கம் இந்தக் கோரிக்கையை நிராகரித்தது. தமிழ்நாடு எனப் பெயர் இட வேண்டி திரு. சங்கரலிங்க நாடார் என்பவர் உண்ணா விரதம் மேற்கொண்டு மொழிக்காக உயிர்நீத்தார்.

''தமிழர் என்றொரு இனம் உண்டு
தனியே அவர்க்கொரு குணம் உண்டு''.

என்பதைப் புரிந்த தெரிந்த மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தான் ஆட்சிக்கு வந்தவுடனே சென்னை மாகாணம் என்பதைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்தார். அதைப் போல சென்னை உயர் நீதிமன்றம் என்றிருப்பதை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்ற மத்திய அரசை வற்புத்துமாறு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்பு மிகு உறுப்பினர்கள் உச்சநீதிமன்றத்தின் பிரிவை சென்னையில் துவக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றத்தின் பிரிவை மதுரையில் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கோரிக்கையை முன் வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். அவை நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைதான். அதனால் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் நன்மை அடைவார்கள். வழக்குகள் விரைவில் முடிவடையும். காலம், பயணம், செலவு மிச்சமாகும். தற்போது தமிழகத்தில் சுமார் 10 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கு தமிழக அரசு காரணமல்ல. இன்றைக்கு இருக்கிற நீதிமன்றங்கள் தனித்தன்மை பெற்றவை. அரசினுடைய தலையீட்டை அதற்குள் செலுத்த முடியாது. "Justice delayed is Justice denied" என்று சொல்வார்கள். நீதியின் படிகள் நெடிய படிகள் என்று மக்கள் எண்ண ஆரம்பித்து விடுவார்கள். எனவே, நீதிபதிகள், வழக்குரைஞர்கள் போன்றவர்கள் எல்லாம் இதை உணர்ந்து பொது மக்களுடைய நன்மை கருதி இங்கே இருக்கிற வழக்குகளை விரைவில் முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் போல தற்போது உயர்நீதிமன்றத்தில் காலியாக இருக்கின்ற நீதிபதி பதவிகளை நிரப்ப ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பொதுவாக எந்தப் பிரச்சினையானாலும் கோர்ட்டுக்குச் செல்லும் மனோபாவம் மக்களுக்கு இருக்கிறது. இதில் தவறில்லை. அதனால் தானோ எனவோ ஒரு ஆங்கில அறிஞன் 'Where is much Liberty there is some error,' என்று கூறினானாம். அடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய பளுவைக் குறைப்பதற்கும், விரைவாக நீதி கிடைப்பதற்கும் ட்ரிபுனல்ஸ் நிறுவப்பட்டு இருக்கின்றன. தமிழ்நாடு அரசு நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் நில மேல் முறையீட்டு தீர்ப்பாயம், நுகர்வோர் பாதுகாப்புத் தீர்ப்பாயம் போன்ற தீர்ப்பாயங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கட்டட வளாகத்தில் இல்லை. உயர்நீதிமன்றத்திற்கு வெளியே சாந்தோம், மயிலாப்பூர், நுங்கம்பாக்கம் போன்ற இடங்களில் இருக்கின்றன. இதனால் பொது மக்களுக்கும், வழக்குரைஞர்களுக்கும் சிரமம்தான் ஏற்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு இந்த மூன்று ட்ரிபூயனல்களையும் உயர்நீதிமன்றக் கட்டட வளாகத்திலேயே அமைத்துக் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது இந்த ட்ரிபுனல்களிலே ஒரு நீதிபதியும் ஒரு ஓய்வு பெற்ற அரசு அதிகாரியும் பணிபுரிகிறார்கள். நீதிபதியைப் பொறுத்த வரையில் சட்டம் பயின்றவர். ஆனால் அதிகாரியைப் பொறுத்த வரையில் அவர் சட்டம் பயின்றதாகத் தெரியவில்லை. எனவே அவரும் சட்ட நிபுணராக இருந்தால் வழக்குகளுக்கு நலமாக இருக்கும். மக்களுக்கும் நன்மை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி

1993 ஏப்ரல் 23] [திரு. கே. பி. மணிவாசகம்]

றேன். இந்த ட்ரிபுனல்களைப் பொறுத்தவரையில் இங்கே அரசுக்கு எதிரான வழக்குகள் தான் வருகின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால் அரசு ஊழியர்களைப் பணியமர்த்தல், மாறுதல், தற்காலிக வேலை நீக்கம், நிரந்தர வேலை நீக்கம், ஓய்வு காலச் சலுகைகள் போன்றவற்றில் அரசுக்கு எதிரான வழக்குகள்தான் விசாரணைக்கு வருகின்றன. ஆனால் இங்கே வழக்குகள் விரைவில் முடியவில்லை. இதனால் நிர்வாக சம்பந்தமாக அரசு எடுத்த முடிவுகள் தாமதம் அடைகின்றன. இங்கே நிறைய வழக்குகள் நிலுவையில் உள்ளதாக அறிகிறேன். எனவே உடனடியாக இதனைச் சீர் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கோர்ட் என்று சொன்னால் வசதி படைத்தவர்கள் தான் செல்ல முடியும். ஏழைகள் அணுக முடியாது என்று இருந்தது. இதையும் ஒரு அறிஞன் வேடிக்கையாகக் கூறினானாம். Law grinds the poor and the riches rule the Law என்று கூறினானாம். ஆனால் தற்போது நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் ஏழைகளுக்காக, தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு மிகவும் உதவி செய்கிறது. இது மிகவும் பாராட்டத்தக்க அம்சமாகும். இதன் மூலம் ஜீவனாம்சம் சொத்து தொடர்பான பிரச்சினைகள், விபத்து மற்றும் ஈட்டுத் தொகை போன்ற பல வழக்குகளிலே ஏழைகள் நன்மை அடைகிறார்கள்.

உடுமலைப்பேட்டை தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இருக்கிறது. இது மிகவும் பழமை வாய்ந்தது. இதனுடைய அதிகார எல்லை முன்பு கரூர் மற்றும் மைசூர், கொள்ளேகால் வரை இருந்ததாகச் சொல்கிறார்கள். இங்கே சப் கோர்ட் ஒன்று இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் குற்றவியல் கோர்ட்டும் இருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் சப் கோர்ட்டில் ஒரு அடிஷனல் கட்டிடம் கட்டி எல்லா நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அட்வகேட் வெல்ஃபேர் ஃபண்ட் என்பதைப் பொறுத்த வரையில் 30,000 ரூபாய் என்று இருந்ததை 60,000 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறார்கள். அதை மனதாரப் பாராட்டுகிறேன். இன்றைக்கு உடுமலைப்பேட்டையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற வழக்குரைஞர்களும், வக்கீல் குமாஸ்தாக்களும் ஒரு கோரிக்கையை கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், வக்கீல்களுக்கு பென்ஷன் வேண்டும் என்றும் கோரிக்கையை நீண்ட காலமாக வைத்துள்ளார்கள். இதைக் கனிவோடு பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. பி. மணிவாசகம்] [1993 ஏப்ரல் 23

அடுத்தபடியாக உடுமலைப்பேட்டையில் ஒரு தாசில்தார் கோர்ட் இருக்கிறது. அங்கே இருக்கின்ற ரெவின்யூ அதிகாரிகள் தான் இந்த வழக்குகளை எல்லாம் பைசல் செய்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு சட்டம் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அது மட்டுமல்ல. நம்முடைய புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்திலே கிட்டத்தட்ட 1978 என்று கருதுகிறேன், அப்போதிருந்த நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்குவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 17 ஆண்டுகளாகியும் இன்று வரை ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் அந்த நிலப் பட்டா வழங்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், அந்த சம்பந்தப்பட்ட விவசாயிகள் எல்லாம் கோர்ட்டிலே சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இதன் மூலம் அதிகம் பாதிக்கப்படுவது ஏழை எளிய மக்கள்தான். எனவே இந்த குறைகளை களைந்து நிவர்த்தி செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10.

அது மட்டுமல்லாமல், கிரிமினல் கோர்ட்டைப் பொறுத்த அளவிலே மேஜிஸ்ட்ரேட்டுகள் என்று சொல்லப்படுகின்ற பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுகள், அவர்களுக்கு மிகவும் ஒர்க் லோட் அதிகமாக இருக்கிறது. அது மட்டுமல்ல டிரெயினிங் மேஜிஸ்ட்ரேட்ஸ் என்று ரெவின்யூவிலே சிலரைப் போடுகிறார்கள். அவர்களுக்கு சட்டம் தெரிந்து இருக்க நியாயம் இல்லை. எனவே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சட்டம் தெரிந்த அதிகாரிகளை லா ஆபிசியல்ஸ் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அகராதியிலே முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். இது என்னுடைய தொகுதி என்ற அளவிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். உடுமலை நகர மக்கள் வாழ்க்கையிலே பயன்பெறும் வகையிலே புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே தொடங்கப்பட்ட திட்டம், இரண்டாவது கூட்டு குடிநீர் திட்டமாகும். இதுவரை அந்த திட்டம் நிறைவேறாமல் போதுமான அளவுக்கு குடி தண்ணீர் கிடைக்காத காரணத்தால் குறிப்பாக கோடைக் காலத்திலே பொது மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே தொடங்கப்பட்ட, புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயே தொடங்கப்பட்ட திட்டத்தை நம்முடைய ஆட்சிக் காலத்திலே முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். உடுமலைப்பேட்டை பொறுத்த அளவிலே சொல்வார்கள் கோவை மாவட்டம் தென்னகத்தின் மான்செஸ்ட்டர் என்று சொன்னால் உடுமலைப் பேட்டை தமிழகத்தினுடைய மான்செஸ்ட்டர் என்று சொல்லலாம்.

அந்த அளவிலே இங்கே தொழிலே வேளாண்மையிலே செழித்து விளங்குகின்ற இங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் விரும்புவது, நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சி நீடிக்க வேண்டும், நிலையான ஆட்சி வரவேண்டும், என்றுதான் விரும்புவார்கள். பல்வேறு அரசியல் கட்சிகள் எல்லாம் இன்று சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசுகிறார்கள். ஆட்சிக் கலைப்பைப் பற்றி எல்லாம் பேசுகிறார்கள். ஆனால் நம்முடைய இதய தெய்வப் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியைக் கூட 1980-லே கலைத்தார்கள். அப்போது கூட முன்னாள் முதல்வர் அவர்கள் நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக என்று கேட்டார்கள். ஆனால் நம்முடைய தமிழக மக்களை பொறுத்த வரையில் அவர்கள் என்றுமே ஒரு நிலையான முதல்வரை, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவரைத் தான் தந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. நாம் பல்வேறு மானியக் கோரிக்கைகளைக் கவனிக்கிறோம். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தன்னுடைய தொகுதியினுடைய குறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் எங்களுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே நான் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு அதிக சிரமம் தர விரும்பவில்லை. இங்கே குறைகள் என்று சொல்வதை விட நிறைவுகள் தான் அதிகம்என்று சொல்லலாம். ஏனென்றால், நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நல்ல மழை. எங்களுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே குறைகளே குறைவு, நிறைவுகளே அதிகம் என்று சொல்லலாம். கல்வி ஆகட்டும், வேளாண்மை ஆகட்டும், பொதுப்பணித் துறை ஆகட்டும், போக்குவரத்துத் துறை ஆகட்டும் அங்கே குறைகள் மிகவும் குறைவு என்றே சொல்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக எங்களுடைய உடுமலைப்பேட்டை தொகுதி மக்கள் அதிகம் விரும்புவது பி.ஏ.பி. பாசனத் திட்டம். இதை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கவனித்து ஏற்கனவே இருக்கின்ற மும்மடங்கு பாசனத்திலாவது எங்களுடைய உடுமலைப் பகுதியில் இருக்கின்ற எக்ஸ்டென்ஷன் ஏரியா மற்றும் கேப் ஏரியா என்று சொல்லப்படுகின்ற விவசாய நிலங்களை அந்த பாசனத் திட்டத்திலே சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப் பெற்றது). அல்லது நான்காவது பாசனத்தில் சேர்த்தாவது எங்களுடைய விவசாயப் பெருமக்களுக்கு ஒரு நல்லவாய்ப்பைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் கூட நம்முடைய அரசு அனைத்துக் கல்லூரி ஒப்பந்த அடிப்படையிலே பணிபுரிந்து வரும் 324 ஆசிரியர்களையும் 26—3—1993 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. அதே போல அரசு சட்டக் கல்லூரியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 30 ஆசிரியர்களின் பணிகளையும் நிரந்தரப்

படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன். நேற்று கூட நம்முடைய புரட்சித் தலைவி இதயதெய்வம் அவர்கள் காவல்துறை மானியத்திலே பேசும்போது பல்வேறு வகையான காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கினார்கள். சொல்லப்போனால் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் காவல்துறைக்கு இந்த அளவுக்கு சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், காவல் துறையாளர்கள் கண்ணியமாக புரட்சித் தலைவியின் கட்டளைப்படி நடப்பது எதனால் என்று சொன்னால் அது ஏவலர் ஏவல் தன்னை வேவுபார்க்க காவலர்க்கு புரட்சித் தலைவி உதவி செய்கிறார்கள் என்று கூறி எனக்கு இவ்வளவு நேரம் தந்ததற்கு நன்றி கூறி, அடுத்தபடியாக பெரியார் மாவட்டம் ஈரோட்டுக்கு அருகே மாணிக்கப்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள வீட்டு வசதி வாரிய வீடுகள் பல ஆண்டுகளாக யாருக்கும் வழங்கப்படாமல் இருப்பதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எனக்கு கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இதை நம் எம்.எல் ஏ-க்களுக்கு ஒதுக்கித் தருமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இவ்வளவு நேரம் வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றி என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

பிற்பகல் 1-15

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைகள் மற்றும் மறுவாழ்வு இல்லங்கள் குறித்த மானியக் கோரிக்கைகளின் பேரிலே இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே கருத்துக்களை வழங்க வாய்ப்பு தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எதையுமே வேடிக்கையாகவும், அதே சமயத்தில் மிகுந்த அர்த்தத்தோடும் விமர்சித்த பெர்னாட்ஷா ஒருமுறை வேடிக்கையாக சொன்னார். 'எந்த நாட்டிலே நீதிமன்றங்களும், காவல் நிலையங்களும், சிறைச்சாலைகளும் இல்லாமல் இருக்குமோ அந்த நாடுதான் ஒரு நல்ல நாடு என்று சொல்வேன்' என்று. ஆக, நீதிமன்றங்களும், காவல் நிலையங்களும் சிறைசாலைகளும் எந்த நாட்டிலே இல்லாமல் இருக்குமோ, அதிகப்படியாக இல்லாமல் இருக்குமோ, வழக்குகள் அதிகப்படியாக இல்லாமல் இருக்குமோ, அதை நாம் சமூக ஆரோக்கியத்திற்கு ஒரு சிறந்த அறிகுறியாக பார்க்க முடியும்.

[1993 ஏப்ரல் 23 [திரு. செ. கு. தமிழரசன்]

நீதி என்றாலே, அது சமூக நீதிதான். நீதி, ஜனநாயகம் இப்படி அதற்கு எத்தனை பெயர் வைத்தாலும் அவைகள் எல்லாம் ஒரு தாய்வயிற்று குழந்தைகள். மனித சமுதாயத்தை, சகோதரத்துவத்தோடு, மனித நேயத்தோடு பழக கற்றுத் தருகிற ஒரு துறைக்கு பெயர்தான் நீதித் துறை. ஆக, சகோதரத்துவத்தை வளர்க்கிற அந்த பாங்கிற்குதான் நீதித்துறையை நாம் பயன்படுத்தியாக வேண்டும்.

இந்த நாட்டின் அரசியல் சட்டத்தை உருவாக்குகிறபோது அரசியல் நிர்ணய சபையிலே வணக்கத்திற்குரிய பாபாசாகேப் அம்பேத்கார் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். பிற சட்டங்களும் எவ்வளவுதான் உயரிய முறையிலும், மிகச் சிறந்த முறையிலும் தயாரிக்கப்பட்டாலும் கூட அதைப் பயன்படுத்துகிறவர்களுடைய நிலையைப் பொறுத்துதான் அந்தச் சட்டத்தின் தன்மை இருக்கிறது. அதை எத்தகையவர்கள் பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்து அந்தச் சட்டம் அமைந்துவிடும். எனவே, சட்டத்தின் தன்மை என்பது அதைத் தயாரிக்கிறவர்களைப் பொறுத்திருக்கிறது என்று பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள் வலியுறுத்தினார்கள். அந்த வகையிலே, இன்றைக்கு நான் முதலிலே ஒன்றைச் சொல்லவேண்டும்.

இங்கே சமூக நீதியோடு ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முயன்றுகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையிலே இந்த அரசும் இப்படிப்பட்ட சமூக நீதியை வழங்குகிற துறையும் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை என்னைப் போன்றவர்களுக்கும், ஏழையெளியவர்களுக்கும் மிகுதியாகவே இருக்கிறது.

நம்முடைய உயர்நீதிமன்றத்தையும் மற்ற நீதிமன்றங்களையும் பொறுத்தவரையில், இன்றைக்கு ஒரு கணக்கெடுப்பு எடுத்துப் பார்த்தால், ஏராளமான, ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. சில வழக்குகள் 20 ஆண்டுக் காலம் வரையிலே கூட நீடித்துக்கொண்டிருக்கிறது. தலைமுறை தலைமுறையாக கூட வழக்குகள் நிலுவையில் இருந்துகொண்டிருக்கிற கதையை நாம் பார்க்க முடிகிறது. இதிலே நான் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நீதிமன்றங்களுக்கு உரிய விடுமுறை காலத்தை கடுமையாக குறைக்க வேண்டும். நீதிமன்றங்கள் சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள், பிறகு தசரா விடுமுறை நாட்கள், பிறகு கோடைக்கால விடுமுறை நாட்கள் என்று இப்படி பல்வேறு வகையிலே நிறைய விடுமுறை நாட்களை நாம் அவர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கிறோம். இவைகள் எல்லாம் பிரிட்டிஷ் காலத்திலே வழங்கப்பட்டவை. கோடைக்கால

விடுமுறை எல்லாம் இன்றைக்கு தேவையில்லாத ஒன்று. எனவே, இந்த விடுமுறை நாட்களைக் குறைத்து, கடுமையாக்குவதற்கான ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று நான் முதலில் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, இன்னொரு யோசனையையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

உயர்நீதிமன்றத்திற்கே ஏராளமான அதிகாரங்கள் இருக்கின்றன. மாவட்ட நீதிமன்றங்களுக்கு, மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களுக்கு மற்றும் சார்பு நீதிமன்றங்களுக்கு என்று இப்படியாக அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கிறபோது இந்த தேக்க நிலைகளை நாம் தவிர்க்க முடியும். அவர்களுக்கு அதிகாரங்கள் இல்லாத நிலையிலே நீங்கள் மேலே போங்கள், மேலே போங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறபோது, அவை எல்லாம் ஒரே இடத்திலே குவிந்து தேங்குகிறது. எனவே, நீதிமன்றங்களுக்கிடையே அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்கிற எனது யோசனையை நான் முன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பி. மணிவாசகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய சென்னை மாநிலத்தினுடைய பெயரை மாற்றி நீண்ட காலமாகிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாகாணத்தை தமிழ் மாநிலம் என்று பெயர் வைத்தார்கள். ஆனால் இன்னமும்கூட அன்றைக்கு உருவாக்கப்பட்ட அந்த சென்னை உயர்நீதிமன்றம் அதே பெயரில்தான் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பெயரை 'தமிழ்நாடு உயர்நீதிமன்றம்' என்று பெயர் மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். சரியான நீதி கிடைக்க வேண்டுமானால் காலதாமதம் இருக்கத்தான் செய்யும் என்கிற கருத்தை நீதிபதிகள் சொல்கிறார்கள். ஆக, நாங்கள் விரைந்து முடிவெடுக்க முடியாது என்கிறார்கள். இங்கர்சால் சொன்னதைப்போல, ஆராயாத முடிவைக் காட்டிலும், சந்தேகமே மேல் என்று அவர்கள் சொல்வார்கள். ஆகவே, நாம் விரைந்து முடிவெடுக்கிறபோது சாதாரண மக்களுக்கு முறையான நீதி கிடைக்காமல் போய்விடுமோ என்பதற்காகதான், இம்மாதிரி காலதாமதம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் காலதாமதம் என்கிற பெயரிலே கிடைக்கவேண்டிய நீதியே ஒருவனுக்கு காலதாமதமாக கிடைக்கிற அளவுக்கு காலதாமதம் ஏற்படுமானால் அந்த நோக்கத்திற்கே பொருள் இல்லாமல் போய்விடும்.

பிற்பகல் 1-20

எவ்வளவு முயற்சி எடுத்தாவது, இந்தக் காலதாமதத்தை குறைப்பது இன்றியமையாத தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ரெயில்வே நீதிமன்றம், தொழிலாளர்கள் மன்றம், குடும்ப விவகாரங்களைக் கவனிக்கும் நீதிமன்றம் பொருளாதாரக் குற்றங்களை ஆயும் நீதிமன்றம்—இப்படி நீதிமன்றங்களை நாம் ஏராளமாக வைத்திருக்கிறோம்.

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் ஆகிய சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும் தனி நீதிமன்றம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கான நீதிமன்றங்கள் 7 இருக்கின்றன. ஆனால் அதிகப்படியான இனக் கலவரங்கள், சாதிச் சண்டைகள் எந்தப் பகுதியிலே நடக்கிறதோ அந்தப் பகுதியில் அது இல்லாமல் இருக்கிறது. எனவே தென்னாற்காடு மாவட்டத்திலே கடலூரிலோ அல்லது விழுப்புரத்திலோ அப்படிப்பட்ட நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, எல்லாத் துறைகளிலும் லீகல் அட்வைசர்ஸ் இருக்கிறார்கள். அரசின் நிர்வாகத்தில் இருக்கும் எல்லாத் துறைகளிலும் லீகல் அட்வைசர் என்ற பதவி இருக்கிறது. சட்ட ஆலோசகர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் குற்றங்களைப் பதிவு செய்யும் காவல் நிலையங்களிலே இப்படிப்பட்ட லீகல் அட்வைசர்ஸ் இருக்கிறார்களா என்றால் இல்லை. ஒரு குற்றச்சாட்டு அல்லது ஒரு புகாரை ஒரு தனி மனிதன் காவல் நிலையத்திற்குக் கொண்டு போகும்போது, அங்கே இருக்கும் காவல் நிலைய அதிகாரிகளேதான் வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள். அவர்கள் பதிவு செய்து, வழக்கு நீதிமன்றத்திற்குப் போகும்போது, பல நேரங்களிலே அடிபட்டுப் போகிறது. எனவே குற்றத்தைப் பதிவு செய்யும்போதே, அதை வகைபடுத்திட காவல் நிலையங்களில் லீகல் அட்வைசர்களை நியமித்தால் என்ன என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் வழக்கறிஞர்களை நியமிப்பது என்பது, வழக்கறிஞர்களுக்குச் சார்பான ஒரு நல்ல கோரிக்கைதான். ஆனால் காவல் நிலையங்களிலே வழக்குகளைப் பதிவு செய்கின்றபோது, அது எப்படி நடந்ததோ அதே மாதிரி, யதார்த்தமான நிலைமையிலே பதிவு செய்தால்தான், பின்னால் பொது மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான அடிப்படையாக விளங்கும். ஆகவே அந்த இடத்தில் வழக்கறிஞர்கள் நியமிப்போமானால், அத்தகைய நீதி கிடைப்பதற்கான நிலைமைகளில் பாதகம் ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

<u>திரு. செ. கு. தமிழரசன்</u> : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகள் சிலவற்றில் இப்படிப்பட்ட முயற்சியை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். எனவே அதை முயன்று பார்த்தால் என்ன என்பதைத்தான் என்னுடைய யோசனையாக நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இலவச சட்ட உதவி ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. அது வெறும் சம்பிரதாயமாக இருப்பது போல், பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. இதன் நோக்கம், இதனால் ஏற்படும் பயன்கள் இவற்றை கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்கு விளம்பரப்படுத்த வேண்டும், பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்ற நிர்வாகத்திற்குரிய எல்லா செலவுகளையும் மாநில அரசு தருகிறது. மத்திய அரசும் அதனுடைய பங்கீட்டைத் தருகிறது. ஆனால் நீதிமன்றங்கள் சுய சார்புள்ள மன்றங்களாகத்தான் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்தினுடைய நிர்வாகத் துறைப் பணிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, பின் தங்கிய மக்களுக்கோ முறையான இட ஒதுக்கீடு கிடையவே கிடையாது. மிகப் பிற்பட்ட மக்களானாலும், பின்தங்கிய மக்களானாலும், தாழ்த்தப்பட்ட மக்களானாலும், நிர்வாகத் துறையிலே இட ஒதுக்கீடு கிடையாது. மேஜிஸ்டிரேட்டுகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நியமிப்பதால், அதில் ஒரு முறை இருக்கிறது. நிர்வாகத் துறையிலே அவர்களே நியமிப்பதால், முறை இல்லாமல் இருக்கிறது. இதை இந்த மன்றத்திலே கேட்கிறபோது கூட, இங்கே இருந்து கடிதம் எழுதினாலும் கூட, அவர்கள் 'நாங்கள் பதில் எழுத மாட்டோம்' என்று சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. ஆனால் நிர்வாகச் செலவுகள் முழுவதும் இந்த அரசுதான் மானியமாக, ஒதுக்கீடாகத் தருகிறது. இவைகளைக் கட்டுப்படுத்த நமக்கு ஒரு கோவார்டினேஷன் இல்லாவிட்டால் அது சரியாக இருக்காது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

உச்ச நீதிமன்றக் குழு நம்முடைய சென்னையிலே வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை 1972 முதலே வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். 1972 முதலே இதைப் பலரும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். உச்ச நீதிமன்ற பென்ச் ஏற்படுத்தப்படும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு காலமாக அந்த பென்ச் சென்னையிலே ஏற்படுத்தப்படவில்லை. அதை விரைவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தின் பென்ச்சை சென்னைக்குச் கொண்டுவரும் வேளையிலே சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பென்ச்சை மதுரையிலே வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை. தமிழக மக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறார்கள். ஏனென்றால், கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற கடைசி பகுதியில் இருக்கிறவர்கள் ஒவ்வொரு முறையும் உயர்நீதிமன்ற வழக்குக்காக சென்னைக்கு வர வேண்டுமென்றால், ஏராளமான பொருள்செலவாகிறது. நாள் செலவாகிறது, ஏராளமான மான பொருள் செலவாகிறது. இது சாதாரண மககளுக்கு

மிகக் கொடுமையான தொந்தரவாக இருக்கிறது. எனவே மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்சை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்கிறேன்.

பிற்பகல் 1–25

திருவண்ணாமலையில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டும். மாவட்டம் பிரிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனாலும் அங்கே மாவட்ட நீதிமன்றம் இல்லை. இதை வைக்கவேண்டுமென்று மாவட்ட அளவிலும் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டக்கல்லூரிகளில் இப்போதெல்லாம் மாணவர்கள் சேருவதற்கு ஒரு தயக்கமும் சுணக்கமும் இருக்கிறது. ஒரு காலத்திலே சட்டக்கல்லூரிக்குப் போவதற்கு, சட்டம் படிப்பதற்கு மாணவர்கள் ஆர்வத்தோடு இருப்பார்கள். காரணம் சட்டம் படித்தால் என்ன, வேலையா கிடைக்கப் போகிறது என்ற ஆதங்கம் இருக்கிறது. எனவேதான் சட்டம் படித்த மாணவர்களுக்கும் ஜாப் ஓரியண்டட் ஆக மாற்றுவதற்கு, அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தருகிற நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கான வழிவகைகளை நீங்கள் செய்ய வேண்டும். எம்.பி.,பி.எஸ்., படித்தவர்களுக்கும் டெக்னிகல் கோர்ஸ் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. (குறுக்கீடு) இவர்கள் அவர்களாகவே சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கத்தில் வேலை வாய்ப்புக் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட வேலைவாய்ப்பை உருவாக்குகிற வகையில் நீங்கள் வழிவகை செய்யவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

புதிய சட்டக் கல்லூரிகள் பல தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் புதிய சட்டக் கல்லூரிகள் பலவற்றில் பெண்கள் விடுதிகள் இல்லை. பெண்கள் படிப்பதற்கு பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. எனவே எல்லா சட்டக் கல்லூரிகளிலும் பெண்கள் விடுதி கட்டாயமாக இருக்க வேண்டும். வாடகைக் கட்டிடங்களிலாவது உடனடியாக அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்துகிறேன்.

நமது இந்திய அரசியல் சட்டத்தையும் இந்தியக் குற்றவியல் சட்டத்தையும் நாம் தமிழில் மொழி பெயர்ப்பு செய்திருக்கிறோம். புத்தகங்களாகப் போட்டிருக்கிறோம். இதை நூலகங்களுக்கு மட்டுமே வைக்கலாம் என்று இருக்கிறது. இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும், இந்த நாட்டின் அரசியல் சட்டத்தையும், இந்தியக் குற்றவியல் சட்டத்தையும் கட்டாயம் தெரிந்துகொள்ள உரிமை இருக்கிறது. இது ஒரு பெரிய நியாயமான உணர்வு. அது தெரியாததால்தான் ஏரா-

மான குற்றங்களும், நம்மை நாமே புரிந்து கொள்ளாத நிலைமையும் ஏற்படுகிறது. எனவே இவைகளை மலிவுப்பதிப்பில் வெளியிட்டு, மேலும் அரசே கிராமப்புறங்களில் உள்ள பாமர மக்களுக்கு இலவசமாகக்கூட வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் மிகப் பெரிய சமூக நீதிக்கு வழியேற்படும் என்பதால் இதை அரசு செய்ய முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, பள்ளிப் படிப்பிலும், கல்லூரிப் பாடங்களிலும் இதைக் கட்டாயப் பாடமாக்கலாம். பள்ளிக்கூடங்களில் அரசியல் சட்டமும், நம்முடைய குற்றவியல் சட்டமும் இணைப்பாக இணைக்கப்பட்டு அதைக் கட்டாயப் பாடம் ஆக்கலாம். இதை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதைச் செய்ய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

பல இடங்களில் சாதிச் சண்டைகள் நடக்கின்றபோது, இனச் சண்டைகள் நடக்கின்றபோது, குழுச் சண்டைகள் நடக்கின்றபோது, சட்டத்துறையும் காவல்துறையினரும் ஒரே மாதிரியான பாணியைப் பின்பற்றுகிற ஒரு நிலைமை இருக்கிறது. இவர்களும் அடிப்பார்கள், அவர்களும் அடிப்பார்கள், இவர்கள் மோதுவார்கள், அவர்கள் மோதுவார்கள், கடைசியில் நிலைமை என்னவென்றால், இருவர் பேரிலும் வழக்கு இருக்கும். அடித்தவன் பேரிலும் வழக்கு இருக்கும், தடுத்தவன் பேரிலும் வழக்கு இருக்கும். இந்தப் பக்கம் 10 பேர், அந்தப் பக்கம் 10 பேர் மீது வழக்கு இருக்கும் என்றால், அது நம்முடைய சட்டத்தில் ஓட்டை இருப்பதையே காட்டுகிறது. பல இடங்களில் இப்படி சிக்கி, பல இடங்களில் கிராம மக்கள் நலிந்த பிரிவு மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். யாரோ ஒரு குழு அவர்களைத் தாக்க வருகிற போது, இவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் எதிர்க்கத்தான் வேண்டியிருக்கும். அந்த நிலைமையை மாற்றி தன்மையை உணர்ந்து அதற்கேற்ப வழக்குப் பதிவு செய்கிற வகையில் சில சட்டங்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய சட்டப் பேரவையிலே காலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பெரிய கருத்தைச் சொன்னார்கள். பல உறுப்பினர்கள் சொன்னார்கள். விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த நமது மாநில அரசு எபபடிப்பட்ட முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது, எப்படி வெற்றி கண்டிருக்கிறது என்று எல்லாம் சொன்னார்கள். இந்த அவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து ஒரு கருத்தைச் சொல்கிறார்கள் விடுதலைப்புலிகள் நடமாட்டம் இங்கே இருக்கிறது என்று. இதைச் சொல்லிக் கொண்டே இருப்பவர்கள் விடுதலை புலிகளை ஆதரிக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியோடு

1993 ஏப்ரல் 23] [திரு செ. கு. தமிழரசன்]

இன்றைக்குத் தோழமை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் அவர்கள் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டு இருக்கிறார்களா ? பாட்டாளி மக்கள் கட்சி விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில்லை என்று தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் காங்கிரஸ் கட்சி தான் மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில நாங்கள் இந்தக் கொள்கையிலிருந்து விலகிக்கொள்ளமாட்டோம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதாகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

பிற்பகல் 1-30

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை காங்கிரஸ் காரர்கள் பாட்டாளி மக்கள் கட்சியோடு சேர்ந்து விடுதலைப் புலிகளைப் பிடிக்கலாம் என்று திட்டம் போட்டிருக்கிறார்களோ என்னவோ . . . (சிரிப்பு).

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறை துறை பொறுத்தவரையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு கவிஞன் சொன்னான். சிறைக்குள்ளே இருப்பவர்கள் மட்டும் குற்றவாளிகள் அல்ல. சிறைக்கு வெளியே இருப்பவர்களை எல்லாம் நாம் நிரபராதிகள் என்றும் சொல்லிவிட முடியாது. சட்டத்தின் பிடியில் யார் சிக்கிக் கொள்கிறார்களோ, சட்டத்தின் முன்னால் யார் தண்டனைக்குள்ளாகிறார்களோ, அவர்கள் சிறைக்குள் இருக்கிறார்கள். சட்டத்தின் பிடியில் சிக்காதவர்களும், தண்டனைக்குள்ளாகாதவர்களும் வெளியே இருந்து கொண்டு இருக்கிறார்கள். அது தான் குற்றத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற தன்மை. எனவே, தண்டிக்கப்பட்டவர்கள் குற்றத்திற்குள்ளாகி, கடுமையான சட்டத்திற்குட்பட்டு உள்ளே இருக்கிறவர்கள். அவர்களை நாம் மனித நேயத்தோடு பார்க்க வேண்டும். அவர்களை எப்படியும் சமுதாயத்தில் திருத்தி அனுப்புகிற நல்லுணர்வோடு அப்படிப்பட்ட அணுகுமுறையை அவர்களிடத்தில் நாம் செலுத்த வேண்டும்.

திறந்த வெளிச் சிறைச்சாலைகளை அதிகப்படுத்த வேண்டும் இன்று ஒரே ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை மட்டும் இருக்கிறது. அது கூட மிகக் குறுகிய நிலப்பரப்பில் இருப்பதாகத் தெரிகிறது. எனவே இனிபுதிய சிறைச்சாலைகளை உருவாக்குகிற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

போது திறந்த வெளிச் சிறைச்சாலைகளை உருவாக்கி, அவர்களை மீண்டும் மனித சமுதாயத்திற்கு அனுப்புகிற போது, நல்வழிபடுத்தப்பட்டவர்களாக, மனித சமுதாயத்தை ஒரு முறையான உணர்வோடு சந்திக்கிறவர்களாக பக்குவப்படுத்திட வழி வகை செய்ய வேண்டும்.

பொதுவாக ஒருவன் சிறைக்குள்ளே இருந்து வெளியே வந்தால் அவனை இந்தச் சமுதாயம் ஒதுக்கி வைக்கிறது. அவனை ஒதுக்கப்பட்டவனைப் போல நடத்துகிறது. இவன் குற்றவாளி, இவன் மனித சமுதாயத்திற்கு உகந்தவன் அல்ல என்ற வகையில், அவன் பேரில் பார்வை விழுகிறது. எனவே, அவனை கைத் தூக்கி விடுவதற்கு நம்முடைய ஐ.ஆர்.டி.பி. கடன் மாதிரி அரசாங்கம் வழங்குகிற கடன்கள் இருக்கிறதே, அந்தக் கடன்களை எல்லாம் தந்து, அவர்கள் ஏதாவது ஒரு தொழில் தொடவதற்கு நாம் வழி வகைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்கு சமூகநலத் துறை மூலமாகவோ, அல்லது மற்ற துறைகள் மூலமாகவோ, அவர்களுக்கு ஏதாவது ஒரு உதவி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இலங்கை அகதிகளைப் பொறுத்தவரையில் நமக்கு இருக்கிற நிதி நெருக்கடியில் அது ஒரு பெரிய பளுவாக இருந்து கொண்டு இருக்கிறது. அவர்களை நாம் நம்முடைய சொந்த நாட்டு மக்களையே பல நேரங்களில் காப்பாற்ற முடியாத நிலையில், அப்படிப்பட்ட நிதி நெருக்கடியில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இங்கே வருகிற இலங்கை அகதிகள் ஏராளமாக பெருகி வருகிறார்கள். அவர்களைச் சமாளிப்பதற்கு அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதும் நமக்கு ஒரு பெரிய நிர்வாகச் சுமையாக இருந்து வருகிறது. எனவே, மீண்டும் அந்த இலங்கை அகதிகளை அவர்களுடைய சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்கு, படிப்படியாக நடவடிக்கைகளை விரைவு படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பிச்சைக்காரர்கள், பிச்சை எடுக்கிற நிலையை முழுக்க முழுக்க ஒழிக்க வேண்டும். ஒருவன் தன்னுடைய வயிற்றுக்காக கையேந்தி பிச்சை எடுக்கிற நிலை இருக்கிறதே, அது சமுதாயத்தில் மிக மிக வேதனைப்பட வேண்டிய நிலை. ஆகவே, மகாகவி பாரதியார் அவர்கள் சொல்லும் போது—

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்.."

என்று சொன்னார்.

1993 ஏப்ரல் 23] [திரு. செ. கு. தமிழரசன்]

பெருந்தகை வள்ளுவர் அவர்கள் சொல்லும் போது—

'' இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ''

என்றார்.

எனவே, இந்த நிலையை நாம் மாற்றுவதற்கு சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். ஏராளமான சலுகைகளைத் தருகிறோம். ஆனாலும் கூட.. (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். திருவிழா, கோவில் போன்ற இடங்களில் பார்க்கிற போது வரிசையாக பிச்சைக்காரர்கள் உட்கார்ந்து இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, அவர்களை எப்படியாவது, முதியோர் நிலையங்களுக்கோ, தொழு நோய் நிலையங்களுக்கோ, மறு வாழ்வு நிலையங்களுக்கோ கட்டாயப்படுத்தியாவது கொண்டு போய் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைக் கடுமையாக தடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒரே ஒரு வரியில் சுருக்கமாகச் சொல்கிறேன். எந்தச் சட்டமானாலும் அவை மக்களுக்காக இருப்பவை. மக்களுக்காகத் தான் சட்டம். சட்டங்களுக்காக மக்கள் இல்லை என்ற நிலையில் சட்டங்களை நாம் கொண்டு போக வேண்டும். அதுதான் சட்டத்தின் வெற்றியாக இருக்க முடியும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. அறிவிப்புகள்.

உறுப்பினர் திரு. பி.வீ. இராஜேந்திரன் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: சென்னை நகர போலீஸ் கமிஷனரிடமிருந்து பேரவை உறுப்பினர் திரு. பி. வீ. ராஜேந்திரன் இன்று 1-00 மணியளவில் கோட்டையின் முன்னர் கைது செய்யப்பட்டதாகத் தகவல் எனக்கு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

[1993 ஏப்ரல் 23

பிற்பகல் 1-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் பெருமைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே சட்டத்தினுடைய ஆட்சி நடைபெற வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்கிற அடிப்படையிலேதான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மற்ற சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அமுல் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சட்டத்தினுடைய ஆட்சி எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம், நேற்றையதினம் கூட காவல்துறை மானியத்திற்குப் பதில் அளித்துப் பேசிய நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு நிலைமைகளை எடுத்துச்சொல்லி, விளக்கங்களைத் தந்து, சட்டத்தினுடைய ஆட்சி, தன்மை பற்றி விளக்கிச் சொன்னார்கள்.

அங்கே சட்டமன்றத்திலே கூட சட்ட விதிகளை எல்லாம் நாம் எப்படி பின்பற்றி வருகிறோம் என்பதை இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நாம் பார்த்து வருகிறோம். சாதாரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோது, ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டுவதும், ஆளும் கட்சியை குறை சொல்லுவதுமாகத் தான் நாம் பார்த்து வந்திருக்கிறோம். ஆனால், இன்றைய தினம் பத்திரிக்கையை எடுத்து நாம் பார்க்கிறபோது தினமணி பத்திரிகையிலேயும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலேயும், உறிந்து பத்திரிக்கையிலேயும், சட்டசபையில் நடந்த நிகழ்ச்சிகளைக்குறித்து தலையங்கங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. அதிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அரசியல் சட்டத்தையும், சட்டசபை விதிகளையும் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த தலையங்கங்களிலேவற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, சட்டத்தினுடைய ஆட்சி, இங்கே விதிகள் பின்பற்றப் படுகின்றன என்பதற்கு இதைவிட வேறு ஒரு எடுத்துக்காட்டை

1993 ஏப்ரல் 23] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

நாம் காட்ட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையிலேதான், நான் இந்த மானியக் கோரிக்கைக்கு விளக்கங்கள் தர முற்படுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை சிறை நிர்வாகம் பற்றியும் நீதிமன்ற நிர்வாகம் பற்றியும், நீதிமன்றத்திலே, பணியாற்றுகிற அரசு வழக்கறிஞர்கள் சம்பந்தப்பட்ட அந்த நிலைமைகளைப் பற்றியும் அடக்கியதாகும். இந்த மானியக்கோரிக்கைகள். அதிலே குறிப்பாக நீதிமன்றங்கள் என்று வருகிறபோது, அவைகள், நீதிமன்ற நிர்வாகம் என்று நாம் அங்கே பெருமையாகப் பேசிக் கொண்டு இருந்தாலும், கட்டிடங்கள் கட்டுவதற்கும், சம்பளம் தருவதற்கும் பணத்தை வாங்கித் தருகிற ஒரு பணியைத்தான் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோமே தவிர, நீதியை நாங்கள் நிர்வகிக்கவில்லை. நீதிமன்ற நிர்வாகம் அல்லது நீதியின் நிர்வாகம் என்பது இந்திய நாட்டினுடைய உச்ச நீதிமன்றத்தின் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சட்டத்தினுடைய ஆட்சி சரியாக நடைபெற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதையும் நாம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக அரசு என்பது 3 பிரிவுகளைக் கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் கூட சுட்டிக் காட்டினார்கள். ஒன்று நிர்வாகம், இன்னொன்று, சட்டமன்றம், இன்னொன்று நீதிமன்றம், அதிலே மூன்றும் சுயேட்சையாக செயல் படவேண்டும் என்பதையும், ஒன்றுக்கொன்று கீழானதுமல்ல, உயர்வானதுமல்ல என்ற நிலையில் நடைபெற்றால்தான் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் சரிவர பாதுகாக்கப்படும்.

ஆனால், இதிலே சட்டமன்றம் என்பது, பாராளுமன்றம் என்பது மக்களால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடைபெறுகின்ற மன்றங்களாகும். இங்கேதான் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சட்டங்களை நிர்வாகம் அமுல் செய்கிறது. நிர்வாகம் அமுல் செய்கிற நேரத்தில் ஏற்படுகிற தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்ற பொறுப்பை, நாம் நீதிமன்றத்திடம் விட்டு இருக்கிறோம். ஆகவே, நாம் நல்ல முறையில் சட்டங்களைச் செய்ய வேண்டும், நிர்வாகம் அதை நல்ல முறையிலே அமுல் செய்ய வேண்டும். நீதிமன்றம் அதிலே, ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் சுட்டிக்காட்டி, திருத்த வேண்டும். அப்போதுதான் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். சமுதாயத்திலே அமைதி நிலவும். சமுதாயம் முன்னேற்றம் தடைபடாது இருக்க வாய்ப்பு ஏற்படும்.

பிற்பகல் 1–40

ஆகவே அந்த அடிப்படையிலேதான் இந்த அதிகாரப் பங்கீட்டை அரசியல் சட்டத்தை வகுத்து தந்த பெரியவர்கள் செய்திருக்கின்றார்கள். இது நாகரீகம் உள்ள உரிமைகளை மதிக்கின்ற எல்லா நாடுகளிலேயும் இருக்கின்ற ஒரு ஏற்பாடுதான். ஆனால் இப்போது இதிலே சில குறைபாடுகள் நம்முடைய கண்ணுக்கு தெரிகின்றன. குறிப்பாக நீதிமன்றங்களில் சட்ட மன்றத்திலே செய்யப்பட்ட சட்டங்களிலே காணப்படுகின்ற தவறுகளை அவ்வப்போது சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நிர்வாகத்திலே ஏற்படுகிற தவறுகளை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த நிலையில் நீதிமன்றங்களுக்கு ஒரு நல்ல மரியாதை மதிப்பு நம்பிக்கை மக்களிடத்திலே இருந்து வந்திருக்கிறது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல கவலைக்குரிய நிலைமைகளையும் நாம் காண வேண்டியதாக இருக்கிறது. அதாவது 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிக்கை என்று ஒன்று வந்துகொண்டிருக்கிறது. அது பெரும்பாலும் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு பத்திரிக்கை தான். அதிலே ஆர், கே. லட்சுமணன் என்பவர் கார்ட்டூன் போடுபவர். அவரும் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு அரசியலில் ஒரு நல்ல ஆழமான அறிவு கொண்ட ஒரு மிகச் சிறந்த கார்ட்டூனிஸ்ட். அவர் பத்து நாட்களுக்கு முன்பாக ஒரு கார்ட்டூனைப் போட்டிருந்தார். அது என்ன கார்ட்டூன் என்றால்—நீதிபதியினுடைய சேம்பர்—அவருடைய அறை. அவர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அதற்குப் பக்கத்திலே ஒரு அமைச்சர் நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் அங்கேயே பெர்மெனன்ட் ஆக உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அதை பார்த்துக் இரண்டு பேர் பேசுகிறார்கள். என்ன அமைச்சர் இங்கே வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறாரே என்று, அதற்கு இன்னொருவர் சொல்லுகிறார் இப்போது எல்லாமே கோர்ட்டுக்குத்தான் ரெஃபர் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சரே நீதிபதியினுடைய அறைக்கு வந்துவிட்டார் என்பது போல சொல்லி இருந்தார்கள். அதற்கு முன்னாலே ஒரு 5 நாட்களுக்கு முன்னதாக அதே 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிக்கையில நான் சொல்வது இந்த 45 ஆண்டுக்காலமாக சொல்லப் படாத ஒரு கருத்து, ஒரு நிலைமையை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். அதில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் Judiciary's assertiveness என்று போட்டு நீதிமன்றமே தன்னுடைய வரம்பை மீறிச் செல்லுகிறதோ என்ற ஒரு அச்சத்தை தெரிவித்து இருந்தார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம், அந்த நிலைமை ஏற்படுமேயானால் நம்முடைய ஜனநாயகத்திற்கு பாதுகாப்பே கிடையாது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே எங்களுக்கு அதாவது

சட்டமன்றத்திற்கு அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அல்லது ஒரு குடிமகனுக்கு உரிமைகளை பாதிக்கின்ற நிலையில் உரிமைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நீதிமன்றத்திற்கு தந்திருக்கிறோம். அந்த நம்பிக்கையிலேயே இருக்கிறோம் என்று சொல்லுகிற அதே நேரத்தில் நீதி மன்றங்கள் நிர்வாகத்தினுடைய உரிமைகளிலே தலையிடுவதோ சட்டமன்றத்தினுடைய உரிமைகளிலே தலையிடுவது என்பதோ சரியானது அல்ல. சமீபத்திலே கூட மணிப்பூர் சபாநாயகரை உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு வந்ததும், ஜனாதிபதியின் உத்திரவு செல்லாது என்று சொன்னதும் அதைப் போலவே ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை குறித்து நாளைய தினமோ, நாளை மறுநாளோ ஒரு கண்டனத் தீர்மானத்தை பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதும்—இவைகள் எல்லாம் ஜனநாயகத்திற்கு நல்ல அறிகுறிகள் அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் கடலூர் ஜெயிலில் ஒரு பெண்ணின் கற்பை அழித்தார்கள் அதற்காக 1 லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கப்பட்டது. அந்த கற்புக்கு விலை என்ன ஒரு லட்சமா என்று கேட்டு (குறுக்கீடு) சிதம்பரத்திலே (குறுக்கீடு) அண்ணாமலை நகர் போலீஸ் ஸ்டேஷனிலே நடைபெற்றதை கொச்சைப்படுத்தி பேசியதை சுட்டிக்காட்டினார். ஆனால் அது பற்றிய விவரம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1–45

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அந்த வழக்கு சம்பந்தமாக பத்மினி என்ற அந்தப் பெண் ஒரு அபலைப் பெண் 13—7—1992 அன்று சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார். அதிலே தனக்கு நஷ்டஈடாக 5 லட்சம் தர வேண்டும் என்று அவர் கோரியிருக்கிறார். அதற்கு உயர்நீதிமன்ற உத்திரவின் பேரில் பத்மினிக்கு நஷ்டஈடாக 1 லட்சம் ரூபாயை தமிழக அரசு அனுமதித்து இருக்கிறது. ஆகவே அந்த அம்மையாரே, அந்தப் பெண்ணே கேட்டு, உயர்நீதி மன்றம் உத்தரவிட்டு தரப்பட்ட அந்த ஒரு லட்சத்தை அவர்கள் கொச்சைப்படுத்துவது என்பது மிகவும் கண்டிக்கத் தக்கது ஆகும். இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் முன்பெல்லாம் கொலை வழக்காக இருந்தாலும், எந்த வழக்காக இருந்தாலும் குற்றவாளியைத் தான் நஷ்டஈடு திலே தண்டிப்பார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1993 ஏப்ரல் 23

இதுவரையிலேயும் தந்தது கிடையாது. ஆனால் கொஞ்ச நாளைக்கு முன்னால் கொண்டு வந்த கிரிமினல் புரொசீஜர் கோடு அமெண்ட்மென்ட் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடும் தரலாம். தர வேண்டும் என்கின்ற ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு தருகின்றபோது—இப்போது கோயில் பட்டியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நஷ்டஈடு தந்தது. வேறு சந்தர்ப்பத்திலே யார் காரணமோ அவர்கள் தந்திருப்பார்கள். அதுபோல பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யப்பட்ட ஒரு உதவியாக, ஒரு நீதியாக நியாயமாக இதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அதை வேறு விதமாக..

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை நகர் போலீஸ் ஸ்டேஷனில் கற்பழிக்கப்பட்ட பெண் பத்மினி ஹைகோர்ட்டில் தனக்கு 5 இலட்சம் ரூபாய் காம்பன்சேஷனாக வழங்கப்பட வேண்டும் என்று மனுப் போட்டிருந்தார். ஹைகோர்ட் இவ்வளவு ரூபாய் என்று ஒரு குறிப்பிட்ட தொகையைச் சொல்லி, இவ்வளவு பெரிய தொகை வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிடவில்லை. ஹைகோர்ட் தன்னுடைய ஆர்டரில் 'interim Compensation if any, may be quantified by the State Government' என்றுதான் சொல்லியிருக்கிறது. அதாவது ஏதாவது காம்ப்பென்சேஷன் அமௌண்ட்டாக கொடுப்பதாக இருந்தால் அது எவ்வளவு என்று மாநில அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்றுதான் நீதிமன்றம் சொல்லியிருந்தது. அந்த நேரத்தில் அரசாங்க அதிகாரிகள், துறை அதிகாரிகள் அப்பெண்ணுக்கு இன்ட்டாரிம் காம்ப்பென்சேஷனாக ரூபாய் 50,000 கொடுத்தால் போதும் என்றுதான் பரிந்துரை செய்தார்கள். ஆனால் நான்தான் அதில் தலையிட்டு அது போதாது என்று சொல்லி 1 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன் என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் கூறுகின்றபோது இந்த பப்ளிக் லிட்டிகேஷன் கேஸஸ் பற்றிச் சொன்னார்கள். பொது மக்கள் சார்பாக வழக்குகள் போடுகிறேன் என்று சொல்லி நிர்வாகத்திற்கு எதிராக பல்வேறு சந்தர்ப்பங்களிலே வழக்குகள் போட்டு நிர்வாகத்தை ஸ்தம்பிக்க

வைக்கின்ற முயற்சிகளிலே பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய வழக்குகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது ! என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் அதையும் மீறி உயர் நீதிமன்றங்கள் அத்தகைய வழக்குகளை எடுத்துக்கொண்டு பரிசீலிப்பது என்பது உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மீறி செய்கின்ற ஒரு செயலாகும். இது சட்டத்தினுடைய ஆட்சி என்று பார்க்கின்றபோது அதற்கு மாறாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அமர்நாத் அவர்கள் குடும்ப நீதி மன்றத்தை மதுரையிலே அமைப்பது பற்றி பேசினார்கள். குடும்ப நீதிமன்றம் என்பது குடும்ப விவகாரங்கள் குறித்து கணவன் மனைவியருக்கு இடையே எழும் கருத்து வேறுபாடுகளைச் சுமுக மான வகையில் சீர் செய்யும் போற்றத்தக்க பெரும் பணி ஒன்றை அந்த குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றங்கள் செய்து வரு கின்றன. மதுரையில் தொடங்க இருக்கும் குடும்ப நீதிமன்றம் இந்த ஆண்டே தொடங்கப்படும். அதற்காகும் செலவு ரூ. 7.96 இலட்சம் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து மாண்புமிகு உறுப்பினர் மன்னார்குடி சீனிவாசன் அவர்கள் காண்ட்ராக்ட் லெக்சரர்ஸ் 30 பேர் இருக்கிறார்கள். அவர்களை ரெகுலரைஸ் செய்ய வேண்டும். கல்லூரி ஆசிரியர் களை மட்டும் செய்து இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று இங்கே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து மாண்புமிகு உறுப்பினர் அமர்நாத் அவர்கள் Suppression of Immoral Traffic Act பற்றி அதிலே விபச் சார தடைச் சட்டத்திலே பெண்களை மட்டும் கைது செய்து நடவடிக்கை எடுக்கின்றீர்கள். ஆண்கள் மீதும் நட வடிக்கை எடுப்பதாகச் சொன்னீர்கள் என்பதை சுட்டிக்காட்டி யிருந்தார்கள். ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் நிறைவேறும் அளவுக்கு ஒரு முன் மொழிவு, ஒரு மசோதா அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் மணிவாசகம் அவர்கள் பேசுகின்ற போது அவரும், மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்களும் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்ற பெயர் (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவை தலைவர்</u> : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-50

*<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழ் தவறு செய்தால் ஆண்களையும் கைது செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே கோப்பில் கையெழுத்திட்டு அந்தக் கோப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று பெயரிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மணி வாசகம் அவர்களும், திரு. தமிழரசன் அவர்களும் இங்கே எடுத்து வைத்தார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை மதுரையில் தொடங்க வேண்டும் என்ற முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிற நேரத்தில் இது சென்னை உயர் நீதிமன்றம் என்று இருந்தால் அதை மதுரை உயர்நீதிமன்றம் அல்லது மதுரை உயர்நீதிமன்றத்தினுடைய துணை நீதிமன் றம் என்றாவது சொல்லிக் கொள்ளலாம். ஆகவே, இந்தப் பெயர் மாற்றுவது என்பது இப்போது தேவையில்லை என்று நான் கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிர மாநிலத்தி லுள்ள நீதிமன்றம் இன்றுவரை கூட Bombay High Court என்றுதான் அழைக்கப்படுகிறது. மகாராஷ்டிரா ஹைக்கோர்ட் என்று அழைப்பது இல்லை. எனவே இப்படி பிற மாநிலங்களில் இருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கின்றபோது அவர்களோடு நாமும் சேர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி மாநிலத்தின் பெயரையே அந்த நீதிமன் றத்திற்கு வைக்கலாம் என்று வலியுறுத்தும் யோசனையை நாம் பரிசீலனை செய்யலாம் என்று கருதுகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து இருந்தால் ஒரு பிரச்சினைக் குறித்து பேசியிருப்பார்கள் என்று கருதி அதற்கு நான் தயாராக வந்தேன். (சிரிப்பு) அவர்கள் வரவில்லை என்றாலும் அது ஒரு முக்கிய மான பிரச்சினையாக பத்திரிகையில் வந்தும் பேசப்படக் கூடிய நிலைமையும் இருக்கின்ற காரணத்தால் அதை விளக் கிச் சொல்ல விரும்புகிறேன். அது இந்த சிறையிலிருந்து கைதிகள் தப்பிச் செல்லுவது பற்றியது ஆகும்.

நாம் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டாலும் சில சந்தர்ப்பங்களில் கைதிகள் தப்பிச் சென்று விடுகிறார்கள். அதிலே முக்கியமான ஒரு அனுபவம், சம்பவம், ஆட்டோ சங்கர் தப்பிச் சென்றது ஆகும். அது குறித்து ஒரு கமிஷன் போடப்பட்டு, அந்த கமிஷன் தன்னுடைய அறிக்கையைத் தந்திருக்கிறது. அதிலே அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். என்றால் சிறை சம்பந்தப்பட்ட விதிகளை எல்லாம் அவர்கள் ஆய்வு செய்து பார்த்ததற்குப் பிறகு அது சரியாகத்தான் இருக்கிறது, அதிலே எந்தவிதமான திருத்தங்களும் நாம் செய்ய வேண்டியது இல்லை. ஆனால் என்ன தேவையாக இருக்கிறது என்றால் அந்த சிறைத் துறையைக் கண்காணிக்கின்ற அதிகாரிகள், மேலேயிருந்து கீழே வரைக்கும் உள்ள அந்த அதிகாரிகள், அவர்களிடத்திலே காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாகத்தான் இந்த கைதிகள் தப்பிச் செல்கிறார்கள் என்ற ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஆட்டோ சங்கர் வழக்கில் எந்தெந்த சிறை அதிகாரிகள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அதிலே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதுபோல் நிகழக்கூடாது என்பதற்காக நாம் அந்த நடவடிக்கையை கடுமையான நடவடிக்கையாக எடுக்க இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத்திலே நல்ல முறையிலே பணியாற்றுபவர்களை நாம் பாராட்டுவதைப் போல தவறு செய்கின்றவர்களை தண்டிப்பது என்பது நடைமுறையாக இருக்க வேண்டும். இதுவரையில் நாம் மனிதாபிமான உணர்வோடு அதில் எல்லாம் கொஞ்சம் தளர்ந்த நிலையிலே நடவடிக்கை எடுப்பதிலேயிருந்து வந்திருக்கிறோம் என்ற காரணத்தால் குற்றங்கள் அதிகமாக, தவறுகள் அதிகமாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியானது கண்டிப்புக்கு பெயர் போனது என்பது தெரியும். ஆகவே, அந்த முறையில் இப்போது சிறைத் துறையைப் பொறுத்தவரையில் யார் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கையை விரைவாக எடுப்பதற்கு இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-55

வழக்குகளெல்லாம் தேங்கிக் கிடப்பதுபற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். அது உண்மைதான். வழக்குகளை விரைவாகத் தீர்வு செய்வதற்காக பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. அதிலே, குறிப்பாக, காலியாக இருக்கின்ற நீதிபதிகளுடைய இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு இந்த அரசு ஏற்கெனவே

பிற்பகல் 1-55

நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நீதிபதிகளெல்லாம் பொறுப்புக்கு வருகின்ற நேரத்தில், இந்த தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளெல்லாம் விரைவிலே முடிக்கப்படும்.

சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கைதிகளுக்கு வசதிகளை எப்படியெல்லாம் செய்து தர வேண்டும் என்ற முறையிலே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களின் மீது பேசவில்லை என்றாலும், மனிதாபிமான....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எதுவுமே முன்மொழியப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : முன்மொழியப்படவில்லை என்றாலும், அவைகளெல்லாம் மனிதாபிமான உணர்வோடு பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் எப்படியிருந்தாலும் என்பது சிறை வேறு, சமூகம் என்பது வேறு என்கிற அடிப்படையில் நாம் அந்த மனிதாபிமான உணர்வையும் அடிப்படையாகக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான வாய்ப்பு வசதிகளைச் செய்து தர இருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது.

இங்கே, மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அதுவும், உச்ச நீதிமன்றக் கோரிக்கை பற்றியும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலங்களவை உறுப்பினரான திரு. முத்துமணி அவர்கள், மத்திய சட்ட அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. பரத்வாஜ் அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள். அதிலே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் ஜஸ்வந்த்சிங் கமிஷன் பரிந்துரைத்தபடி ஒரு சர்க்யூட் பென்ச், சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய சர்க்யூட் பென்ச்சானது தெற்கே இருக்கின்ற ஏழு மாவட்டங்களுடைய வழக்குகளைத் தீர்ப்பதற்காக, மதுரையிலே அமைக்கப்படலாம் என்றும் அந்தக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதைப் பார்த்து, மறுபடியும் அதை நீடிப்பதா வேண்டாமா என்று அவர்கள் சொல்லுவார்கள். இந்தப் பரிந்துரையின்படி தமிழ்நாடு அரசானது ஒத்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் மூன்று சீனியர் ஜட்ஜுகளை நியமித்து ஒரு அறிக்கை கேட்டு

இருக்கிறார்கள். அவர்களும் அதையெல்லாம் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். இதுவரையில் அவர்கள் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. ஆகவே, மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய கிளை வராமல் இருப்பதற்கு இன்று வரையிலும் இருக்கின்ற காரணம், நம்முடைய உயர்நீதி மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அது இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்த மட்டில், மதுரையிலே அந்த உயர்நீதி மன்றக் கிளை வருவதற்கான தன்னுடைய ஆதரவை, முழு ஆதரவை, அதற்கு என்ன தேவையோ அதை நாங்கள் செய்கிறோம் என்கின்ற வாக்குறுதியையும் நாம் தந்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே சென்னையிலே, உச்ச நீதிமன்றக் கிளை ஏற்படுத்த வேண்டுமென்ற நம்முடைய கோரிக்கையையும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் அதை எடுக்காத காரணத்தினாலே அதுவும் தேங்கிக் கிடக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் தமிழக அரசானது வற்புறுத்திக் கேட்டு வருகிறது. உச்சநீதி மன்றக் கிளையானது இங்கே வரவேண்டும்; சென்னைக்கு வர வேண்டுமென்பதை நம்முடைய அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசானது வற்புறுத்தி கேட்டுக்கொண்டு வருகிறது.

சட்டக் கல்லூரிகளுக்கு என ஒரு தனி பல்கலைக் கழகம் வேண்டுமென்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது பல்கலைக் கழகம் தேவையா என்பதல்ல. சென்னையிலே இருக்கிற டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரியை தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரியாக மாற்றலாமா என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சட்டக் கல்லூரியின் தரம் சிறந்த நிலையில் உள்ளது என்பதற்கு . . .

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : சட்டக் கல்லூரியினுடைய தரம் சிறந்த நிலையிலே உள்ளது என்பதற்கு டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் செல்வி உஷா என்ற மாணவியும், செல்வன் ஆத்மாராம் என்ற மாணவனும் பாண்டிச்சேரியில் அகில இந்திய அளவில் நடைபெற்ற மாதிரி நீதிமன்றப்

போட்டியில் முதலிடம் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) அமெரிக்காவிலுள்ள வாஷிங்டனில் அகில உலக மாதிரி நீதிமன்றப் போட்டியில் பங்கு பெற வாஷிங்டன் சென்றுள்ளார்கள் என்பதைக் குறிப்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு நிதியுதவியாக 1,15,540 ரூபாய் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி),

அதுபோல சிறைத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு சிறை அதிகாரிகளுக்கான பல்வேறு சலுகைகளை நேற்றைய தினம் காவல் துறை மானியக் கோரிக்கையின்பொழுது மாண்புமிகு முதல்வரவர்களே தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்த அடிப்படையிலே நீதிமன்ற நிர்வாகம், சிறை நிர்வாகம் பற்றிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களுக்கு நான் தந்த விளக்கமாக ஏற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, திருச்சி சட்டக் கல்லூரியில் மேலும் பி.எல்., படிப்பதற்குக் கூடுதல் இடம் வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் உத்தரவிடுவாரா? ஏனென்றால் சட்டக் கல்லூரியில் நிறைய பேர் படிப்பதற்கு ஆவலாக உள்ளார்கள். அதுவும் திருச்சியிலே தமிழ்நாட்டின் மையமாக இருக்கின்ற திருச்சிராப்பள்ளியில் அந்தச் சட்டக் கல்லூரியில் அட்மிஷனுக்கு மேலும் கூடுதல் இடம் அளிக்கப்படுமா என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாம் கூடுதல் இடங்களைத் தந்து, கூடுதல் வழக்கறிஞர்களையெல்லாம் உருவாக்குவோமேயானால் அது அவர்களுக்கு பெரும்பாலான வழக்கறிஞர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிற காரணத்தினால் இந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இன்னொரு உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். கோவையிலேயும், திருச்சியிலேயும் சட்டக் கல்லூரிகளை நாம் ஏற்படுத்திய போது அதிகப்படியான இடங்களை நாம் ஏற்படுத்தவில்லை. சென்னையிலே இருந்த இடங்களை மட்டும் பிரித்து கொஞ்சம் இடங்களைக் கோவை கல்லூரிக்கும்

இன்னும்கொஞ்சம் இடங்களைத் திருச்சி கல்லூரிக்கும் தந்துதான் இந்த இரண்டு கல்லூரிகளையும் கொண்டு வந்தோமே தவிர, அந்த நேரத்திலேகூட புதிதாக இடங்களைத் தோற்றுவிக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டில் உள்ள சட்டக் கல்லூரி களில் பகுதி நேர ஆசிரியர்கள், முழு நேர ஆசிரியர்கள் பணியிடங்கள் நிறையக் காலியாக இருக்கின்றன. அவர்களை நிரப்பிக் கூடாது என்று அரசு ஒரு உத்தரவு மூலம் தடை விதித்திருப்பதாகத் தெரிய வருகிறதே, அந்தத் தடை விதித்து இருப்பதற்கான காரணம் என்ன? அதனை அகற்றி தற்காலிகமாகவாவது அந்த இடங்களில் ஆசிரியர்களை நியமனம் செய்ய அனுமதி வழங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலியான இடங்களை நிரப்ப அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா.சா. பழனி சாமி,

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, ஒரு கொலை சம்பவத்தில் கொலை செய்தவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு அவனுக்கு ஆயுள் தண் டனை அளிக்கப்பட்டு, பத்தாண்டுகளில் அவன் விடுதலை ஆகின்றபொழுது இன்றைக்கெல்லாம் சிறைச்சாலைகள் தொழிற் பயிற்சிக் கூடங்களாகவும், சீர்திருத்தப் பள்ளிகளா கவும் மாறியிருக்கின்ற நேரததிலே அவன் வெளியே வருகின்ற பொழுது அவனுக்கு 5,000 ரூபாய் பணமும்கூடக் கொடுப் பதாகக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்படுகிறது. ஆனால் அந்தக் கொலைக் குற்றவாளியினால் இறந்த அந்தக் குடும் பத்திலே பாதிக்கப்பட்டவர்கள் அவனுக்குத் தண்டனை கொடுப்பதற்காகவே பெரிய அளவில் செலவழித்து அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் செய்யப்படுவதில்லை. எனவே அந்தக் கொலையாளி சிறைச்சாலையிலேயிருக்கின்ற காலத்தில் அவனிடம் வேலை வாங்கி, அவன் பெறுகின்ற அந்த ஊதியத்தை அந்தக் கொலையுண்டு இறந்தவரின் குடும்பத் திற்கு நிவாரண நிதியாக அளிப்பதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டுவருமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 23

பிற்பகல் 2.05

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தருகின்ற தண்டனை சிறை தண்டனை; ஆகவே, சிறை தண்டனை மட்டும்தான் நாம் அவர்களுக்குத் தரமுடியுமே தவிர, மேற்கொண்டு ஒரு கூடுதலான தண்டனையை அரசு தரமுடியாது. மற்றபடி அந்தக் கைதிகளுக்கேகூட, அவர்கள் உழைக்கின்ற உழைப்பிற்குத் தரப்படுகின்ற கூலியை அதிகப்படுத்துகிற ஒரு நடவடிக்கை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பிட்ரிக்ஸ் டி, சோசா.

Dr. Beatrix D'Souza : Hon'ble Speaker Sir, I would like to appeal to the Government of Tamil Nadu to introduce a Bill to amend the ndian Divorce Act of 1869 which governs the Christians. This is avery archaic law which is more than a century old, which has been produced by the British which Christian women still have to follow in the sense that divorce is only granted with adultery and on proof of cruelty. We want amendments the Church Leaders like amendments, two major changes, which can give relief in two very important areas in case of desertion as well as judicial speration. Because sometimes even very young girls are deserted after one year. But they have no records at all. Until we wait for a Central law, I mean a common Civil Procedure, the State of Tamil Nadu can also help us. Uttar Pradesh has brought out amendments in 1957 and since the Christian women are particularly affected by this veryarchaic and unjust low, I would expect some type of relief from the Women Chief Minister.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து, ஒரு சட்டத்தைப் பற்றியது. பல்வேறு சட்டங்களிலே இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. உதாரணத்திற்கு, (Indian Penal Code) போன்ற சட்டங்களை எடுத்துக் கொண்டால் கூட, ஆங்கிலேயர் இருந்த காலத்திலே இயற்றப்பட்ட சட்டம். ஒரு வீதியிலே இருக்கின்றவர்கள் ஒருவருக்கொருவர் தெரிந்து, அறிமுகமாகி இருக்கிற சூழ்நிலையிலே கொண்டு வரப்பட்ட சட்டம். ஆனால், இன்றைய தினத்திலே அப்படி இல்லை. தண்ணீர் கேட்டு வருகிறார்கள். உள்ளே வந்தவுடன் கழுத்தைப் பிடித்து அழுத்திக் கொன்று விடுகிறார்கள். யார் என்றே தெரிந்து கொள்ள முடியவில்லை. சமுதாயத்தினுடைய வளர்ச்சி, நகரங்களினுடைய வளர்ச்சி அப்படி ஏற்பட்டிருக்கிறது.

ஆக, இது போன்ற சட்டங்களை ஆய்ந்து, ஆய்வு செய்து, புதிய சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்கிற கருத்து நமக்கு இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே ஒரு 'லா கமிஷன்' போட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்கான நடவடிக்கையை நாம் விரைவாக எடுக்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறை தொடர்பான ஒரு முக்கிய அறிவிப்பை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் பேசுகிறபோது, ஒரு கோரிக்கையை வைத்தார். சிறைத் தண்டனையை அனுபவித்து, பின்னர் சிறைத் தண்டனை முடிந்து விடுதலையாகும் கைதிகளின் மறுவாழ்விற்கு அரசாங்கம் அதிகப்படியான உதவிகளைச் செய்ய வேண்டும்; அவர்களுடைய மறுவாழ்விற்கு உதவியாக அவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. லோன்கள் போன்ற உதவிகள் எல்லாம் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார். ஏற்கெனவே, இந்த எண்ணம் என் மனதிலே தோன்றி, இதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டே, இத்துறை சம்பந்தமான 'ரெவ்யூ மீட்டிங்' நடைபெற்றபோது, சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையாகிற கைதிகளின் மறுவாழ்விற்காக தற்போதுள்ள நிதி, வெறும் 8 ஆயிரம் ரூபாய் தான்; இதை வைத்துக் கொண்டு எதுவுமே செய்ய முடியாது என்று சிறைத் துறை ஐ.ஜி. அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, 8 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, கடந்த ஆண்டே ஒரு லட்சம் ரூபாய் என்று உயர்த்தி ஒதுக்கினோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதனை இப்போது, இன்று 10 லட்சம் ரூபாயாக உயர்த்துகிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 13, நீதி நிர்வாகம். வெட்டுத் தீர்மானம் ஏதும் முன்மொழியப்படவில்லை.

''நீதி நிர்வாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 48,63,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2–10.

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள், வெட்டுத் தீர்மானம் ஏதும் முன்மொழியப்படவில்லை.

''சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 24,14,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) முதல்வரின் ஆலயப் பாதுகாப்பு நிதிக்கு நிதி வழங்கிய உறுப்பினர்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு இன்னொரு முக்கிய அறிவிப்பு. நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலயப் பாதுகாப்பு நிதிக்குப் பல்வேறு உறுப்பினர்கள் மனமுவந்து நிதி வழங்கிய சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இன்றைக்கு மிகக் குறிப்பிட்ட ஒரு அம்சம், தமிழகத்தின் சமயப் பொறையுடைமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிற வகையில் கோயில் நிதிக்கு என்று, திருமதி பிட்ரிக்ஸ் டி: சோசா அவர்களும், டாக்டர் ஜெ. பரந்தாமன் அவர்களும், திரு. கி. தருமலிங்கம் அவர்களும் முறையே ரூ. 6,250, ரூ. 6,250, ரூ. 2,750 என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நிதி வழங்குமாறு என்னிடத்திலே வழங்கி இருக்கிறார்கள். அது இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்து சமயத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இத்தகைய நன்கொடை கொடுப்பதிலே எனக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், வேறு மதத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்து சமயத்தை இந்த அளவு மதித்து, இந்து சமய ஆலயங்கள், கோயில்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த நிதியினை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் என்னுடைய மகிழ்ச்சி பன்மடங்கு அதிகரிக்கிறது என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றும், இன்றும் மட்டும் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐம்பது ரூபாய் ஆகிறது மொத்தத் தொகையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் ஏகப்பட்ட உறுப்பினர்கள் கை தூக்கினீர்கள். இன்னும் 'செக்' வரமாட்டேன் என்கிறது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30.

மாலை 4-30 மணியளவில் பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.—தொடர்ச்சி மானியக் கோரிக்கை எண் 28 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 61,22,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் எவரும் இருக்கையில் இல்லை. எனவே வெட்டுத் தீர்மானங்கள் எவையும் முன்மொழியப்படவில்லை.

மானியக் கோரிக்கை பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை (@) நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(@) 457 முதல் 468 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1993 ஏப்ரல் 23] [திரு. சே. ரகுபதி]

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதில் உரையையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள மானியக் கோரிக்கை மீது விவாதம் தொடர்கிறது. மாலையில் அவை கூடி இருக்கிறது இன்று வெள்ளிக்கிழமை வேறு. நிறைய உறுப்பினர்கள் ஊருக்குச் செல்லவேண்டும் என்று இருக்கிறார்கள். அதை எல்லாம் மனதில் வைத்து பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களும் கூட இரயிலைப் பிடிக்க வேண்டி இருக்கும், அதை எல்லாம் மனதில் வைத்துப் பேசி முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சிங்கை கோவிந்தராசு.

பிற்பகல் 4-35

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனுடைய மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக குடும்ப தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இருக்கை நோக்கி வணங்குகிறேன். மனதில் உறுதி வேண்டும், வாக்கிலே உறுதி வேண்டும், நினைவு நல்லது வேண்டும், நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும் என்று உலகக் கவி பாரதியார் பாடினார். அவர்களுடைய பாடலின் பின்னணியாக அழைத்தவர் குரலுக்கு வரவேண்டும் என்று கீதையிலே கண்ணன் கூறினான். ஆனால், மாண்புமிகு காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு தானாகவே தேடி வந்து, நாடி வந்து, தொழிலாளர்களின் நலனில் அக்கறையோடு செயல்படுவதை நாம் பார்க்கின்றோம். உழைக்கின்றவரின் நெற்றி வேர்வை பூமியிலே படுவதற்கு முன்னரே அவருக்கு ஊதியத்தை கொடுக்க வேண்டுமென்ற நபிகள் நாயகம் அவர்களின் கூற்றுக்கு ஏற்ப, கண்களை இமை காப்பது போல, இந்தப் புனித அரசு தொழிலாளர்களை காத்து வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலேயும் மறைந்து இருக்கும் விருந்தாளியாக நான் இருப்பேன் என்று ஏசுபிரானின் கூற்றுக்கு ஏற்ப ஒவ்வொரு தொழிலாளர் குடும்ப முன்னேற்றத்திற்கும் டாக்டர் புரட்சித் தலைவியின் புனித அரசு செயல்படுகிறது. போனஸ் பிரச்சினை என்றாலும் போர்க்களம், பரணி பாட வேண்டிய நிலையில் இருந்த தொழிலாளர்களின் நிலையை இந்த அரசு பதவியேற்ற பிறகுதான், அரசின் பூரண

ஒத்துழைப்புடன் அமைதியாக போனஸ் பேச்சு வார்த்தை நடைபெற்று சுமூகமான முறையிலே அந்தப் பிரச்சினைகள் முடிக்கப்பட்டு வந்தன. வரப்புயர நெல் உயரும் என்பார்கள். அந்த நெல் உயர நாடு உயரும் என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள். இன்றைய நவீன உலகத்தில் தொழிலாளர் வளர நாடு உயரும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர் வளர்ச்சி பெற்று தொழில் அமைதி வேண்டும். தொழில் அமைதி வேண்டும் என்றால் தொழிலாளர்களின் நலனும் பெரிதும் காக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தொழிலாளர்கள் நலத்தை காப்பதில் கண்ணும் கருத்துமாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளை திறந்து வைத்ததன் மூலம் ஸ்டேண்டர்டு மோட்டார்ஸ், பின்னி நூற்பாலை தொழிலாளர்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மூடிக்கிடக்கும், குறிப்பாக எனது சிங்காநல்லூர் தொகுதியிலே, வசந்தா மில் ஆலை, ஜெயலட்சுமி மில் ஆலை, இராதாகிருஷ்ணா மில் ஆலை, இராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ் போன்றவற்றை திறந்து அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தித் தர வேண்டுமென கருணை உள்ளம் கொண்ட, தொழிலாளர்களின் காவல் தெய்வமாக விளங்கும் கருணைக் காருண்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வாழ்விலே நிச்சயம் ஒளியேற்றி வைப்பார்கள் என அந்தத் தொழிலாளர்கள் பூரண நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள் என்பதை பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறுபட்ட தொழிலாளர்களுக்கு வீடுகள், தொழில் பாதுகாப்பு, அவர்கள் பிள்ளைகளுக்கு பயிலுகின்ற பொறியியல் கல்லூரி, போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் போன்ற நெஞ்சை நெகிழ வைக்கும் நற்பணிகளை செய்து தருவதன் மூலம் இந்த அரசு தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாது அவர்களுடைய குடும்பத்தை தனது இதயத்திலே வைத்து பாதுகாத்து வருகிறது என்பதை எண்ணும் போது, ஒரு பஞ்சாலை தொழிலாளியாக பணியாற்றிய என்னை இன்றைய தினம் இங்கே சட்டமன்றத்திலே அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பை பெற்றுத் தந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய உள்ளத்திற்கு தொழிலாளர் வர்க்கம் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது. அத்தனைக்கும் மேலாக குழந்தை தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வது ஆபத்து என்ற அடிப்படையான உண்மையை புரிந்துகொண்டு இந்தப்புனித அரசு முனைப்போடு செயல்படுவதை, உலகமே வியப்போடு பார்த்து வரவேற்கின்றது. உலகில் வல்லரசு நாடாகத் திகழும், விஞ்ஞான உலகத்தின் விளைநிலமாக நவீன உலகத்தின் கட்டுமானக் கூடமாக விளங்கும் அமெரிக்க நாட்டிலே கூட பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள் உள்ளார்கள்.

1993 ஏப்ரல் 23] [திரு. சிங்கை கோவிந்தராசு]

பிற்பகல் 4-40

தமிழகத்தில் உள்ள பட்டாசு, தீப்பெட்டித் தொழிற் சாலைகளில் பணிபுரியும் சிறார்களை, அந்த இளம் குருத்துக் களை, அந்த முல்லை மொட்டுக்களை கந்தக நெருப்பாற்றி லிருந்து கரை சேர்க்கும் அற்புதத் திட்டத்தை நிறைவேற்று வதன் மூலம் அமெரிக்க நாட்டுக்கே வழிகாட்டியாக இன்றைய தினம் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார்கள் என்கிறபோது அந்தக் குழந்தைத் தொழிலாளர்களின், அந்தச் சின்னஞ்சிறு மலர்களின் வருங் காலத்தை வசந்த யுகமாக மாற்றுவதை எண்ணும்போது நாம் மிகவும் பெருமையோடு தலை நிமிர்த்தி நிற்கிறோம். பொதுவாக தொழிலாளர்களைத் தாலாட்டி வளர்க்கிற தாய்வீடாக, உழைக்கும் வர்க்கம் இணைந்திட, தாய் உள்ளமாக தொழிலாளர்களை நாடி வந்து உதவுகின்ற நம்பிக்கை ஊற்றாக உருவாகும் உலகில் கருவாகத் திகழும் உழைப்பவர்கள் பூமியில் ஓடும் ஜீவநதியாக இளம் தென்றலோடு கூடிய சுந்தரவனத்து சந்திரோதயமாக இந்த அரசு திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தின் தங்கத் தலைவியாம் தன்னிகரற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய போற்றுதலுக்குரிய பொருளாதாரக் கொள்கையாலும் ஏற்றமிகு தொழில் கொள்கையாலும் தமிழக மக்களுக்கு வேண்டிய, விரும்பிய பொருட்கள் அனைத்தும் கிடைத்து வருகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் பொறுப்பிலே, அவர்கள் சீரிய தலைமையிலே இயங்கி வரும் அனைத்துத் துறைகளும் குறிப்பாக தொழிற்சாலை ஆய்வகத்துறை சிறப்பாகப் பணி யாற்றி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பொதுவாக, தமிழ்நாடு எங்கும் மிகச்சிறந்த முறையில் இருக்கிற நேரத்தில் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று சொல்லப்படுகிற கோவை பகுதியில் தொழிற்சாலை ஆய்வகத் துறை அதிகாரிகள், தொழிலாளர்களது பாதுகாப்பு, அவர்களது நல்வாழ்வு ஆகியவற்றைப் பேணிக்காத்து சிறப்பான முறையில் பணியாற்றி வருவதை நான் நன்கு அறிந்தவன் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை சட்டத்தை அமல்படுத்துவது மட்டுமல்லாமல் சட்டப்படி நடப்பது எப்படி என்பது பற்றியும் கருத்தரங்கு, மாநாடு நடத்தி, தொழிலாளர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழக அரசின் தாராள தொழிற் கொள்கையினால் ஆயிரக் கணக்கான சிறுதொழில்கள் பெருகி பல்லாயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு கூடி வருகிறது. கோவை மண்டலத்தில் அதாவது கோவை, நீலகிரி, பெரியார

[திரு. சிங்கை கோவிந்தராசு] [1993 ஏப்ரல் 23

சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அரசின் தாராளத் தொழிற் கொள்கையைப் பயன்படுத்தி ஏராளமான புதுத் தொழிற்சாலைகளை தொடங்க முன்வருகின்றனர்.

கோவையில் பஞ்சாலை மற்றும் இன்ஜினியரிங் தொழிற் சாலைகள், திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள் மற்றும் சாயப் பட்டறைகள், சேலத்தில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகள், மேட்டூரில் ரசாயனத் தொழிற்சாலைகள், ஹோசூரில் பொறியியல் தொழிற்சாலைகள் நாள்தோறும் பதிவு செய்யப் பட்டு லைசன்ஸ் வழங்கப்படுகின்றன. குறிப்பாக ஹோசூர் பகுதியில் மட்டும் பிற மாநிலத்தவர்கள் நமது தொழிற் கொள்கையைப் பாராட்டி, தொழில் தொடங்க முன்வருகின்றனர். இன்னும் இரண்டாண்டுகளில் கோவை மண்டலத்தில் புதிதாக 2,000 சிறிய பெரிய தொழில்கள் தொடங்க வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே இந்தப் பகுதியில் சுமார் 7,000 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு இருப்பதாக அறிகிறேன். எனவே, தொழில் வளம் மிக்க கொங்கு தலை நகராம் கோவையில் தனியாக ஒரு தலைமை இன்ஸ்பெக்டர் அமைந்தால் தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும் மிகுந்த பயன் அடைவார்கள். அடிக்கடி சென்னைக்கு சென்று, லைசன்ஸ் பெறுவதில், வரைபடங்களுக்கு ஒப்புதல் பெறுவதில் பெண் தொழிலாளர்களை இரவில் வேலைக்கு அமர்த்த அனுமதி பெறுதல் போன்ற அன்றாட வேலைக்கு அலைவதைத் தவிர்க்கிற வகையில் அந்த அதிகாரியைக் கோவையிலேயே வைத்தால் நேரமும், பணச் செலவும் மிச்சம் ஆகி, தொழில் மேலும் பெருக வாய்ப்புக் கிடைக்கும் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் அதிகாரிகளும், சட்ட விதிகளைக் குட்ட நோக்கத்தோடு பாராமல் விதிகளைத் தளர்த்தி தொழிலாளர்கள் நலனைக் காத்து, நாட்டு நடப்புக்கு ஏற்ப அனுசரித்து அரசின் தொழிற் கொள்கையை அரும்பாடுபட்டு நிறைவேற்ற வேண்டும். எனவே கோவைக்கு முன்னுரிமை கொடுத்து தொழிற்சாலை ஆய்வகத் துறையில் ஒரு கூடுதல் தலைமை இன்ஸ்பெக்டர் பதவியை உருவாக்கித் தரவேண்டும் என்று சொல்லி, தன்னுடைய தொழிற் கொள்கை மூலம் தொழில் முனைவோரையும், தொழிலாளர்களையும் பாது காத்து வருகிற தமிழகத்தின் இதய தெய்வமாக விளங்குகிற, தொழிலாளர்களுடைய குடும்ப தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி ஆட்சியில் இந்தச் சலுகைகளையும் நீங்கள் சேர்த்துத் தர வேண்டும் என்று சொல்லி தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4–45

மேலும் மூடிக் கிடக்கின்ற பின்னி மற்றும் ஸ்டேண்டர்டு தொழிற்சாலைகளைத் திறந்ததன் மூலம் தமிழக முதல்வர்

1993 ஏப்ரல் 23] [திரு, சிங்கை கோவிந்தராசு]

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழைத் தொழிலாளர்கள் வயிற்றிலே பாலை வார்த்து இன்று தெய்வமாகப் போற்றிப் பூஜிக்கப்படுகின்றார்கள். இனி இந்தத் தொழிற்சாலைகளை மூட அனுமதிக்கக்கூடாது. உழைக்கும் கரங்கள் தான் இன்று உருவாக்கும் கரங்கள். அந்த உரம் மிக்க கரங்கள் உருமாறும் கரங்களாக ஆகாமல், உண்மையாக உழைக்கும் உணர்ச்சி மிக்க கரங்களாகி அரசின் தொழிற் கொள்கைக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். புதியதோர் உலகம் செய்வோம் என்று பாடினான் புரட்சிக் கவிஞன். அந்த புதியதோர் உலகத்தில் புதிய தொழிற் கொள்கையை புகுத்தி புதிய தமிழகத்தில் பொற்காலம் தோன்ற நம்மை அழைத்துச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான அரசை போற்றிக் காப்போம், புகழ் சேர்ப்போம் என்ற உறுதியோடு இந்த தொழிலாளர் நல மானியத்தின் மீது பேசக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கின்ற நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்கள் என்று சொல்லுகின்ற போது 18 வகையான தொழிலாளர்கள் இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்றார்கள். விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கூலித்தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிலாளர்கள், மீன் பிடிக்கும் தொழிலாளர்கள், செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் அதே போல பாரம் தூக்குகின்ற தொழிலாளர்கள், என்று சொல்லி பீடி தயாரிக்கின்ற தொழிலாளர்கள் என்று சொல்லி, ஒட்டுநர்கள், நடத்துநர்கள் என்று சொல்லி, உலகத்திலே இன்றைய தினம் வாழும் தொழிலாளர் வர்க்கம் தான் ஒரு நாட்டை வழி நடத்திச் செல்கின்ற அளவுக்கு வளம் மிக்க வலிமை மிக்கவர்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய வாழ்க்கையில், தான் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற போது அவர்களுக்கு மிஞ்சுகின்ற ஒரே ஒரு நிலை என்னவென்று சொன்னால் அந்த தொழிலாளியினுடைய உடலிலே டி.பி. நோய் இருக்கும் காச நோய் இருக்கும் அல்லது கேன்சர் நோய் இருக்கும்., இப்படி ஏதாவது ஒரு நோயினால் அந்த தொழிற்சாலையிலே அந்த தொழிலினுடைய தன்மைக்கு ஏற்ப பணியாற்றுகின்ற போது அந்த நோயினாலே பாதிக்கப்பட்டு தொழிலாளி ஓய்வு பெறுகின்ற போது, தன்னுடைய ஓய்வு காலத்திலே நோயினாலே பீடித்து மிகவும் கஷ்டப்படுகின்ற போது அந்தத் தொழிலாளியை வைத்து சம்பாதித்து வைத்திருக்கக்கூடிய அந்த முதலாளி.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. துரை ராமசாமி ஆகியோர் உங்கள் ஈரோடு விவகாரத்தைப் பற்றி இவ்வளவு உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தால் அமைச்சரின் கவனம் சிதறும்.

திரு. சிங்கை கோவிந்தராசு: அந்த முதலாளிகள் அவர்களுடைய மிகப் பெரிய லாபத்தைப் பற்றி சிந்திப்பார்கள். அந்த தொழிலாளியினுடைய உடலிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த மிகப் பெரிய நோய்க்கு எந்த விதமான மாறுதலும் கிடையாது அவர்களுக்குக் கடைசியிலே கொடுக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டுத் தொகையை அந்த நோயின் தன்மையாலே அவர்கள் செலவு செய்து விடுகிறார்கள். சுடுகாட்டுக்குச் செல்லும் வரை செய்தாலும் மீறுவதில்லை அதனால் பற்றாக்குறை ஏற்படுகிறது. தான் அந்த ஆலையிலே நுழைந்த நேரத்திலேயிருந்து தான் ஓய்வு பெறுகின்ற காலம் வரை உழைத்து உழைத்து அந்த தொழிலாளி அந்த ஆலை அதிபருக்காக அந்த தொழிற்சாலையினுடைய முதலாளிக்காக தன்னுடைய ரத்தத்தைக்கூட வியர்வையாக சிந்தி கொடுக்கிறான். அந்த தொழிலாளி ஓய்வு பெறுகிறபோது நிம்மதியாக தன்னுடைய இல்லத்திலே ஓய்வு பெறமுடியாத அளவுக்கு நோயினால் பாதிக்கப்படுகின்றான். அந்த நோயின் தன்மைக்கு ஏற்ப இந்த சட்டத் திருத்தங்கள் திருத்தப்பட வேண்டும். ஒரு தொழிலாளி தன்னுடைய வாழ்க்கையில் ஓய்வு பெறுகின்ற போது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலாளி ஓய்வு பெறும் போது அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்து ஓய்வு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றார்கள். அந்த தொழிலாளி பணியிலே இருக்கும் போது அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவரை மருத்துவ சோதனை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அப்போது ஏதாவது நோய்வாய்ப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் இருக்குமானால் ஒர்க்மேன் காம்ப்பன்சேஷன் ஆக்ட் பிரகாரம் அதற்குறிய நிவாரணங்கள் அவர் பெறமுடியும். எனவே ஓய்வு பெறும்போது மருத்துவப் பரிசோதனைக்கு அவரை ஆளாக்கி அதன் பிறகு அவருக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று நாம் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகின்ற தொழிலாளிக்கு 58 வயது ஆனதற்குப் பின்னாலே கட்டாய ஓய்வு நாம் கொடுக்கின்றோம். அந்த கட்டாய ஓய்வு பெறுகின்ற தொழிலாளி

டி.பி., காசநோய், ஆஸ்துமா நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கு அந்த ஆலையி லுடைய தொழிலுக்கு ஏற் பாதிக்கப்படுகிறான். பாதிக்கப்படுகின்ற பஞ்சாலைத் தொழி லாளியாக இருந்தால் 50 ஆயிரம் ருபாய் நஷ்ட ஈட்டை பெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்றார் என்று சொன்னால் அந்த 50 ஆயிரம் ரூபாயை அவர் நோய்க்கே செலவு செய்தால் கூட அது சரியானதாகப் படுவதில்லை.

நான் சொல்வது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற சட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன், நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத் திலே ஓய்வு பெற்றதற்குப் பின்னாலே அவர் பெறுகின்ற அந்த 50 ஆயிரம் ரூபாய் அந்த நோய்க்கு என்று செலவு செய்தாலும் அந்த நோய் திருவதில்லை.

பிற்பகல் 4–50

ஆகவே அந்த நோயைப் குணப்படுத்துகிற பொறுப்பை அந்தத் தொழிற்சாலை முதலாளியே ஏற்றுக்கொள்கிற வகை யில் ஒரு சட்டம் வருமேயானால் ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய வாழ்க்கையில் பெறுகிற அந்த நோயைத் தீர்ப் பதற்கு உதவியாக இருக்கும். தொழிலாளர்களுடைய வாழ்க் கையில் விளக்கேற்றி வைப்பது தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு என்பதை நிரூபிக்கிற வகையில் அமையும் என்பதை மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்கு பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இன்றைய தினம் மூடிக்கிடக்கிற ஆலைகளில் இருக்கக் கூடிய பல்வேறு முதலாளிகள் அதாவது லக்ஷ்மி மில் ஆலை, அந்த ஆலை முதலாளியை நானும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அழைத்துப் பேசி இருக்கிறோம். அவர்கள் இந்த அரசினுடைய ஆணைக்குக் கட்டுப்பட மறுக்கிறார்கள். அப் படி கட்டுப்பட மறுத்துக் கொண்டு 4, 5 ஆலைகளை மூடி 6 மாதமாக அந்த ஆலைத் தொழிலாளர்களின் 3,000 குடும்பங்கள் —என்னுடைய தொகுதியிலேயே அந்த நிலைமை இருக்கிறது— அந்த 3,000 குடும்பத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இன்றைய தினம் 6 மாத காலமாகப் பட்டினியாகக் கிடக்கிறார்கள். கடந்த போனஸ் பிரச்சினையின் போது இதே ஆலை முதலாளி அங்கே 4 ஆலைகளை மூடி தொழிலாளர்களைப் பழிவாங்கி னார். இப்படித் தொழிலாளர்களைப் பழிவாங்குகிற நோக் கோடு இருக்கிற முதலாளி அரசின் ஆணைக்கும் கட்டுப்படா மல், தொழில் தகராறு சட்டங்களுக்கும் கட்டுப்படாமல், தொழிலாளர் நல ஆணையர் அவர்களுடைய விதிகளுக்கும் ட்ப்படாமல் இருக்கிற முதலாளிகள் மீது கடுமையாக B

நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படும் என்ற ஒரு முனைப்போடு இந்த அரசு செயல்படுவதை நாங்கள் எண்ணிப் பாராட்டுகிறோம். ஆனால் கடுமையான ஒரு நடவடிக்கை வரவில்லை என்று சொன்னால் அந்த 3,000 குடும்பங்கள் எந்தச் சூழ்நிலைக்குப் போகும் என்பதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இப்படிப்பட்ட முதலாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு வேறு ஏதாவது சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தாலொழிய வேறு வழியில்லை என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு என்று சொல்லி ஒதுக்கப்படுகிற வீடுகள், தொழிலாளர் நலனுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் அவர்களுக்கே சொந்தமாக்கித் தரப்படவேண்டும் என்று பலவேறு முறை கோரிக்கைகளை பல அரசுகள் இருக்கிறபோது வைத்திருக்கிறார்கள். எனவே அந்த வீடுகளை எல்லாம் இன்றைய தினம் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்—பெரிதாக இருக்கக்கூடிய தனியார் ஆலைகளிலே, தொழிற் சாலைகளிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள், அதாவது ஊதியம் அதிகமாகப் பெறுகிறவர்கள் ஓரளவுக்கு வாடகை வீட்டிலே இருந்து சமாளித்துக் கொள்கிறார்கள். ஆனால் பீடித் தொழிற்சாலைக்குச் செல்கிற தொழிலாளி, தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் செல்கிற தொழிலாளி, செருப்பு தைக்கிற தொழிலாளி, தையல் தொழிலாளி, அதேபோன்று தனியார் வாகனங்களில் பணியாற்றுகிற தொழிலாளி போன்ற இப்படிப்பட்ட சாதாரணமான நிலையில் ஒரு நாளைக்கு 20 ரூபாய், 25 ரூபாய் என்று ஊதியத்தைத் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய தொழிலாளிக்கு உத்தரவாதம் தருகிற வகையில் அவர்களுக்கென்று நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஒரு நல்ல திட்டத்தை வகுத்து, அவர்களுக்காக வீடு கட்டித் தருகிற திட்டத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இன்றைய தினம் தொழில் வளர்ச்சியில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 20,000 கோடி ரூபாயைத் தொழில் முனைவோர்களுக்கு, தொழில் நடத்த முன்வருவோர்களுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த 20,000 கோடி ரூபாயை தொழில் துவங்குபவர்களுக்கு, மிகப் பெரிய கோவையிலே இருக்கக்கூடியவர்களுக்குக் கூட வழங்க இருக்கிறோம். இப்படி தொழில் முன்னேற்றம் அடைய வேண்டும், தமிழகம் இந்தியாவிலேயே அதிக தொழில் வளம் பெற்றிருக்கக்கூடிய முன்னேறக் கூடிய மாநிலமாக இன்றைய தினம் தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. தொழிற் கொள்கையில் மிகப் பெரிய நல்ல வாய்ப்பினைத் தந்து

1993 ஏப்ரல் 23] [திரு. சிங்கை கோவிந்தராசு]

கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தொழிலாளர்களின் நலனிலேயும் மிகப்பெரிய ஒரு மாற்றத்தைத் தொழிலாளர்கள் எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது என்பதும், அப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளை கனிவோடும், பரிவோடும், நல்ல அன்போடும் புரட்சித் தலைவி நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். ஆகவே தொழிலாளர் நல மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி சொல்லி, எனது தொகுதியான சிங்காநல்லூர் தொகுதியில் அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது. அந்த அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தில் 8 கிராம பஞ்சாயத்துகள் இதுவரையில் இணைக்கப்படவில்லை. அங்கே இருக்கக்கூடிய சிங்காநல்லூர் தொகுதி, பல்லடம் தொகுதி, திருப்பூர் தொகுதி—மன்னிக்கவேண்டும்— பொங்களூர் போன்ற பகுதிகளில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிற போது பல இலட்சக்கணக்கான மக்கள் நன்மை பெறுகிறார்கள். எனவே அந்தத் திட்டத்தில் 8 கிராம பஞ்சாயத்துக்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

அதேபோல் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே எங்களுடைய சிங்காநல்லூர் தொகுதி சின்னவேடப்பட்டியிலே 5 கோடி ரூபாயிலே மிகப் பெரிய கால்வாய் ஒன்று ஏரித் திட்டம் 4 என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஏரித்திட்டம் இன்றைய தினம் வரை அங்கே தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிற அளவுக்கு இல்லாமல் அந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட பணமும் விரயமாகி அப்படியே கிடக்கிறது. என்ன காரணம் என்று சொன்னால், அந்த ஏரிக்கு வருகின்ற வாய்க்கால்கள் எல்லாம் குறுகிய அளவிலே அந்த ஏரியிலே வந்து தண்ணீர் சேர்கின்ற அளவிலே வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படவில்லை. அதேபோல கால்வாய்களை துப்புரவு செய்து அகலப்படுத்த வேண்டும். ஏரியிலே தூர் எடுக்க வேண்டும். 5 கோடி ரூபாயிலே இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட சின்னவேடப்பட்டி ஏரி திட்டத்திலே பயன் அடைகின்ற வகையிலே, 10, 20 கிராமங்கள் பயனடையும். அங்கே 20 கிராமத்திலே இருக்கக்கூடிய பல்வேறு ஏழை விவசாயிகள் வேறு தொழிலே இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற பாசன நீர் நிறைவாக கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த ஏரித் திட்டத்தை அந்தக் காலக் கட்டத்திலே நிறைவேற்றி வந்தார்கள். அந்த ஏரிக்கு, சின்னவேடப்பட்டி ஏரி திட்டப்

[திரு சிங்கை கோவிந்தராசு]

4-லே 5 கோடி ரூபாய் செலவிலே உள்ள அந்த ஏரியை தூர் எடுத்து வாய்க்கால்களை விரிவுபடுத்தி தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இங்கே பேசுகின்ற போது பல்வேறு நண்பர்கள் அவர்களுடைய தொகுதிகளின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைச் சார்ந்த அவினாசி சாலை நம்முடைய பொதுப் பணித் துறை, ஹைவேஸ் நேசனல் ரோடுக்கு சம்பந்தப்பட்டது. திருச்சி சாலை, காமராஜர் சாலை, உப்பிலிய சாலை, மெயின்ரோடு சாலை ஆகிய, சாலைகள் மிகப் பெரிய பிரதான சாலைகள். பிரதமர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கே விமான நிலையத்திலிருந்து வருகிறார்கள். திருச்சியிலேயிருந்து வருகின்றபோது திருச்சி சாலையிலேயே வருகிறார்கள். விமான நிலையத்திலிருந்து வருகிறபோது அவினாசி சாலையிலே வருகிறார்கள். அப்படி வருகின்ற சாலைகளை அகலப்படுத்த வேண்டும். அந்த சாலைகளை அகலப்படுத்தி (மணியடிகப்பெற்றது) கடைசியாக ஒன்றே ஒன்று ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 25 நிமிடமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசி கோரிக்கையாக, அந்த ரோடுகளை தெரிவு செய்கின்றபோது மாநகராட்சி மூலமாக அங்கே சோடியம் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். திடீரென்று சி. எம். வருகிறார்கள் என்றால் தற்காலிகமாக போய் அவசர அவசரமாக அதை பொருத்துகிறார்கள். அது மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி, இது சபைக் குறிப்பில் இருந்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற போது, வாய்ப்புக் கிடைக்காத உறுப்பினர்களுக்காகத்தான் அவர்கள் தொகுதிபற்றி பேச வாய்ப்புக் கொடுக்கிறோம். நீங்கள்தான் அடிக்கடி வாய்ப்புப் பெறுகிற உறுப்பினர் ஆயிற்றே.

திரு. சிங்கை கோவிந்தராசு : ஆகவே, இப்படி தமிழகத்திலே நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தொழிலாளர்கள் நலன் வளம்பெற வேண்டும். அவர்கள் வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பு தந்திருக்கக் கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி யைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, 5½ கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், காவல் தெய்வமாகவும், தமிழகத்தின் நிரந்தர முதல்வராகவும் விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி மானியக் கோரிக்கையின் மீது எனது உரையைத் துவங்குவதற்குமுன் எனது தொகுதி பிரச்சினைகள் பற்றி ஓரிரு வார்த்தைகளை இங்கே நான் எடுத்து வைக்க விழைகின்றேன்.

மேட்டூர் நகரியத்தில் நூற்றுக்கு 80 பர்சன்ட் வீடுகள் புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகள். அத்தகைய வீடுகளுக்கு 1985ஆம் ஆண்டிலிருந்து மின் இணைப்பு வழங்கப்படாமல் அரசு தடைவிதித்திருந்தது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் காலங்களில் மேட்டூர் நகருக்கு வருகை புரிந்தபோது மேட்டூர் நகர மக்கள் மாண்புமிகு தலைவி அவர்களிடம் இந்த ஒரு வேண்டுகோளை வைத்தார்கள்.

மாண்புமிகு தலைவி அவர்களும் நான் பதவி ஏற்ற உடன் உங்களுக்கு செய்து தருகிறேன் என்று உறுதி கூறிக்கொண்டார்கள் அதற்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எப்போதும் செய்வதைத்தான் சொல்வார்கள். சொல்வதைத்தான் செய்வார்கள். அதற்கு ஏற்ப 14—12—1992-ல் அன்று புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்கலாம் என்று ஆணைப் பிறப்பித்துள்ளார்கள். இந்த ஆணையை கேள்விப்பட்ட உடன் எனது தொகுதி மக்கள், எதிர்க் கட்சியை சார்ந்தவர்கள் கூட மாண்புமிகு தலைவி அவர்களை வாயார மனமார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மூடிக் கிடந்த ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ், பின்னி ஆலை போன்ற ஆலைகளை திறந்து பசுமைப் புரட்சி ஏற்படுத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அவச்கள் என்னுடைய தொகுதியிலே கடந்த 9 ஆண்டுகளாக மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலை மூடிக் கிடக்கிறது.

அவ்வாலையில் பணிபுரிந்த 2608 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் குழந்தைகளை படிக்கவைக்கவும், வயது வந்த பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும், முடியாமலும் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நினைத்தால் இவ்வுலகில் நடத்த முடியாத காரியம் எதுவுமே கிடையாது. எனவே மாண்புமிகு தலைவி அவர்கள் தனது கடைக்கண் பார்வையை எனது தொகுதியின்மீது செலுத்தி, அந்த ஆலையைத் திறந்து அந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி என்ற ஆலை கடந்த ஓராண்டுக் காலமாக எனது தொகுதியில் மூடிக் கிடக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கம்பெனி நிர்வாகத்திற்கு அனைத்து சலுகைகளையும் அளித்தும், கம்பெனி நிர்வாகம் இன்னும் மெத்தனமாக இருந்து கொண்டு, கம்பெனியைத் திறக்காமல் இருக்கிறது. அந்தக் கம்பெனியில் வேலை செய்யும் 1,500 குடும்பங்களும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தொழிலாளர் நலனே தன்னுடைய நலன் என்று கருதி பணியாற்றிக் கொண்டிருக்கும் தலைவி ஆவார்கள். எனவே அவர்கள் அந்த ஆலையைத் திறப்பதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்று அவருடைய பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொளத்தூர் ஒன்றியத்தில் 5,000க்கும் மேற்பட்ட லம்பாடி இனத்தைச் சேர்ந்த குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அந்தக் குடும்பங்கள் தற்போது எம்.பி.சி. பிரிவில் இருக்கிறார்கள். அவர்களை எஸ்.சி. பிரிவில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் காவிரி ஆறு ஓடினாலும், நங்கவழி ஒன்றியம் முழுவதும் மிகவும் வறட்சியான பகுதியாகும். நங்கவழி ஒன்றியத்தைச் சேர்ந்த நங்கவழி, ஜலகண்டாபுரம், வனவாசி, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பித்தபோது. இந்தப் பகுதிகளும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட இருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ அந்தப் பகுதிகள் நீக்கப்பட்டு விட்டன. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமைத்து, எனது தொகுதி மக்களுக்குச் செய்ய வேண்டுமென்று அவருடைய பாதங்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23] [திருமதி செ. சுந்தராம்பாள்.]

‘‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்’’ என்றார் புரட்சிக்கவி பாரதியார். அத்தகைய தொழில் புரியும் தொழிலாளர் நலனில் இந்த அரசு எந்த அளவு அக்கறை கொண்டுள்ளது என்பதைப் பற்றி தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

‘‘கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது
தூக்கங் கடிந்து செயல்’’

மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல், காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்—இது வள்ளுவர் வாக்கு. இந்தக் குறளின்படி நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சோர்வுகொள்ளாமல், தொழிலாளர் நலனுக்காக பல நலத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாகத் திட்டம் தீட்டியுள்ளார்கள்.

‘‘துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை’’

முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும்போது துன்பம் பல வழிகளிலும் வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும் என்ற வள்ளுவப் பெருமகனாரின் குறட்பாவிற்கு உதாரணமாக தொழில் துறையில் முதல் மாநிலம், தொழில்களின் மூலம் கூடுதல் வருவாய், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க தொழிற்சாலைகள் அமைத்தல்—இவை அரசு மேற்கொண்டுள்ள மிகச் சிறப்பான திட்டங்களாகும்.

குழந்தைத் தொழிலாளர்களைப் படிப்படியாகக் குறைத்து, அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் படிக்க வைக்க வகை செய்யும் அரிய திட்டம் இந்நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பாராட்டுதற்குரிய ஒன்றாகும். எதிர்வரும் 5 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர்கள் தொழிலை விட்டுவிட்டு கல்விப் பயன்பெற இந்த நிதிநிலை அறிக்கை வகை செய்கிறது.

அடுத்து, புதிய தொழிற் கொள்கையை நன்கு ஆராய்ந்து சுமார் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில் பல தொழிற்சாலைகள் அமைக்க வலுவான அஸ்திவாரத்தை நமது காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போட்டுள்ளார்கள். அதன்மூலம் பல தொழிற்சாலைகள் தோன்றி தமிழகத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க நெடுந்தொலை நோக்குப் பார்வையில் அலசி ஆராய்ந்து திட்டம் தீட்டியுள்ளார்கள். எனவே, விரைவில் தமிழகத்தில்

உள்நாட்டு வெளிநாட்டு மூலதனங்களுடன் புதிய தொழிற் சாலைகள் ஏற்படும் என்று உறுதியாக நம்பலாம் என்பது இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்கள் பாதிக்கப்படா மல், பாதுகாக்கப்பட வேண்டுமென்று பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத் தொழிலாளர் மறுவாழ்வு நிதியை நமது அரசு முன்னரே ஏற்படுத்தியுள்ளது பாராட்டுக்குரிய ஒன்றாகும். தொழிலாளர் நலனைப் பேணிக் காக்கும் வகையில் இந்நிதிக்கு ரூபாய் 50 கோடியை மாற்றும் படி மத்திய அரசை வற்புறுத்திவரும் நிகழ்ச்சி, பாதகமான சூழ்நிலைகளுக்கிடையிலும்கூட, இன்னும் மூடிக் கிடக்கும் பல ஆலைகள் படிப்படியாகத் திறக்கப்படும் என்ற நம்பிக்கை மக்களிடத்திலே ஏற்பட்டுள்ளது. தேர்ச்சி பெறாத தொழி லாளர்கள் கூலியை ரூபாய் 15-லிருந்து ரூபாய் 20 ஆக உயர்த் தவும், வேளாண் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் விரைவில் திருத்தியமைக்கப்பட உள்ளது போன்ற நடவடிக்கைகள் தொழிலாளர் நலனில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதாகும்.

பிற்பகல் 5-05

குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்து வதால் ஏற்படும் தீமைகளுக்கு எதிராக, சமூகத்தை ஒருங்குதிரட்டிக் கருத்துக்களை எடுத்துக்கூறுவதும், அக்கருத் துக்களுக்கு செவி சாய்த்து நடவடிக்கை எடுப்பது ஆகிய வற்றுக்கான பெரும் திட்டம் ஒன்று மேற்கொண்டிருப் பதை அனைவரும் வாழ்த்தி வரவேற்கின்றார்கள். இத னால் தீய பழக்கத்திற்கு எதிராக சமூக விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த இயலும் என்பது அனைவருடைய கருத்தாகும். குறிப்பாக காமராஜர் மாவட்டத்தில் தீப் பெட்டித் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு குழுவை ஏற்படுத்தி, அதற்கு முடிவு காண ஆயத்தப்படுத் தியிருக்கிறார்கள் என்பதை அனைவரும் வரவேற்பார்கள்.

கட்டாயக் கல்விக்கான சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதற்குப் பதிலாகப் பள்ளிகளுக்கு அனுப்பும்படி ஒவ்வொரு பெற் றோரும் கட்டாயப் படுத்தப்படுவார்கள் என்னும் திட்டத்தை அனைவரும் வாழ்த்தி வரவேற்கிறார்கள். கையால் தயா ரிக்கப்படும் தீக்குச்சிப் பிரிவுகள் அனைத்தும் விற்பனை வரி விலக்குப் பெற்றுவருகிறது. இத்தொழில் புரிவோர் குறிப் பிட்ட கால வரம்புக்குள் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்புவதை படிப்படியாகக் குறைத்தால்

1993 ஏப்ரல் 23] [திருமதி செ. சுந்தராம்பாள்]

மட்டுமே இந்த சலுகை அளிக்கப்படும் என்று திட்டம் தீட்டியுள்ளதை அனைவரும் வரவேற்கிறார்கள். மேலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள போனஸ் பிரச்சினையை மிகவும் சுமுகமான முறையில் தீர்த்து வைத்திருப்பது அனைவரும் வாழ்த்தி வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இந்த வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். டி. அரங்கநாதன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் 1992-93 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1993-94 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர் நலன் மீதான மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு எனது கருத்தையும், எனது தொகுதிவாழ் மக்களின் நலனையும் இம்மாமன்றத்தில் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் தங்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்து தந்த கொள்கை நெறிமுறைகளைப் பின்பற்றி, ஏழை எளிய மக்களின் இதய வேந்தன், தமிழக வரலாற்றிலேயே தனக்கென்று ஓர் புகழை நிலைநிறுத்திய தன்னிகரில்லா தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் நெறிப்படுத்திக் காட்டிய மனிதநேய மேம்பாட்டுச் செய்திகளை ஏற்றுச் செயல்படுத்தி, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் இதயதெய்வம், செந்தமிழ்த்தாய், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வரலாற்றுப் புகழ்மிக்க வரி சீரமைப்பு செய்து ஏழை எளிய பாமர மக்கள் முதல் நடுத்தர மற்றும் வசதியானவர்கள் உட்பட பயன்பெறும் வகையில் மண்ணெண்ணெய், புளி, மிளகாய், மஞ்சள், மிளகு, மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினிய பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீதான வரிகளை குறைத்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையானது ஏழை எளிய மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் பாமர மக்களின் வயிற்றில் பால் வார்த்தது போல் உள்ளது. இப்படிப்பட்ட உன்னதமான நிதிநிலை அறிக்கை, மானியக் கோரிக்கை விவாத்தில் கலந்துகொண்டு, நமது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எந்தெந்த இனத்தில் செலவுகள் அதிகப்படுத்தப்பட்டு அதிகத்தொகை தரப்பட்டிருக்கிறது என்றும், தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருந்தால் இந்த மாமன்றத்திற்கும் தமிழக மக்களுக்கும் நன்மையுடையதாக அமைந்திருக்கும்

அவைகளையெல்லாம் விட்டுவிட்டு இன்றையதினம் நிறம் மாறிய பூக்களாக, ஏதோ எதிர்க்கட்சியாக இருக்கிறோம் என்பதற்காக இம்மாமன்றத்தில் தேவையற்றவைகளைப் பேசி, பொதுமக்களின் நன்மையை கருதாமல் செயல்படுவதைப் பார்க்கும்போது, இவர்களெல்லாம் புரட்சித் தலைவியின் ஆதரவில்லாமல் மீண்டும் மக்களைச் சந்திக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு தமிழகத்திலே நல்ல சுமுகமான தொழில் உறவினை நிலைநாட்டவும், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதிலும் இமயம்போல் உயர்ந்துள்ளது. இந்தத் தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கை 1993-94 ஆம் ஆண்டு அறிக்கையில் 10,113 தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்திருப்பது தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. முந்தைய ஆண்டுகளில் மூடியிருந்த பல்வேறு தொழிற்சாலைகள் சுமுகமான பேச்சுவார்த்தையின் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தங்களின்படி மீண்டும் திறக்கப்பட்டும், திறக்கப்படவும் உள்ளதைப் பார்க்கும்போது இந்த அரசு தொழிலாளர்களின் நலனில் எந்த அளவிற்கு கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதைக் காட்டுகிறது. தொழிலாளர்களுக்கு சட்டரீதியான சலுகைகளை உடனுக்குடன் பெறும்பொருட்டு, புதியதாக மூன்று தொழிலாளர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தியிருப்பதும், அதிலும் குறிப்பாக எனது மாவட்டமாகிய தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் அந்தத் தொழிலாளர் நீதிமன்றத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

தென்னாற்காடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் நண்பர்கள் தங்களுடைய தொழில் சம்பந்தப்பட்ட வழக்குகளை கடலூரில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொழிலாளர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வதையும், வீண் பணச்செலவும் இல்லாமல் முடித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், தொழிலாளர்களுக்கென்று வாரிய அமைப்பு தொழில் அமைப்பு, தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம், தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள், அவர்களது வாழ்வு திறன் மேம்பாட்டுத் திட்டம், கைவினைஞர் பயிற்சித் திட்டம் மற்றும் கிராம மக்களுக்கான தொழிற் பயிற்சித் திட்டங்களை அமல் படுத்தி, அவர்களது வாழ்வு பல்வேறு வகைகளில் வளமாக அமைய குறிப்பிட்டுள்ளது தங்கப் பதக்கத்தில் முத்து பதித்தது போல உள்ளது.

1993 ஏப்ரல் 23] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

தொழிலாளர் நலத்தில் அக்கறை கொண்டு தொழிலாளர்களை வாழ்விக்க நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சி தலைவி அவர்களுடைய ஆட்சியில் என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்து இங்கே நான் முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். விருத்தாசலத்தில் இயங்கி வந்த செராமிக் தொழிற்சாலை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1,500 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து தவிக்கிறார்கள். எனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்திற்கு ஏற்கெனவே அறிவித்துள்ள புதிய காகிதத் தொழிற்சாலையை எனது விருத்தாசலம் தொகுதியில் அமைத்துக் கொடுத்தால் வேலை இழந்து தவிக்கிற தொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையில் அமையும் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான கச்சாப் பொருள்கள், அதாவது கரும்புச் சக்கையை அருணா சர்க்கரை ஆலையிலிருந்தும், சேத்தியாதோப்பு சர்க்கரை ஆலையிலிருந்தும், முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலையிலிருந்தும், செங்கல்வராயன் சர்க்கரை ஆலையிலிருந்தும் பெறுவதற்கு வாய்ப்புள்ளது. மேலும், அத்தியாவசியமான தேவையான தண்ணீர் பெறுவதற்கு நெய்வேலி மிக அருகில் உள்ளதால் நெய்வேலியிலிருந்து தண்ணீர் தட்டுப்பாடின்றி அதிகமாகப் பெறுவதற்கும் வாய்ப்புள்ளது. விருத்தாசலத்தைச் சுற்றிலும் விவசாயிகள் அதிக அளவில் நெல் சாகுபடி செய்வதால் தேவையான அளவுக்கு வைக்கோலுக்கும் பஞ்சமில்லை. எனவே, கருணை உள்ளம் கொண்ட காவிரித்தாய், புரட்சித்தலைவி அவர்கள் இந்த காகிதத் தொழிற்சாலையை விருத்தாசலத்தில் ஏற்படுத்தி வேலைவாய்ப்பு இழந்து தவிக்கிற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரத்தில் அரசு அச்சகம் ஒன்று இயங்கி வருகிறது. இதில் 168 தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இங்கு எச்.எம்.டி. என்ற ஆட்டோமெட்டிக் இயந்திரம், உதிரி சாமான்கள் இல்லாததால் கடந்த நான்கு ஆண்டுகளாக இயக்கப்படாமல் உள்ளது. இதனால், பெருமளவில் அச்சடிப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் இரண்டு லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பழைய கட்டிடம் ஒன்று உபயோகம் இல்லாமல் பூட்டிய நிலையில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் 56 பணியிடங்கள் இன்னமும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. எனவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருத்தாசலம் அச்சகத்தை விரிவாக்கம்—எக்ஸ்டென்சன்—செய்து தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

[திரு. ஆர். டி. அரங்கநாதன்] [1993 ஏப்ரல் 23

மேலும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் என்னுடைய தொகுதியின் தேவைகளை இங்கே தெரிவிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். எனது விருத்தாசலம் தொகுதி, தென்னாற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கு வாழ்கின்ற மக்களில் பிற்படுத்தப்பட்டவர்களும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகம் உள்ளார்கள். எனது தொகுதியில் பல பகுதிகளில் குறிப்பாக கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சி. கீரனூர், ஏ. வல்லியம், மருங்கூர், மேலப்பாலையூர், கீரமங்கலம், டி. பவழக்குடி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதியின்றி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட புட்டிபேரூர், எருமனூர், ரெட்டிக்குப்பம், கொட்டிக்குப்பம், கோணாங்குப்பம், எம். புதூர் ராஜாபாளையம், காட்டுப்பரூர் ஆகிய கிராமங்களில் உள்ள சாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. உடனடியாக மேற்படி சாலைகளைப் பராமரிப்பு செய்து கொடுக்கும்படி இச்சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கோடைக்கால ஆரம்பமே ரொம்பவும் கடுமையாக ஆரம்பிப்பதால், வரவிருக்கும் கோடைக்காலத்தில், எனது தொகுதி குடிநீர்ப் பஞ்சம் இல்லாமல் இருப்பதற்கு குடிநீர் பிரச்சினையை போர்க்கால அடிப்படையில் தீர்த்து வைக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட எருமனூர், ரெட்டிக்குப்பம், தொட்டிக்குப்பம், பட்டிபரூர், எடச்சித்தூர், புதூர் மற்றும் ராஜாபாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள பொது மக்கள் அனைவரும் தங்கள் அன்றாட தேவைகளுக்காக விருத்தாசலம் நகருக்கு தினமும் வர வேண்டியுள்ளது. அப்படி வரவேண்டுமானால் குறுக்கேயுள்ள மணிமுத்தா நதியைக் கடந்து தான் விருத்தாசலம் நகருக்கு வர வேண்டும்.

பிற்பகல் 5–15

மழைக்காலங்களில் ஆற்றில் நிறைய தண்ணீர் வரும் வாய்ப்புள்ளதால் அச்சமயங்களில் போக்குவரத்து பெரிதும் பாதிப்பதோடு நடைப்பாதையாகவும் வர முடியாத நிலையில் உள்ளது, எனவே எனது தொகுதி மக்கள் நலன் கருதி, எனது வேண்டுகோளை ஏற்று, விருத்தாசலம்—எருமனூர் செல்லும் சாலையில் மணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

மேலும், எனது தொகுதிக்குட்பட்ட கம்மாபுரம் பகுதியில் மணிமுத்தாறும், பொதுப்பணித்துறை வாய்க்காலும் சேர்ந்தார் போல் குறுக்கே செல்வதால் அரிப்பு ஏற்பட்டு அப்பகுதி மக்கள் பாதிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டு, அந்தப் பகுதி வாழ் மக்களின் குடியிருப்புப் பகுதிகளும் பாதிக்கக்கூடிய அபாயச்

1993 ஏப்ரல் 23] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதுமட்டுமின்றி கம்மாபுரத்திற்கு அருகில் உள்ள கிரமங்கலம் கிராமம் வெள்ளாற்றால் மண் அரிப்பு ஏற்பட்டு, கிராமத்தில் பாதிப் பகுதி ஒவ்வொரு வருடமும் மழைக்காலங்களில் மக்கள் அவதிப்படும் சூழ்நிலையில் உள்ளார்கள். எனவே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் மணிமுத்தாற்றில் ஒரு தாங்கு சுவரும் வெள்ளாற்றில் ஒரு தாங்கு சுவரும் கட்டி, அப்பகுதி மக்களை வெள்ள அபாயத்திலிருந்து நிரந்தரமாக மீட்டுத் தரும்படி இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன.

விருத்தாசலம் நகரத்தில் சுமார் 52,000-மும், மற்றும் கிராமப் பகுதிகளில் சேர்த்து சுமார் மூன்று லட்சம் ஜனத்தொகை உள்ளது. இவர்கள் அனைவரும் உடல்நலம் காப்பதற்கு விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற வேண்டியுள்ளது. இந்த நிலையில் தற்போது விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையில் தினமும் 1,100 நபர்கள் புறநோயாளிகளாகவும், சுமார் 105 நோயாளிகள் மருத்துவமனையில் சேர்ந்தும் சிகிச்சை பெறுகிறார்கள். போதிய இட வசதி இல்லாததால் மக்கள் நோயால் அவதிப்படுகிறார்கள். எக்ஸ்-ரே இயந்திரம் இருந்தும் அதை இயக்குவதற்கும், அதற்குத் தேவையான உதிரிப் பொருட்களும் இல்லாமல் எக்ஸ்-ரே இயந்திரம் இருந்தும் பயனற்ற நிலையில் உள்ளது, ஆபரேசன் தியேட்டர் இருந்தும் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாததால் தியேட்டர் உபயோகப்படுத்தப்பட முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே விருத்தாசலம் பொது மருத்துவமனைக்கு கூடுதலாக புதிய கட்டிடம் ஒன்று கட்டி கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தி நோயாளிகளின் குறைகளைப் போக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்,

மேலும், விருத்தாசலம் அரசுக் கல்லூரியில் சுமார் 2,000 மாணவ—மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள், இவர்கள் அனைவருக்கும் தற்போதுள்ள கட்டிடங்கள் போதுமானதாக இல்லை. எனவே மாணவ மாணவிகள் இட நெருக்கடியில்லாமல் கல்வி கற்பதற்குத் தேவையான கூடுதல் கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமாய் வேண்டுவதோடு பட்டப் படிப்பு படித்த மாணவ, மாணவிகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு தொடக்கப் பள்ளி அமைக்கப்படும் என்றும் நடப்பாண்டில் 305 தொடக்கப் பள்ளிகள் புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இதைத்தான் 25 ஆண்டுகளுக்கு முன்பே சினிமாவில் புரட்சித் தலைவர் அவர்கள், தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம், கல்வி தெரியாதபேர்களே

இல்லாமல் செய்வோம்' என்று பாடினார். அன்று புரட்சித் தலைவர் பாடிய பாட்டிற்கு இன்று செயல்வடிவம் கொடுப்பதில் இன்றையதினம் புரட்சித் தலைவி அவர்கள் கல்விக் கண் திறப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகிறது,

கிராமப் பகுதிகளைக் கொண்ட எனது தொகுதியில் அரசுக் கல்லூரி ஒன்றும், சுமார் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன, இங்கு படிக்கின்ற பிள்ளைகள் யாவரும் தொழிற்கல்வி படிக்க வேண்டியிருப்பின் அருகில் உள்ள சிதம்பரம் சென்று தனியார் தொழிற்கல்வி நிறுவனத்தில் படிக்க வேண்டியுள்ளது. மேலும் தென்னாற்காடு மாவட்டத்திலேயே அரசு தொழிற்கல்வி நிலையம் ஏதும் இல்லாததால் விருத்தாசலத்தில் அரசு தொழிற்கல்வி நிலையம் ஒன்று அமைத்து, அனைத்து பிள்ளைகளும் தொழிற்கல்வி படித்து பயன் பெறுவதற்கு ஆவன செய்யும்படி இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் பல ஆண்டுகளாக மக்கள் வீடு கட்டிக் கொண்டு வாழ்கின்றார்கள். அந்த வீடுகளுக்கு நகராட்சியால் வீட்டு வரி விதிப்பும் செய்யப்பட்டு, வரியும் வசூல் செய்யப்படுகிறது. ஆனால் அப்பகுதி மக்களின்அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதி, மின்சார வசதி ஆகியவைகளை செய்து கொடுக்கும்படி நகராட்சியினரிடம் கோரினால், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு எந்தவித வசதிகளையும் செய்ய இயலாது என்று தெரிவிக்கின்றார்கள். எனவே ஓர் குறிப்பிட்ட சுமார் 10 ஆண்டுகளாக குடியிருக்கும் பகுதிகளை அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு பகுதிகளாக அங்கீகரித்து, நமது அரசு உத்தரவிடுமேயானால், அடிப்படை வசதியின்றி பல ஆண்டுகளாக வாழும் மக்களுக்கு வாழ்வில் ஒளி விளக்காக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் அண்ணா. ஏழை, எளிய மக்களுக்காகவே வாழ்ந்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். இன்று ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே, வாழ்வின் அர்த்தத்தையே கண்டுகொண்டு, அந்த மகிழ்ச்சியை ஏழை எளியவர்களிடம் நிரந்தரமாக நிலைக்க வைக்க வைப்பதையே தனது தலையாய கடமையாகக் கொண்டுள்ள புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு செயல்பட்டு வருகிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் சக்தி என்கிற மகா சக்தியைப் பெற்றவராவார்கள். மக்களுக்கு சேவை செய்யாதவர்களுக்கு தமிழகத்தில் என்றுமே இடம் இருந்ததில்லை. மக்கள் பணி ஆற்றுபவர்களை வீழ்த்த நினைப்பவர்கள் என்றும் வென்றதுமில்லை என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

மேலும் ஒரு கோரிக்கையாக, பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் அரசு மானியமாகக் கொடுக்கும் தொகையை உயர்த்தி கொடுத்து, அவர்கள் 1-/12 சென்ட் நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கும் வீடு கட்ட மானியமாக ரூ. 15 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று— வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று— இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5–20

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள் கிறேன். "Thiru P. V. Rajendran, M.L.A. who was arrested 15 day was released at 14-30 Hrs. on his own bail by the Police." காவல் துறையினரால் அவருடைய சொந்த ஜாமீனில் விடுதலை செய்து இருப்பதாகத் தகவல் அறிந்து சொல்கிறார்கள். திருமதி ரெ. சியாமளா.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. மானியக் கோரிக்கைகள், 1993—94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

என்ற உலகப் பொது மறையாம் திருக்குறளில் தெள்ளத் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்கணங்களையும் ஒருங்கே பெற்று நமது இதய தெய்வம், கழகத்தின் காவல்

தெய்வம், 6-1/2 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், வீரத்தின் விளைநிலம், சந்தியா தாயின் தவப் புதல்வி, பாரதி கண்ட புதுமைப் பெண். எங்கள் தங்கத் தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி எனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது எனது சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

அதற்கு முன்பாக நலம் காக்கின்ற எங்களது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 29–3–1993 அன்று கோவில்பட்டியில் நடந்த விவசாய பேரணியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரம் நிதி உதவி செய்தும், இறந்துபட்ட திரு. எத்திராஜ் நாய்க்கர் குடும்பத்திற்கு 1 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்தும் அவர்கள்மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்து கொடுத்த எங்கள் இதய தெய்வத்திற்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் சார்பாகவும் என் சொந்த சார்பாகவும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும் எனது நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு, ம, சின்னசாமி) தலைமை,]

தொழிலாளர் நலன் காக்கின்ற புரட்சித் தலைவியினுடைய அரசு மூடிக் கிடந்த தொழிற்சாலைகளை, குறிப்பாக ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ், பின்னி ஆகிய நிறுவனங்களை மீண்டும் செயல்பட வைத்திருக்கிறது. இன்னும் வடலூர் சேஷசாயி இன்டஸ்ட்ரீஸ் நிறுவனமும் இந்த மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும் என நல்ல செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கு தொழிலாளர்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு உயர்ந்து இருப்பதைக் கருத்தில் கொண்டு தேர்ச்சி பெறாத தொழிலாளர்களின் தினக் கூலியை ரூபாய் 15 லிருந்து 20 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு முன் வந்துள்ளதை குறித்து தொழிலாளர் சமுதாயத்தின் சார்பில் எனது நன்றியை புரட்சித் தலைவி அவர்களுக்கு காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன், எனது தொகுதி சம்பந்தமாக சில கோரிக்கைகளை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்,

கோவில்பட்டிக்கு சீவலப்பேரியிலிருந்து வரும் குடிநீர் சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லை. கோவில்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டம் சீவலப்பேரியிலிருந்து வரும் வழியில் வழிபுற சாலைகளுக்கும் அதாவது வேசைடு வில்லேஜ்

களுக்கும், கங்கைக் கொண்டான், கழுகுமலை, கயத்தாறு போன்ற பேரூராட்சிகளுக்கும் குடிதண்ணீர் கொடுத்து விட்டு மீதம் உள்ள 20 லட்சம் லிட்டர் தண்ணீர்தான் கோவில்பட்டிக்கு வருகிறது. கோவில்பட்டியின் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது, மேலும் அங்கு நீரேற்றும் இயந்திரங்களை வாங்கி 20 ஆண்டுகளுக்கு மேலானதினால் செயலற்று பழுதுபட்ட நிலையில் உள்ளது, அவற்றை மாற்றி சரி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன், கோவில்பட்டிக்கு என ஓர் தனியான பைப் லைன் அமைத்து கோவில்பட்டி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன், சிவலப்பேரியில் அதிக நீர் ஆதாரம் உள்ளது, அதை கோவில்பட்டி மக்களுக்கு பயன்பெறும் வகையில், இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் பொதுமக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் எங்களது ஒப்பற்ற தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை கருணைகொண்டு பரிசீலனை செய்து, வரும் கடுமையான கோடைக்காலத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாக கோவில்பட்டி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன், அதற்கு 1-1/4 கோடி ரூபாய்தான் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது, அதை நிறைவேற்றித் தந்தால் கோவில்பட்டி மக்கள் என்றென்றும் எங்கள் இதய தெய்வத்திற்கு கடமைப்பட்டவர்களாகவும். நன்றி உடையவர்களாகவும் இருப்பார்கள் என கூறக் கடமைப்பட்டிருக்கிறேன், எங்கள் தாயே, இதைத் தாங்கள் உடனடியாக நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எனது அடுத்த கோரிக்கைக்கு செல்கிறேன், எங்கள் கோவில்பட்டி தொகுதியில் திருவேங்கடம் அருகில் உள்ள நிச்சேவ நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்பட வேண்டும் என்பது எங்கள் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும்.

பிற்பகல் 5–25

அந்தக் கோரிக்கையை இன்று எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன். மக்களுக்கு பாலங்கள் அதாவது பிரிட்ஜஸ் டு தி பீப்புள் என்ற புதிய திட்டத்தில் தொகுதிக்கு ஒரு பாலம் என்ற திட்டத்தில் இந்தப் பாலத்தை எப்படியாவது எங்களுக்கு கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும், மிகவும் செயலாற்றும் திறமை கொண்ட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பாலம் கட்டுவதால் சிதம்பரனார் நெல்லை-கட்டபொம்மன் காமராஜர் ஆகிய 3 மாவட்டங்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் பெறுவார்கள் என தெரிவித்துக் கொள்கிறேன், பல புரட்சிகளை செய்து தனது சரித்திரத்தில் நிலையாக தனக்கென்று ஒரு சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் எங்கள் புரட்சித் தலைவியே, எங்கள் கோவில்பட்டியில் ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன், எட்டயபுரத்தில் உள்ள பாரதி கூட்டுறவு நூற்பாலையை இன்னும் நவீனப்படுத்த வேண்டும், விஸ்தரிக்க வேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்கும் எங்கள் தாயே, கோவில்பட்டி தாலுகாவை இரண்டாகப் பிரித்து பாரதி பிறந்த எட்டயபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு அதை தனி தாலுகாவாக அமைக்க வேண்டுமாய் தங்களை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கோவில்பட்டியில் ஒரு சப்-கோர்ட் அமைத்துத்தர வேண்டுமாய் அன்புடனே கேட்டுக் கொள்கிறேன். மிகவேகமாக வளர்ந்து வரும் நகரமாகிய எங்கள் கோவில்பட்டிக்கு பொதுப் பணித் துறை மூலமாக பயணியர் விடுதி ஒன்று கட்டித்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் மூலம் அனைத்து கிராம மக்களுக்கும் நல்வாழ்வு தருகின்ற எங்களது ஒப்பற்றத் தலைவி எங்கள் கோவில்பட்டி மருத்துவமனையை நவீனமயமாக்கி அதிக படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக்கி உதவிட கேட்டுக் கொள்கிறேன், சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டியானது இரண்டாவது பெரிய நகரமாக இருப்பதாலும் அதிக ஜனத்தொகை உள்ள நகரமாக உள்ளதாலும் வீட்டுவசதி வாரியம் மூலம் அதிக குடியிருப்புகள் கட்டித்தர புரட்சித் தலைவி அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி நகரின் முக்கிய இடங்களில் சோடியம் வேப்பர் லேம்ப் அமைத்துத்தர அன்புடனே கேட்டுக் கொள்கிறேன். எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டையும், பாரதியார் மணிமண்டபத்தையும் புதுப்பித்து அங்கு பன்னாட்டு மொழி ஆராய்ச்சி மையம் ஒன்றை நிறுவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். விடுதலைப் புலிகளை அடியோடு அடித்து விரட்டிய எங்கள் வீரத் தலைவி அவர்கள் காவல்துறை மானியத்தின்போது எனது தொகுதியைச் சார்ந்த குருவிகுளத்திற்கு ஒரு காவல்நிலையம் அமைக்கப்படும் என அறிவிப்பார்கள் என நான் ஆவலோடு எதிர்பார்த்தேன். அடுத்த நிதியாண்டிலாவது அங்கு ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அன்புடனே கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த வரசலூர் கிராமத்திலிருந்து சங்கரன்கோயிலுக்கு திருவேங்கடம், நடுவப்பட்டி, கஸ்தூரி ரங்கபுரம் வழியாக ஒரு பஸ் விட வேண்டுமாய் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை பணியோடு கேட்டுக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23] [திருமதி ரெ. சியாமளா]

எனது தொகுதி சார்பாக இங்கே வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளையும், குறிப்பாக கோவில்பட்டி குடிநீர்ப் பிரச்சினையை தாயுள்ளம் கொண்ட எங்கள் தங்கத் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி வணக்கம்,

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உழைப்பே உயர்வு தரும் என்ற பொன்மொழிக்கேற்ப இன்றைய தினம் தன்னுடைய ஊன் உறக்கமின்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 160 எம். எல். ஏக்களுக்கு மட்டுமல்லாமல் 1 கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுக்கு மட்டுமல்லாது 5½ கோடி மக்களுடைய நல்வாழ்விலே இரவு பகல் என்று பாராமல் தினமும் 3 மணி நேரம், 4 மணி நேரம் என்று உறங்கிக் கொண்டு, இன்றையதினம் ஆட்சி புரிந்துக் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி அவர்களுடைய பொற்பாதத்தை தொட்டு தொழிலாளர் மானியக் கோரிக்கையில் பேச விழைகின்றேன். இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி என்ற ஒரு கருத்துக்கு ஏற்ப நம்முடைய தமிழகத்தில் உள்ள தொழிலாளர் பெருமக்கள் இன்றைய ஆட்சியிலே சிறந்து வாழ்கின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இன்றையதினம் கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி என்பதற்கேற்ப நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தமிழகத்தினுடைய தொழிலாளர்கள் இன்றையதினம் சிறப்பாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இன்றையதினம் நமக்கு எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், இந்தத் தொழிலாளர்கள் வாழ்விலே சிறக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய வாழ்விலே அக்கறைகாட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து மூடியிருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை, பின்னி தொழிற்சாலையை திறந்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களிலே பால் வார்த்திருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5—30

இன்றையதினம் இந்த மானியத்திலே தொழிலாளர்களுக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் தொழிலாளர்கள் என்று சொன்

னால் உலக நாடுகளிலே பார்க்கும்போது நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழிலாளர்கள்தான் ஒழுக்கம் மிகுந்தவர்களாக, கட்டுப்பாட்டோடு தங்களுடைய வாழ்க்கையிலே நல்லமுறையில் தொழிலாளர்களாக இருந்துகொண்டு வாழ்க்கையை செவ்வனே நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது இந்த நேரத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் அன்றாட வாழ்க்கைச் செலவு உயர்வினைக் கருத்தில்கொண்டு அந்த தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்கு நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த ஊதியத்தை 15 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் நம்முடைய குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்பதற்காகத்தான் மறைந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை இங்கே கொண்டு வந்தார்கள். இன்னும் பல்வேறு இடங்களில் குழந்தைகளை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிற நிலை இருப்பதை கருத்தில் கொண்டு நம்முடைய தானைத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் 5 ஆண்டுக் காலத்தில் ஒரு சிறப்புத் திட்டத்தை இங்கே கொண்டுவந்து அந்த ஏழைக் குழந்தைகள் இங்கே படிக்கத்தான் வேண்டுமே ஒழிய வேலைக்குச் செல்லக் கூடாது என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் இந்த நேரத்திலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் சேலத்தில் லேபர் கோர்ட் ஏற்படுத்தியதற்காக இந்த நேரத்தில் அவருக்கு என் நன்றியை காணிக்கையாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய மாநில அரசு ஊழியர்களுடைய நலனுக்காக ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளை செயற்படுத்தி அந்த முரண்பாடுகளை எல்லாம் முழுமையாக நீக்கியிருப்பதை நான் உள்ளபடியே மனதார வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் அரசு அலுவலர் சங்கங்களுடன் பேசி இங்கே அவர்களின் வீட்டு வாடகைப்படியை உயர்த்தியிருப்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1993 ஏப்ரல் 23] [திரு. மு. நடேசன்]

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் அரசு பணியாளர்களுக்கு வீடு கட்ட கடன் அளிப்பதிலுள்ள தேக்க நிலையைக்களைய 30 கோடி ரூபாயை இங்கே இந்த தொழிலாளர்களுக்காக ஒதுக்கியிருப்பதை நான் இந்த நேரத்தில் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் மூடப்பட்ட நிறுவனங்களிலுள்ள தொழிலாளர் களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 47 லட் சத்து 14 ஆயிரத்து 200 ரூபாயை இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அந்தத் தொழிலாளர்களுக்காக வழங்கியிருப்பதை நான் இந்த நேரத்தில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பீடித் தொழிலாளர் களுக்கு வீட்டு வசதி காப்புறுதித் திட்டம் மற்றும் உச்ச நீதி மனறம் அங்கே கொடுத்துள்ள அத்தனை சிறப்புகளையும் அமல் ஆக்கியிருப்பதை இந்த நேரத்தில் நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நலிவு அடைந்து மூடப்பட்ட அந்த நிறுவனங்களில் உள்ள பாதிக்கப்பட்ட தொழிலாளர் களுக்கு இன்றையதினம் தொழிலாளர் நிதி என்ற ஒரு நிதியை ஒதுக்கி ஒரு கோடி ரூபாயை அந்தத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கி தந்ததை இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே தொழிலாளர்கள் மனம் நிறைந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

1993 ஆம் ஆண்டு ஜனவரியிலே துவக்கப்பட்ட அந்த வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை சேலம் மாவட்டத்திற்கும் நீட் டித்துத் தருமாறு இந்த நேரத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றையதினம் தீப்பெட்டித் தொழிற்சாலை, பட்டாசு தொழிற்சாலைகளில் பெருகி வரும் விபத்துக்களைத் தடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த ஒரு ஆட்சியிலும் இல்லாத ஒரு சிறப்பான திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி

(திரு. மு. நடேசன்)

அவர்கள் ஆட்சியில் மக்களுக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த பொங்கல் திருநாளாம் தமிழர் திருநாளில் ஏழை எளிய தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை ஏறக்குறைய கடந்த 2 வருடங்களில் 70, 80 கோடி அளவில் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது எந்த ஒரு அரசும் செய்யாத சாதனை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்த தொழிலாளர்களுடைய வாழ்வில் எந்த அளவுக்கு அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்த ஒன்று. அதேபோல், எங்களுடைய சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற ஒருசில பிரச்சனைகளைச் சொல்ல விழைகிறேன். சேலத்திலே தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் நம்முடைய அரசு சார்பு நிறுவனமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் என்பது இன்றைய தினம் சேலம் நகரத்திலே ஆசியாவிலேயே முதல் தரமான மேக்னசைட் கற்களை உற்பத்திச் செய்து கொண்டிருக்கிறது. சேலத்திலேயுள்ள இந்த நிறுவனத்திலே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏ. சி. அலுவலகமும் மற்ற அலுவலர்களும் மற்றும் வியாபாரம் முழுவதும் அங்கேயே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அந்த நிறுவனத்தின் எம். டி. அலுவலகம் மட்டும் இங்கே, சென்னையிலே இருக்கிறது. அந்த அலுவலகத்திற்கு கூட நான் சென்று பார்த்தேன். ஒரு சிறிய ரூமிலே வைத்துக் கொண்டு எம். டி. மட்டும் இங்கே இருந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தயவு செய்து அந்த எம். டி. யினுடைய அலுவலகத்தை சேலத்திற்கே மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–35

அதேபோல சேலத்திலே இருக்கின்ற மேக்னசைட் நிறுவனத்தின் தொழில் பாதிக்கின்ற அளவுக்கு இன்றைய தினம் மத்திய அரசாங்கம் ஒரு இக்கட்டான சூழ்நிலையை இங்கே ஏற்படுத்தி இருக்கிறது. அதற்கான வரியை இன்றைய தினம் 30 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்த்தி இருக்கின்ற காரணத்தினாலே சேலத்திலே இந்த மேக்னசைட் தொழில் பாதிக்கின்ற சூழ்நிலை உருவாகி, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதியாகின்ற மேக்னசைட்டைத் தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு எந்த அளவுக்கு நம்முடைய தொழிலாளர்களின்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நலனிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், இன்றையதினம் மத்திய அரசாங்கமானது தொழிலாளர்களுடைய Anti Labour Government என்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு வருடங்களாக நாம் மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். முதலாளிகளுக்குச் சாதகமான, ஒரு பட்ஜெட்டைத்தான் மத்திய அரசாங்கம் அங்கே தந்திருக்கிறதேயொழிய தொழிலாளர்களுக்குச் சாதகமான பட்ஜெட்டை அவர்கள் தரவில்லை. அந்த பட்ஜெட்டிலே பார்க்கும்போது, தொழிலாளர்களுக்கு வேண்டிய முக்கிய கோரிக்கைகளான ஊதியக் குழுக்கள், போனஸ் உச்சவரம்பு, பென்ஷன் ஆகியவை மத்திய அரசாங்கத்தால் தீர்க்கப்படவில்லை. இந்தக் காரணத்தினாலே மத்திய அரசாங்கத்திற்குச் சாதகமாக இருந்த ஐ.என்.டி.யூ.சி. என்ற சங்கம் கூட அந்த நேரத்திலே வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் எந்த அளவுக்கு தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ளதோ அந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்திலே இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு இல்லை. முதலாளிகள்தான் அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களேயொழிய, தொழிலாளர்களுக்கு ஒரு வாய்ப்பும் தரப்படவில்லை. அதேபோலத்தான் மத்திய அரசாங்கத்திலே பார்ப்பீர்களேயானால், இன்றையதினம் எந்தவொரு சட்டத்தைப் பார்த்தாலும் அங்கே பணக்காரர்களுக்கு, வசதி படைத்தவர்களுக்கு, மில் அதிபர்களுக்கு, இப்படிப்பட்டவர்களுக்குத்தான் சலுகைகளைத் தந்து கொண்டிருக்கிறார்களேயொழிய, அவர்கள் தொழிலாளர்கள் நலனிலே அக்கறை கொள்வதில்லை என்பதை இந்த நேரத்திலே நான் மனம் வருந்தி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, மத்திய அரசாங்கத்திலே எதற்கெடுத்தாலும் இன்றைய தினம் கம்ப்யூட்டர் என்ற சிஸ்டத்தை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திருநாடு தொழிலாளர்கள் நிறைந்த நாடு என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம். இங்கே வேலையில் இருக்கின்ற தொழிலாளர்கள் வேலையை இழக்கின்ற சூழ்நிலை ஒரு பக்கம். இப்படி தொழிலாளர்களை அவதிப்படுத்துகின்ற அந்த கம்ப்யூட்டர் சிஸ்டத்தை நீங்கள் தயவு செய்து மற்ற நாடுகளைப் போல் நம்முடைய இந்தியாவை எண்ணி செய்து கொண்டிருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வெளிநாட்டிலே இருக்கின்ற ஒரு பிரச்சினையை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் வெளிநாட்டிலே பார்த்தீர்களேயானால் நம்முடைய தொழிலாளர்களெல்லாம் எந்த அளவுக்கு

விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(திரு மு. நடேசன்) [1993 ஏப்ரல் 23

சீப்பஸ்ட் லேபர் என்று சொல்வார்களே, அதாவது உலக நாடுகளிலே எடுத்துக்கொண்டீர்களேயானால், இந்த மாதிரி சீப்பஸ்ட் லேபர் எந்த நாட்டிலேயும் கிடையாது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டீர்களேயானால், பாகிஸ்தானிலேகூட இந்த சீப்பஸ்ட் லேபர் என்பது கிடையாது. ஆனால், நம்முடைய இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற தொழிலாளர்களை அவர்கள் சீப்பஸ்ட் லேபர்களாக பயன்படுத்திக் கொண்டு, உதாரணத்திற்கு ஒரு தொழிலை எடுத்துக் கொண்டீர்களானால், இந்தியர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால், பாகிஸ்தானியர்களுக்கு அதிகச் சம்பளம் வழங்கப்படுகிறது. அமெரிக்கர்களுக்கு அதிகச் சம்பளம் வழங்கப்படுகிறது. இப்படிப் பல்வேறுபட்ட நிலைமைகள் இருக்கின்றன. இதை நான் ஏன் இந்த நேரத்திலே எடுத்துக் கூறுகிறேன் என்று சொன்னால், அரபு நாடுகளுக்குச் சென்று வேலை செய்பவர்கள், பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலத்துக்காரர்களும் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறவர்களும்தான். ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மூலமாக இதற்கு ஒரு நல்ல வழியினைக் காண வேண்டும். இப்போது இருக்கின்ற நிலையிலேலே நம்முடைய தொழிலாளர்கள் மூன்றாந்தர, நாலாந்தர தொழிலாளர்களாக மாறக் கூடாது. மற்றத் தொழிலாளர்களை விடச் சிறப்பாகப் பணிபுரிகின்ற நம்முடைய தொழிலாளர்களுக்கு நீங்கள் அந்த அயல் நாட்டிலேபேசி இங்கே அவர்களுக்கு அந்த மற்றத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற வருமானம் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–40

அதேபோல மத்திய அரசாங்கத்திலே பார்த்தீர்களேயானால் வருமான வரி உச்சவரம்பு என்ற ஒரு பிரச்சினையை அவர்கள் வத்திருக்கின்றார்கள். அதற்கு வரியையே தளர்த்தப்படலை அந்தத் தொழிலாளர்களுக்கு.

அதேபோல, இந்த விலைவாசியை மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தாத நேரத்திலே இங்கே ஓரிரு ஆண்டுகளாக அகவிலைப்படியைத் தராமல் இந்தத் தொழிலாளர்களை மத்திய அரசாங்கம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. தயவு செய்து நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு இதையெல்லாம் எடுத்துச் சொல்லி அந்தத் தொழிலாளர்களின் வாழ்விலே அவர்களை உயர்த்த பாடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23] (திரு மு. நடேசன)

இங்கே என்னுடைய சேலத்திலே இருக்கின்ற ஓரிரண்டு பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேலத்திலே தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில் என்ற ஒரு மில் இருக்கிறது. அதிலே நம்முடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள்—அங்கே சென்ற ஒரு வருஷத்திற்கு முன்னாலே, அதாவது நம்முடைய லேபர் சங்கத்தை ஏற்படுத்தினார்கள். அந்த லேபர் சங்கத்தை அப்பொழுது தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் அங்கே வந்து அந்தச் சங்கத்தைத் திறந்தார்கள். ஆனால், அந்தச் சங்கத்தைத் திறந்த காரணத்தாலே அந்தத் தொழிலாளர்கள் 25 பேர்களுக்குக் கடந்த ஒரு வருஷமாக வேலை தராமல் பல முறை நாங்கள் முறையிட்டும் இன்னும் நடைபெறவில்லை. அந்த தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில் என்பது ஒரு காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருடையது. அவர் நம்முடைய தொழிலாளர்களை நீக்கியிருக்கின்றார்கள். இதற்கு நீங்கள் உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டிக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றையதினம் சேலத்திலே பழைய—நான்கு ஆண்டுகளுக்கு முன்பாகப் பார்த்தீர்களானால், சேலம் கண்ணாடித் தொழிற்சாலை—கிளாஸ் பேக்டரி என்ற தொழிற்சாலை இருந்தது. அந்தத் தொழிற்சாலையிலே இன்றையதினம் நாங்கள் சேகோஸ் தொழிலை அமைத்திருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை நஷ்டம் அடைந்திருக்கின்ற சூழ்நிலையிலே அதிலே வேலை செய்த 20, 25 வருடங்களாக வேலை செய்த அந்தத் தொழிலாளர் நண்பர்களுக்கு இதுவரையில் எந்தவொரு நஷ்டயீட்டையும் அவர்கள் தரவில்லை. நம்முடைய முன்னாள் அமைச்சரவர்களிடத்திலேயெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதற்குண்டான, அவர்களுக்கு சேரவேண்டிய நஷ்ட ஈட்டை உடனடியாகப் பெற்றுத் தருமாறு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த மானியத்திற்குச் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், நான் பேசாத காரணத்தினால், ஓரிரண்டு காரியங்களை எனக்கு இந்தச் சேலம் நகரத்திலே செய்து தர வேண்டும் என்பதற்காக இதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றையதினம் சேலம் நகர் தொழிலிலும் சரி இந்தத் தொழிலாளர் துறையிலும் சரி, மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கிற ஒரு நகர். ஏறக்குறைய இன்றையதினம், சேலம் நகரிலே ஐந்தரை இலட்சம் பேர் அங்கே வாழ்ந்து கொண்

டிருக்கிற ஒரு நகர். அந்த நகரத்தை—நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் என்னிடத்திலே பலமுறை நான் கேட்ட பொழுது சொன்னார்கள். உறுதியாக, கூடிய விரைவிலே அந்த சேலம் நகர் மாநகராட்சியாகிவிடும் என்று சொன்னார்கள். அது இன்னும் நடக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக எங்களுக்கு அதை மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு, அங்கே நிலம் இல்லை என்று சொன்னார்கள். நிலம் இல்லாத காரணத்திற்காக இங்கே தள்ளக்கூடாது என்று நான் சொல்லி, சேலம் நகராட்சிக்குச் சொந்தமான 2,100 ஏக்கர் அந்த பனமரத்துப்பட்டி ஏரி என்று சொல்லப்படுகின்ற இடத்திலே, சேலம் நகராட்சிக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அதை அங்கே ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு அந்த இடம் சேலம் நகராட்சிக்குக் கிடைக்காமல் ஒரு ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தடையை உடனடியாக விலக்கி அங்கே சேலம் நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம் வருவதற்குத் தயவு செய்து நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இங்கே தொழிலாளர் நல மானியத்திலே பார்க்கும்பொழுது, நம்முடைய தொழில் நுட்பப் பள்ளியில் பயிலும் அலுவலரின் பிள்ளைக்கு என வட்டியில்லாத முன் பணமாக 750 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்ததை இன்றைய தினம் 1,000 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறீர்கள். அதை நான் மனதாரப் பாராட்ட இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அறிவியல் கல்லூரியிலே பயிலும் அந்தத் தொழிலாளர்களுடைய மகனுக்கும், மகளுக்கும் இன்றையதினம் 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தியிருப்பதை நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைய தினம் தொழில் கல்லூரியில் பயிலும் அந்தப் பிள்ளைகளுக்கு 1,500 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

இங்கே நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடத்தில் மோகனூர் சர்க்கரை ஆலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும், அந்த ஆலையிலே இருக்கிற தனி

அதிகாரி அவர்களுக்கும் ஒத்துவராத நிலையைச் சுட்டிக்காட்டி, இதற்கும் ஒரு வழி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படி சேலம் நகரத்திலே மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் இன்றைய தினம் 5½ கோடி மக்களுடைய தலைவியாக, தமிழ் மக்களுடைய உள்ளங்களில் நிறைந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்தில் நான் மனதார பாராட்டி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் மணியடிப்பதற்கு முன் நான் முடித்துக் கொள்கிறேன். எனவே, மணியடிக்காமல் இருக்க வேண்டுமாய் தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அடிமைப் பெண்களின் அறியாமையை அகற்றிய புதுமைப் பெண் எங்கள் புரட்சித் தலைவியே, தொழில் இல்லாதவர்களை தொழில் அதிபர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கிற எங்கள் உன்னதத் தலைவியே, தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, இந்த மானியக் கோரிக்கை மீதான என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தமிழகத்தில் இன்றைக்கு தாங்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகுதான், தொழிலாளர்களுடைய வாழ்விலே இன்றைக்கு விளக்கு ஏற்றிக் கொண்டிருக்கிறீர்கள். தொழிலாளர்கள்தான் ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானவர்கள்; தொழிலாளர்களால்தான் ஒரு நாடு முன்னேற முடியும் என்பது மட்டுமல்ல; தொழிலாளர்களுடைய குடும்பம் முன்னேறுவதற்கு என்ன வழி இருக்கிறது என்பதையெல்லாம் உணர்ந்து, அவற்றையெல்லாம் கடைப்பிடிக்கிற வகையிலே திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிற எங்கள் புரட்சித் தலைவியே, உங்களை இன்றைக்குத் தொழிலாளர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில், பதிவுபெற்ற தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் என்று கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; பதிவுபெறாத தொழிற்சாலைகளில் பணியாற்றுகிறவர்கள், இவர்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கிற போது, கிட்டத்தட்ட 20 இலட்சம் பேர்களுக்கு மேலாக இன்றைக்கு உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிற ஒரு நிலைமையை நாங்கள் கண்கூடாகக் கண்டுக் கொண்டிருக்கிறோம்.

மூடிக் கிடந்த ஆலைகளையெல்லாம் இன்றைக்குத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, ஆலைகளையெல்லாம்—அவர்கள் படைத்த சாதனைகள் எல்லாம், தொழிற்சாலைகளை மூடிப் படைத்தார் கள். கையூட்டு பெற்று தொழிற்சாலைகளை மூடிய அந்த அரசு இன்றைக்கு மக்களிடத்திலேயிருந்து அகற்றப்பெற்று, இன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று நீங்கள் ஆலை களையெல்லாம் திறந்து வைத்து, தொழிலாளர்களுடைய வாழ் விலே பால் வார்த்து இருக்கிறீர்கள். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைத் திறந்துவைத்தீர்கள் கிட்டத்தட்ட 2 ஆயிரம் தொழிலாளர்களுடைய வாழ்விலே அதன் மூலம் விளக்கேற்றி வைத்தீர்கள். இங்கே பின்னி தொழிற்சாலையைத் திறந்து வைத் தீர்கள். 8 ஆயிரம் தொழிலாளர்களுடைய வாழ்விலே விளக்கு ஏற்றிவைத்தீர்கள். இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, தமி ழகத்தையே ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறபோது, எங்கெங்கே அன்றைய நேரத்திலே தொழிற்சாலைகள் மூடப்பட்டனவோ, அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் திறந்து வைத்து, தொழி லாளர்களுக்கு இன்றைக்கு வாழ்வு அளித்தது மட்டுமல்லாமல்—அன்றைக்கு மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகளைத் திறந்தது மட்டுமல்லாமல், மூடப்பட்டிருந்தபோது, தொழிலாளர்கள் வாடி வதங்கிக் கிடந்தபோது, தொழிலாளர்களுடைய குடும்பம் அன் றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது, திராவிட முன்னேற் றக் கழக ஆட்சியிலே அல்லல்பட்டுக் கொண்டிருந்தபோது, தாங் கள் வந்த பிறகு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு ஊதியத்தைக் கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு கருணை அடிப்படையிலே ஊதியம் கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளித்தீர்களே, உங்களை இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார் கள். ஒரு புறத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள், ஒருபுறத் திலே பார்க்கிறபோது, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள், ஒருபுறத்திலே பார்க்கிறபோது தொழிலாளர்கள், இவர்கள் எல் லாம் இன்றைக்கு உங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், நீங்கள்தான் இந்த நாட்டினுடைய நிரந்தர முதலமைச் சர் என்பதற்கு இது ஒரு அறிகுறியாகத்தான் இருந்து கொண் டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அசைக்க முடி யாத ஒரு முதலமைச்சராக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக் கிறீர்கள். எவரெவர்கள் எல்லாம் என்னென்னவோ சதித்திட் டங்களையெல்லாம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் இன்றைக்கு. உங்களை அசைத்துப் பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண் டிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சியைக் கலைத்து விட வேண்டுமென்று நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒரு தேசிய தலைவியாக இன்றைக்குத் திகழ்ந்து கொண் டிருக்கிறீர்கள். நினைத்த கருத்துக்களை எவருக்கும் பயப்படா மல் எடுத்து சொல்கிற ஒரு உன்னதத் தலைவியாக இன்றைக்கு நீங்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நினைக்கிற வழி யிலேயே நீங்கள் நடைபோடுங்கள்; உங்களை மக்கள் நம்பி

1993 ஏப்ரல் 23] [திரு. ம. தனபால்)

யிருக்கிறார்கள். மக்கள் என்றைக்கும் உங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வாழ்வு அளிக்கிற வகையிலே, தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்; பீடித் தொழிலாளர்களுக்காக காப்புறுதித் திட்டம்; அங்கே குடும்பத்திலே அந்தத் தொழில் செய்கிறபோது, இறந்தால் அவர்களுக்கு ரூபாய் 6 ஆயிரம் கொடுக்கிற ஒரு நிதியுதவித் திட்டம்; கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஒரு காப்புறுதித் திட்டம். மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு மகத்தான திட்டம். இப்படிப் பலப்பலத் திட்டங்களை இன்றைக்குத் தீட்டிக் கொண்டிருக்கிற நீங்கள், தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்ற பொழுது, தொழிற்சாலைகள் நவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக மூடப்பட்டிருக்கின்றபொழுது, தொழிற்சாலை நலிவுற்றிருக்கிறது என்பதற்காக மூடப்பட்டிருக்கிற பொழுது தொழிற்சாலையை மேம்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக மூடப்பட்டிருக்கிற பொழுது, அந்தத் தொழிலாளர்கள் எங்கே போவார்கள், அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றார்களே என்பதை உணர்ந்து புரட்சித்தலைவியே நீங்கள் 'டாக்டர் புரட்சித் தலைவி நல நிதி உதவித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை, ஒரு மகத்தான திட்டத்தை மறுவாழ்வு அளிக்கின்ற ஒருதிட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றீர்களே, உங்களை இந்த மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே நீங்கள் செல்லுகின்ற வழியிலேயே செயல்படுங்கள். நீங்கள்தான் இந்த நாட்டினுடைய நிரந்தர முதல்வர். நிரந்தர முதல்வர் மட்டுமல்ல இந்த தேசியத் திருநாட்டையே உங்கள் கையிலே வருங்காலத்தில் ஒப்படைக்கின்ற வகையில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-50

இந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு என்று பலப்பல சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிற வேலையில் என்னுடைய தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டிலே மறைமலைநகர் பகுதியில் ஏறக்குறைய நிறையத் தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதியில் நிறையத் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதியில் இ.எஸ்.ஐ. மருந்தகத்தை திறந்து வைத்தார்கள். நான் அதற்கு, அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில் அந்தப் பகுதியில் பலப்பலத் தொழிற்சாலகள் பிரபல தொழிற்சாலைகள் உள்ள பகுதியில், பல்லா

யிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பகுதியில் நிரந்தர இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்றை உருவாக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியில் ஒரு தொழிற்பயிற்சிக் கூடம், ஒரு ஐ.டி.ஐ. அல்லது பொறியியல் கல்லூரி ஒன்றை அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வேலை வாய்ப்புத் துறையில் இன்றைக்கு நாம் எடுத்துக்கொள்வோமேயானால் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் எல்லாம் வேலை கிடைக்காமல் காத்திருக்கின்றவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து விட்டுக் காத்திருக்கின்றபொழுது அவர்களுடைய வயது வரம்பு தள்ளிப்போகின்ற பொழுது அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை உருவாகிவிடுகிறது. ஒருவன் 20 வயதிலே படித்துவிட்டுப் பெயரைப் பதிவு செய்கின்றான் என்று எடுத்துக்கொண்டால் அவன் 15 வருடங்கள் காத்திருக்கின்றபொழுது அவனுடைய வயது 35 ஆகிவிடுகிறது. அந்த நேரத்தில் காலாவதியாகி விடுகிற நிலைமை இருக்கிறது அந்த நபருக்கு வேலை கிடைக்காத சூழ்நிலை உருவாகிவிடுகிறது. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு, அரசு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து இருப்பவர்கள் அவர்களில் யாருக்கு வயது வரம்பு கடக்கின்ற நிலைமை இருக்கிறதோ அவர்களையெல்லாம் தெரிவு செய்து, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து அவர்களுக்கு நேர்காணல் கடிதம் அனுப்பப்பட வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களுக்கு சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை உருவாக்கி இன்றைக்கு ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அதற்கு நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு சுயவேலைவாய்ப்பு என்ற திட்டத்தின் மூலம் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் மட்டுமல்ல, வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து விட்டுத் தங்களுக்கு வேலை கிடைக்கவில்லையே என்று காத்துக்கொண்டிருக்கிற அந்த மாதிரி வேலைவாய்ப்பற்றவர்களுக்கு எல்லாம், அவர்களை இன்றைக்குத் தொழிலதிபர்களாக உருவாக்கக் கூடிய வகையில் சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் பல தொழில் அதிபர்களை உருவாக்கியிருக்கின்றீர்கள். உங்களை அவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

1993 ஏப்ரல் 23] (திரு. ம. தனபால்)

ஒரேயொரு கோரிக்கையை மட்டும் நான் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அண்ணன் அரசுக் கொறடா அவர்கள்கூட ஆட்சேபனை செய்வார்கள் என்று நினைக்கின்றேன். நான் நியாயத்தைத்தான் சொல்லுகின்றேன். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் என்னுடைய மாவட்டத்திலே காஞ்சிபுரத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. மாவட்டத்தினுடைய தலைநகரமான மையப்பகுதியான செங்கல்பட்டுக்கு அந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இந்த நேரத்திலே வைத்து புரட்சித் தலைவியே, நீங்கள்தான் நிரந்தரமுதல்வர்; நீங்கள் தான் தேசியத் திருநாட்டைக் காக்க இருக்கின்ற தலைசிறந்த தலைவி என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: திரு. கா. ப. பட்டாபிராமன்.

*<u>திரு. கா. ப. பட்டாபிராமன்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தைக் காஞ்சிபுரத்திலேயிருந்து செங்கல்பட்டுக்கு மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். அலுவலகங்களை அமைக்கின்றபொழுது, பொதுவாக மாவட்டத் தலைநகரிலே பல அலுவலகங்கள் இருக்கின்ற பொழுது, அங்கே வருகின்ற மக்கள் எல்லா வேலைகளையும் ஒரே காலக் கட்டத்தில் அந்த இடத்திலே முடித்துக்கொள்ள வேண்டுமென்ற வசதியையும் நாம் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 5-55

அப்படிப் பார்க்கின்றபோது, மாவட்டத்தினுடைய பல்வேறு அலுவலகங்கள் அத்தனையும் காஞ்சிபுரத்திலே தான் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறியவேண்டும். ஒரே ஒரு பிரச்சினை, அங்கே செஸன்ஸ் கோர்ட் இல்லை. அதைக்கூட காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டும் செங்கல்பட்டிலிருந்து என்ற பிரச்சினையும் இப்பொழுது இருக்கிறது. ஆகவே, காஞ்சிபுரத்திலே இருக்கின்ற அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: திரு. எஸ். வி. சண்முகம்.

*<u>திரு. எஸ். வி. சண்முகம்</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மானியக் கோரிக்கை மீது கருத்துக் கூறுகின்ற நல்ல வாய்ப்பினை தந்த

தங்களுக்கு நன்றியை முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர் நலன் சார்ந்த சில கருத்துக்களை மாத்திரம் சுருக்கமாகச் சொல்லி அதிகமான நேரத்தை எடுத்துக்கொண்டு உங்களுக்கும், மற்றவர்களுக்கும் கண்டிப்பாக சிரமமாக இருக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலன் என்பது, வேறு பல துறைகளிலேயிருந்து அடிப்படையிலே வேறுபட்ட ஒன்றாகும். வேறு பல துறைகளை எடுத்துக்கொண்டால் அது நேரிடையாக அரசாங்கத்தினுடைய திட்டங்களாகவோ, அறிவிப்புகளாகவோ வருபவைகள் ஆகும். ஆனால் தொழிலாளர் நலன் என்பது மூலதனத்தை வைத்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து, தனக்குக் கிடைக்கின்ற லாபம் போக மீதியை தொழிலாளிக்குத் தரவேண்டுமென்ற மனப்போக்கு மிகக் குறைவாக இருக்கின்ற முதலாளிகளை கடிவாளமிட்டு இழுத்து தொழிலாளர்களுடைய கோரிக்கைகளுக்கு பணிய வைக்கின்ற ஒரு முறையாகும். சில நேரங்களில் மிகக் கடுமையான நிலைமைகளுக்குக் கூட, இந்தத் துறை ஆளாகி விட நேர்ந்துவிடுகிறது. சிலர் கூட நினைக்கலாம். இந்தப் போராட்டம், இவ்வளவு நாட்களாக நடக்கிறதே, இதை அரசு முடிக்கவில்லையே என்று கூட நினைக்கலாம். எந்த அரசாங்கமும் தன்னுடைய ஆட்சியில் போராட்டங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்பாது. ஆனால், தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கின்ற முதலாளிகள் இருக்கும்போது, போராட்டங்கள் சற்று காலம் பிடித்துவிடுவது வழக்கமாகும். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போராடுகின்ற தொழிலாளர்களுக்கு ஆதரவாக முதலாளிகளைப் பிடித்து இழுத்து நிர்பந்தம் செய்து அமர வைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, இயன்ற அளவு தொழிலாளர்களுடைய நலனுக்காப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற அரசாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பல விஷயங்களிலே நேரிடையாக காணமுடியும். தமிழ்நாட்டில் முன்பெல்லாம், அடிக்கடி சிம்சன் போராட்டம், பை மெட்டல் பியரிங்ஸ் போராட்டம் என்று செய்திகள் வரும். பஞ்சாலைப் போராட்டம் என்று வந்தால் கண்டிப்பாக 3-½ மாதத்திற்கு குறையாது. அழைத்தாலும், சைமா. (எஸ்.ஐ.எம்.ஏ.) வராது. வருவதற்கு இரண்டு மாதங்கள் ஆகும். வந்தாலும் சொன்னதைக் கேட்காது. அந்த நிலைமை முன்பு இருந்தது. ஆனால் ஒரு சில தினங்களில் பஞ்சாலை முதலாளிகளை ஒப்புக்கொள்ள வைத்து, ஒரு ஒப்பந்தத்தை அறிவித்ததை நம்மாலே பார்க்க முடிந்தது. அதைப்போல இந்த அரசு வருவதற்கு முன்பு ஆளுநர் அரசு இருந்ததே அதற்கு முன்பு, 2 ஆண்டுகள் தி.மு.க. அரசு இருந்தபோது, மூடிக்கிடந்த தொழிற்சாலைகள், ஸ்டாண்டார்டு மோட்டார்ஸ், பி. அண்டு சி, போன்ற தொழிற்சாலைகளை எல்லாம் திறந்து, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்த பெருமை இந்த அரசை சாரும். ஏன் இதற்கு முன்பு இருந்த அரசாலே இந்த

பி. அண்டு சி. மில்லை, ஸ்டேன்டர்டு மோட்டார்ஸ்-ஐ திறக்க முடியவில்லை. அன்றைக்கு இருந்த அரசாங்கத்திற்கு இரட்டை நாக்குக் கொள்கை (double tongue Policy) இருந்தது. ஒரு பக்கம் தொழிலாளியை அழைத்து விடாதே போராடு நாங்கள் இருக்கிறோம் அஞ்சாதே என்று திருகிவிடுவது. இன்னொரு பக்கம் முதலாளிகளை அழைத்து அவர்கள் கோரிக்கைகளை நீ கேட்டால் உன் பையிலேயிருந்து இரண்டு கோடி போய்விடும். ஆகவே, அதை ஒழுங்குபடுத்துவதற்கு எனக்கு ஒரு கோடி தா, 50 இலட்சத்தோடு முடிக்கிறேன் என்று பேரம் முன்பு நடந்தது. அதனால் தான் போராட்டங்கள் நீடித்தன. அது மாத்திரம் அல்ல. முன்பெல்லாம் ஒரு போராட்டம் இன்னொரு வடிவம் எடுக்கும். அடிக்கடி பந்த் நடக்கும். டி.ஜி. சைக்கிள் பந்த். சிம்சன் பந்த். பி. அண்டு சி. பந்த். பந்த் என்ற வார்த்தை அடிக்கடி வரும். இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே இந்த வார்த்தை இருக்கிறதா உண்டா? தொழிற்சங்கத் தலைவர்கள் முன்பு அடிக்கப்பட்டார்கள். கத்தியால் குத்தப்பட்ட கதையெல்லாம் உண்டு.

பிற்பகல் 6-00

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ம. சின்னசாமி, தலைமை.)

ஆவடியிலே போராடிய தொழிற்சங்கத் தலைவர் திரு. வி.பி. சிந்தன், கே. எம். சுந்தரம், ஏ. சீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலே கத்தியால் குத்தி, அடித்து, உதைத்து நொறுக்கப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஏராளமாக சொல்லிக்கொண்டிருக்கலாம். இந்த அரசாங்கம் உழைப்பாளி மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றுள்ளது. இந்த உண்மையை சிலராலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த அரசு செம்மையாகச் செயல்படுகிறது என்பதனாலேயே சட்டமன்றத்திலே வந்து இருந்து அமர்ந்து கருத்துக்கூறமுடியாமல் வெளியே போய் விடுகிறார்கள். பட்ஜெட் மீது விவாதிக்க சொன்னால், பாபர் மசூதி பற்றிப் பேசுகிறார்கள். பாபர் மசூதிக்குப் பதில் சொன்னால் வெளியே போய் விடுகிறார்கள்.

நேற்று முதல் நாள் நடந்த சாதாரண சம்பவம், ஒரு உறுப்பினர் பேரவைத் தலைவரைப் பார்த்து ஒருமையிலே சொல்கிறார். அதன் மீது இவர்களுக்கு கோபம் வரவில்லை. மாறாக எங்கேயா இருந்து ஒரு குரல் வந்ததாம், அந்த குரலை சபாநாயகரே கண்டித்ததற்குப் பின்பும் இவர்களுக்கு கோபம் வந்து விட்டதாம். சபாநாயகரை எப்படியும் பேசலாம். ஆனால் எங்கோ இருந்து வந்த குரலை மட்டும் இவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆகவே, இவர்களுக்கு இருக்கின்ற நோக்கமெல்லாம் இந்த அரசாங்கத்தை எப்படியும் குறை சொல்ல

வேண்டும். தொழிலாளர் பிரச்சினை. சம்பந்தமான விஷயத்தி லெல்லாம் குறை சொல்ல முடியவில்லை. ஆகவே, விளம்பரம் வேண்டும். இந்த சபையிலே தீரவேண்டிய விஷயத்தை தெருவிலே........(குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி), திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தொழிலாளர் வர்க்கத்தினுடைய உணர்வுகளை பிரதிபலிக்கிறோம் என்று சொல்லக் கொள்கிற இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய இரண்டு பிரதிநிதிகளும் இந்த தொழிலாளருடைய சங்கங்களில் உள்ள இரண்டு ஆண்டுகளுடைய மானியக் கோரிக்கையிலே கலந்து கொள்ளவில்லை, காரணம் இந்த இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் தொழிலாளர்கள் குறித்த குறைபாடுகளாகச் சொல்லக்கூடிய எந்த பிரச்சினையுமே அவர்களிடத்திலே இல்லாத காரணத்தினால்தான் இந்த பேரவை நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளவில்லை என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை,

திரு. எஸ். வி. சண்முகம் : ஆக மலிவான விளம்பரங்களை தேடிக்கொண்டிருக்கிறார்கள், காவல் துறையைச் சார்ந்தவர்களைத் தாக்கினால் வழக்குப் பதிவு செய்யமாட்டார்களா ? சட்டமன்றத்திலேயிருந்து வெளியே போகச் சொன்னால் போகாவிட்டால் காவலர்கள் அழைத்துத்தான் செல்வார்கள், ஒரு நாகரீகமானவர் தன் மீது வழக்கு இருக்கிறது என்றால் காவல் நிலையத்திற்குப் போய் நடவடிக்கை எடுக்கச் சொல்வார், ஆனால் இவரோ ஆண்டிசிபேட்டரி பெயில் கேட்கிறார். அங்கேயும் கிடைக்கவில்லை என்ற உடன் இங்கே வருகிறார், இங்கே வந்து வெளியிலே போனால் கைது செய்வார்கள்என்று அவருக்குத் தெரியும், அவருக்கு எப்படியாவது செய்தி வரவேண்டும், சட்டமன்ற வாசலிலே கைது என்று கொட்டை எழுத்திலே வரவேண்டும். அப்படியெல்லாம் வீரதீரப் பிரதாபம் செய்தவர்கள் ஒன்றரை மணி நேரத்திற்குள்ளே வெளியே வந்து விட்டார், இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு சத்தும் இல்லை சாரமும் இல்லை. எதைச் சொல்லி எதிர்ப்பது என்று அவர்களுக்குப் புரியவில்லை. ஆகவே. எப்படியாவது எதிர்த்தாகவேண்டும், இது எல்லாம் இந்த நாட்டுமக்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இதற்கு முன்பு இருந்த எந்த அரசையும் காட்டிலும் இந்த

அரசு மக்கள் நலனிலே நாட்டம் கொண்டிருக்கிறது, மக்கள் பிரச்சினைகளைக் கூர்ந்து கவனிக்கிறது, அணுகுமுறையிலே தெளிவு இருக்கிறது என்ற ஒரு எண்ணம் இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிறது, அந்த எண்ணம் இருப்பதாலே இவர்களுடைய எத்தகைய அரசியல் உள்நோக்கமும் இந்த மண்ணில் எடுபடாது என்று தெரிவித்துக்கொண்டு மானியக் கோரிக்கைகளுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த ஆதரவைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய பதிலுரை,

பிற்பகல் 6-05

* <u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையில் 7 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிங்கை கோவிந்தராசு அவர்கள் அவருடைய தொகுதியிலும் மற்ற இடங்களிலும் மூடப்பட்டிருக்கிற ஆலைகள் குறித்து இங்கே நம்முடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். எந்தத் தொழிற்சாலையும் தமிழ்நாட்டிலே தொழில்தாவா காரணமாக மூடப்படவில்லை, நிதி நெருக்கடி காரணமாகவோ அல்லது நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறவர்களுடையே ஏற்பட்டிருக்கிற பூசல்கள் சிக்கல்கள் காரணத்தாலோதான் மூடப்பட்டிருக்கின்றன, அவைகளை மீண்டும் இயக்குவதற்காக புரட்சித் தலைவி அரசினுடைய தொழிலாளர் நலத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சுந்தராம்பாள் அவர்கள் மேட்டூரிலே இருக்கிற மால்கோ தொழிற்சாலை மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மால்கோ தொழிற்சாலையை திறப்பதற்காக பி. ஐ. எப். ஆர்-ல் இப்பொழுது பேக்கேஜ் கொடுக்கப்பட்டு விரைவிலே அதைத் திறப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியினுடைய அரசு அந்தத் தொழிற்சாலைக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்திருப்பது அனைவரும் அறிந்ததே. அதுபோல மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நிறுவன ஆலையைப் பொறுத்தவரையில் 2606 தொழிலாளர்கள் வேலை பார்க்கிற அந்த ஆலை 1985லே மூடப்பட்டது, 1990 ஸ்கீம்-இலே ஸ்பின்னிங் செக்சனை மட்டுமே திறந்து அதிலே 450

பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தோம், அதுவும் இலாபகரமாக இயங்காமல் மூடப்பட்டது. அது டைரக்டர் ஆப் ஹேண்ட் லூம்ஸ் அன்ட் டெக்ஸ்டைல்ஸ் அவர்கள் சம்பந்தப்பட்டது. இன்றைக்கு அதைத் திறந்து இயக்குவதற்கு உரிய நல்ல புரமோட்டார்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தத் தொழிற் சாலை பொருளாதார நெருக்கடி காரணமாகத்தான் மூடப் பட்டது என்பதையும் அத்தனைபேரும் அறிவார்கள். எனவே, இன்றைக்கு தொழிலாளர்களுடைய பிரச்சினை காரணமாக எந்த ஆலையும் மூடப்படவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒளிபிறந்த போது மண்ணில் உயிர்கள் பிறந்ததம்மா-இங்கே நீ பிறந்தபோது தெய்வம் நேரில் வந்ததம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கவிதை வரிகளுக்கு வடிவம் தந்து நித்தமும் நாங்கள் நேரில் தரிசிக்கும் தெய்வமாய் காட்சி தரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே. அரியாசனம் உனக்கேயானால் உனக்கு சரியாரும் உண்டோ தலைவியே என்று உலகத்துத் தமிழரெல்லாம் உவந்து பாராட் டும் விதத்திலே ஒப்பில்லா ஆட்சியை நடத்தி, வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய் மதியார்க்கும் மதிப்ப வர்க்கும் மதி கொடுக்கும் மதியாய் காட்சியளித்துக் கொண் டிருக்கும் கருணைக் கடலே. (மேசையைத் தட்டும் ஒலி), இருக்கின்ற செல்வர்கள் இல்லாத ஏழைகளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணமாக, முதலாளி தொழிலாளி உறவுக்கு மூலமந்திரமாக, இயற்கை கொடுக்கும் செல்வத்தை எல்லாம் பொதுவாய் வைத்திட வேண்டும், இல்லா தவர்க்கும் இருப்பவர் தமக்கும் பகிர்ந்தே கொடுத்திட வேண்டும். ஒருவருக்காக மழை இல்லை, ஒருவருக்காக நிலமில்லை, வருவ தெல்லாம் அனைவருக்காக வகுத்தே வைத்தால் வழக்கில்லை. என்ற ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் மண்ணில் மலர்வதற்கான இலக்கணத்தை அன்றே பாட்டில் வகுத்துக்காட்டி அதற்கோர் இலக்கியமாய் சமதர்ம சமுதாயத்தை இன்று நாட்டில் படைத் துக் கொண்டிருக்கும் சாதனைச் சிகரமே, எங்கள் காவல் தெய்வமே, அரசியல் கடலின் அரிய கலங்கரை விளக்கமே, விழி அசைவில் சாதனைகள், விரல் அசைவில் சரித்திரங்கள், தொழிலாளர் மனமெங்கும் சுகராக கீர்த்தனங்கள் என்று சொல்லு மளவிற்கு தமிழகத்தை தொழில் மயமாக்கி தொழிலாளர்களுக்கு எழில் மயமான எதிர்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கும் ஆற்றல் அரசியே, உங்கள் திருவடிகள் பதியும் இடமெல்லாம் உருவாகும் புதிய வரலாறு, வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கும் உங்கள் வண்ணமணித் திருவடிகளின் நோக்கி வணங்குகிறேன்.

புரட்சித் தலைவி அவர்களாலே படைக்கப்பட்டுக்கொண் டிருக்கும் புதிய பொற்கால ஆட்சியின் இனிய பூபாள ராகம் நம்

இதயங்களிலே இன்று எதிரொலிக்கின்றதைக் கேட்கிறோம். இப்படிப்பட்ட ஓர் நல்லாட்சியை, உழைக்கும் வர்க்கத்தை மதித்துப் போற்றும் உன்னத ஆட்சியைக் காண இந்த நாடு என்ன தவம் செய்திருக்க வேண்டும்? தாயின் கருணை உள்ளத்தையும் தந்தையின் அன்பு நெஞ்சத்தையும் ஒருசேரப் பெற்ற உத்தமத் தலைவி இன்று இந்நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறார்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும் என்றார் ஏசுபிரான். ஆனால் மணிவாசகப் பெருமான், துன்பப்படுவோரே, உங்கள் துயரம் என்ன என்பதை நீங்கள் இறைவனிடம் சென்று முறையிட வேண்டாம். அவனே உங்களைத் தேடி வந்து துயர்போக்கி அருள்புரிவான் என்ற பொருளில், ஏழைகளின் இல்லங்கள்தோறும் எழுந்தருளி நின்றானை என்று பாடினார். இறைவனின் தன்மையாக மணிவாசகர் பாடிய அருட்செயலை இன்று நம் இறைவியிடம் காண்கிறோம். இன்று நம்நாட்டில் கதவடைப்பு போராட்டம் போன்ற செயல்களில் தொழிலாளர்கள் ஈடுபட்டு, தட்டினால்தான் திறக்கப்படும் என்ற நிலை இல்லாமல் அவர்களுக்கு எது தேவை என்பதை அறிந்து செய்து வருகிறோம். அதனால்தான் சோலைகளில் தவழ்கின்ற அமைதித் தென்றலை இன்று நம் நாட்டுத் தொழிற்சாலைகளிலும் காணமுடிகிறது.

பிற்பகல் 6-10

புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சி அமைவதற்கு முன்பு இங்கு நடைபெற்றதே ஒரு கற்கால ஆட்சி, அப்போது நாட்டிலே அமைதி இருந்ததா? வீட்டிலே நிம்மதி இருந்ததா? எங்கு பார்த்தாலும் வன்முறைதானே தலைவிரித்தாடியது? அந்தச் சோதனையான சூழ்நிலையில் இந்த நாட்டு மக்களெல்லாம் எங்கே அமைதி என்று ஏங்கித் தவித்தனர். நிம்மதி இல்லாமல் நிலை தடுமாறினர். அமைதியும் நிம்மதியும் இல்லாத சூழ்நிலையில் மக்கள் மனங்களிலே அன்பு மட்டும் இருக்குமா? அமைதிக்காகவும், அன்புக்காகவும் இந்நாட்டு மக்கள் ஏங்கித் தவித்த போதுதான் அன்பின் தெய்வமாக, அமைதி தேவதையாக நம் இதயதெய்வம் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான்.

'அன்பு வந்தது, நம்மை ஆளவந்தது
சொந்தம் வந்தது, தெய்வ சொர்க்கம் வந்தது'.

(மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்நாட்டு மக்கள் உள்ளம் எல்லாம் மகிழ்ச்சியால் துள்ளியது.

நாட்டை ஆளக்கூடிய நல்ல தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஏழைக்கு இரங்கும் கருணை உள்ளம், ஏற்ற பணியைச் செவ்வனே செய்து முடிக்கும்

கடமை உணர்வும், ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் சகித்துக் கொள்ளும் பொறுமைக் குணமும் உடைய ஒருவர்தான் ஒப்பற்ற தலைவராக ஒளி வீசமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனையே

'கருணை இருந்தால் வள்ளலாகலாம்
கடமை இருந்தால் வீரனாகலாம்
பொறுமை இருந்தால் மனிதனாகலாம்— இந்த
மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்'

(மேசையைத் தட்டும் ஒலி) என்ற அந்த இனிய பாடல் வரிகளுக்கு ஏற்ப நம் தங்கத் தலைவியிடம் அந்த அரிய ஆற்றல்களெல்லாம் ஒருசேர இருப்பதால்தான் இன்று நாட்டின் தலைவியாக மட்டுமில்லாமல் தொழிலாளர் துயர் போக்கும் தூய தலைவியாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்ற முறையிலே நான் துணிந்து சொல்வேன், தமிழக வரலாற்றிலே மட்டுமல்ல, இந்திய அரசியல் வரலாற்றிலேயே தொழிலாளர் வாழ்வில் வசந்தங்கள் மலரக்கூடிய ஒரு உன்னதமான ஆட்சியை இன்றுதான் நம் தமிழ்நாடு கண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற எத்தனை இனிய திட்டங்கள் இன்று தரப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் அன்றாட வாழ்விலே காணப்பட்ட இருட்படலங்களெல்லாம் இன்று அகற்றப்பட்டு, இன்ப ஒளியை அவர்கள் இதயங்களிலே ஏற்றியிருக்கிறோம்.

'புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகை வேரொடும் சாய்ப்போம்'

என்றார் புரட்சிக் கவிஞர். தொழில்மயமான புதியதோர் உலகத்தைத் தமிழ் மண்ணில் இன்று படைத்துக் கொண்டிருக்கும் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தொழிலாளர்கள் எதற்காகவும் போரிட வேண்டிய அவசியமே இல்லாத அமைதிச் சூழலையும் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆலைகளையெல்லாம் ஆலயங்களைப்போல் மதிக்க வேண்டும் என்றார் அமரர் நேரு. அதனால்தான் 'ஆலைச் சங்கின் ஒலியில் ஆலயமணியின் ஓசையைக் கேட்கிறேன்' என்று கூறினார் அவர். அந்த உயர்ந்த உள்ளம் பார் போற்றும் நம் தங்கத் தலைவிக்கும் இருப்பதால்தான் இன்று ஆலயங்களையும் பாதுகாத்து வருகின்றார்கள். ஆலைகளையும் பாதுகாத்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டுக் கிடந்த பல ஆலைகள், இன்று திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த ஆலைகளின் சங்கொலி, நம் அருமைத் தலைவியையல்லவா இன்று வாழ்த்திக் கொண்டிருக்கிறது! (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் காணப்படும் தகராறுகள் எல்லாம் இன்று

உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன. தொழிலாளர்களின் எந்தப் பிரச்சினையையும் பெரிதாக உருவெடுத்து போராட்டமாக வடிவெடுப்பதற்கு வாய்ப்பே அளிக்காமல், உடனுக்குடன் அவைகளுக்கு ஏற்ற தீர்வுகள் காணப்படுகின்றன. இந்த வகையில் நோயை முற்ற வைத்துப் பின்பு குணப்படுத்த முயற்சிக்கும் மருத்துவரைப் போல் இல்லாமல் நோய்க்கான அறிகுறிகளைக் கண்டவுடனேயே குணப்படுத்தும் உன்னத மருத்துவராக நம் ஒப்பற்ற தலைவியின் அரசு இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நோயைக் குணப்படுத்துவது மட்டுமா ? அந்த நோய் ஏன் வருகிறது என்பதற்கான மூல காரணத்தையே அறிந்து அதை முற்றிலுமாகத் தீர்க்கக்கூடிய முறை தெரிந்த மருத்துவராக நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

'நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.'

என்ற வள்ளுவன் கருத்தை உள்ளத்தில் கொண்டு செயல்படும் ஒப்பில்லாத் தலைவி அல்லவா நம் புரட்சித் தலைவி அவர்கள் ; அவர்களது சீரிய வழிகாட்டலால், தொழிலாளர்களின் துணையாக விளங்கும் நமது தூய அரசு அமைந்த பின்பு தேவையற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் முதலியவற்றைத் தொழிற்சாலைகள் இன்று காண்பதில்லை. அதன் விளைவு முந்தைய ஆண்டுகளில் வீணான 'மனித உழைப்பு நாட்கள்' இவ்வரசின் முயற்சியால் இன்று குறைந்துள்ளது. 1991ம் ஆண்டு 72,78,969 மனித உழைப்பு நாட்கள் இழப்பு இருந்தது. அது 1992 ஆம் ஆண்டில் 28,68,472 ஆகக் குறைந்துள்ளது. இது, இந்த அரசின் மகத்தான சாதனைகளில் ஒன்றல்லவா ? (மேசையைத் தட்டும் ஒலி) மனித உழைப்பு நாட்கள் வீணாகாமல் பயன்படுத்தப்பட்டிருப்பதால் உற்பத்திப் பெருக்கம் அல்லவா ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை தொடர்ந்து, இன்னும் ஒருசில ஆண்டுக்குள் எந்தக் காரணத்தாலும் தமிழகத் தொழிலாளர்களின் மனித உழைப்பு வீணாகாத நிலை நிச்சயம் உருவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-15

தமிழ்நாட்டில் சுமார் 2 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 1987 ஆம் ஆண்டு தொழில் நீதிமன்றத் தீர்ப்பின் நடைமுறைக்காலம் முடிந்தவிட்டமையால் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் மூலம் சம்பள மறுநிர்ணயம், பஞ்சப்படி, வீட்டுவாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற பொதுக் கோரிக்கைகள் சம்பந்தமாக தொழில் தகராறு

உருவாகும் நிலையை ஏற்படுத்தினர். பிரச்சினை பெரிதாக இருந்தாலும் அதற்குத் தீர்வு காணவேண்டும் என்ற நல்லெண்ணம் புரட்சித் தலைவிக்கு இருந்ததால் முதலில் பேச்சுவார்த்தை நடத்தினோம். அம்முயற்சி பயன் தராத நிலையில் தொழில் அமைதியைக் கருத்தில்கொண்டு சிறப்புத் தொழில் தீர்ப் பாயத்தின் முடிவிற்கு விட்டு, தொழில் தகராறுகள் சட்டப் பிரிவு 10-பியின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழில் தகராறுகள் எவையாக இருப்பினும், விரைவில் அவை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக தொழில் தீர்ப்பாயம் அமைத்து, அதன்மூலம் பல தகராறுகள் இன்று தீர்க்கப் பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்பு கிறேன்.

உரிமைக்குப் போராடும் தொழிலாளர்களின் உணர்ச்சி களை நாம் மதிக்க வேண்டும். அவர்களைப் பகைவர்களாக எண்ணாமல பரிவோடு நடத்த வேண்டும் என்பது நம் கருணைத் தெய்வத்தின் கட்டளை.

> "பழகும் விதத்தில் பழகிப்பார்த்தால் பகைவன் கூட நண்பனே, பாசம் காட்டி, நேசம் வைத்தால் மிருகம் கூட தெய்வமே".

என்பதை உணர்ந்த நம் ஒப்பற்ற தலைவியின் ஆலோசனைப்படி, தொழிலாளர்களும் தொழில் அதிபர்களும் அரசு அதிகாரி களும் இணைந்த முத்தரப்புக் குழுக்கள் மூலம் எத்தரப்பினரும் போற்றும் விதத்தில் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு இன்று தீர்வு கண்டு வருகிறோம்.

தொழிலாளர்களின் தூய தலைவர் என்று தம்மைச் சொல்லிக் கொண்டவர்கள் இங்கு உண்டு. கரும்பாகப் பேசு வார்கள். ஆனால் அவர்கள் இதயம் மட்டும் இரும்பாக இருக்கும். உள்ளம் நினைப்பது வேறாகவும், உதடு சொல்வது வேறாக வும் இருக்கும். அப்படிச் செய்பவர்கள் மனிதர்களே அல்ல. உள்ளத்தில் நினைப்பதை உதட்டிலும் சொல்பவன் எவனோ அவன்தான் மனிதன் என்றார் புரட்சித்தலைவர். அந்த வைர வரிகளுக்கேற்ப, உள்ளத்திலும் தொழிலாளர் நலத்தையே எண்ணி உதட்டிலும் அதையே உச்சரிக்கக்கூடிய உன்னதத் தலைவி நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மனித வடிவிலே வாசம் செய்யும் கொடிய விலங்குகளும் உண்டு. ஆனால் மனித வடிவிலே மகத்தான தெய்வமாய் விளங்குபவர் நம் தூய தலைவி அவர்கள். சாக்ரடீஸ் என்ற கிரேக்க ஞானி, பட்டப்பகலிலே கையில் விளக்கை வைத்துக்

1993 ஏப்ரல் 23] [திரு. சே. ரகுபதி]

கொண்டு தெருவில் செல்பவர்களைப் பார்த்து, எங்கே மனிதன் எங்கே மனிதன் என்று கேட்டு நான் மனிதனைத் தேடுகிறேன் என்று தேடினாராம். அந்த கிரேக்க நாட்டில் அவராலும் தேடிக் காணமுடியாத திரவியமாக நமக்குக் கிடைத்திருப்பவர்தான் நம்முடைய உத்தமத் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாக்ரடீஸ் இன்று இருந்திருந்தால் இப்போது மனிதனைத் தேடிக் கொண்டிருக்கமாட்டார். அந்த மகத்தான மனித சக்தியை நம் புரட்சித் தலைவியின் வடிவிலே மகிழ்ச்சியுடன் கண்டிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட நம் தங்கத் தலைவி அவர்கள் தொழிலாளர்களின் சோக ராகம் எப்போது கேட்டாலும் உடனே அதை சுகராகமாக மாற்றிவிடும் மனம் படைத்தவர்கள். இதற்கு எத்தனையோ சான்றுகளை இங்கே நான் குறிப்பிடலாம். 1992 ஆம் ஆண்டு மூடப்பட்ட 15 பஞ்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களிலுள்ள 11,776 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலேயிருந்து ரூ. 47,11,200-ஐ நிவாரணத் தொகையாக புரட்சித் தலைவியினுடைய அரசு வழங்கியிருக்கிறது.

'அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை, இது நான்குமறை தீர்ப்பு'(மேசையைத் தட்டும் ஒலி) என்ற இனிய பாடல் வரிகளை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற எண்ணற்ற இனிய திட்டங்களைத் தீட்டிச் செயல் படுத்துவதுடன் கோடிக் கணக்கில் அள்ளியும் கொடுக்கும் நம் அருமைத் தலைவியின் உள்ளம் என்றும் ஆனந்தப் பூந்தோப்பு தான். (மேசையைத் தட்டும் ஒலி), அந்த நல்ல உள்ளம் என்றும் நலமாக வாழும். இது நம் தீர்ப்பு மட்டுமல்ல, நான்கு மறையின் தீர்ப்புமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

வாடித் தவித்த பீடித் தொழிலாளர்கள் உட்பட பல சிறு தொழில்களைச் செய்து தங்கள் வாழ்வை நடத்திவரும் ஏழைத் தொழிலாளர்கள் மீது இரக்கம் கொண்டு அப்படித் தொழில் செய்யும் 67 தொழில் பிரிவினரை குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் புரட்சித் தலைவியினுடைய புனித ஆட்சி சேர்த்துள்ளது. அந்தக் குறைந்தபட்ச ஊதியமும் கூட தினமும் இருபது ரூபாய்க்குக் குறையாமல் இருப்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பார்கள். ஆனால் ஏழையின் சொல்லையும் அம்பலம் ஏற்றிப் பார்க்கும் ஏழைப் பங்காளர் நம் இனிய தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அமைப்பு ரீதியாகச் செயல்படும் தொழிலாளர்கள்

மட்டுமின்றி, அமைப்பு ரீதியற்ற முறையில் தொழில் செய்யும் கட்டிடத் தொழிலாளர் உட்படப் பல சிறுதொழில் பிரிவினருக்கும் உதவிக்கரம் நீட்டிவருகிறார் நம் இதயதெய்வம் அவர்கள். கட்டிடத் தொழிலாளர் நலனுக்கென்று போடப்பட்ட மத்திய மாநில அரசுச் சட்டங்கள் போதிய பயனைத் தராத நிலையில், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதன் மூலம் அத்தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், காப்பு நிதி, உடல்நலக் குறைவின்போது நிவாரண நிதி, குழந்தைகள் காப்பகம், மகப்பேறு உதவி போன்ற பல பயன்தரும் திட்டங் களைச் செயல்படுத்த புரட்சித்தலைவி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6-20

கட்டடத் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது. விபத்திற்குள்ளாகி இறக்க நேரிட்டால் மாண்புமிகு முதலமைச் சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்கப்பட்டது. இன்றைய தினம் நம்முடைய கட்டடத் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டிருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அதனை ரூ. 20,000-ஆக உயர்த்தி அறிவித்து இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரி வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டடத் தொழிலாளர்களைப்போன்று கைத்தொழில்களை நம்பிப் பிழைக்கும் சிறு தொழிலாளர்களின் நலனைச் சிந்தை யில் கொண்டு சீரிய பல திட்டங்களை இன்று நம் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

'கைத்தொழில் வேலை செய்யும் ஏழை,
கண்ணீரை மாற்றுகின்ற நாளை,
நாமெல்லாம் சிந்தித்தால் நாடெல்லாம் முன்னேறும்,
மண்ணெல்லாம் பொன்னாகும், பொற்காலம் உண்டாகும்'

என்று புரட்சித்தலைவர் அன்று எதிர்பார்த்த பொற்காலத்தை இன்று படைத்துக் கொண்டிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நாட்டில் வளமைக்கும் செழுமைக்கும் காரணமாக இருப்பவர்கள் அந்நாட்டுத் தொழிலாளர்கள். அவர்கள் சிந்தும் வியர்வைதான் பல அற்புதங்களாகப் பரிணமிக்கின்றன. ஒவ்வொரு புதுமைப் படைப்பிற்குப் பின்னும் பல தொழி லாளர்களின் உன்னத உழைப்பு மறைந்திருக்கும். இந்தச் சமுதாயம் என்ற அழகிய மாளிகைக்கு அடிக்கற்களாக அஸ்தி வாரமாக இருப்பவர்களே தொழிலாளர்கள்தான். உலக

அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பலரும் பார்த்து பாராட்டுகிறார்கள் ஷாஜகான் தன் மனைவியின்மீது கொண்டிருந்த மாறாக் காதலைப் பாராட்டுகின்றனர் ஆனால் சோவியத் நாட்டு அதிபர் குருச்சேவ் வேறுவிதமாகக் கூறினார். ‘எனக்கு இந்த மாளிகையைப் பார்க்கும்போது ஷாஜகானின் காதல் தெரியவில்லை எத்தனை தொழிலாளர்கள் இதை உருவாக்க இரத்தம் சிந்தினார்கள். அவர்கள் உழைப்பை எண்ணிப் பார்க்கிறேன்’ என்று கூறினார். அந்த இனிய இதயம் நம்முடைய தங்கத் தலைவிக்கு இருப்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நலம் பேணும் தூய அரசாக இந்த அரசு திகழ்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான ‘தொகுதி தனிநபர் விபத்து ஆயுள் சட்டுறுதி திட்டம்’ என்ற அற்புதத் திட்டத்தையும் புரட்சித்தலைவியின் அரசு இன்று தீட்டி செயல்படுத்தி வருகிறது. 1—7—1992 முதல் இந்தத் திட்டத்தின் கீழ் பட்டாசுத் தொழிலாளர்களுக்கு மட்டும் உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகை ரூ 50,000-க்கு ஒரு தொழிலாளருக்கு ரூ 20 வீதம் சந்தாத் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு காப்பீட்டு ஆவணம் வழங்கப்பட்டுள்ளது இத்தகைய ஒரு நல்ல திட்டத்தை நாம் செயல்படுத்தி வருவதால்தான் சிவகாசித் தீப்பெட்டித் தொழிற்சாலை தீ விபத்தில் 39 உயிர்கள் பலியானபோது அவர்களின் குடும்பங்களுக்கு உதவிட முடிந்தது. தொழில் செய்து சோறு போடப்பட்டவர்கள் இறந்து விட்டார்களே என்று ஏங்கி அழுதுகொண்டிருந்த அந்த 39 குடும்பங்களும் இன்று கவலை மறந்து. கண்ணீர் துடைத்து அவர்கள் மனங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் உகந்தான திட்டமாக இத்திட்டம் இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறது.

‘இருப்பவர் உள்ளம் திறந்திடுமா ?
ஏழ்மையும். வறுமையும் பறந்திடுமா ?
அழுபவர் சிரிக்கும் நாள் வருமா ?

என்று ஆதங்கத்துடன் அன்று கேட்டது இன்று வந்துவிட்டது அந்தநாள் என்பதை இன்று நிரூபித்துக் காட்டிவிட்டார் நம் வரலாற்று நாயகி. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சர், நேற்று பதில் அளித்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களுக்கும் ஏதாவது போட்டி வைத்துகொண்டிருக்கிறீர்களா? ஏனென்றால் நீங்களும் அவரைப் பார்த்துக்கொண்டு கவிதை பாடுகிறீர்கள். அதனால் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை உதாரணங்கள் தான். கவிதைகள் அல்ல,

"அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்—அது ஆணவச் சிரிப்பு
இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ ஆனந்தச் சிரிப்பு"

என்று சொல்லி அழுபவர் சிரிக்கும் நாளை உருவாக்கி உள்ளார் நம் தங்கத் தலைவி. தொழிலாளர்களின் வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சீரிய திட்டம் இது என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

'ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் இந்த சிறிய பிள்ளைதான் நாடு காக்கும் தலைவராக நாளை உயரப்போகிறான்' என்று பள்ளிச் சிறுவர்களைப் பார்த்துப் பாடினார் பாவேந்தர். அத்தகைய பள்ளி செல்லவேண்டிய சிறுபிள்ளைகளைப் பட்டாசுத் தொழிற்சாலைக்கும், தீப்பெட்டித் தொழிற்சாலைக்கும் அனுப்பி, அவர்களது எதிர்காலத்தை இருளாக்கி விடக்கூடாது என்று எண்ணிய நம் இதயதெய்வம் அவர்கள், 5 ஆண்டுகளுக்குள் குழந்தைத் தொழிலாளர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அவர்களது வாக்கைச் செயல்படுத்துவதற்காக சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்தியத் துணைக் கண்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களை நீக்குவது குறித்து மனித நேயமிக்க மக்கள் தலைவியின் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் தான் முதன்மையானது (மேசையைத் தட்டும் ஒலி) என்று 'யூனிசப்' நிறுவனம் நம் தங்கத் தலைவியின் சேவையைப் பாராட்டி கடிதம் எழுதியுள்ளது.

பிற்பகல் 6-25

மங்கையர்க்கரசியாக, மாதர்குல மாணிக்கமாக விளங்கிக் கொண்டிருக்கும் நம் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சிக் காலம் பெண் குலத்திற்கே பெருமை சேர்க்கும் காலமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பூம்புகார்க் கண்ணகியைப் போற்றிப் பாட வந்த இளங்கோவடிகள், 'ஒரு மாமணியாய் உலகில் தோன்றிய திருமாமணி' என்று நெஞ்சம் நெகிழ்ந்து பாராட்டினார். இளங்கோவடிகள் இன்று இருந்திருந்தால், நம் தங்கத் தலைவியையும் அதே வைர வரிகளால் இன்று வாழ்த்தி இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் பல்வேறு துறைகளிலும் பெண்கள் சிறப்பிடம் பெற்று வருகிறார்கள். தொழில் துறையிலும் அவர்களுக்குரிய சிறப்பிடங்கள் தரப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது தெரிந்தால் உடனே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் குறிப்பிட்ட 10 பீடி உற்பத்தித் தொழிற்சாலைகள் சம்பந்தமாகக் கணக்கெடுப்பு நடத்தியதில் அங்குள்ள 54,990 தொழிலாளர்களில் 32,135 பேர் பெண்கள் என்பது தெரிய வந்தது. ஆனால், அப்பெண்கள் பெயரிலேயே பாஸ் புக் வழங்கப்பட்டால், அவர்களுக்குரிய சில சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதால், அப்பெண்கள் பேரில் இருக்க வேண்டிய பாஸ் புக் ஆண்கள் பேரில் இருப்பது தெரிய வந்தது. மைய அரசின் உத்தரவின் பெயரில் வழங்கப் பட்ட பாஸ் புக்கில் உள்ள குறையைக் கண்டுபிடித்த பெருமை தமிழக அரசினுடைய தொழிலாளர் நலத்துறையைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அநீதியைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆலைகள், தொழிற்சாலைகள் மூலமாக நாட்டிற்குப் பலவிதத்திலும் நலம் பயக்கும் தொழிலாளர்கள் தங்குவதற்கான வசதியான வீடுகளைக் கட்டித் தருவதற்கான திட்டத்தையும் அரசு இன்று செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

'உழைப்பவன் வாழ்வோ வீதியிலே, உறங்குவதோ நடை பாதையிலே, இரக்கம் காட்டத்தான் நாதியிலே' என்றிருந்த நிலை மாறி, இன்று உழைக்கும் மக்கள் மகிழ்ச்சியுடன் தங்கி வாழ ஏற்ற வீடுகளைக் கட்டித் தரும் இனிய திட்டத்தையும் இன்று நம் புரட்சித் தலைவியினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும ஒலி)

நலிந்த பிரிவினரான பீடித் தொழிலாளர்களுககு வீடுகட்ட ஆகும் செலவில் 5 விழுக்காடு அலலது உயர்ந்தபட்சமாக ரூ.5 ஆயிரம் உதவித் தொகையாக ஒவ்வொரு வீட்டுக்கும் இன்று வழங்கப்படுகிறது. பீடித் தொழிலாளர்களின் நலன் கருதி உதவி ஆணையர் அலுவலகம ஒன்றை சென்னையில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுடைய பணி தற்காலிகமாக ஆகிவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் பணியை நிரந்தரமாக்கும திட்டமும் செயல்படுத்தபபட்டு வருகிறது. 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து ஒருவர் பணி செய்திருந்தால் அவர் பணி நிரந்தரமாக்கப்படும. இத் திட்டத்தின் அடிப்படையில் இதுவரை 9,638 தொழிற்சாலை களில் 27,282 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள்.

தொழிலாளர்களின் நலன் கருதி அமைக்கபபட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாகத் தொழிலாளர் நல நிதிககு ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும், தொழில் அதிபர்கள் ரூ. 4-ம், அரசு ரூ. 2-ம், தொழிலாளர் ஒவ்வொரு வரும் ரூ. 2-ம், சந்தாத் தொகையாகச் செலுத்தி வருகின்றனர். இத்தொகையை முறையே ரூ. 6, ரூ. 3, ரூ. 3, என உயர்த்த

இவ்வாரியம் தீர்மானம் நிறைவேற்றி, அதற்காக 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலன் நிதிச் சட்டத்தைத் திருத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

தொழிலாளர்கள் வாழ்வு பலவிதத்திலும் சிறப்படைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கான டாக்டர் புரட்சித் தலைவி தொழிலாளர் நல நிதியும் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் தோன்றாத் துணையாக ஏழை, எளியவர்க்கு இரங்கும் கருணை மனம் கொண்டவராக விளங்குபவர் நம் காவல் தெய்வம் அவர்கள்

'ஊருக்கு உழைச்சாலே, ஏழை உரிமையை மதிச்சாலே பெருமைகள் தேடி வரும், தானே பதவிகள் நாடிவரும்' என்ற போதனைக்கு ஏற்ப ஏழை உரிமையை (மேசையைத் தட்டும் ஒலி) மதித்துப் போற்றும் இனிய மனம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பெயரிலேயே 'டாக்டர் புரட்சித் தலைவி தொழிலாளர் நறுவாழ்வு நிதி' என்று அந்நிதியை உருவாக்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் தொழிலாளர் பலர் பயனடைவர்.

தன் உயிரைத் துச்சமாக மதித்து நாட்டுக்காக உழைக்கும் தொழிலாளர்கள் சிலநேரம் எதிர்பாராத விபத்துக்கு ஆளாகி விடுவதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பயிற்சி தரும் நோக்குடன் பணிப் பயிற்சி நிலையம் ஒன்றையும் சிவகாசியில் நடத்தி வருகிறோம்.

இந்த அரிய பயன்களைப் பெறும் தொழிலாளர்களும் தாங்கள் செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதி உழைத்தால் நிச்சயம் நாடும் வீடும் நலம் பெறும்.

'செய்யும் தொழிலே தெய்வம் அதில்
திறமைதான் நமக்குச் செல்வம்
கையும் காலுமே உதவி கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி'

என்ற தாரக மந்திரம் தொழிலாளர் நெஞ்சங்களில் எதிரொலிக்க வேண்டும் என்பதே புரட்சித் தலைவி அரசின் விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி)

1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியுடன் முடிந்த ஆண்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் மொத்த விண்ணப்பதாரர்கள் 37,29,239 பேர்கள் ஆவர், இவர்களில் ஆண்கள் 26,07,555 பேர்; பெண்கள் 11,21,684 பேர்.

1993 ஏப்ரல் 23] [திரு. சே. ரகுபதி]

வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக புரட்சித் தலைவியினுடைய அரசு வியத்தகு சாதனைகளைப் படைத்துள்ளது. ஒவ்வொரு மாநிலமும் வேலைவாய்ப்பில் 3 விழுக்காடு உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்கவேண்டும் என்பது மைய அரசின் இலக்கு.

பிற்பகல் 6-30

ஊனமுற்றோர்களுக்காக உள்ளம் இரங்கி உதவும் இரக்க குணம் கொண்ட நம் இதய தெய்வத்தின் இனிய ஆட்சியில் மைய அரசின் இலக்கையும் மிஞ்சும் விதத்தில் ஊனமுற்றோர்களுக்கு 5 விழுக்காடு வேலை வாய்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி) வேலை வாய்ப்புத் துறையில் நாம் வழங்கியிருக்கிறோம். ஊனமுற்றோர் 1292 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கி தரப்பட்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்மையான சாதனையாக நாம் செய்து காட்டிய இப்பணியைப் பாராட்டி மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் கேடயம் ஒன்றையும் கடந்த 21—3—1993ல் வழங்கியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களின் சீரிய நிர்வாகத் திறனுக்குக் கிடைத்த சிறந்த அங்கீகாரமாக இதை நாம் எண்ணி மகிழ்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). ''வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்'' என்றார் ஏசுபிரான். வறுமையினாலோ உடல் ஊனத்தினாலோ வருத்தப்படுபவர் யாராக இருந்தாலும் அவர்கள் வருத்தத்தைப் போக்கி இதயத்திற்கு இதம் அளிக்கும் இனிய இரட்சகராக இன்று விளங்கிக்கொண்டிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியிலிருக்கும்போது இயற்கை எய்தும் அரசு ஊழியர்களுடைய குடும்பங்கள் வறுமையில் வாடுமென்றால் அத்துயர்போக்கும் தூய நோக்குடன் இயற்கை எய்தியவரின் வாரிசுதாரருக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக 500 கூடுதல் பணியிடங்கள் கருணை உள்ளம் கொண்ட நம் தங்கத் தலைவியால் இந்த ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 'ஏழைகளாகக் பிறந்தவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் பரலோக ராஜ்ஜியம் அவர்களுக்குரியது' என்று பைபிளில் கூறப்பட்டுள்ளது. ''ஏழைகளாகப் பிறந்தவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் நம் புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில் பூலோக ராஜ்ஜியம் அவர்களுக்குரியது, (மேசையைத் தட்டும் ஒலி) என்று எண்ணும் அளவிற்கு ஏழைஎளியவர்க்கு இரங்கும் கருணைத் தெய்வமாக நம்முடைய தங்கத் தலைவி அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

(திரு. சே. ரகுபதி) [1993 ஏப்ரல் 23

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பணியை எளிமைப் படுத்துவதுடன் துரிதமாகவும் நடக்க ஏற்பாடு செய்யும் நோக்குடன் சென்னை மற்றும் சில நகரங்களில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. படிப்படியாக எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங் களுக்கும் இம்முறை விரிவுபடுத்தப்படும்.

சிறு தொழில்களை மேலும் ஊக்குவிக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் சென்னை மாநகரில் ஒரு புதிய முயற்சி யையும் இந்த ஆண்டு முதல் மேற்கொள்ளவிருக்கிறோம். இதுவரையில் செயல்பாட்டில் இல்லாத இரண்டு சக்கர ஊர்தியினையும் டாக்ஸியாகப் பயன்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டி, அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட் டுள்ளது. முதலில் 100 பேருக்கு வழங்கப்படவிருக்கும் இதற்கான உரிமத்தில் 10 பேர் பெண்களாக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சம்பராசுரனை எதிர்த்து தசரதன் நடத்திய போரில் கைகேயி தேரை ஓட்டியதாகப் படித்திருக்கிறோம். இப்போது பல பெண்கள் காரை ஓட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்றைக்கு பேருந்தையும்கூட பெண்கள் ஓட்டு கிறார்கள். இனி இரண்டு சக்கர டாக்சியையும் ஓட்டப் போகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). நம் இதய தெய்வத்தின் இனிய ஆட்சியில் பெண்ணினம் பெற்றுவரும் பெருமைகளை எண்ணி நாம் பூரிப்படைகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

கடல்நீர் உப்புக் கரிப்பது ஏன் என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று ஒரு அரிய கருத்தை வெளியிட்டார்கள். பிழைக்க வழியின்றிப் பிறநாடு சென்று அங்கும் அல்லற்பட்டுத் திரும்பும் தமிழர்கள் சிந்திய வேதனைக் கண்ணீர்க் கடலில் கலப்பதால்தான் கடல் நீர் உப்புக் கரிக்கிறது என்று அண்ணா அவர்கள் அன்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இன்று உயிருடன் இருந்திருந்தால், இன்று தமிழர்கள் சிந்தும் ஆனந்தக் கண்ணீர்தான் அதற்குக் காரணம் என்று கூறி இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் இன்று நம் புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில் தமிழகத்திலே வாழ்பவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதோடு, அயல்நாடுகளுக்கு வேலைவாய்ப் பிற்காகச் செல்பவர்கள் அங்கு தம் தொழில் திறமையால் அற்புதங்கள் நிகழ்த்திப் பெரும் பொருளையும் நம் நாட்டிற்கு ஈட்டி வருகிறார்கள். அயல் நாட்டிற்கு வேலை வாய்ப்பிற் காக அனுப்பும் அலுவலகத்திலும் முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் சென்ற ஆண்டில் அதிகம் பேர் அனுப்பப்பட் டுள்ளனர். அந்த நிறுவனமும் கூட முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டி, சென்ற ஆண்டில்தான் முதன் முறையாக இலாபம் சம்பாதித்துள்ளது.

1993 ஏப்ரல் 23] (திரு. சே. ரகுபதி)

திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணங்கச் செய்தல் வேண்டும் என்றார் மகாகவி பாரதி. நம் நாட்டவரின் தொழில் திறமையை இன்று வெளிநாட்டவரும் வியந்து பாராட்டுகின்றனர். அதற்கு நல்லதோர் வாய்ப்பினை 'அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்' அமைத்துத் தருகிறது. வெளிநாடு செல்லவேண்டு என்ற ஆசையால் வீணான பல முயற்சிகளில் ஈட்டுபட்டு இடைத்தரகர்களிடம் மக்கள் ஏமாறும் நிலைமாறி முறையான வழிகளில் அவர்களை அனுப்பி வைக்கும் இந்நிறுவனம், நம்பிக்கை நட்சத்திரமாக இன்று பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

புரட்சித் தலைவியின் நல்லாட்சியில் நட்டத்தில் இயங்கிய நிறுவனங்களும் கூட இலாபத்தைக் காணும் என்பதற்கு இதுவே ஒரு நல்ல உதாரணம் என்று குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு தொழில் அமைதிக்கும் தொழில் உறவுக்கும் எவ்வாறு முக்கியத்துவத்தை கொடுத்து செயல்படுகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. தற்போது தொழில் தகராறு சட்டத்தின்படி தொழிற் தகராறுகளை கண்டுபிடித்து அவற்றை தீர்ப்பதற்கு உரிய வழிவகைகள் உள்ளன. தொழிலாளர்களுடைய பொது கோரிக்கைகள் சம்பளம் வழங்குவதின்மையும், ஊதியப்படி, போனஸ், ஊக்கத் தொகை போன்ற சலுகைகளுக்கு தனித்தனியாக தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களும் தொழில் ரீதியாகவும் தங்களுடைய கோரிக்கைகளை எழுப்புகிறார்கள்.

பிற்பகல் 6-35

அக்கோரிக்கைகளை தொழிலாளர் துறையில் உள்ள சமரச அலுவலர்கள் மூலமாக அப்பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இயலாத நிலையில் இறுதியாக தொழிலாளர் ஆணையரின் நிலையில் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இவ்வாறு பல நிலைகளில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு விவேகமாகவும், விரைவாகவும் பிரச்சினைகளை அணுகிச் செயல்படுவதால் தொழிலாளர்களுடைய பொது கோரிக்கைகளான சம்பள மறு நிர்ணயம், ஊதியபடி, போனஸ், ஊக்கத்தொகை போன்ற பல சலுகைகளை உடனடியாக பெறவேண்டி இவ்வாண்டு முதல் தமிழக வரலாற்றிலேயே முதன் முதலாக தொழில் உறவுக் குழு செயல்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இத்தொழில் உறவுக் குழு தொழிலாளர் ஆணையரின் தலைமையில் நேரடியாக இயங்கும். இக்குழுவில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள். இத்தொழில் உறவுக் குழுக்கள் மிக அதிக அளவில் தொழிலாளர்கள் உள்ளதும், மிக முக்கியமானதுமான பஞ்சாலைத் தொழில், தோட்டத் தொழில், பீடித் தொழில் போன்ற தொழில்களுக்கும் மற்றும் பிரச்சினைக்குரிய ஒவ்வொரு தொழிலுக்கும் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றோம். தொழிற்சாலைகள் சட்டம் 1948ன்படி பல தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய நலனுக்காக இயற்றப்பட்ட நலத்திட்டங்களை மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் இரு தொழிற்சாலை களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தங்கப் பதக்கம் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தத் தங்கப் பதக்கங்கள் மாநில 'சிரம்வீர்' பரிசுகள் வழங்கப்படும் நிகழ்ச்சியின்போது சேர்த்து வழங்கப்படும். அதேபோல கடலூரில் உள்ள பெண்டாஸியா கெமிகல்ஸ் நிறுவனத்தில் கடந்த 15—8—1992 முதல் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்று வந்தது. 83 தொழிலாளர்கள் அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருந்தனர். அங்கே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று 26-ந் தேதி முதல் அந்த தொழிற்சாலை இயங்கப்பட இருக்கிறது என்பதையும் இங்கே நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் எல்லாம் வெட்டியாக அந்தத் தீர்மானங்களை விட்டுவிட்டார்கள். யாரும் இங்கு வரவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டு அடியார்களை வாழவைக்கும் அருட்பேராற்றலைப் போல் விசுவாசிகளை வாழவைக்கும் வித்தகத் தலைவியே (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)

'நன்றி மறவாத நல்ல மனம் போதும்
என்றும் அதுவே என் மூலதனமாகும்'

என்பதையே தாரக மந்திரமாய்க் கொண்டு (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் திருவடியைத் தொடரும் நான்.

'புழுவாய்ப் பிறக்கினும், புரட்சித் தலைவியே, உங்கள் பொன்னடி என் மனத்தை என்றும் வழுவாதிருக்கும் வரம்வேண்டி

செந்தமிழே ! என் உயிர்த் தலைவியே! நறுபதேனே—என்
செயலினை, மூச்சினை உனக்களித்தேனே !
நைந்தாயெனில் நைந்து போகும் என் வாழ்வு ?
நன்னிலை உனக்கெனில் எனக்கும்தானே !

(பலத்த மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்த ராசு. விளக்கம் கேட்பதாக இருந்தால் அதே தொனியில் நீங்களும் கேட்க முடியுமானால் கேட்டுப் பாருங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : பேரவைத் தலைவர் அவர்களே, 'கடவுளெனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி என்று நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய வரிகளுக்கு ஏற்ப 58 வயதான பின்னால் தொழிற்சாலைகளிலே இருந்து ஓய்வுபெறும் தொழிலாளர்கள் உடலில் ஏற்படும் டி.பி., கேன்ஸர், ஆஸ்துமா போன்ற நோயுடன் வீட்டிற்குச் செல்லும்போது அந்தத் தொழிலாளர் களின் உடல் நிலையைப் பரிசீலனை செய்து தொழிலாளியின் நோயின் தன்மைக்கேற்ப நோயைக் குணப்படுத்த அந்த தொழிற்சாலையின் அதிபரிடம் பொறுப்பேற்கும் சட்டம் கொண்டு வர அமைச்சர் அவர்கள், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், தொழிலாளர்களுடைய தாயாக இருக்கின்ற அந்த தங்கத் தலைவியின் ஆட்சியில் இந்தச் சட்டம் கொண்டு வர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இதற்குப் பதில் கூறி விட்டேன். தொழிலாளர்கள் பணியிலே இருக்கும்போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களை சோதனை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அப்போது அவர்கள் எந்த நோய்வாய்ப் பட்டிருந்தாலும் அதற்கான நிவாரணத்தை அல்லது வைத்திய சிகிச்சையை அந்த நிர்வாகத்திலிருந்து நாம் பெற இயலும். ஒரு தொழிலாளி தன்னுடைய பணி முடிந்து செல்லுகின்றபோது, ஓய்வு பெறுகின்றபோது அவனுக்கு என்னென்ன வியாதிகள் இருக்கின்றன என்று பரிசோதித்துப் பார்த்து அதன் பிறகு அவரை பணியிலிருந்து ஓய்வுபெறச் சொல்ல நாம் தனியார் களை கட்டாயப்படுத்த முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு அவர்கள் தங்கள் பணியிலே இருக்கும் போது எந்த வியாதிகள் அவர்களுக்கு அந்தப் பணியினால் வந்தால், தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலால் வந்தால் நிச்சயமாக அதற்கான நிவாரணங்களைப் பெறுவதற்கு சட்டத் தில் இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்சிராப்பள்ளி நகரத்தில் தான் தமிழ்நாட்டிலேயே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பீடித் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்தார்கள். நன்றி. அதே நேரத்தில் திருச்சிராப்பள்ளியில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா? அதை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா பீடித் தொழிலாளர்களுக்கும் அந்தச் சலுகைகள் பொருந்தும் திருச்சியில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுக்கான நிலத்தை தேர்வு செய்து தந்தால் நிச்சயமாக அவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள புளியம்பட்டியில் இருக்கிற லட்சுமி மில் குரூப்பைச் சேர்ந்த விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் இருக்கிறது. இன்றைக்கு தொழிலாளர்கள் சாலை மறியல் போன்ற போராட்டங்களை எல்லாம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும், தொழிலாளர்களுடனும், அந்த நிர்வாகத்தினருடனும், பேச்சு வார்த்தை நடத்தியதில் நிர்வாகம் அந்தத் தொகையைத் தர ஒப்புக்கொண்டு, ஆனால் கோர்ட் உத்தரவுக்கு உடன்பட்டு என்ற ஒரு நிபந்தனையை விதித்து இருக்கின்ற காரணத்தால், அதை தொழிலாளர்கள் ஏற்க மறுத்து இப்போது அந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனினும் விரைவில் அந்த நீதிமன்ற தீர்ப்பு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, வந்த உடன் இந்தப் பிரச்சினை முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. ரவிச்சந்திரன்.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்களுக்கு தொழில் நெறி வழி காட்டும் ஆலோசனைகள் வழங்கவும், தொகுதியில் உள்ள பழங்குடியின மக்களை வேலையில் அமர்த்துவதற்கு ஏற்ற வேலை வாய்ப்பு நல்குவதற்கும் உதகமண்டலம் மற்றும் சங்கரா புரத்தில் பழங்குடியினருக்கு சிறப்பு தொழில் நெறி வழிக் காட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சைமலையில் பழங்குடியின ருக்கு சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால் அமைக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவே நாம் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிற வாய்ப்புகள் மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற வேலை வாய்ப்பு அலுவலகங்களை இதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; டாக்டர் வெ. புருஷோத் தமன் .

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கல் வெட்டி எடுக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகளிலும், பல்வேறு குவாரிகளிலும் அந்தப் பகுதியில் உள்ள லட்சக்கணக்கான மக்கள் வேலை செய் கிறார்கள். அவர்களுக்கு அந்த தொழில் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசுக்கு மாநில அரசு முன்மொழிய வேண்டு மென்று இருக்கிறது. இப்படிப்பட்ட மக்களுக்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்கள் என்ன பாதுகாப்பு வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதை அருகாமையில் உள்ள தொழிலாளர் நல அலுவலகங்கள் மூலமாக பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. மனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காலுக்கு செருப்பும் இல்லை. கால் வயிற்றுக்கு

உணவும் இல்லை, காசுக்கு உழைத்தோமடா தோழா, பலனற்றுப் போனோமடா' என்று கவி பாடிய அமரர் ஜீவா அவர்களை நினைவுகூர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் போக்குவரத்துக் கழகம் அவருடைய பெயரால் அமைக்கப்பட்டது. அந்தப் பெயரைச் சொல்லி கட்சி வளர்த்து இன்றைக்கு தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லுகிற அந்த மாபெரும் பிரதிநிதிகள் இந்த சபைக்கு வரவில்லை என்றாலும் கூட இன்றைக்கு இந்த ஆட்சிக் காலத்தில்தான்—தொழிலாளர்கள் பிரச்சினை என்பது, தொழில் தகராறு என்பது இல்லை என்பதை இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அதே போல் இன்றைக்கு பனியன் தொழிலாளர்கள் ஆண்டு ஆண்டாக போனஸ் பிரச்சினை, போராட்டம் என்று இருந்த அந்த சூழ்நிலையை மாற்றி இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச் சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான் 3 ஆண்டு காலத்திற்கு போனஸ் ஒப்பந்தம் போடப்பட்ட நல்ல நிலையில் தொழில் உறவுகள் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து அனைத்து தொழில் தகராறுகளும், போனஸ் பிரச்சினை களும் பொறுத்த வரையில் 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் போடப்படவேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்து அதை செயற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எல்லாம் நீண்ட கால ஒப்பந்தங்கள் போடப்படவேண்டுமென்று வற்புறுத்தி வரு கிறோம். எனவே, அதற்குரிய நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராம நாதன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள், உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்' என்று இன்றைக்கு ஒன்று கூடி சிந்து பாடிக்கொண்டிருக்கிற பல்வேறு கணக்கெடுப்புத் துறையில் பணியாற்றிய தற்காலிக பணியாளர் களை எல்லாம் ஊஸ்ட் செய்து இருக்கிறார்கள். 1971–1981 போன்ற ஆண்டுகளில் பணியாற்றிய பணியாளர்களை வேறு துறையில் எடுத்துக் கொண்டார்கள். அதைப்போல இன்றைக்கு தொழிலாளர் வர்க்கத்தினுடைய தலைவியாக விளங்குகின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களை ஏதேனும் துறையில் நுழைத்திடுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

பிற்பகல் 6–45

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசுத் துறைகளிலேகூட வேலைவாய்ப்புகள் குறைவாகத்தான் இருக்கின்றன. எனவே இதுகுறித்து வேலை வாய்ப்புத் துறையால் எதுவும் செய்ய இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை.

''தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 61,22,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 26—4—1993 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதேபோன்று இன்றையதினம் நீதிமன்றங்களிலே இருக்கின்ற நீதிமன்ற நடுவர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையான முறையிலே செய்வதற்கு அங்கேயிருக்கின்ற நீதிமன்றங்களில், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலே பெரும்பாலான நீதிமன்றங்களில் அங்கே டேபிள், சேர், அங்கேயிருக்கின்ற அக்காமடேஷன், சிட்டிங் வசதிகள் இல்லாத நிலையிருக்கின்ற காரணத்தினால், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் மன்னார்குடி நீதிமன்றத்தைப் பொறுத்த அளவில் அங்கே போர்வெல் இருக்கிறது. ஆனால் அதற்கு இருக்கின்ற பம்ப்செட் ரிப்பேர் ஆகி கிட்டதட்ட ஐந்தாண்டுக் காலமாகச் சொல்லியும் அது செப்பனிடப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அங்கே கழிப்பிட வசதிகள் இல்லாமல் மிகவும் பெருந்தொல்லையாக இருக்கிறது.

பிற்பகல் 12-50

ஆகவே, அதை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இன்றையதினம் தஞ்சை மாவட்டம் இரண்டாக—புரட்சித் தலைவி, ஒப்பற்ற தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாகப் பிரிக்கப்பட்டு, நாகை காயிதே மில்லத் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு, இன்றைய தினம் தஞ்சை, நாகை காயிதே மில்லத் என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 சப்-கோர்ட்டுகள்—சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன, நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சார்பு நீதிமன்றங்கள், அதாவது 'சப்-கோர்ட்டுகள்' இருக்கின்றன. ஒன்று மயிலாடுதுறையிலும் ஒன்று நாகைப்பட்டினத்திலும் இருக்கிறது. இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால் இன்றைய தினம் பிரிக்கப்பட்டிருக்கிற இரண்டு மாவட்டத்தில், தஞ்சை மாவட்டத்தை விட, நாகை காயிதே மில்லத் மாவட்டம் ஜனத்தொகை அடிப்படையிலும், நிதாகுதிநிலை அடிப்படையிலும், ஒன்றியங்கள் அடிப்படையிலும் அதிகப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

6. காவல்துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன், காவல்துறையினரால் தேடப்பட்டு வருவதாக எனக்கு (குறுக்கீடு) திரு. பி. வி. இராஜேந்திரன் உட்கார வேண்டும்; இந்த முறையில் அவர் நடக்கிறபோது. திரு. பி. வி. இராஜேந்திரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) என்னுடைய இருக்கை அருகே வந்து முறைகேடாக நடந்து கொள்வது முறையல்ல. நீங்கள் அவைக்கு வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

காவல் துறையினரால் தேடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு வரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவைக்கு வந்துள்ளது குறித்து.

[பேரவைத் தலைவர்]

திரு. பி. வி. இராஜேந்திரன், காவல் துறையினரால் தேடப்பட்டு வருவதாக நேற்றையதினம் காவல்துறை ஆணையாளரிடமிருந்து எனக்குத் தகவல் தரப்பட்டு இருந்ததை நான் பேரவைக்கு அறிவித்திருந்தேன். பல்வேறு முறைகளில் அவர் தேடப்படுவதாகவும், அவர் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார்கள். காவல்துறையினர் ஒருவரைத் தேடுகிறார்கள் என்று சொன்னால், ஒரு நல்ல குடிமகன்---The best citizen-- என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், 'தேடுகிறார்கள்' என்று தெரிந்தவுடன், காவல் நிலையத்திற்குச் செல்வதுதான் நாட்டின் நல்ல குடிமகன் என்பதற்கு அர்த்தமாகும். (மேஜையைத் தட்டும் ஒலி) அவர் அதை விடுத்து, தன்னைத் தேடவில்லை என்றும் கூற முடியாது. உயர்நீதி மன்றத்தில் முன் ஜாமீன் கேட்டு மனுச் செய்திருக்கிறார். இன்று காலை அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அந்தத் தகவலும் வந்திருக்கிறது. அதன் பின்னர் ஒரு நல்ல குடிமகன் எந்தக் காவல் நிலையத்திலேயிருந்து தேடினார்களோ அந்தக் காவல் நிலையத்திற்குச் செல்வதுதான் ஒரு நல்ல குடிமகனாக இருக்க முடியும். வேறு ஏதேனும் ஒரு வகையில், தனக்குப் பாதுகாப்புத் தேடுவதற்கு வேறு வேறு வழிமுறைகளைத் தேடுவது என்பது முறையல்ல. என்னுடைய இருக்கை அருகே வந்து அவர் முரண்பாடாகப் பேசிக்கொண்டிருந்ததும் முறைகேடான செயல் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர், காவல் துறையினரால் தேடப்பட்டுக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நல்ல குடிமகனாக அவர் நடந்து கொள்வது நல்லது.

5. மானியக் கோரிக்கைகள், 1993–94,

விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன், தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை–காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டத்தைவிட அளவிலே பெரியதாகவும், ஜனத்தொகை அதிகமாகக் கொண்ட மாவட்டமாகவும், தொகுதிகளை அதிகமாக உள்ளடக்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளதால், அதே நேரத்தில், ஒன்றியங்களும் தஞ்சை மாவட்டத்தைவிட அதிகமாக நாகை–காயிதே மில்லத் மாவட்டத்திலே அடங்கி இருக்கிற காரணத்தினாலும், தஞ்சைக்கு 3 சப்–கோர்ட்டுகள் இருக்கிறதைப் போல, நாகை–காயிதே மில்லத் மாவட்டத்திலும் 3 சப்–கோர்ட்டுகள் அமைய வேண்டும்; அப்படி மூன்றாவதாக

[திரு. கு. சீனிவாசன்]

அமைக்கின்ற சப்–கோர்ட், மன்னார்குடியிலே அமைக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை முறையாக அரசுக்கும், உயர்நீதிமன்றத்திற்கும் நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.

6. காவல் துறையினரால் தேடப்படுவதாகக்குறிப்பிடப்பட்டுவரும் உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன், அவைக்கு வந்துள்ளது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன் என்னிடத்திலே வந்து கேட்டது, உடனடியாக ஒரு தன்னிலை விளக்கம், தான் இப்போது செய்ய வேண்டுமென்று அவர் கேட்டார். அதற்குப்பேரவை விதிகளில், விதி 109–ல் இடம் இருக்கிறது; With the permission of the Spesker என்று இருக்கிறது. எந்த அளவுக்கு அதற்கு 'பெர்மிஷன்' கொடுக்க முடியும் என்று கேட்டால், “The Forum of the House should not. however, be used to make Personal Explanation to contradict or clarify Report not connected with the Proceedings of the House published in the Press பத்திரிகைகளிலேயும், வெளியிலேயும் வந்த சில செய்திகளை மறுப்பதற்காக அல்லது வேறுவிதமான விளக்கம் சொல்வதற்காக, Personal Explanation தான், தன்னிலை விளக்கம் பேரவையிலே தரவேண்டுமென்று கேட்கலாகாது என்று இருக்கிறது. அதனால் நான் அனுமதி மறுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலும், என்னோடு சிறிது நேரம் இந்த இடத்திலே வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். அதன்பிறகு உட்காரச் சொன்னேன். உட்காராமல் வெளியே போய் விட்டார். இதுதான் இப்போது பேரவையிலே நடந்த செய்தி.

பிற்பகல் 12–55

* திரு. கா. ப. பட்டாபிராமன் : Point of order. விதி 109–இல் கூட ஒரு வாதப் பிரதிவாதம் உள்ள பொருள்களைப் பற்றி இங்கே எழுப்பக் கூடாது என்று விளக்கமாக இருக்கிறது. The matter should not be a debatable one இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே வாத, பிரதிவாதங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அந்தத் துறையிலே கூட விதி 109 மிகத் தெளிவாகவே இருக்கிறதென்பதை அவையினுடைய நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு மேலும் “Personal Explanation is made before the main business of the day is taken up, unless the member in question was permitted by the.

Speaker" என்றே இருக்கிறது. நம்முடைய பேரவையினுடைய நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னர் தலைவருடைய அனுமதி கிடைத்தால்தான் தன்னிலை விளக்கம் தரலாம் என்று இருக்கிறது. அந்த வகையிலேயும் நான் அவரை அனுமதிக்கவில்லை. அவர் இருக்கையிலே போய் உட்காருமாறு சொன்னேன் கொஞ்ச தூரம் போய்விட்டு அப்படியே போய் விட்டார். எந்த அளவுக்கு உறுப்பினர் விதிகளை மதிக்கிற, சட்டத்தை மதிக்கிற பிரஜை என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். திரு. கு. சீனிவாசன் தொடரலாம்.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94.

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன காரணங்களினால் மன்னார்குடி தொகுதியில் ஒரு சப்—கோர்ட் அமைப்பதற்கான நடவடிக்கையினை மாண்புமிகு சட்டத் துறை பொறுப்பு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இங்கே என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் மன்னார்குடி தொகுதியில் ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வேண்டுமென்று நாங்கள் வைத்த கோரிக்கையை உயர் நீதி மன்றத்திற்கு நாங்கள் அனுப்பி இருக்கும் மனுவின் பேரில் உயர் நீதி மன்றத்திலே இருந்து அரசுக்கு, அங்கே ஒரு கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கலாம் என்ற பரிந்துரையை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிந்துரையை ஏற்று, எங்கள் மன்னார்குடி நகரத்தில் கூடுதல் குற்றவியல் நடுவர் நீதி மன்றம் அமைத்துத் தர வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

அதே நேரத்தில் இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற வேளையில், எனக்கு இன்றையதினம் தான் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்ற காரணத்தினால் கல்வித் துறையிலும் என்னுடைய கோரிக்கைளைச் சொல்லி அவர் முன் வைக்க விரும்புகின்றேன்.

மன்னார்குடி தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கட்டிட வசதி இல்லாமல் கீற்றுக் கொட்டகையிலே 5, 6 ஆண்டு காலத்திற்கு முன்பு தொடங்கப் பட்டு, நடை பெற்று வருகின்றது

1993 ஏப்ரல் 23] [திரு. செ. கு. தமிழரசன்]

பெருந்தகை வள்ளுவர் அவர்கள் சொல்லும் போது—

'' இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் ''

என்றார்.

எனவே, இந்த நிலையை நாம் மாற்றுவதற்கு சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். ஏராளமான சலுகைகளைத் தருகிறோம். ஆனாலும் கூட.. (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன். திருவிழா, கோவில் போன்ற இடங்களில் பார்க்கிற போது வரிசையாக பிச்சைக்காரர்கள் உட்கார்ந்து இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, அவர்களை எப்படியாவது, முதியோர் நிலையங்களுக்கோ, தொழு நோய் நிலையங்களுக்கோ, மறு வாழ்வு நிலையங்களுக்கோ கட்டாயப்படுத்தியாவது கொண்டு போய் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைக் கடுமையாக தடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இறுதியாக ஒரே ஒரு வரியில் சுருக்கமாகச் சொல்கிறேன். எந்தச் சட்டமானாலும் அவை மக்களுக்காக இருப்பவை. மக்களுக்காகத் தான் சட்டம். சட்டங்களுக்காக மக்கள் இல்லை என்ற நிலையில் சட்டங்களை நாம் கொண்டு போக வேண்டும். அதுதான் சட்டத்தின் வெற்றியாக இருக்க முடியும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.

7. அறிவிப்புகள்.

உறுப்பினர் திரு. பி.வீ. இராஜேந்திரன் கைது செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: சென்னை நகர போலீஸ் கமிஷனரிடமிருந்து பேரவை உறுப்பினர் திரு. பி. வீ. ராஜேந்திரன் இன்று 1-00 மணியளவில் கோட்டையின் முன்னர் கைது செய்யப்பட்டதாகத் தகவல் எனக்கு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

பிற்பகல் 1-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறை நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியின் பெருமைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே சட்டத்தினுடைய ஆட்சி நடைபெற வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்கிற அடிப்படையிலேதான் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே மற்ற சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அமுல் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சட்டத்தினுடைய ஆட்சி எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம், நேற்றையதினம் கூட காவல்துறை மானியத்திற்குப் பதில் அளித்துப் பேசிய நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு நிலைமைகளை எடுத்துச்சொல்லி, விளக்கங்களைத் தந்து, சட்டத்தினுடைய ஆட்சி, தன்மை பற்றி விளக்கிச் சொன்னார்கள்.

அங்கே சட்டமன்றத்திலே கூட சட்ட விதிகளை எல்லாம் நாம் எப்படி பின்பற்றி வருகிறோம் என்பதை இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நாம் பார்த்து வருகிறோம். சாதாரணமாக இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோது, ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டுவதும், ஆளும் கட்சியை குறை சொல்லுவதுமாகத் தான் நாம் பார்த்து வந்திருக்கிறோம். ஆனால், இன்றைய தினம் பத்திரிக்கையை எடுத்து நாம் பார்க்கிறபோது தினமணி பத்திரிகையிலேயும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையிலேயும், உறிந்து பத்திரிக்கையிலேயும், சட்டசபையில் நடந்த நிகழ்ச்சிகளைக்குறித்து தலையங்கங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. அதிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அரசியல் சட்டத்தையும், சட்டசபை விதிகளையும் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த தலையங்கங்களிலேவற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, சட்டத்தினுடைய ஆட்சி, இங்கே விதிகள் பின்பற்றப் படுகின்றன என்பதற்கு இதைவிட வேறு ஒரு எடுத்துக்காட்டை

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) முதல்வரின் ஆலயப் பாதுகாப்பு நிதிக்கு நிதி வழங்கிய உறுப்பினர்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு இன்னொரு முக்கிய அறிவிப்பு. நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலயப் பாதுகாப்பு நிதிக்குப் பல்வேறு உறுப்பினர்கள் மனமுவந்து நிதி வழங்கிய சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இன்றைக்கு மிகக் குறிப்பிட்ட ஒரு அம்சம், தமிழகத்தின் சமயப் பொறையுடைமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிற வகையில் கோயில் நிதிக்கு என்று, திருமதி பிட்ரிக்ஸ் டி: சோசா அவர்களும், டாக்டர் ஜெ. பரந்தாமன் அவர்களும், திரு. கி. தருமலிங்கம் அவர்களும் முறையே ரூ. 6,250, ரூ. 6,250, ரூ. 2,750 என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நிதி வழங்குமாறு என்னிடத்திலே வழங்கி இருக்கிறார்கள். அது இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்து சமயத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இத்தகைய நன்கொடை கொடுப்பதிலே எனக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், வேறு மதத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்து சமயத்தை இந்த அளவு மதித்து, இந்து சமய ஆலயங்கள், கோயில்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த நிதியினை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் என்னுடைய மகிழ்ச்சி பன்மடங்கு அதிகரிக்கிறது என்பதைத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றும், இன்றும் மட்டும் ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐம்பது ரூபாய் ஆகிறது மொத்தத் தொகையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் ஏகப்பட்ட உறுப்பினர்கள் கை தூக்கினீர்கள். இன்னும் 'செக்' வரமாட்டேன் என்கிறது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

1993 ஏப்ரல் 23] [திரு. ஆர். டி. அரங்கநாதன்]

மேலும் ஒரு கோரிக்கையாக, பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் அரசு மானியமாகக் கொடுக்கும் தொகையை உயர்த்தி கொடுத்து, அவர்கள் 1—/12 சென்ட் நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கும் வீடு கட்ட மானியமாக ரூ. 15 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று— வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று— இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5—20

7. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள் கிறேன். "Thiru P. V. Rajendran, M.L.A. who was arrested 15 day was released at 14-30 Hrs. on his own bail by the Police.'' காவல் துறையினரால் அவருடைய சொந்த ஜாமீனில் விடுதலை செய்து இருப்பதாகத் தகவல் அறிந்து சொல்கிறார்கள். திருமதி ரெ. சியாமளா.

5. மானியக் கோரிக்கைகள், 1993—94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''

என்ற உலகப் பொது மறையாம் திருக்குறளில் தெள்ளத் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்கணங்களையும் ஒருங்கே பெற்று நமது இதய தெய்வம், கழகத்தின் காவல்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

186. சென்னை, திருவாளர்கள் டான்-பாஸ்கோ பீட்டிடியூடேஸ் நிறுவனத்தால் வாங்கப்பெற்ற ஒரு டெம்போ டிரக்ஸ் என்ற மோட்டார் வாகனத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28—1—1993-ஆம் நாளிட்ட 27-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990)18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

187. எந்த உள்ளாட்சிப் பகுதிக்குள்ளும் இயக்கூர்திகள் நுழைவதற்கு வரி விகிதம் நிர்ணயம் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12—3—1993-ஆம் நாளிட்ட 82-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990)18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

188. நீலகிரி தொழுநோய் ஒழிப்பு திட்டத்தினால் வாங்கப் பெற்ற ஒரு மோட்டார் வாகனத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையில் 11—12—1992-ஆம் நாளிட்ட 429-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990)18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

189. 1983-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 20—4—1992-ஆம் நாளிட்ட 88-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

190. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10—9—1990-ஆம் நாளிட்ட 909-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

1993 ஏப்ரல் 23]

அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

191. 1991–92 ஆம் ஆண்டு அரசு ரப்பர் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1]1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

194. கோரிக்கை எண் 22—கால்நடை பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

195. கால்நடைப் பராமரிப்புத் துறையின் செயல் முறைத் திட்டம் 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

196. கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

197. கோரிக்கை எண் 14 தமிழ்நாட்டில் சிறைகள், மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் காப்பு முகாம்களின் நிருவாகம், குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

198. கோரிக்கை எண் 28—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ் ஆங்கிலம்).

199. வேளாண்மைத் துறையில்-உழவர் மேம்பாட்டுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு வழங்கும் உதவிகள்.

200. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தாவது அறிக்கை, 1992–93.

201. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினொன்றாவது அறிக்கை, 1992–93.

202. பொது நிறுவனங்கள் குழுவிள் நூற்றுப் பன்னிரெண்டாவது அறிக்கை, 1992–93.

203. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதின்மூன்றாவது அறிக்கை, 1992–93.

204. பொது நிறுனவங்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை, 1992–93.

205. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினைந்தாவது அறிக்கை, 1992–93.

1993 ஏப்ரல் 23]

அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

191. 1991–92 ஆம் ஆண்டு அரசு ரப்பர் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1]1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ் ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

194. கோரிக்கை எண் 22—கால்நடை பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

195. கால்நடைப் பராமரிப்புத் துறையின் செயல் முறைத் திட்டம் 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

196. கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

197. கோரிக்கை எண் 14 தமிழ்நாட்டில் சிறைகள், மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் காப்பு முகாம்களின் நிருவாகம், குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ், ஆங்கிலம்).

198. கோரிக்கை எண் 28—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993–94 (தமிழ் ஆங்கிலம்).

199. வேளாண்மைத் துறையில்-உழவர் மேம்பாட்டுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வழங்கும் உதவிகள்.

200. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தாவது அறிக்கை, 1992–93.

201. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினொன்றாவது அறிக்கை, 1992–93.

202. பொது நிறுவனங்கள் குழுவிள் நூற்றுப் பன்னிரெண்டாவது அறிக்கை, 1992–93.

203. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதின்மூன்றாவது அறிக்கை, 1992–93.

204. பொது நிறுனவங்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை, 1992–93.

205. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினைந்தாவது அறிக்கை, 1992–93.

[1993 ஏப்ரல் 23

206. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை. 1992–93.

207. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினேழாவது அறிக்கை, 1992–93.

208. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினெட்டாவது அறிக்கை, 1992–93.

209. மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1992–93

210. மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. 1992–93.

211. மனுக்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1992–93.

212. மனுக்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. 1992–93.

213. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபதாவது அறிக்கை. 1992–93.

214. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை, 1992–93.

215. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை, 1992–93.

216. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை, 1992–93.

217. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை, 1992–93.

218. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கை, 1992–93.

219. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்திரெண்டாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

220. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தி மூன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

221. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தி நான்காவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—I

(250 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

நீதி நிருவாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு

1. முன்னுரை :

செம்மையான நீதி நிருவாகம் என்பது எந்த ஒரு அரசுக்கும் தலையாய கடமை என்பது வெள்ளிடைமலை. நீதி நிருவாகத்தின் வாயிலாகத்தான், அரசு குற்ற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தி, குற்றவாளிகளை ஒறுத்து, நிரபராதியைப் பாதுகாத்து பொது ஒழுங்கமைதியைக் கட்டிக் காக்கிறது. நீதி நிருவாகம் பிரிக்க இயலாது ஒன்றோடு ஒன்றிணைந்த நான்கு கூறுகளைக் கொண்டு, அதாவது காவல் துறை, சட்ட வல்லுநர் துறை, நீதித் துறை, சிறைத் துறை என்னும் அமைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் குற்றங்களை ஆய்ந்து குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யும் பணியை காவல் துறையினரும், இக்குற்றங்கள் குறித்த வழக்குகளை சீரிய முறையில் நீதிமன்றங்களில் வழக்காடும் பணியை அரசு வழக்குரைஞர்களும், நிரபராதிகளைப் பாதுகாத்து குற்றவாளிகளை தண்டிக்கும் பணியை நீதிமன்றங்களும் செயலாற்றி வருகின்றன. இறுதியாக உள்ள சிறைத் துறை இத்தகைய குற்றவாளிகளைச் சிறையில் வைத்து தண்டனையை நிறைவேற்றுவதில் உறுதுணையாக உள்ளது.

இந்தியாவில் நீதி நிருவாக முறையும், சட்டங்களும், ஆங்கில சாக்சன் சட்ட விதிகளையும், நீதி வழங்கும் முறையையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதே சமயத்தில் அகிம்சை, சகிப்புத் தன்மை, மனித கண்ணியம், மனித உரிமைகளை மதித்தல் ஆகிய அடிப்படை நற்பண்புகள் இந்த அமைப்பின் ஊற்றுக் கண்களாக விளங்குகின்றன. அடிப்படை உரிமைகள், நாட்டின் கொள்கைகள் குறித்த நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகியவை அடங்கிய இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், நீதி நிருவாக முறைக்கும் சட்டங்களுக்கும் பின்னணியாக உள்ள நல்லெண்ணத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன.

நம்முடைய நீதி நிருவாக முறை உறுதியான கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்தபோதிலும், குறிப்பாக நம்முடைய குற்றவியல் நீதிமுறை இன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி வருகிறது. இந்நிலைக்கான பல்வேறு காரணங்களில் முக்கியமாக சுதந்திர நாட்டில் சுதந்திரம் மிக்க குடிமக்களாகத்

தங்களைக்கருதிக் கொண்டு, தங்களுடைய உரிமைகளைப் பெறுவதில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருந்து, கடமைகளைப் புறக்கணிக்கும் மனோபாவம் நமது இன்றைய சமுதாய அமைப்பில் மேலாங்கி உள்ளதேயாகும். மற்றொரு முக்கிய காரணம் நிதி வழங்குவதற்கென்று அமைப்பட்ட நிர்வாக அமைப்பு, எதிர்பாராத மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், புலன் விசாரணை செய்தல், வழக்காடுதல், நீதி வழங்குதல் ஆகியவைகளில் தற்பாதைய மாறுபட்ட செயலாற்றும் முறையினாலும் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி வருகிறது. எனினும் நீதி நிர்வாகம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதில் அதாவது சமூகப் பொருளாதார அரசியல் நீதி கிடைக்கச் செய்வதில் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது. தமிழகத்தில் நீதித் துறைக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல், தக்க அலுவலர்கள் நியமித்தல், இந்நீதிமன்றங்கள் சிறப்பாக செயலாற்றுவதற்கான சூழலை உண்டாக்குதல் ஆகியவைகள் ஒரு புறமும் அதற்கிணையாக நீதி மன்றங்களில் ஏற்பட்டுள்ள செயல் திறனை கூர்ந்து நோக்கும் பொழுது இவ்வினங்களின் முன்னேற்றம் கணிசமானதென்றே இயம்பலாம். நீதி நிர்வகத்தின் சுதந்திரத்தைக் காத்து அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கி அதன் வாயிலாக வழக்காடும் பொதுமக்களுக்கு எளிய முறையில் விரைவான தீர்வும் நிவாரணமும் கிடைக்கச் செய்வதில் தமிழ்நாடு அரசு எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

2. தமிழ்நாட்டில் நீதிமன்றங்களின் கட்டமைப்பு :

நீதிமன்றக் கட்டமைப்பு வருமாறு :

இந்திய உச்ச நீதிமன்றம், புதுடெல்லி—அகில இந்திய அளவில் தலைமை அமைப்பு.

உயர்நீதிமன்றம், சென்னை—மாநில அளவில் தலைமை அமைப்பு

உரிமையியல்.		குற்றவியல்.	
சென்னை மாநகரம்.	மாவட்டங்கள்.	சென்னை மாநகரம்.	மாவட்டங்கள்
(1)	(2)	(3)	(4)
மாநகர் உரிமையியல் நீதிமன்றங்கள்.	மாவட்ட நீதி மன்றங்கள்.	பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள்.	செஷன்ஸ் நீதிமன்றங்கள்
சிறு வழக்குகள் நீதி மன்றங்கள்.	சார்நிலை நீதிமன்றங்கள்.		நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள்.
	மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.		நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

இவற்றுடன் பல்வேறு சட்டங்களின் கீழ் பின்வரும் நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

1. நொடித்தவர், சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.

2. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

3. தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.

4. தொழில் நடுவர் மன்றம், சென்னை.

5. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை.

6. மனித உரிமைகள் பாதுகாப்பு தனி நீதிமன்றங்கள்.

7. பொருளாதாரக் குற்றங்கள் குறித்த தனி நீதிமன்றங்கள்.

8. ''தடா'' சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்.

உயர்நீதிமன்றம் நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள நீதிமன்ற எண்ணிக்கை விவரங்கள் மாவட்ட வாரியாக இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டில் தற்போதைய பல்வேறு நீதிமன்றங்களுக்கான சுருக்க விபரம் :

உயர்நீதிமன்றம், சென்னை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், சென்னை, உயர்நீதிமன்றம் மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 28 நீதிபதிகளைக் கொண்ட தலைமை நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சீரிய அமைப்பில், தீர்ப்பளிக்கப்படாமல் உள்ள வழக்குகளின் நிலுவையைக் குறைப்பதற்காக நீதிபதிகளின் எண்ணிக்கையை 28லிருந்து 32 ஆக உயர்த்துவதற்கு மைய அரசு இசைவளித்துள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகளிடையே பணிச்சுமையைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பு தலைமை நீதிபதி வசம் உள்ளது. இவர்களின் பணி நிபந்தனைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் (பணி நிபந்தனைகள்) சட்டத்திற்கு உட்பட்டவையாகும்.

அதிகாரவரம்பைப் பொறுத்தவரை, உயர்நீதிமன்றம் உரிமையியல் விவகாரங்களில் ரிட், அசல் தரப்பு வழக்குகளையும் உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகாரங்களின் மேல்முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. சென்னை மாநகரின்கண் எழும் ரூ. 1,00,000-க்கு

[1993 ஏப்ரல் 23

அதிகமான மதிப்புடைய அசல் தரப்பு உரிமையியல் வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. இவ்வுயர்நீதிமன்றம், தமிழ்நாடு மட்டுமல்லாது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்களின் மீதும்அதிகார வரம்புடையதாகும். பாண்டிச்சேரியில் இப்பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த செலவு, முதற்கண் மாநிலக் கருவூலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடம் இருந்து திரும்பப் பெறப்படுகிறது.

சென்னை, உயர்நீதிமன்றம் நீதி வழங்கும் பொறுப்பு வகிப்பதுடன் இம்மாநிலத்தின் நீதித்துறை நிருவாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிறது. உயர்நீதிமன்றப் பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவராவார். இவருக்கு உதவியாக கூடுதல் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அலுவலர், இன்ன பிற அலுவலர்கள் உளர்.

(ii) குற்றவியல் நீதிமன்றங்கள்.

(அ) பெருநகர மாஜிட்ட்ரேட் நீதிமன்றங்கள்.

நீதித்துறை, உரிமையியல், குற்றவியல் என இரு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், பெரு நகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் குற்றவியல் வழக்குகளைக் கவனிக்கிறது. பெருநகரத் தலைமை மாஜிஸ்டிரேட்டைத் தலைவராகக் கொண்டு, சென்னையில் 25 பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. பெருநகர தலைமை மாஜிஸ்ட்டிரேட்டும், பெருநகர கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட்டும் முறையே மாவட்ட நீதிபதிகள் சார்நிலை நீதிபதிகள் பதவி நிலைகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் சென்னை மாநகரக் காவல் நிலைய வழக்குகள் மீது அதிகார வரம்பு உடையவர்களாவர். 1993-94ஆம் ஆண்டில் மாநகரிலுள்ள பெருநகர மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் தொடர்பான செலவு ரூ. 1.19 கோடியாக அமையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்டங்களில் உள்ள நீதித்துறை தலைமை மாஜிட்டிரேட் நீதிமன்றங்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் மொத்தம் 16 நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. இவை தவிர, கும்பகோணம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களும், மதுரையில் ஒரு நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதி

1993 ஏப்ரல் 23]

மன்றமும் பொருளாதாரக் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்டுள்ளன. நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட்டுகள் தங்கள் மாவட்டங்களிலுள்ள சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்களின் நிர்வாகத் தலைவர்கள் ஆவர். இவர்கள் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியால் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யவும் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

(இ) நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள் :

அரசு ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளவாறு, நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவிகள் நிலை உயர்த்தப்பட்டு நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் பதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதற்கென சம்பந்தப்பட்ட விதிகள் திருத்தப்பட்டு மாவட்ட முன்சீப்-நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் என்ற ஒரே பதவியாக உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் சுமார் 227 நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டுகள் பணிபுரிகின்றனர். 1993—94 ஆண்டில் மாவட்ட அளவில் குற்றவியல் நீதிமன்றங்களைப் பராமரிப்பதற்கு ரூ. 10.83 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(iii) உரிமையியல் வழக்குகளைக் கவனிக்கும் நீதிமன்றங்கள்.

(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம் :

குற்றவியல் நீதிமன்றங்களைப் போலவே உரிமையியல் நீதிமன்றங்களும், இரண்டு பிரிவுகளாக-அதாவது மாநகரில் செயல்படும் நீதிமன்றங்கள், மாவட்டங்களில் செயல்படும் நீதிமன்றங்கள் என வகைப்படுத்தலாம். மாநகர உரிமையியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, 26 நீதிபதிகள் உள்ளனர். அவர்களில் 8 பேர் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தைச் சார்ந்தவர்கள். 18 பேர் துணை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சார்ந்தவர்கள். மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை பெருநகரின் மீதும் அதிகார வரம்புடையதாகும். மேலும் ரூ. 1 இலட்சம் வரை பண வகையிலான அதிகார வரம்பும், ரூ. 30,000 வரை மேல்முறையீட்டு அதிகார வரம்பும் உடையதாகும். இந் நீதிமன்றங்கள் சென்னை செஷன்ஸ் நீதிமன்றப் பணிகளுக்கு அடுத்த நிலையில் இருக்கும் மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள நீதிபதிகள் சிலருக்கு குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பெற்றுள்ளன. மாவட்ட முன்சீப் பதவித் தரத்திலுள்ள பதிவாளர், மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் நிருவாகத் தலைவர் ஆவார். இந்த வகை நீதிமன்றங்களின் செலவினங்களுக்காக 1993—94 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.—

சென்னை, சிறுவழக்கு நீதிமன்றம் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் ஒரு தலைமை நீதிபதியையும் அவருக்கு உதவியாக துணை நீதிபதிகள் பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளையும், மாவட்ட முனிசிப் பதவித் தரத்தில் மேலும் ஏழு நீதிபதிகளையும் பெற்றுள்ளது, தலைமை நீதிபதியும் அவருக்குக் கீழ் பதவி வகிக்கும் நீதிபதிகளும், மாநகர் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். மேலும், தலைமை நீதிபதி-II லிருந்து IV வரையிலும் VII, VIII ஆகிய ஏனைய நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரணை செய்கின்றனர். VII, VIII ஆகிய நீதிபதிகள், சென்னை மாநகர் கட்டிடங்கள் குத்தகை வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். IX லிருந்து XVI வரையிலான நீதிபதிகள், சென்னை மாநகர வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர்.

இ. (i) மாவட்டங்களில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்கள்:

மாவட்டங்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 20 மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை அல்லாமல் கடலூர், கோயம்புத்தூர், வடஆர்க்காடு—அம்பேத்கார், மதுரை, பெரியார், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்கள் உள. சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இரு கூடுதல் மாவட்ட நீதிபதிகள் உள்ளனர். மாவட்ட நீதிபதிகள் அந்தந்தக் கோட்டங்களின் செசன்ஸ் நீதிபதிகளும் ஆவர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வண்டிகள் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட சிறப்புச் சட்டங்களின்கீழ் இவர்கள் தனி நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர். மாவட்ட நீதிபதிகள் தத்தம் கோட்டங்களிலுள்ள சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்களையும் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களையும் பார்வையிடுகிறார்கள். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட நீதிபதிகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கு அதிகார வரம்புடன் குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிக்க தனி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் ரூ. 30,000 வரை மதிப்புடைய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை இவர்கள் விசாரிப்பார்கள்.

(ii) சார்நிலை நீதிபதிகள் நீதிமன்றம் :

இம்மாநிலத்தில், நடுவர் மன்றம் விற்பனைவரி மேல்முறையீட்டு நீங்கலாக 66 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சார்நிலை நீதிபதிகளின் அதிகார

1993 ஏப்ரல் 23]

வரம்பு, உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப் பட்டுள்ளது. இந் நீதிபதிகள், பணம் சம்பந்தப்பட்ட அசல் தரப்பு வழக்குகளை நடத்த வரம்பேதுமின்றி அதிகாரம் பெற்றிருக்கின்றனர். மேல் முறையீட்டு வழக்குகளை, மாவட்ட முன்சீப்புகள் வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக ரூ. 15,000 வரையிலான மதிப்புடைய சம்பந்தப்பட்ட மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்க, அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.

(iii) மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்:

நீதிமன்றக் கட்டமைப்பில் உரிமையியல் நீதிமன்றங்கள் கடை நிலையில் இருப்பினும் சிறப்பில் குன்றாதவை மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களாகும். அநேகமாக மாநிலத்தின் ஒவ்வொரு வட்டத்திலும் இவை செயல்பட்டு வருகின்றன. ரூ. 15,000 வரை பண மதிப்புடைய வழக்குகளையும், ரூ. 500 மதிப்புடைய இறு வழக்குகளையும், வாடகைக் கட்டுப்பாட்டு வழக்குகளையும் இவை விசாரிக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட முன்சீப்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 136 ஆக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் (மாவட்டங்கள்) ஆகியவற்றைப் பொறுத்தவரை, 1993—94 ஆம் ஆண்டில் (படியெடுப்பவர், ஆணைகளை சார்வு செய்வோர் ஆகியோருடைய செலவு உட்பட) ரூ. 23.97 கோடியாக அமையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்:

(அ) நடமாடும் நீதிமன்றங்கள் :

இம்மாநிலத்தில் சாலைப் போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க 4 நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் 2 சென்னையிலும், ஒன்று கோயம்புத்தூரிலும், மற்றொன்று மதுரையிலும் செயல்படுகின்றன.

(ஆ) இரயில்வே நீதிமன்றங்கள் :

பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, வடஆற்காடு அம்பேத்கார், தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும், சென்னையிலும், இரயில்வே நீதிமன்றங்களையும், பதிவுப்பெற்ற சட்ட நீதிமன்றங்களையும் அரசு அமைத்துள்ளது. மேற்கூறிய நீதிமன்றங்கள் வாயிலாக வசூலிக்கப்படும் அபராதத் தொகை மாநில அரசு கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இந்த இரயில்வே நீதிமன்றங்களின் பராமரிப்பு குறித்த செலவை, மாநில அரசு அதன் நிதியிலிருந்து மேற்கொண்டுவருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

(இ) குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றங்கள் :

தமிழகத்தில் சிறப்பான குடும்ப முறையைப்பேண ஏதுவாக இவ்வரசு 1988ஆம் ஆண்டு முதல் குடும்பங்களில் எழும் பிரச்சினைகளை களைவதற்கென சிறப்பு நீதி மன்றங்களை அமைத்துள்ளது. சென்னையில் அமைந்துள்ள இந் நீதிமன்றம் ஒரு முதன்மை நீதிபதி மற்றும் ஒரு கூடுதல் நீதிபதி ஆகிய அலுவலர்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. இக்குடும்ப நீதி மன்றம், கணவன் மனைவியருக்கிடையே எழும் கருத்து வேறுபாடுகளை சுமூகமான வகையில் சீர் செய்யும் போற்றத் தக்க பெரும் பணியை ஆற்றி வருகிறது. இந்நீதிமன்றங்கள் வாழ்க்கைத் துணைகளுக்கிடையே தோன்றும் பிணக்குகளை சீர் செய்யும் பணியை மேற்கொண்டு உள்ளதால் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் தீர்வுகளைக் காண்பதில் மிகுந்த நிதானத்துடனும் சமரச நோக்குடனும் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர். குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றங்கள் கணவன் மனைவியருக்கிடையே தோன்றும் மன வேறுபாடுகளைக் களைந்து அவர்களை ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள முகாந்திரத்தை முன்னிட்டு இந் நேர்வுகளில் வழக்குரைஞர்களை ஈடுபடுத்தும் போது வழக்குமுறை தவிர்க்கப்பட்டு உள்ளது. இஃதொரு இந்நீதிமன்றத்திற்கான சிறப்பம்சமாகும்.

(ஈ) பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கத் தனி நீதி மன்றங்கள் :

பொருளாதார குற்றங்கள் சமுதாயத்தை சீர்குலைக்கும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க வாய்ப்பில்லை. இத்தகைய பாதகமான அபாயத்தைச் சமாளிக்க சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றுமாக, மொத்தம் மூன்று தனி நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. இத்துடன், அரசு, 1982-ல் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழான வழக்கு விசாரணைகளுக்கு ஆறு தனி நீதிமன்றங்களையும் அமைத்துள்ளது. இந்த நீதிமன்றங்களுக்கு மாவட்ட செஷன்ஸ் நீதிபதி பதவித் தரத்திலுள்ளவர்கள் தலைமை வகிப்பர். இந் நீதிமன்றங்கள் சென்னை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

(உ) ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்களுக்கு எதிரான வழக்குகள் குறித்த நீதிமன்றங்கள்.

தீண்டாமையை அறவே நம் நாட்டிலிருந்து களைவது ஒரு சாய குறிக்கோளாகும். இந்நோக்கத்தை எய்தும் வகையில், இவ்வரசு. 1990 ஆம் ஆண்டிலேயே ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க, சென்னையிலுள்ள முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம், உள்பட

1993 ஏப்ரல் 23]

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள செஷன்ஸ் நீதிமன்றங்களை தனி நீதிமன்றங்களாக் குறிப்பிட்டு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இத்துடன் இவ்வரசு 1966 ஆம் ஆண்டு சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் செயல் வரம்பிற்குள் வரும் குற்றங்களை மட்டும் விசாரிக்க மதுரை, திருச்சி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்று என்ற வீதத்தில் மேலும் 4 தனி நீதிமனறங்களை மத்திய அரசின் 5 வ்ழுக்காடு நிதியுதவியுடன் அமைத்துள்ளது.

(ஊ) தடா சட்டத்தின் கீழான தனி நீதிமன்றங்கள் :

நம்நாட்டில் பயங்கரவாதத்தை ஒடுக்க மத்திய அரசு 1987 ஆம் ஆண்டு தடா சட்டத்தைக் கொணர்ந்துள்ளனர். இச் சட்டத்தின்கீழ் அமையும் குற்றங்களை விசாரிக்க இவ்வரசு, உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன், சென்னையில் தனி நீதிமன்றம் ஒன்றை முதற்கண் அமைத்திருந்தது. இருப்பினும், இந்த வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்கவும், இப்பிரச்சினையின் அளவு, முக்கியத்துவம் ஆகியவற்றையும் கருதிப்பார்த்து, இந்த அரசு தடா சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்க, சென்னையில் 3 தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக மேலும் இரண்டு நீதிமன்றங்களையும் ஆக மொத்தம் 5 நீதிமன்றங்களை அமைத்துள்ளது. மறைந்த திரு. இராஜீவ்காந்தி அவர்கள் குறித்த வழக்கினை மட்டிலும் திரு. சித்திக் தலைமையிலான நீதிமன்றம் விசாரித்தல் வேண்டும் என உயர்நீதிமன்றத்தின் ஒத்திசைவுடன் இவ்வரசு ஆணைகள் வெளியிட்டு உள்ளது என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

(எ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள் :

அண்மைக்காலம் வரையில் சென்னையில் நான்கும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் ஆக 7 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. மாநிலம் முழுவதும் அதிகார வரம்புடைய சென்னை தொழில் நடுவர் மன்றமும் உள்ளது. உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின் பேரில் மாநில அரசு வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் ஆகிய நான்கு நகரங்களில் இத்தொழிலாளர் நீதிமன்றங்களை அமைக்க அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட நான்கு நீதிமன்றங்களும் துவங்கப் பெற்று தற்பொழுது செயலாற்றி வருகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் இருக்கின்றனர். மேற்குறித்த நீதிமன்றங்கள், அவற்றிற்கு அரசு அனுப்பி வைக்கும் தொழில் தகராறுகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தாக்கல் செய்யும் தொகை கோரிக்கை குறித்த மனுக்களையும் விசாரிக்கின்றன.

[1993 ஏப்ரல் 23

தொழிலாளர் நல நீதிமன்றங்களையும் தொழில் நடுவர் மன்றங்களையும் சேர்ந்த அனைத்து நீதிபதிகளும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அதிகாரிகளாவர். அவர்கள் தங்கள் செயல் வரம்பிற்குள் வருகின்ற தொழில் தகராறுகளையும், தொகை கோரிக்கை குறித்த மனுக்களையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்கு முகாம் நீதிமன்றங்களை நடத்துகின்றனர். சென்னை, தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1993–94 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 57.60 இலட்சம் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

4. தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு:

(i) ஏழை எளியவர்களுக்குச் சட்ட உதவி அளிப்பது மாநில அரசின் கடப்பாடு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் விளம்புகிறது. எனவே, தமிழ்நாடு அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் கடப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் கருணை உள்ளத்தோடு 1977-ல் மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது.

(ii) இக்குழுவின் பணிகளை நிருவாகக் குழு கவனித்து வருகிறது. இக்குழு, இம்மாநிலம் முழுவதுமாக, மாவட்டக் குழுக்கள், வட்டக் குழுக்கள், சட்ட உதவி மையங்கள், ஆலோசனை மையங்கள், நடுவர் மையங்கள், மகளிருக்கான ஆலோசனை மையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

(iii) மாநிலச் சட்ட உதவி-ஆலோசனைக் குழு அரசின் பல்வேறு ஆணைகள் மூலம் ஏழை எளியவர்களுக்கு அளிக்கப் பட்ட உரிமைகளைப் பாதுகாக்க இலவச சட்ட உதவி மற்றும் பிற சட்ட உதவிகள் அளித்தல் விவாகரத்து தொடர்பாக பெண்களுக்குச் சட்ட உதவி புரிதல், கணவரிடமே திரும்பவும் கொண்டு சேர்த்தல், குழந்தைகளுக்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ளுதல், ஜீவனாம்சம் பெறுதல், சொத்து தொடர்பான பிற பிரச்சினைகளைத் தீர்த்தல், விபத்துக்களால் பாதிக்கப் பட்டவர்களுக்குச் சட்ட உதவி அளித்தல், விபத்துக் கோரிக்கை நடுவர் மன்றங்களிடம் முறையிட்டு இழப்பீட்டுத் தொகை பெறுதல், தொழிலாளர்களுக்குச் சட்ட உதவி அளித் தல் ஆகியவை போன்ற பல திட்டங்களை வகுத்து, செயல் படுத்தி வருகிறது.

(iv) இத்திட்டங்களுக்கு இடையே "லோக் அதாலத்" அதாவது மக்கள் நீதிமன்றம், நீதிமன்றங்களுக்கு வெளியே இரு தரப்பினர்களுக்கிடையே சமரசம் செய்து வைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் முக்கியத்துவப் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின், சட்டம் மற்றும் நீதித்துறை

1993 ஏப்ரல் 23]

அமைச்சகம், அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டின்போது இந்த முறை குறித்து அதாவது ''மக்கள் நீதிமன்றம்'' பற்றிப் பாராட்டியதோடு, நீதிமன்றங்களின் சுமையைக் குறைப்பதில் மக்கள் நீதிமன்றத்தின் பணியை பயன்படுத்துவதாகவும் தெரிவித்தது. இத்திட்டத்திற்கு வரும் காலத்தில் பெரும் உத்வேகம் கிடைக்கும்.

இந்த முறையை சீரமைக்கும் நோக்கத்துடன், மத்திய அரசு; சட்ட உதவித் திட்டத்திற்கு சட்டப்படிக்கான ஆதரவு அளிக்கும் வகையில் 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் (அதிகாரிகள்) சட்டத்தை (மத்தியச் சட்டம் 39/1987) இயற்றியது. இச்சட்டத்தை மத்திய அரசு இன்னும் செயலுக்குக் கொண்டு வரவில்லை. இச்சட்டம் செயற்படுத்தப்படும் வரையில், மக்கள் நீதிமன்றம் மேலும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, இக் குழுவிற்குப் புத்துயிர் ஊட்டுவதென உத்தேசித்துள்ளது.

5. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு :

(i) சட்ட அலுவலர்களின் அமைப்பு முறை நீதித்துறை அமைப்பில் ஓர் முக்கிய அங்கமாகும். அதன் விவரம் வருமாறு :

சட்ட அலுவலர்களின் அமைப்பு

சென்னை மாநகரில் உள்ள அமைப்பு.	மாவட்டங்களில் உள்ள அமைப்பு.

மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

உரிமையியல்.	உரிமையியல்.
மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள்.	மாநில அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள்.
மாநில அரசின் உரிமை இயல் கூடுதல் வழக்குரைஞர்கள்.	மாநில அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர் முதலானோர்.
அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள்.	அரசு வழக்குகளை நடத்தும் வழக்குரைஞர்கள்.

[1993 ஏப்ரல் 23

குற்றவியல்.	குற்றவியல்.
அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள்.	அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள்.
அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் முதலானோர்.	அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள்.
மாநகர அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள்.	
சிறப்பு அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள்.	அரசு சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர்கள்.
அரசு உதவி வழக்குரைஞர்கள் நிலை 1 மற்றும் 2.	அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர்கள் நிலை 1 மற்றும் 2.

(ii) அரசு சார்பில் உள்ள வழக்குகளை, நீதிமன்றங்கள் செவ்வனே நடத்திச் செல்வதற்கென, வழக்குரைஞர்களை குறிப்பிட்ட காலத்திற்கு அரசு பணியில் அமர்த்துகிறது. (Tenure Basis) இவ்வழக்குரைஞர்கள் அல்லாமல் முழுநேர நிலை 1 மற்றும் 2-இல் உள்ள அரசு வழக்குரைஞர்களும் அரசின் வழக்குகளைக் கவனிக்கின்றனர்.

(iii) புதுடெல்லி, உச்சநீதிமன்றத்திலுள்ள நமது வழக்குகளைப் பொறுத்தமட்டில், தமிழக அரசின் வழக்குகளை எடுத்து நடத்த (முந்தைய காலங்களில்) ஒரேயொரு வழக்குரைஞர் மட்டுமே இருந்த நிலையை மாற்றி மூன்று வழக்குரைஞர்களை தமிழ்நாடு அரசு அமர்த்தியுள்ளது. அவர்களில், இரு வழக்குரைஞர்கள் அனைத்து அரசுத் துறை வழக்குகளுக்காகவும் மற்றொருவர் குற்றவியல் வழக்குகளுக்காக மட்டுமன்றும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக அரசின் வழக்குகளை எடுத்து நடத்துவதற்காக டெல்லியில் இருக்கும் வழக்குரைஞர்கள் 1988-இல் அனுமதிக்கப்பட்ட அவர்களுடைய கட்டண விகிதத்தை மாற்றியமைக்குமாறு கோரி அரசுக்கு முறையீடு செய்தனர். அவர்களுடைய கோரிக்கையிலிருக்கும் நியாயத்தை அரசு பரிவுடன் அணுகி, அவைகளைப் பரிசீலிப்பதற்குக் குழு ஒன்றை நியமனம் செய்து, அக்குழுவின் பரிந்துரைகளை முற்றிலுமாக ஏற்று, அவர்களுடைய ஊதிய விகிதங்களை 1990ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற விதிகளுக்கு ஏற்ப உயர்த்தி 1992 மே திங்களில் ஆணைகள் பிறப்பித்து இவ்வழக்குரைஞர்களின் குறைபாடுகளைக் களைந்து இப்பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்வினைக் கண்டுள்ளது.

1993 ஏப்ரல் 23]

6. நீதித்துறைக்கான செலவின பாகுபாடு :

உயர்நீதிமன்ற நீதிபதிகள் அசல், மேல்முறையீட்டு பிரிவைக் கொண்ட உயர்நீதிமன்றப் பதிவாளர், பணியாளரமைப்பு ஆகியோர் குறித்த செலவுகள் ''சாட்டிய'' செலவாக வகைப் படுத்தப்படுகிறது. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னைப் பெருநகர மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் முதலியன குறித்த செலவு ''அனுமதித்த'' செலவாக வகைப்படுத்தப்படுகிறது.

7. துறைக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் வருவாய் விவரங்கள் :

அரசியல் சட்டமுறையான நீதித்துறை என்னும் இந்த அமைப்பு, சுயேச்சையாகவும், திறமையாகவும் செயல்படும் வகையில், நீதித்துறைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது மாநில அரசின் கடப்பாடாகும் என்று நமது அரசியலமைப்புச் சட்டத்தை தோற்றுவித்த நிபுணர்கள் அரசியல் சட்டத்தின் மூலம் வலியுறுத்தி உள்ளனர். தமிழ்நாடு அரசு, நீதித்துறைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ள என்பதை பின்வருவனவற்றிலிருந்து அறியலாம்; அதாவது இவ்வரசு நீதித்துறைக்கு 1967–68-இல் 2.41 கோடி ரூபாய் செலவிட்டது. அத்தொகையானது ஒவ்வோராண்டும் படிப்படியாக உயர்ந்து தற்போது (அதாவது 1993–94-ல் 54.13 கோடி ரூபாய் அளவிற்கு எட்டியுள்ளது. நீதித்துறைக்கு பேர்திய அளவில் நிதி ஒதுக்கம் செய்து தொடர்பான பொருள் குறித்து அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் உரையாடப் பட்டது. 1985–86 முதல் 1993–94 வரையிலான ஆண்டுகளில் கிடைத்த வரவினங்கள், ஆன செலவு பற்றிய விவரம் கீழே அட்டவணையிடப்பட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவினங்கள்.	வரவினங்கள்.
(1)	(2)	(3)
	(ரூபாய் கோடியில்)	
1985–86	17.20	12.55
1986–87	19.38	16.02
1987–88	21.55	17.28
1988–89	24.48	18.14

TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)
1989–90	29.70	28.57
1990–91	37.25	26.16
1991–92	40.19	25.65
1992–93 வரவு–செலவு திருத்திய மதிப்பீடு ..	47.34	28.07
1993–94 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	54.13	28.97

8. நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தில் நீதித் துறைக்கான செலவை இணைத்தல் :—

நீதித்துறையின் தேவைகள் நாளுக்குநாள் பெருகி வருகின்ற இந்நாளில் அதற்கீடாக மாநில பொருளாதார நிலைமை மேம்படவில்லை என்பது கண்கூடு. இந்நிலைமையை மாற்றி நீதித்துறை குறித்த செலவினத்தை ஐந்தாண்டுத் திட்ட இனங்கள் கீழ்க்கொணர வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. மேற்சொன்ன பரிந்துரையைச் செயற்படுத்தும் வகையிலும் தற்போதைய சூழ்நிலையைத் தெளிவாக உணர்ந்தும் மத்திய அரசு, சட்டம்-நீதி அமைச்சகம் அண்மையில் இச் செலவினங்களை மத்திய திட்டக் கமிஷன் ஏற்க இசைந்திருப்பதாகவும் அதற்காக நீதித்துறைக்குக் கிடைக்கக்கூடிய அடிப்படை வசதிகளை, மத்திய அரசும், மாநில அரசும் 50 : 50 என்ற பகிர்வு வீத அடிப்படையில் வலுப்படுத்தக் கருதும், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு உறுதியான செயற்குறிப்பை அனுப்புமாறு இவ்வரசை கேட்டுள்ளது.

இதற்கிணங்க எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள கால அளவில் செயறபடுத்துவதற்காக சுமார் 123 கோடி ரூபாய் மதிப்பிற்கான பொருத்தமான செயற் குறிப்புகளை இவ்வரசு கணித்து அதனை மத்திய அரசு பரிசீலிப்பதற்காக அனுப்பியுள்ளது. மத்திய அரசின் முடிவு கிடைக்கப் பெறுவதின் பேரில், எவ்விதத் தாமதமும் இன்றி இத்திட்டம் மிக விரைவாக செயற்படுத்தப்படும்.

9. தற்போதைய அரசின் குறுகிய கால சாதனை விபரங்கள் :

தமிழ்நாட்டில் நீதித்துறை அமைப்பு முறை சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக, புதிதாக நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டதோடல்லாமல், ஏற்கெனவே உள்ள நீதிமன்

1993 ஏப்ரல் 23]

றங்களில் உள்ள அடிப்படை வசதிகளை சிறந்த முறையில் மேம்படுத்துவதற்குரிய சரியான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(1) கட்டிடம் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் :

(அ) பல நீதிமன்றங்கள் அமைந்திருக்கின்ற கட்டிடங்கள் பழைமையானவையாகவும், முற்றிலும் பழுதுபார்க்க வேண்டியன வையாகவும் இருக்கின்றன. நீண்ட நாட்களாக கவனிக்கப்படாமல் இருந்த இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அண்மையில் பின்வரும் கட்டிடத் திட்டங்களுக்கு, தமிழ் நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(1) ரூபாய் 400 இலட்சம் மொத்தச் செலவில் உயர் நீதிமன்ற இணைப்புக் கட்டிடம் கட்டப்பெற்று, 8—2—1992 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

(2) நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த சேலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிட வளாகம் கட்டும் பணி, ரூ. 390 இலட்சம் செலவில் அரசால் ஏற்பளிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

(3) ரூ. 322.55 இலட்சம் செலவில் இராமநாதபுரம் நீதிமன்ற கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

(4) ரூபாய் 77 இலட்சம் செலவில் கட்டப்பட்டுவரும் சென்னை மாநகர் சிவில் நீதிமன்றக் கூடுதல் கட்டிடப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

(5) பூந்தமல்லியில் ரூபாய் 49.00 இலட்சம் செலவில் தனி நீதிமன்றக் கட்டுமானப் பணி முடிவடைந்து நீதிமன்றம் இயங்க ஆரம்பித்துள்ளது.

(6) புதுக்கோட்டையில் ரூபாய் 45 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

(7) நீதிமன்றத்தின் கூடங்கள், நீதிபதிகளின் அறைகள் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்காகவும், சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய நிருவாகத் தொகுதியைச் சேர்ந்த நிருவாக அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் பயன்படுத்துவதற்காகவும் மேசை நாற்காலிகள் போன்றவற்றை வாங்க ரூ. 27.91 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

[1993 ஏப்ரல் 23

(8) பூவிந்தவல்லியில் ரூபாய் 20.00 இலட்சம் செலவில் 1 மற்றும் 2ஆவது நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

(9) தற்போதுள்ள உயர்நீதிமன்றக் கட்டிடத்திற்கும் புதிய கட்டிடத்திற்கும் இடையே கீழ்த்தளத்திலும், முதல் தளத்திலும் இணைப்பு நடைபாதை கட்டுவதற்காக, ரூ. 10.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

(10) புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் பதிவேட்டு அறை, பாதுகாப்பு பெட்டக அறை கட்டுதல் ரூ. 7.46 இலட்சம் செலவில், அனுமதிக்கப்பட்டுள்ளது.

(11) இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் அமைப்பதற்காக மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் 2ஆவது தளம் கட்டுதல் ரூ. 6.85 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டது.

(12) விருத்தாச்சலத்தில் உள்ள புதிதாக கட்டப்பட்ட இணைப்பு நீதிமன்றக் கட்டிடங்களில் பயன்படுத்துவதற்கான மேசை, நாற்காலிகள் போன்றவற்றை வாங்குவதற்காக ரூ. 4.33 இலட்சத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது.

(13) கூடுதல் உயர்நீதிமன்றக் கட்டிடங்களில் உள்ள மூன்று கட்டிடத் தொகுதிகளின் வெளிப்பாகத்தில், ரூ. 2.50 இலட்சம் செலவில் சிமிட்டி பூச சென்னை பொதுப் பணித் துறை தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்) அனுப்பிய செயற் குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

(14) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில் நீதிமன்றக் கட்டிடங்களுக்கு சிறப்பு பழுது பார்ப்பு பணிகள் மற்றும் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதி மன்றத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தல் ரூபாய் 1.57 இலட்சம் செலவு.

(15) சேலத்தில் நீதித் துறை அதிகாரிகள் வசிக்கும் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளல் ரூபாய் 1.20 இலட்சம் செலவு.

(16) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், இராணிப் பேட்டையில் உள்ள துணை நீதிமன்றத்திற்கும் இடவசதி அளிக்கும் வகையில் அங்கு தற்போது உள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள ரூபாய் 1.00 இலட்சம் செலவினத்திற்கு அரசு அனுமதித்தது.

(17) தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டையின் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்திற்காக சொத்துக்களைப் பாதுகாக்கும் அறை கட்டுதல் ரூபாய் 1.00 இலட்சம் செலவு.

(18) சிவகங்கையில் உள்ள மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை மாற்றி அமைத்தல் ரூபாய் 0.97 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டது.

(19) சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் நீரடிக் கழிப்பிட வசதி செய்து கொடுத்தல் ரூபாய் 0.60 இலட்சம் செலவு.

9 (2) புதிய நீதிமன்றங்கள் அமைத்தல்:

நீதிமன்றத்தில் பல்வேறு நிலைகளில் முடிவுறாமலுள்ள பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளை முடிப்பதற்கான அவசியம் மைய அரசு மற்றும் மாநில அரசின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. இணைப்பு II-இல் தமிழக நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை விவரங்கள் தரப்பட்டுள்ளன. இப்பிரச்சினையைக் கருத்தில் கொண்டு பெங்களூரில் இந்திய அரசால் கூட்டப்பட்ட சட்ட அமைச்சர்கள் மாநாட்டிலும், இந்தியப் பிரதமர் தலைமையில் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் கலந்தாலோசிக்கப்பட்டு, பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தற்போதுள்ள நீதிபதிகளின் அலுவல் சுமைகளைக் குறைப்பதற்காக, மேற்கொண்டும் பல நீதிமன்றங்களை ஏற்படுத்துவதே இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பின்வரும் நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளது:—

(அ) சிவில் நீதிமன்றங்களை ஏற்படுத்துதல்:

(1) இராமநாதபுரம் மாவட்டத்திற்காக இராமநாதபுரத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

(2) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்காக, சிவகங்கையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

(3) காமராஜர் மாவட்டத்திற்காக, ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

(4) சிதம்பரனார் மாவட்டத்திற்காக தூத்துக்குடியில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

(5) துணை நீதிமன்றம், இராணிப்பேட்டை, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

(6) திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்திற்காக திருவண்ணாமலையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், (ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.)

(7) மாவட்ட முன்சீப்-நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், கொடைக்கானல்.

(8) மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நிலக்கோட்டை.

(9) கூடுதல் துணை நீதிமன்றம், திண்டுக்கல்.

(10) மாவட்ட முன்சீப் நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை.

(11) துணை நீதிமன்றம், அம்பாசமுத்திரம்.

(ஆ) குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்துதல்:

(1) இராமநாதபுரம் மாவட்டத்திற்காக இராமநாதபுரத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

(2) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்திற்காக சிவகங்கையில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

(3) காமராஜர் மாவட்டத்திற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

(4) நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், திண்டுக்கல். (ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.)

(5) சந்தன மரக்கடத்தல் குற்றங்களை விசாரிக்கும் பொருட்டு வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் தனி நீதிமன்றம்.

(6) நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

(7) நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், கமுதி.

(8) சந்தன மரக்கடத்தல் குற்றங்களை விசாரிக்கும் பொருட்டு சேலத்தில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் தனி நீதிமன்றம். (ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.)

(இ) தடா சட்டத்தின் கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தனி நீதிமன்றம். (குறிப்பிட்ட வழக்கை விசாரிக்க)—

1993 ஏப்ரல் 23]

(1) இராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரிப்பதற்கென்றே சென்னையில் (பூவிருந்தவல்லியில்) குறிப்பிட்ட வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் ஒன்றும் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்று சென்னையில் மேலும் இரு நீதிமன்றங்களும் தடா சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்குரிய நீதிமன்றங்கள் இரண்டும் அதாவது கோயம்புத்தூரில் ஒரு நீதிமன்றமும், திருநெல்வேலியில் மற்றொரு நீதிமன்றமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் அல்லாமல மிகக் குறைந்த கால அளவாகிய 20 மாதங்களில் மொத்தம் 24 புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) புதிதாக விழுப்புரம் இராமசாமி படையாச்சி மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றங்கள்—

முன்னர் இல்லாதவகையில் புதிய மாவட்டத்தை ஏற்படுத்தும்போதே விழுப்புரம் இராமசாமி படையாச்சி மாவட்டத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமும், நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றமும் அமைக்கப்படும்.

10. நீதித்துறை மற்றும் சட்ட அலுவலர்களுக்கு விரைந்து வழங்கப்பட்ட சலுகைகள்:—

(a) காலியாகவுள்ள துணை நீதிபதிகளின் பதவி இடங்களை நிரப்புதல்.

உயர்நீதிமன்றம் தயாரித்த 18 துணை நீதிபதிகளின் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் துணை நீதிபதி பதவித் தரத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காலியாக இருந்த பதவி இடங்களை நிரப்புவதற்கு ஏதுவாக இருந்தது.

(b) அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதித்துறை அதிகாரிகள் சங்கத்தின கோரிக்கைகள்:

நீதித்துறை அதிகாரிகள் சங்கத்தின் பின்வரும் கோரிக்கைகளை அரசு அண்மையில் ஏற்றுக் கொண்டு பொருத்தமான ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.—

(1) மாவட்டங்களில் நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு பதவிகள் மாவட்ட நீதிபதிகள் (நிலை II) பதவித தரத்தில் மாவட்ட கூடுதல் நீதிபதிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

(2) விடுமுறையினைப் பயன்படுத்திக் கொள்கிற நீதித் துறை அதிகாரிகளுக்கு ஆண்டிற்கு 15 நாட்கள் சிறப்பு ஈட்டிய விடுப்பு அனுமதிக்கும் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(3) சில நிருவாகக் காரணங்களினால் முன்னர் ரத்து செய்யப்பட்ட ஈடுசெய் விடுமுறைகளை அனுமதிக்கும் முறை மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(4) மாநகரில் உள்ள நீதித்துறை அதிகாரிகள், தற்போது பயன்படுத்தி வருகின்ற பயன்பாட்டிலுள்ள பழைய சிறிய பேருந்துகளுக்குப் பதிலாக மூன்று புதிய சிறிய டெம்போ பயணிகள் வேன்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (செலவு 10.02 இலட்சம் ரூபாய்.)

(5) சங்கத்திற்கென கட்டிடம் கட்டுவதற்குரிய மனையை ஒதுக்குவது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும். மேற்சொன்ன பணிகள் குறித்து அரசுக்கு சுமார் 18 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

C. தமிழ்நாடு நீதித்துறை சார் நிலைப் பணியாளர் சங்கத்தின் கோரிக்கை:

தமிழ்நாடு நீதித்துறை சார் நிலைப் பணியாளர் சங்கம் தலைமை எழுத்தர் முதலிய பதவிகளை மேல்நிலைக்கு உயர்த்துமாறு அரசை நீண்ட நாட்களாகக் கோரி வந்துள்ளது. 1976 ஆம் ஆண்டு தொடக்கத்தில், இக்கோரிக்கையை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு இசைவளித்திருந்த போதிலும், நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசால் இதனை செயல்படுத்த முடியவில்லை. எனினும், நீதித்துறை அமைப்பைச் சேர்ந்த இந்த தொகுதிப் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொண்டு, 1992-93, 1993-94 ஆம் ஆண்டுகளில் இரு நிலைகளில், முறையே 364 தலைமை எழுத்தர் போன்ற பதவிகளை கண்காணிப்பாளர் பதவிகளுக்கும், 500 இளநிலை உதவியாளர் போன்ற பதவிகளை உதவியாளர் பதவிகளுக்கும் நிலையுயர்த்த ஆணை பிறப்பித்தது. அரசு அளித்துள்ள இச்சலுகையால், சுமார் 864 நீதித்துறை சார் நிலைப் பணியாளர்கள் பயனடைவர். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ, 54.44 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

1. சட்ட அதிகாரிகள்:

(i) 1988 ஆம் ஆண்டிலிருந்து அரசு உதவி வழக்குரைஞர் (நிலை II) பதவிகளிலிருந்து அரசு உதவி வழக்குரைஞர் (நிலை I) பதவித் தரத்திற்குத் தகுதிவாய்ந்தோர் தற்காலிகப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இதற்கு ஒப்புதலும்

அளிக்கப்பட்டது. இதற்கிணங்க, நிலை II-லிருக்கும் 21 அரசு உதவி வழக்குரைஞர்களுக்கு, அரசு உதவி வழக்குரைஞர் நிலை I— ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

(ii) ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும். அரசு உதவி வழக்குரைஞர் ஒருவர் என்ற குறிக்கோளை அரசு நிறைவேற்றியுள்ளது. நீண்டகாலமாக காலியாக வைக்கப் பட்டுள்ள 25 அரசு உதவி வழக்குரைஞர்களின் நிலை II பதவி இடங்களை நிரப்புவதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

(iii) சட்ட அதிகாரிகள் தொடர்பான பெரும்பாலான பதவிகள் அனைத்தும் (பதவிக் கால அடிப்படையில்) நிரப்பப் பட்டுள்ளன.

(iv) சென்னை வழக்கறிஞர் குழுமத்தின் நீண்ட நாள் கோரிக்கையான வழக்கறிஞர்களுக்கான அதிகபட்ச ஒய்வுக் காலப் பயனை ரூ 30,000 லிருந்து ரூ 60,000 ஆக உயர்த்த வேண்டுமென்ற செயற் குறிப்பினை அரசு ஏற்றுள்ளது.

E. வழக்கு தொடர்பு இயக்ககத்தை ஏற்படுத்துதல்:

தற்போதுள்ள பணித் திட்டத்தின் கீழ், வழக்குத் தொடர்பு நடவடிக்கைகளைக் கவனிக்கும் பணியாளர்களும். ஏனைய அனைத்து சட்ட அதிகாரிகளும், அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட அளவில் உள்ள சட்ட அதிகாரிகளின் நிருவாகத் தலைவர்களாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விளங்கிய போதிலும், அவர்களுக்குரிய பலதரப்பட்ட கடமைகள். பொறுப்புகள், வகையிலான பணிச்சுமையைக் கருத்திற் கொண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க .வழக்குத் தொடர்பு இயக்ககம் ஏற்படுத்தும் முறையை அரசு மீண்டும் செயலுக்கு கொண்டு வந்துள்ளது அப்போதுதான், வழக்குத் தொடர்பு நட வடிக்கைகளைக் கவனிக்கும்பணியாளர்கள். சட்ட அதிகாரிகள் ஆகியோரின் பணிகளைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தி, கண் காணிக்க இயலும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக இருக்கும் பொருட்டு, இத்திட்டச் செயல்பாட்டை மேற் கொண்டு நிறைவேற்ற தனி அலுவலர் ஒருவரை அரசு நியமனம் செய்துள்ளது. வழக்குத் தொடர்பு இயக்ககம் ஏற்படுத்துவது சட்ட அதிகாரிகளின் செயல்பாட்டை முடுக்கிவிடுவதுடன், நற்பயன் கிடைக்க வழி வகுக்கும் என ஆர்வத்துடன் நம்பப்படு கிறது,

(F) பயிற்சி அளிக்கும் திட்டம்:

(i) நீதித்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல்:

முறையான பயிற்சி செயற்திறனையும், அறிவையும் வளர்த் துக் கொள்ள உதவும். எனவே பயிற்சி மிகவும் இன்றியமையாத தாகும். இதனைக் கருத்திற் கொண்டு, புதியதாக நியமனம்

செய்யப்படும் மாவட்ட முன்சிப்-நீதித்துறை மாஜிஸ்திரேட்டு களுக்கு சிவில்-குற்றவியல். வருவாய், காவல், சிறை. வனம் வணிகவரி, பாசனம். கட்டடங்கள்—தடய அறிவியல் முதலியன. போன்ற பல துறைகளில் ஆறு மாத காலத்திற்குப் பயிற்சியளிப்பதற்கான அடங்கல் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு ஏற்கெனவே வகுத்துள்ளது, நீதித்துறை அதிகாரிகள் பயனடையும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளுடன் கலந்தாலோசித்து, இம்மாநிலத்தில் தனியாக ஒரு பயிற்சி நிலையம் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

அண்மையில், புது டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும், இது குறித்து விரிவாகப் பேசப்பட்டது. இது போன்ற பயிற்சியளிப்பதற்கு, நீதித்துறை அதிகாரிகள் கொண்ட தேசிய மன்றம் ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு குறித்தும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(2) அரசு வழக்குரைஞர்களுக்குப் பயிற்சி:

சட்ட அலுவலர்கள் பெரும்பாலும் பதவிக்கால (Tenure basis) அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். ஆனால், அரசு உதவி வழக்குரைஞர்கள் நிலையான அரசு ஊழியராவர் தற்போது. அனைத்து சட்ட அலுவலர்களுக்கும் முறையான பயிற்சி அளிக்கப்படுவதில்லை. அரசு உதவி வழக்குரைஞர்களுக்கும் போதுமான பயிற்சியளிக்கப்படுவதில்லை. எனவே, இவ்வழக்குத் தொடர்பு பணியாளர்கள் அனைவரும் செம்மையாக செயலாற்றும் வகையில் இனிவரும் காலங்களிலாவது பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அரசு தனிப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் அவர்களுக்கு விரிவான பயிற்சி அளிக்க எண்ணியுள்ளது.

11. 1993–94 ஆம் ஆண்டில் செயலாற்ற உள்ள புதிய திட்டப் பணிகள்:

திட்டப் பகுதியில் அறிவிக்கப்பட்ட செயற்குறிப்புகளுடன் கூட 1993–94 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களையும் செயற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.—

திட்டங்கள் (1)	நிதிஒதுக்கீடு (2) (ரூபாய் இலட்சத்தில்)
A. நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல்:	
1. சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் PBXH 5+20 தொலைபேசி வசதிக்கு வகை செய்தல்	0.64

1993 ஏப்ரல் 23]

2. செங்கல்பட்டு நீதிமன்ற இணைப்புக் கட்டிடங்களில் வழக்காடும் பொதுமக்களுக்கு கழிப்பிடம் கட்டுதல்.	2.75
3. ஈரோடு நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் கழிப்பிடம் கட்டுதல்.	2.42
6. திண்டுக்கல்லில் தற்போதுள்ள நீதிமன்ற இணைப்புக் கட்டிடங்களின் மேல் மூன்றாம் தளம் கட்டுதல்.	8.00
B. புதிய நீதிமன்றங்கள் அமைத்தல் :	
5. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள தாம்பரத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைத்தல்.	15.21
6. மதுரையில் குடும்ப விவகாரங்களைக் கவனிக்கும் நீதிமன்றம் தோற்றுவித்தல்.	7-96
C. சட்ட உதவி—ஆலோசனைக் குழு :	
7. நாகப்பட்டினத்தில், சட்ட உதவி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்.	1.00
மொத்தம் ..	34.98

12, இன்னமும் நிறைவடைய வேண்டிய இம்மாநில அரசின் நெடுநாள் குறிக்கோள்கள் :

(அ) மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஏற்படுத்துதல் :

மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் ஒன்று ஏற்படுத்துவதற்கான அவசியத்தை அரசு 1972ஆம் ஆண்டிலேயே பரிசீலித்தது. உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்துவதும், அமைப்பதும் இந்திய அரசியலமைப்பின் 246ஆம் பிரிவின் கீழ் மத்திய நாடாளுமன்றத்திற்கே உரிய தனிச் சிறப்புரிமையாகும். எனவே மாநிலத்தின் தென் மாவட்டங்களில் உள்ள வழக்காடும் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அல்லது முகாம் நீதிமன்றத்தையாவது மதுரையில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்த அரசு 1973ஆம் ஆண்டிலேயே மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. மாநிலத் தலைநகர் தவிர பிற இடங்களில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பது தொடர்பான அனைத்துக் கூறுகளையும் ஆராய, பணியிலிருந்து ஓய்வுபெற்ற இந்திய

உச்ச நீதிமன்ற நீதிபதியான திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களை மத்திய அரசு அக்குழுவின் தலைவராக நியமித்தது. மத்திய அரசு, இந்த அரசின் கோரிக்கையைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது. மத்திய அரசு, இக்குழுவின் அறிக்கைகளையும், பரிந்துரைகளையும் தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆகியோருக்கு அனுப்பி, அவர்களின் கருத்துக்களைக் கேட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை அமைப்பதற்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் செயற் குறிப்பு குறித்து அரசு, உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து வருகிறது.

சென்னை உயர்நீதிமன்றம், உரிய தேவைகள் குறித்து தள ஆய்வு செய்து, அது பற்றிய அறிக்கையை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கும் வகையில், மூதுநிலை நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. தென் மாநிலங்களைச் சேர்ந்த வழக்காடும் பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இம்மாநில அரசு, இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றுமாறு உயர்நீதிமன்றத்தை வலியுறுத்தி வருகிறது. இனியும் வலியுறுத்தும்.

(ஆ) சென்னையில் உச்சநீதிமன்றப் பிரிவு துவக்குதல் :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246ஆம் பிரிவின்படி, உச்சநீதிமன்றத்தை நிறுவுதல், அமைத்தல், அதிகார வரம்பினை வரையறுத்தல், அதிகாரங்களை நிர்ணயித்தல் ஆகியவை நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 130ஆம் பிரிவின்படி, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்திய தலைமை நீதிபதி, அவ்வப்போது குறிப்பிடக்கூடியவாறு டில்லியில் அல்லது அத்தகைய வேறு இடத்தில் அல்லது இடங்களில் உச்சநீதிமன்றம் கூடும். சென்னையில் உச்சநீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை நிறுவுவதற்கு மத்திய அரசின் இசைவைப் பெற வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்குமாறு மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. அமைக்கக் கருதியுள்ள உச்சநீதிமன்ற ஆயத்திற்கான கட்டிடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்பு போன்ற தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும் இம் மாநிலஅரசு, மைய அரசுக்குத் தெரிவித்துள்ளது. தென் பகுதியைச் சேர்ந்த வழக்காடும் பொதுமக்களுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகளையும், சென்னையிலுள்ள திறன் பெற்ற வழக்கறிஞர்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க மாநில அரசு தயாராக இருப்பதாலும், இத்திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு தீவிரமாக முனைந்துள்ளது.

1993 ஏப்ரல் 23]

13. இன்னபிற சிறப்பம்சங்கள் :

(அ) மாநிலச் சட்டக் கல்வி இயக்ககம் :

தமிழ்நாடு மாநிலத்தில் சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்துகின்ற நோக்கத்துடன், 1953ஆம் ஆண்டில் சட்டக் கல்வித்துறையானது உருவாக்கப்பட்டது. இத்துறையை உருவாக்கியதற்குப் பின்னர், இம்மாநிலத்தில் சட்டக் கல்வியின் தரத்தில் ஒரு முழுமையான மேம்பாடு ஏற்பட்டிருப்பதோடு இந்தத் துறை மேலும் மேம்பாடு காண்பதற்குத் தொடர்ந்து கடுமையாக முயன்று வருகிறது. சென்னை சட்டக்கல்லூரி 1891 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1974ஆம் ஆண்டில் மற்றொரு சட்டக்கல்லூரி மதுரையில் திறக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக, மேலும் இரண்டு சட்டக் கல்லூரிகள் 1979–80இன் போது தொடங்கப் பெற்றன. மூன்றாண்டுச் சட்டப் படிப்போடு பிளஸ் 2 தேர்வு தேறியுள்ள மாணவர்களுக்காக, 1983–84ஆம் கல்வியாண்டில் இருந்து நான்கு சட்டக்கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப்படிப்பும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நான்கு சட்டக் கல்லூரிகளிலும் இம் மூன்றாண்டுச் சட்டப் படிப்பும் ஐந்தாண்டுச் சட்டப் படிப்பும் ஒரே சமயத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் 1983-84ஆம் ஆண்டிலிருந்து மாலை நேரத்தில், சட்டத்தில் பட்ட மேற்படிப்பு (ML) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரிகளில் குற்றவியல் மற்றும் தீங்கியல், ஒப்பந்தவியல், சொத்து இயல், தொழிலாளர் சட்டவியல் முதலிய சட்டப் படிப்புப் பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1991–92ஆம் கல்வியாண்டிலிருந்து, எம்.எல்., படிப்பில் நிருவாகவியல் (Administrative Law) தொழிலாளர் சட்டவியல் ஆகிய பிரிவுகள், திருச்சி சட்டக் கல்லூரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வேலையிலுள்ளவர்களுக்கான மாலை நேரச் சட்டப் படிப்பு, 1966–67ஆம் கல்வி ஆண்டிலிருந்து சென்னை சட்டக் கல்லூரியிலும், 1977-78ஆம் ஆண்டிலிருந்து மதுரை சட்டக்கல்லூரியிலும் தொடங்கப்பட்டது. இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் உத்தரவின் பேரில், இது 1979–80இல் தொடராமல் நிறுத்தப்பட்டது. எனினும், இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் அனுமதியைப் பெற்றதற்குப் பின்னர் 1983–84ஆம் ஆண்டிலிருந்து இந்த நான்கு சட்டக் கல்லூரிகளிலும் மாலை நேரப் படிப்பு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் வாயிலாகவும் (Medium) மூன்றாண்டு (காலை நேர) சட்ட மாணவர்களுக்குச் சட்டக் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. சென்னை, மதுரை, திருச்சி ஆகியவற்றிலுள்ள சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கிகள் செயல்பட்டு

[1993 ஏப்ரல் 23

வருகின்றன. புகழ்பெற்ற சட்ட வல்லுநர்கள் மற்றும் சட்டப் பேராசிரியர்களின் கட்டுரைகளும் ஆய்வுகளும் அடங்கிய ''சட்டக் கல்வி ஆண்டுத் தொகுதி'' (Year Book of Legal Studies) இந்தத் துறையால் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த நான்கு சட்டக் கல்லூரிகளிலும் சேர்த்து மொத்தத்தில் 5,825 மாணவர்கள் உள்ளனர். ஒவ்வொரு சட்டக் கல்லூரியிலுள்ள, படிப்பு வாரியாக மாணவர் எண்ணிக்கையின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

அட்டவணை

சட்டக்கல்லூரிகள்.	3 ஆண்டு சட்டப் படிப்பு (காலை நேரம்).	3 ஆண்டு சட்டப் படிப்பு (மாலை நேரம்).	5 ஆண்டு சட்டப் படிப்பு.	எம். எல். பட்டப் படிப்பு.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
சென்னை	810	720	1,020	120	2,670
மதுரை	540	360	750	30	1,680
திருச்சி	240	180	400	15	835
கோயம்புத்தூர்	180	180	280	..	640
மொத்தம்	1,770	1,440	2,450	165	5,825

தேவை நிலையிலுள்ள ஏழை மக்களுக்கும் இலவச சட்ட உதவி அளிக்கின்ற நோக்கத்திற்காக, சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவிப் பிரிவுகள் தொடங்கப்பெற்றுள்ளன.

(ஆ) சட்டக்குழு அமைப்பு :

இம்மாநிலத்தில் சட்டக்குழுவை அமைக்கும் செயற்குறிப்பிற்கு அரசு ஏற்கெனவே அனுமதியளித்தது. தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கொண்ட இக்குழுவின் அமைப்பு விரைவில் அறிவிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றபோது நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டுவரும் சட்டங்கள் அதற்குப் பின்வரும் காலத்தில்இயற்றப்பட்ட ஏனைய சட்டங்கள் ஆகியவை தற்போதுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக உள்ளதா என்பது குறித்து பரிசீலிப்பதற்காகவும் அவசியமேற்படின் அவற்றில் திருத்தங்கள் செய்வதற்குமான கருத்துக்களைத் தெரிவிப்பதே தற்போது ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள சட்டக்குழுவின் பணிகளாகும். அமைக்கக்கருதப்பட்டுள்ள சட்டக்குழு, மேற்சொன்ன சட்டங்கள், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் பல்வேறு தீர்ப்புக்களுக்கிணங்க, அத்தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளதா என்று பரிசீலித்தும், அவசியமேற்படின் இச்சட்டத்திருத்தங்கள் செய்வது குறித்து கருத்தைத் தெரிவிக்கும் பணியையும், பின்வரும் காரியங்களைக் கனிகக வகை செய்யும் நோக்குடன் சட்டக் குழு அமைக்க கருதப்பட்டுள்ளது.

அமைக்கக் கருதப்பட்டுள்ள சட்டக்குழு கீழ்க்கண்டவை குறித்து ஆலோசனை வழங்கும்:—

(அ) தற்போது செயலில் உள்ள சட்டங்களில் காணப்படும் விடுபாடுகளை மாற்றங்கள் மற்றும் திருத்தங்களின் மூலம் நீக்குதல்.

(ஆ) சமூக, பொருளாதார நிலைக்கு ஏற்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் சட்டம் இயற்றுதல்

(இ) மாநில-மத்திய அரசுகளுக்குடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான வழிகள்

(ஈ) நீதி நிருவாகத்தில் சீர்திருத்தங்களைச் செய்வதற்காக மிக நல்ல முறையிலும், விரைவான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது குறித்து பரிந்துரைகளைத் தெரிவித்தல்

(உ) மாநிலச் சட்டங்கள் தவிர, இம்மாநிலத்திற்கும் பொருந்தக்கூடிய மத்தியச் சட்டங்களில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்வது.

இ. ஆட்சி மொழிக் குழு :

(i) மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் ஆகியவற்றின் வழீ இயற்றப்படும் விதிகள், மத்தியச் சட்டங்கள், மத்திய அவசரச் சட்டங்கள், அவற்றின் கீழ் இயற்றப்படும் விதிகள், அறிவிக்கைகள் ஆகியவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்காக நீதிபதி திரு. எம். அனந்தநாராயணன் என்பவரைத் தலைவராகக் கொண்டு 1965ஆம் ஆண்டில் மாநில ஆட்சிமொழி (சட்ட ஆணையம்) முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆணையம் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது. கடைசியாக

[1993 ஏப்ரல் 23

சட்டப்பேரவை அரசுச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. எம். சண்முக சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்டு 1989ஆம் ஆண்டில் இக்குழு திருத்தியமைக்கப்பட்டது.

(ii) தற்போது, சட்டத்துறை கூடுதல் செயலாளர் அவர்களின் தலைமையின்கீழ் மாநில ஆட்சி மொழி (சட்ட) ஆணையம் தனிப்பிரிவாக மாற்றப்பட்டுவிட்டது. மிகுந்த திறமையை வளர்ப்பதற்கும் மொழிபெயர்ப்புப் பணியை நல்ல முறையில் விரைந்து திறம்பட முடிப்பதற்கும் மத்திய அரசு மற்றும் ஒரு சில இதர மாநிலங்களில் பின்பற்றப்பட்டுவரும் முறையில் இவ்வாறு செய்யப்பட்டது.

(iii) மத்திய அரசிடமிருந்து பெற்ற முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் மத்தியச் சட்டங்களை ஆட்சி மொழிப் சட்ட [illegible]வு மொழி பெயர்த்துள்ளது. இந்த ஆட்சி மொழி சட்ட பிரிவு இதுவரையில் மத்திய அரசிடமிருந்து மூன்று முன்னுரிமைப் பட்டியல்களைப் பெற்றுள்ளன. மத்திய அரசு அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்ற பெரும்பாலான மத்தியச் சட்டங்கள் மொழியாக்கம் செய்யப்பட்டு இறுதி வடிவம் பெற்று ஒப்புதல் அளிக்கப்படும் பல்வேறு நிலைகளில் உள்ளது. முன்னுரிமைப் பட்டியலில் இடம பெற்றுள்ள ஒருசில மத்தியச் சட்டங்கள்தற்போதயை திருத்தங்களையும் சேர்த்து மறுபடியும் மொழியாக்கம் செய்யப்பட்டு இறுதி வடிவம் பெற்று அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழில் மொழி பெயக்கப்பட்ட எட்டு மத்தியச் சட்டங்களுக்கு இந்திய குடியரசுத் தலைவர் சான்றளித்துள்ளார். இவற்றை மத்திய அரசிதழிலும் புத்தக வடிவிலும் வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தமிழ் மொழியாக்கம் 1988ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த இந்திய அரசியலமைப்பு மொழியாக்கம் குறித்து (1988ஆம் ஆண்டு பதிப்பு) பல்வேறு துறைகளிடமிருந்து எண்ணற்ற புகார்கள் வந்த காரணத்தால் அதன் பின் வந்த ஆணைக் குழு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 1988ஆம் ஆண்டு பதிப்பினைத் திருத்தி வடிவமைத்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட தமிழாக்கம் இம்மொழிபெயர்ப்பில் மாநில மற்றும் மத்திய அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு அச்சிடப்பட்டது. இந்திய அரசியலைமப்புச் சட்ட மொழியாக்கத்தின் திருத்தப்பட்ட பதிப்பு விரைவில் வெளியிடப்படும்.

1993 ஏப்ரல் 23]

ஈ. சட்ட இதழ் :

"தீர்ப்பு திரட்டு" என்ற சட்ட இதழ் திங்கள் தோறும் அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. சட்ட இதழ் வெளியிடுவது தொடர்பான பணிக்கென, மாவட்ட நீதிபதி நிலை II பதவித் தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியரையும் சார்நிலை நீதிபதி பதவி தரத்தில்இணைப்பதிப்டாசிரியரையும் மற்றும் உதவி ஆசிரியர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், தட்டச்சர்கள். படிதிருத்துபவர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் போன்ற பணியாளர்களை அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கென 1993–94ஆம் ஆண்டிற்குச் செலவு செய்வதென கருதப்பட்ட தொகை ரூபாய் 9.19 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தீர்ப்புத் திரட்டு என்ற திங்கள் தோறும் வெளியிடப்படும் தமிழ் சட்ட இதழ் வழக்குரைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதழ் ஒன்று ரூபாய் 10க்குக் கிடைக்கிறது.

14. முடிவுரை:

சுருங்கக்கூறின், நீதி நிருவாகம், வழக்காடும் பொது மக்களுக்காகச் சரியான, முறையான நீதி கிடைப்பதற்குப் பாடுபட வேண்டும். இதனை அடைவதற்கு, நீதிமன்ற அமைப்புகளுக்கு உரிய அடிப்படை வசதிகளையும் சூழலையும் அமைத்துத்தருதல் வேண்டும். வழக்காடும் பொது மக்கள், நீதிமன்ற அமைப்பினிடம் கொண்டுள்ள நம்பிக்கையும், நல்லெண்ணமும் என்றுமே குறைவுறாமல் இருத்தல் வேண்டும். இககத்துக்களை கவனத்தில் கொண்டு, தற்போதுள்ள தமிழ்நாடு அரசு, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உத்வேகத்துடன் செயலாற்ற அண்மைக் காலத்தில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், இயலக்கூடிய அனைத்து வழிகளிலும் போதிய ஆதரவு அளிப்பதன் மூலமாக வேகமும், தரமும் மிக்க பணி விரைந்து நடைபெறச் செய்துள்ளது. இந்த அரசு இனி வருகின்ற ஆண்டுகளில் முன்னேற்றப்பாதையில் நடைபோட்டு மேலும் செவ்விய முறையில் நீதி நிர்வாகத்தை நடத்திச் செல்ல கருதி யுள்ளது.

இணைப்பு 1

தமிழ்நாட்டில் நீதிமன்ற (அலுவலர்கள்) விவரங்கள்

வரிசை எண்.	மாவட்டத்தின் பெயர்.	மாவட்ட நீதிபதி நீதிமன்றம்.	சார்நிலை நீதிமன்றம்.	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.	மொத்தம்.	தலைமைக் குற்றவியல் நீதிமன்றம்.	குற்றவியல் நீதிமன்றம்.	மொத்தம்.	ஆக மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1	வட ஆற்காடு	2	5	14	21	1	25	26	47
2	தென் ஆற்காடு	2	6	13	21	1	22	23	44
3	செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ..	1	5	9	15	1	17	18	33
4	கோயம்புத்தூர்	2	6	7	15	1	18	19	34
5	நீலகிரி மாவட்டம்	1	—	3	4	..	2	2	6
6	பெரியார்	2	5	8	15	1	11	12	27

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7	தருமபுரி	1	3	4	8	1	7	8	16
8	கன்னியாகுமரி	1	3	6	10	1	7	8	18
9	மதுரை	2	6	7	15	2	15	17	32
10	திண்டுக்கல்-அண்ணா ..	1	2	5	8	..	7	7	15
11	புதுக்கோட்டை	1	1	3	5	1	5	6	11
12	இராமநாதபுரம்	1	1	2	4	1	5	6	10
13	காமராஜர்	1	1	5	7	1	7	8	15
14	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்		1	2	3	6	1	5	12
15	சேலம்	3	4	9	16	1	18	19	35
16	தஞ்சாவூர்	1	3	6	10	2	11	13	23
17	நாகப்பட்டிணம் காயிதே மில்லத்	1	2	6	9	..	7	7	16
18	திருச்சிராப்பள்ளி	2	6	14	23	1	19	20	43
19	திருநெல்வேலி	2	4	8	14	1	12	13	27
20	சிதம்பரனார்	1	1	4	6	..	7	7	13
									477

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	மாவட்ட நீதிபதி நீதிமன்றம். (3)	சார்நிலை நீதிமன்றம். (4)	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். (5)	மொத்தம். (6)	தலைமைக் குற்றவியல் நீதிபதி நீதிமன்றம். (7)	குற்றவியல் நீதிமன்றம். (8)	மொத்தம். (9)	ஆகமொத்தம். (10)
	சென்னை நகர்.								
	பெருநகர் குற்றவியல் நீதிமன்றம் ..	..	..	..	..	..	..	..	25
	நகர் உரிமையியல் நீதிமன்றம்	..	..	..	..	..	..	..	26
	சிறிய வழக்குகளின் நீதிமன்றம் ..	..	..	..	..	..	..	..	16
	பெரு மொத்தம்	30	66	136	232	18	227	245	544

477—67—540

53-145—52

இணைப்பு II.

1989, 1990, 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம், சார்நிலை நீதிமன்றங்கள் (உரிமையியல்) ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட தீர்ப்பு, வழங்கப்பட்ட விசாரணையில் உள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்:

வரிசை எண்.	நீதிமன்றங்களின் பெயரும் வருடமும்.	இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டில் தீர்ப்புகள் வழங்கு வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	1989.				
1	உயர்நீதிமன்றம், சென்னை ..	73,383	266,893	79,093	187,800
2	மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.	54,108	102,376	44,854	57,522
3	சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.	18,182	42,039	18,247	23,792
4	மாவட்ட நீதிமன்றங்கள் ..	40,285	49,698	40,522	9,176
5	துணை நீதிமன்றங்கள் ..	1,36,530	239,529	137,105	102,424
6	மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்	3,30,241	696,401	359,009	337,392

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	1990.				
1	உயர்நீதிமன்றம், சென்னை ..	85,644	2,73,444	73,886	1,99,558
2	மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.	45,238	1,02,760	46,239	56,521
3	சிறுவழக்கு நீதிமன்றம், சென்னை.	13,791	37,583	16,939	20,644
4	மாவட்ட நீதிமன்றங்கள் ..	52,340	61,516	49,824	11,692
5	துணை நீதிமன்றங்கள் ..	1,49,861	2,52,285	1,37,418	1,14,867
6	மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்.	3,76,673	7,14,065	3,70,863	3,43,202
	1991.				
1	உயர்நீதிமன்றம், சென்னை ..	82,629	2,82,187	66,687	2,15,500
2	மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.	43,965	1,00,486	47,445	53,041
3	சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.	12,592	33,236	16,207	17,029
4	மாவட்ட நீதிமன்றங்ள் ..	36,535	48,227	37,871	10,356
5	துணை நீதிமன்றங்கள் ..	1,32,394	2,47,261	1,08,990	1,39,171
6	மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்.	2,05,511	5,48,713	2,74,100	2,74,613

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1992.

1 உயர்நீதிமன்றம், சென்னை ..	91,026	3,07,054	72,438	2,34,616
2 மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.	43,666	96,757	42,977	53,780
3 சிறு வழக்கு நீதிமன்றம், சென்னை.	12,158	29,187	11,780	17,407
4 மாவட்ட நீதிமன்றங்கள்	31,874	42,230	31,370	10,860
5 துணை நீதிமன்றங்கள் ..	1,47,998	2,86,969	1,70,493	1,16,486
6 மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.	2,27,270	4,94,718	2,26,483	2,68,235

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II—தொடர்ச்சி.

சென்னை உயர் நீதிமன்றத்திலும் (குற்றவியல்) சார்நிலை நீதிமன்றங்களிலும் 1989, 1990, 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் தொடரப்பட்ட, முடிவு செய்யப்பட்ட, விசாரணையிலுள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள்.

வரிசை எண்.	நீதிமன்றங்களின் பெயரும் வருடமும்.	இவ்வாண்டில் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	1989.				
1	உயர்நீதிமன்றம், சென்னை ..	19,016	39,641	13,459	26,182
2	செஷன்ஸ் நீதிமன்றங்கள் ..	7,811	14,203	7,519	6,684
3	பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்.	3,22,897	3,53,428	3,16,979	36,449
4	நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றம்.	10,22,406	12,67,579	9,81,739	2,85,840

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	1990.				
1	உயர் நீதிமன்றம், சென்னை ..	16,316	42,498	23,620	18,878
2	செஷன்ஸ் நீதிமன்றங்கள் ..	7,653	14,337	6,941	7,396
3	பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்.	2,85,931	3,22,38	2,75,284	47,096
4	நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்	8,35,306	11,21,146	8,59,285	2,61,861
	1991.				
1	உயர்நீதிமன்றம், சென்னை. ..	24,393	43,271	23,167	20,104
2	செஷன்ஸ் நீதிமன்றங்கள் ..	7,591	14,915	7,313	7,602
3	பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்.	3,16,001	3,63,097	2,96,268	66,829
4	நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.	7,58,987	10,20,848	7,73,719	2,47,129
	1992.				
1	உயர்நீதிமன்றம், சென்னை ..	30,024	55,791	25,612	30,179
2	செஷன்ஸ் நீதிமன்றங்கள் ..	10,897	18,481	9,616	8,855
3	பெருநகர மாஜிஸ்ட்டிரேட்டுகள் நீதிமன்றம்.	3,05,448	3,72,277	3,21,771	50,506
4	நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.	8,88,446	11,35,575	8,98,079	2,37,496

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989, 1990, 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர்நீதிமன்றம், சார்நிலை நீதி மன்றங்கள் ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட, தீர்ப்பு வழங்கப்பட்ட, விசாரணையில் உள்ள வழக்குகள் பற்றிய புள்ளி விவரங்கள் சுருக்கம்.

தொடர் எண்	ஆண்டு.			இவ்வாண்டில் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	தீர்ப்பு வழங்கு வதற்குரிய வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டில் தீர்ப்பு வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை
(1)	(2)			(3)	(4)	(5)	(6)
1	1989	உரிமையியல்	..	6,52,729	13,96,936	6,78,830	7,18,106
		குற்றவியல்	..	13,72,130	16,74,851	13,19,696	3,55,155
		மொத்தம்	..	20,24,859	30,71,787	19,98,526	10,73,261
2	199υ	உரிமையியல்	..	7,23,547	14,41,653	6,95,169	7,46,504
		குற்றவியல்	..	11,12,574	15,00,361	11,65,130	3,35,231
		மொத்தம்	..	18,36,121	29,41,814	18,60,299	10,81,735

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3	1991	உரிமையியல்	..	5,13,596	12,60,110	5,50,400	7,09,710
		குற்றவியல்	..	11, 6,900	14,42,131	11,00,467	4,31,664
		மொத்தம்	..	27,02,241	16,50,867	16,50,867	10,51,374
4	1992	உரிமையியல்	..	5,53,992	12,56,915	5,55,531	7,01,384
		குற்றவியல்	..	12,34,797	15,82,124	12,55,078	3,27,046
		மொத்தம்	..	17,88,789	28,39,039	18,10,609	10,28,430

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

தமிழ்நாட்டில் சிறைகள், மறுவாழ்வு இல்லங்கள், மற்றும் காப்பு முகாமின் நிருவாகம்

மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு எண் 14

(250-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறியைக் காண்க)

1993 - 94.

பகுதி-1

சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (1993-94)

I. தொடக்கப் பார்வை :

நாட்டின் குற்றவியல் நீதிமுறை நிர்வாக அமைப்பில் ஒன்றுக்கொன்று இணைந்த, குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தும் முகத்தான், நான்கு முக்கிய அங்கங்கள் உள்ளன. காவல் துறை குற்றம் செய்தோரை கண்டுபிடித்து, புலனாய்வு செய்து வழக்குகளைப் பதிவு செய்யும் பணியில் ஈடுபடுகின்றது. இவ்வாறான நேர்வுகளில் நீதிமன்றங்களில் வழக்காடும் பணியினை அரசு வழக்குரைஞர்கள் அமைப்பு ஏற்று செயல்படுகின்றது. நீதித்துறை வழக்கினை விசாரித்து, நிரபராதியை பாதுகாத்து, குற்றவாளிகளை தண்டித்து தனது கடமையை ஆற்றுகிறது. நீதித்துறையின் ஆணையின் மூலமாக தண்டனை வழங்கப்பட்ட கைதிகளை சிறைத்துறை சிறைப்படுத்தி வைக்கிறது. எனவே குற்றவியல் நீதிமுறை நிர்வாக அமைப்பில் சிறைத் துறை கடைசி அங்கமாக விளங்குகின்றது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

2 பழங்காலங்களில் குற்றவாளிகளுக்கு சிறை மற்றும் இதர தண்டனைகள் வழங்கும் பொழுது பழிக்குப் பழி வாங்குதல் மற்றும் அச்சுறுத்தலே நோக்கமாக இருந்து வந்தது. இந்த அணுகு முறையினை மாற்றி 1919-20-ல் அமைக்கப்பட்ட இந்திய சிறைச்சாலைக் குழு சிறைகளில் சீர்திருத்தி, நெறிபடுத்தும் மரபினை கைக்கொள்ள வேண்டுமென பெரிதும் வலியுறுத்தியது. இவற்றின் அடிப்படையில் சிறைத்துறையின் குறிக்கோள் குற்றவாளிகளை சிறையில் அடைத்து அவர்கள் இனி மேலும் குற்றம் இழைக்காத வண்ணம் அச்சுறுத்தி தடுப்பதுடன் நின்று விடுவதில்லை. அதற்கு மேல் அவர்கள் விடுதலையாகி வந்த பிறகு சமுதாயத்தில் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் கலந்து பழகவும் பயனுள்ள குடிமக்களாக வாழவும் இயலச் செய்யும் வகையில் அவர்களை சீர்திருத்தி, புதுவாழ்வு அளித்து மீண்டும் சமுதாயத்தில் இரண்டற கலக்குமாறு செய்வதும் சிறைத்துறையின் முதன்மையான குறிக்கோளாகும். இக்குறிக்கோளை கருத்தில் கொண்டு சிறைக்கைதிகளின் நலனுக்காக பல சீர்திருத்தத் திட்டங்களும், சிறையிலுள்ள நிலைமைகளை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போதைய அரசு பதவியேற்ற பிறகு சிறைத்துறையின் தேவைகள் ஒருங்கிணைந்த முறையில் பரிசீலிக்கப்பட்டு அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், சிறைகளின் நலனுக்கான திட்டங்களும், சிறை நிர்வாகத்தை சிறந்த முறையில் செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

II. (அ) நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள்:

3. தமிழ்நாட்டில் சிறைகளின் நிர்வாகம் சிறைத்துறையிடம் நிலைபெற்றுள்ளது. பின்வரும் அமைப்புக்கள் சிறைத் துறை சம்பந்தப் பட்டவையாகும்:

1. மத்திய சிறைச்சாலைகள்	..	8
2. மகளிர் தனிச் சிறைச்சாலைகள்	..	2
3. தனிக் கிளைச் சிறைச்சாலைகள்	..	7
4. கிளைச் சிறைகள்	..	113
5. திறந்தவெளிச் சிறைச்சாலை	..	1
6. சேலம் மத்திய சிறைச்சாலையுடன் அமைந்த பண்ணை சிறைச்சாலை	..	1
7. இளைஞர் சீர்திருத்தப்பள்ளி	..	1

4. தற்போது, உயர் தரத்திலுள்ள இந்திய காவல்துறை அதிகாரி சிறைத்துறைத் தலைவராக தலைமைப் பொறுப்பில் உள்ளார். அவருக்கு

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 ஏப்ரல் 23]

உதவியாக சரக சிறைத்துறைத் துணைத் தலைவர்கள் நால்வர் உள்ளனர். முறையே சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களில் இவர்களது சரக அலுவலகங்கள் அமைந்துள்ளன. சரக சிறைத்துறைத் துணைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சரக எல்லைக்குள் வருகின்ற மத்திய சிறைச்சாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மீது அதிகார வரம்பை பெற்று இருப்பார்கள். மத்திய சிறைச்சாலை ஒவ்வொன்றும் ஒரு சிறை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகின்றது. அவரது கட்டுப்பாட்டு அதிகாரத்தின் கீழ் பல நிருவாக, மருத்துவ, தொழில் நுட்ப அலுவலர்களும், பணியாளர்களும் மற்றும் சார்நிலை அமைச்சுப் பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

5. குற்றவாளிகளை சீர்திருத்தும் பொருட்டு சிறைத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் நன்னடத்தை பிரிவு இயங்குகின்றது. நன்னடத்தைப் பிரிவு சிறைத்துறைத் தலைவரின் ஒட்டு மொத்த கட்டுப்பாட்டுக்கும், மேற்பார்வைக்கும் உட்பட்டு தலைமை நன்னடத்தை கண்காணிப் பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. வட்டார நன்னடத்தை அலுவலரைக் கொண்ட ஆராய்ச்சிப்பிரிவும் அங்கு உள்ளது. இப்பிரிவு 1958ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தை சட்டத்தை செயல்படுத்துவதற்கும், கைதிகளின் புதுவாழ்விற்கும் பொறுப்பு வகிக்கின்றது.

6. இப்பிரிவில் 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். குற்றவாளிகளின் சுற்றுப்புற சூழ்நிலைகள், அவர்களின் நடைமுறை பழக்கங்கள் குறித்து விசாரணை செய்தல், நீதிமன்றத்திற்கு உதவுதல், பிணையத்தின் பேரில் உரிய காலத்திற்கு முன்னரே விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள், நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்யப்பட்ட கைதிகளையும், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்பு இல்லம் ஆகியவற்றிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகள் ஆகியோரைக் கண்காணித்தல் ஆகியவை நன்னடத்தை அலுவலரின் முக்கிய அலுவல்கள் ஆகும். இந்த நன்னடத்தை அலுவலர்களின் பணியை வட்டார நன்னடத்தை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர். விடுதலை செய்யப்பட்ட சிறைக்கைதிகள் செவ்விய முறையில் புது வாழ்வினைத் தொடங்க, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறவும், இந்த நன்னடத்தை அலுவலர்கள் ஏற்பாடுகள் செய்கின்றனர்.

7. மறுவாழ்வு இல்லங்களும், மேல்பாக்கத்தில் உள்ள அரசினர் காப்பு முகாமும், தலைமைக் கண்காணிப்பாளர் ஒருவரது கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. இவ்விரண்டு பிரிவுகளும் சிறைத்துறைத் தலைவரின் பொதுவான கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிகின்றன.

[1993 ஏப்ரல் 23

8. இத்துறையின் நிர்வாக அமைப்பினை காட்டுகின்ற அமைப்பு வரைபடம் ஒன்று இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

9. இத்துறையின் பணியாளர் தொகுதியில் 4189 அலுவலர்களும், பணியாளர்களும் உள்ளனர்.

(ஆ) சிறை செயல்பாட்டு நடைமுறை

(அ) சிறைகளில் இடவசதி :

10. தமிழ்நாடு முழுவதும் பரவலாக சிறைச்சாலைகள் உள்ளன. எல்லா சிறைச்சாலைகளிலும் (கிளைச் சிறைச்சாலைகளைச் சேர்த்து) உள்ள அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 18,228 ஆகும். அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4250 பேர்கள் (பெரியவர்கள் 4000, சிறுவர்கள் 250) அனுமதிக்கப்பட்ட இடவசதி உள்ளது. மேல்பாக்கத்தில் உள்ள அரசு காப்பு முகாமில் 950 பேர்கள் (770 ஆண்கள், 180 பெண்கள்) அனுமதிக்க இடவசதி உள்ளது. தற்போது பதிவு செய்யாத இலங்கை அகதிகள் இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டையிலும் மற்றும் 11 கிளைச் சிறைச்சாலைகளிலும் வைக்கப்பட்டு அவர்கள் வருவாய்த் துறையின் பாதுகாப்பில் உள்ளனர். மேலும் பூந்தமல்லியில் உள்ள கிளைச் சிறைச்சாலை மிகுந்த பொருள் செலவில் மாற்றி அமைக்கப்பட்டு முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை சதி வழக்கில் கைதான கைதிகளை வைப்பதற்காக தனிக்கிளைச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கு குற்றவாளிகள் தற்போதுள்ள தனிக்கிளைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) சிறைவாசிகளின் தண்டனையைச் சார்ந்து சிறைகளின் வகைப்பாடு :

11. பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாக தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். காவல்வைப்பு மற்றும் விசாரணைக் கைதிகளும் ஒரு திங்களுக்குக் குறைவாக தண்டனை பெற்றவர்களும் கிளைச்சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த கைதிகள், இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். பெண் கைதிகளும், ஆண் கைதிகளும் தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்டவர்கள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். சிறைக்குற்றம் செய்யும் சிறைக் கைதிகள் இதர சிறைக் கைதிகளை கெடுத்துவிடக் கூடாது என்பதற்காக பிரித்து வைக்கப்பட்டு கடலூரில் உள்ள மத்தியச் சிறையில் வைக்கப்படுகின்றனர். ஒரு திங்களுக்கு

1993 ஏப்ரல் 23]

மேலாக சிறைத் தண்டனை பெற்ற பெண் கைதிகள் வேலூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச்சிறையில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைகளில் பெண்களே அதிகாரிகளாக இருந்து நிர்வாகிக்கின்றனர். இளஞ்சிறைக் கைதிகளை காவலில் வைத்து இருப்பதற்காக புதுக்கோட்டையில் சீர்திருத்தப்பள்ளி இயங்கி வருகின்றது. மனநோய்வாய்ப்பட்ட குற்றவாளிகள் சென்னை அரசினர் மனநல காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோய் கைதிகளுக்காக தனிச்சிறைக்கூடங்கள் வேலூர் மத்திய சிறையில் உள்ளன.

(இ) கைதிகளின் வகைப்பாடு :

12. சிறைக் கைதிகள், ஏ, பி, என இரு பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றனர். விசாரணை மற்றும் காவல் வைப்பு கைதிகளுக்கு சிறப்பு வகுப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. ஒரு கைதியின் சமூக தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை, முன் வரலாறு, சொந்தமாக வைத்துள்ள சொத்து விபரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அக்கைதிக்கு `ஏ' வகுப்பு முதலில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டு, பின்னர் அரசாலும் உறுதிபடுத்தப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி, பழக்க வழக்கம், ஆகியவற்றால் உயர்தர வாழ்க்கை முறையில் பழக்கப் பட்டிருக்கும் சிறைக் கைதிகள் `ஏ' வகுப்புப் பெறத்தகுதியுடையவராவர். முற்றிலும் நாகரிகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறையில் நடந்துகொண்டு குற்றத்தைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவருக்கும் `ஏ' வகுப்பு அளிக்க தகுதியில்லை. சமுதாயத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததற்காக தண்டிக்கப்பட்ட சிறைக்கைதிகளும் `ஏ' வகுப்பைப் பெற தகுதியற்றவராவர். `ஏ' வகுப்பைப் சேராத இதர சிறைக் கைதிகள் `பி' வகுப்பைப் சேர்ந்தவர்களாவர்.

III. சிறப்பாகக் கூறப்பட வேண்டிய சிறைகளின் அமைப்புகள்:

(அ) திறந்த வெளிச்சிறை :

13. தற்போது இம்மாநிலத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் திறந்தவெளி சிறை ஒன்று உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது.

சிறைகளில் உள்ள நெருக்கடியை தவிர்த்தலும் கைதிகளுக்கு நவீன வேளாண்மை முறையில் பயிற்சியளிப்பதும் இச்சிறையின் நோக்கமாகும். இதற்காக சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறையில் உதவி வேளாண்மை அதிகாரி ஒருவர் உள்ளார்.

[1993 ஏப்ரல் 23

(ஆ) சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை:

14. (i) சீர்திருத்தப் பள்ளிகளில் 16-23 வயதுடைய இளைஞர்களே அனுமதிக்கப்படுகின்றனர். கைதிகளுக்குப் பின்வரும் தொழில்களில்/ வாழ்க்கைத் தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது:

1. தச்சுவேலை
2. கருமார்வேலை
3. புத்தகம் கட்டுதல்
4. தையல் வேலை
5. வேளாண்மை
6. கட்டுமான வேலை
7. சலவை தொழில்
8. வாத்தியம் இசைத்தல்
9. சமையல் போன்ற வீட்டு வேலை

(ii) விடுதலையான பின்னர் வேலை செய்ய இயலும் வகையில் கைதிகளுக்குச் சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இச்சீர்திருத்தப் பள்ளியின் துயிற்கூட கட்டிடங்களில் ஒன்று, இளைஞர் மையமாக மாற்றப்பட்டு, 16-23 வயதுடைய குற்றவாளிகள் இம்மையத்தில் தங்க வைக்கப்படுகின்றனர்.

(iii) கைதிகள் 23 வயது வரையில் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். 1984ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின்கீழ் துயிற்கூடம் `சிறையாக' அறிவிக்கப் பட்டுள்ளது. அவர்கள் விடுதலைக்குப் பின்னர், எந்திரம், பசு அல்லது எருமைகள் வாங்க விரும்பினால் அவற்றைச் சுலபத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(iv) தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு பரிந்துரைத்தபடி, சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 பேர்களுக்கு 15 நாட்களுக்கு ஆண்டு முகாம் நடத்தப்படுகிறது.

15. புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியில் இலங்கை அகதிகள் தங்கியிருப்பதால், கைதிகள் தற்போது திருச்சிராப்பள்ளி, மத்திய சிறையில் தனியாக வைக்கப்பட்டுள்ளனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

(இ) புழலில் அமையும் புதிய சிறைச்சாலை:

16. தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினை நகருக்கு வெளியே மாற்றும் பொருட்டு, புழல் கிராமத்தில் தற்போது சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. அரசு, முதல் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக இதுவரை ரூ. 320.97 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள்யாவும் நிறைவு பெற்றுவிட்டன. தற்போது சிறை நிர்வாகத்தினை நவீனப்படுத்தும் மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் அரசு, ரூ. 79.48 இலட்சத்திற்கான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. தற்போது ரூ. 294.07 இலட்சம் செலவில் மூன்றாம் கட்ட பணிகளுக்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

17. தற்போது இந்த புதிய சிறையில் இலங்கைத் தமிழ் அகதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் புதிய இடத்திற்கு மாற்றப்பட்ட பின், தற்போதுள்ள தண்டனைக் கைதிகள் இவ்வளாகத்திற்கு மாற்றப்படுவர். ஆயினும் விசாரணைக் கைதிகள் தற்போது பூங்கா நகரிலுள்ள மத்திய சிறையிலேயே வைக்கப்படுவர். இரயில்வேத் துறையின் விரிவாக்கப் பணிக்காக 1.05 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால், சென்னை மத்திய சிறை, மூடிய சிறையாக மாற்றப்பட்டு, 1.1.93 அன்று திறந்து வைக்கப்பட்டது.

IV. வரவு-செலவுத் திட்டம்-ஒரு கண்ணோட்டம்:

18. சிறைத்துறையில் 1989-90ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவு குறித்த விபரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	செலவு	வரவு
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்)
1989-90	1654.46	358.81
1990-91	1989.69	266.72
1991-92	2103.25	23.94
1992-93	2381.63	36.10
1993-94 (நிதிநிலை மதிப்பிடு)	2414.81	36.10

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

V. சிறைகளில் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் முழுமையான வசதிகள் மற்றும் சிறப்புரிமைகள்.

19. கைதிகளையும், குற்றம் செய்தவர்களையும் விசாரணைக்கு முன்னர் அல்லது குற்றவாளிகளாக அனுமதித்து காவலில் வைக்க ஏற்பாடு செய்யப்படும் இடம் சிறைச்சாலையாகும். கைதிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு வசதிகள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) உணவு:

20. முற்காலங்களில் பொதுவாக சிறை வாழ்க்கை என்பது சிறைக்கைதிகளுக்கு கேழ்வரகு, களி போன்ற தரமற்ற உணவு வழங்கப்படுவது மற்றும் கல் உடைப்பது போன்ற கடின வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது என்ற நிலை இருந்தது. தற்போது இதுபோன்ற துன்பங்கள் இல்லை. தற்போது சிறைக் கைதிகளுக்கு சுழற்சி முறையில் வாராந்திர அட்டவணையின் கீழ் நல்ல உணவு வழங்கப்படுகிறது.

21. 'ஏ' வகுப்பு சிறைக் கைதிகளுக்கு கொடுக்கப்படும் பல்வேறு வகை உணவின் விவரமும், அவற்றின் ஒரு நாள் செலவும் வருமாறு:-

	நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.	பை.
சைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக்கைதி ஒருவருக்கு :	22	10
சைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக்கைதி ஒருவருக்கு :	19	95
அசைவ உணவருந்தும் வேலை செய்யும் சிறைக்கைதி ஒருவருக்கு :	22	50
அசைவ உணவருந்தும் வேலை செய்யா சிறைக்கைதி ஒருவருக்கு :	19	40

22. 'பி' வகுப்பு சிறைக் கைதிகள், சாதாரண காவலில் வைக்கப்பட்டவர்கள், விசாரணையிலுள்ள சிறைக் கைதிகள் ஆகியோருக்கு திருத்தியமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உணவு வகைகள் வழங்குவதற்கான செலவு வருமாறு:-

	அரிசி உணவு	கோதுமை உணவு
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ.பை.
வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர்	12 90	12 75

1993 ஏப்ரல் 23]

23. பாலூட்டும் பெண் சிறைக்கைதிகளுக்கு சிறப்பு உணவாக 1/2 லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைக்கைதிகளுடன் தங்கும் ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்படி, க்ளாஸ்கோ/அமுல் போன்ற குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

24. 'ஏ' வகுப்பு கைதிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஹார்லிக்ஸ் போன்ற உணவு பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர், கைதிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

25. பொங்கல், சுதந்திர தினம் ஆகிய நாட்களில் சிறைக்கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு-உணவு வழங்கப்படுகிறது.

(ஆ) உடையும் படுக்கையும்

26. 'ஏ' வகுப்பு சிறைக்கைதிகள் சொந்தப் படுக்கையை பயன்படுத்தவும், வேலை நேரத்தை தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை நேரத்தில் அவர்கள் சிறைச்சாலை உடையில் இருக்க வேண்டும். 'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள் அவர்களின் உறவினர்களைக் காணும்போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ஆனால் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணிய வேண்டும். பெண் சிறைக்கைதிகளுக்கு இரண்டு டவல்களும், மூன்று ஜோடி வழக்கமான உடைகளும் வழங்கப்படுகிறது. ஆயுள் தண்டனை பெண் சிறைக்கைதிகளுக்கு அரக்கு நிற சேலையும், மற்ற பெண் சிறைக்கைதிகளுக்கு நீலநிற சேலையும் வழங்கப்படுகிறது.

(இ) இதர வசதிகள்:

27. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக சிறைக் கைதி ஒவ்வொருவருக்கும் திங்களுக்கொரு முறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குச் சீகைக்காய்த்தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்தியச் சிறைச் சாலையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைக் கைதிகளுக்குச் சுத்தம் செய்வதற்கு கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை

உடைய அனைத்து வகுப்புச் சிறைக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்கு தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

28. அரசு தற்போது 'பி' பிரிவு வகுப்பு சிறைக்கைதிகள் தங்களது துணிகளை சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது செலவில் சலவை செய்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

29. 'ஏ' வகுப்புச் சிறைக் கைதிகள், மரச் சாமான்கள், கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும் தேவைப்படும் அவர்களது சொந்தப் பாத்திரங்கள், புகையிலை ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப் படுகிறார்கள். தண்டனைச் சிறைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும் அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கிட்டும், இரவு காவல்காரர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

30. சிறைக் கைதிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையில் உள்ள இளைஞர் சீர்திருத்தப் பள்ளியிலும், முடி வெட்டுபவர்கள் உள்ளனர்.

(ஈ) மருத்துவம் மற்றும் துப்புரவு வசதி:

30. சிறை நிருவாகத்தினால் சுகாதார வசதி மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவைகள் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் பெண்கள் தனி சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனைகள் உள்ளன. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும் ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், இரண்டு அல்லது மூன்று மருத்துவ உதவியாளர் களும் உள்ளனர். கண் மருத்துவம் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் அரசு செலவில் தேவைப்படுகின்ற கைதிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும் சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் கைதிகளுக்கு பல் நோய் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. வேலூர் மத்திய சிறையில் தொழுநோய் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, தனிக்கூடங்களில் வைக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக இயற்கை முறை மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை, உள்நோய் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் சென்னை அரசு

1993 ஏப்ரல் 23]

மனநல காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர் அரசு தற்போது அனை422 423த்து மத்திய சிறைகளிலும் நோயுள்ள சிறைவாசிகளை மருத்துவம்னைக்கு எடுத்துச் செல்ல ஒரு நோயாளி ஊர்தி வழங்கி உள்ளது.

32. அனைத்து மத்திய சிறை, இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச்சிறை வேலூரில் இரத்தப் பரிசோதனை நிலையம் அமைக்கவும் மற்றும் இ.சி.ஜி. சாதனம் வாங்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

33. சுற்றுப்புற மற்றும் துப்புரவு வசதிகள் பொறுத்தவரை அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச்சிறைகளிலும் புதுக் கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும் தனிக் கிளை சிறையிலும் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(உ) உள் மற்றும் வெளித் தொடர்பு வசதிகள்:

(1) நேர்காணல் மற்றும் கடிதங்களும்:

34. 'ஏ' வகுப்பு சிறைக் கைதிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதுவதற்கும், பெறுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒருசமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைக்கைதிகள் மாதத்திற்கு நான்கு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(2) செய்தித்தாள்களும் குறித்த கால வெளியீடுகளும்:

35. அரசுச் செலவில் 'பி' வகுப்புச் சிறைக் கைதிகளுக்கு கீழ்க்கண்ட நாளிதழ்கள் 40 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதம் வழங்கப்படுகிறது.

1. தினமணி
2. தினத்தந்தி
3. தினமலர்
4. இந்து
5. நமது எம்.ஜி.ஆர்.

ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு இந்து நாளிதழ்கள் வழங்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட கால முறை பத்திரிக்கைகள் 100 பேருக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

36. அனைத்து வகுப்புச் சிறைக்கைதிகளும் தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளின் பயனுக்காக நல்ல தரமான புத்தகங்கள் சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும், புத்தகங்கள் பெறப்பட்டு, சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள் தேவையெனக் கருதினால் மாவட்டக் கல்வி அதிகாரி மற்றும் அவர்களது உதவியாளர்களைக் கலந்து ஆலோசித்துத் தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியலிலுள்ள புத்தகங்களை வாங்குவதற்கு இயலும் வகைகளில் அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

(ஊ) சிறைவாசிகளுக்கான பொழுது போக்கு வசதிகள்:

37. ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளிலுள்ள, எல்லா சிறைக் கைதிகளும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறையில் பெண் சிறைக் கைதிகள் வளை பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச் சாலைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் சிறைக் கைதிகளுக்கு கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்கு, சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்த அரசு அனுமதித்துள்ளது. தற்போது, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை, வேலூர், மதுரை மற்றும் திறந்த வெளிச் சிறை சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் பொது மக்கள் சேவை செய்பவர்களால் தொலைக்காட்சிப் பெட்டிகள் சிறைவாசிகளின் உபயோகத்திற்காக வழங்கப்பட்டுள்ளன.

(எ) சிறைவாசிகளுக்கு கல்வி வசதி:

38. சிறைத்துறை நிருவாகத்தினரால் சிறைக் கைதிகளின் கல்வித் தேவைகள் கவனித்துக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்று ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் கைதிகளுக்கு கல்வி புகட்டப்படுகிறது. கல்வி பயிற்சிக்கான பொருட்கள் மாநில திறமையளிக்கும் நிறுவனம் மூலமாக சிறைகளுக்கு வழங்கப்படும். சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை

1993 ஏப்ரல் 23]

விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். அஞ்சல் கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல். பி.எட். போன்ற கல்வித் தேர்வுகளையும் எழுத சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு சிறைக்கைதி பி.எச்டி. செய்கிறார் என்பது மனநிறைவளிக்கும் செய்தியாகவுள்ளது. இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வு கட்டணம் குறித்த செலவு, இதர இடை நிகழ் செலவு ஆகிய செலவுகள் முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. சிறைக் கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறு முறையும் அரசு செலவில் தேர்வு எழுதலாம். இது போன்று மொத்தம் மூன்று தடவை தேர்வுக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைக்கைதிகள் தேர்வு எழுத செல்லும்போது அவர்கள் சங்கடப்படாமல் இருக்க சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதே போன்று அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். தற்போது 60 சிறைக்கைதிகள் உயர் கல்வி கற்கின்றனர். நீதி அல்லது மதம் சம்பந்தமாக போதனைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதி நெறி வகையான போதனைகளும் விருப்பப்படும் கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

(ஏ) சிறைக்கைதிகளை விடுப்பில் விடுத்தல்:

39. மூன்று ஆண்டு ஆரம்ப சிறைத் தண்டனை அனுபவித்துள்ளவரும், இதுவரையில் விடுப்பில் செல்லாதவருமான சிறைக்கைதிகளுக்கு முதலில் ஒரு மாத சாதாரண விடுப்பு சிறைத்துறைத் துணைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. தனி நேர்வுகளில் இந்த விதியினை தளர்த்தி காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது. இன்னும் 3 ஆண்டுக் காலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கைதிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின், வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது. இவ்விடுப்புடன் சிறைவாசிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/ கணவன்/மனைவி/ சொந்த மகன்/சொந்த மகள்/சொந்த சகோதரி/சொந்த சகோதரன் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப் பட்டிருந்தாலோ அல்லது இறந்து விட்டாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், சிறைவாசிகள் அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களான சொந்த மகன், சொந்த மகள்/ சொந்த சகோதரர்/ சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும் சிறைக் கண்காணிப்பாளர்களால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு ஓர் ஆண்டிற்கு

15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 4 முறைகளில் சிறைக்கைதியின் வசதிக்கேற்ப (6+3+3+3 என) அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் சிறைவாசியின் நடத்தை நன்முறையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுகிறது.

(ஐ) தண்டனைக் குறைப்பு :

40. (அ) சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறைப்பென்பது மிக முக்கியமான பயன் அளிப்பதாகவும், உரிமையாகவும் உள்ளது. சிறைக்கைதிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைக்கைதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைக்கைதிகள் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக்குறைப்பும், சாதாரணவகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. சிறைப் பணிகளுக்காக ஞாயிறு அன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும், பணிபுரிய வேண்டிய கைதிகளுக்கு இவ்விதிகளின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படுகிறது. தண்டனைக் கைதியாக இருந்து பின்னர் கைதிக் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணிவரும் சிறைக்கைதிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓராண்டிற்கு 30 நாட்களும், சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக்கால சிறப்புத் தண்டனைக் குறைப்பும், இரத்த தானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரு சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகின்றன. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர ஆயுள் தண்டனை அடைந்த மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனையடைந்த சிறைக்கைதிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஒவ்வொரு சிறையிலுமுள்ள அறிவுரைக் கழகம் பரிசீலனை செய்கிறது.

(ஆ) அந்த சிறைக்கைதியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளின் அதாவது மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைக்கைதியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிக்க, அரசின் பரிசீலனைக்காக இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

1993 ஏப்ரல் 23]

(இ) சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யூ. பி. எண். 3,430/82, நாள் 2-11-1983ல் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஆயுள் தண்டனையடைந்த சிறைக்கைதிகளை முன்விடுதலை செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக பின்பற்றச் சில வழிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. இந்த ஆணையின்படி, ஒரு ஆயுள் தண்டனை அடைந்த சிறைவாசி 10 1/2 ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டும். 10 1/2 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனையடைந்த சிறைவாசிகளின் நேர்வு மட்டுமே முன் விடுதலைக்காக அறிவுரைக் கழகத்தால் பரிசீலனை செய்யப்படுகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ பிரிவின்படி ஆயுள் தண்டனை பெற்ற சிறைக்கைதிகள் (அதாவது 18-12-1978 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ தண்டனையடைந்த வர்கள்) 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே அறிவுரைக் கழகத்தால் முன் விடுதலைக்காக பரிசீலனை செய்யப்படுகிறார்கள். இவ்வகையான நேர்வுகள் 18-12-1992-க்குப் பின்னர்தான் பரிசீலனைக்கு வரும்.

(ஈ) 18-12-1978-க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற வியாதியுள்ள சிறைவாசிகளை மருத்துவக் காரணங்களை முன்னிட்டு முன்விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

(உ) புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்தவரையில் தண்டனைக் காலம் முடியும்முன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. ஆனால் இது குறித்து பின்பற்றப்படும் நடைமுறை வேறாகும். 1925ஆம் ஆண்டு சீர்திருத்தப்பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, நல்லிணக்கத்தின்பேரில் விடுதலை செய்யப் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கை, தொழிற் பயிற்சி குறித்த விவரங்களையும் உரிய விசாரணை செய்து, அவற்றின் மூலம் பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம் தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களாயிருந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள நன்னடத்தை அலுவலர்களுக்கும், சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளருக்கும், சீர்திருத்தப்பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பிவைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காகப் பார்வையிடும் குழு பரிந்துரைத்துள்ள இளங்குற்றவாளிகள் பற்றி பரிசீலித்து, பின்னர் சிறைத்துறைத் தலைவர் ஆணை பிறப்பிக்கிறார்.

ஊ. அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை எண். 1762, உள்துறை (சிறை: 6), நாள் 20-7-1987-ல் கீழ்க்காணும் வகையைச் சார்ந்த சிறைவாசிகளின் நேர்வுகள் முன்விடுதலைக்காக பரிசீலிக்கப்படக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.-

(i) கற்பழிப்பு, பொய் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்கான தண்டனை பெற்ற சிறைவாசிகள், பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 489-ஏ, 489-பி மற்றும் 489-டி ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

(ii) பொருளாதாரக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களை பதுக்கி வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத்தை தவறாகப் பயன் படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(iii) லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற சிறைவாசிகள், பெண்கள் மகளிர் விபச்சாரத் தடைச் சட்டம், மருத்துவச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

(ஒ) தற்போதைய அரசு பதவியேற்றபின் 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனைக் குறைப்புகள்:

41. 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளையொட்டி வழங்கப்பட்ட சிறப்புத் தண்டனைக் குறைப்பினால் 209 ஆயுள் தண்டனை சிறைக்கைதிகளும், 33 பெண் சிறைக்கைதிகளும் மற்றும் குறைந்த தண்டனை பெற்ற 713 சிறைக்கைதிகளும் பயனடைந்தனர்.

42. 1993 ஆம் ஆண்டிலும் 18-12-1978 அன்றோ அதற்குப் பிறகோ ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு, பன்னிரண்டு ஆண்டுகள் சிறைவாசம் கழித்த அன்னத்து சிறைவாசிகளையும் ஒரு சில நிபந்தனைகளின் பேரில் நல்லெண்ணம் மற்றும் மனித நேயத்தின் பேரில் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டது. 10 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த அனைத்துப் பெண் சிறைக்கைதிகளையும் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டது.

1993 ஏப்ரல் 23]

43. கொலை, கொள்ளை மற்றும் கள்ளக்கடத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்து வருவோர்தவிர மற்ற அனைவருக்கும் சிறப்புத் தண்டனைக் குறைப்பு, பெண் சிறைக்கைதிகளாயின் முழு தண்டனை குறைப்பும், ஆண் சிறைக்கைதிகளாயின் 6 மாதங்கள் தண்டனைக் குறைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்த சிறப்புத் தண்டனைக் குறைப்பு 24-2-93 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

44. இந்த சிறப்புத் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 134 ஆயுள் தண்டனை சிறைக்கைதிகளும், ஆயுள் தண்டனைப் பெற்றிராத 23 பெண் சிறைக்கைதிகளும் மற்றும் குறைந்த கால தண்டனை பெற்ற 629 சிறைக்கைதிகளும் பயனடைந்தனர்.

(ஓ) கைதிகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குதல்:

45. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் கழகம் விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனைக் கைதிகளுக்கும் இலவச சட்ட உதவி வழங்கி வருகிறது. கைதிகளுக்கு இலவச சட்ட உதவி அளிப்பதற்காக, இக்குழு பணி வழக்குரைஞர்களை அனைத்து நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகிறது. 1992-ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக்கழகம் வழங்கிய சட்ட உதவியின் மூலம் 2,888 கைதிகள் பயனடைந்தனர்.

(ஔ) சிறையில் புகார் பெட்டிகள் வைத்தல்:

46. கைதிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு, அனைத்து மத்தியச் சிறைகளிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மூடப்பட்ட மூன்று புகார் பெட்டிகளும், வேலூரிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலையில் இரு புகார் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன. இப்புகார் பெட்டிகள், சிறைச்சாலைகளில் கைதிகள் எளிதில் சென்றடையக் கூடிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. கைதிகளுக்கு எழுது பொருள்களும் கொடுக்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய முதல் பணி நாளன்று இந்தப் புகார் பெட்டிகளைக் கொண்டு வந்து, மாவட்ட செஷன்ஸ் நீதிபதியிடம் சமர்ப்பிக்கின்றனர். அவர் அப்பெட்டிகளைத் திறந்து, புகார் மனு ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, சிறை அதிகாரிகளால் அல்லது அரசால் அல்லது சிறைத் துறைத் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவற்றின் நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பார். கைதிகள் கொடுக்கும் புகார் மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்காணும் நிறுவனங்களில் முறைகேடு செய்ய இயலாவகையில், இரும்பினால் தயாரிக்கப்பட்ட புகார் பெட்டிகள் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

[1993 ஏப்ரல் 23

(க) சிறைகளைப் பார்வையிட சிறைப் பார்வையாளர்கள்:

47. சிறைப் பார்வையாளர்களால் சிறைச்சாலைகள் ஆய்வு செய்ய வேண்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தித்தான் ஆகவேண்டும் என்பதில்லை. மாஜிஸ்ட்ரேட்டுகளையும், நீதிபதிகளையும் மற்றும் மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள், ஏனைய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசு சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, இத்துறையில் நாட்டமுள்ள பொது மக்கள், முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவ வல்லுநர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூக அறிவியலாளர்கள் ஆகியோர் ஒவ்வொரு சிறையிலும் அலுவல் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும் விதம், சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆகியன சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப் படுகின்றனவா என்றும், சிறைகளில் பலப் பகுதிகளுக்கு சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டு அவர்களில் எவரேனும் அவர்களிடம் புகார் செய்தால் அதனை சரி செய்யவும் செய்கின்றனர். சிறைப் பார்வையாளரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

(ங) சிறைக் கைதிகளுக்கான நலப் பணிகள்:

48. மத்தியச் சிறை ஒவ்வொன்றிலும், ஒரு பதவி வீதம் எட்டு மத்திய சிறைகளில் எட்டு பதவிகளும், வேலூரில் பெண்கள் தனிச் சிறையில் ஒரு பதவியும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் ஒரு பதவியும் ஆக மொத்தம் பத்து நல அலுவலர் பதவிகள் உள்ளன. இந்த நல அலுவர்கள், சிறையில் விதிமுறைக்கேற்ப கைதிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்களுடைய உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளும் வகையில் உதவி செய்தும் வருகின்றனர். மேலும் தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத கைதிகளுக்கு மேல்முறையீடு செய்யவும் உதவி செய்கின்றனர்.

49. பெண் கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு, சிறையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக வேலூர் மத்திய மகளிர் சிறையில் குழந்தைகள் காப்பகமும் செயல்பட்டு வருகிறது. அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க எவரும் முன்வராவிட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் தங்கள் தாயாருடன் தங்கியிருக்க தகுதியற்றவர்களாவர். அப்பொழுது அவர்கள் சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால், சென்னையிலுள்ள பால மந்திர் மருத்துவ மனைக்கும், மாநிலத்திலுள்ள இதர பகுதிகளைச்

1993 ஏப்ரல் 23]

சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை, காந்தி கிராமத்திலுள்ள சிறுவர் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர். சிவானந்தா அனாதை இல்லம், தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். அனாதை இல்லம், ஆகிய இல்லங்கள் கைதிகளின் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள அனுமதிக்கப் படுகின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், கைதிகளின் பயனுக்காக பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக் குழு, கைதிகளின் நன்மைக்காக சிறைவளாகத்திற்குள் காலமுறைப்படி வெளியில் உள்ளவர்களைக் கொண்டு பலவகை கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வதோடு திரைப்படமும் காட்டுகிறது. மத்திய சிறைகளிலும் திரைப்படம் காட்டும் கருவிக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

50. மத்திய சிறைகள் அனைத்திலும், கைதிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் கைதிகளும், பணிக்கொடை ஈட்ட இயலும் கைதிகளும், அனைத்து மத்திய சிறைகளிலுமுள்ள இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கின்றனர்.

51. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி செய்து கொள்ளும் கருணை மனு இந்தியக் குடியரசு தலைவரால் நிராகரிக்கப்பட்ட பின்னர், மரண தண்டனை நிறைவேற்றப்படும் முன்னர், அக்கைதியை அடைத்து வைத்திருக்கும் சிறைச் சாலையில் அவரது நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய்/மனைவி/கணவர்/மகன்/மகள்/உடன்பிறந்த சகோதரன்/உடன்பிறந்த சகோதரி ஆகியோர்கள் வந்து பார்க்க விரும்பினால், அந்த நெருங்கிய உறவினர்களில் ஐவருக்கு மேற்படாதவர்கள், சாலை வழியாகவோ அல்லது ரயில் மூலமாகவோ தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலிருந்தும் மிகக் குறைந்த தொலை வழித்தடத்தைப் பயன்படுத்தி மிகக் குறைந்தபட்ச வகுப்பில் மரண தண்டனை நிறைவேற்றப்படவிருக்கும் கைதியை வந்து பார்த்து செல்வதற்காகும் போக்குவரத்து செலவுத் தொகையை அவர்களுக்கு அனுமதிக்க, எல்லா மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி, வேலூர் மாநில மகளிர் சிறை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களுக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது.

(ச) விடுதலை அடைந்த சிறைவாசிகளுக்கு புதுவாழ்வு அமைப்புப் பணிகள்:

தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைக்கைதிகளின் சங்கம்:

52. தமிழ்நாடு விடுதலையான சிறைக் கைதிகள் உதவி சங்கம் 1921-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தற்செயலாகக் குற்றம்

புரிபவர்களும், இளங் குற்றவாளிகளும், கைதேர்ந்த குற்றம் புரிபவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன் கைதிகளுக்குப் புதுவாழ்வு அளித்தலும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்து கொடுத்தலும், இச்சங்கத்தின் நோக்கங்களாகும். விடுதலை செய்யப்பட்டவர்கள் சிறுதொழில்கள் நடத்தவும், கருவிகள், தேநீர் கெட்டில், தையல் எந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச் சங்கம் உதவித் தொகை வழங்குகிறது. மேலும் இரயில், பேருந்து கட்டணமும் வழங்குகிறது. தொழில்களில் பயிற்சி பெறுவதற்கும், வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளவும், சட்ட உதவி அளிப்பதற்கும், முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும் கடன் வழங்குவதோடு ஆடைகள், மூக்குக் கண்ணாடிகள் முதலியவற்றையும் வழங்குகிறது. அரசு இச் சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு உதவி மானியமாக ரூ. 18,000 வழங்குகிறது.

53. சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகளுக்கு உதவி செய்வதற்கான சிறைத் துறைக்கு தற்போது அளிக்கப்படும் ஒதுக்கீட்டை அரசு ரூ. 8,000 லிருந்து ரூ. 1,00,000 ஆக உயர்த்தியுள்ளது. விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு ரூ. 500/-க்குப் பதிலாக ரூ. 5,000/- எந்திரம், கருவிகள் முதலிய வடிவில் வழங்கப்படுகிறது.

VI கைதிகளுக்குச் சிறைகளிலுள்ள தொழிற்சாலைகளில் பயிற்சி அளித்தல்:

54. கைதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்குச் சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடுந்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள், காவல்வைப்பு, விசாரனைக் கைதிகள் ஆகியோர் இந்த சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்வதோடு அதற்கான ஊதியமும் பெறுகின்றனர். இவ்வாறு செய்வதால் கைதிகள் விடுதலை அடைந்த பின்பு, தாங்களே தங்களது புதுவாழ்வினை அமைத்துக்கொள்ள அவர்களுக்கு இப்பயிற்சி உதவியாக இருக்கும். எனினும் பயனற்ற, ஆதாயமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறைகளில் கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு வேலைகள் என கைதிகளுக்கு மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகள் விடுதலைக்குப்பின் அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில், தச்சுவேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல் வேலை, கருமார் வேலை, தோல் பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் மற்றும் பினாயில் செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. நவீன வேளாண்மை முறைகள், பால்பண்ணை ஆகிய தொழில்களிலும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. கோயம்புத்தூரிலுள்ள,

1993 ஏப்ரல் 23]

மத்திய சிறையில், நெசவுப் பிரிவு மற்றும் சாயப்பிரிவு அடங்கிய துணை ஆலை ஒன்று உள்ளது. இந்த சிறை தொழில் பிரிவுகளில், சுமார் 5,00,000 கைதிகள் வருடந்தோறும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அரசு, தற்போது சிறைத் துறையை, பணித்துறையாக அறிவித்துள்ளது. எனவே, சிறைத் தொழில் பிரிவுகளில் செய்யப்பட்டு அரசுத்துறைக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இதனால் இந்த சிறைத் தொழில் பிரிவுகளில் தயாரிக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்தும் துறைகளிடமிருந்து தேவைக் குறிப்புகளை சிறைத் துறை அதிக அளவில் பெறுவதற்கும், வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சிறைத் தொழிற் பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி ரூ. 3.50 கோடியாகும்.

55. மேலும் சிறைச்சாலையில் பல்வேறுவிதமான எளிய சிறு தொழில் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சிறைக் கைதிகள் தண்டனை முடிந்து விடுதலையான பின்னர் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு ஏதுவாக சிறையில் அவர்களுக்கு சிறை தொழில் பிரிவுகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில், எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைக் கைதிகளுக்குக் கீழ்காணும் எளிய தொழிற் பயிற்சிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் கற்றுக் கொடுக்கப்படுகிறது :-

(1) செங்கல் கட்டுமானத் தொழில்	-	மத்திய சிறை, வேலூர்.
(2) குழாய்களை பழுதுபார்த்து இணைத்தல்	-	மத்திய சிறை மதுரை, சேலம், திருச்சிராப் பள்ளி, பாளையங் கோட்டை
(3) எளிய மின் இணைப்பு பயிற்சி	-	மத்தியசிறை சென்னை, கடலூர், சீர்த்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை.
(4) வண்ணம் பூசுதல், பெயர்ப் பலகை எழுதுதல்	-	மத்திய சிறை, கோயம்புத்தூர்.

56. வேலூர், பெண்கள் தனிச்சிறையிலுள்ள இருபது பெண்கைதிகளுக்கு ஒவ்வோராண்டும், வேலூர் நேருயுவக்கேந்திரா பயிற்சி ஆசிரியர்கள் மூலம் தையல் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசினர் தொழில்நுட்ப தேர்வுக்கு அனுப்பப்படுவர். ஓராண்டில், சராசரியாக 1000 கைதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

57. அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள இளைஞர் சீர்திருத்தப்பள்ளியிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறையிலும் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் தற்போது செயலிலுள்ளது. கைதிகள், தங்கள் தொழில் திறமைக்கேற்ப இத்திட்டத்தின்கீழ் ஊதியம் ஈட்டலாம். கைதிகளுக்குக் கொடுக்கப்படும் ஊதிய வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:-

	தற்போதுள்ள விகிதம் ரூ. பை.	திருத்தப்பட்ட விகிதம் ரூ. பை.
(1) தேர்ச்சி பெற்றவர்	2 00	6 .00
(2) ஓரளவு தேர்ச்சி பெற்றவர்	1 00	4 .00
(3) தேர்ச்சி பெறாதவர்	0 50	2 .00

இந்தத் திருத்த விகிதத்திற்கான ஆணைகள் 1993 ஆம் ஆண்டில் சனவரியில் வெளியிடப்பட்டன. கைதிகள், தங்களது உற்பத்திப் பணியை மிக உற்சாகத்துடன் செய்வதற்கு இந்த ஆணை வழிவகுக்கும்.

VII மனித ஆற்றல் மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு:

(அ) சிறைக்காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூர்:

58. இப்பயிற்சிப் பள்ளியில் நிலை 2 சிறைக்காவலர்கள் 100 பேருக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. நிலை 2 சிறைக் காவலர்களுக்கு இந் நிறுவனத்தில் 6 மாதங்களுக்கு, உடற்பயிற்சி, ஒழுங்கு, சிறை நிருவாகக் கோட்பாடு, சீர்திருத்த நடைமுறை போன்ற பல்வேறு தன்மைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. இது தவிர, 25 நிலை 1 சிறைக் காவலர்களுக்கும், 4 தலைமை சிறைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவுகூர் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியின் போது கைதிகளை திருத்தும் அணுகுமுறையில் நவீனக் கொள்கை குறித்து இவர்களுக்கு முக்கிய பயிற்சி அளிக்கிறது. வீடியோ, காமிரா, வி.சி.ஆர். தொலைக் காட்சிப் பெட்டி போன்ற ஒலி, ஒளி சாதனங்கள் இப்பயிற்சிப் பள்ளியில் உள்ளன. பயிற்சி மையத்தை மேம்படுத்துவதற்காக அரசு ரூ. 24.07 இட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.

(ஆ) குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிறுவனம்:

59. நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், கேரளம், தமிழ்நாடு) சீர்திருத்த அதிகாரிகளுக்கு 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து இந்நிறுவனத்தில் பயிற்சி

1993 ஏப்ரல் 23]

யளிக்கப்படுகிறது. குற்றம் செய்வதைத் தடுத்தல், குற்றவாளிகளைத் திருத்துதல், சமூக, புதுவாழ்வுக்கு அவர்களை தயார் செய்வதற்காக குற்றவாளிகளுக்குத் தொழில் நுட்ப உத்திகளில் பயிற்சியளித்தல் போன்றத் துறைகளில் சீர்திருத்த, துணைப் பணிகளில் ஈடுபட்டுள்ள சிறைப்பிரிவு, நன்னடத்தைப் பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளி ஏனைய இது போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும். மத்திய சிறைகளில் உதவி சிறை அலுவலர் முதற்கொண்டு கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையுள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் இதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளங்குற்றவாளிகள், நன்னடத்தைப் பிரிவு, சமூகப் பணி, சட்டம், நிருவாக மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் ஒரே சமயத்தில் 12 அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டில் 233 அதிகாரிகள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடரின, தொடராயினச் செலவுகளை நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி-மேம்பாட்டுப் பிரிவை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு இந்நிறுவனத்திற்கு ரூ.68.92 இலட்சம் வழங்கியுள்ளது.

(இ) சிறைத் துறை நற்பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்குதல்:

60. 1985 ஆம் ஆண்டு நவம்பர் முதல் சிறைத்துறை நற்பணிக்காக "தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்" என்ற பதக்கம் ஏற்படுத்தப்பட்டு சிறைத்துறையில் சீரிய பணிபுரிபவர்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைப் பணியாளர்கள் நேர்மை, வாய்மை, கடமையுணர்வு, திறமை, உயரிய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகியவற்றுடன் பணி புரிவதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொராண்டும் பொங்கலன்று தெரிந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இப்பதக்கத்தை வழங்குகிறார். இப்பதக்கம் பெற்ற நிலை-1 சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ. 25/-என்ற நிர்ணயித்த வீதத்திலும், நிலை-2 சிறைக் காவலர்கள் மாதமொன்றுக்கு ரூ. 20/- என்ற நிர்ணயித்த வீதத்திலும் தொகை பெறத் தகுதியானவர்கள்.

VIII சிறைப் பணியாளர்களின் நலன்:

61. (அ) பணியாளர்களால் ஆண்டு தோறும் அளிக்கப்படும் தொகையுடன் அரசு சிறை நல நிதிக்கு உதவித் தொகை ரூ. 7,000 ஆண்டு தோறும் வழங்குகிறது.

(ஆ) தற்போது களப்பணியாளர்களில் 30 விழுக்காடு பணியாளர்களுக்கு மட்டுமே சிறையின் அருகில் குடியிருப்புகள் உள்ளது. எஞ்சிய பணியாளர்களுக்கு சிறைகளின் அருகே குடியிருப்புகள் கட்டுவதற்காக பத்தாவது நிதிக்குழுவிடமிருந்து மத்திய உதவி பெற செயற்குறிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் மத்திய அரசிடமிருந்து வரும் உதவி நிலுவையிலிருக்க இந்த திட்டத்திற்கான உதவி ஹட்கோவிடமிருந்து பெறவும், தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) அனைத்துக் களப்பணியாளர்களுக்கு அரசு மாதம் ஒன்றுக்கு ரூ. 20/- இடர்படி (Risk allowance) வழங்கியுள்ளது.

(ஈ) தற்போது அரசு இன்றியமையாத உணவுப் பொருள்களை சிறை அலுவலரிலிருந்து இரண்டாம் நிலைக் காவல் வரை சலுகை விலையில் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

IX. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்:

(அ) மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் நவீனப்படுத்துதல்:

62. சிறை நிருவாகத்தினை மேம்படுத்தும் மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1987-90 ஆம் ஆண்டு ரூ. 864 இலட்சம் இலக்கு நிர்ணயித்தது. இந்த திட்டத்தின் திட்ட காலத்தை 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை நீட்டிக்கப்பட வேண்டுமென மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய நிதி உதவி 50:50 இணை மானியமும், மற்றும் தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் 100 விழுக்காடு மானியம் என்ற வகையிலும் வழங்கப்படுகிறது. இந்த மத்திய நிதி உதவியும், மத்திய அரசு தனது முழு உதவியும் விடுவித்துவிட்டது. தமிழக அரசும் இத்திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு ரூ. 653.47 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ் கைதிகளுக்கு பாதுகாப்பு, மருத்துவ வசதிகள், ஏனைய அடிப்படை வசதிகள் மற்றும் பணியாளர்களுக்குத் தகவல் தொடர்பு வசதிகள், பயிற்சி ஆகியவை அளிப்பதற்காக, தமிழ்நாடு அரசு இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது. இந்த மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள், ஆம்புலன்ஸ் வேன்கள் வாங்குதல், சுற்றுச்சுவர் அமைத்தல் இ.சி.ஜி. வசதிகள், உயர் பார்வை பைனாக்குலர்கள், சாதாரண பைனாக்குலர்கள், கணிணி வசதி ஆகியவற்றிற்கு வகை செய்தல் ஆகும்.

1993 ஏப்ரல் 23]

(ஆ) சிறைச் சாலைகளில் எச்சரிக்கை ஒலி மின்னணு சாதனம் அமைத்தல்:

63. சிறைக் கைதிகள் சிறைகளில் இருந்து தப்பிச் செல்வதை தடுக்கும் நோக்குடன், எல்லா மத்திய சிறைச் சாலைகளிலும், பாதுகாப்பு எச்சரிக்கை ஒலிச் சாதனங்களை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனை நிறைவேற்றும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது. எச்சரிக்கை ஒலி மின்னணுச் சாதனம் நிறுவுவதை விரைவில் செயல்படுத்துவது குறித்து ஒரு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

X. தற்போது உள்ள சூழ்நிலையில் உத்தேசிக்கப் பட்டுள்ள பகுதி-2 திட்டங்கள்:

64. சிறைச்சாலைகளிலும், கிளைச் சிறைகளிலும், குடிநீர் வழங்க வடிகால் வசதி, துப்புரவு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக 1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 31.56 இலட்சம் செலவில் 15, பகுதி-2 திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டள்ளன.

வரிசை எண்	திட்டப் பணிகளின் விவரம்	திட்டங்களின் செலவுத்தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	கிளைச் சிறைகளிலும், மத்திய சிறைகளிலும் குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்வதற்காக துளைக்கிணறுகள், பம்புடன் கூடிய மின் மோட்டார் ஆகியவற்றிற்கு வகை செய்தல்.	10.67
2.	சிறைக் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேலூர் சிறைக் காவலர் பயிற்சிமையத்திற்காக புதிய பதவிகளை ஏற்படுத்துதல்.	1.12
3.	எட்டு (8) மத்திய சிறைகளுக்கும் புதுக்கோட்டை இளங்குற்றவாளிகள் பள்ளி ஒன்றுக்கும் 'டெலக்ஸ்' வசதி செய்து கொடுத்தல்.	2.75
4.	சிறைத் துறைத் தலைவர் அலுவலகத்தில் அகத் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல்	0.50
5.	திருக்கோயிலூர் கிளைச் சிறையில் பாதுகாப்புச் சுவர் கட்டுதல்.	0.63


6. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள அடுப்புத் தொகுதிக்கும், முதன்மைச் சமையல் கூடத்திற்கும் அவசர சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்.	2.34
7. திண்டுக்கல் கிளைச்சிறைக்குப் புதிய நுழைவாயில் அமைத்தல்.	0.12
8. சேலம், மத்திய சிறையிலுள்ள பணிக்களரியில் பழைய மின்கம்பி இணைப்பை மாற்றிவிட்டு புதியதாக மின்கம்பி இணைப்பு அமைத்தல்.	0.88
9. சிறைச்சாலையில் பயிற்சி மேற்கொள்ளக்கூடிய சிறைக் கைதிகளுக்குச் சான்றிதழ் வழங்க வகை செய்தல்.	0.50
10. சிவகங்கை, கோடைக்கானல், பழனி, ஆகிய இடங்களிலுள்ள கிளைச் சிறைகளில் காவலர் அறை, அலுவலக அறை, நேர்காணல் அறை, மருந்தகம் ஆகியவை போன்ற அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல்.	8.90
11. திருவண்ணாமலை, மல்லவாடி அரசு மறுவாழ்வு இல்லத்திலுள்ள நெசவுக் கொட்டகைக்குச் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள்.	0.24
12. திருவண்ணாமலை, மல்லவாடி, அரசு மறுவாழ்வு இல்லத்திலுள்ள துயிற் கூடத்தில் தண்ணீர் ஒழுகும் அறைக்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப்பணிகள்.	0.42
13. திருவண்ணாமலை, மல்லவாடி, அரசு மறுவாழ்வு இல்லத்திலுள்ள துயிற் கூடத்தில் 1 முதல் 4 அறை களுக்குச் சிறப்புப் பழுது பார்ப்புப்பணிகள்.	1.23
14. திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகளுக்குக் குளியலறை வசதிகள் செய்து கொடுத்தல்.	0.26
15. சிறைச்சாலையில் தலைவர் அலுவலகத்தில் தொழில் துறை துணை இயக்குநர் பதவி ஒன்று உருவாக்குதல்.	1.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை I

(இனம் II ஐக் காண்க).

சிறைத் துறையின் நிர்வாக அமைப்பு வரைபடம்



1 சிறைத்துறைத் தலைவர்
2 சிறைத்துறைத் துணைத் தலைவர், சென்னை சரகம்
3 சிறைத் துறைத் துணைத் தலைவர், திருச்சி சரகம்
4 சிறைத் துறைத் துணைத் தலைவர், கோவை சரகம்
5 சிறைத் துறைத் துணைத் தலைவர், மதுரை சரகம்
6 தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்.
7 தலைமைக் கண்காணிப்பாளர்.
8 மத்தியச் சிறை, சென்னை, மகளிர் தனிச் சிறை, வேலூர், தனி கிளைச் சிறைகள்/கிளைச் சிறைகள், செங்கற்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டம், வடஆர்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆடவர் பிற்காப்பு இல்லம், புழல், சிறைக் காவலர் பயிற்சி பள்ளி, வேலூர்.
9 தலைமையக அலுவலகம்.
10 மத்திய சிறை, திருச்சி, கடலூர், தனிகிளைச் சிறை, திருச்சிராப்பள்ளி/கிளைச்சிறைகள், திருச்சிராப்பள்ளி/புதுக் கோட்டை/தென்னாற்காடு/தஞ்சாவூர்/நாகப்பட்டினம்--காயிதேமில்லத் மாவட்டங்கள், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.
11 மத்தியச் சிறை, கோவை,/சேலம்/திறந்தவெளிச் சிறை–சிங்காநல்லூர்/தனிக் கிளைச் சிறைகள்/கோவை மற்றும் சேலம், கிளைச்சிறைகள் கோவை/சேலம்/பெரியார்/தர்மபுரி/நீலகிரி மாவட்டங்கள்.
12 மத்தியச் சிறை மதுரை/பாளையங்கோட்டை, மகளிர் தனிச் கிளைச் சிறை, மதுரை, தனிக் கிளைச் சிறை, கொக்கிரக்குளம், கிளைச் சிறைகள், மதுரை/இராமநாதபுரம்/காமராசர்/பசும்பொன் முத்துராமலிங்கம்/திருநெல்வேலி-கட்டபொம்மன்/திண்டுக்கல்-அண்ணா/வ.உ.சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.
13 மண்டல நன்னடத்தை அலுவலர்கள்.
14 அரசு மறுவாழ்வு மற்றும் இரவலர் இல்லங்கள்
15 அரசு காப்பு முகாம், மேல்பாக்கம்
16 நிருவாகம்
17 கணக்குகள் மற்றும் தணிக்கை
18 சிறைத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்
19 கணக்கு அலுவலர்
20 நன்னடத்தை அலுவலர்கள்

ANNEXURE I

(Vide item No. II)

ORGANISATION CHART OF PRISON DEPARTMENT

1. Inspector General of Prisions
2. Deputy Inspector General of Prisons, Madras Range
3. Deputy Inspector General of prisons, Trichy Range
4. Deputy Inspector General of Prisons, Coimbatore Range
5. Deputy Inspector General of Prisons, Madurai Range
6. Chief Probation Superintendent
7. Chief Superintendent.
8. Central Prision, Madras, Vellore, Special Prison for Women, Vellore, Special Sub-Jails, Sub-Jails, Chengalpattu-M.G.R. North Arcot Ambedkar, Tiruvannamalai Sambuvarayar Districts, After Care Home For Males, Puzhal, Warders Training Centre, Vellore
9. Head Quarters Office
10. Central Prision, Trichy, Cuddalore/Special Sub-Jail/Trichy Sub-Jails, Trichy/Pudukkottai/South Arcot/Tanjavur/Nagappattinam Qauide Milleth Districts, Borstal School, Pudukkottai.
11. Central Prison, Coimbatore/Salem/Open Air Prison, Sinanallur/Special Sub-Jails, Coimbatore and Salem, Sub-Jails, Coimbatore/Salem/Periyar, Dharmapuri and the Nilgris Districts,
12. Central Prison, Madurai/Palayamkottai, Special Prison for Women, Madurai, Special Sub-Jail, Kokkirakulam, Sub-Jails of Madurai Ramnad, Kamaraj, Pasumpon Muthu Ramalingam, Tirunelveli Kattabomman, Dindigul-Anna, V.O. Chidambaranar and Kanyakumari Districts.
13. Regional Probation Officers
14. Government Rehabillitation Homes
15. Government Care Camp, Melpakkam
16. Administratiom
17. Accounts and Audit
18. P. A. to I.G. of Prisons
19. Accounts Officer
20. Probation Officers

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

பகுதி II

மறுவாழ்வு இல்லங்கள்

I. குறிக்கோள்-ஒரு கண்ணோட்டம் :

65. தொழுநோயால் அவதியுறும் பிச்சைக்காரர்களின் நோயினை குணப்படுத்தவும் அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் பத்து இடங்களில் தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களை அமைத்துள்ளது :-

1. பரனூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.
3. பருகூர், தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.
6. மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம்.
7. யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.
8. மல்லவாடி, திருவண்ணாமலை சம்புரவராயர் மாவட்டம்.
9. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
10. தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

II. நிருவாகம்:

66. முன்னர், மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குநரின் கீழ் இயங்கிவந்த இவ்வரசு மறுவாழ்வு இல்லங்கள், *1984*-ம் ஆண்டு டிசம்பர் மாதம் *1*-ம் நாள் முதல் சிறைத் துறைத் தலைவரின் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இல்லமும் ஒரு நிர்வாக அலுவலரால் கண்காணிக்கப்படுகிறது. அவர்கள் தலைமைக் கண்காணிப்பாளரின்கீழ் பணிபுரிகின்றனர்.

III. அனுமதி மற்றும் நீக்கம்:

67. ஒவ்வொரு இல்லத்திலும் *400* பெரியவர்களும் (ஆண், பெண் உட்பட) *25* சிறுவர்களும் தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்கள் சுயமாகவும், பிச்சை எடுத்ததற் காகத் தண்டனை வழங்கப்பட்டவர்களும் இவ்வில்லங்களில்

அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களின் கண்வனோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால், மற்றவரையும் இவ்வில்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

68. உள்ளிருப்போர்கள், தொழுநோய் இல்லாதவர்கள் என்று மருத்துவ அதிகாரிகளால் சான்று அளிக்கப்பட்டால், அவர்கள் சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்த இயலுமாயின் அவர்கள் வெளியில் அனுப்பப்படுகிறார்கள். மேலும் திரும்பத் திரும்ப ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்வோர் மற்றும் இல்லம் சீரிய முறையில் நடைபெற தடையாய் இருப்போர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

IV உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள்:

69. இல்லத்திலுள்ள உள்ளிருப்போருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும், திரைப்படம் காண்பிக்க வசதியும், நூலகம் போன்ற வசதியும் செய்யப்பட்டுள்ளன.

அ. உணவு:

70. வயது வந்த தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகள் ஒவ்வொருவருக்கும் தினமும் ரூ. 5.50-ம் அவர்களைச் சார்ந்த உறவினர் மற்றும் சிறுவர்களுக்கு தினமும் ரூ. 4.00-ம் உணவுக்காக செலவிடப் படுகிறது. இல்லத்திலிருப்பவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும், தேநீரும், மதிய உணவும், மாலைத் தேநீரும் மற்றும் இரவு உணவும் அளிக்கப்படுகின்றன. நாள்தோறும் முட்டையும் மோரும் வழங்கப்படுகிறது. வாரம் ஒருமுறை இறைச்சியும் வழங்கப்படுகிறது. சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் முக்கியமான நாட்களிலும் ஒவ்வொரு உள்ளிருப்போருக்கும், கூடுதல் ரூ. 3/-க்குச் சிறப்புணவு வழங்கப்படுகிறது.

ஆ. இருப்பிடம்:

71. உளுந்தூர்பேட்டை, பர்கூர் இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக் கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக (பிளாக்) கீழ்த்தளத்தில் கட்டப்பட்டுள்ளன. மேலும், முதல் மாடியில் தனி நபர்கள் தங்குவதற்குத் துயிற்கூடங்கள் (டார்மிடாரிஸ்)

1993 ஏப்ரல் 23]

கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்கள் ஒற்றைக் கட்டிடமாகவும் நிரந்தர கொட்டகையாகவும் கட்டப் பட்டுள்ளன.

இ. உடை:

72. பொங்கல் நாள், சுதந்திர நாள் ஆகிய தினங்களில் உள்ளிருப்போருக்கு (இருமுறை) உடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் மூன்று ஆண்டுக்கொருமுறை ஒரு போர்வையும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு ஆண்டு தோறும் சிறப்பான வகை இரப்பர் காலணிகளும் வழங்கப்படுகின்றன.

ஈ. மருத்துவ வசதிகள்:

73. இல்லவாசிகளுக்கு மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரு மருத்துவ அதிகாரிகள், இரு செவிலியர்கள், ஒரு ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், ஒரு மருந்தாளுனர், ஒரு உடற்கூறு பயிற்சியாளர், ஒரு உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இல்லவாசிகளின் மருத்துவ தேவைகளைக் கவனிக்கின்றனர். அங்கு இல்லவாசிகளுக்கு தொழுநோய் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமின்றி மற்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீவிர சிகிச்சைப் பெற வேண்டிய நோயாளிகள், 10 பேர் தங்கக்கூடிய தனி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்புணவு மற்றும் மருந்துகள் அளிக்கப்படுகின்றன. எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவை சிகிச்சைக்கூடங்கள், பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்கள் தவிர்த்து மற்ற இல்லங்களில் உள்ளன.

உ. உடற் பயிற்சியும், தொழில் பயிற்சியும்:

74. ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். இவர் மின் கருவி (எலக்ட்ரிகல் ஸ்டிமுலேடர்) மெழுகு ஒத்தடம் (வாக்ஸ் பாத்) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும், உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளிருப்போர் அனைவருக்கும் பயிற்சி அளிக்கிறார். குடற்புண் மற்றும் உறு சிதைந்த நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவை சிகிச்சைக்காக தெரிந்தெடுக்கின்றனர். இல்லவாசிகளுக்கு நுண்ணிய துளைகளுடன் கூடிய ரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன.

ஊ. கல்வி மற்றும் இதர வசதிகள்:

75. இல்லவாசிகளுக்காக இரு தினசரி செய்தித் தாள்கள் வாங்கப்படுகின்றன. அவர்களின் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி

மேம்பாட்டிற்காக இலக்கிய நூல்கள் வழங்கப்படுகின்றன. இல்லத்திலுள்ள இல்லவாசிகள் இறுதிச் சடங்குகளுக்காக அரசு ரூ. 100 செலவினம் செய்ய அனுமதித்துள்ளது.

V இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் வசதிகள்:

76. தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுக்காவில் ஏத்தாப்பூர் என்னுமிடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

(i) சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவைகளுக்காக ஒவ்வொரு குழந்தைக்கும் முதன்மைச் செலவினமாக ரூ. 75 அரசு வழங்குகிறது.

(ii) மேலும் அரசு இவ்வில்லங்களிலுள்ள பள்ளிச் செல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும் கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள ஆணை வழங்கியுள்ளது.

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ரூ. 20/- (ரூபாய் இருபது மட்டும்) மொத்தம் ரூ. 120 (ரூபாய் நூற்றி இருபது மட்டும்) என ஆறு ஆண்டுகளுக்கு ஆகின்றது.

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளுக்கு ரூ. 30/- (ரூபாய் முப்பது மட்டும்) ரூ. 60 (ரூபாய் அறுபது மட்டும்) என இரண்டாண்டுகளுக்கு ஆகின்றது.

பத்தாம் வகுப்பிற்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்).

பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு ரூ. 75/- (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) ரூ.150/- (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்) என இரண்டாண்டுகளுக்கு ஆகின்றது.

VI இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்:

77. இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகளில் உடல் நலத்துடன் இருப்போருக்கு கீழ்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது –:

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி)
2. பாய் பின்னுதல்
3. செருப்பு செய்தல் மற்றும் பழுது பார்த்தல்

1993 ஏப்ரல் 23]

4. தையல்
5. தச்சு வேலை
6. விவசாயம்
7. காகித உறை செய்தல் (புதுக்கோட்டை இல்லத்தில்)

78. பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையுடன் அமைந்த தொழிற்கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள், திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள மேற்படி சங்கத் தொழிற் சாலைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், உள்ளிருப்போருக்கு பட்டறைகளில் (லேத்) தேவையான பயிற்சி அளிக்கப்படுகிறது. முக்கியமாக, இத்தொழிற்சாலைகளில் கட்டுப்பாடான ஒழுங்கு முறையில் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் அவர்களின் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

VII கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள்:

79. தற்பொழுது 135 கைத்தறிகளும், 77 பாய் தறிகளும், எல்லா இல்லங்களிலும் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக, மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. கிராமப்புற நூற்பு கேந்திரம், யா. புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவைகளில் பிரதி மாதம் 10,000 சிட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 34 தையல் இயந்திரங்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள், தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

VIII காகித உறை தயாரிப்புப் பிரிவு:

80. புதுக்கோட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் காகித உறை தயாரிப்பு பிரிவு 1.2.1978 முதல் இயங்கி வருகிறது.

IX இல்லவாசிகளின் எண்ணிக்கை, பிற விவரங்கள்

81. தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளின் எண்ணிக்கை, உற்பத்தி, ஆதாயம்/இழப்பீடு பட்டியல் ஆகியன அட்டவணைகளில் I மற்றும் II-ல் இணைக்கப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

அட்டவணை I

டிசம்பர் 1992-ன் படி அரசு மறுவாழ்வு இல்லங்களின் அடைப்பு விவரம் :

வரிசை எண்ணும் அரசு மறுவாழ்வு இல்லங்களின் பெயரும்	மொத்த எண்ணிக்கை (400 பெரியவர்கள் 25 குழந்தைகள்)	பெரியவர்கள் ஆண்கள்	பெண்கள்	சிறியவர்கள் ஆ	பெ	கு	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. உளுந்தூர் பேட்டை	425	132	91	10	22	-	255
2. புதுக்கோட்டை	425	179	100	6	7	-	292
3. யா.புதுப்பட்டி	425	235	126	25	20	-	406
4. மல்லவாடி	425	147	63	7	10	-	227
5. மனையேறிப்பட்டி	425	235	101	5	7	-	348
6. பருகூர்	425	183	125	16	14	..	338
7. தேவியாக்குறிச்சி	425	149	95	12	17	..	273
8. பரனூர்	425	212	149	17	17		395
9. செல்லியம்பட்டி	425	192	97	7	9	-	305
10 .விண்ணப்பள்ளி	425	88	58	5	5	-	156
	4,250	1,752	1,005	110	128	..	2,995

1993 ஏப்ரல் 23]

அட்டவணை II

மறுவாழ்வு இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்த ஆதாயம்/இழப்பு விவரம்.

	1987-88	1988-89	1989-90	1990-91	1991-92
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
				(ரூபாய் இலட்சத்தில்)	
மூலப்பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு	5.63	6.47	6.05	4.04	3.03
தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு	6.76	5.39	5.86	4.85	4.43
ஆதாயம்/இழப்பு	(+)1.13	(-)1.08	(-)0.19	(+)0.81	(+)1.40

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

பகுதி III.

அரசினர் காப்பு முகாம், மேல்பாக்கம்.

I. குறிக்கோள் ஒரு கண்ணோட்டம்

82. காவல் துறையின் மேற்பார்வையில் 1-3-1954 முதல் நடத்தப்பட்டு வந்த மேல்பாக்கம் அரசினர் காப்பு முகாம் இத்தகைய முகாம்களில் முதன்மையானதாகும். சென்னை நகரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்கு மறுவாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி கொடுத்து சிறந்த ஒரு குடி மகனாக ஆக்குவதே இவ்விடுதியின் நோக்கமாகும்.

II நிருவாகம் :

83. இவ்வில்ல நிருவாகம் 1-10-1973 முதல் சென்னை, காவல்துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து சமூக நல இயக்குநர் தலைமைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டு மீண்டும் 1-12-1984 முதல் சிறைத்துறைத் தலைவர் தலைமையின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. இவ்வில்லம் ஒரு ஆட்சியரின் கீழ் இயங்கி வருகிறது. ஆட்சியர் தலைமை கண்காணிப்பாளர் கீழ் பணிபுரிகிறார். ஆட்சியருக்கு நிர்வாகப் பணியாளர்கள், காவலர் மற்றும் பாதுகாவலர், மருத்துவ பணியாளர் ஆகியோர் உதவி புரிந்து வருகின்றனர்.

III. அனுமதி மற்றும் நீக்கம்.

84. இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகளின் எண்ணிக்கை 950 பிச்சைக்காரர்கள் (770 ஆண்கள் 180 பெண்கள்) ஆகும். அரசாணை நிலை எண். 89,1 சமூகநலத்துறை, நாள் 30-9-1972-ல் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கிணங்க இவ்வில்லம் நடத்தப்பட்டு வருகிறது. 1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்புத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். தண்டனைக் காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்களாகும். இங்கு சேர்க்கப்படும் இல்லவாசிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைகிற தேதியில் விடுதியிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். எந்த ஒரு இல்லவாசியும் குற்றத் தீர்ப்பு ஆணையில் குறிப்படப்பட்ட தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதியில் இருக்க அனுமதிக்கப் படுவதில்லை.

1993 ஏப்ரல் 23]

IV உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள்:

85. இம்முகாமில் இருப்போருக்கு இலவசமாக சாப்பாடு, தங்கும் வசதி, ஆடைகள், மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(அ) உணவு:

86. இல்லவாசிகளுக்கு உணவுக்காக நாளொன்றுக்கு உரிய வயதடைந்த ஒரு நபருக்கு ரூ.5.50 வீதமும் குழந்தைகளுக்கு ரூ. 4.00 வீதமும் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைகளுக்கு இவர்களுக்கு சைவ உணவு வழங்கப்பட்டு வருகிறது. காலை கேழ்வரகு கஞ்சி மற்றும் வெங்காயம், பகல் உணவு, இரவு உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மோர் வழங்கப்படுகிறது. முக்கியமான நாட்களான புது வருடப் பிறப்பு, சுதந்திர தினம் போன்ற குறிப்பிட்ட நாட்களிலும், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற சில பண்டிகை நாட்களிலும் ஒரு இல்லவாசிக்கு ரூ. 1.00 வீதம் சிறப்புணவு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இருப்பிடம்:

87. இவ்வில்லம் ஏறக்குறைய 9 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் அமைந்துள்ளது. ஒரே தளமுள்ள படுக்கைக்கூடங்களில் இல்லவாசிகள் தங்க வைக்கப்படுகின்றனர். ஒரு கூடத்தில் 100 பேர் வீதம் தங்குவதற்குரிய நான்கு படுக்கைக் கூடங்கள் உள்ளன. இந்த நான்கில் ஒன்று பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) உடை:

88. இரண்டு துண்டுகள், இரண்டு சட்டை மற்றும் இரண்டு கால் சட்டைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கு இரண்டு சேலை மற்றும் இரண்டு ஜாக்கெட்டுகள் ஆண்டுக்கு ஒரு முறை இலவசமாக வழங்கப்படுகிறது. விடுதியில் சேர்க்கப்படும் நாள் அன்று ஒரு துண்டு, ஒரு சட்டை ஒரு கால் சட்டை வீதம் வழங்கப்படுகிறது.

(ஈ) இதர வசதிகள்:

89. 1. ஒவ்வொரு இல்லவாசிக்கும் பாய், படுக்கை, விரிப்பு, தட்டு, நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது.

[1993 ஏப்ரல் 23

2. தண்டனைக் காலம் முடிந்து வெளியேறும் இல்லவாசிகளுக்கு அவர்களின் சொந்த ஊர் செல்ல வசதியாக ரெயில்வே வாரண்ட் அல்லது பேருந்து கட்டணம் அளிக்கப்படுகிறது.

3. இல்லவாசிகளுக்காக இரண்டு தினசரி செய்தித்தாள்கள் வழங்கப்படுகிறது.

4. இல்லவாசிகள் விளையாடுவதற்கான வசதியும், தொலைக்காட்சி பார்க்க வசதியும் வானொலி போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

(உ) மருத்துவ வசதிகள்:

90. இவ்விடுதிக்கென ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒரு மருத்துவ அலுவலரும், ஒரு செவிலியரும், ஒரு ஆண் உதவி செவிலியரும், ஒரு பெண் உதவி செவிலியரும் மற்றும் இரு மருந்தாளுநரும் பணியாற்றுகின்றனர். சாதாரண பிணிகளை நீக்கும் மருந்துகளும் மற்றும் மாத்திரைகளும் போதிய அளவில் உள்ளன. சிறப்புத் தன்மை உடைய வைத்திய வசதிக்காக நோய்களுக்கேற்ப சென்னையில உள்ள பல்வேறு மருத்துவ மனைகளுக்கு பிணியாளர்கள் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்கள். தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்கள், உளுந்தூர்பேட்டை தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். சென்னை மனநல மருத்துவ மனையிலிருந்து மனநல மருத்துவர் வாரத்திற்கு ஒரு முறை விடுதிக்கு வந்து மன நலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்.

V. இல்லவாசிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்:

91. உடல் வலிமையுள்ள பிச்சைக்காரர்கள் ஏதாவதொரு சிறு தொழிலில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்பது இவ்வில்லத்தின் நோக்கமாகும். இவ்வில்லவாசிகளுக்கு கைத்தறி, தச்சு, மேலும் தையல் போன்ற சிறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

VI இல்லவாசிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் இதர விவரங்கள்:

(அ) நெசவு:

92. கைத்தறிப் பிரிவில் 9 மேசைத் தறிகள் உள்ளன. இதில் சுமார் 15 இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள். இத்தறிகளில் தயாரிக்கப்படும் துணிகள் இவ்வில்லவாசிகளின் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

1993 ஏப்ரல் 23]

(ஆ) தையல் பிரிவு:

93. தையல் இயந்திரங்கள் ஆறு இப்பிரிவில் உள்ளன. இல்லவாசிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள்.

(இ) தச்சு வேலை:

94. இப்பிரிவில் சுமார் பத்து இல்லவாசிகள் வேலை செய்கிறார்கள். அரசுத் துறையிலிருந்து பெறப்படும் எல்லாவிதமான மரச்சாமான்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு அத்துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

95. 31-12-92 வரையிலான காலத்தில் இவ்வில்லத்தில் உள்ள மொத்த இல்லவாசிகள் *109* ஆகும். (ஆண்கள் *75,* பெண்கள் *34*) உற்பத்தி ஆதாயம் மற்றும் இழப்பு அட்டவணை அ-வில் இணைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை:

96. முந்தைய காலத்தை போலன்றி, தற்போது சிறைச்சாலைகள், மறுவாழ்வு இல்லங்கள், அரசு காப்பு இல்லம் ஆகியவைகளில் தகுந்த வசதிகள் செய்யப்பட்டு அங்கு தங்குவோர்களுக்கு நிறைவளிக்கும் வகையில் உள்ளன. அவர்கள் விடுதலையான பின் மறுவாழ்வு அளிப்பதற்கும், சமுதாயத்தில் பங்கேற்பதற்கும் தேவையான வசதிகள் செய்து தரப்படுகின்றன. தற்போது நிலவி வருகின்ற வசதிகளை மேம்படுத்தவும், புதிய வழிமுறையின் அடிப்படையில் கூடுதல் வசதிகளை பெருக்கவும் தற்போதைய அரசு முயற்சி செய்து வருகிறது. குறைவான முன்னுரிமை அளிக்கப்பட்ட பாரம்பரிய அணுகு முறையில் இருந்து மாறி, நிருவாக மற்றும் சிறைச் சீர்திருத்தங்கள் செய்வது குறித்து தீவிரக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

அட்டவணை-அ

அரசினர் காப்பு முகாம் மேல்பாக்கத்தில் தாயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைத்தஆதாய இழப்பு விவரம்.

	1987-88	1988-89	1989-90	1990-91	1991-92
			(ரூபாய் இலட்சத்தில்)		
மூலப்பொருட்கள் மற்றும் கூலிக்கான செலவு	0.17	0.12	0.04	0.05	0.14
தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு	0.20	0.15	0.11	0.07	0.21
	+0.03	+0.03	+0.07	+0.02	+0.07

1993 ஏப்ரல் 23]

இணைப்புகள் III

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன் கொள்கை விளக்கம்

(312-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1993-94

அத்தியாயம்-1

1.1 நாட்டின் தொழில் அமைதியைக் காத்து, சுமுகமான தொழில் உறவினை நிலை நாட்டுவதும், தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் அனைத்தும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் தீர்வு காணப்படவேண்டும்; வேலை நிறுத்தங்களற்ற ஒரு சுமுகமான தொழில் உறவு நிலவும் சூழ்நிலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் தங்களது கூட்டு முயற்சி மற்றும் உழைப்பின் சக்தியை உணர்ந்து, நாட்டு நலனைப் பெரிதெனக் கொண்டு உற்பத்தித் திறனைப் பெருக்க உதவுவதற்கு தொழிலாளர் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் வீணான மனித உழைப்பு நாட்கள் இவ்வரசின் முயற்சியால் *1991*-ம் ஆண்டு *72, 78, 969* ஆக இருந்தது *1992*-ஆம் ஆண்டு *28,68,472* ஆகக் குறைந்துள்ளது.

1.2 இவ்வரசு தொழிலாளர்களின் நலனைக் காப்பதில் உறுதி கொண்டுள்ளது. இதற்காக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் ஒப்பந்தங்கள் மற்றும் தீர்ப்புகள் போன்றவற்றை தீவிரமான முறையில் அமுல்படுத்த சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாயம்-2

தொழில் உறவுகள்:

2.1 ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. *1992*-ம் ஆண்டில், எழுப்பப்பட்ட *11,856* தொழிற் தகராறுகளில், *10,113* வழக்குகள் சமரச அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில ஒப்பந்தங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

[1993 ஏப்ரல் 23

2.2 தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்தல் :

1. பி அண்டு சி மில்ஸ், சென்னை:

இந்த நிறுவனம் தொழில் நலிவினாலும், தொழிலாளர்களிடையே எற்பட்ட அமைதியின்மையாலும் 1-4-1991 முதல் மூடப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலையீட்டின்பேரில் 13-4-1992 முதல் இவ்வாலை மீண்டும் திறக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் சுமார் 8,000 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2. சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், வடலூர்:

சுமார் 1,600 தொழிலாளர்கள் பணிபுரியும் வடலூர் சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம், 12-4-1991 முதல் இயங்காமல் இருந்தது. 28-10-1992 அன்று தொழிலாளர் ஆணையர் முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 31-3-1993-க்கு முன் இந்நிறுவனம் மீண்டும் திறக்கப்பட நிர்வாகம் உறுதி அளித்திருந்தனர். ஆனால், தற்போது பன்னாட்டு நிதியத்தின் உதவியுடன் மீண்டும் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மே, ஜூன் 1993-ல் திறக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள்.

3. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்து கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள் தொடர்பான ஒரு நீண்டகால ஒப்பந்தம் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் 30-9-1992 அன்று ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் சுமார் 1.05 இலட்சம் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வொப்பந்தத்தின் கீழ் "தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழக தொழிலாளர்கள் ஒய்வூதிய திட்டம்" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்:

ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தகராறில் தொழிலாளர் ஆணையர் முன்பு 27-3-1992 அன்று தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஓர் நீண்டகால ஒப்பந்தம் எற்பட்டது. இவ்வொப்பந்தத்தின் மூலம் சுமார் 2,500 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

1993 ஏப்ரல் 23]

5. கார்பொராண்டம் யுனிவர்சல் லிமிடெட், சென்னை:

19-4-1992 அன்று தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் எற்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக சென்னை கார்பொராண்டம் யுனிவர்சல் லிமிடெட், நிறுவனத்தின் ஷிப்பிங் பிரிவில் அறிவிக்கப்பட்டிருந்த பகுதி கதவடைப்பு நீக்கம் செய்யப்பட்டது. சுமார் 600 தொழிலாளர்கள் இந்த ஒப்பந்தத்தினால் பயனடைந்துள்ளனர்.

6. ஸ்ரீ சீதா வெங்கடேஷ் மில்ஸ், சென்னை-66:

29-12-1992 அன்று சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் மேற்படி நிறுவனத்தில் லே-ஆப் செய்தது தொடர்பான தகராறு முடிவுக்கு வந்தது. இந்த ஒப்பந்தம் வாயிலாக சுமார் 325 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

7. பெஸ்ட் அண்ட் கிராம்டன் இன்ஜினியரிங் லிமிடெட், சென்னை:

சென்னை, பெஸ்ட் அண்ட் கிராம்டன் இன்ஜினியரிங் லிமிடெட், நிறுவனத்தில் பொதுக் கோரிக்கைகள் குறித்த தொழிற் தகராறில் சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 27-3-1992 அன்று உற்பத்தியுடன் இணைந்த ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் சுமார் 1,600 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

8. கோனே எலிவேட்டர் இந்தியா லிமிடெட், சென்னை:

ஊதிய உயர்வு மற்றும் பிற கோரிக்கைகள் தொடர்பான பொதுக் கோரிக்கைகள் குறித்து நடைபெற்ற வேலை நிறுத்தம் சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 23-11-1992 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்கு வந்தது. சுமார் 180 தொழிலாளர்கள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

9. திருச்சி மாவட்ட அமராவதி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திருச்சி:

பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தகராறில் 16-3-1992 அன்று சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் ஒரு நீண்டகால ஒப்பந்தம் ஏற்பட்டதின் அடிப்படையில் உத்தேச வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

10. ஸ்ரீ கிருஷ்ணா டைல்ஸ் மற்றும் போட்டரீஸ் (மெட்ராஸ்) (பிரைவேட்) லிமிடெட், சென்னை:

ஸ்ரீ கிருஷ்ணா டைல்ஸ் மற்றும் போட்டரீஸ் (மெட்ராஸ்) (பிரைவேட்) லிமிடெட், சென்னை நிறுவனம் மூடுதல் தொடர்பாக சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் 9-7-1992 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் பயனாக சுமார் 150 தொழிலாளர்களுக்கு சென்னையிலுள்ள முகப்பேரில் இலவசமாக குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டன.

11. ஏசியன் பேரிங்க்ஸ் லிமிடெட், பாகலூர், ஹோசூர்:

ஹோசூரிலுள்ள ஏசியன் பேரிங்க்ஸ் லிமிடெட், நிறுவனத்தில் ஊதியம், உற்பத்திப் பெருக்கம், தொழிலாளர்களுக்கான மேம்பட்ட பணிநிலைமைகள், மற்றும் பிற கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தாவாவில் 28-7-1992 அன்று சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் பயனாக 6 மாத காலமாக இருந்து வந்த கதவடைப்பு நீக்கப்பட்டு சுமார் 600 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

12. தமிழ்நாடு ஜாரி லிமிடெட், காஞ்சிபுரம்:

தமிழ்நாடு ஜாரி லிமிடெட் நிறுவனத்தில் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, உற்பத்தி உயர்வு மற்றும் பிற பொதுக் கோரிக்கைகள் அடங்கிய தொழிற்தாவாவில் சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் 7-5-1992 அன்று ஒரு நீண்ட கால ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் பயனாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்கு திரும்பினர்.

13. பீடித் தொழில்:

தமிழ்நாட்டில் சுமார் 2,00,000 பீடித் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போனஸ் தொடர்பான கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யவிருந்த தொழிற் தாவாவில் 28-11-1992 அன்று சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

14. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை:

இராணிப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், நிறுவனத்தில் 30-7-1992 முதல் தொழிலாளர்கள் செய்து வந்த வேலை நிறுத்தம் மற்றும் அதைத் தொடர்ந்து நிர்வாகத்தினர் அறிவித்த கதவடைப்பு குறித்த தொழிற் தாவா சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த சமரசப் பேச்சின் பயனாக 20-1-1993 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழிற் தாவா சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டது. இவ்வொப்பந்தப்படி தொழிலாளர்கள் நிலைப்படுத்தப்பட்ட ஊதியம் (wage freeze), உற்பத்திப் பெருக்கம் மற்றும் இந்த நலிவுற்ற நிறுவனத்தை காப்பாற்றும் விதத்தில் சுய ஓய்வு ஊதியத் திட்டத்தில் செல்லவும் தொழிலாளர்கள் சம்மதித்தனர்.

15. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை:

மதுரையிலுள்ள மதுரா கோட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஒரு பிரிவு தொழிலாளர்கள், வேலைப் பளுவை மாற்றி அமைக்கும்படி கோரிக்கை எழுப்பி 29-7-1992 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து 87 தொழிலாளர்களுக்கு பணி மறுக்கப்பட்டது. இத்தொழிற் தாவாவில் மதுரை, தொழிலாளர் இணை ஆணையர் தலையிட்டு, தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, இவ்வேலை நிறுத்தம் 21-9-1992 முதல் முடிவுக்கு வந்தது.

16. அருள்மிகு சிவசக்தி ஸ்பின்னிங் மில்ஸ், கருமாபுரம், சேலம்:

இவ்வாலையில் உள்ள 100 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்பந்தப்பட்ட தொழிற் தாவாவில் சென்னை, தொழிலாளர் ஆணையர் நடத்திய சமரசப் பேச்சின் பயனாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

17. ஜி.கே.டி. டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர்:

கோவையிலுள்ள ஜி.கே.டி, டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் 7 மாத காலமாக நடந்து வந்த வேலை நிறுத்தம் சென்னை, தொழிலாளர் ஆணையரின் அறிவுரைகளுக்கிணங்க 29-1-1993 முதல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த அறிவுரைப்படி பதிலி தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- அட்ஹாக் (Adhoc) தொகையாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 23

18. தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் மற்றும் சம்பள மறு நிர்ணயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் குறித்த தொழிற் தகராறு:

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 2 லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 1987-ம் வருட தொழில் நீதிமன்றத் தீர்ப்பின். நடைமுறைக் காலம் முடிந்துவிட்டமையால் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் மூலம், சம்பள மறு நிர்ணயம், பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற பொதுக் கோரிக்கைகள் சம்பந்தமாக தொழிற் தாவா எழுப்பினர். இது குறித்து சமரசப் பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் ஆணையர் முன்பு நடைபெற்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் முன்பும் இரு தரப்பினரிடையே சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அரசு எடுத்த முயற்சிகளினால் பல்வேறு நிலைகளிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வெற்றிகாண முடியாத நிலையில், தொழில் அமைதியைக் கருத்தில் கொண்டு அரசு இந்தத் தொழிற் தவாவாவை தீர்ப்பாயத்தின் முடிவிற்கு விட்டு தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 10-பி-ன் கீழ் உத்தரவு பிறப்பித்தது. இத் தாவாவினை விரைவில் முடிக்க அரசு ஒரு சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் அமைத்துள்ளது. தொழிற்தகராறுகள், தீர்வு காணப்பட்ட விவரங்கள், வேலைநிறுத்தங்கள், கதவடைப்புக்கள், சமரசம் செய்யப்பட்டவைகள் இவற்றில் தொழில் வாரியாக தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் இணைப்பு 1 முதல் 4 வரையுள்ளவாறு தரப்பட்டுள்ளன.

2.3 போனஸ் பிரச்சினைகள்:

1992-ம் ஆண்டில் போனஸ் பிரச்சினைகள் குறித்த தொழிற் தாவாக்கள் வெகு சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டன. மேலும் சமரச அலுவலர்களின் உரிய நேரத்திலான தலையீட்டின் காரணமாக இவ்வாண்டில் போனஸ் பிரச்சினை சம்பந்தமான வேலை நிறுத்தங்கள் மிகக் குறைவு.

1. பஞ்சாலைத் தொழில்:

முக்கியமாக பஞ்சாலைத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினையில் ஆணையரால் வழங்கப்பட்ட அறிவுரையினை நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டதின் காரணமாக பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் சுமார் 2 லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட இருந்ததைக் கைவிட்டனர்.

1993 ஏப்ரல் 23]

மேலும் 13% முதல் 35% வரை போனஸ் மற்றும் கருணைத் தொகை பெற்றனர்.

2. தேசிய பஞ்சாலைக் கழகம்:

தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சேர்ந்த 13 ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் 1991-1992-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை தொழிலாளர் ஆணையரால் 21-10-1992 அன்று வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது. மேற்கண்ட அறிவுரைகளினால் தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சேர்ந்த ஆலைகளில் பணிபுரியும் சுமார் 10,000 தொழிலாளர்கள் அந்தந்த ஆலைகளின் லாபத்தின் அடிப்படையில் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக 15% முதல் 35% வரை பெற்று பயனடைந்துள்ளனர்.

3. கூட்டுறவு நூற்பாலைகள்:

18 கூட்டுறவு நூற்பாலைகளில் 1991-92-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, இறுதி போனஸ் தொகை அந்தந்த ஆலைகளின் தகுதி அடிப்படையில் முன்பணமாக 15% முதல் 19.5% வரை அந்தந்த நிர்வாகம் வழங்க ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டது. இந்த அறிவுரையினால் சுமார் 11,000 தொழிலாளர்கள் பயன்பெற்றனர்.

4. திருமலை மில்ஸ், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி:

திருமலை மில்ஸ் தொழிலாளர்கள் 1991-92–ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினையினை வலியுறுத்தி வேலையில் மந்த நிலையைக் கடைப்பிடித்தனர். இதனால் நிர்வாகம் முதலில் லே-ஆப் செய்து அதனை தொடர்ந்து 24-10-1992 முதல் கதவடைப்பு செய்தது. மதுரை, தொழிலாளர் இணை ஆணையர் தலையீட்டினால் 24-12-1992 அன்று ஒரு ஒப்பந்தம் எற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி நிறுவனம் தனது கதவடைப்பை 26-12-1992 முதல் நீக்கிக் கொண்டது.

5. நாடியாம்பாள் மில்ஸ், அறந்தாங்கி:

மேற்படி ஆலைத் தொழிலாளர்களின் 1991-92-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை, 31-12-1992 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) முன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. சுமார் 450 தொழிலாளர்கள் இவ்வொப்பந்தத்தினால் பயன் பெற்றனர்.

[1993 ஏப்ரல் 23

6. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை:

மேற்படி நிறுவனத்தின் 4 ஆலைகளில் பணிபுரியும் சுமார் 14,000 தொழிலாளர்கள் 1991-92-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை சம்பந்தமாக 13-10-1992 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். இதில், சென்னை, தொழிலாளர் ஆணையர் 10-11-1992 அன்று இரு தரப்பினருக்கும் அறிவுரை வழங்கினார். இந்த அறிவுரையின்படி நிர்வாகம் 1991-92-ம் ஆண்டிற்கான போனஸ் தொகையை வழங்கியதால், மேற்படி 4 ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் 14-11-1992 முதல் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

7. பணியன் தொழில் நிறுவனங்கள், திருப்பூர்:

திருப்பூர் பணியன் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் 1991-92-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கோவை, தொழிலாளர் இணை ஆணையர் முன்பு நடத்த சமரசப் பேச்சுவார்த்தையின் மூலம் 20-10-1992 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இந்த இணக்க முடிவினால் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

8. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் (5 பிரிவுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம்):

போனஸ் குறித்த தொழிற் தாவா சென்னை, தொழிலாளர் தனித் துணை ஆணையரால் தீர்த்து வைக்கப்பட்டது. அவர் முன் 15-10-1992 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக சுமார் 3,500 தொழிலாளர்கள் பயன் பெற்றனர்.

9. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்:

தமிழ்நாட்டிலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் போனஸ் பிரச்சினை குறித்த தொழிற்தாவா சம்பந்தமாக சென்னை, தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, 21-10-1992 அன்று அவர் வழங்கிய அறிவுரையினால் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டது. சுமார் 10,000 தொழிலாளர்கள் இந்த அறிவுரையின்படி பயன்பெற்றனர்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

10. காவேரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட்., பேட்டை வாய்த்தலை, திருச்சி மாவட்டம்:

தொழிலாளர்கள் இணை ஆணையர் (சமரசம்) 3-11-92 அன்று வழங்கிய அறிவுரையினால் மேற்படி நிறுவனத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. 26-10-92 முதல் இருந்த இந்தக் கதவடைப்பு 4-11-92 அன்று நீக்கப்பட்டது.

11. தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் பேப்பர்ஸ் லிமிடெட்., புகளூர்:

புகளூரிலுள்ள தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் பேப்பர்ஸ் லிமிடெட்., நிறுவனத்தில் போனஸ் பிரச்சினை காரணமாக 29-10-92 முதல் தொடங்கிய வேலைநிறுத்தம் 13-11-92 அன்று தொழிலாளர் ஆணையரின் அறிவுரையின்படி சுமுமாக தீர்த்து வைக்கப்பட்டது. இதில் பணிபுரியும் சுமார் 1,200 தொழிலாளர்கள் 13-11-92 முதல் தங்களது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டமையால் இந்நிறுவனத்தில் சுமுகமான நிலை ஏற்பட்டது. இதனால் தொழிலாளர்கள் 20% செயற்திறன் போனஸ் பெற்றனர்.

12. கெமிக்கல்ஸ் & பிளாஸ்டிக்ஸ் (இந்தியா) லிமிடெட், பிளாண்ட் II, மேட்டூர் அணை:

மேற்படி நிறுவன தொழிலாளர்களின் போனஸ் சம்மபந்தப்பட்ட தொழிற் தாவா, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு 26-12-92 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. 23-10-92 முதல் ஏற்பட்ட வேலை நிறுத்தமும், அதனைத் தொடர்ந்து கதவடைப்பும், 28-12-92 அன்று முதல் நீக்கப்பட்டது.

2.4. மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்:

1992-ம் ஆண்டு இவ்வரசு 15 மூடப்பட்ட பஞ்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களிலுள்ள 11,778 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 47,11,200 நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிவாரணத் தொகை மற்றும் மூடப்பட்டிருந்த நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

வ.எண்	நிறுவனத்தின் பெயர்	தொழிலாளர்களின் எண்ணிக்கை	வழங்கப் பட்ட தொகை (நபர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம்
(1)	(2)	(3)	(4)
1.	வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர்	1,351	5,40,400
2.	கே.ஜி.எஸ். ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர்	148	59,200
3.	ராதாகிருஷ்ணா மில்ஸ், கோயம்புத்தூர்	1,189	4,75,600
4.	ஜெயலட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர்	564	2,25,600
5.	மது ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர்.	440	1,76,000
6.	ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரியல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.	378	1,51,200
7.	எவரெஸ்ட் என்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட். கோயம் புத்தூர் (ஆட்டோ ஸ்மித்/ அழகர்இண்டஸ்ட்ரீஸ் உட்பட)	397	1,58,800
8.	கெம்ஃப் இன்டியா லிமிடெட்., கோயம்புத்தூர்.	186	74,400
9.	நியூ சிட்டி என்ஜினியரிங் ஒர்க்ஸ் கோயம்புத்தூர்.	182	72,800
10.	சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ், வடலூர்.	1,662	6,64,800
11.	காவேரி ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை.	850	3,40,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1993 ஏப்ரல் 23]

(1)	(2)	(3)	(4)
12.	அலெக்சாண்டர் த்ரெட் டிவிஷன், மேட்டூர்டேம்.	260	1,04,000
13.	மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ், மேட்டூர்.	2606	10,42,400
14	மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி, மேட்டூர்.	915	3,66,000
15.	சவுத் ஈஸ்ட் டேனிங் கம்பெனி, ஆம்பூர்.	650	2,60,000
	மொத்தம்--	11,778	47,11,200

2.5. கோவையில் தொழிலாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்:

தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலகங்களுக்குக் கோயம்புத்தூரில் சுமார் ரூ. 60 இலட்சம் செலவில் ஒரு மையமான அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கென 1991-92-ம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினரால் தற்போது கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

2.6. புதிய தொழிலாளர் நீதிமன்றங்கள்:

தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பட வேண்டிய சட்ட ரீதியான சலுகைகளை விரைவில் வழங்க உதவும் பொருட்டு அரசு ஆணை எண். எம்.எஸ். 297, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (டி2), நாள் 22-10-91-ன்படி 3 தொழிலாளர் நீதிமன்றங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டன. மேலும் சென்னையில் உள்ள ஒரு கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் கடலூருக்கும், மதுரையில் உள்ள கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் திருநெல்வேலிக்கும் மாற்றம் செய்யப்பட்டது. கீழ்கண்ட தேதிகளிலிருந்து இத்தொழிலாளர் நீதி மன்றங்கள் செயல் பட்டுவருகின்றன.

தொழிலாளர் நீதிமன்றங்கள்		செயல்பட ஆரம்பித்த தேதி.
தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி	--	9-10-92
தொழிலாளர் நீதிமன்றம், கடலூர்.	-	15-10-92
தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.	--	27-10-92
தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.	--	2-11-92
தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி.	--	2-11-92

[1993 ஏப்ரல் 23

இம்மாநிலத்தில் செயல்பட்டு வரும் 10 தொழிலாளர் நீதிமன்றங்களுக்கான தற்போதைய திருத்தப்பட்ட ஆட்சி எல்லைகள் பின்வருமாறு:-

தொழிலாளர் நீதிமன்றங்கள்.	ஆட்சி எல்லை.
1. முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. 2. முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை 3. இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.	சென்னை மற்றும் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டங்கள்.
4. தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்	வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள்.
5. தொழிலார் நீதிமன்றம், சேலம்.	சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்கள்.
6. தொழிலாளர் நீதிமன்றம், கடலூர்.	தென்னாற்காடு, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டங்கள்.
7. தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.
8. தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை.	மதுரை, திண்டுக்கல்-அண்ணா, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்.
10. தொழிலாளர் நிதிமன்றம், திருநெல்வேலி.	திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

அத்தியாயம் 3.

தொழிலாளர் நலச் சட்ட அமுலாக்கம்.

3.1. தொழிலாளர் துறையில் உள்ள அமுலாக்கப் பிரிவு, அமுலாக்கம் பயனுள்ளதாகவும் திறம்படவும் இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுலாக்கம் செய்யப்படுவதின் முக்கிய குறிக்கோள்களாவன:-

1. தொழிலாளர்களுக்கு, சட்டப்பூர்வமாகக் கிடைக்க வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பது;

2. நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பது.

3. இன்னலற்ற அமுலாக்கம்.

3.2. எடைகள் மற்றும் அளவுகள் உட்பட சட்டபூர்வமான தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியாக அமுல் செய்யப்படுகின்றனவா என்று தெரிந்து கொள்ள, சிறப்பு, திடீர் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொட்டலப் பொருட்கள் விதிகள் உட்பட, எடையளவுச் சட்டங்களின் கீழ் அண்மையில் செயல்படுத்தப்பட்டு வரும், இசைவு தீர்வை முறையானது (Compounding method) நீதிமன்றத்தில் வழக்குகள் தொடருவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தடுக்க உதவுகிறது. 1992-ம் ஆண்டு இசைந்த தீர்வையின் மூலம் எடையளவுகள் சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின்கீழ் 39,497 வழக்குகளில் ரூ. 53,52,790.00 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமுலாக்கம்:

3.3.1. பேச்சு வார்த்தைகளின் மூலம் தங்களது உரிமைகளைப் பெற இயலாத அமைப்பு ரீதியற்ற முறையில் இயங்கும் தொழிலாளர்கள் இச்சட்டத்தின் பயன்களைப் பெறுவதில் இவ்வரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

3.3.2. குறைந்தப்பட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் மிகுந்துள்ள தொழில்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்து வருகிறது. இதுநாள்வரை 67 தொழில்கள் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் அரசால் சேர்க்கப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

3.3.3. குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யும் தருணங்களில் அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர, நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அகவிலைப் படியை நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

3.3.4. *31*-வது தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டின் பரிந்துரையின் அடிப்படையில், குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் தற்போது ஈராண்டிற்கு ஒருமுறை மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

3.3.5. நிர்ணயம் செய்யப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் தினசரி ரூபாய் *20*-க்கு குறையாத வகையில் இருக்குமாறும் அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது.

3.3.6. அரசினால் பல்வேறு தொழில்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் அறிவிக்கை செய்யப்படுவதை நிர்வாகிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து நிறுத்தி விடுகிறார்கள். இதனால் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பது தடுக்கப்படுகிறது. நிர்வாகத்தினரின் இப்போக்கினைத் தடுக்கும் பொருட்டு, இந்திய அரசியல் அமைப்பின் *9*-வது அட்டவணையில் குறைந்த பட்ச ஊதியத்தை சேர்க்கும்படி இந்தியத் தொழிலாளர் மாநாடு மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற தேசிய அளவிலான கூட்டங்களில் இவ்வரசு எடுத்துரைத்துள்ளது.

3.3.7. கடந்த *28-2-93* முடிய பின்வரும் தொழில்களுக்கு அரசால் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் நிர்ணயம் /மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நிர்ணயம்:

1. பட்டு இழை முறுக்கும் தொழில்.

2. மின்னணு தொழில்.

3. பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழில்.

4. தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்.

5. அப்பளம் தயாரிக்கும் தொழில்.

1993 ஏப்ரல் 23]

6. தேங்காய் உரிப்புத் தொழில்.

மறுநிர்ணயம்:

1. உப்பளத் தொழில்.

2. கம்பளித் தரை விரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்.

3. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்.

4. எண்ணெய் ஆலைத் தொழில்.

5. காட்டன் ஜின்னிங், பிரஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்.

6. திரை அரங்குகள் தொழில்.

7. திரைப்படத் தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட).

8. கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சாலைப் பராமரிப்புத் தொழில்.

3.3.8. காற்றூட்டப்பட்ட நீர் (Aerated water) தயாரிப்பு தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் குறித்து குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

3.3.9. 28-2-93 முடிய பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் குறித்த செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

நிர்ணயம்:

பாலிதீன், பதப்படுத்தப்பட்ட-போம் வகைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில்.

மறு நிர்ணயம்:

1. பட்டுக் கைத்தறி நெசவுத் தொழில்.

2. பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு ஃபால் பேக் ஊதிய மறு நிர்ணயம்.

3. முந்திரி தொழில்.

4. தோட்ட நிறுவனங்கள் (தொழிலாளர்கள்) தொழில்.

5. செயற்கை வைரக் கற்களுக்குப் பட்டைத் தீட்டு தொழில்.

6. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்.

7. தையற் தொழில்.

8. விசைத் தறித் தொழில்.

9. மர ஆலைத் தொழில்.

10. வனத் தொழில்.

11. புகையிலைத் (பீடி தயாரிப்பு) தொழில்.

12. மூக்குப் பொடித் தயாரிப்பு.

13. செங்கல் மற்றும் ஓடு தயாரிப்புத் தொழில்.

14. விலைக்கு வாங்கும் தேயிலைகளைப் பதப்படுத்தும் தொழில்.

15. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும்) தயாரிப்பு தொழில்.

16. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்.

17. சலைவை நிலையங்கள் மற்றும் துணி வெளுக்கும் தொழில் (கம்பளி ஆடைகள் உட்பட).

18. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி தொழில்.

19. புகையிலைத் (பீடி சுற்றுதல்) தயாரிப்புத் தொழில்.

20. அரிசி ஆலைகள், பருப்பு ஆலைகள் மற்றும் மாவு ஆலைகள் தொழில்.

21. பாத்திரங்கள் தயாரிப்புத் தொழில்.

22. விவசாயத் தொழில்.

3.3.10. தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத்தொகை ஆகியவை பற்றிய விவரம் இணைப்பு 5 முதல் 7 வரையில் தரப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

அத்தியாயம்-4.

நலத்திட்டங்கள்

பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி:

4.1.1 வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நலிந்த பிரிவு பீடித் தொழிலாளர்களுக்கு மைய அரசால் மாநில அரசுக்கு வீடு கட்ட செலவாகும் தொகையில் 50 விழுக்காடு அல்லது உயர்ந்த பட்சமாக ரூ. 5000 உதவித் தொகையாக ஒவ்வொரு வீட்டிற்கும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வீடுகளை கட்டுவதற்கு ஏதுவாக அரசு நிலம் இல்லாவிடில், தகுதியான பட்டாநிலம் அரசு செலவில் கையகப்படுத்தி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் உள்ள சத்துவாச்சாரியில் ஏற்கனவே 150 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

4.1.2. பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடல் ஆகிய இடங்களில் அரசு நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளது. ஒவ்வொரு வீடும் கட்டுவதற்கு ரூ. 15,000 செலவாகும் என முதலில் மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்பிறகு கட்டுமானப் பணியின் விலை உயர்வினைக் கருத்தில் கொண்டு, ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 22,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டு, அதில் பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 5000 மான்யமாகவும் மீதமுள்ள தொகை ரூ. 17,000 ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 22 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும் தவணை முறையில் 8% வட்டியுடைய கடனாகவும் பெற்றுத் தரப்படும். திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் பீடித் தொழிலாளர்களுக்கு 1,000 வீடுகள் கட்டித் தருவதற்கு, ஒரு வீட்டிற்கு ரூ. 22,000 வீதம் செலவிட அனுமதியளித்து அப்பணியை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உடன் மேற்கொள்ளும்படி அரசு உத்திரவு எண். 271 (தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்புத்துறை), நாள் 24-12-92 மூலம் உத்திரவு அளித்துள்ளது. ஹட்கோவிலிருந்து 8 விழுக்காடு வட்டியுடன் கடன் பெறவும் இந்த உத்திரவு வகை செய்கிறது. மேற்படி திட்டத்திற்காக பீடித் தொழிலாளர்களில் 1,000 பயனீட்டாளர்களை ஏற்கனவே தேர்வு செய்து அப்பட்டியல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு கடன் மற்றும் மானிய உதவித் தொகை பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி கோரி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 1,000 வீடுகள் கட்டும் திட்டத்திற்கு மான்ய தொகையை விரைவில் அனுமதித்து வழங்குமாறு ஹைதாராபாத்திலுள்ள நல ஆணையரும் கோரப்பட்டுள்ளார்.

4.1.3. பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தைப் பீடித் தொழிலாளர்கள் அதிகமுள்ள வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த தகுதியான நிலங்களை அடையாளம் கண்டு ஒதுக்கித் தர அம்மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதியான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் தகுதியுடைய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பீடித் தொழிலாளர்களுக்கென உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அமுலாக்குதல்.

4.2.1. ஆலங்குளத்தினைச் சேர்ந்த மாவட்ட பீடித் தொழிற்சங்கம் தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட பீடித் தொழிலாளர்களுக்குச் சரிவர அமுல்படுத்துவதில்லையென உச்சநீதிமன்றத்தில் 1987ல் தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீது, உச்சநீதிமன்றம் ஆராய்ந்து, 19-11-1991 தேதிய தீர்ப்பு மூலம் 11 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது. மேற்படி கட்டளைகள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்க மூன்று ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவை உச்சநீதிமன்றம் நியமித்துள்ளது. அதன் தலைவராக உள்ள ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டி 3 மாதங்களுக்கொருமுறை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களடங்கிய கூட்டத்தை நடத்தி உச்சநீதிமன்ற கட்டளைகள் நிறைவேற்றப் படுவதிலுள்ள முன்னேற்றத்தைத் திறனாய்வு செய்து வருகிறார். அவ்வாறு 92-ம் ஆண்டில் 3 கூட்டமும் ஜனவரி 93-ல் ஒரு கூட்டமும் இதுவரை நடத்தப்பட்டுள்ளது.

4.2.2. மாநில அரசிற்குச் சம்பந்தப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றும் வகையில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் குறிப்பிட்ட 10 பீடி உற்பத்தி நிறுவனங்கள் சம்பந்தமாக பீடித் தொழிலாளர்கள் கணக்கெடுப்புப் பணி நடத்தப்பட்டது. உண்மையான பீடித் தொழிலாளர்களைக் கண்டறிவதற்காக இந்நிறுவனங்களிலுள்ள 54,990 பாஸ் புத்தகங்களுக்கான தொழிலாளர்களின் இருப்பிடங்களில் கணக்கெடுப்புப் பணி நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்புப் பணி மூலம் உண்மையாக பீடி சுற்றும் 32,135 பெண் தொழிலாளர்கள் பெயரில் பாஸ் புத்தகங்கள் வழங்கப்படாமல், அத்தொழிலில் இல்லாத ஆண்கள் பெயரில் பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது

1993 ஏப்ரல் 23]

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாஸ் புத்தகங்கள் மத்திய சுங்க வரித் துறையின் அத்தாட்சியுடன் பீடித் தொழில் நிறுவன வேலையளிப்பவர்களால் வழங்கப்படுவதினால், மதுரை மத்திய சுங்க வரித்துறை கலெக்டர் கணக்கெடுப்பு மூலம் அடையாளம் காண்பதிலுள்ள உண்மையான பீடி தொழிலாளர்கள் பெயரில் பாஸ் புத்தகங்களை மாற்றித் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது தவிர எவ்வித பாஸ் புத்தகமுமின்றி பீடி சுற்றும் 3,336 தொழிலாளர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த கணக்கெடுப்பு மூலம் அடையாளம் கண்டறியப்பட்டுள்ள உண்மையான் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக தொழிலாளர் நல சட்டம், விதிகளின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் யாவும் வேலையளிப்பவர்களால் பராமரிக்கப்படத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்துறையின் அமுலாக்கப் பிரிவு அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

4.2.3. வீடுதோறும் கணக்கெடுக்கும் பணி திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள மற்ற பீடி நிறுவனங்களுக்கும் இப்போது விஸ்தரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்துறையைச் சேர்ந்த களப் பணியாளர்கள் மட்டுமே தற்சமயம் இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சுமார் ஒரு லட்சம் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக கணக்கெடுப்புப் பணி செயய வேண்டியதாக இருப்பதாலும், இப்பணியினை விரைந்து முடிப்பதற்காகவும், இம்மாவட்டத்தில் உள்ள மற்றவர்கள் சேவையையும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

4.2.4. பொது வைப்பு நிதி துணை மண்டல அலுவலகம் ஒன்றை திருநெல்வேலியில் அப்பகுதி தொழிலாளர்கள் நலன் கருதி 1-4-93 முதல் திறந்து செயல்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

4.2.5. பீடித் தொழிலாளர் நலத் திட்டத்தினை அமுல்படுத்தும் மத்திய அரசு அலுவலர் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கவனிக்க ஏதுவாக, மதுரையில் உள்ள உதவி நல ஆணையரை மாதத்தில் 10 நாட்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று அங்கு தங்கி நலப் பணிகளைக் கவனித்து வருமாறு ஹைதராபாத் நல ஆணையர் உத்திரவிட்டுள்ளார். தமிழ்நாடு அரசு, மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற பீடி தொழிலாளர் நல நிதி சட்டத்தின் மாநில ஆலோசனைக் குழு கூட்டத்தில், சென்னையில் புதியதாக நல உதவி ஆணையர் அலுவலகம் ஒன்று திறக்கலாம் என்றும் தற்போது மதுரையில் உள்ள நல உதவி ஆணையர் அலுவலகத்தைத் திருநெல்வேலிக்கு மாற்றலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு மீது உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசைக் கோரவும் முடிவு செய்யப்பட்டது.

பீடித் தொழிலாளர்களுக்கு காப்புறுதித் திட்டம்

4.3.1. பீடித் தொழிலாளர்களுக்குக் கூட்டு காப்புறுதித் திட்டம் (Group Insurance Scheme) *1-4-92* முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் சேராத பீடித் தொழிலாளர்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, பணியின்போது தொழிலாளர் விபத்தில் இறந்தால் ரூ. *6,000* அவருடைய வாரிசுதாரருக்கு வழங்கப்படும். மற்றும் இயற்கை மரணமாக இருந்தால் ரூ. *3,000*ஆம் வாரிசுதாரருக்கு வழங்கவும் இத்திட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

4.3.2. பீடித் தொழிலாளர்களுக்கு ரூ. *50,000*-க்கு மற்றொரு காப்பீட்டுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த, தொழிலாளர் ஆணையரால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிற திட்டங்கள்:

4.4. தொழிலாளர்கள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ்ப் பயன் பெறவும் குறிப்பாக அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்க மாநிலத்தில் மூன்று தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

கட்டிட தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்துதல்

4.5.1. அமைப்பு ரீதியற்ற துறைகளில் ஒரு பெரும்பான்மையான பகுதியினர் கட்டிடத் தொழிலாளர்களாகும். கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க அவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு, நலன்கள் மற்றும் இது சம்பந்தமான சில மற்ற விஷயங்களைக் கருத்தில் கொண்டு இவ்வரசு *1986*-ம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் மற்றும் பல்வேறு வழிமுறைகள்) என்ற சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின் கீழ் விதிகள் வகுக்கும்போது கட்டிடத் தொழிலாளர்களின் நலன்களுக்காக, மத்திய அரசு ஒரு தனிச் சட்டம் கொண்டு வர இருப்பதாகக் கூறியதால், இவ்விதிகள் வகுப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

4.5.2. கட்டிடத் தொழிலாளர்களுக்கான மாநில அல்லது மத்திய அரசு சட்டங்கள் எதுவும் எந்தவிதப் பயனையும் உடனடியாக அளிக்காது என்ற நிலையில் கட்டிடத் தொழிலில் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள் அடிக்கடி அரசை, *1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிபந்தனைகள்

1993 ஏப்ரல் 23]

முறைப்படுத்துதல்) சட்டத்தினைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தக் கோரினர். மேலும், கட்டிடத் தொழிலை 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிபந்தனைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்து அதன் கீழ் தங்களுக்கு ஒரு திட்டம் தயாரித்தளிக்கும்படி வேண்டினர். ஆகையால் இச்சட்டத்தினைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்த அரசு முடிவெடுத்துள்ளது. கட்டிடத் தொழிலாளர்கள் சில சமூகப் பாதுகாப்பு நலன்கள் அடைய வேண்டி, இவ்வரசு இத்தொழிலாளர்களுக்கென தனியாக ஒரு நலத் திட்டத்தை தீட்டியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கு விபத்து மற்றும் உடல்நலக் குறைவின்போது நிவாரணம் அளிப்பது தவிர வைப்பு நிதி, ஓய்வூதியம், குழந்தைகள் காப்பகம், மகப்பேறு உதவி போன்ற பலன்களும் அளிக்க உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள நலத் திட்டங்களுக்காக ஒரு தீர்வை விதித்து அந்த நிதியினைக் கொண்டு மேற்படி நலத் திட்டங்களைச் செயல்படுத்த 1982-ம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிபந்தனைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது. மேலும், இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவின் நிர்வாக மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் கூறிய பல்வேறு கருத்துக்களையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

மலைத் தோட்டங்கள் :

4.6. 1951 தோட்டத் தொழிலாளர் சட்டம், தோட்டத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலன்களை அளித்தும் அவர்களுடைய பணியினை முறைப்படுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்டதாகும். தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்களை ஆராய்ந்து அரசிற்கு பரிந்துரை செய்கிறது. அவற்றில் ஒன்றானதுதான் தோட்டத் தொழிலாளர்களுக்கு போர்வைகள் வழங்குதல். சில மலைத் தோட்ட நிறுவனங்களில் போர்வைக்குப் பதிலாக அதற்கு ஈடான தொகையை பணமாகக் கொடுக்கின்றனர். அவ்வாறு போர்வைக்குப் பதிலாக தரப்படும் தொகை ரூ. 72.50-லிருந்து ரூ. 110 ஆக 1-10-1991 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி சலுகையை மாதத்திற்கு ரூ. 15-லிருந்து ரூ. 25 ஆக உயர்த்தியும் ஆதிவாசிகளின் குடிசைகள் பராமரிப்புப் படியை ஆண்டுக்கு ரூ. 100லிருந்து ரூ. 175க்கு 1-9-91 முதல் உயர்த்திடவும் முடிவு செய்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதி திட்டத்தை பரிசீலித்து வீட்டு வசதி நலன்களைப் பேண ஒரு துணைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[*1993 ஏப்ரல் 23*

தொழிலாளர் மறு வாழ்வு நிதி

4.7. நவீனப்படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிறுவனங்களினாலோ ஆட்குறைப்போ அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது. எனவே, அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை கண்டறிந்து அந்த தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி" என்னும் ஒரு தொழிலாளர் மறு வாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூ. *1* கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்தியாயம்–5

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை

5.1. தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை *1972*ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களும் அவர்தம் குடும்பங்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

5.2. தொழிலாளர் மற்றும் நிர்வாகம் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட வாரியம், தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையின் கீழ், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியை நிர்வகித்து வருகிறது.

5.3. இவ்வாரியம், தமிழகம் முழுமையும் *51* தொழிலாளர் நல மையங்களையும், *19* தையற் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகின்றது. ஒவ்வொரு மையத்திலும் தொழிலாளர்களின் ஆதரவில் வாழ்ந்துவரும் மகளிர்க்குத் தையற் பயிற்சி கற்பித்தலும், ஒரு பிரிவில் குழந்தைகளுக்கான பள்ளியும் நடத்தப்படுகின்றன. தையற் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. *80* வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியுடன் சத்துணவு, பால், பழம், முட்டை வழங்கப்படுவதுடன் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பிரதி ஆண்டும் இரண்டு ஜதை டெரிகாட்டன் சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

5.4. காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம், திருப்பூர், ஆசாரிப்பள்ளம்,. ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் *26* படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவினை இவ்வாரியம் கட்டியுள்ளது.

5.5. தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் *14* இடங்களில் இலவசப் படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகின்றது. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிக மிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகின்றது. மேலும், ராமேஸ்வரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலும் ஓய்வு இல்லங்கள் கட்ட, இவ்வாரியம் முடிவு செய்துள்ளது.

5.6. சென்னை, தேனாம்பேட்டையில், தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/சமரசப் பேச்சு வார்த்தை ஆகியவற்றிற்காக வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக ஓர் ஓய்வு இல்லமும் கட்டப்பட்டுள்ளது.

5.7. தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் விளையாட்டுத் துறையில் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு வருடாந்தர விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

5.8. கடலூரில் *18-1-93* முதல் புதியதாக ஒரு தொழிலாளர் நல மையம் செயல்பட்டு வருகிறது. சென்னை, அண்ணாநகரில் ஒரு தொழிலாளர் நல மையம் துவங்குவது பற்றி வாரியம் பரிசீலித்து வருகிறது.

5.9. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு ஆண்டு ஒன்றிற்கு தொழிலதிபர்கள் ஒவ்வொரு தொழிலாளருக்கும் *4* ரூபாயும், அரசு *2* ரூபாயும், தொழிலாளர் ஒவ்வொருவரும் *2* ரூபாயும் சந்தா தொகையாக அளித்து வருகின்றனர். இதனை முறையே ரூபாய் *6, 3, 3* என உயர்த்துவதற்கு இவ்வாரியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்காக *1972*ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தைத் திருத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5.10. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரம் இணைப்புகள் *8* முதல் *10* வரையில் தரப்பட்டுள்ளது.

அத்தியாயம்–6

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையம் 1978ஆம் ஆண்டு முதல்தர நிலையமாக உயர்த்தி அமைக்கப்பட்டது. தற்போது 1-4-1988 முதல் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்த நிலையம் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையின் கீழ் உள்ள ஆட்சிக் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நல்ல தொழிற் சங்கத் தலைவர்களை உருவாக்குதல், நிர்வாகத்தினருக்குத் தொழிலாளர்களுடன் இனக்கமான நெருக்கத்தினைத் தோற்றுவித்தல், தொழிலாளர் துறையிலும் தொழிற்சாலைகள் துறையிலும் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல், தொழிலாளர் நிர்வாகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை இந்த நிலையத்தின் முக்கியப் பணிகளும், நோக்கங்களும் ஆகும்.

6.2. இக்கல்வி நிலையம் பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சிகள் (Refresher Courses) இயல்பாக்கப் பயிற்சிகள் (Orientation Programme) ஆகியவற்றினை நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சிகள் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைத்துறை அலுவலர்களுக்கும் பிற துறை அலுவலர்களுக்கும் பயன்படும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையத்தில் தொழிலாளர் நிர்வாகம் சம்பந்தமாக ஓராண்டு பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வழங்கப்படுகிறது. மேற்கண்ட பட்ட மேற்படிப்புகளுக்குச் சென்னை பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது. தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களின் விரிவுரையும், குழு கலந்துரையாடலும், பொருள்கள் குறித்து விரிவான ஆழமான படிப்பும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளில் அடங்கும். ஆண்டுதோறும் பட்டப்படிப்பில் 40 மாணவர்களும், பட்ட மேற்படிப்பில் 20 மாணவர்களும் பயில்கின்றனர்.

6.3. மேற்படி பட்ட மேற்படிப்பு முறையான பகுதிநேரப் பயிற்சியைத் தவிர (மாலை நேரம்), 1993-94ஆம் கல்வி ஆண்டுமுதல் அஞ்சல்வழி மூலமாகவும் தொழிலாளர் நிர்வாக பட்ட மேற்படிப்புப் பயிற்சியினை இந்நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1993 ஏப்ரல் 23]

6.4 தமிழ்நாடு தொழிற்சாலைகள் (நல அலுவலர்) விதிகள் 4-ல் நல அதிகாரிகள் நியமனத்திற்குத் தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு கல்வித் தகுதியாக சேர்க்கப் பட்டுள்ளது.

6.5. 1992 ஆம் ஆண்டில் 39 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் மற்றும் பயிற்சி அடைந்தவர்களின் எண்ணிக்கை 1,437. இக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 31-12-1992 வரையிலான காலத்தில் 777 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 32,154 நபர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

உழைப்பவர் உலகம் வெளியிடுதல்:

6.6. இக்கல்வி நிலையத்திலிருந்து 1978-ம் ஆண்டு முதல் "உழைப்பவர் உலகம்" என்ற தமிழ்மாத இதழ் வெளியிடப்பட்டு வந்தது. இந்த இதழில் தொழிலாளர்களுக்கு பயன்படும் வகையில் தொழிற் தகராறுகள் தொடர்பான உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளும், விலைவாசி தொடர்பான புள்ளி விவரங்களும், பயன் அளிக்கக் கூடிய தொழில் உறவு தொடர்பான செய்திகளும் இடம் பெற்று வந்தன. தொழிலாளர் சட்டங்களில் தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் "கேள்வி-பதில்" என்னும் பகுதி இந்த இதழில் வெளியிடப்பட்டது.

6.7. மேற்படி உழைப்பவர் உலகம் பத்திரிகையினைத் தமிழரசு பத்திரிகையுடன் ஒருங்கிணைந்து வெளியிடும் நோக்கத்துடன் 1989ஆம் ஆண்டு இப்பத்திரிகை வெளியிடுவது நிறுத்தி வைக்கப்பட்டது. உழைப்பவர் உலகம் மாத இதழ் பத்திரிக்கை மீண்டும் செப்டம்பர் 92 முதல் வெளியிடப்படுகிறது.

பதிப்புக்குழு

6.8. மேற்படி பத்திக்ரிகை வெளியிடு சம்பந்தப்பட்ட வேலைகளை கவனிக்கும் பொருட்டு அரசு ஒரு பதிப்பு ஆலோசனைக் குழு ஒன்றினை தொழிலாளர் ஆணையரைத் தலைவராகவும், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளரை உறுப்பினராகவும் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் கொண்டு அமைந்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

அத்தியாயம் 7

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை :

7.1. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர பதின்மூன்று தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்துகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் அமுலாக்கத்தினால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் சுகாதாரம், தொழிலாளர் நலம், பாதுகாப்பு ஆகியவை பேணப்படுகின்றன.

7.2. தமிழகத்தில் 31-12-1992 அன்று 19,052 தொழிற்சாலைகள் பதிவு பெற்று உத்தேசமாக 9,28,883 தொழிலாளர்கள் உள்ளனர். 1992 ஆம் ஆண்டு ரூ. 3,02,99,454 உரிமத்தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

7.3. தொழிலாளர் சட்டங்களினை செயல்படுத்தி நிர்வகிக்க இத்துறையின் முழு பொறுப்பினையும் தொழிற்சாலைகள், தலைமை ஆய்வாளரைச் சாரும்.

தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சார்புள்ள சட்டங்களை நிர்வகித்தல்:

7.4. 13 சட்ட அமுல் நடத்தும் கோட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தொடர்புள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகின்றன. பயன் தரத்தக்க முறைகளை இத்துறையினரால் மேற்கொள்ளப்படுவதால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணி சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய சட்டங்களில் குறிப்பாக ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 1948 ஆகியவற்றின்கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் ஆணைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

7.5. மாநிலத்தில் 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் செயலாற்றுகின்றன. அழுத்த இயந்திர சோதனை, பாதுகாப்பு வகுப்புகள் பாதுகாப்பு ஆய்வுகள், கருத்தரங்குகள், பாதுகாப்பு பற்றிய வெளியிடுகள் தயாரித்தல் ஆகியவை இக்கோட்டங்களின் பணிகளாகும்.

7.6. 1992 ஆம் ஆண்டில் 22,879 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு விடுமுறை, சிறப்பு, திடீர், இரவு ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதின்மூலம் 9,175 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

1993 ஏப்ரல் 23]

7.7. 1992 ஆம் ஆண்டில் 1948 தொழிலாளர் சட்டத்தின்கீழ் 3,075 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதுவரை வெவ்வேறு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 393 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. அபராத தொகையாக ரூ. 8,91,150 வசூலிக்கப்பட்டுளளது.

7.8. 1988 ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள் அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம் குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடு பராமரிப்பிலும் அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க வகை செய்து இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும். தொழிற்சாலைகள் சட்டம் 1948, ஊதியம் வழங்கும் சட்டம் 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948, சம ஊதியச் சட்டம் 1976, ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் 1970 ஆகிய சட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட பதிவேடுகளுக்குப் பதிலாக எளிய முறையில் குறைவான பதிவேடுகளைப் பராமரிக்க இச்சட்டம் வகை செய்கிறது.

7.9. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் தொழிற்சங்க பிரிதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அவைகளை உடனுக்குடன் கவனிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் 615 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப்பட்டு உள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவைகளை களைய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளன.

7.10. வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதைதுரிதப்படுத்த வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் சார்நிலை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன :-

(அ) அபாயகரமான உற்பத்தி முறை உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 100 தொழிலாளர்களுக்குக் குறைவாக உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்களை தொழிற்சாலைகள் துணைத்தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 100க்கு மேற்பட்ட 500க்குக் குறைவாக உள்ள தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) அபாயகரமான உற்பத்தி முறையில் மற்றும் கேடுவிளைவிக்கக் கூடிய முறையில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 500 தொழிலாளர்

களுக்கு மேற்பட்டு உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

7.11. 1992 ஆம் வருடம் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் 660 வரைபடங்களும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்களால் 342 வரைபடங்களும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் 2,186 வரைபடங்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்திற்கான திருத்தங்கள்:

7.12. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற்சாலை சட்டத்தில் மின் சக்தியுடன் 25 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளையும் மின் சக்தியின்றி 50 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற் சாலைகளையும் சிறு தொழில் நிறுவனங்களாக வரையறுக்க சட்டத்திருத்தம் அரசின் பரிசிலனையில் உள்ளது. 10 குதிரைத் திறன் மின் சக்தி பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மின் சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலையாக கருத்திற் கொள்ளப்படும்.

7.13. ஒவ்வொரு ஆண்டும் தொழிற்சாலைகளின் நிர்வாகம் உரிமம் செலுத்துவதில் எதிர் கொள்கின்ற சிரமங்களைக் குறைக்கும் பொருட்டு ஓராண்டு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு உரிய தொகையுடன் உரிமம் புதுப்பிப்பதற்கான விருப்பம் தெரிவிக்கவும், உரிமத் தொகையினை கருவூலத்தில் செலானில் செலுத்துவதற்குப் பதிலாக வங்கிக் கேட்பு வரைவுகளில் செலுத்துவதற்கான திருத்தங்கள் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் செய்வதற்கான முன் மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

சிறுதொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்ட அமுலாக்கத்தினை எளிதாக்குதல்:

7.14. சிறுதொழில் நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் சட்டங்கள்/விதிகள் ஆகியவற்றை கடைப்பிடிக்கும் சிரமங்கள் குறித்து பெறப்பட்ட புகார்களை கருத்திற்கொண்டு இந்திய அரசு மாநில அரசுகளை, சிறு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் வியாபார செயல்களில் கவனம் செலுத்துவதற்கேற்ப அடிக்கடி ஆய்வுகள் தேவையற்ற தலையீடுகள் ஆகியவைகளை தவிர்க்க சிபாரிசு செய்துள்ளது. அதற்கேற்ப இவ்வரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1993 ஏப்ரல் 23]

சிறுதொழில் நிறுவனங்களுக்கான குழு.

7.15. சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுத்துவது சம்பந்தமாக கண்காணிக்க மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலர் குழுத் தலைவராகவும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் உள்ளனர். இக்குழு அவ்வப்பொழுது கூடி சிறு தொழில் நிறுவனங்களின் குறைகளை கவனித்து அதற்கான நிவர்த்தி வழிகளைத் தெரிவிக்கும்.

7.16. சிறு தொழில் நிறுவனங்களை பொருத்த மட்டில் தொழிலாளர் கள்/தொழிற் சங்கங்கள் மூலம் புகார்கள் ஏதும் பெறப்பட்டாலோ அல்லது விபத்து ஏதும் நேர்ந்தாலோ ஆய்வு மேற்கொண்டால் போதுமானது எனவும், மேற்படி சிறு தொழில் நிறுவனங்கள் முறையாக ஆய்வு மேற்கொள்வதைத் தவிர்த்து எப்போதாவது ஆய்வு மேற் கொண்டால் போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அபாயம் மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகள் சிறு தொழில் நிறுவனங்களாக இருப்பினும் இவைகளை ஆண்டிற்கு இருமுறை ஆய்வு மேற்கொள்ள அரசு தெரிவித்துள்ளது.

7.17. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளை பொறுத்தமட்டில் அத்தொழிற்சாலைகளின் இடையூறு தன்மையினை கருத்திற்கொண்டு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

7.18. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உச்ச நீதிமன்றத்தின் கட்டளைக்கிணங்க, 10 தொழிலாளர்களுக்குக் குறைவாக பணியாற்றுகின்ற தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளை தொழிற்சாலைச் சட்டத்தின் பிரிவு 85 (1)-ன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கைகள் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் 1981.

7.19. இச்சட்டம், தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணி புரிந்திருப்பின் அவர்கள் நிரந்தரம் செய்யக்கோரும் தகுதியை அளிக்கிறது. 9638 தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு 27,282 தொழிலாளர்கள் இந்த ஆண்டு பணியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்:

7.20. தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக்கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987 ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுப் படுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் அத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொது மக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

7.21. பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான பணிச் சூழ்நிலை உறுதி செய்யும் பொருட்டு, தொழிற்சாலையின் வரைபடங்கள், கட்டிட ஸ்திரத்தன்மை காற்றோட்டம், வெளிச்சம், தட்பவெப்பம், பணிச்சூழ்நிலை, குறிப்பாக செயல்முறைகள், அபாயப்பணி, இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் பொருட்களை கையாளுதல் ஆகிய கோணங்களில் தொழிலாளர் ஆய்வகத்தால் ஏற்பளிக்கப்படவேண்டும்.

7.22. நம் மாநிலத்தின் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன: மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப் பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களை பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகளுக்கு விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளித்துக் கட்டுப்படுத்தும் திட்டங்களும் (Major Disaster Control Measures) தொழிற் சாலையை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்பொழுது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் (Safety Measures) ஆகியவற்றைத் தீட்டப்படவேண்டும்.

7.23. பெரும் அபாய விபத்துகளை தடுக்கின்ற முறையில் உரிய கருவிகளுடன் கூடிய ஒரு தனிப்பிரிவு சென்னையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இது அபயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்கூடங்களில் ஏற்படும் திடீர் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு முனையும் சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவு (Testing & Safety Cell) இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

1993 ஏப்ரல் 23]

7.24. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகள் (Highly Hazardous Industries) பொருத்தவரை மாவட்ட அளவில் அவசர கால நிலைமையை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தாயாரிக்கவும், சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட ஆய்வாளர்கள் இணைந்து செயல்படுகிறார்கள்.

தொழிற்சாலைகளுக்கான மனை மதிப்பீட்டுக்குழு:

7.25. தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 41 (எ) ன்படி அரசு ஒரு மனை மதிப்பீட்டுக்குழு (Site Appraisal Committee) அமைந்துள்ளது. இக்குழு கேடுவிளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளின் உரிம விண்ணப்பங்கள் அல்லது இது போன்ற தொழிற்சாலைகளின் விரிவு குறித்தான விண்ணப்பம் ஆகியவற்றினை பரிசீலித்து அரசிற்கு ஆலோசனை நல்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் இக்குழுவின் தலைவராவர். கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இம்மனை மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசின் ஒப்புதல் பெறப்படுதல் வேண்டும். இக்குழு இத்தொழிற்சாலைகளின் வரைபடங்களை பரிசீலித்து அதன் சுற்றுப்புற சூழ்நிலையினை கருத்திற்கொண்டு மனையின் தகுதியினை பரிந்துரைக்கும்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கான பயிற்சி நிலையம்:

7.26.1. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு கையாளுதல், செயல்படுத்துதல், ஏற்றிச்செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற பணிகளின் பாதுகாப்பு முறைகளைப் பற்றி பயிற்சி அளிப்பதற்காக தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தகுதியில் ஒரு அலுவலரைக் கொண்டு பயிற்சி நிலையம் ஒன்று சிவகாசியில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிலையம் துவங்குவதால், நாளடைவில் விபத்துகள் குறைய ஏதுவாகும்.

7.26.2. அபாயகரமான இரசாயணப் பொருள்களை மூலப்பொருளாக கொண்டு செயல்படும் 59 தொழிற்சாலைகள் இம்மாநிலத்தை பொருத்தவரை இருக்கின்றன. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட ஆய்வாளர்கள் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு தொழிற்சாலையின் பல்வேறு மட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளை கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள்.

7.26.3. 246 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் 423 தொழிற்சாலைகளில் இந்த ஆண்டு நடைபெற்று அதன்மூலம் 6,963 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர். அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற் சாலைகளைத் தேர்ந்தெடுத்து அத்தொழிற்சாலைகளை பொருத்தவரை 34 பாதுகாப்பு அளவீடு (Safety Survey) 34 தொழிற்சாலைகளில் நடத்தப்பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளன. 52 தொழில் சார்ந்த சுகாதார அளவீடு (Health Survey) 1992 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.26.4. தொழிற்பாதுகாப்பு குறித்து சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவின் உதவி மருத்துவர்கள் சுகாதார அளவீடு, சோதனை ஆகியவற்றை செய்து சான்றிதழும் வழங்குவர்.

விபத்துக்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

7.26.5

ஆண்டு	மரண விபத்து	மரணமில்லாத விபத்து
1989	49	12,471
1990	35	13,062
1991	106	9,341
1992	99	10,099

மாநிலப் பாதுகாப்பு பரிசுகள் மற்றும் 'சிரம்வீர்' பரிசுகள்

7.27. தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும் தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்று கொண்டு இயங்கச் செய்யவும், நிர்வாகத்தினருக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்த பரிசு வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறுவனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி–அ. 10 இலட்சம் மனித நேரத்திற்குக் குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

தொகுதி–ஆ. *5 முதல் 10 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.*

தொகுதி–இ. *2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.*

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன:

திட்டம்–1. *முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாகக் குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு பரிசினை வழங்குதல்.*

திட்டம்–2. *அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அதிர்வு எண் விகிதத்தை* (Lowest Weighted frequency) *அந்த ஆண்டின் மிகக்குறைந்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு பரிசினை வழங்குதல்.*

திட்டம்-3. *பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மணி நேரம் செயல் புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.*

அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு குழு பரிசுக்கேடயங்கள், சான்றிதழ்கள் அளிப்பதற்காக தகுதியான தொழிற்சாலைகளைத் தேர்வு செய்கின்றது.

7.28. 1991 முதல் அளிக்கப்படும் பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாநில "சிரம்வீர்" பரிசுகள்:

வகையினம் 'அ' : *ரூ. 5,000/- வீதம் மூன்று ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ.1,000/- வீதம் கொடுக்கப் படுகிறது).*

வகையினம் 'ஆ' : *ரூ. 3,000/- வீதம் ஆக ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ. 500/- வீதம் கொடுக்கப் படுகிறது).*

வகையினம் 'இ' : *ரூ. 1,000/- வீதம் 15 ரொக்கப் பரிசுகள் (தற்பொழுது ரூ.250/- வீதம் கொடுக்கப்படுகிறது).*

[1993 ஏப்ரல் 23

அழுத்த இயந்திரங்கள் சோதனை

7.29. தமிழ்நாட்டில் 20,591 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறை தோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பான வேலைத் தன்மைக்கு தகுதிச் சான்று வழங்கவேண்டும் என 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலை ஆய்வகத்துறையே இப்பணியினை செய்து வருகின்றனர். அழுத்த இயந்திரங்களை சோதனை செய்யும் பணி, சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1992-ம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலங்களின் விபரம் கீழே வருமாறு:

வெளிப்புறம் (external)	-	11,538
உட்புறம் (internal)	-	512
நீர்மநிலையியல் (Hydrostatics)	-	4,706
கதழ் அதிர்வாய்வு (ultrasonic)	-	985

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகை ரூ. 68,54,237/- ஆகும்.

தொழிலாளர் உடல் நலம் பேணுதல்:

7.30.1. கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hazard control Cell) இணைந்துள்ள தொழிற் சாலை துப்புரவு சோதனை கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத்துறையில், சென்னை, கோவை, வேலூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, கடலூர் மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

7.30.2. 1992-ல் 11 தொழில் சார்ந்த சுகாதார ஆய்வுகள் தொழிற்சாலை துப்புரவு சோதனை கூடத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குளோரின், சல்பர்-டை-ஆக்சைட், சல்பூரிக் ஆசிட் மிஸ்ட், கார்பன்-டை-ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, மெர்குரி போன்ற நச்சுப் பொருள்களால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனக்கேடுகள் பரிசோதித்து கண்டுபிடிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமாக நச்சுத்தன்மை இருப்பின் அதனை குறைத்து தகுந்த காப்பினை அமைப்பதற்காக வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

1993 ஏப்ரல் 23]

7.30.3. 1992-ம் ஆண்டு அறுவை சிகிச்சை மருத்துவர்களால் *52* தொழிற்சாலைகள் (குறிப்பாக அபாயகரமான தொழிற்சாலைகள்) பார்வையிடப்பட்டுள்ளது. *743* தொழிலாளர்களிடம் தொழிற்சார்ந்த அபாயங்கள் கண்டு அறிய பரிசோதிக்கப்பட்டுள்ளன.

7.30.4 ஆய்வின்பொழுது நிர்வாகம் மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு தொழிற்கூட நலம் மற்றும் தனி நபர் நலம் பற்றி தெளிவாக்கப்பட்டது. சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தொழிலாளர்களை மருத்துவ வல்லூநர்களிடம் ஆலோசனை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

7.30.5 சுய பாதுகாப்பு சாதனங்கள், பொது இருப்பிட பராமரிப்பு, பெரிய விளைவுகளின் கொடிய பாதிப்புகள், புகைப்பிடித்தல், மதுப்பழக்கத்திற்கு அடிமையாகுதல் மற்றும் கெட்ட பழக்கங்கள் பற்றி தொழிலாளர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. மருத்துவ சோதனை மற்றும் ஆய்வுகள், சிறப்பான ஆலோசனைகள், மருத்துவ கருத்துக்கள், தொழிலாளர்களின் தேவைக்கேற்ப அளிக்கப்பட்டுள்ளன.

அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி சிகிச்சை மருத்துவர்களின் பணிகள்:

7.30.6.

1.	1992ம் ஆண்டில் பார்வையிட்ட தொழிற்சாலைகள்	:	*1,417*
2.	அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை	:	*15,930*
3.	நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை:		
(அ)	அபாயத் தொழில்	:	*15,930*
(ஆ)	இளம் வயதினர்	:	*9,588*
(இ)	சிற்றுண்டி விடுதி	:	*2,768*
(ஈ)	வசூலிக்கப்பட்ட பரிசோதனை கட்டணம்	:	ரூ. *10,84,339*

7.31.1. உற்பத்தி திறன் குழு :

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தி திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அதிக ஆதாரங்களைப் பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க ஆய்வு, நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை

பாதுகாப்பு, பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாக பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் புரியும்.

7.31.2. சென்னை உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரும், கோவை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் அங்குள்ள தொழிற்சாலைகள் இணை/துணை தலைமை ஆய்வாளர்கள் உறுப்பினராக செயலாற்று கின்றனர்.

7.31.3. 1992-ம் ஆண்டு இந்த உற்பத்தித் திறன் பிரிவு 45 பயிற்சி வகுப்புகள் நடத்தி 1,121 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளார்கள்.

தொழிலாளர் நலம் பேணுதல்

தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொகுதி தனி நபர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் திட்டம்:

7.32.1. 1986-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கென தொகுதி தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. பின்னர் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது.

7.32.2. இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்கும் பார்வை அல்லது கை, கால்களை இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது மட்டுமின்றி மற்ற சமயங்களில் ஏற்படும் விபத்துக்களுக்கும் ஈட்டுறுதிப் பயன் கொடுக்கப்படும்.

7.32.3. இத்திட்டத்தினால் 10 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி, பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளிக்கும் காப்பீட்டுத் தொகையாக உயர்ந்த பட்சம் ரூ. 50,000/-க்கு சந்தா தொகை ரூ. 6/- ஆக வசூலிக்கப்பட்டது.

7.32.4. இத்திட்டம் 1-7-1991 முதல் 30-6-1992 வரையில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கு ஒருங்கிணைந்த திட்டமாக நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்தால் தமிழகத்தில்

1993 ஏப்ரல் 23]

செயல்படுத்தப்பட்டது. 1,16,733 தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். ரூ. 7,04,316/- சந்தா தொகையாக வசூலிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ. 26,18,500/- இழப்பீட்டுத் தொகையாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.32.5. 1-7-1992 முதல் இத்திட்டத்தின் கீழ் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கான உயர்ந்தபட்ச இழப்பீட்டு தொகை ரூ. 50,000/-க்கு ஒரு தொழிலாளிக்கு ரூ. 20/- வீதம் சந்தா தொகையினை பெற்று நியூ இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. ஆனால் தீப்பெட்டித் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு இதுநாள் வரையில் சந்தா தொகை முடிவாகாத நிலையில் இத்திட்டம் இதுவரை செயல்படுத்தவில்லை. தென்னிந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் இக்காப்பீட்டுத் திட்டம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்து இருந்தது. இந்த வழக்கில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் இந்தக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ. 9 பிரிமியத் தொகையாக தலா ஒவ்வொரு தொழிலாளிக்கும் செலுத்த வேண்டுமென சமீபத்தில் உயர் நீதிமன்றம் ஒரு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் தடுப்பு

7.33.1. 1992-ம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஐந்து வருடங்களுக்குள் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்கள் எண்ணிக்கையை படிப்படியாக குறைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

குழந்தை தொழிலாளர்களை தடுப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் அரசு எடுத்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்டமுறைப்படுத்துதல் பிரிவினை வலிமையாக்குதல்

7.33.2. குழந்தை தொழிலாளர் தடுப்பு முறையை செயலாக்குவதற்கு தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தை இராமநாதபுரத்தில் இருந்து சிவகாசிக்கு மாற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலை ஆய்வாளர் சரகம்-2 தூத்துக்குடியில் இருந்து கோயில்பட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தேசிய குழந்தை தொழிலாளர் வேலைத் திட்டம்

7.34.1. இந்தத் திட்டம் 1986 ஏப்ரல் திங்களில் மைய அரசினால் சிவகாசியில் ஆரம்பிக்கப்பட்டது. 14 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களை

தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிவதைத் தடுத்து நீக்குதலும், அவர்களது குடும்ப வருமானத்தைப் பெருக்குதலும், கல்வி மற்றும் சுகாதார அடிப்படை வசதிளை அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 1976-ம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தைகளின் வேலைத் திட்டச் சங்கத்தினால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

7.34.2. காமராசர் மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் இந்த சங்கத்தின் தலைவர். மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு திட்ட அலுவலர் இச்சங்கத்தின் உறுப்பினர் செயலாளராகப் பணியாற்றுகிறார். இத்திட்டத்தின் கீழ், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு ஒரு ஒழுங்குமுறைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

நலநிதி

7.34.3. தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும் பொருட்டு ஒரு நல நிதியை இவ்வரசு 1-1-1991 முதல் தீப்பெட்டி தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 1-4-1992 முதல் பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலை அதிபர்கள் ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ .10/- வீதம் 1-4-1992 முதல் செலுத்துவதுடன் அரசும் இதற்கு இணையாக ரூ. 7,21,350 மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டம் காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆற்காடு அம்பேத்கார், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, பெரியார், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் அமுலில் உள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு மாவட்டக் குழுவின் இந்த தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

7.34.4. உச்ச நீதிமன்ற நீதிப்பேராணை எண். 465/86 (W.P.No.465/86)-ன்படி ஒரு மாவட்ட குழு ஒன்று மாவட்ட நீதிபதி தலைமையில் காமராஜர், வடஆற்காடு-அம்பேத்கார், திருநெல்வேலி கட்டபொம்மன், தர்மபுரி, திருச்சி, சிதம்பரனார் மதுரை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குழு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை அமுல்படுத்துவதைக் கண்காணிக்கும்.

1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை சட்ட விதிமுறைகள் திருத்தியமைத்தல்

7.34.5. தொழிற்சாலை ஆய்வகத்துறை குழந்தை தொழிலாளர் பணிபுரிவதை தடுப்பதற்கு தொழிற்சாலை சட்ட விதிமுறைகளின் கீழ் வகுக்கப்பட்ட வழிமுறைகள் செவ்வனே செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறது. 14 வயதுக்குக் கீழ் குழந்தைகள் வேலைக்கு அமர்த்துவதைக் கண்டிப்பதை தவிர குழந்தை தொழிலாளரின் சுகாதாரம், பாதுகாப்பு, நலத் திட்டங்களில் சட்டமீறு செயல்கள் ஏற்பட்டால் அதன்மீது கடுமையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்கிறது. அத்தகைய செயல்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது.

7.34.6. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளின்பேரில் 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி ஒரு குழந்தையின் பிறந்த தேதியை தினக்கூலி வருகைப்பதிவேட்டில் (Muster- Roll) குறிப்பிட வேண்டும். தீப்பெட்டி தயாரிக்கும் இடத்தில் இருந்து, தீப்பெட்டிகளில் அடைக்கும் பணியை தனியாக வேறு ஒரு இடத்தில் (தொலைவில்) தொழிற்சாலை ஆய்வரது விருப்பத்திற்கு ஏற்றவாறு அமைக்கவேண்டும் என்ற நிபந்தனையையும் சேர்க்கப்பட்டுள்ளது.

7.34.7. 10 தொழிலாளர்களுக்கும் குறைவாக பணிபுரியும் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளிலும் பிரிவு 85(1)ன் கீழ் தொழிற்சாலை சட்டம் 1948–க்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம்

7.34.8. குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் 1986-ஐ நல்லமுறையில் செயலாக்க விதிகள் (State Rules) இயற்றுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

7.34.9. குழந்தை தொழிலாளர்களை வேலையில் அமர்த்துவதை படிப்படியாக நீக்குவதை மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி பட்ஜெட் உரையில் கூறியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள் அவையாவன:-

கேடுபயக்கும் கொடிய குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைச் சமாளிக்க இவ்வரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளார்கள். குறிப்பாகக் காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டித் தொழிலில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காணப்படுகின்ற பிரச்சினையைக் கருத்திற்கொண்டு பல்வேறு குழுக்கள் இப்பிரச்சினையை ஆராய்ந்துள்ளன. 'யூனிசெஃப்' நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து மற்றொரு குழு இப்பிரச்சினையை விரிவாக ஆராய்ந்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 5 ஆண்டுகளில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்தகைய திட்டம் நடைமுறை நோக்கில் அமைந்திருக்கும் என்றும், இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரின் உடன்பாடான ஆதரவைப் பெற்றிருக்கும் என்றும் நாங்கள் முழுமையாக நம்புகிறோம். குழந்தைத் தொழிலாளர்களில் 80 சதவீதம் பேர் பெண் குழந்தைகளாக இருக்கின்றனர் என்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

இத்திட்டம் பின்வரும் 4 முக்கிய கூறுபாடுகளைக் கொண்டிருக்கும்

(i) கட்டாயக் கல்விக்கான சட்டம் இயற்றப்படுவதைத் தொடர்ந்து குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதற்குப் பதிலாக பள்ளிக்கு அனுப்பும்படி ஒவ்வொரு பெற்றோரும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தப்படுவர்.

(ii)கையால் தயாரிக்கப்படும் தீக்குச்சித் தொழிற்பிரிவுகள் அனைத்தும் விற்பனை வரிவிலக்குச் சலுகையைப் பெற்று வருகின்றன. இனி, இத்தொழிற் பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்கும், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைப் படிப்படியாகக் குறைந்தால் மட்டுமே, இந்த விற்பனை வரிவிலக்குச் சலுகையைத் தொடர்வது பற்றிப் பரிசீலிப்போம்.

(iii)குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் தீமைகளுக்கு எதிராக சமூகத்தை ஒருங்கு திரட்டுவது, கருத்துக்களை எடுத்துக் கூறுவது, அக்கருத்துக்களுக்குச் செவிசாய்த்து நடக்கச் செய்வது ஆகியவற்றுக்கான பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். இதனால், இத்தீய பழக்கத்திற்கு எதிரான சமூக விழிப்புணர்வை மக்களிடையே வளர்க்க இயலும்.

(iv)இந்தப் பகுதியில் மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கான புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

இம்மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற பழக்கம் படிப்படியாக ஒழிக்கப்படுவதற்கு உறுதிசெய்யும்

1993 ஏப்ரல் 23]

இத்திட்டத்தை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். இந்தச் சோதனை நடவடிக்கை வெற்றி பெறுமானால், அதனையடுத்து, குழந்தைத் தொழிலாளர்கள் நிரம்பிய அளவில் வேலையில் அமர்த்தப்படுகின்ற வேறு இடங்களிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் முயல்வோம்.

சர்வதேச குழந்தை தொழிலாளர்கள் தடுப்பு திட்டம்

7.34.10. சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சார்பில் இத்திட்டம் செயல்படுகிறது. இது தொண்டுள்ளம் கொண்ட அரசு சார்பற்ற 8 சங்கங்களை தேர்ந்தெடுத்து குழந்தை தொழிலாளர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு அவற்றின் ஒத்துழைப்பை நல்கிறது. சர்வதேச தொழிலாளர் நிறுவனமும் குழந்தை தொழிலாளர் தடுப்பை பரிந்துரை செய்துள்ளது. இதற்கு மாநில அரசும் முழு ஒத்துழைப்பும் தர முன்வந்துள்ளது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக்குழுவின் 1992-ம் ஆண்டின் செயல்.

7.35.1. 18 உறுப்பினர்கள் மூலம் மூன்று குழுக்களாக 59 கேடுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் விரைவு கணக்கெடுக்கும் பணி .(Rapid Survey Programme) மேற்கொள்ளப்பட்டது. இக்குழு அரசின் ஒப்புதலுக்காக ஒரு அறிக்கையினை அனுப்பிவைத்து அதனை அரசின் ஒப்புதலுடன் மாநில அளவிலான பணிக்குழுவின் உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

7.35.2. கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளின் பாதுகாப்பு தணிக்கைக்கென ஒரு பாதுகாப்பு தணிக்கைப் பிரிவு அமைத்திட அரசிற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கான சில வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

7.35.3 தோல் பதனிடும் தொழிற்சாலை சிமெண்ட் மற்றும் காகிதத் தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றை அறிந்து அதன் சுற்றுப்புற முன்னேற்றத்திற்கான விதிமுறைகளை வகுக்க ஒரு குழு தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 54 தொழிற்சாலைகளை பார்வையிட்டு அறிக்கை கொடுத்துள்ளது.

7.36. தொழிற்சாலைகள் தொழிலாளர்கள் உரிமத்தொகை பெறப்பட்டவை பற்றிய விவரங்கள் இணைப்பு 11 முதல் 14 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 8

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்:

8.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தின் நிர்வாகத்தின்கீழ் அமைக்கப்பட்டு தன்னுரிமையோடு இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் பங்களிப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் வரையறை செய்யும் விழுக்காட்டின்படி தொழிலாளர் களிடமும், வேலையளிப்போரிடமிருந்தும் பெறப்படும் பங்குத் தொகையிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி கிடைக்கிறது.

8.2. மின் சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்பட்ட தொழிலாளர் களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தியை பயன் படுத்தாமல் 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். மாதம் 3,000 ரூபாய்க்கு மிகாமல் ஊதியம் பெறும் ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள் கிடைக்கும். இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்கப் பட்டுள்ளது.

8.3. 1955-ம் ஆண்டு இம்மாநிலத்தில் இத்திட்டம் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் 62 மையங்களுக்கு இத்திட்டம் தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

8.4. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பயன்கள் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகின்றன:-

1. மருத்துவ உதவி ..	மருத்துவமும், மருத்துவப் பொருட்களாகவும் அளித்தல்.
2. உடல் நலமின்மைக்காக உதவி	பணமாக அளித்தல்
3. நீடித்த உடல் நலமின்மைக்காக உதவி	
4. பேறுகால உதவி	
5. தற்காலிக இயலாமையற்றோருக்கான உதவி	
6. நிரந்தரமாக இயலாமையற்றோருக்கான உதவி	
7. சார்ந்துள்ளோர் நல உதவி	
8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை	
9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி	

1993 ஏப்ரல் 23]

8.5. இம்மாநிலத்தில் கீழ்கண்ட *7* தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகின்றன.

1.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அயனாவரம், சென்னை-23.	.. 616
2.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை-78. (1-4-1991 முதல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது.)	.. 234
3.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர்	.. 540
4.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை	.. 209
5.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் (வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்)	.. 50
6.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி (காமராசர் மாவட்டம்)	.. 50
7.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம்	.. 50

8.6. இவையன்றி, இம்மாநிலத்தில் சென்னை, கோவை, மதுரை, சேலம் ஆகியவற்றின் *4* மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் நிர்வாகத்தின் கீழ் *143* நிலைய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும், *6* நடமாடும் மருந்தகங்களும் *2* பயன்பாட்டு (Utilisation Dispensary) மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8.7. இம்மாநிலத்திலுள்ள ஈட்டுறுதி தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டப் பயன்பெறுவோரின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது:-

1.	ஈட்டுறுதித் தொழிலாளர்களின் எண்ணிக்கை ..	6,60,000
2.	இத்திட்டத்தின் கீழ் உள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை ..	6,60,000
3.	இத்திட்டத்தில் பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை ..	25,60,800

8.8. 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண்களும் பகுதியின் பெயரும்.	மாவட்டம்.	திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள்.
(1)	(2)	(3)
1. கன்னிகாபுரம்	வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்	1-4-92
2. கூடுவாஞ்சேரி	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்	1-8-92
3. மறைமலை நகர்	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்	1-8-92
4. வடக்கு வெங்கநல்லூர்	காமராஜர் மாவட்டம்	1-2-93
5. பேரணாம்பேட்டை (புறநகர்)	வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்	16-2-93
6. சித்தாலங்குடி மற்றும் தனிச்சயம்	மதுரை மாவட்டம்	16-2-93
7. பாவாளி மற்றும் சத்திர ரெட்டிய பட்டி	காமராசர் மாவட்டம்	1-3-93

1993 ஏப்ரல் 23]

8.9. 1992-93 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழ் வருமாறு:-

வரிசை எண்	திட்டத்தில் கொணர கருதப்பட்டுள்ள இடமும்	மாவட்டம்	தற்போதைய நிலை
(1)	(2)	(3)	(4)
1.	கும்முடிப்பூண்டி	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்	மத்திய அரசை இ.எஸ்.ஐ. சட்டம் 1 (3) பிரிவின் கீழ், 16-3-93லிருந்து செயல்பட, உரிய அறிவிக்கை செய்யுமாறு ஈட்டுறுதிக் கழகம் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது. மத்திய அரசின் அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது.
2.	திண்டுக்கல் புறநகர்	திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்	இத்திட்டத்தின் கீழ் கொணடுவர ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இ.எஸ்.ஐ. சட்டம் 1 (3) பிரிவின்கீழ் உரிய அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்க ஈட்டுறுதிக்கழகம் கேட்டுக் கொள்ளப்படவிருக்கிறது.
3.	மயிலாடுதுறை	நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்	„
4.	செண்பகராமன்புதூர்	கன்னியாகுமரி மாவட்டம்	„
5.	எருமப்பாளையம்	சேலம் மாவட்டம்	„
6.	நவக்கரை	கோவை மாவட்டம்	„
7.	கடப்பேரி	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்	„
8.	உடுமலைப்பேட்டை புறநகர்	கோவை மாவட்டம்	ஈட்டுறுதிக் கழகத்தின் இசைவை 4-2-1993 அன்று கோரப்பட்டு அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

தீக்காய சிகிச்சை பிரிவு மற்றும் புனர் வாழ்வு மையம், சிவகாசி :

8.10. காமராசர் மாவட்டம் சிவகாசியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அடிக்கடி எதிர்பாரா தீ விபத்துக்குள்ளாகின்றனர். அவர்களின் அவலநிலையினை போக்கிட விபத்துக்குள்ளான நோயாளிகளுக்கு உடனடி மருத்துவ நிவாரணம் கிடைக்க புதிய

கட்டிடமும் அனைத்து வசதிகளும் கொண்ட "தீவிர தீக்காய சிகிச்சை பிரிவு மற்றும் புனர்வாழ்வு மையம்" (40 படுக்கைகள் கொண்ட, ரூ. 31.24 இலட்சம் செலவில்) அமைப்பதற்கான தக்க கருத்துரு அனுப்பப்பட்டு, 8-4-92 முதல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம், புதுதில்லியின் இசைவிற்காக உள்ளது.

8.11. மைய அரசின் இசைவு கிடைக்கும் வரை, தற்போதுள்ள, சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திலேயே கிடைக்கக்கூடிய இடவசதியில், மேற்கூறிய சிகிச்சை மையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

அத்தியாயம் 9.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டம் 1952.

9.1. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தில் உள்ள மூன்று திட்டங்களில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம் 1952 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலிருந்து செயற்பாட்டுக்கு வந்தது. வருங்கால வைப்பு நிதி என்பது, தொழிலாளரும், வேலை அளிப்பவரும் சேர்ந்து பங்கு கட்டணம் கட்டாயமாக செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். துவக்கத்தில் 6 பெரிய தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இத்திட்டம் படிப்படியாக அதிகமான தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இன்றளவில் 177 தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். 1971 ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டு தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் ஆகிய வேறு இரு திட்டங்களும் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

இச்சட்டம் பொருந்துதல் பற்றி:

9.2. இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும், தொழிற் நிறுவனங்களுக்கும் இச்சட்டமும் அதன் திட்டங்களும் பொருந்தும். இச்சட்டம் புதிதாகத் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பொருந்தாது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

பங்கு கட்டணத் தொகை அளவு:

9.3. அகவிலைப்படி மற்றும் அடிப்படைச் சம்பளம் (உணவு சலுகை அளிக்கப்பட்டிருப்பின் அவற்றின் ரூபாய் மதிப்பையும் சேர்த்து) ஆகியவற்றில் 8 1/3% விழுக்காடுத் தொகையினை ஒவ்வொரு தொழிலாளரும் வேலை அளிப்போரும் இத்திட்டத்தின் கிழ் செலுத்த வேண்டிய பங்கு கட்டண அளவாகும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சில குறிப்பிடப்பட்ட 98 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களைப் பொருத்தவரை பங்கு கட்டணத் தொகை 10 சதவீதம் என 1-6-1989 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

9.4. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகள், தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் ஆகிவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்புகள் 15,16 மற்றும் 17-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 10.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம்:

வேலைவாய்ப்புப் பணிகள்:

10. 1. போருக்குப்பின் நடந்த படைக்கலைப்பின்போது இந்தியாவில் வேலைவாய்ப்புப் பணிகள் நடைமுறைக்கு வந்தன. இந்திய அரசிடமிருந்து வேலைவாய்ப்புத் துறையின் அலுவலகங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு மாநில அரசுக்கு 1-11-1956 முதல் மாற்றப்பட்டது. இம்மாற்றத்துக்குப் பிறகு, தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பராமரிப்பு, தொழிலாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1963 ஆம் ஆண்டு தொழில் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வந்த தொழில் பயிற்சி நிலையங்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயற்சித்துறை என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு ஒரே இயக்குநரின் கீழ் கொண்டுவரப்பட்டது.

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்:

10.2. எல்லா விதமான வேலை தேடுவோரின் தேவைகளைக் கவனிப்பதற்காக, இம்மாநிலத்தில் மொத்தம் 43 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 4 துணை வேலைவாய்ப்பு

அலுவலகம், 6 சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்ப மனுதாரர்க்கானவை-4, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்-1, உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்-1) 2 சுய வேலைவாய்ப்புப் பிரிவு, மூன்று பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (சென்னை, மதுரை, அண்ணாமலை நகர்) ஆகியவை அடங்கும். இவற்றைத் தவிர, நான்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள், திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் 1989 முதல் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதேற்கேற்ப சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்காக 2 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களும், 2 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. பதிவு செய்த மனுதாரர்கள், அறிவிக்கப்பட்ட காலியிடங்கள், பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை விபரங்கள் இணைப்பு 18ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை:

10.3. அரசுத் துறை, தனியார் துறையைச் சார்ந்த முதன்மையான தொழில் அதிபர்களை தொடர்பு கொண்டு தகுதியுள்ள மருத்துவம், பொறியாளர் மேற்படிப்பு முடித்த பட்டதாரி விண்ணப்பதாரர்களை தகுந்த வேலையில் அமர்த்த இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. விபரங்கள் இணைப்பு 19ல் கொடுக்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்:

10.4. உடல் ஊனமுற்ற குறிப்பாக பார்வையற்றோர், காது கேளாதோர் போன்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. தவிர, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், நாகர்கோவில், காஞ்சிபுரம், திருநெல்வேலி, கடலூர், வேலூர், ஈரோடு, உதகை மற்றும் தூத்துக்குடியில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உடல் ஊனமுற்றோருக்கான பதிமூன்று தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் உடல் ஊனமுற்றோரைப் பதிவு செய்வதுடன் அரசுத்துறை தனியார்

1993 ஏப்ரல் 23]

துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லாவித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. இதன் விபரம் இணைப்பு 20ல் கொடுக்கப்பட்டுள்ளது.

10.5. தொழில் நுட்ப மனுதாரர்களுக்காக நான்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் தொழில் நுட்ப பட்டயக் கல்வி பெற்றோரையும் தொழில் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களையும் பதிவு செய்து பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் அவர்களைத் தகுந்த பணியில் அமர்த்தும் பணியினைச் செய்து வருகின்றன. இத்துறையின் தீவிர முயற்சியின் பயனாக *1992* ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் 1292 உடல் ஊனமுற்றோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்புத் துறையில் மட்டும் 48 உடல் ஊனமுற்றோர் இது வரை பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இது இத்துறையில் உள்ள மொத்த பணியாளர்களில் சுமார் 5 சதவீதமாகும். இது அரசு நிர்ணயித்துள்ள இலக்கான 3 சதவீதத்தை விட அதிகமாகும். இந்த வகையில் உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக இத்துறை ஆற்றிய பணியைப் பாராட்டி, குடியரசுத் தலைவர், இத்துறைக்கு 21-3-93 அன்று தேசிய அளவில் கேடயம் அளித்து பாராட்டியுள்ளார்.

வேலை நிலவரத் தக்வல் திட்டம்:

10.6. கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம் 1959ன்படி எல்லா பொதுத்துறை நிறுவனங்களும் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை நிறுவனங்களும் (வேளாண்மை நீங்கலாக) ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை தோன்றிய மற்றும் நிரப்பப்பட்ட காலியிடங்கள், தகுந்த பணியாளர்கள் கிடைக்காததால் அந்தக் காலாண்டில் காலியாக இருந்த பணியிடங்கள் முதலான விவரங்களை குறிப்பிட்ட படிவத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அளிக்க வேண்டும். இது தவிர இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனங்களிலிருந்து தொழில் வாரியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களும் திரட்டப்படுகின்றன.

10.7. வேலை தேடுவோரிடையே தொழில் வேலை வாய்ப்பு பயிற்சி தொழில் பழக வசதிகள் குறித்த விவரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் 19 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. இது தவிர மூன்று பல்கலைக்கழக வேலைவாய்ப்புத்

தகவல் மற்றும் வழிகாட்டி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் காலாண்டு தோறும் மாணவரும் வேலை தேடுவோரும் பயனடைவதற்காக காலாண்டு வழிகாட்டி செய்தி அறிக்கைகளை தயாரித்து அளிக்கின்றன. வேலை தேடுவோர் பணியிடங்களை தெரிந்தெடுக்க கையாளவேண்டிய முறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பல்கலைக் கழக தொழில் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையம் மற்றும் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளும் அவ்வப்போது வாழ்க்கைத் தொழில் சம்பந்தப்பட்ட கண்காட்சிகளை நடத்தி வருகின்றன.

பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்கள்:

10.8. பழங்குடி இனத்தவருக்கு தொழில் நெறிவழி காட்டும் ஆலோசனைகளை வழங்கவும் தகுதியுள்ள பழங்குடி இனத்தவரை வேலையில் அமர்த்துவதற்கு ஏற்ற வேலைவாய்ப்புகளை கண்டறிவதற்கும் உதகமண்டலம் மற்றும் சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழி காட்டும் நிலையங்கள் இரண்டு அமைந்துள்ளன.

மேலும் சேலத்தில் ஒன்றும், திருவண்ணாமலையில் ஒன்றுமாக பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்:

10.9. வேலைவாய்ப்பற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து உயிர்ப் பதிவேட்டில் *5* ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட *9* வகையினருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப் படுகிறது. வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் *3* ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது. பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. *100*-ம் புகுமுக வகுப்பு/ப்ளஸ் *2*/பட்டப்படிப்புக்கு கீழான கல்வித் தகுதி உடையோருக்கு மாதம் ரூ. *75*-ம் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றோருக்கு மாதம் ரூ. *50*-ம் வழங்கப்படுகிறது. *31-3-1993* அன்றைய நிலவரப்படி, இத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதற்கொண்டு *601313* பேர் பயன் பெற்றுள்ளனர். ரூ. *71.66* கோடி, வேலைவாய்ப்பற்றோர் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் *1-7-1980* முதன் அமுலாக்கப்பட்டது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் காலாண்டுக்கொருமுறை இந்நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

1993 ஏப்ரல் 23]

10.10. 30-11-1988 முதல் உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டுக்கு மேல் காத்திருக்கும் பார்வையற்றோருக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

பட்டதாரிகள்	..	ரூ.250 பிரதி மாதம்
புகுமுக வகுப்பு/ப்ளஸ் 2	..	ரூ. 200 பிரதி மாதம்
பள்ளியிறுதி வகுப்பு	..	ரூ. 150 பிரதி மாதம்

1-2-90 முதல் பள்ளியிறுதி வகுப்புக்குக் குறைவான கல்வித் தகுதி உடைய அல்லது கல்வித் தகுதியே இல்லாத பார்வையற்ற மனுதாரர்களுக்கும் கூட மாதந்தோறும் ரூ. 100 நிவாரணமாக வழங்கப்படுகிறது. இவர்கள் 5 வருடம் வரை இந்நிவாரணம் பெற தகுதியுடையவர்கள். இத்திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இது வரை 2,093 பார்வையற்றோர் நிவாரணம் பெற்றுள்ளனர். இதுவரை ரூ. 58.79 லட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டு உள்ளது.

10.11. அரசிடம் நிதி உதவி பெறும் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களைப் பயன்படுத்தி பள்ளி சாராக் கல்வி திட்டத்தை மது ஒழிப்பு விளம்பர இயக்கத்துடன் இணைத்து செயல் படுத்திட தற்போது மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள்.

10.12. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உள்ள மனுதாரர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு உதவி செய்வதன் மூலம் அவர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பதற்கேற்ப வேலூரிலும், கோயம்புத்தூரிலும் மைய அரசின் நிதி உதவியுடன் இந்த அரசு இரண்டு சுய தொழில் வேலைவாய்ப்பு ஊக்க பிரிவுகளை அமைத்துள்ளது. 31-12-92 முடிய இந்த இரண்டு பிரிவுகளும் சேர்ந்து 4664 மனுதாரர்களுக்கு உதவி செய்துள்ளன. அதன் பயனாய் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளால் மொத்தம் ரூ. 5.6 கோடி சுய தொழில் தொடங்குவதற்காக கடனாக வழங்கப்பட்டுள்ளது. சுய தொழில் ஊக்குவிப்பதற்கான 100 இரண்டு சக்கர ஊர்திகள் சென்னையில் கிடைக்கவும் பெண்களுக்கென அவற்றில் 10 ஊர்திகளை ஒதுக்கிடவும் அதற்கான உரிமம் பெறவும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்றோருக்கான சுயவேலைவாய்ப்பு:

10.13. ஆறு தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, கடலூர் மற்றும் வேலூர்) உள்ள ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்ற மனுதாரர்களை சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுத்தும் பொருட்டு நாட்டுமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ. 10,000/-க்கு மேற்படாமல் கடன் தொகை அளிக்கப்படுகிறது. இத்தொகையில் கால் பங்கு அல்லது ரூ. 2000/- இதில் எது குறைவோ, அத்தொகை அரசு மூலமாக மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1987-88 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31-12-1992 வரை 476 தொழில் நுட்பத் தகுதி பெற்ற மனுதாரர்கள் ரூ. 37.47 இலட்சம் வரை வங்கி மூலம் கடன் தொகை பெற்றுள்ளனர். இத்தொகையில் ரூ. 8.32 இலட்சம் அரசு மானியமாகும்.

வீட்டு சேவை மையங்களை நிறுவுதல்:

10.14. தொழிற்கல்வித் தகுதி பெற்ற மனுதாரர்களை சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கும், மக்களின் அன்றாட வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சென்னை நகரில் 9 இடங்களில் வீட்டுச் சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டுச் சேவை மையத்திலும் ஒரு மின்சாரப் பணியாளர், குழாய்ப் பணியாளர், தச்சுப் பணியாளர் ஆகியோர் பணியாற்றுகின்றனர். வீட்டுச் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள வீடுகளில் அவ்வப்போது தேவைப்படும் பழுது பார்க்கும் பணி இப்பணியாளர் களால் மேற்கொள்ளப்பட்டு, ஒரு நபர் ஒரு நாளுக்கு ரூ. 25 முதல் ரூ. 35 வரை வருமானமாகப் பெறுகிறார். இதுபோன்று வீட்டுச் சேவை மையங்கள் மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 69 தொழில் நுட்பப் பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்:

10.15. பல்வேறு தேர்வு முகமை நிறுவனங்களால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் இனங்களைச் சேர்ந்த மனுதாரர்கள் போட்டியிட்டு தேர்ச்சி பெறுவதற்கு உதவும் வகையில் இந்த துறையானது ஆதிதிராவிடர் பழங்குடி இனங்களைச்

1993 ஏப்ரல் 23]

சார்ந்த மனுதாரர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தும் முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. பொறுப்பு அலுவலகர் (Probationery Officer) எழுத்தர் பதவிகளுக்கான வங்கிப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள், கீழ்நிலை எழுத்தர்/மேல்நிலை எழுத்தர் பதவிகளுக்கான பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள், உதவியாளர் நிலை பதவிகளுக்கான மைய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள் மற்றும் குடிமைப் பணிகள் முதனிலைத் தேர்வுகள், இந்திய பொதுக்காப்பீட்டுக் கழகம் நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, பணியாளர் தேர்வாணையத்தில் சுருக்கெழுத்தர் தேர்வு, இந்திய ரிசர்வ் வங்கி நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வுகள் ஆகியவற்றில் கலந்து கொண்ட ஆதிதிராவிடர்/பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்காக இத்தகைய சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1992 ஆம் ஆண்டில் மட்டும் 9582 ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கான சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளனர்.

வேலைவாய்ப்புப் பணியை கம்ப்யூட்டர் மயமாக்குதல்:

10.16. வேலை தேடுவோரும், வேலையளிப்போரும் விரைவாகச் செயல்படுவதற்கும் தற்போது நடைமுறையில் உள்ள மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலுள்ள குறைகளை களையும் நோக்கிலும் வேலைவாய்ப்பு அலுவலக பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள 2 வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

10.17. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) சென்னை-20, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணிப்பொறி முழுமையாகச் செயல்படுகிறது. கம்ப்யூட்டர் இயக்கத்திற்குத் தேவையான கட்டுமானப் பணிக்கான தள அமைப்பு ஏற்படுத்திட கீழ்க்கண்ட 6 இடங்களில் ஆயத்த வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

1. வேலை வாய்ப்பு அலுவலகம், மதுரை.
2. வேலை வாய்ப்பு அலுவலகம், வேலூர்.
3. தொழில் சார்ந்த மற்றும் நிர்வாகப் பணிக்கான வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

4. தொழில் நுட்ப வல்லுநர்க்கான வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை.
5. .தொழில்நுட்ப வல்லுநருக்கான வேலை வாய்ப்பு அலுவலகம், மதுரை.
6. வேலை வாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலி.

10.18. 1993-94-ல் கீழ்க்கண்ட ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் செயல்பட உள்ளன:-

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கடலூர்.
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சேலம்.
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தூத்துக்குடி.
4. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், காஞ்சிபுரம்.
5. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தஞ்சாவூர்.

சிறப்புக்குழு அமைத்தல்:

10.19. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் நிலை அரசாணை எண். 1371, நாள்:20-7-1989-ன் வாயிலாக அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் செயல்பாடு குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடுமையான புகார்களை விசாரிப்பதற்காக சிறப்புக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்கத்தைச் சார்ந்த ஒரு துணை இயக்குநரும், ஒரு உதவி இயக்குநரும் அந்தச் சிறப்புக்குழுவில் பதவி வகிக்கின்றனர். அவர்கள் தம் வாலாயப் பணிகளுடன் அக்குழுவின் பணிகளையும் சேர்த்து கவனித்து வருகின்றனர். இந்தக் குழு அமைக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள்ளாக 67 உடனடி விசாரணைகளை நடத்தியுள்ளது. கடுமையான புகார்கள் பலவற்றில் தொடர்புடைய ஆவணங்களை ஆழ்ந்து ஆய்வு செய்துள்ளது.. அதன் பயனாக 10 அலுவலர்/பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்:

10.20. 1989-90 நிதியாண்டில் கடலூர், தஞ்சாவூர், மதுரை, கோவை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் செயல்படும் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கென சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக அரசு ரூ. 77.24 இலட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மதிப்பீடு

1993 ஏப்ரல் 23]

ரூ. 104.75 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதலாகவும் ரூ. 27.51 இலட்சம் 1992-93-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஐந்து இடங்களிலும் பணி முடிக்கப்பட்டுள்ளன.

10.21. பலவகைப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, வேலை காலி இடங்கள் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை முதலிய விவரங்கள், இணைப்புகள் 18, 19 மற்றும் 20-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இருப்புநிலை பேழைகள் வழங்குதல்:

10.22. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை தேடுவோரின் முழு தன் விவரக் குறிப்புகளும் பிற விவரங்களும் பதிவட்டைகள் என வழங்கப்படும் அட்டைகளில் பதிவு செய்து வைக்கப்படுகின்றன. இப்பதிவட்டைகள் உயிர் பதிவேடுகளாக அமையும் வகையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அடுக்கி வைக்கப்படுகின்றன. இந்த உயிர் பதிவேடுகள் 12 இழுப்பறைகள் கொண்ட பதிவட்டைகளுக்கான இருப்புநிலை பேழைகளில் வைக்கப்படுகின்றன. 1993-94-ம் ஆண்டில் 12 இழுப்பறைகள் கொண்ட 20 எண்ணிக்கையில் இருப்பு நிலை பேழை ரூ. 1 இலட்சம் செலவில் பகுதி 2 திட்டமாக வழங்கப் பட்டுள்ளது.

மறைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல்:

10.23. மறைந்த அரசு ஊழியர்களின் வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்களின் வாரிசுதாரர்களை நியமனம் செய்யும்பொருட்டு 500 கூடுதல் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பணிக் காலியிடங்கள் இல்லாத அலுவலகங்களில் இப்பதவிகள் பயன்படுத்தப்பட்டு வாரிசுதாரர்கள் நியமிக்கப்படுவர்.

அத்தியாம் 11

கைவினைஞர் பயிற்சித் திட்டம்

11.1. தொழில் வளர்ச்சிக்கு அவசியமான முன் தேவைகளில் திறமை வாய்ந்த மனித ஆற்றல் ஒன்றாகும். இதில் கைவினைஞர் பயிற்சி மற்றும் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டங்கள் ஒருங்கிணைந்த திறமை வாய்ந்த தொழில் நுட்பப் பணியாளர்களை உருவாக்குவதில் இன்றியமையாத செயல் புரிகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பல்வேறு

பொறியியல் மற்றும் பொறியியலல்லாத தொழில் பிரிவுகளில் தொழில் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சியாளர்கள், தேசிய திறனாய்வு தேர்வுகளில் கலந்துகொள்ளவும், நாட்டில் எப்பகுதியிலும் அவர்கள் வேலை வாய்ப்பினை பெறும் வகையில் தொழிற் கல்வியின் தரம் ஒரே சீராக இருப்பதற்காகவும், தொழிற் பிரிவுகள், தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழுவினால் வடிவமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

11.2. தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அங்கீகாரம் பெற்ற *253* தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர, *51* அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மாநிலத்தில் இயங்குகின்றன. இவற்றில் மகளிருக்கென *10* தொழிற் பயிற்சி நிலையங்களும், தாழ்த்தப்பட்ட வர்களுக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மற்றும் பழங்குடியினருக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் இயங்குகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் *13,646* மாணவரும், *3,086* மகளிரும் மேலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் *15,988* பேரும் தொழில் பயிற்சி பெறுகின்றனர். மேலும் *2,188* இருக்கைகளுடன் *58* தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்க தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு எளிதில் வேலை கிடைக்க அவர்கள் தொழிற் கல்வி பயிற்சி பெற போதிய வாய்ப்புகள், அதிக அளவில் அளிக்கும் நோக்கமுடன் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்க அங்கீகாரம் வழங்கப்படுகிறது. *15,988* இருக்கைகளில் ஐம்பது விழுக்காடுகள் அரசு பங்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு, அவற்றில் தேர்வு மதிப்பெண் களின் அடிப்படையில் தற்போது அமுலில் உள்ள இனவாரி விகித சுழற்சி முறையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

11.3. மகளிருக்கு வேலை வாய்ப்புகள் உள்ள புதிய தொழிற் பிரிவுகளை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. இக்குறிக்கோளுடன் ஸ்கிரின் பிரிண்டிங் மற்றும் ஏற்றுமதி ஆடை தையற்கலை போன்ற குறுகியகால தொழிற் பிரிவுகளை ஆகஸ்ட் *1993* முதல் அறிமுகப்படுத்தப்படும். ஸ்கிரின் பிரிண்டிங் தொழிற் பிரிவு ஈரோடு தொழிற் பயிற்சி நிலையத்திலும், ஏற்றுமதி ஆடை தையற்கலை தொழிற் பிரிவு கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்திலும் அறிமுகப்படுத்தப்படும். இத்தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றும் அறுபது மகளிர் பயிற்சியாளர்கள் ஆண்டுதோறும் இத்தொழில் பிரிவுகளில் பயிற்சி பெறுவர்.

தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம்:

11.4. 1961 ஆம் ஆண்டில் தொழில் பழகுநர் பயிற்சி சட்டத்தின்படி, *1974* தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சி முறைப்படுத்தப்

1993 ஏப்ரல் 23]

பட்டு கட்டுப்பாட்டுடன் அளிக்கப்படுகிறது. சட்டத்தின்படி ஆண்டு தோறும், குறிப்பிட்ட பயிற்சியாளர்கள் தொழிற் பழகுநர் பயிற்சி பெற ஒதுக்கீடு செய்வதற்கு வசதிகள் உள்ள தொழில் நிறுவனங்கள் கணக்கெடுத்து அவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 12,360 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறுகிறார்கள். தொழிற் பழகுநர்கள், தொழிற் நிறுவனங்களில் செய்முறைப்பயிற்சியுடன், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பதினொரு தொடர் அறிவுரை மையங்களில் முக்கிய தொழிற் பிரிவுகளில் அவர்கள் வகுப்பறை பாட பயிற்சியும் பெறுகின்றனர்.

தொழிலாளருக்கான மாலைநேர வகுப்புகள்:

11.5. தொழிலாளர் தம்முடைய தொழிற்பிரிவுகளில், கருத்தியல் ஆய்வு பெறச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற்சாலைகள் செறிவுள்ள அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் போன்ற இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பெருவாரியான தொழிற்சாலைகள் இத்திட்டத்தினைப் பாராட்டி வரவேற்கின்றன. ஆண்டுதோறும் சுமார் 1925 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

வாழ்வியல் திறன் மேம்பாட்டுத் திட்டம்:

11.6. தொழிலாளர்கள் தம்முடைய தொழிற் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், நுண்கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை கையாளுவதில் நுண்அறிவியல், நுட்பங்களை, துல்லியமாக அறிந்து தேவையான கருத்தியல் மற்றும் செயல்முறைகளை தெரிந்துகொள்ளவும், அம்பத்தூர், கோவை மற்றும் ஓசூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்வியல் திறன் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் தொழில் அதிபர்களின் ஒருமித்த பாராட்டினையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. மேற்சொன்ன மூன்று தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மொத்தமாக 164 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் தொழிற் பயிற்சி பெறுகின்றனர். இதுவரையில் 7,181 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

கிராம மக்களுக்கான தொழிற்பயிற்சித் திட்டம்

11.7. சுய வேலைவாய்ப்புகளுள்ள (TRYSEM) 23 தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளிக்கும் வகையில், ஊரக வளர்ச்சித் திட்டம் 11 தொழில் பயிற்சி நிலையங்களில் முழுநேர திட்டமாகவும் 22

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பகுதிநேர திட்டமாகவும் செயல்பட்டு வருகின்றது. சமுகத்தில் மிகவும் பின் தங்கிய 18 முதல் 35 வயதுள்ள ஊரக இளைஞர்கள் சுய வேலை வாய்ப்பிற்கு அவசியமான திறமையைப் பெற தொழில் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சியின் காலம் 6 மாதங்கள் முதல் ஒரு வருடமாகும். பயற்சியாளர்களுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ. 300 வழங்கப்படுகிறது. மேலும் ரூ. 600 விலை மதிப்புள்ள கருவிகள் பெட்டி ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இதுவரையில் 22393 ஊரக இளைஞர்கள் இத்திட்டத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது 383 பயிற்சியாளர்கள் இப்பயிற்சி பெற்று வருகின்றனர்.

மிகு விரைவுத் திட்டம்

11.8. முன்னாள் தொழிற் பயிற்சியாளர்கள் மற்றும் மின்னணுவியல் தெரிந்து மெட்ரிக்கிற்கும் மேல்படித்தவர்களும், பயனடையும் வகையில் மின்னணுவியல் கருவிகளை பழுதுபார்க்க தொழில் நுட்பப்பயிற்சி 9 தொழிற் பயிற்சி நிலையங்களில் மிகு விரைவுத் திட்டத்தில் அளிக்கப்படுகின்றது. சொந்தமாக பணிமையங்கள் அமைத்து வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற மின்னணுவியல் கருவிகளை பழுதுபார்க்க தேவையான பயிற்சி அளித்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டுதோறும் 180 நபர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

உலக வங்கித் திட்டங்கள்

11.9. தற்போதுள்ள தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்களை நவீனப்படுத்தவும், அவற்றில் பல்வேறு திட்டங்களை விரிவு படுத்தவும், உலக வங்கி உதவியுடன் திறன் மேம்பாட்டுத்திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் செயல்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் அடுத்த ஐந்து வருடங்களுக்கு குறியீட்டு நிதியாக இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 21.74 கோடி திருத்திய எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 33.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகையில் ஐம்பது விழுக்காடுகள் மாநில அரசு ஏற்கிறது.

11.10. சமுதாயத்தில், மகளிர் நிலை மேம்பட்டு உயர்த்தப்பட வேண்டும் என்னும் அரசின் சீரிய கொள்கையின் அடிப்படையில் மகளிருக்கென 5 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தில் துவக்கப் பட்டுள்ளன. இவற்றில் அம்பத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரு தொழிற் பயிற்சி நிலையங்கள் 1992–93–ம் நிதியாண்டில் துவங்கப்பட்டவையாகும். தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள் ஐந்தில் ஒவ்வொன்றிலும் இரு புதிய தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்

1993 ஏப்ரல் 23]

பட்டுள்ளன. 1993 ஆகஸ்ட் திங்கள் முதல் மேலும் 4 தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. கடலூர் மற்றும் சேலம் தொழிற்பயிற்சி நிலையங்களில் கணணி (கம்யூட்டர் Computer) தொழிற்பிரிவும், தூத்துக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில் இரசாயன (Chemical) தொழிற் பிரிவு 1993–94 ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கம்மியர் மின்னணுவியல் (Electronic) மற்றும் கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் (Refrigeration & Air-conditioning) போன்ற இரு புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தி கூனூர் தொழிற்பயிற்சி நிலைத்தை விரிவு படுத்தும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

11.11. திறன் மேம்பாட்டு திட்டத்தில், ஹோட்டல் மற்றும் உணவாக்க (Hotel & catering) தொழிற் பிரிவுகளுடன் அம்பத்தூரிலும், இரசாயன (Chemical) தொழிற்பிரிவுடன் இராணிப்பேட்டையிலுமாக இரு அடிப்படை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இயந்திரங்களின் பழுது சரிபார்க்க 6 தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்களுடன் மாநில அளவில் அம்பத்தூரில் ஒரு தொழிலகமும் நிறவப்பட்டுள்ளன. கோவை தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டம் (Advanced vocational Training System) புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு விரிவு செய்யப்பட்டுள்ளது.

11.12. தொழிலாளர் ஆணையர், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மற்றும் வேலைவாய்ப்பு மறறும் பயிற்சித்துறை இயக்குநர் ஆகிய துறைகளின் 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீடு (பகுதி I) இணைப்பு 22-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

11.13. 1993-94ம் நிதியாண்டில் செய்யப்பட இருக்கும் பகுதி இரண்டு திட்டங்கள் இணைப்பு 23–ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் 12

அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

12.1. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஒரு நிறுவனமாகும். இது மாநில அரசுக்கு சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30–11–1978–ம் நாளன்று இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது.

[*1993 ஏப்ரல் 23*

12.2. இந்நிறுவனம் வெளிநாட்டில் வேலை வாங்கித் தரும் தனியார் முகவர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியினை உருவாக்கிடும் நிறுவனமாக செயல்படவும், அதிலும் முக்கியமாக அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருகின்றோம் என்ற போர்வையில் பணம் பறிக்கும் தனியார் முகவர்களின் ஏமாற்று வேலைகளிலிருந்து பாமர மக்களை காப்பாற்றும் பொருட்டும் தொடங்கப்பட்டதாகும்.

12.3. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் *50* இலட்சம் ஆகும். சம பங்கு ஒன்று ரூ. *5,000* வீதம் *1,000* பங்குகளைக் கொண்டது. இதனுடைய பங்கு தொகையாகச் செலுத்தப்பட்ட அரசு செலுத்திய பங்குத் தொகை ரூபாய் *25* இலட்சம். இந்நிறுவனத்தின் குறிக்கோள் கீழ்க்கண்டவையாகும்.

1. அயல் நாடுகளில் வேலைவாய்ப்பைத் தேடித் தருதல்;

2. அயல்நாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களிடமிருந்து முதலீட்டுக்காக பெறப்பட்ட பணத்தை இந்தியாவில் பயனுள்ள திட்டங்களில் முதலீடு செய்தல்;

3. இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் கூட்டாகத் தொழிற் திட்டங்கள் அமைத்தல்; மற்றும்

4. இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல்.

12.4. 31–1–1993 முடிய ஆண்டுவாரியாக வேலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரங்கள் இணைப்பு *21*-ல் கொடுக்கப்பட்டுள்ளன. *4146* நபர்கள் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளனர். *31–1–1993* வரையில் இந்த நிறுவனம் ரூ. *20,67,000* அன்னியச் செலவாணியாக ஈட்டியுள்ளது.

12.5. ஈராக் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட குவைத் நாட்டிலிருந்து வந்த அகதிகளில் நஷ்டஈடு கோரிவந்த மனுக்களை சமர்ப்பிக்க இந்த நிறுவனம் பேருதவி புரிந்திருக்கிறது.

அத்தியாயம்-13.

கோரிக்கை எண். 60. பல்வகை மூலதனச் செலவு-4250. ஏனைய சமூகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு-203. வேலை வாய்ப்பு குறிப்பு:

*13.1. 1993-94*ம் நிதியாண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் "*4250* மூலதனச் செலவு - *203.* வேலை வாய்ப்பு" என்னும் பெருந்தலைப்பின்

1993 ஏப்ரல் 23]

கீழ் மாநிலத் திட்டப் பணிகளுக்கான ரூ. 20.42 லட்சங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காக ரூ. 0.02 லட்சங்களும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 548.80 லட்சங்களும் கைவினைஞர் பயிற்சியின் பல்வேறு திட்டங்களில் கட்டிடப் பணிக்கும், இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத் திட்டப் பணிகள்

13.2.1. தொழிற்பிரிவுகளை பல்திறப்படுத்துதல் (Diversification of Trades) 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கம்பியில்லாத் தந்தி இயக்குபவர் தொழிற்பிரிவிற்கு, இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ. 20,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிடப்பணிக்கு அடையாள நிதியாக ரூ. 1,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்

13.2.2. இதுவரையில் கொள்முதல் செய்யப்படாத எஞ்சிய கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அடையாளத் தொகையாக ரூ. 1,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநிலத் திட்ட பணிகள்:

தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

13.2.3. கட்டிட சிறு பணிகளுக்கு அடையாளத் தொகையாக ரூ. 1,000 தவிர, தர்மபுரி தொழிற்பயற்சி நிலைய கட்டிட பணிகளைத் தொடரவும் மற்றும் தேனி தொழிற்பயிற்சி நிலைய விடுதி கட்டிடப் பணிகளின் நிலுவைத் தொகைகளைத் தீர்வு செய்யவும் ரூ. 20 லட்சங்களும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ. 11 ஆயிரமும், 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்

13.2.4. வாழ்வியல் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில், அம்பத்தூர் மற்றும் ஒசூர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கருவிகள் மற்றும்

இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ. 6,000-ம், கட்டிடப் பணிக்கு அடையாளத் தொகையாக ரூ. 1,000-ம் 1993-94-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

13.3. 1. சிறுபான்மையினரின் பயனுக்காக சுருக்கெழுத்துப் பாடத் திட்டத்தை அறிமுகம் செய்தல்.

2. தொழிற்பயிற்சி நிலையங்களில் பிளாஸ்டிக் செய்முறைப்படுத்தும் தொழிற் பிரிவு அறிமுகம் செய்தல்.

சுருக்கெழுத்து பாடப்பிரிவு, சிறுபான்மையினரின் பயனுக்காக நாகப்பட்டினம் தொழிற்பயிற்சி நிலையத்திலும், பிளாஸ்டிக் பதனிடுதல் தொழிற்பிரிவு கிண்டி மற்றும் கோவை தொழிற்பயிற்சி நிலையங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இப்பிரிவுகளில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்ய அடையாளத் தொகையாக தலா ரூ. 1,000-ம் 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்திறன் மேம்பாட்டுத் திட்டம்

தொழிற்பயிற்சி நிலைய இயந்திரங்களை நவீனப்படுத்துதல்

13.4.1. தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திரங்களை நவீனப்படுத்த 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 307.00 லட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 15 முதல் 20 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் வழக்கொழிந்த மற்றும் பழைய இயந்திரங்களும், தளவாடங்களும் படிப்படியாக மாற்றப்பட்டு புதியவைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

புதிய மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்தல்

13.4.2. 1993-94-ம் ஆண்டில் கோவை, புள்ளம்பாடி மற்றும் மதுரையில் உள்ள மகளிர் தொழிற்பயிற்சி நிலைய கட்டிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 63.20 லட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 21.00 லட்சங்கள் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்காக கொள்முதல் செய்யவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 23]

இயந்திர பராமரிப்பு மையங்களும் மாநில அளவில் தொழிலகமும் நிறுவுதல்

13.4.3. தொழிற்பயிற்சி நிலையங்களில் பழுதான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை பழுதுபார்க்க மற்றும் பராமரிக்க 6 தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்களும், அம்பத்தூரில் மாநில அளவில் தொழிலகம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றிற்காக 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 11.76 லட்சங்களும் அம்பத்தூர் தொழிலக கட்டிடப் பணிக்கு ரூ. 20 ஆயிரமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்துதல்

13.4.4. செயல் திறனை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியான புதிய தொழிற்பிரிவுகளை அறிமுகம் செய்து, தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ. 32.57 லட்சங்களும், கட்டிடப் பணிக்காக ரூ. 54.68 லட்சங்களும் 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டம் விரிவாக்குதல்

13.4.5. உலக வங்கி உதவியுடன் செயல்திறனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கோவை தொழிற்பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டம் விரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ. 24.37 லட்சங்களும், கட்டிடப் பணிக்கு அடையாளத் தொகையாக ரூ. 1,000-ம் 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விளக்கப்பட சாதனங்கள் அமைத்தல்

13.4.6. வகுப்பறை போதனா முறையை மேம்படுத்த அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் விளக்கப்பட சாதனங்கள் படிப்படியாக அமைக்கப்படவிருக்கின்றன. இதற்காக அவற்றை கொள்முதல் செய்ய 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3.06 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்கள் தோற்றுவித்தல்

13.4.7. 1993-94–ம் ஆண்டில் ஹோட்டல் மற்றும் உணவாக்க தொழிற்பிரிவுடன் அம்பத்தூரில் ஒரு அடிப்படை பயிற்சி மையம் நிறுவப்படவிருக்கிறது. இரசாயன தொழிற்பிரிவுடன் இராணிப்பேட்டையில் ஒரு அடிப்படை பயிற்சி மையம் *1-4-92* முதல் செயல்பட்டு வருகின்றது. இவைகளுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ. *30.94* லட்சங்களும், அம்பத்தூர் அடிப்படைப் பயிற்சி மையக் கட்டிடப் பணிக்கு அடையாளத் தொகையாக ரூ. *1,000*–மும், *1993-94* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-1

தொழிற் தகராறுகள்.

விவரம் (1)	1991 (1991 சனவரி முதல் நாளிலிருந்து 1991 டிசம்பர் 31ம் நாள் வரை) (2)	1992 (1992 சனவரி முதல் நாளிலிருந்து 1992 டிசம்பர் 31ம் நாள் வரை) (3)
அ. ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை	2,183	2,535
ஆ. இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/எழுந்த தொழிற் தகராறுகள் எண்ணிக்கை	13,391	9,321
	15,574	**11,856**
இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் எண்ணிக்கை	13,039	10,113
ஈ. சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை	8,567	5,722
உ. தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை	148	474
ஊ. நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை	–	–
எ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை	2,535	1,743

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2 (i)

1992-ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும்.

	விவரம்	1-1-1991 முதல் 31-12-1991 வரை	1-1-1992 முதல் 31-12-92 வரை
	(1)	(2)	(3)
1	கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை	180	237
2.	இழந்த உழைப்பு நாட்கள்	72,78,969	28,68,472

இணைப்பு-2 (ii)

1992 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்:

1	நேரடிப் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை	..	4
2.	தாங்களாகவே முன் வந்து வேலை தொடங்கியவை	..	15
3.	தொழிலாளர் நலத்துறை அலுவலர்களாலும், அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை	..	188
4.	மூடப்பட்டவை	..	5
5.	தீர்வு வழங்கப்பட்டவை	..	–
6.	ஆண்டு இறுதியில் பேச்சுவார்த்தையில் இருந்தவை	..	25
	மொத்தம்	..	237

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2 (iii)

1. தொழில் வாரியாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்:

தொடர் எண்ணும் தொழிலும்	வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை.		ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை.		இழந்த உழைப்பு நாட்கள்	
	1991	*1992*	*1991*	*1992*	*1991*	*1992*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*	*(6)*	*(7)*
1. துணி நெசவு	*81*	*149*	*2,22,988*	*1,07,516*	*59,35,753*	*13,99,710*
2. பொறியியல்	*21*	*24*	*3,933*	*7,345*	*2,14,847*	*3,06,259*
3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்	..	*2*	..	*320*	..	*770*
4. புகையிலை பீடித் தொழில்	..	*1*	..	*250*	..	*2,750*
5. மலைத்தோட்டங்கள்	*4*	*5*	*300*	*2,186*	*7,702*	*19,087*
6. ஏனையன	*74*	*56*	*30,941*	*57,251*	*11,20,667*	*11,39,896*
மொத்தம்	*180*	*237*	*2,58,162*	*1,74,868*	*72,78,969*	*28,68,472*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3.

தீர்ப்புகள் வழங்குதல்	தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை		தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	
	1991	1992	1991	1992
(1)	(2)	(3)	(4)	(5)
அ. சென்னை தொழில் நடுவர் மன்றம்	97	256	85	233
ஆ. தொழிலாளர் நீதிமன்றங்கள்	2,545	8,951	1,321	5,948
இ. நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை	..	..	..	..
ஈ. தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33. சி(2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை.	1,812	4,253	1,553	2,668

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3ன் தொடர்ச்சி.

உ. தொழிற்தகராறு சட்டத்தின் பிரிவு 25 (எம்) -ன் கீழ் (லே-ஆப்) பெறப்பட்ட விண்ணப்பங்கள்:

விவரம்	சென்னை தொழிலாளர் இணை ஆணையர்.		மதுரை தொழிலாளர் இணை ஆணையர்.		கோவை தொழிலாளர் இணை ஆணையர்.	
	1991	1992	1991	1992	1991	1992
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. முந்தைய ஆண்டின் நிலுவை	2	..	..	..	..	..
2. இந்த ஆண்டில் வரப்பெற்றவை	8	13	..	2	2	11
3. மொத்தம்	10	13	..	2	2	11
4. முடிவுற்றவை	10	12	..	1	2	11
5. ஆண்டு இறுதியில் நிலுவை	..	1	..	1	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3ன் தொடர்ச்சி.

ஊ. தொழில் தகராறு சட்டத்தின் பிரிவு 25 (என்) (ஆட்குறைப்பு) கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள்:

விவரம்	சென்னை தொழிலாளர் இணை ஆணையர்.		மதுரை தொழிலாளர் இணை ஆணையர்.		கோவை தொழிலாளர் இணை ஆணையர்.	
	1991	*1992*	*1991*	*1992*	*1991*	*1992*
(1)	*(2)*	*(3)*	*(4)*	*(5)*	*(6)*	*(7)*
1. முந்தைய ஆண்டின் நிலுவை	..	..	..	..	..	
2. இந்த ஆண்டில் வரப்பெற்றவை	7	4	..	2	1	3
3. மொத்தம்	7	4	..	2	1	3
4. முடிவுற்றவை	7	4	..	2	1	3
5. ஆண்டு இறுதியில் நிலுவை	..	..	..	..	..	

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-3ன் தொடர்ச்சி

எ. தொழிற்தகராறு சட்டத்தின் பிரிவு 25(ஒ)-ன் கீழ் நிறுவனம் மூட அனுமதி சம்பந்தமானவை

விவரம்	தொழிலாளர் துறை ஆணையர், சென்னை. 1991	1992
(1)	(2)	(3)
1. பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	5	1
2. முடிவு பெற்றவை	5	1

ஏ. தொழிற்தகராறுகள் சட்டத்தின் 33-சி(1)ஆம் பிரிவின் கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்

ஆண்டு	இனங்களின் எண்ணிக்கை	தொகை
(1)	(2)	(3)
		ரூ. பை.
1991 ..	6	2,12,619.00
1992 ..	9	17,07,182.69

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-4

1992ஆம் ஆண்டில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்/ முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

சட்டத்தின் பெயர்	ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை	இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	தண்டனை அளிக்கப் பட்டவை	விடுதலை பெறப் பட்டவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம்	1,042	934	843	832	2
1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்	17,171	35,030	31,676	31,592	24
1948ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம்	1,216	1,865	1,665	1,651	4
1951ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்	40	158	104	103	1
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம், 1958	2,411	2,967	3,061	3,046	3
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை					

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடுமுறை) சட்டம்	3,403	4,183	4,093	4,091	1

இணைப்பு-4 (தொடர்ச்சி)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம்	374	612	578	576	2
1961ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம்	36	30	45	45	-
1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம்	156	402	399	397	2
1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்-துதலும், நீக்குதலும்) சட்டம்	2	-	1	1	-
1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்	2	1	2	2	-
1981ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம்	2	-	1	-	1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-4 (தொடர்ச்சி)

சட்டத்தின் பெயர்	தண்டிக்கப் பட்டவை	திரும்பப் பெறப் பட்டவை	தள்ளுபடி செய்யப் பட்டவை	முடிவு பெறாமல் உள்ளவை	பெறப்பட்ட அபராதத் தொகை
	(7)	*(8)*	*(9)*	*(10)*	*(11)*
1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம்	1	7	1	1,133	84,475
1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்	38	22	-	20,525	12,81,095
1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளச் சட்டம்	1	8	1	1,416	3,15,935
1951ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்	-	-	-	94	27,025
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம்	-	11	1	2,317	2,06,420
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை)					

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டம்	1	-	-	3,493	1,44,630

இணைப்பு-4 (தொடர்ச்சி)

(1)	(7)	(8)	(9)	(10)	(11)
1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம்	-	-	-	408	1,46,845
1961ஆம் ஆண்டு மகப்பேறுச் சட்டம்	-	-	-	21	18,250
1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம்	-	-	-	159	58,567
1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும், நீக்குதலும்) சட்டம்	-	-	-	1	500
1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்	-	-	-	1	1,300
1981ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம்	-	-	-	1	-

இணைப்பு-5

தொழிலாளர் நல துறையினால் மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவைப் பற்றிய விவரம்.

ஆண்டு	நிறுவனங்களின் எண்ணிக்கை	அமர்த்திக்கொள்ளப் பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை
(1)	(2)	(3)	(4)
			ரூ. பை..
(அ) அமைப்பு ரீதியான தொழில்கள்:			
1. 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்			
1991	550	86,342	88,810.00
1992	551	86,218	900.00
2. 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்:			
1991	1,754	89,439	1,50,280.75
1992	1,723	91,870	1,47,275.25

இணைப்பு-5-ன் தொடர்ச்சி

(1)			(2)	(3)	(4)
(ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்:					ரூ. பை.
1. 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்:					
1991	..	..	3,14,146	3,00,383	..
1992	..	..	3,21,985	2,92,710	..
2. 1958ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம்:					
1991	..	..	30,965	72,363	3,56,954.65
1992	..	..	27,598	77,493	4,13,109.80
3. 1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்:					
1991	..	..	1,152	9,944 வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2 ½ இலட்சம்.	68,229.00
1992	..	..	1,414	10,287+ வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2½ இலட்சம்.	75,003.00
(இ) ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970.					
1992 ஒப்பந்தக் காரர்கள்	..	..	193	20,182	8,019.15

முதன்மை வேலை அளிப்பவர்கள்	377	--	3,246.00

இணைப்பு-6

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்ட விவரம்

சட்டத்தின் பெயர்	முறையான ஆய்வு	விடுமுறை ஆய்வு	சிறப்பு ஆய்வு	திடீர் ஆய்வு	இரவு நேர ஆய்வு	சோதனை ஆய்வு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம்	37,907	35	171	57	--	184
1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்	4,44,563	31,392	11,737	22,322	11,290	580
1948ஆம் ஆண்டு குறைந்த பட்ச சம்பளச் சட்டம்	2,01,023	110	175	670	--	--
1951ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்	3,230	164	76	44	--	--
1955ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகை தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதிமுறைகள்) சட்டம்	36	--	4	--	--	--
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம்	46,227	272	329	526	146	65

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-6ன் தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1958ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்.	1,68,148	457	2,698	871	76	336
1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்	6,665	73	320	55	--	488
1961ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம்	7,291	2	113	3	--	--
1966ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம்	4,229	13	171	1,012	--	1,119
1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்து தலும், நீக்குதலும்) சட்டம்	254	--	--	--	--	--
1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்	10,135	--	169	--	--	--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-7

அ. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்

வரிசை எண்ணும் தொடர் எண்ணும் விவரங்களும்	1958ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டத்தின் கீழ் தொழிலாளர் அலுவலர், உதவி தொழிலாளர் ஆணையர்களால் (சமரசம்) முடிவு செய்யப்பட்டவை		1972ஆம் ஆண்டு பணிக் கொடை பட்டுவாடா சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர் களால் முடிவு, செய்யப் பட்டவை		1981ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டத்தின் கீழ் உதவி தொழிலாளர் ஆணையர் களால், முடிவு செய்யப் பட்டவை	
	1991	1992	1991	1992	1991	1992
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள்	7	4	625	1,057	174	120
2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை	26	3	1,372	1,398	702	586
3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	33	7	1,997	2,445	876	706
4. நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	29	5	940	2,212	756	568
5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	4	2	1,057	243	120	138

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-7ன் தொடர்ச்சி

ஆ. தொழிலாளர் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்

விவரங்கள்	1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டு சட்டம்		1936ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்		1947ஆம் ஆண்டு தமிழ்நாடுகடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்	
	1991	1992	1991	1992	1991	1992
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	678	784	281	189	40	80
2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை	1,882	2,213	620	451	180	150
3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	2,560	2,997	901	640	220	230
4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	1,776	2,098	712	465	140	178
5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	784	899	189	175	80	52

இணைப்பு-7ன் தொடர்ச்சி

விவரங்கள்	1948-ம் ஆண்டு குறைந்தபட்ச சம்பளச் சட்டம்		1972-ம் ஆண்டு பணிக்கொடை சட்டம்		1981ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம்	
	1991	1992	1991	1992	1991	1992
(1)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	8	1	21	438	16	--
2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை	25	59	597	341	4	173
3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	33	60	618	779	20	173
4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	32	32	180	645	20	133
5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை	1	28	438	134	..	40

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு -7ன் தொடர்ச்சி

(இ) 1976-ம் ஆண்டு எடை அளவு சட்டத்தின் அமுலாக்கம்:-

1. உரிமம் அளித்தல்: *(1992)*

உற்பத்தியாளர்	விற்பனையாளர்	பழுது பார்ப்போர்	வசூலிக்கப்பட்ட தொகை
(1)	(2)	(3)	(4)
			ரூபாய்
186	731	425	1,64,985.00

2. ஆய்வுகள்:

1992-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்	4,43,612	

3. அமுலாக்கம்:

தொடுக்கப்பட்ட வழக்குகள்	267	
தண்டனை அளிக்கப்பட்டவை	566 (முந்தைய நிலுவையில் இருந்தவைகள் உட்பட)	
வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை		80,655.00

4. குற்றத்தை ஈடு செய்தல்:

ஈடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	26,284	
வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை		37,85,440.00

5. எடை அளவுகளைச் சரிபார்த்தல் மற்றும் மீளச் சரிபார்த்தலுக்காக வசூலிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம்.. 1,88,46,765

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 7-ன் தொடர்ச்சி

எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள்,1977.

1. ஆய்வுகள்:-

1992-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள்	1,76,947	

2. அமுலாக்கம்:-

தொடுக்கப்பட்ட வழக்குகள்	56	
தண்டனை அளிக்கப்பட்டவை	57	(முந்தைய நிலுவையில் இருந்தவைகள் உட்பட)
வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை	ரூ. 18,460.00	

3. குற்றத்தை ஈடு செய்தல்:-

ஈடு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	13,213	
வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை	ரூ. 15,67,350.00	

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-8

1992-ல் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்களின் விவரங்கள்

விவரம்	1991-92	1992-93
(1)	(2)	(3)
1. தொழிலாளர் நல மையங்கள் (தையல் பயிற்சி நிலையம் உட்பட)		
(அ) மொத்த மையங்கள்	68	70
(ஆ) மொத்த பயிற்சியாளர்கள்	3,160	2,712
2. குழந்தைகள் காப்பகங்கள்:		
(அ) மொத்த காப்பகங்கள்	58	51
(ஆ) பயனுற்ற குழந்தைகள்	2,126	2,179
3. படிப்பகங்கள் :		
மொத்த படிப்பகங்கள்	12	14

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-9

தமிழ்நாடு தொழிலாளர்நல வாரியம் செயல்படுத்திய ஏனைய திட்டங்கள்:

விவரம்	பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை		ஒப்புதல் அளித்த தொகை	
	1991-92	1992-93	1991-92	1992-93
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ. பை.	ரூ. பை.
(அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகை கொடுத்தல்	1,722	2,222	1,29,065.00	1,66,650.00
(ஆ) தொழிலாளர்கள் குழந்தைகளுக்குத் தட்டச்சு/சுருக்கெழுத்துப் படிக்க கட்டணங்கள் ஈடுசெய்தல்	513	459	62,153.00	62,528.00
(இ) பாட நூல் உதவித் தொகை	6,458	5,485	2,51,639.00	2,43,937.00
(ஈ) ஈமச்சடங்கிற்குரிய செலவுகள்	541	648	1,62,300.00	1,94,400.00
(உ) உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்பு வழங்குதல்	6	2	2,321.55	1,690.00
(ஊ) காது கேட்கும் கருவி வழங்குதல்	10	12	9,037.00	8,650.00
(எ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல்	..	12	..	16,520.00

இணைப்பு 10.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வழங்கிய படிப்புதவித் தொகை வழங்கிய விவரங்கள்

விவரம்	பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.		ஒப்புதல் அளித்த தொகை.	
	1991-92	1992-93	1991-92	1992-93
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ. பை.	ரூ. பை.
1. பொறியியல் பட்டப்படிப்பு	78	120	93,600	1,44,000.00
2. பொறியியல் பட்டயப்படிப்பு	237	260	1,70,640	1,87,200.00
3. மருத்துவப் பட்டப்படிப்பு	30	59	36,000	70,800.00
4. மருத்துவப் பட்டயப் படிப்பு	9	2	6,480	1,440.00
5. சட்ட பட்டப் படிப்பு	7	7	8,400	8,400.00
6. வேளாண்மைப் பட்டப் படிப்பு	4	6	4,800	7,200.00
7. தொழிற் பயிற்சிக் கல்வி	112	105	40,320	37,800.00
8. மேல்நிலைக் கல்வி	112	46	67,200	27,600.00
9. ஆசிரியர் பயிற்சி	..	1	..	600.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 11

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஆய்வு செய்த விவரங்கள்:

சட்டத்தின் பெயர்.	முறையான ஆய்வு	விடுமுறை ஆய்வு	சிறப்பு ஆய்வு	திடீர் ஆய்வு	இரவு நேர ஆய்வு	பதிவுரா தொழிற் சாலைகள் ஆய்வு	சோதனை ஆய்வு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1948-ம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம்	22879	873	3515	623	582	2853	3582

இணைப்பு-12.

தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவைப் பற்றிய விவரம்:

சட்டத்தின் பெயர்	ஆண்டு	தொழிற்சாலைகள் எண்ணிக்கை	அமர்த்திக் கொடுக்கப் பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை (உத்தேசமாக)	வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை (ரூபாய்)
(1)	(2)	(3)	(4)	(5)
1948-ம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம்	1990	16710	8,67,726	1,31,21,805.00
	1991	18062	9,01,943	4,03,30,137.00 (இதில் 1990-ன் நிலுவைத் தொகையும் அடங்கும்)
	1992	19052	9,28,883	3,02,99,454.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-13

வ.எண்.	சட்டத்தின் பெயர்.	தொழிற் சாலைகளின். எண்ணிக்கை	தொழிலாளர்களின் எண்ணிக்கை.	ஆய்வு செய்த மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1.	1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டம்	19035	918014	20928
2.	1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை) விடுமுறை சட்டம்.	18775	918014	20245
3.	1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம்.	11221	504833	13100
4.	1961-ம் ஆண்டு மகப்பேறு சட்டம்.	6524	146348	8745
5.	1970-ம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்.	803	48569	1129
6.	1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம்.	9638	641347	11236
7.	சம ஊதியச் சட்டம் 1976	8597	275424	11299
8.	1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம்.	19052	928883	17528

இணைப்பு-14

பல்வேறு தொழிற்சாலை சட்டங்களில் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்:

வ. எண்.	சட்டத்தின் பெயர்	ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை	இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டவை	மொத்தம்	முடிக்கப்பட்டவை	தண்டனை அளிக்கப்பட்டவை	விடுதலை செய்யப்பட்டவை	[illegible]க்கப்பட்டவை	திரும்பப் பெறப்பட்டவை	தள்ளிவிடப்பட்டவை	ஆண்டு இறுதியில் முடிவுபெறாமல் உள்ளவை	பெறப்பட்ட அபராதத் தொகை
(1)		(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13) ரூபாய்
1.	1948-ம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம்.	2898	3075	5973	2308	1775	61	..	323	149	3665	846305
2.	1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்.	42	83	125	38	37	1	..	..	..	87	i0975
3.	1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம்.	151	54	205	57	40	1	..	5	11	148	2425
4.	1936-ம் ஆண்டு ஊதியங்கள் வழங்கும் சட்டம்.	156	63	219	73	59	3	..	5	6	146	5450
5.	1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம்	416	182	598	206	189	3	..	4	10	392	22595

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-14-தொடர்ச்சி

பல்வேறு தொழிற்சாலை சட்டங்களில் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்:

(1)		(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
6.	1961-ம் ஆண்டு மகப்பேறு சட்டம்	9	1	10	4	3	1	..	..	..	6	400
7.	1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம்	4	..	4	..	..	..	..	..	..	4	..
8.	1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரப் படுத்துதல்) சட்டம்.	3	1	4	..	..	..	..	..	..	4	..
9.	1981-ம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கை படி வழங்கும் சட்டம்.	3	..	3	..	..	..	..	..	..	3	..
10.	1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (முறைப்படுத்-துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்.	47	9	56	7	1	3	..	3	..	49	3000
11.	1972-ம் ஆண்டு பணிக்கொடை வழங்கும் சட்டம்	3	..	3	..	..	..	..	..	..	3	..

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

இணைப்பு-15

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்ட உரிமை கோரிக்கைகள் (1-1-92 முதல் 31-12-1992முடிய)

பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் வருமாறு:-

1. 1-1-1992 அன்று நிலுவையிலிருந்து உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	13,477	வழக்குகள்.
2. 1-1-1992 முதல் 31-12-1992 முடிய பெறப்பட்டவை.	..	1,55,710	„
3. தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	1,69,187	„
4. தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	1,24,995	„
5. குறைப்பாடுகளைச் சரி செய்வதற்காகத் திருத்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	25,367	„
6. 31-12-1992 அன்று நிலுவையில் இருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	18,825	„

1-1-1992 முதல் 31-12-1992 முடிய தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு பின்வருமாறு:-

		நிகழ்வுகளின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட தொகை.
(1)		(2)	(3)
			(ரூபாய் இலட்சத்தில்)
1. இறப்பு	..	3,547	538.48
2. பணி முதிர்ச்சியால் ஓய்வு பெற்றவர்கள்	..	4,632	1,592.27
3. நிரந்தர இயலாமையுறல்	..	329	88.12
4. பணித் துறை	..	1,14,135	7,783.30
5. பணியிழப்பு	..	1,578	249.87
6. பல்வகை	..	774	93.25
மொத்தம்	..	1,24,995	10,345.09

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

இணைப்பு-15 (தொடர்ச்சி)

31-12-1992 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது:-

1.	2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*17,352*
2.	6 மாதங்களுக்கு குறைவாகவும் 2 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*1,473*
	மொத்தம் ..	***18,825***

இணைப்பு-16

தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள்:-

(மாதாந்திர குடும்ப நல ஓய்வூதியம் தவிர மற்ற எல்லாவகையான பயன்கள்)

31-12-1992 அன்று வரை பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	(1)	வழக்குகள். (2)
1.	*1-1-1992* அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*14,290*
2.	*1-1-1992* முதல் *31-12-1992* முடிய பெறப்பட்ட உரிமை கோரிக்கைளின் எண்ணிக்கை ..	*1,59,091*
3.	தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*1,73,381*
4.	இந்த வருடத்தில் *(1992-93ம் ஆண்டில்)* தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைளின் எண்ணிக்கை. ..	*1,19,334*
5.	குறைபாடுகளை சரி செய்வதற்காக திருப்பப் பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*33,213*
6.	*31-12-1992* அன்று நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. ..	*20,834*

[1993 ஏப்ரல் 23

இணைப்பு-16 (தொடர்ச்சி)

31-12-1992 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழ்வருமாறு:-

		வழக்குகள்.
1. 2 மாதங்களுக்கு குறைவாக உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	20,749
2. 6 மாதங்களுக்கு குறைவாகவும் 2 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	85
3. 1 வருடத்திற்கு குறைவாகவும் 6 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	இல்லை.
மொத்தம்	..	20,834

இணைப்பு-17

தீர்க்கப்பட்ட குடும்ப நல ஓய்வூதிய உரிமைக் கோரிக்கைகள்:-

1-1-1992 முதல் 31-12-1992 முடிய பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, நிலுவையிலுள்ள குடும்ப நல ஓய்வூதிய உரிமைக் கோரிக்கைகள் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

		வழக்குகள்.
1. 1-1-1992 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	676
2. 1-1-1992 முதல் 31-12-1992 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	4,968
3. தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் களின் எண்ணிக்கை.	..	5,644
4. தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	2,651
5. குறைபாடுகள் சரிசெய்வதற்காக திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	2,156
6. 31-12-1992 முடிய நிலுவையிலுள்ள உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை		837

1993 ஏப்ரல் 23]

இணைப்பு-17 (தொடர்ச்சி)

31-12-1992 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு பின் வருமாறு:-

		வழக்குகள்.
1. 2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	812
2. 6 மாதங்களுக்கு குறைவாகவும் இரண்டு மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	25
3. 1 வருடத்திற்குக் குறைவாகவும் 6 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	..	இல்லை.
மொத்தம்	..	**837**

இணைப்பு 18

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1992-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	1-1-1990 31-12-1990	1-1-1991 31-12-1991	1-1-1992 31-12-1992
(1)	(2)	(3)	(4)
1. பதிவு செய்தோர்	6,49,985	5,74,749	6,06,608
2. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள்	53,165	42,774	37,453
3. பணியில் அமர்த்தப்பட்டோர்	45,753	38,026	31,607
4. வேலைவாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலையளிப்போரின் எண்ணிக்கை.	16,302	14,897	11,035
5. உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போர்.	32,36,453	34,69,226	37,29,239

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

இணைப்பு 19

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் 1992-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

	1-1-1990 31-12-1990	1-1-1991 31-12-1991	1-1-1992 31-12-1992
(1)	(2)	(3)	(4)
1. பதிவு செய்தோர்	26,914	26,546	26,479
2. வேலையில் அமர்த்தப்பட்டோர்	2,074	2,874	1,893
3. உயிர்ப் பதிவேட்டில் காத்திருப்போர்	1,01,168	1,14,983	1,33,381

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 20

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், 1992-ம் ஆண்டில் ஆற்றிய முக்கிய பணிகள் முந்தைய ஆண்டுகளில் ஆற்றிய பணிகளோடு ஒப்பிட்டு நோக்கும் வகையில் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

	1-1-1990 முதல் 31-12-1990			1-1-1991 முதல் 31-12-1991 வரை.			1-1-1992 முதல் 31-12-1992 வரை.		
	பதிவு செய்தோர்.	வேலையில் அமர்த்தப் பட்டோர்.	உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். (31-12-90ல்)	பதிவு செய்தோர்	வேலையில் அமர்த்தப் பட்டோர்.	உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். (31-12-91ல்)	பதிவு செய்தோர்.	வேலையில் அமர்த்தப் பட்டோர்.	உயிர்ப் பதிவேட்டில் உள்ளோர். (31-12-92ல்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
பார்வையற்றோர்	446	27	3,112	305	57	5,233	562	31	3,815
காது கேளாதோர்	376	71	2,479	388	72	4,505	605	50	3,139
கை, கால் ஊன-முற்றோர்	4,746	919	31,868	4,410	1,216	41,959	4,242	1,211	35,503
மொத்தம்	**5,568**	**1,017**	**37,459**	**5,103**	**1,345**	**51,697**	**5,409**	**1,292**	**42,457**

இணைப்பு 21

அயல் நாடுகட்கு அனுப்பட்ட நபர்களின் விவரம் (ஆண்டு மற்றும் நாடுகள் வாரியாக)

வரிசை எண்	வருடம்	பஹ்ரின்	போட்ஸ்வானா	அமெரிக்கா	ஐ.அ.கு.	லிபியா	ஓமன்	ஈராக்	யேமன்	ஜோர்டான்	சவுதி அரேபியா	கட்டார்	குவைத்	சிலோன்	சிங்கப்பூர்	மலேசியா	மாலே	மொத்தம்
1.	2.	3.	4.	5.	6.	7.	8.	9.	10.	11.	12.	13.	14.	15.	16.	17.	18.	19.
1.	1979-80	..	..	..	36	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	36
2.	1980-81	..	..	..	..	..	..	70	..	..	..	..	..	..	..	..	..	70
3.	1981-82	..	..	..	..	31	..	286	..	..	..	..	..	..	..	..	..	317
4.	1982-83	..	..	..	..	..	..	133	80	..	..	..	..	..	..	..	..	213
5.	1983-84	..	..	..	..	..	32	150	172	..	..	..	..	..	..	..	..	354
6.	1984-85	..	..	..	..	72	27	90	..	..	243	..	..	..	..	..	..	432
7.	1986-86	..	..	..	221	431	..	8	110	35	700	..	..	..	..	..	..	1505
8.	1986-87	..	..	..	6	..	1	..	32	..	75	..	..	..	..	..	..	104
9.	1987-88	..	..	..	32	4	4	1	..	..	124	2	45	..	..	..	..	212
10.	1988-89	..	..	..	1	41	2	30	..	..	120	..	67	46	2	..	..	309
11.	1989-90	..	..	1	15	21	1	1	..	..	57	..	16	..	4	..	..	116
12.	1990-91	..	1	11	2	4	1	..	1	..	143	..	25	..	..	..	..	188
13.	1991-92	1	..	4	2	..	1	..	..	..	94	1	..	..	..	4	1	108
14.	1993 ஜனவரி முடிய																	182
மொத்தம்		1	1	16	315	604	69	769	385	35	1156	3	153	46	6	4	1	4146

பணி வாரியாக அனுப்பப்பட்டவர்கள்: மருத்துவர்கள், செவிலியர்கள், எக்ஸ்ரே எடுப்பவர்கள், பாராமெடிக்கல், ஆட்கள், கட்டிட கலை வல்லுநர்கள், மருந்தாளர்கள், தோட்ட வேலை செய்பவர்கள், டெக்னீசியன்கள், உதவியாளர்கள், திறமையாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள்.

1993 ஏப்ரல் 23]

இணைப்பு-22

1993-94 வரவு-செலவு மதிப்பீடு விவரம்

தொழிலாளர் ஆணையர் :

	வருவாய் செலவு	மூலதனச் செலவு	மொத்தம்
		(ரூபாய் இலட்சத்தில்)	
(1)	*(2)*	*(3)*	*(4)*
1. திட்டத்தில் சேராதது	*883.15*	..	*883.15*
2. மாநிலத் திட்டம்	*32.71*	..	*32.71*
3. மைய அரசு ஆதாரத் திட்டம் (Centrally Sponsored)	...	..	..
மொத்தம்	*915.86*	..	*915.86*

2. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் :

	வருவாய் செலவு	மூலதனச் செலவு	மொத்தம்
		(ரூபாய் இலட்சத்தில்)	
1. திட்டத்தில் சேராதது	*423.52*	..	*423.52*
2. மாநிலத் திட்டம்	*3.02*	...	*3.02*
3. மைய அரசு ஆதாரத் திட்டம் (Centrally Sponsored)	..	..	..
மொத்தம்	*426.54*	..	*426.54*

3. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம்

(i) வேலைவாய்ப்புப் பிரிவு

	வருவாய் செலவு	மூலதனச் செலவு	மொத்தம்
		(ரூபாய் இலட்சத்தில்)	
1. திட்டத்தில் சேராதது	*1,315.84*	*0.01*	*1,315.85*
2. மாநிலத் திட்டம்	*51.47*	...	*51.47*
3. மைய அரசு ஆதாரத் திட்டம் (Centrally Sponsored) (உடல் ஊனமுற்றோர் பிரிவு மற்றும் சுய வேலை வாய்ப்பு)	*14.05*	..	*14.05*
மொத்தம்	*1,381.36*	*0.01*	*1,381.37*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 23

இணைப்பு-22--தொடர்ச்சி

(ii) பயிற்சிப் பிரிவு

	வருவாய் செலவு	மூலதனச் செலவு	மொத்தம்
		(ரூபாய் இலட்சத்தில்)	
1. திட்டத்தில் சேராதது	1,686.77	..	1,686.77
2. மாநிலத் திட்டம்	101.94	20.42	122.36
3. மைய அரசு ஆதாரத் திட்டம் (Centrally Sponsored)	..	0.02	0.02
4. உலக வங்கித் திட்டம்	112.04	548.80	660.84
மொத்தம்	1,900.75	569.24	2,469.99

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 23

1993-94 ஆம் ஆண்டில் பகுதி II திட்டங்களாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்.

		1993-94 மதிப்பீடு (ரூபாய் லட்சங்களில்)
1.	கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய பகுதிகளில் சிப்பம் செய்யப்பட்ட பொருட்கள் விதிகளைச் செயற்படுத்துவதற்காக மின்னணுவியல் எடைபோடும் எந்திரம் இரண்டு வாங்குதல்.	0.80
2.	தொழிலாளர் நல ஆய்வாளர்களுக்கும், தொழிலாளர் நல அலுவலர்களுக்கும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல்.	0.35
3.	30 தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்களுக்கு எடைமேடைகளை முத்திரையிடு வதற்கான புதிய சாதனங்களின் தொகுதிகள் வாங்குதல்.	1.12
4.	சிவகாசி, தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவி ஒன்று, பதிவுரு எழுத்தர் பதவி ஒன்று ஆகியவற்றை ஏற்படுத்துதல்.	0.40
5.	வேலை வாய்ப்பு அலுவலகங்களில் குறியீட்டு அட்டையை வைப்பதற்காக 12 இழுப் பறைகள் கொண்ட இரும்புச் சட்டங்களுக்கு அனுமதி வழங்குதல்.	1.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 23 தொடர்ச்சி.

		1993-94 மதிப்பீடு (ரூபாய் லட்சங்களில்)
6.	கடலூர், சேலம், தூத்துக்குடி, காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணிணி மயமாக்குதல்.	8.99
7.	தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள பழைய கைக்கருவிகளை மாற்றி விட்டு புதியன வாங்குதல்.	5.00
8.	செங்கல்பட்டு தொழிற் பயிற்சி நிலையத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்.	2.28
9.	ஈரோடு, தொழில் பயிற்சி நிலையத்தில் ஸ்கிரீன் பிரிண்டிங் தொழிலில் குறுகிய கால பயிற்சி வகுப்பு தொடங்குதல்.	3.36
10.	கிண்டி, தொழில் பயிற்சி நிலையத்தில் (மகளிர்) ஏற்றுமதி ஆடை தையல் தொழிலில் குறுகியகால பயிற்சி வகுப்பு தொடங்குதல்.	4.05
11.	கடலூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் பிளாஸ்டிக் செய்முறைப்படுத்தும் தொழில் பிரிவைத் தொடங்குதல்.	12.00
	மொத்தம்	39.35